# ஓடும் மேகங்கள்

பி.வி.ஆர்

திருவரசு புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 17.

திருவரசு முதற் பதிப்பு : டிசம்பர் 2003
உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. **95.00**

598938


- Title : **ODUM MEGANGAL**
- Author : **P.V.R.**
- Language : Tamil
- Subject : Novel
- Edition : First Edition, December 2003
- Pages : 488
- Published By : **Thiruvarasu Puthaka Nilayam**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar,
  Chennai - 600 017.
- Price : Rs. **95.00**


894.8113
PVR

Laser Typeset by: **AMARAVATHI**, W.Mambalam, Chennai - 33.
Ph.: 24850484

Printed at : Nathan & Company, Chennai - 42.

## மன்னியுங்கள்

உங்களுக்கும் ஓடும் மேகங்களுக்கும் குறுக்கே நிற்கும் என்னை மன்னியுங்கள். ஒரு நிமிடத்தில் வழி விடுகிறேன்.

'கலைமகளில்' இருபத்தைந்து மாதங்கள் தொடராக வந்த இந்த நாவலைப்பற்றியோ இதில் இடம் பெற்றுள்ள பாத்திரங்களைப் பற்றியோ நான் எழுதுவது அநாவசியம். அதிகப்பிரசங்கித்தனம்கூட. கலையை வெளிக் காட்டி, கலைஞனை மறைத்துக் கொள்ளுவது தான் கலையின் விசேஷம் என்று ஆஸ்கார் ஒயில்ட் ஒரு தடவை சொன்னார். இந்த நாவலில் என்னைக் கண்டுபிடிப்பதைவிட (அதாவது, நான் கலைஞன் என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டால்) கலை அம்சத்தை நீங்கள் உணர வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை; நோக்கம். இந்த ஆசை பூர்த்தியானால் அது என்னுடைய வெற்றி மட்டுமல்ல; உங்களுடைய வெற்றியுந்தான்.

நாவலின் இலக்கணத்தைப் பற்றி எழுத வேண்டிய அவசியம் இல்லை. அது அரசியல்,

சமூகம், விஞ்ஞானம் என்ற எதையாவது ஆதாரமாக வைத்துக்கொண்டு எழுதப்படலாம். இந்த நாவல் இரண்டு மூன்று குடும்பங்களையும் இரண்டு மூன்று தனி நபர்களையும் வைத்துக் கொண்டு எழுதப்பட்டது. இதில் நீங்கள் பார்க்கும் பாத்திரங்கள் புதியவை அல்ல. தினசரி வாழ்க்கையில் பார்த்துப் பழகியவை. இந்தப் பரிச்சயமே பாத்திரங்களுக்கு உயிர் அளிக்கும் என்பது என் நம்பிக்கை. இந்த நம்பிக்கை பூர்த்தியானால் அதுவும் ஒரு வெற்றிதான்.

இதற்குமேல் என்ன எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை.

கடைசியாக-

'கலைமகள்' அதிபருக்கும், ஆசிரியருக்கும், அவர் தம் கீழ் வேலைபார்க்கும் ஸ்தாபனச் சிப்பந்திகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி.

பி. வி. ஆர்.

## சமர்ப்பணம்

என்றென்றும் மாறாத புன்முறுவலால்
அணைத்துக்கொண்டு வழிகாட்டும்
திரு. கி. வா. ஜகந்நாதனுக்கு

# ஓடும் மேகங்கள்

## 1

## தந்தச் சீப்பு

**தோ**ழிகளின் கும்மாளம் ராதிகாவின் காதுக்கு இம்சையாக இருந்தது. கூட்டத்தை விட்டு அவள் மெதுவாக நழுவிக் கடலோரத்தை நோக்கி நடந்தாள். மல்லிகையின் மணம் போலக் காற்றுச் சுகமாக இருந்தது. அதை அநுபவிக்கையில் அவள் உடல் சிலிர்த்தது. எண்ணங்கள் அவளையும் அறியாமல் கட்டவிழ்த்துக் கொண்டு சிதறின. சில எண்ணங்கள் மனத்திலேயே தேங்கி நிற்க, அவள் அவற்றில் லயித்துப் போனாள்.

கரைக்குச் சற்று அப்பால் உலர்ந்த மணலில் அவள் உட்கார்ந்து கொண்டாள். தோழிகள் எங்கோ தொலைவில் இருப்பதாகத் தோன்றியது. அவர்களுடைய இடையறாத பேச்சும் கெக்கலிப்பும் இல்லாததே பெரிய ஆறுதலாக இருந்தது. சிறுவர்களும் சிறுமிகளும் தங்களுடைய கால்களில் மோத வரும் அலைகளுக்காகக் காத்திருந்தார்கள். அலைகள் வந்தன; மோதின; பின்வரும் அலைகளுடன் கலக்கத் திரும்பின.

சிறுவர்களை விட்டு ராதிகா முன்னால் பார்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் ஒரே கருமை படர்ந்த நீலம். அமைதி தோன்றும் முனிவரின் தவநிலை. ஆனால் இதே சமுத்திரம், அருகே எத்தனை ஆவேசத்துடன் கரையில் மோதுகிறது!

அலைகள் வெள்ளிக் கரை கட்டிக்கொண்டு கரையில் பாய்ந்தன. மாலைமாலையாகத் தங்கின வெண்நுரை, இமைப்பதற்குள் மணலில் புதைந்தது.

இந்த வெண்ணுரைக்கு இதயம் இருந்தால் அது என்ன நினைக்கும்? எது அதைப் பெற்றுக் கரையில் தள்ளியதோ, அதனுடன் சேர்ந்து திரும்பிப் போக முடியாமல் இப்படி மணலில் மறைந்துவிட்டோமே என்று கசியுமே!

ராதிகாவின் உள்ளம் சோர்ந்தது. உலகத்தில் எல்லாவற்றுக்குமே கடைசியில் இந்தக் கதிதானா? கேள்வியினூடே பிறந்த சோகம், திடீரென்று அவளுடைய அம்மாவைக் கண்முன் நிறுத்தியது.

அம்மா இந்தச் சமுத்திரம் போன்றவள். ஆனால் அவளும் இதைப் போலவே, தன் வயிற்றில் உதித்ததை மண்ணில் தவிக்கவிட்டு மறைந்து விட்டாளே!

ராதிகா தன்னை வெண்ணுரையாகக் கற்பனை செய்து கொண்டு பார்த்தாள். அடுத்த விநாடியே பயம் புகுந்து ஆட்டியது; விபரீதமான எண்ணங்கள் தோன்றின. அன்று அம்மா செய்தது போலவே நாளைக்கு அப்பாவும் செய்துவிட்டால்? எண்ணமே ஒரு பெரும் சுமையாக அழுத்தியது. இந்தப் பெண்களின் கூட்டத்திலிருந்து தனிமையை நாடி வந்தாளே அவள். நாளைக்கு, உலகத்தில் தனிமைதான் சாசுவதம் என்ற நிலை உண்டாகிவிட்டால் என்ன செய்வாள்? அந்தத் தனிமையின் பாரத்தை, கொடுமையை அவளால் தாள முடியுமா?



இன்னும் சம்பவிக்காத அந்த எதிர்காலத் தனிமையை நினைத்தபோதே இந்தத் தனிமை கசந்தது. இதுதான் அந்தத் தனிமைக்கு அபாயச் சங்கு ஊதுகிறது என்றுகூட அவள் நினைத்தாள், மெதுவாக எழுந்தாள். கால்கள் மணலில் புதைய அவள் மெதுவாக நடந்தாள்.

ராதிகாவைக் கண்டதும் மீனாட்சி, 'ஓ' வென்று கத்தினாள். அவளுக்கு எதையுமே தாழ்ந்த குரலிலோ நிதானமாகவோ பேசத் தெரியாது. யாரோ ஒருத்தி எப்போதோ கேட்டதற்கு அவள் சொன்ன காரணமே அலாதியாக இருந்தது. பாட்டியிடம் வளர்ந்தாளாம். சின்னப் பெண்ணாக இருந்ததிலிருந்து அந்தச் செவிட்டுப் பாட்டியிடம் கத்திக் கத்திப் பேசி அதுவே நாளடைவில் பழக்கமாக அமைந்து விட்டதாம். தன் குறைக்கு ஒரு சமாதானம் தேடுவதுபோல் இருந்தது அவளுடைய வியாக்கியானம்.

அந்த மீனாட்சி இப்போது ராதிகாவைப் பார்த்ததும், ''என்னடி, எங்களையெல்லாம் விட்டு ஒதுங்கிப் போயிட்டே. எலிஸபெத் இப்பத்தான் ரொம்ப இண்டரஸ்டிங்கா கதை சொன்னா. நீ இல்லாமல் போயிட்டியே!'' என்றாள்.

இரண்டு கைகளிலும் மணலை அள்ளி அளைந்து கொண்டிருந்த எலிஸபெத் மணலைக் கொட்டிவிட்டு நிமிர்ந்தாள்.

''மீனாட்சி, நான் சொன்னது கதை அல்ல; உண்மையாக நடந்தது.''

''நல்ல வேளை! நமக்கெல்லாம் இந்த மாதிரி அநுபவம் கிடைக்கவில்லை. என் நாக்கிலே அந்த ஐஸ்க்ரீம் படறத்துக்கு முன்னாடியே, அது உருகிடும்!'' என்றாள் கனகவல்லி.

''ராதிகாவுக்கும் கதையை - எலிஸபெத்தின் அநுபவத்தை - சொல்லாமலே இந்த மாதிரி விமரிசனம் செய்தால்

என்ன அர்த்தம்? எலிஸபெத், இன்னொரு தடவை அதை உன் வாயாலே சொல்லேன்!'' - இது மாதவி.

''ஒன்ஸ் மோர், ப்ளீஸ்!'' - மீனாட்சி.

''என்னடீ என்னை வச்சுண்டு நீங்களெல்லாம் விளையாடுகிறீர்களா?'' எலிஸபெத்துக்குக் கோபம் வந்தது.

ராதிகாவுக்கும் எரிச்சல் வந்தது. இந்தக் கூட்டத்தை விட்டு ஒதுங்கவும் அவளால் முடியவில்லை. அவர்களுடன் ஒன்றிப்போய்த் தன்னைத் தானே மறந்து கொள்ளவும் முடியவில்லை.

''எனக்குத் தெரிய வேண்டாம் மீனாட்சி. எலிஸபெத், நீ பேசாம இரு.''

''ரொம்பச் சுவாரசியமா இருக்கும், ராதிகா.''

''வேண்டாம் மீனாட்சி. எனக்குக் கேட்கணும்னு இருந்தா நாளைக்கு அவ ரூமிலே போய்க் கேட்டுக் கொள்கிறேன்.''

''நாளைக்குக் காலையிலே எலிஸபெத் பிருந்தாவன் எக்ஸ்பிரஸிலே கிளம்பறான்னா நான் வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸிலே கிளம்பறேன். எங்கே கேக்கறது? கான்வோகேஷனின் போதுதான் கேக்க முடியும். அதுவும் எலிஸபெத் பாஸ் பண்ணினால்..... ஸாரி, ஸாரி! நானும் அவளும் பாஸ் பண்ணினால்!'' மீனாட்சி கலகலவென்று சிரித்தாள்.

எலிஸபெத்துக்குக் கோபம் தலைக்கேறியது. அவள் திடீரென்று எழுந்தாள்.

ராதிகாவுக்கு மனம் அலுத்தது. மூன்று வருஷப்படிப்பு முடிந்து இப்போது எல்லாரும் தத்தம் ஊர்களுக்குத் திரும்பப் போகிறார்கள். இன்னும் இருபத்து நான்கு மணி நேரங்கூட இல்லை. ஏன் இந்தக் கோபமும் தாபமும்?

''என்ன ராதிகா, இன்னும் உக்காராமலேயே இருக்கே!'' என்று கேட்டாள் மாதவி.



''அவ மறுபடியும் தனக்குள்ளேயே பேச ஆரம்பித்து விட்டாள்!'' என்றாள் கனகவல்லி.

''கண்ணனைப்பத்தி நினைவு வந்திருக்கும்........''

ராதிகா, ''நான் ஹாஸ்டலுக்குப் போறேன்'' என்றாள்.

''நானும் வறேன் ராதி'' என்று எலிஸபெத்தும் இரண்டடி வைத்தாள்.

''நாம மட்டும் இங்கேயே உக்காருவானேன்? எல்லாரும் போகலாம்டீ!'' என்று மீனாட்சி எழுந்தாள்.

திரும்பி நடக்கையில் ராதிகாவின் மனம் கண்ணனைச் சுற்றி ஓடியது. மீனாட்சி அவனை நினைவுக்கு இழுத்துக் கொடுத்துவிட்டாள். கடந்த எட்டு மாதங்களாகக் கண்ணன் ஊட்டியில்தான் இருக்கிறான். அப்பாவைத் தினந்தோறும் வந்து பார்க்கிறான்; அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறான், சில நாள் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறான் என்றெல்லாம் அப்பா எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தை அவள் ஒரு தடவைக்கு நூறு தடவை படித்திருப்பாள். மனத்துக்கு ஆறுதலைவிட ஆனந்தத்தை அதிகமாக அளித்தது அது. அப்பாவுக்கு உதவி தேவை. அது பணத்தை வீசி எறிந்தால் கிடைத்துவிடக் கூடியதுதான். ஆனால் அவர் மனம் அறிந்து செய்யக்கூடியவன் இந்த உலகத்தில் கண்ணன் ஒருவன்தான். கண்ணனை எப்படி மதித்து நடத்த வேண்டுமோ அப்படி அப்பா நடத்தாதது அவளுக்குப் பெரிய குறைதான். ஆனால் அப்பாவின் செய்கைக்கும் ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்துக்காகத்தான், அப்பா தம்முடைய மனச்சாட்சிக்கும் விரோதமாக நடந்துகொள்ளுகிறார் என்று ராதிகா உணர்ந்தாள்.

ஹாஸ்டலை அடைந்ததும், கையை அலம்பிவிட்டுச் சாப்பிடச் சென்றாள். அன்றுதான் கடைசிச் சாப்பாடு

அவளுக்கு, அந்த ஹாஸ்டலில். மறுநாள் பேராசிரியை நளினி வீட்டில் விருந்து. இரவு எழு மணிக்கு முன்னேயே ஸ்டேஷனுக்குப் போய்விட வேண்டும்.

சாப்பிட்டுவிட்டு அறைக்கு வந்து ராதிகா, கட்டிலின் மேல் சாய்ந்துகொண்டாள். மூன்று வருஷங்களுக்குப் பிறகு சென்னையை விட்டுப் போவதைப்பற்றி அவள் பெரிதாக நினைக்கவில்லை. சொல்லப்போனால் ஒரு பெரிய விடுதலை அளிக்கும் நிம்மதிதான் தோன்றியது. இந்தப் 'பி.ஏ.' வேண்டும் என்று அவள் கேட்கவுமில்லை, அழவுமில்லை. அப்பாவின் தொந்தரவு பொறுக்க முடியாமல்தான் கல்லூரியிலேயே சேர்ந்தாள். மூன்று வருஷப் படிப்போ, ஹாஸ்டல் வாசமோ, நூற்றுக்கணக்கான பெண்களின் பரிச்சயமோ தன்னை எந்த விதத்திலும் மாற்றவில்லை என்பதை அவளே உணர்ந்தாள். 'அவளை எதுவும் மாற்றாது, யாராலும் மாற்றவும் முடியாது!'' என்று கண்ணன் அடிக்கடி சொல்லுவானே; அது அவன் தெரிந்து, உணர்ந்துதான் சொல்லியிருக்க வேண்டும்.

மீண்டும் கண்ணனுடைய உருவம் கண்முன் நின்றது. அவனுடைய கறுப்பை நினைவுபடுத்தும் மாநிறமும் நீண்ட கூர்ந்த மூக்கும் கபடமற்ற சிரிப்பும் நேற்றுத்தான் பார்த்தாற் போல இருந்தன. என்ன உயரம்! தோட்டத்தில் வேலை செய்து செய்து, வலுவேறின தோள்கள்.

கண்ணனை நினைக்கும்போதெல்லாம் மனத்தில் இன்பத்தினூடே வலியும் உண்டாயிற்று. அவனைப்பற்றி என்ன என்ன விதமான சிந்தனைகள் பிறந்து மறைந்தாலும், ஒன்றே ஒன்று அவள் மனத்தைவிட்டு அகலாமலே இருந்தது. அந்த நினைவையே பிறப்பித்த சம்பவந்தான் இரண்டு உள்ளங்களையும் இணைக்கும் பாலமாக அமைந்திருக்கிறதோ என்று அவள் தன்னுள் எத்தனையோ முறைகள் கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனாலும்



சம்பவத்தின் நினைவு இன்பத்தையோ நிம்மதியையோ தராமல், உள்ளத்தில் ஒரு காயமாகி, வடுவாகி, இன்றும் ஆறாது வலிக்கிறதே! இந்த வலி என்று ஆறும்?

ஆறு வருஷங்களுக்கு முன் - சரியாகச் சொல்லப் போனால் அவளுடைய பதினான்காவது பிறந்தநாள் அன்று - இரவு இதே நேரம் மணி ஒன்பது இருக்கும். வெளியே நவம்பர் மாதக் குளிர் உடம்பை ஊசி ஊசியாகக் குத்திக் கொண்டிருந்தது. அப்பா மாடி அறையில் ஏதோ படித்துக் கொண்டிருந்தார். சமையல் வேலையை எப்போதோ முடித்துவிட்ட பாலம்மா மறுநாள் காலைக்குக் காபிக் கொட்டை அரைத்துக்கொண்டிருந்தாள். ராதிகா அன்று வந்த பரிசுகளையெல்லாம் ஒரு தடவைக்கு நூறு தடவையாக, மேஜையின்மேல் அடுக்கி வைத்துக்கொண்டிருந்தாள். எத்தனை பேர் எத்தனை பரிசுகள் கொடுத்திருந்தார்கள்! கம்பளி ஸ்வெட்டர், உலகத்திலுள்ள பட்சி விலங்குகளின் வண்ணப்படங்கள், நேருவின் சுயசரிதம், டாகுரின் கவிதைகள் என்று எத்தனை எத்தனையோ பரிசுகள்.

ராதிகா எதையும் தீவிரமாக யோசிக்காமல், யோசிக்கத் தெரியாமல் பரிசுக் குவியலில் மூழ்கிக் கிடக்கையில், ''ராதி!'' என்ற குரல் திடீரென்று கேட்டது.

கண்ணனுடைய குரல் அது. ராதிகாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ராதிகாவின் அறைக்குத் தம்மைத் தவிர வேறு யாருமே போகக்கூடாது என்று அப்பாவே உத்தரவு இட்டிருக்கிறார். குளிக்க, சாப்பிட, தலைவாரிக்கொள்ள வேண்டிய நேரங்களில்கூட, பாலம்மா வந்து அழைக்கக் கூடாது. சமையலறையில் அவள் ஒரு பொத்தானை அமுக்க வேண்டும். ராதிகாவின் அறையில் மணி அடிக்கும். கண்ணனும் ராதிகாவும் பேசுவதும் பழகுவதும் பங்களாவின் மற்ற அறைகளிலும் தோட்டத்திலுந்தான். பேச்சும்

பழக்கமும் ஒரு காலவரம்புக்கு உட்பட்டவையே. அதுவும் அப்பாவின் உத்தரவு.

இதுவரையில் உணர்ந்தறியாத ஆச்சரியமும் பயமும் ராதிகாவின் உள்ளத்தில் தோன்றின. அதே சமயத்தில் வந்திருக்கிறவன் கண்ணன் என்ற மகிழ்ச்சியும் பிறந்தது. அவனைக் கோயம்புத்தூருக்கு ஒரு வேலையாக அப்பா அனுப்பியிருந்தார்; எதிர்பாராத வேலை. சாப்பாட்டுக்கு முன்னாலேயே அவன் பஸ்ஸில் போயிருக்கிறான். கடைசிப் பஸ்ஸில் அவன் ஆறு மணிக்கே ஊட்டிக்கு வந்திருக்க வேண்டும். இருந்தாலும் அவளால் அவனைப் பார்க்க முடியவில்லை.

அந்தக் கண்ணன் இப்போது மெல்லிய குரலில், 'ராதி' என்று அழைக்கிறான்.

அவள் பரிசுப் பொம்மைகளையும் புத்தகங்களையும் விட்டு எழுந்தாள். கதவைத் திறந்தாள்.

''ராதி!''

''என்ன கண்ணா? என்ன வேணும்?''

''ராதி, நான் இந்த ரூமுக்கு வர்றது பெரிய தப்புன்னு எனக்குத் தெரியும். இருந்தாலும் இன்னிக்கு உன்னைப் பார்க்காமல் படுத்துக்கொள்ளக் கூடாதுன்னு தோணித்து. அப்பாவுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னுடுவார்.''

''கோயமுத்தூரிலிருந்து எப்போ வந்தே?''

''எட்டு மணிக்கு......''

''ஆறு மணிக்குக் கடைசிப் பஸ் வருமே.''

''நான் குன்னூர் வரையிலேதான், ராதி, பஸ்ஸிலே வந்தேன். அது இருக்கட்டும். இன்னிக்கு உன் பிறந்தநாள் இல்லையா?''

''ஆமாம்; ஏன், உனக்குந்தான் தெரியுமே.''



''நிறையப் பரிசுகள் வந்திருக்குமே?''

''வந்திருக்கு. எல்லாம் நாளைக்குக் காட்டறேன், கண்ணா!''

''நான் பரிசுகளைப் பார்க்க வரவில்லை, ராதி; இதைக் கொடுக்கத்தான் வந்தேன்.'' கண்ணன் கையை நீட்டினான். வண்ணக் காகித உறையிலிருந்து ஒரு சீப்புத் தலைநீட்டியது.

ராதிகா மகிழ்ச்சியில் துள்ளினாள்.

''தந்தச் சீப்பு! நான் ரொம்ப நாளா ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன், தந்தச் சீப்பிலே தலைவாரிக் கொள்ளணும்னு அப்பாகிட்டேகூடக் கேட்டேன். ஆனா எல்லாச் சீப்பும் ஒரே மாதிரியாத்தான் தலையை வாரும்னு சொல்லிவிட்டார். ரொம்பத் தாங்க்ஸ், கண்ணா.''

''உனக்குப் பிடிச்சிருக்கா? பத்துப் பதினைந்து கடை ஏறி இறங்கினேன். கடைசியா அவிநாசி ரோடிலே ஒரு பெரிய கடையிலே வாங்கினேன். பன்னிரண்டு ரூபா!''

''உனக்கு ஏது பணம் இதை வாங்க? அப்பாதான் உனக்குக் கைச்செலவுக்குக்கூடப் பணம் தர்றதில்லையே?''

''உன் அண்ணா டேராடூனுக்குப் போறபோது, ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டுப் போனான். அப்புறம் அப்பா கோயமுத்தூர் போறபோதெல்லாம் ஓட்டல் செலவுக்குன்னு ரெண்டு ரூபாய் மூணு ரூபாய்ன்னு கொடுப்பார். எப்படியோ நாலணா எட்டணான்னு சேர்த்தேன். அப்படியும் இன்னிக்குப் போறபோது கையிலே ஒன்பது ரூபாதான் இருந்தது.''

''பாக்கி மூணு ரூபாய்?'' ராதிகாவின் நா அவளையும் மீறிக் கேட்டது.

''அப்பா சாப்பாட்டுக்கு மூணு ரூபாய் கொடுத்திருந்தார். குன்னூர் வரையிலும் பஸ்ஸிலே வந்தா

அறுபது பைசா மிச்சமாகும். இரண்டு தோசையும் காபியும் சாப்பிட்டேன்.''

ராதிகாவுக்கு அவனைப் பார்த்தபோது பாவமாக இருந்தது.

''பட்டினி கிடந்து, நடுக்குகிற குளிரில் குன்றாரி லிருந்து பத்து மைல் நடந்தா வந்தே?''

''அதனால் என்ன ராதி? சிப்பு உன் மனசுக்குப் பிடிச்சிருக்கா, சொல்லு.''

''சிப்பைவிட உன்னைத்தான் இப்போ என் மனசுக்குப் பிடிச்சிருக்கு, கண்ணா? ஏன் இன்னும் கதவண்டையே நிக்கிறே. உள்ளே வந்து ஒரு இரண்டு நிமிஷம் உட்காரு.''

''வேண்டாம் ராதி. எனக்குப் பயமா இருக்கு.''

''என்ன பயம்? சும்மா வா!'' ராதிகா அவனுடைய கையைப் பற்றி மெதுவாக இழுத்தாள். அவனுடைய உடல் நடுங்கியது.

''இதெல்லாம் பார்த்தியா?''

அவளுடைய குரலின் ஒலி அடங்குவதற்குள் அறைக்கு வெளியே ஏதோ ஓர் அரவம் கேட்பதாகத் தோன்றியது கண்ணனுக்கு.

''ராதி, ஏதோ சத்தம் கேட்கிறதே!''

''நீ ரொம்பப் பயப்படறே கண்ணா. நீ யாரு, அந்நிய மனுஷனா? நான் உன் மாமா பெண்தானே?''

கட்டிலின் ஓரமாக இருக்கை கொள்ளாமல் கண்ணன் தவிப்பதைக் கண்டு ராதிகாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தான் சொன்னதற்கெல்லாம் பதிலே சொல்லாமல் பயம் படர்ந்த கண்களால், சார்த்தியிருக்கும் கதவையே பார்த்தவனாய் உட்கார்ந்திருந்த அவனிடம் நெருங்கி வந்தாள் ராதிகா.



''என்ன ராதி?''

''சரியாக உட்கார்.'' அடுத்த கணம் அவளுடைய கை அவனைக் கட்டிலில் தள்ளியது. அவளும் அவனுடன் நெருங்கி உட்கார்ந்தாள்.

''ஏன் கண்ணா, இப்படிப் பயப்படறே? என்கிட்டே இப்படி உட்கார உனக்கு உரிமை இல்லியா? என்மீதுதான் உனக்கு ரொம்ப ஆசைன்னு எனக்குத் தெரியுமே!''

''உரிமைக்கு என் அநாதைத்தனம் அணை போட்டிருக்கு, ராதி. அதுவே என்னை ஆசைக்கும் அருகதை இல்லாதவனாக ஆக்கிவிட்டது.''

''என் அப்பா ஐ.ஸி.எஸ். ஸா இருந்தா எனக்கு என்ன கண்ணா?'' அவள் அவனுடைய கைகளை அள்ளி எடுத்துக்கொண்டாள்.

ஒரு கணம் கண்ணன் தன் கண்களை மூடிக் கொண்டான். அவனுடைய உள்ளத்தில் சதா சர்வகாலமும் உருமிக்கொண்டிருக்கும் தரித்திர நிலையும் நாதியற்ற வாழ்க்கையும் ஒரு கணம் உறங்கின. மனத்தின் அடித் தளத்தில் இருந்த ஆசை, உடலெல்லாம் வியாபித்தது. ராதிகாவின் கைகளிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்ட அவன் அவளுடைய இடையைப் பற்றி, தன்னுடன் அவளை இழுத்துக்கொண்டான். அந்த அணைப்பில் ராதிகாவின் கண் இதழ்கள் தாமாக மனத்தின் இன்பத்தைப் பேழையில் அடைத்துக் கொள்ளத் துடிப்பதுபோல மூடிக்கொண்டன.

அடுத்த விநாடி இடி விழுந்தது.

கதவுகளைப் 'படீர்' என்று திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்தார் நாதன்.

''டேய்!''

கண்ணன் துள்ளிக்கொண்டு கட்டிலைவிட்டு இறங்கினான்.

அதன்பின் நாதன் வாயால் எதையும் பேசவில்லை. அவருடைய முரட்டுக் கைகள் கண்ணனின் கழுத்தைக் கவ்வின. அவன் நிலை குலைந்து கீழே விழுந்தான். முதுகிலும் தோளிலும் நாதனுடைய கால்கள் ஓயாமல் ஒழியாமல் பாய்ந்து விழுந்தன.

கண்ணன் எழுந்தான்.

நாதனுடைய கைத்தடி அவனுடைய உடம்பெல்லாம் பிரயோகமாகியது.

ராதிகாவுக்கு வாய் அடைத்தது. அவள் செய்த மாபெரும் பிழைக்கு அவன் பெறும் தண்டனையை அவளால் நிறுத்த முடியவில்லை. ஒரு சிறு சாந்துக்குமிழ் எப்போதோ மேஜையின் மேலிருந்து அவளுடைய கால் விரலில் விழுந்துவிட்டது. நகக் கண் வலித்த வலியில் அவள் எப்படித் துடித்தாள்! அவளுடைய கண்களிலிருந்து எப்படிக் கண்ணீர் பொலபொலவென்று பொங்கி வழிந்து ஓடியது! கண்ணன் நகத்துக்குக் களிம்பு போட்டுத் துணியால் கட்டி, மனத்துக்கு எவ்வளவு இதமாகப் பேசி ஆறுதல் அளித்தான்! இப்போதோ அவளால் இந்தத் தண்டனையை நிறுத்த முடியவில்லை.

இத்தனை அடிக்கும் கண்ணன் வாய் திறக்கவில்லை. எப்படி அவனால் இந்தக் கொடூர வலியைத் தாங்கிக் கொண்டு இருக்க முடிகிறது?

கடைசியாக நாதன் அவனை வெளியே தள்ளினார். கூடத்திலிருந்து அவன் வாசலை நோக்கி மெதுவாக நடந்தான். மீண்டும் ஒரு முறை நாதன் கைத்தடியை அவனுடைய தோளின்மீது செலுத்தினார். அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று ராதிகா தன்னுள் எண்ணி வருந்தினாள்.



திண்ணையில் நின்ற கண்ணன் ஒருமுறை அவளை லேசாகத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வை ஒன்றே நாதனுடைய ரௌத்திரத்தை இன்னும் அதிகமாக்கியது. அவனை நோக்கி முன்னேறின அவர், ''கெட் அவுட்!'' என்று கத்தினார்.

அதன்பின் வாசற்கதவைத் தாழிடும் ஓசைதான் ராதிகாவுக்குக் கேட்டது.

அன்று இரவு முழுவதும் ராதிகா தூங்கவில்லை.

அவளுக்கு அன்று காலையிலும் மாலையிலும் கிடைத்த பரிசுகளெல்லாம் அநாதைக் கூட்டமாகத் தெரிந்தன. கட்டிலின்மேல் தந்தச் சிப்பும் வண்ணக் காகித உறையும் தனித்தனியாகக் கிடந்தன. ராதிகா சீப்பைக் கையில் எடுத்து ஒரு தடவை பார்த்தாள். பின் அதை உறையில் போட்டு, அலமாரியில் வைத்தாள்.

கண்ணனை இவ்வளவு அடித்தவர், ஏன் அவளிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை? அவளை அல்லவா அவர் அடித்திருக்க வேண்டும்? ஒருவேளை அம்மா உயிரோடு இருந்திருந்தால் அவளுக்கும் ஏதாவது தண்டனை கிடைத்திருக்குமோ என்னவோ? ஆனால் அவளை அடிக்காமல் அவள் கண் முன்னாலேயே கண்ணனை நொறுக்கியதே அவளுக்கு ஒரு தண்டனையாகி விட்டதோ?

கண்ணனால் இந்த நவம்பர் மாசத்தில் எப்படி வெளியே ராத்திரி முழுவதும் இருக்கமுடியும்? உறைந்து உடம்பே மரக்கட்டை மாதிரி ஆகிவிடுமே! இதற்கெல்லாம் அவள்தானே காரணம்? இதைக் கண்ணன் நினைத்துப் பார்க்காமலா இருப்பான்? அப்படி நினைக்கிறபோது அவனுடைய மனம் அவளை வெறுக்குமா?

ராதிகா அன்று தூங்கினாளோ, இல்லையோ, பொழுது விடிந்தது. அவள் எழுந்து அவசர அவசரமாக

வாசலுக்கு ஓடினாள். இன்னும் கண்ணன் அங்கேயே இருப்பான் என்ற நம்பிக்கை.

ஆனால் கண்ணன் அங்கே இல்லை.

அவன் எங்கே என்று இரண்டு வருஷங்களுக்கு யாருக்குமே தெரியவில்லை.

ராதிகா இரண்டு மூன்று மாதங்கள் புழுவாகத் துடித்தாள். ஆனால் அப்பா இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்ற நினைவே இல்லாதவர்போலத் தமக்கே இயல்பான உறுதியுடனும் கண்டிப்புடனும் பாசத்துடனும் இருந்து வந்தார்.

ஹாஸ்டலில் பெண்களின் பேச்சொலி இன்னும் கேட்டுக்கொண்டுதான் இருந்தது.

மெதுவாக ராதிகா எழுந்தாள். துணிகளையெல்லாம் மடித்து வைத்திருந்த பெட்டியைத் திறந்தாள். துணிகளுக்கு அடியில் இருந்த நகைப்பெட்டியை எடுத்தாள்.

அதில் இருந்த நெக்லஸோ வளையல்களோ கண்ணுக்குத் தெரியவில்லை. கை விரல்கள் தாமாக வண்ணக் காகித உறையை எடுத்தன. தந்தச் சீப்பு நழுவிக்கொண்டு வெளிவந்தது.

# 2

# வரத்தின்மேல் வரம்

முற்றும் துறந்த முனிவரின் உள்ளத்தைப்போல் வானம் நிர்மலமாக இருந்தது. காலை நேரத்தின் வாலிபத்தை மலைக்காற்று அடக்கிவிடவே, வெயிலே உடலுக்கு உற்சாகத்தை அளித்தது. நந்தவனத்திலுள்ள வண்ணமலர்களெல்லாம் தலையசைத்துச் சிரித்தன. ஒரு பகுதியில் ஒரே சிவப்பு ரோஜாக்கூட்டம். இன்னொரு பகுதியில் வெள்ளை ரோஜாக்கள், பெண்களைப் பார்க்க நிற்கும் ஆண் கூட்டம்போல். நந்தவனத்தின் நடுவிலும் ஓரத்திலும் ஓங்கி வளர்ந்த நான்கைந்து யூகலிப்ட்ஸ் மரங்கள், நீலகிரியின் சிகரங்களைவிடத் தாங்கள்தாம் உயரம் என்று இறுமாப்புடன் ஆடாமல் அசையாமல் நின்றன.

கைத்தடியை அநாயாசமாகக் கையில் சுற்றிக் கொண்டே, நாதன் நந்தவனத்தினுள் பிரவேசித்தார். முப்பது ஆண்டுகளுக்கு முன், வெள்ளைக்காரர்களின் கடுமையான பரீட்சையில் வெற்றிபெற்று ஐ.ஸி.எஸ். பட்டத்தை வாங்கியதில் அவருக்குப் பெருமையும் பெருமிதமும் இருந்தனவோ என்னவோ? இந்த நந்தவனத்தைப்பற்றி நினைத்தாலே போதும்; மனம் இன்ப அமைதியில் லயித்துவிடும். இவ்வளவுக்கும் பங்களாவுக்கு முன்னால் ஓர் ஏகரா நிலத்தில், மலைகளின் மேடும் சரிவுமாக உள்ள நிலப்பரப்பில் அமைந்த சிறு நந்தவனந்தான் அது; அவருடைய சிருஷ்டி. குழந்தையை வளர்ப்பதுபோல அவர்

அதை உருவாக்கி, நாளும் பொழுதும் கவனம் செலுத்தி அதை ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

நந்தவனத்தில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிய நடைபாதைகளில் நடந்துகொண்டே வந்த அவருடைய மனத்தில் இன்று என்றும் இல்லாத திருப்தியும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தன. பெண் படிப்பை முடித்துக் கொண்டு சென்னையிலிருந்து திரும்பி வருகிறாள். இனி அவருடைய கடைசிப் பொறுப்பு ஒன்றுதான் இருக்கும். கல்யாணம் செய்து கொடுத்துத் தம் விருப்பம்போல, மாப்பிள்ளை வீட்டோடு இருந்துவிட்டால் வாழ்க்கை லட்சியம் நிறைவேறிவிடும்.

நந்தவனத்தின் நடுவே, கண்ணாடிகளால் ஆன ஒரு சிறு ஆசிரமம் போன்ற ஓய்வுக்கூடம் இருக்கிறது. நாதன் அந்த இடத்தை நோக்கி மெதுவாக நடந்தார். பெண்ணின் கல்யாணம் என்றபோதே, அவரையும் மீறிக் கண்ணன் அவர் கண்முன் நின்றான்.

ஓய்வுக் கூடத்தில் இருந்த மரப்பெஞ்சில் அவர் அமர்ந்துகொண்டார். தூரத்தே தொட்டபெட்டாவின் முடி தெரிந்தது. சாதாரணமாக, மேகங்களில் ஒடுங்கியிருக்கும் சிகரம் இன்று நிர்மலமான ஆகாயவெளியில் கம்பீரமாக நின்றது. ஒரு நேரச் சாப்பாட்டுக்கும் வகை வழி இல்லாமல் தவித்த கண்ணனை அவர்தாம் தொட்டபெட்டாவின் உயரத்துக்கு ஏற்றிவைத்திருக்கிறார். ஆனால் அத்துடன் அவர் நின்றுவிடவேண்டும். அவருடைய கடமை முடிந்துவிட்டது. தம் பெண்ணின் வாழ்க்கையை அவனுடன் இணைக்க அவர் மனத்தாலும் எண்ணக்கூடாது. குடும்பத்தின் கட்டளையை மீறி, தன்னிச்சைப்படி கல்யாணம் செய்துகொண்டு, பெற்ற இரண்டு பிள்ளைகளையும் வளர்க்க வழிதெரியாமல் கதிகலங்கிப் போன தங்கையின் பிள்ளை அவன். என்னதான் தங்கை உறவும் மருமகன் உறவும் கழற்றி எறியக்கூடிய



உறவு அல்ல என்றாலும், அந்த உறவு கண்ணனின் முன்னேற்றத்துடன். முடிந்துவிட வேண்டும். அவருக்குத் தங்கைமீது கோபமோ ஆத்திரமோ இல்லை. ஆனால் அவள் அவருடைய தந்தையின் ஆணையை மீறியவள். அவருடைய மரணப்படுக்கையிலும் அவருடைய மனத்தை, நாம் நினைத்ததைச் சாதித்துக்கொண்டு விட்டோம் என்ற கர்வத்தில், புண்படுத்தியவள். குடும்பத்திலும் அக்கம் பக்கத்திலும் யாருக்குமே வாய்க்காத அழகு, தங்கை சீதாவுக்கு வாய்த்திருக்கிறது. அவளுடைய அந்த அழகு, மலைகளிலேயே ஓடி ஆடி வளர்ந்த வாழ்க்கையில் மேலும் மேலும் மெருகேறிக்கொண்டே வந்திருக்கிறது. இதெல்லாம் போதாமல் அவள் கர்வப்பட என்று, அறிவும் எல்லாரையும்விட அவளிடம் அதிகமாக ஒட்டிக்கொண்டது. கான்வென்ட்டுப் பள்ளியில், அவளைப்போல் ஆங்கிலத்தை அழகாக யாரும் உச்சரிக்கவில்லை. பதினெட்டு வயசில் கோயம்புத்தூர்க் கல்லூரியிலே பி.ஏ. பட்டத்துக்குப் படிக்கத் துடித்தாள். அம்மாவின் மரணம் அணையிட்டது. அதன்பின் வீட்டை அவள் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலை. நாதன் லண்டனில் ஐ.ஸி.எஸ்.ஸு. க்கு மேற்படிப்புப் படிக்கப் போயிருந்த காலம். வீடெல்லாம் சிரிப்பு எதிரொலிக்க, இருக லட்சுமியாகவே திகழ்ந்து நடமாடிய மனைவி மறைந்த பிறகு, நாதனுடைய தந்தைக்கு வாழ்க்கையே அர்த்தமற்ற, சுமையான இயக்கமாகப் போய்விட்டது. எஸ்டேட்டுக் காரியங்களில் அவர் மனம் ஈடுபடவில்லை.

நாதன் லண்டனிலிருந்து திரும்புவதற்குள் சீதாவுக்கும் எஸ்டேட் மானேஜரின் பிள்ளை பலராமனுக்கும் கல்யாணம் நடந்துவிட்டது. பேரூர்க் கோயிலில் நடந்தது என்று தகப்பனார் ஏதோ எங்கேயோ நடந்த சம்பவமாகச் சொன்னார். எல்லா விவரங்களையும் கேட்ட நாதனுடைய ரத்தம் கொதித்தது. சீதா, பலராமனைத்தான் கல்யாணம்

செய்துகொள்ளுவேன் என்று பிடிவாதம் செய்ததை அவர் மனம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அவனுடைய செய்கை, தந்தையைத் தூக்கி எறிந்து அவன் பேசிய பேச்சு, லண்டனிலிருந்து அண்ணன் திரும்பி வரும் வரைக்கும் காத்திருக்க முடியாது என்று பறந்த அவசரம் - எல்லாம் நாதனுடைய மனத்தில் ஒரு புதுத் தங்கையை உருவாக்கி விட்டன. இனித் தமக்கும் தங்கைக்கும் எந்தவிதமான போக்குவரத்தும் அவசியம் இல்லை என்று அவர் தீர்மானித்துவிட்டார்.

அந்தத் தங்கையின் இரண்டாம் பிள்ளை கண்ணன். பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் ஒன்பது வயசுச் சிறுவனாக, ஜனவரிக் குளிரில் இதே கண்ணாடிக்கூடத்தில் நடுங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய அம்மா அங்கே இருக்கும்படி சொல்லிவிட்டு அண்ணாவை மட்டும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாளாம்.

அன்று நாதனுடைய மனத்தில், வெறுப்பினால் உண்டான ஆத்திரம் அதிகமா, அல்லது பையனுடைய அநாதைத்தனம் தோற்றுவித்த இரக்கம் அதிகமா என்று தெரியவில்லை. போட்டுக்கொள்ளக் கம்பளிச் சட்டையும் ஏதோ கொஞ்சம் பணமும் கொடுத்து அனுப்பிவிடவே அவர் எண்ணினார். ஆனால் அவருடைய மனைவி அவருடைய திட்டத்தையே மாற்றி அமைத்துவிட்டாள். தங்கை எப்போதோ இளமையின் அறியாமையில் செய்த பிழைக்கு, அவளுடைய பிள்ளைத் தண்டிப்பது போல் ஆகிவிடும் என்றாள் அவள். நாதன் மனத்தில் உறைந்து கிடக்கும் வெறுப்பு, உறவைத் துண்டிக்க முடியாது. அவராகப் பந்தத்தை அறுக்கக்கூடாது என்று அவள் உபதேசம் செய்தாள்.

இப்படி வந்தவன் கண்ணன். அவன் வந்தபோது ராதிகாவுக்கு வயசு மூன்று. அவளுடைய அண்ணா



குமாருக்குப் பன்னிரண்டு வயசு. ஒரு பெரிய சீமானின் இரண்டு செல்வ மணிகளுக்கு நடுவில், அவன் ஆதரவற்ற பிள்ளை. ஆனால் நாதனுடைய மனைவி கற்பகம், கண்ணனையும் ஒரு பிள்ளையாகவே நடத்தினாள்.

ஐ.ஸி.எஸ். வாழ்க்கையில் எந்த ஊரிலும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்கமுடியவில்லை. ஆனால், எந்த ஊரில் இருந்தாலும் கோடையில் அறுபது நாட்கள் பங்களா 'ஜே ஜே' என்று இருக்கும். கற்பகம், குழந்தைகளையும் கண்ணனையும் அழைத்துக்கொண்டு கணவர் வருவதற்குள் ஒரு மாதம் முன்னமே வந்துவிடுவாள். பங்களா, கல்யாண வீடாக இருக்கும்.

ஆனால் இந்த வாழ்க்கைக்கும் ஒரு முடிவு வந்தது; திடீர் முடிவுதான். அப்போது விசாகப்பட்டினத்தில் குடும்பம் இருந்தது. ஒரு நாள் சாயங்காலம் கற்பகம் தலைவலி என்றாள். அப்புறம் இரவில் ஜுரமாக வீசியது. பிரபல டாக்டர்கள் இரண்டு நாட்களுக்குத் தாங்கள் படித்த படிப்பையெல்லாம் பிரயோகம் செய்து பார்த்தார்கள். ஆனால் வந்துவிட்ட எமனை அவர்களால் விரட்ட முடியவில்லை.

அதன்பின் நாதன் அதிக நாட்கள் வேலையில் நீடிக்கவில்லை. பென்ஷனுடன் திரும்பிவிட்டார். அப்போது ராதிகாவுக்கு வயசு ஒன்பது.

ராதிகா வளர்ந்தாள். கூடவே கண்ணனும் வளர்ந்தான். இருவருக்கும் துணையாக, அண்ணாவாகக் குமாரும் வளர்ந்தான்.

மனைவி இருந்த வரையில் நாதன் மூவரையும் ஒன்றாகத்தான் நினைத்துப் பார்க்க முயன்றார். மனம் இடம் கொடுக்காமற் போனாலும், மனைவியின் அறிவுரை முயலத் தூண்டியது. கற்பகம் இறந்த பிறகு, ஊட்டியின் தனிமையில்

அவர் மனம், ராதிகாவையும் கண்ணனையும் இணைத்துப் பார்த்து இணைத்துப் பார்த்துப் பயப்பட ஆரம்பித்தது. தம் தங்கை செய்தது போலவே ராதிகாவும் ஏதாவது விபரீதமான எண்ணத்தில் ஈடுபடுவாளோ என்ற அச்சமும் உண்டாகியது.

கண்ணன் தங்கையின் பிள்ளை. ராதிகா பெண். நெருப்பும் பஞ்சும் ஒரே இடத்தில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் கொஞ்ச காலத்துக்கு இருந்தாலும் அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து வைக்கவேண்டும். அவருடைய இயல்பை வைராக்கியமும் பதவி சம்பாதித்துக் கொடுத்த உறுதியும் வீட்டில் தலைதூக்க ஆரம்பித்தன. நாள் செல்லச் செல்ல அந்த வீட்டில் கண்ணன் தன் உண்மையான நிலையை அறிந்துகொள்ளும்படி செய்துவிட்டார் நாதன்.

இப்படி வளர்ந்த கண்ணனை ஏன் இன்னும் தம்மனம் ராதிகாவுடன் இணைத்துப் பார்க்கிறது என்பதுதான் நாதனுக்குத் தெரியவில்லை. இன்று ராதிகா வரப்போகிறாள். எட்டு மாதங்களாக ஓர் எஸ்டேட்டில் உதவி மானேஜராக இருக்கும் கண்ணனும் அவளைப் பார்க்க வருவான். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் சந்தித்துக்கொள்ளப் போகிறார்கள்.

நாதன் எழுந்தார். அவருடைய மனம் குழம்பியது. கண்ணன் நல்ல பிள்ளை என்பது அவர் அறிந்ததுதான். தம் பெண்ணுக்குக் கண்ணன் ஏற்ற கணவனாகவும் இருப்பான். 'ஆனால்..... ஆனால்.....' அவருக்கு மேலே ஏதும் நினைக்க முடியவில்லை. நாதன் நந்தவனத்திலிருந்து பங்களாவை நோக்கி நடந்தார். அப்போது மணி பத்து. ராதிகா இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவாள்.

பங்களா வாசலில் கண்ணன் நின்றுகொண்டிருந்தான். அவனுடைய ஆஜானுபாகுத் தோற்றம் சில கணங்களுக்கு நாதனுடைய மனத்தில் ஒரு விதமான பயத்தைக் கிளப்பியது. அவர் மெதுவாகப் பங்களாவை அடைந்தார்.



கண்ணனை எத்தனை முறைகள் பார்த்தால்தான் என்ன? ஒவ்வொரு முறையும் அவரையும் மீறித் தங்கை சீதாவின் உருவம் - ஏன், பெற்றோரின் உருவங்கள்கூட - அவர் கண்முன் தோன்றிவிடும். அப்பாவின் சிவப்பு நிறமும் அவர் கம்பீரமாக நிமிர்ந்து பார்க்கும் தோரணையும் அப்படியே சீதாவிடம் நிறைந்திருந்தன. கண்களின் அழகுக்கும் உதட்டைக் குவித்து வாய்க்குள்ளேயே சிரிக்கும் பாணிக்கும் அம்மாவைக் கொண்டிருந்தாள். அவளுடைய பிள்ளை கண்ணன், தன் தகப்பனாரைத் துளிகூடத் தொட வில்லை. முழுக்க முழுக்க அம்மாதான். ஆனால் அந்த உயரமும் கம்பீரமும் நிதானமான நடையும் - தாத்தாவையே உரித்து வைத்திருந்தன.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் யார் ராதிகா வுக்கு அவன் பொருத்தம் அல்ல என்று சொல்லுவார்கள்?

''குட் மார்னிங், மாமா!'' என்றான் கண்ணன்.

''நீ எப்போ வந்தே?'' என்று கேட்டார் நாதன்.

மனம், 'நீ இன்னும் முன்னாலேயே வந்து முன்னாலேயே திரும்பியிருக்கக்கூடாதா?' என்று அலுத்துக் கொண்டது.

''நான் இப்போதுதான் வந்தேன், மாமா!'' கண்ணன் சொல்லிக்கொண்டே, வாசற்படி ஏறி நடந்து கொண்டிருந்த நாதனைப் பின்தொடர்ந்தான்.

''ஏதாவது சாப்பிட்டாயா?''

''வருவதற்கு முன்னால்தான் ஆபீஸிலே 'டீ' குடித்தேன்.''

''உட்காரு.''

''வேண்டாம். நான் கோத்தகிரி வரைக்கும் போகணும். சொல்லிக்கொண்டு போகலாம்னு வந்தேன். உங்களுக்கு ஏதாவது தேவையிருந்தால் சொல்லுங்கள்.''

''இப்போ ஒண்ணும் தோணலை.'' நாதன் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். கண்ணனை அவருக்குப் பிடித்திருந்தாலும் இப்போது என்னவோ அவன் அங்கே இருப்பதே முள்ளாகக் குத்திற்று.

''இன்னொரு விஷயம், மாமா.''

''என்ன?''

''இனிமேல் நான் இந்தப் பங்களாவுக்கு வர மாட்டேன்.'' - வார்த்தைகள் நிதானமாகவே வந்தாலும் அவற்றில் பொதிந்திருந்த சபத ஒலி நாதனுடைய காதில் விழுந்தபோது, அவர் ஒரு கணம் திடுக்கிட்டார். ஆனால் மறுகணமே, அந்த ஒலி, திருப்தியையும் நிம்மதியையும் அளித்தது. அவர் மனத்தில் விரும்பியதைக் கண்ணன் இப்படி ஒரு வரமாக அளிப்பான் என்று அவர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

'ஏன்?' என்றுகூட அவருக்குக் கேட்கத் தோன்றவில்லை.

''அப்போ?'' என்று இழுத்தார் அவர்.

''ஆனால் உங்களைப் பார்க்கணும்னு தோணினா, கார்த்தாலே எட்டு மணிக்கு க்ளாஸ் ஹவுஸுக்கு வரேன். நீங்க அங்கேதானே அந்த வேளையில் இருப்பீர்கள்?''

''ஆமாம். நீ கோத்தகிரியிலிருந்து எப்போ திரும்புவே?''

''தெரியல்லை. இன்னும் ஒரு சமாசாரம், மாமா!''

''என்ன?'' - நாதன் கேட்டுவிட்டு அவனைப் பார்த்தார். அதே சமயம், நாற்காலியின் மேல் சாய்த்து வைத்திருந்த கைத்தடி கீழே விழுந்தது.

கண்ணன் குனிந்து அதை எடுத்து அவரிடம் நீட்டினான். தேவைக்கு அதிகமாக அதைக் கூர்ந்து பார்க்கிறானோ என்ற சந்தேகத்துடன் அவர் வாங்கிக்



கொண்டார். ஆறு வருஷங்களுக்கு முன்னால் இதே கைத்தடியை அவர் எப்படி உபயோகித்தார்!

''நான் குன்னூருக்கோ கோத்தகிரிக்கோ மாற்றல் வாங்கிக்கொள்ளலாம் என்றிருக்கிறேன். மானேஜர்கூடப் பார்க்கலாம் என்றிருக்கிறார்.''

இதற்கும் நாதன், 'ஏன்' என்று வினவவில்லை. வரத்துக்கு மேல் வரமாக அல்லவா கண்ணன் அளிக்கிறான்? ஆனால் அதே கணத்தில் மனத்தின் கண்கள் அவன்பால் இறங்கிச் சுரந்தன.

''பார்த்துச் செய்'' என்றார் நாதன்.

''அப்போ, நான் வரேன் மாமா!'' என்று சொல்லிப் பங்களாவுக்கு வெளியே இருந்த ஜீப்பை நோக்கி நடந்தான்.

அவன் செல்லுவதையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார் நாதன். குறுக்கு நடைபாதையில் அவன் திடீரென்று நின்றது தெரிந்தது. அவர் எழுந்து பார்த்தார்.

நடைபாதையின் நடுவே ஒரு நாயும் அதன் சேயும் விளையாடிக்கொண்டிருந்தன. அவன் மேலே நடந்து சென்றால் நாய் ஒரு பக்கமும் சேய் ஒரு பக்கமுமாக விலக வேண்டியதுதான்.

அடுத்த நிமிஷம் கண்ணன் பாதையிலிருந்து புல்வெளியில் இறங்கி மேலே நடந்து கொண்டிருந்தான்.

நாதன் பெருமூச்சுவிட்டார்.

## 3

# அப்பு

கண்ணன் விடை பெற்றுக்கொண்டு போனபிறகு வெகுநேரம் நாதன் இருந்த இடத்தைவிட்டு அசையாமல் அவன் சென்ற திசையையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார். அவன் செய்துவிட்டதாகக் கூறிய முடிவுகள் அவர் காதில் இன்னும் ரீங்காரம் செய்தன. கேட்டவுடன் எழுந்த திருப்தியும் சமாதானமும் திடீரென மறைந்துவிட்டாற் போன்ற பிரமை உண்டாயிற்று. கண்ணன் உண்மையாகவே முடிவு செய்திருக்கலாம். ஆனால் ராதிகா? அவளுடைய மனத்தில் என்ன என்ன எண்ணங்கள் ஓடுகின்றனவோ? கண்ணனைப்பற்றி அவள் என்ன நினைத்துக்கொண்டிருக் கிறாள்? அவள் இப்போது முன் போலப் பன்னிரண்டு அல்லது பதினான்கு வயசுச் சிறுமி அல்ல. நன்றாக வளர்ந்துவிட்டவள். நான்கும் அறிந்துகொண்டவள். கல்லூரிப் படிப்பும் சென்னை வாசமும் புதுப் புது எண்ணங் களையும் கருத்துக்களையும் கற்றுக் கொடுத்திருக்கும் இத் தகைய ராதிகா கண்ணனை மறந்திருந்தால், அவர் அடைந்து விட்டதாக எண்ணியிருக்கும் திருப்திக்கும் சமாதானத்துக்கும் அர்த்தம் இருக்கும். அவள் மறக்காமல் இருந்தால்? இன்னும் கண்ணன் அவளுடைய மனத்தில் உறைந் திருந்தால்? அவள் இன்னும் உள்ளத்தில் கண்ணனை வரித் திருந்தால்? அவரால் என்ன செய்ய முடியும்? செல்லமாக வளர்ந்து, நினைத்ததை யெல்லாம் சாதித்துக்கொள்ளக்கூடிய ராதிகா இனிமேல் அவர் சொல்லிக் கேட்பாளா? அன்று தடி



கொண்டு அவர் கண்ணனை விரட்டினார். அதுபோல விரட்ட முடியுமா? அதுவும் ராதிகாவின் மனத்திலிருந்து? அவர் விரட்ட விரட்ட ராதிகா அவனை இழுத்துத் தன் மனத்துக்குள் இன்னும் பலமாக அல்லவா பதிய வைத்துக் கொள்ளுவாள்?

கண்ணன் மட்டும் வைராக்கியத்துடன் நடந்து கொண்டால் போதாது என்று எண்ணின நாதன் மெதுவாக எழுந்தார். மனக் குழப்பத்துடன் பங்களாவை நோக்கி நடந்தார். குளிர்ந்த காற்றிலும் உடல் வேர்த்தது.

திடீரென்று பக்கவாட்டில் யாரோ வரும் அரவம் கேட்டது. மேடான பாதையில் சைக்கிளைத் தள்ளியவாறு அப்பு, வந்துகொண்டிருந்தான். அவனுடைய கலைந்த தலையையும் குச்சி குச்சியான கைகால்களையும் பார்த்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன என்று நாதனுடைய மனம் கணக்குப் போட்டது. 'நாளைக்கு வருகிறேன்' என்று போனவன் இன்றுதான் வருகிறான் என்ற எண்ணமும் தொடர்ந்து எழுந்தது. கோபமும் பிறந்தது. ஆனால் அப்புவை அவருடைய கோபம் என்ன செய்யும்? அப்படிப் பார்த்தால் யாருடைய கோபந்தான் அப்புவை என்ன செய்ய முடியும்?

அவர் இன்னும் நடந்துகொண்டிருந்தார். மேடான பாதையில் அப்பு சைக்கிளும் கையுமாக, காற்றில் பொத்தானிடாத ஷர்ட்டு ஆடி அசைய வந்து கொண்டிருந்தான்.

ஊட்டியின் சரித்திரத்தை யார் எப்போது எழுதினாலும் அதில் கட்டாயமாக அப்பு இடம் பெற்று விடுவான். அவனுக்கு என்ன தெரியும் என்ற கேள்வியே அபத்தம். என்ன தெரியாது என்று வேண்டுமானால் கேட்கலாம். தோட்டியிலிருந்து தொண்டைமான் வரை எல்லாரையும் அறிந்து வைத்திருப்பவன் அவன். கோடையில் மலை

வாசத்தை அநுபவிக்க வரும் பதவி போன மகாராஜாக்களிலிருந்து, 'அட்ரெஸ்' இல்லாத வழிப்போக்கர்கள் வரையில் அவனுக்கு எல்லாரும் அற்றுபடி.

அவன் ஊருக்காக உலகத்துக்காக உழைத்தான். இதை அவன் ஓர் இலட்சியமாக வைத்துக்கொள்ளவில்லை, பிறவிக்குணமாக அமைந்திருந்தது. ஏதாவது ஒரு சாமான் யாருக்காவது கிடைக்கவில்லையா? அப்பு வாங்கிக் கொடுத்துவிடுவான். ஒரு வக்கீல் குமாஸ்தாவின் பெண்ணுக்குத் திடீரென்று நடுராத்திரியில் மருந்து ஒன்று தேவையாக இருந்தது. கெட்டிப் பள்ளத்தாக்கில் மருந்துக் கடைக்காரர் குடியிருந்தார். வேறு யாருடைய கடையிலும் மருந்து கிடைக்காது என்று வக்கீல் குமாஸ்தா கதறினார். நடுக்குகிற பனியில், மையிருளில் அப்பு, கெட்டிப் பள்ளத்தாக்கை நோக்கி ஓடினான். கடைக்காரர் ஊட்டிக்குச் சென்று கடையைத் திறக்கத் துணிவு இல்லாமல் சாவியையே அவனிடம் கொடுத்துவிட்டார்.

இவ்வளவெல்லாம் உழைக்கிறானே, எத்தனை சம்பாதித்திருக்கிறான்? என்ன என்ன சேர்த்து வைத்திருக்கிறான் என்று கேட்டால், காலணா இல்லை என்ற பதில்தான் கிடைக்கும். தேவைக்கு மீறி அவன், தான் செய்யும் வேலைக்குப் பணம் பெறுவதில்லை. அப்படி ஏதாவது கிடைத்தாலும் உபரிப் பணத்தை வாரி வழங்கி விடுவான்.

அப்புவுக்கு வயசு இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு இருக்கலாம். அப்பா தாசில்தாராக இருந்தார். அம்மா பிள்ளையை ஈன்றுவிட்டுக் கண்ணை மூடினாள். அப்பு, தூளியில் ஆதரவற்றுத் தூங்குவதைக் காணப் பொறுக்காமல் (இந்தக் காரணத்தைத்தான் தாசில்தார் வருவோர் போவோரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்) அப்பா இன்னொருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டார்.



வந்தவள் தூளியைக் கவனிக்கவில்லை. அதைக் கவனிப்பதற்குத் தான் வந்திருப்பதாக ஒப்புக்கொள்ளவும் இல்லை. அப்பாவின் இரண்டாம் கல்யாணத்தால் அப்புவின் அநாதைத்தனம் அதிகமாகிவிட்டதே தவிரக் குறையவில்லை. அவன் எப்படியோ வளர்ந்தான். யாருடைய வரவேற்பும் பிரத்தியேக ஆதரவும் இல்லாமல் தன்னிச்சையாகப் பூனையும் நாயும் வீட்டினுள் வளைய வளைய வருவதில்லையா? அவற்றிற்கும் ஏதாவது கிடைக்கிறதே! அதுபோல அப்புவுக்கும் ஏதோ கிடைத்தது. அடி, உதை, வசை என்றும் அவனுக்குச் சோற்றுடன் கலந்து கிடைத்தன. ஊரைத் தாசிலு செய்பவரால் வீட்டில் எந்த அதிகாரத்தையும் செலுத்த முடியவில்லை. இளம் பிள்ளையும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அடி உதைகளைச் சித்தியிடமிருந்து வாங்கிக்கொண்டு, அவளுடைய குழந்தைகளிடம் கொஞ்சி விளையாடிக் கொண்டு காலம் கழித்தான்.

அப்புவுக்கு உடலில்தான் புண் ஏற்பட முடியுமோ?

அப்புவின் தகப்பனார், அவனுக்கு எட்டு அல்லது ஒன்பது வயசு நடக்கையில், திடீரென்று மரணமடைந்தார். ஒரு நாள் வீட்டுக்குத் திரும்பி வந்தார். வந்ததும் வராததுமாய்ச் சித்தி ஏதோ அப்புவைப்பற்றிச் சொல்லிக் கத்தினாள். தகப்பனாருக்கு அன்று உடம்பு சரியில்லை என்பதைக் கண்டுகொண்ட அப்பு, அவர் அருகில் போய் நின்றான். இருக்கிற இடத்திலிருந்தே அடித்தால் அவருக்கு அதிகச் சிரமம் இருக்காது என்று தோன்றியதோ என்னவோ?

''அப்பு, என் படுக்கையைப் போடடா!'' என்றார் தாசில்தார்.

அவர் படுக்கையில் படுத்துக்கொண்டதும் அப்புவை அருகில் அழைத்தார். கிழிந்த நிஜாரும் அழுக்கேறிய ஷர்ட்டுமாக அப்பு, அவருடைய பக்கத்தில் நின்றான்.

அப்பா அவனைப் பற்றித் தம் பக்கமாக இழுத்துக் கொண்டார்.

''டேய், அப்பு, நான் உனக்குத் துரோகம் செய்து விட்டேண்டா!'' என்று கதறினார்.

கணவருடைய உடல்நிலையும் மனநிலையும் தெரியாமல், தெரிந்துகொள்ளும் அறிவு இல்லாமல் சித்தி, குறுக்கிட்டுக் கத்தினாள். அப்பா என்ன சொல்லுகிறார் என்பதே அப்புவுக்குப் புரியவில்லை.

''என்ன துரோகம் அப்பா?'' என்று அப்பு யதார்த்தமாகக் கேட்டான்.

''உன்னை நான் என் பிள்ளையாகவே நடத்தலையடா, வளர்க்கலையடா! உன் அம்மா உசிரோடு இருந்தால் இப்படி அநாதை மாதிரி இருப்பியாடா?''

அப்பா அழுதார். ஆனால் அப்புவின் கண்களில் ஈரப்பசைகூட இல்லை.

''டேய், கொஞ்ச நேரத்திலே நான் உன் அம்மாவையே பார்த்து அவள்கிட்ட நேரிலேயே மன்னிப்புக் கேட்டுவிடுவேன். அதற்கு முன்னாடி உன்கிட்டே மன்னிப்புக் கேட்கணும். என்னை மன்னித்து விடுடா அப்பு; என்னை மன்னித்துவிடு!''

அப்புவைப் பிடித்திருந்த கை திடீரெனத் தளர்ந்து விழுந்தது. நின்ற இடத்தைவிட்டு அசையாமல் அப்பு தகப்பனாரைப் பார்த்தான். கண்கள் இருண்டு, விழிகள் பயங்கரமாக உள்ளடங்கி நிற்பதுபோலத் தோன்றின. அப்புவுக்கு அந்த வேளையிலும் பயம் பிறக்கவில்லை. கையால் அப்பாவின் கண்ணிமைகளை மெதுவாக மூடினான்.

ஏதோ மீண்டும் கத்த, தன்னைத்தானே தயாராக்கிக் கொண்டு நிற்கும் சித்திக்கு விஷயம் ஒரு மாதிரியாகப் புரியவே, அவள் ஓடோடி வந்தாள்.



அப்பு ஒரு போர்வையால் தகப்பனாரின் உடலைப் போர்த்திவிட்டு, ''அப்பா செத்துப் போயாச்சு!'' என்றான். அவனுடைய குரலில் எந்தவிதமான சலனமும் இல்லாததை அவனுடைய சித்தியே உணர்ந்தாள்.

''என் குழந்தைகளையெல்லாம் அநாதைகளாக நிறுத்திவிட்டாரடா!'' என்று அவள், வீடே இரண்டாகும்படி கத்தினாள்.

அப்பாவின் மரணம் எந்த விதத்திலும் அப்புவை அநாதையாக்கவில்லை. அம்மா இறந்ததுமே அவன் அநாதைதானே?

சித்தி, மூன்றாம் நாளே மேட்டுப்பாளையத்துக்குச் சென்றுவிட்டாள், பிறந்த வீட்டில் வாழ்க்கையைக் கழிக்க. அப்புவை அவள் அழைக்காவிட்டாலும், அவளுடைய தகப்பனார், ''நீயும் வாடா'' என்றார். அவர் மேட்டுப் பாளையத்தில் ஓட்டல் வைத்திருக்கிறவர். எட்டு வயசுப் பையனால் தம்முடைய செலவு ஒன்றும் அதிகமாகிவிடாது என்று எண்ணினார். ஆனால் அப்பு போகவில்லை. அவன் ஊட்டியிலேயே இருந்தான். எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் அவனுக்குத் தங்க இடம் கொடுத்தன. தங்களுடைய ஏழ்மையில் அவனுக்கும் பங்குகொடுத்தன.

நாட்கள் ஓடின. புதிதாகப் பதவியேற்ற தாசில்தார் அப்புவைக் கலெக்டரிடம் அழைத்துக்கொண்டு போனார். அவனுடைய கதையைச் சொன்னார். கலெக்டர் உடனே தம் பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டையோ பத்து ரூபாய் நோட்டையோ கொடுத்துவிடவில்லை. அன்று சாயங்காலமே பங்களாவுக்கு வரச் சொன்னார். அதன் பிறகு மூன்று வருஷங்களுக்கு அப்புவுக்குக் கலெக்டர் பங்களாவில் ஜீவனம் நடந்தது. வேலைகளுக்கு நடுவில் படிப்பும் நடந்தது. கலெக்டர் மாற்றலாகிப் போகுமுன், ஒரு

பிரமுகருக்கு அப்புவை அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் சில நாட்கள் அவருடைய திருப்திக்காக அவனை ஆதரித்தார்.

பதினான்காவது வயசிலிருந்து அவனுக்கு வீடோ வாசலோ இல்லை. கதவையெல்லாம் சார்த்திக்கொண்டு, போர்வைக்கு மேல் போர்வையாகப் போர்த்துக் கொண்டு உள்ளே வீட்டுக்காரர்கள் தூங்க, அப்பு திண்ணைக் குறடுகளில் ஒடுங்குவான். கார்ஷெட், குதிரை லாயம், ரெயில்வே ஸ்டேஷன் என்று எத்தனையோ இடங்கள் அவனுக்காகக் காத்திருந்தன.

அவனுடைய அநாதைத் தன்மையைக் கண்டு இயற்கையே கண்ணீர் வடித்ததோ என்னவோ? ஊசி ஊசியாகக் குத்தும் காற்றும் கைகால்களை அசைக்க முடியாமல் அடிக்கும் குளிரும் அப்புவை விட்டு விலகிச் சென்றன.

எப்படியோ, நத்தை ஊர்ந்து செல்வதுபோல, ஊர்ந்து ஊர்ந்து அப்பு வாழ்க்கைப் பாதையில் வெகுதூரம் முன்னேறிவிட்டான். பிறர் கண்களுக்கு அந்தப் பாதை கரடுமுரடான பயங்கரமான பாதையாகத் தோன்றினாலும் அப்பு, ஒருநாளும் தான் கஷ்டப்பட்டதாக உணரவே இல்லை. தன்னைக் காட்டிலும் அதிகமாக எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறார்கள் என்ற எண்ணந்தான் அவனுள் தோன்றியது.

வயசாக வயசாக இன்னோர் உண்மையும் அவனுக்குத் தெரியலாயிற்று. அவனுடைய அநாதை வாழ்க்கை எத்தனையோ அநுபவங்களைச் சொல்லிக்கொடுத்திருக்கிறது. பற்பல விதமான மனிதர்களை அவன் சந்தித்திருக்கிறான். எத்தனையோ குணாதிசயங்களைக் கண்டிருக்கிறான். நல்லவனுக்கும் பொல்லாதவனுக்கும் இடையில் இருக்கும்



தூரம் கணக்கில் அடங்காதது என்று ஒரு தடவை ஓர் அநுபவத்தில் எண்ணினான். இன்னொரு தடவை இருவருக்கும் இடையில் இடைவெளியே இல்லை என்று தோன்றியது. யார் நல்லவன்? யார் நல்லவன் அல்லர்? என்று பிரித்துக் கூறுவதே கடினம் என மனம் முணுமுணுத்தது. ஒரு தடவை மனிதவர்க்கமே புலிகளின் கூட்டம் என்று அப்புவின் மனம் அலுத்தது. எவனும் தன்னுடைய காரியத்திலேயே கருத்தாக இருக்கிறான், தன்னுடைய வெற்றியைச் சாதித்துக் கொள்ளுகையில் பிறருடைய ஏமாற்றத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று நினைத்தான். ஆனால் அதே கணத்தில், தன்னலமற்ற சேவையைச் செய்கிறவர்களும் அவன் கண்ணில்பட்டார்கள்.

மனித வர்க்கத்தைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, அவன் அறிந்ததைவிட, அறியாமைதான் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே வந்தது. அறிவு வளருகையில், அறியாமையும் கூடவே வளருகிறது என்று யாரோ சொல்வது தனக்குப் பொருந்துகிறது என்று அப்பு நினைத்தான்.

அவனுக்குப் பதினெட்டு வயசு ஆனதும், எத்தனையோ பேர் சர்க்கார் உத்தியோகமோ கம்பெனி உத்தியோகமோ வாங்கித் தருவதாகக் கூறினார்கள். தன்னால் யாரிடமும் கைகட்டி, வாய் புதைத்துச் சேவகம் செய்ய முடியாது என்று அப்பு சொல்லிவிட்டான். வானத்தில் பறக்கும் பறவை, சுதந்தரமாக இருக்கமுடியுமென்றால் அப்புவால் முடியாதா? அது இரை தேடுவதுபோல அவனும் தேடுவான். அது என்றாவது இரை கிடைக்காமல் பட்டினி கிடந்தது என்றால், அப்புவும் பட்டினி கிடக்கட்டுமே! வயிறு காலி என்று மனம் நொந்துகொண்டால் தானே வேதனை பிறக்கிறது? கொஞ்சங் கொஞ்சமாக மனத்தை வசப்படுத்திவிட்டால் வேதனைக்கு ஏது இடம்?

மொத்தத்தில் அப்புவின் வாழ்க்கை, பிறர் கண்களுக்குச் சீராக ஓடும் வாழ்க்கையாகத் தோன்றாமல் போனாலும், அவனைப் பொறுத்தவரையில் திருப்தியாகவே ஓடியது. இரண்டொரு பிரமுகர்களுக்குத் தினந்தோறும் கடிதங்கள், கணக்குகள் எழுதினான்; அல்லது 'டைப்' அடித்தான். வியாபாரிகளுக்கு லைசென்ஸ், பர்மிட் முதலியவை வாங்கிக்கொடுப்பதில் உதவி செய்தான். கல்யாணம், விழா என்பவை போன்ற நிகழ்ச்சிகளின்போது ஓடியாடினான்.

எதையும் எதிர்பார்க்காததனால் ஏமாற்றம் இல்லாத வாழ்க்கை. எதிலும் ஆசை வைக்காததனால் குறைவு இல்லாத மனம். யார்மீதும் எப்போதும் கோபம் பிறக்காத தனால் உவகை நிறைந்த உள்ளம்.

இப்படிப்பட்ட அப்பு, ஊட்டியின் சரித்திரத்தில் இடம் பெறவில்லை என்றால், ஊட்டிக்குத்தான் ஏது சரித்திரம்?

**நா**தன் போர்ட்டிகோவைத் தாண்டித் திண்ணையில் ஏறி ஒரு கூடை நாற்காலியில் உட்காரவும், அப்பு சைக் கிளை நிறுத்திவிட்டுப் போர்ட்டிகோவினுள் நுழையவும் சரியாக இருந்தது.

''குட் மார்னிங், ஸார்!''

''குட் மார்னிங், அப்புவா!'' 'ஏன் இரண்டு நாட்களாகக் காணோம்?' என்று கேட்க நினைத்திருந்தாரே, அந்தக் கேள்வி இப்போது அப்புவை நேருக்கு நேராகக் கண்டதும் மறந்துவிட்டது.

''ராதிகாவுக்காக இங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்களா?''

''அவள் வர இன்னும் டயமாகும்.''

''கண்ணன் வந்து போயாச்சு, இல்லியா?''



''உம்.''

''என்ன சொல்றான் அந்தப் பயல்?'' அப்பு சுதந்தர மாகக் கேட்டான்.

''ஒன்றும் சொல்லவில்லை.''

''ரொம்பக் கெட்டிக்காரன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''அப்பு ஓர் 'ஒபினியனை'ச் சொல்லிவிட்டால் அப்புறம் வேறு யார் தப்புன்னு சொல்ல முடியும்?'' என்றார் நாதன். அவருக்குச் சிரிப்பு வந்தது.

''அது என்னவோ வாஸ்தவம்'' என்ற அப்பு, ''இன்னிக்கு டைப்பிங்குக்கு ஏதாவது இருக்கா?'' என்று கேட்டான்.

''இல்லை.''

''கறிகாய் ஏதாவது வாங்கணுமா?''

''எல்லாம் இருக்கு.''

''போஸ்டாபீஸ் பக்கம் போவேன்.''

''கார்டு, கவர் எல்லாம் இருக்கு.''

திடீரென்று, ''கையிலே ஒண்ணு கொண்டு வந்திருக் கேன், என்னன்னு சொல்லுங்கள் பார்க்கலாம்!'' என்றான் அப்பு.

நாதன் பார்த்தார். அப்புவின் கையில் ஒரு பொட்டலம் இருந்தது.

''எனக்குத் தெரியவில்லை.''

''நேற்றுக் கோயமுத்தூர் போயிருந்தேன். ராஜவீதி வழியாக வரும்போது ஒரிஜினல் விசுவநாதையர் ஓட்டலைப் பார்த்தேன். உடனே ஜாங்கிரி கண்முன் நின்றது. அதே சமயத்தில் ராதிகாவுக்கு அது பிடிக்கும் என்ற ஞாபகமும் உண்டாயிற்று.''

''ரொம்ப தாங்க்ஸ். ராதிகாவுக்கு விசுவநாதையர் கடை ஜாங்கிரின்னா உசிர்.''

''அதுதான் எனக்குத் தெரியுமே. நீங்கள் வேறு எதற்குச் சொல்லுகிறீர்கள்? உள்ளே கொண்டு போய் வைக்கிறேன். நப்பாசையில் நீங்கள் விண்டு வாயில் போட ஆரம்பித்து விடாதீர்கள்!''

அவன் ஹாலுக்குள் நுழைய இருக்கையில், ''டேய் அப்பு!'' என்றார் நாதன்.

''என்ன மாமா?''

''காபி சாப்பிட்டுவிட்டு வா.''

அப்பு ஒரு நிமிஷம் நின்றான்.

''ஏன் நிக்கறே?''

''இல்லே, உங்களுக்கு இப்போ என்ன காரியம் ஆகணும்னு யோசிக்கிறேன்.''

''ஏன்டா?''

''பெரிய மனிதர்கள் காபி சாப்பிடச் சொன்னா, ஏதோ விஷயம் இருக்கும்.''

''ஒரு விஷயமும் இல்லேடா'' என்று நாதன் சிரித்தார். அப்புவும் உள்ளே போனான்.

# 4

# பெரிய புள்ளி

கோத்தகிரிக்குச் செல்லுவதற்கு முன்னால் எஸ்டேட் முதலாளியைச் சந்தித்துவிடுவது நல்லது என்று தோன்றவே, கண்ணன் அவருடைய பங்களாவை நோக்கி நடந்தான்.

நாதனிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்புகையில் அவன் மனம் ராதிகாவைப் பற்றியே நினைத்துக் குழம்பியது. அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உள்ளூற இருந்தாலும், பார்த்துவிட்டால் என்ன என்ன விபரீதங்கள் ஒவ்வொன்றாக நிகழ்ந்துவிடுமோ என்ற பயம் எழுந்து, ஆசையை அடக்கியது.

அவன் சாரிங் கிராஸை அடைந்தான். ஒரு நிமிஷம் ஜீப் நின்றது. குன்னூர்ப் பாதைமேல் கார் சென்றது. அந்தப் பாதையில்தான் எங்கோ ராதிகா இப்போது இருக்கிறாள். இந்தச் சாரிங் கிராஸை நோக்கி வந்துகொண்டிருக்கிறாள். இங்கேயே இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் அவளைப் பார்த்துவிடலாம். கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். மனம் நிறைவு பெறும். ஆனால் ராதிகா என்ன நினைப்பாள்? அந்தக் காலத்தில் இருவரும் பழகின விதமே வேறு. அந்தப் பழக்கத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, கண்ணன் கோட்டை கட்டுவதுபோல ராதிகாவும் கட்டுகிறாளா? அல்லது அதையெல்லாம் மறந்த பெண்ணாக மாறிவிட்டாளா? பென்சிலில் எழுதியதை ரப்பர் கொண்டு அழிக்கலாம். ராதிகா சுலபமாகத் தன் இளம்பருவத்துச் சிநேகிதத்தை மறந்துவிட்டிருப்பாளோ?

இளங் கதிரவனின் வெள்ளிறக் கிரணங்கள் முகத்தில் அடித்தன. கண்ணன் ஜீப்பை விட்டு இறங்கி நின்றான். ராதிகாவைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை தன்னை அப்படி நிறுத்தியிருக்கிறது என்ற எண்ணம் மனத்தில் எழ, மனமே குன்றியது.

திடீரென்று அவனை யாரோ கூப்பிடுவது காதில் விழுந்தது. திடுக்கிட்ட அவன் ஏறிட்டுப் பார்த்தான். குரல் வந்த திசையில். அவனை நோக்கி, முதலாளியின் காரியதரிசி வெங்கோபராவ் வந்து கொண்டிருந்தார்.

''கண்ணன், கண்ணன்!'' அவர் மூச்சு இரைக்க விரைந்து வந்துகொண்டிருந்தார்.

கண்ணன் இருந்த இடத்தைவிட்டு அசையாமல் நின்றான். அவர் அருகே வந்ததும், ''என்ன மிஸ்டர் ராவ், என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

''எங்கே கோத்தகிரிக்குக் கிளம்பிட்டீங்களோன்னு பயந்துட்டேன். பெரியவர் சொன்னார், 'கண்ணன் நாதன் வீட்டிலே இருப்பார்'னு. நல்லவேளை கண்டு பிடிச்சுட்டேன்!'' ராவ் மூச்சுவிட்டார்.

''என்ன சமாசாரம்?''

''தெரியாது. உங்களை உடனே வரச்சொன்னார். கோத்தகிரிக்கு இன்னிக்குப் போக வேண்டாமாம்.''

கண்ணன், தன் ஆச்சரியத்தைக் காட்டிக்கொள்ள வில்லை. இதெல்லாம் அவனுக்குச் சகஜமாகிவிட்டது. முதலாளியின் குணம் தெரிந்ததுதானே? நிமிஷத்துக்கு ஆயிரம் எண்ணங்கள், ஆயிரம் யோசனைகள்!

அவன் மெதுவாக ஜீப்பில் ஏறினான். ''ராவ்ஜீ ஏறும்'' என்றான்.

ராதிகா மனத்தில் ஒளிந்துகொள்ள, முதலாளி மகாலிங்கம் கண்முன் நின்றார்.



புகழ்பெற்ற மைடாஸுக்கும் மகாலிங்கத்துக்கும் ஒரே ஒரு வித்தியாசந்தான். மைடாஸ் தொட்டதெல்லாம் பொன்னாகிப் பொன்னாகிக் கடைசியில் இம்சையையும் கஷ்டத்தையும் கொடுத்தது. மகாலிங்கம் தொட்டதெல்லாம் பொன்னாகி, அவருடைய பாங்கிக்கணக்கில் ஏறியது. 'எந்தப் பாங்கியில் எவ்வளவு இருக்கிறது? எந்த வியாபாரத்தில் எந்த நேரத்தில் இறங்கினால் என்ன லாபம் வரும்?'' என்ற எல்லா விஷயங்களும் அவருடைய மண்டையிலே சதா அரித்துக்கொண்டே இருக்கும்.

நீலகிரி மாவட்டத்தில் மகாலிங்கம் அசைக்க முடியாத புள்ளி. தம் பணத்தாலேயே ஊரை விலைக்கு வாங்கி விடலாம் என்ற எண்ணம் பல நாளாகவே அவருக்கு உண்டு. அதைச் செயல்முறையிலும் பல தடவை காட்டி யிருக்கிறார்.

அவருக்கு ஒரு வியாபாரம் என்றும் இல்லை; எல்லாத் துறைகளிலும் மூழ்கி எழுந்திருக்கிறார். பரம்பரை பரம்பரையாக வந்திருக்கும் தேயிலைத் தோட்டங்களும், நூறு மைல் விஸ்தீர்ணத்துக்குக் காடுகளும் போதவில்லை அவருக்கு. சர்க்கார் வேலைகளின் காண்டிராக்டுகள், ஊட்டியிலிருந்து இரண்டு மூன்று ஊர்களுக்குப் பஸ் ஸர்விஸ், யூகலிப்டஸ் எண்ணெய் தயாரிக்கும் கம்பெனி என்று பல கிளைகளில் வியாபாரம் பெருகியது. இதெல்லாம் தவிர, பம்பாய் ஷேர் மார்க்கெட்டு வேறு.

தற்சமயம் அவருடைய மனத்தில் புதிதாக ஒரு தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என்ற ஆசை எழுந்திருக்கிறது. அதற்குத் தேவையான பர்மிட்டுகளையும் லைசென்சுகளையும் வாங்கி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. சென்னை நண்பர் ஒருவர் மூலமாக ஒரு ஜெர்மானிய என்ஜினியரையும் வரவழைத்தாகிவிட்டது.

அவரும் கடந்த இருபது நாட்களாகப் பூர்வாங்க வேலையை ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்.

அவருடைய ஆசைக்கு மூலகாரணமே பெண் நளினிதான். அவளுக்கு ரசாயனத்தில் ஆர்வம் அதிகம். சென்னைச் சர்வகலாசாலையில் தங்கப் பதக்கத்துடன் தேர்ச்சி பெற்ற அவள், மேற்படிப்புக்கு ஜெர்மனிக்குச் சென்றிருக்கிறாள். திரும்பிவர இன்னும் ஆறு அல்லது எட்டு மாதங்கள் ஆகும். அவள் வருவதற்குள் தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டால், வந்ததும் அவளிடம் அதை ஒப்படைத்துவிடலாம். அவளும் சந்தோஷப்படுவாள்.

பெண்ணைத் திருப்தி செய்வதைவிட மகாலிங்கத்துக்கு வேறு என்ன இலட்சியம் இருக்கிறது?

முந்தின நாள் சாயங்காலம் வந்த பம்பாய்ப் பத்திரிகையில் அவர் மூழ்கியிருக்கையில் திடீரென்று அவருடைய மனைவி ஜயம் பிரவேசித்தாள்.

''உங்களுக்கு இத்தனை ஆள் படை இருந்து என்ன புண்ணியம்?'' என்று இரைந்தாள் அவள், வந்ததும் வராததுமாக.

பத்திரிகையிலிருந்து அவர் மனைவி பக்கம் திரும்பினார்.

''என்ன சொன்னே, ஜயா?''

''நான் எத்தனை நாளாச் சொல்லிண்டு வரேன்?''

''எதை?''

''எதைன்னா கேட்கிறீர்கள்?'' ஜயா, தன் கை வளையல்களைப் புடைவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

மகாலிங்கம் யதார்த்தமாக, ''ஆமாம்'' என்றார்.



''நாரத்தங்காயும் அரிசி அப்பளமும் அனுப்பனும்னு நான் எத்தனை நாளாகச் சொல்லிண்டு வரேன்!'' என்று கத்தின ஜயா, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

''யாருக்கு?''

''யாருக்குன்னா கேட்கிறீர்கள்?'' ஜயாவுக்குக் கோபத்தில் கண்களில் நீர் துளித்தது.

''ஆமாம்'' என்று ஆரம்பித்த மகாலிங்கம் அடுத்த விநாடியே, ''ஓ, நளினிக்கா? மறந்தே போயிட்டேன், இன்னும் அனுப்பவில்லை? நீ யாருகிட்டே சொன்னே?'' என்று கேட்டார்.

''எல்லாம் அந்த ராயர்கிட்டேதான்.''

''ராயர்கிட்டே சொல்லியிருக்கக்கூடாது. அவர் எல்லாருக்கும் சொல்றமாதிரி, உனக்கும், 'சரி, செய்துவிட்டாப் போறது'ன்னு சொல்லி மறந்துவிடுவார்.'' மகாலிங்கம் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''ராயரைப்பத்தி நினைச்சேன்; சிரிப்பு வந்தது.''

''நளினியைப் பத்தி நினையுங்கள்.''

''நினைக்கிறேன்.''

''நாரத்தங்காய் தீர்ந்துபோய்ப் பத்து நாளாச்சுன்னு லெட்டர் வந்து இன்னிக்கு இரண்டு வாரமாகிறது. குழந்தை ஒரு மாசமாத் தயிருஞ் சாதத்துக்கு எதைத் தொட்டுக்கிறாளோ? அரிசி அப்பளம் ரொம்ப நன்னாயிருக்குன்னு அவளுடைய சிநேகிதிகளெல்லாம் சொல்றாளாம்.''

''அனுப்பிடுவோம்.''

''இங்கே ஏது?''

''கோயம்புத்தூருக்கு ஆளை அனுப்புவோம்.''

''யாரை அனுப்பறது? அந்த வெங்கோப ராயரை மட்டும் அனுப்பாதீர்கள். வர்ற வழியில் பாதிச் சரக்கை விட்டில் ஏற்றிவிடுவார்.''

''கண்ணனை அனுப்பலாம்.''

''பாவம். அவன் வேண்டாம்.''

மகாலிங்கம் ஜயாவை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தார்.

''ஏன்?''

''விடிய விடிய வேலை செய்கிறான்.''

''வேறு யாரை அனுப்பறது?''

''அப்பு வருவான்'' என்றாள் ஜயா.

''சரி, அனுப்பலாம்.''

''ஆயிரம் அப்பளம் வேணும்.''

''ஜமாய்.''

''இன்னொரு விஷயம்.''

''சொல்லு.''

''என் சித்தப்பா சஷ்டியப்த பூர்த்தி வர்றது. ஞாபகம் இருக்கோ, இல்லியோ?''

''என்றைக்கு?''

''தெரியுமே, நீங்கள் என் வீட்டு மனுஷாள்னா எல்லாத்தையும் மறந்துடுவேள்னு. பதினெட்டாம் தேதி புதன்கிழமை.''

''இன்னும் நிறைய நாள் இருக்கே!''

''நான் நாலு நாள் முன்னாடியே போகணும்.''

''ஜமாய்.''

''ஜமாய்க்கிறேன். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? எப்போ வரப்போகிறீர்கள்?''



''தாராபுரந்தானே? வந்தால் போகிறது.''

''இப்படித்தான் இப்போ சொல்லுவீர்கள். கடைசி நிமிஷத்திலே எல்லாம் மறந்துவிடும்.''

''கண்ணன் கிட்டே சொல்லி வை. அவன் டயரியில் எழுதி வைத்து, ஞாபகப்படுத்துவான்.''

ஜயா ஏதோ முணுமுணுத்துக்கொண்டே வெளியேறினாள். பெண்ணுக்காக ஒரு பெரிய தொழிற்சாலையையே கட்டவேண்டும் என்று நினைக்கிறவரால் எப்படி அவளுக்கான நாரத்தங்காய், அரிசி அப்பளத்தை மறக்க முடிகிறது என்று தன்னுள் கேட்டுக்கொண்டாள்.

ஜயா வெளியேறினதும் நிலவிய நிசப்தத்தில் பம்பாய்ப் பத்திரிகையில் மீண்டும் மூழ்கினார் மகாலிங்கம். திடீரென்று மனக்கண்முன் கண்ணன் அவரையும் மீறித் தோன்றினான்.

அவனை அழைத்துவர வெங்கோபராவை அனுப்பினாரே, ஏன் இருவரையும் காணோம் என்ற கேள்வி எழுந்தது. கேள்விக்குப் பதிலாகக் காம்பவுண்டுக்குள் ஒரு ஜீப் வரும் ஓசை கேட்டது. இருந்த இடத்திலிருந்தே ஜன்னல் மூலமாகப் பார்த்தார் மகாலிங்கம். கண்ணனும் ராயரும் வந்துகொண்டிருந்தார்கள்.

அடுத்த கணம் பத்திரிகையில் மூழ்கியிருப்பது போல் அவர் பாவனை செய்ய ஆரம்பித்தார்.

# 5

## ஏன் காணோம்?

ராதிகா சென்னையிலிருந்து திரும்பி வந்தாள். அவளுடைய கால் பட்டவுடனே பங்களா களைகட்டியது. பச்சைப் புல்வெளியில் இளங்கன்று தன்னிச்சையோடு ஆனந்தவெறியில் துள்ளித் துள்ளித் திசை பாராமல் ஓடுவதுபோல அவள் அறைக்கு அறை அர்த்தம் இல்லாமல் தாவினாள். வீட்டின் ஒவ்வோர் அறையும் ஒவ்வொரு கதையை அவளுடைய நினைவுக்கு இழுத்துவந்தது. துக்ககரமான கதைகளை மறக்க அவள் ஆனந்தமயமான கதைகளை நினைத்துப் பார்த்தாள்.

தொட்டதற்கெல்லாம் அவள் கலீர் கலீர் என்று சிரித்தாள். அவளுடைய சிரிப்பின் ஒலி, தீபாராதனையின் போது ஒலிக்கும் ஆலயமணியாகக் கேட்டது, நாதனுடைய காதுக்கு. அவருடைய ராதிகா இப்போது பழைய ராதிகாவாகத் தெரியவில்லை. இதுவரை கண்டறியாத புதுமைப்பெண்ணாகத் தோன்றினாள். அவருடைய மனம் பெருமிதத்தில் பூரித்தது.

இந்த இரண்டு நாட்களில் ராதிகா, ஓர் இடத்தில் நிற்கவில்லை. தான் ஊட்டியில் இல்லாதபோது ஊரில் என்ன என்ன நடந்தன, யார் யார் வந்து போனார்கள் என்ற சமாசாரங்களை எல்லாம் பாலம்மா முதல் டிரைவர்வரை எல்லாரிடமும் கேட்டறிந்து கொண்டாள்.



ளைப்பாக வற்றிப்போனது, பாலம்மாவின் தமையனாருடைய மரணம், டிரைவருக்கும் தோட்டக்காரனுடைய பெண் சிங்காரிக்கும் நடந்த கல்யாணம், அப்பு, முதுமலையில் யானைகளைப் பேட்டி கண்டது என்று எவ்வளவு எவ்வளவோ!

மத்தியான நேரங்களில் பேசித் தீர்க்க, பள்ளிக்கூடத் தோழி மதுரம் வந்தாள். உள்ளூர்க் கலெக்டர் ஆபீசில் குமாஸ்தாவாகப் பணி செய்யும் அவள், ராதிகா வருகிறாள் என்று அறிந்தவுடனே ஒரு வாரம் லீவு போட்டுவிட்டாள். இரண்டு பேரும், 'கிளாஸ் ஹவுஸில்' உட்கார்ந்துகொண்டு பொழுது போவது தெரியாமல் அரட்டை அடித்தார்கள்.

எத்தனையோ பேர் அவளைப் பார்க்க வந்தார்கள்; உட்கார்ந்து பேசினார்கள்; படிப்பைப்பற்றி விசாரித்தார்கள். அப்பு அபிநயத்துடன் பேசிச் சிரிக்கவைத்துக் கண்களில் நீரையும் வருவித்துவிட்டுப் போனான். மகாலிங்கமும் அவருடைய மனைவி ஜயாவும் வந்து போனார்கள். ஜயா, தன் பெண் நளினி, ஜெர்மனியில் இருப்பதை ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகக் கூறிவிட்டு, அவளையும் மேல்நாட்டுக்குப் போக வற்புறுத்தினாள்.

என்னதான் ராதிகா ஆடிப்பாடிச் சிரித்தாலும், எதிலும் அவள் மனம் ஒட்டவில்லை. அவளுடைய கண்ணன் எங்கே, எப்போது வருவான் என்ற கேள்விகள் அவளுள் எழுந்துகொண்டே இருந்தன. மற்றவர்கள் அவளுடன் பற்பல சமாசாரங்களைப்பற்றிப் பேசுகையில் கண்ணனுடைய பெயரும் அடிபட்டது. அப்போது அவனைப் பற்றி அவர்களிடமே விசாரிக்க அவளுடைய நாக்குத் துடிக்கும். ஏன், அப்பாவிடமே கேட்டுவிடலாமா என்றுகூடச் சில சமயங்களில் ஆசை எழும். ஆனால் அவள் தன்னையே அடக்கிக் கொண்டாள். 'தினந்தோறும்

காலையிலும் மாலையிலும் கண்ணன் வந்து விசாரிக்கிறான். சில ராத்திரிகளைப் பங்களாவிலேயே கழிக்கிறான்' என்றெல்லாம் அப்பா கடிதங்களில் எழுதியிருந்தாரே! அந்தக் கண்ணனை ஏன் இரண்டு நாட்களாகக் காண வில்லை?

தன்னை மேட்டுப்பாளையம் ரெயில் ஸ்டேஷனிலேயே எதிர்கொண்டு அழைக்க அவன் வருவான் என்று ராதிகா எதிர்பார்க்கவில்லைதான். ஆனால் பங்களாப் போர்ட்டிகோவிலாவது அப்பாவுடன் சேர்ந்து நின்று வரவேற்றிருக்கக் கூடாதா? அவள் தன் ஏமாற்றத்தை வெளியே காட்டிக்கொள்ளவில்லை. பல மாதங்களுக்குப் பிறகு ஊட்டிக்குத் திரும்புவதிலும் அப்பாவிடமே வருவதிலும் அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சிதான். ஆனால் இதையெல்லாம்விடக் கண்ணனைப் பார்க்கப் போகிறோம் என்று இரவும் பகலும் எண்ணி எண்ணிக் கற்பனையில் மகிழ்ந்து கொண்டிருந்தாளே! அதெல்லாம் இதுவரையில் வெறும் கனவாக அல்லவா போய்விட்டது?

வெண்கலப் பாத்திரத்தில் கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறு விரிசல் விழுந்துவிட்டால் போதும்; அப்புறம் பாத்திரம் எழுப்பும் ஒலியே அலாதிதான். செவிக்கு இன்பமான நாதத்தை ஒரு விரிசல் எவ்வளவு கர்ண கடூர மாக்கி விடுகிறது! பாத்திரத்தின் உருவத்தையும் அழகையுமே பார்க்கிறவர்கள் போல அல்லவா நாதனும் மற்றவர்களும் ராதிகாவைக் கொண்டாடுகிறார்கள்? அவள் மனத்தில் ஏமாற்றம் என்ற விரிசல் பிறந்திருப்பதை யார் அறிவார்கள்?

இரண்டு நாள் பொறுமையாக இருந்தவள் மூன்றாம் நாள் தகப்பனாரிடமே நேரடியாகக் கண்ணனைப் பற்றிக் கேட்டுவிடுவது என்று முடிவு செய்தாள். அப்பாவும் பெண்ணுமாகக் குன்னூர்ப் பாதையிலோ, 'பொட்டானிக்கல்



CPL 598936

கார்டன்ஸி' லோ உலாவச் செல்வது வழக்கம். அப்போது கேட்டுவிடுவது என்று சங்கற்பித்துக் கொண்டாள்.

அன்று மத்தியான்னம் ராதிகாவும் மதுரமும் சிற்றுண்டி சாப்பிட உட்கார்ந்தார்கள். பாலம்மா அடை தட்டியிருந்தாள்.

598936

''மதுரம், உனக்கு அடைன்னா உசிராச்சே. உன் கைவரிசையைக் காட்டு, பார்க்கலாம்!'' என்று ஆரம்பித்தாள் ராதிகா. பிறகு, ''பாலம்மா, தொட்டுக்கொள்ள என்ன போடப்போறே?'' என்று கேட்டாள்.

894.8113
PVR

''வெண்ணெய், நெய், வெல்லம், சாம்பார் எல்லாம் இருக்கு'' என்றாள் பாலம்மா.

''உனக்கு ஏதுடீ வேணும் மதுரம்?'' என்று கேட்டாள் ராதிகா.

''இந்த அடைக்குத் தொட்டுக்கொள்ளப் பொருத்த மானது ஒன்றே ஒன்றுதான், ராதிகா'' என்றாள் மதுரம். அவளுக்கு நாக்கை அடக்கத் தெரியாது என்று அந்தக் காலத்திலேயே சொல்லுவார்கள். சாம்பாரில் ஒரு குன்றிமணி அளவு உப்புத் தூக்கலாக இருந்தால் போதும்; அவள், 'உப்பு அதிகம்' என்று சொல்லிவிடுவாள்.

''அது என்னடி அது, இந்த அடைக்குத் தொட்டுக் கொள்ளப் பொருத்தமானது?'' என்று கேட்டாள் ராதிகா.

''தேன்!''

''பாலம்மா, தேன் இருக்கா?''

''இருக்கு'' என்ற அவள் கொண்டுவரச் சென்றாள்.

தேன் என்ற வார்த்தை ராதிகாவின் காதில் ஒலித்ததுமே, மனக்கண்முன் கண்ணன் தோன்றினான். 'உனக்கு எங்கேயடா உயிர் இருக்கிறது?' என்று யாராவது கண்ணனிடம் கேள்வி விட்டால், மறுகணமே அவன்

10 அக. 2013

''தேவில்'' என்று சொல்லிவிடுவான். சிறு குழந்தைகளாகக் குமாரும் கண்ணனும் ராதிகாவும் கற்பகத்தினிடம் வளருகை யில் அடிக்கடி தேன் வாங்குவார்கள். காடுகளிலிருந்து மலைத்தேன், கொம்புத்தேன் என்றெல்லாம் வரும். மற்றவர்கள் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு, நாக்கால் தடவித் தடவி உறிஞ்சினால், கண்ணன் கிண்ணத்தில் ஊற்றிக்கொண்டு குடிப்பான். கற்பகமும் சிரித்துக்கொண்டே நிறையக் கொடுப்பாள். ''கண்ணா, இப்படித் தேனைச் குடிச்சா அப்புறம் தேன் குடிச்ச நரிமாதிரி ஆயிடுவே!'' என்று கேலி செய்வாள்.

இமைப்பொழுதில், 'தேன்' என்ற வார்த்தையைச் சொல்லி முடிக்கும் நேரத்தில் கண்ணன் ராதிகாவின் கண்முன் விசுவரூப மெடுத்துவிட்டான்.

மதுரத்துக்குப் பரிமாறிவிட்டு ஜாடியுடன் பாலம்மா ராதிகாவின் எதிரே வந்தாள். அவள் பிரமை பிடித்தவளைப் போல உட்கார்ந்துகொண்டிருந்தாள். விரல்கள் அசைவற்று அடைமேல் ஊன்றியிருந்தன.

''உனக்கும் தேன் விடட்டுமா?''

திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட வளைப் போல ராதிகா நடுங்கினாள். அடுத்த கணமே சமாளித்துக்கொண்டு ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்னடி, ஏதோ நினைவிலே ஆழ்ந்து போயிட்டியா?'' என்று கேட்டாள் மதுரம்.

''உனக்கும் தேன் விடட்டுமா?'' என்று மீண்டும் கேட்டாள் பாலம்மா.

''உம்'' என்றாள் ராதிகா.

''மாமி, தேன் ரொம்பப் பிரமாதமா இருக்கே, ஏது?'' என்று கேட்டாள் மதுரம்.



''ஸிம்ஸ் பார்க்கிலேருந்து கண்ணன் வாங்கிக் கொண்டு வந்தான்'' என்று சொல்லிவிட்டுப் பாலம்மா சமையலறைப் பக்கம் திரும்பினாள்.

''உனக்கு என்று உன் அத்தான் பாலும், வாங்கி வந்திருக்கிறான்!'' என்று சிரித்த மதுரம், தொடர்ந்து, ''அதை நான் தீர்த்துக் கட்டிக்கொண்டிருக்கிறேன்!'' என்றாள்.

ராதிகா பதில் பேசவில்லை. இன்னும் விசுவரூபம் கலையவில்லையே!

பலகாரத்தை முடித்துக்கொண்டு மதுரம் எப்போதோ போயாகிவிட்டது. இரவுச் சாப்பாட்டைத் தயார் செய்வதில் பாலம்மா முனையலானாள். பொழுது போகாமல் ராதிகா போர்ட்டிகோவுக்கு வந்தாள். அவளுடைய உள்ளத்தில் தோன்றியிருந்த வெறியில் தந்தையிடம் அப்போதே கண்ணனைப் பற்றி விசாரித்துவிடத் துடித்தாள்.

ஆனால் அப்பா போர்ட்டிகோவில் இல்லை. அவருடைய அறைக்குச் சென்றாள். அங்கேயும் இல்லை. மீண்டும் ஹாலுக்கு வந்தபோது, தோட்டக்காரன் சோபாக்களுக்குப் புது உறைகள் போட்டுக்கொண்டிருந்தான்.

''அப்பாவைப் பார்த்தாயா?'' என்று கேட்டாள் ராதிகா.

''ரிடையர்டு கலெக்டரும் அப்பாவுமாகப் பேசிக் கொண்டிருக்காங்க, அம்மா'' என்றான் அவன்.

''எங்கே?''

''நந்தவனத்தில்.''

அலுத்துக்கொண்டே ராதிகா தன் அறையை நோக்கி நடந்தாள். இத்தனை நாளாகத் தினந்தோறும் கண்ணன் வந்துகொண்டிருப்பது உண்மையானால், அவன் இந்த இரண்டு நாளாக வராமல் இருப்பதற்கு முக்கியமான

காரணம் இருக்க வேண்டும். தனக்கு ஆயிரம் வேலைகள் இருந்தாலும் அவன் அவற்றுக்கிடையில் அவளைப் பார்க்க வராமல் இருக்கமாட்டான். அத்தகைய கண்ணன் வரவில்லை என்றால்?

நினைக்க நினைக்க அவள் மனம் கண்ணனை மறந்து அப்பாவைச் சுற்றிவர ஆரம்பித்தது. ஆமாம், அப்பாவே அவனை இனி வீட்டுப் பக்கம் வரவேண்டாம் என்று கட்டளையிட்டிருப்பார்! என்னதான் அவளைப் பொறுத்த வரையில் அப்பா நல்லவராக இருந்தாலும் ஈவு இரக்கம் இல்லாதவராகவும் நடந்துக்கொள்ளக் கூடியவர். அதுவும் அவளுக்காக, அவளுடைய நலனுக்காக அவர் எதையாவது திட்டம் போட்டால் யாராலும் அவரை அசைக்க முடியாது. அவளும் கண்ணனும் ஆறு வருஷங்களுக்கு முன்னால் பழகியதைப்போல் இனிப் பழகக்கூடாது என்று அவர் முடிவு செய்திருக்கிறார். இதைப்பற்றி அவளால் ஏதும் செய்ய முடியாது. ஆனால் கண்ணனை நேருக்கு நேரே ஒரு தடவை பார்க்கவும் கூடாதா?

சிந்தனை விரிய விரிய, அவளுடைய பெண்மையின் சினம் அடங்காமல் சீறிக்கொண்டு எழுந்தது. அவளை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்த அப்பாவுக்கு அவள் பெண்தான்; அடிமை அல்ல. அவள் கண்ணனை விரும்பினால், அந்த விருப்பம் அவளுடைய உள்ளத்திலிருந்து எழும் உணர்ச்சி. இந்த உணர்ச்சி அவளுடைய உரிமை. உரிமையை மறுப்பதற்கோ, அதைத் தடை செய்வதற்கோ யாருக்கும் ஏன், அவளுடைய தகப்பனாருக்குங்கூட உரிமை இல்லை.

அவளுடைய மனம் கண்மூடித்தனமாகச் சிந்திக்கையிலேயே திடீரென்று கண்ணனுடைய தாய், நினைவில் தோன்றினாள். ராதிகா அவளை - அத்தையை



இதுவரையில் பார்த்ததே இல்லை. ஆனால் அப்பா, கண்ணன் இவர்களுடைய பேச்சிலிருந்து அவளைப்பற்றி அவள் நிறைய அறிந்திருந்தாள். தான் விரும்பிய ஒருவனைத்தான் கல்யாணம் செய்துகொள்ளுவேன் என்று மூர்க்கத்தனமாகப் பிடிவாதம் செய்து வெற்றி கண்டவள். அந்த வெற்றியே குடும்பத்துடன் தீராத பகையை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறது. அவளுடைய பிடிவாத குணமும் வெறியும் ராதிகாவிடமும் - அண்ணாவின் பெண்ணிடமும் - நிறைந்திருக்கின்றனவோ? அப்படியானால் அதை அறிந்துதான் தகப்பனார் இப்போதே முன் எச்சரிக்கையாக அணை போடுகிறாரோ?

அறைக்குள் வந்த ராதிகாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மணியைப் பார்த்தாள்; நாலரை. புத்தகங்களில் மனம் செல்லவில்லையாயினும் கை யந்திரமாக அலமாரியைத் திறந்தது. ஒரு நீல நிற அட்டை திடீரென்று கவனத்தை ஈர்த்தது. அதை எடுத்தாள்; பிரித்தாள்.

முதல் பக்கமே கண்களில் நீரைச் சுரக்கச் செய்தது. அம்மா புன்னகை பூக்க ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். காதுகளில் வைரத்தோடு, மூக்கில் பேஸரி, கழுத்து நிறையச் சங்கிலி.

ராதிகா கண்களை மூடிக்கொண்டாள். இந்த அம்மா ஒருத்தி இல்லாதது அவளுடைய வாழ்க்கையை எப்படி உயிரற்ற ஓட்டமாக ஆக்கிவிட்டது! அவள் மட்டும் இருந்திருந்தால், கண்ணனைச் சந்திக்க முடியவில்லையே என்று தாபப்படுகிறாளே, அந்தத் தாபத்துக்கு இடம் இல்லாமல் செய்திருப்பாளே! தாயைத் தவிர வேறு யாரால் தன் பெண்ணின் மனம் அறிந்து திருப்தி செய்ய முடியும்?

அவளுடைய கண்களிலிருந்து நிதானமாக நடந்துவரும் கண்ணீர், போட்டோ ஆல்பத்தின்மீது விழுந்துவிடுமோ என்ற பயம் திடீரென்று எழவே, ராதிகா அதை மடியிலிருந்து சற்றுத் தள்ளி வைத்துக்கொண்டாள். விரல்கள் பக்கங்களைப் புரட்ட ஆரம்பித்தன. இறந்து போன நாட்களுக்குப் புத்துயிர் கொடுக்கும் படங்கள் ஒவ்வொன்றாகக் கண்முன் தோன்றின. ஐ.ஸி.எஸ். அப்பா அதிகாரப் பார்வையுடன் குதிரைமீது ஆரோகணித்திருக்கிறார். பின்னால் சேவகன் ஒருவன் குதிரைவாலுக்குப் பக்கத்தில் நிற்கிறான். ராதிகாவுக்குத் திடீரென்று சிரிப்பு வந்தது. கண்ணிதழ்களில் எஞ்சியிருந்த நீர் கன்னங்களுக்குத் தாவியது.

அவள் மேலும் ஆல்பத்தைப் புரட்டினாள். விசாகப்பட்டினத்தில் ஒரு பூங்காவில் அவளும் குமாரும் கண்ணனும்; தாஜ்மகலில், மொட்டை மாடியில் கண்ணன் உட்கார்ந்திருக்க, அவனுடைய தோளின்மேல் கையை ஊன்றிக்கொண்டு, தலையைச் சாய்த்துக்கொண்டு சிரிக்கும் ராதிகா; ஊட்டி கார்டன்ஸில் சைக்கிள் ஒன்றின் மேல் கண்ணனும் ராதிகாவும்; போர்ட்டிகோ வாசலில் கண்ணன் நிற்க, ராதிகா படியில் உட்கார்ந்திருக்கும் காட்சி - இப்படி எத்தனை எத்தனையோ போட்டோக்கள்; மனத்திரையிலிருந்து மங்கி மறைந்துபோன காட்சிகளை எல்லாம் நினைவுத் திரைக்கு இழுத்துவந்த படங்கள் அவை.

ராதிகா பெருமூச்செறிந்தாள்.

ஆல்பத்தில் கடைசிப் படம் மற்ற எல்லாப் படங்களைவிட அதிகமாக அவளுடைய கவனத்தை இழுத்தது.

இன்னும் நன்றாக நினைவுக்கு வருகிறது அந்த நாள். அன்று மத்தியான்னம் குமார் டேராடூனுக்குத் திரும்பிப்



போகிறான். போகுமுன் அவனையும் ராதிகாவையும் நந்தவனத்தில் போட்டோ எடுக்க நாதன் அழைத்துப் போகிறார். பாதி தூரம் சென்றதும் குமார், ''அப்பா, கண்ணன் வரவில்லையே! அவனும் வரட்டும்'' என்கிறான். ''இந்தப் போட்டோவுக்கு அவன் வேண்டாம்'' என்கிறார் அப்பா. ராதிகாவுக்குச் 'சுருக்' கென்று ஆகிவிடுகிறது. அவள் திடீரென்று திரும்பிப் பார்க்கிறாள். கண்ணன் போர்ட்டிகோ வாசலில் நிற்கிறான். அவனுடைய முகத்தில் ஏக்கமும் துக்கமும் பொங்கிக் கிடப்பதாக ராதிகா நினைக்கிறாள். அந்த நினைப்பே மனத்தில் சுமக்க முடியாத சுமையாக ஏறிவிடுகிறது. நெஞ்சம் கனக்க, ''ஏம்ப்பா கண்ணன் வேண்டாம் இந்தப் போட்டோவுக்கு?'' என்று கேட்கிறாள். நாதன் பதில் சொல்லவில்லை. ஆனால் குமார், ''கண்ணனும் வரட்டுமே. அம்மா அவனையும் தன் பிள்ளைமாதிரி நடத்தினாள்'' என்கிறான். நாதனுக்குக் கோபம் தலைக்கு ஏறுகிறது. ஆனால், தம் பிள்ளை அன்று தொலைதூரத்தில் இருக்கும் டேராடூனுக்குப் போகிறானே என்ற எண்ணத்தினால் தம்மைத் தாமே அடக்கிக் கொள்ளுகிறார். அவருடைய மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்று எண்ணிய குமார் கைகளால் சைகை செய்தும் கத்தியும் கண்ணனைக் கூப்பிடுகிறான்.

அவனும் வருகிறான். போட்டோவும் எடுத்து விடுகிறார்கள்.

அதன்பின் ஒரு படத்திலும் கண்ணன் இல்லை. ஏன், படமே இல்லை. படம் எடுத்த எட்டாம் நாள்தானே ராதிகாவுக்குப் பிறந்த நாள் வந்தது? கண்ணனை நாதன் வெளியேற்றினார்?

திடீரென்று ராதிகா எழுந்தாள். மனத்தில் ஆத்திரம் குமுறிக்கொண்டு எழுந்தது. இந்த ஆல்பத்தில் கண்ணன்

இருக்கலாம். அவளுடைய மனத்தில் கண்ணன் இருக்கலாம். ஆனால் நேருக்கு நேர், உயிரும் சதையுமாக அவன் இருக்கக்கூடாதா? இது என்ன நியாயம்? இது அப்பாவின் முடிவு என்றால் அது நாகரிகமற்ற முடிவு; பத்தாம் பசலிக் கால முடிவு! அதை அவள் தகர்க்கவேண்டும்! வயசு வந்த பெண் - அதுவும் படித்த பெண் - தன்னையே மீறிப் போய்விடுவாள் என்று அப்பா நினைத்தால், அப்பாவின் மனம் பிதற்றுகிறது என்றுதான் அர்த்தம்!

''இன்றைக்கே பேசித் தீர்த்துவிடுகிறேன்!'' என்று ராதிகா முணுமுணுத்தாள்.

அடுத்த கணம் ஆள் அரவம் கேட்டுத் திடுக்கிட்டாள்.

நாதன் நின்றுகொண்டிருந்தார்.

''என்ன ராதி, ஏதோ உனக்குள் நீயே பேசிக் கொள்றே?'' என்று கேட்டார் அவர்.

ராதிகா வாயில் பெருகிய உமிழ்நீரை மெல்ல விழுங்கினாள்.

# 6

# விதி வகுக்கும் வழி

மகாலிங்கம் ஓர் அபூர்வ மனிதர். நினைத்ததைச் செயலாக்குவதில் அவருக்கு இருக்கும் சாமர்த்தியம் வேறு யாருக்காவது இருக்குமோ என்பது சந்தேகந்தான். செய்ய விரும்பாததையும் இயலாததையும் அவர் நினைத்தும் பார்க்கமாட்டார். என்றைக்கு அவருடைய பெண் நளினி மேற்படிப்புக்காக ஜெர்மனிக்குப் பறந்தாளோ, அன்றையிலிருந்து அவருடைய மனம் ரசாயனத்தில் ஈடுபட ஆரம்பித்தது. ரசாயனத்தால் என்ன என்ன செய்யலாம், ரசாயனம் மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதையெல்லாம் முதலில் விவரமாக அறிந்துகொண்டார். பம்பாய், சென்னை முதலான நகரங்களுக்குச் சென்று, பற்பல தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார். தலைசிறந்த ரசாயன அறிஞர்களை அணுகிப் பல விஷயங்களை அறிந்து கொண்டார். முதல் தரமான ரசாயனத் தொழிற்சாலை ஒன்றை நிறுவி நடத்துவதற்கு எவ்வளவு மூலதனம் தேவையாக இருக்கும் என்பதை ரசாயனப் பொருளாதார நிபுணர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பூர்வாங்க ஏற்பாடுகளில் அவருடன் சேர்ந்து கண்ணனும் முழு மனத்துடன் ஈடுபடவே, வேலைகள் துரிதமாக ஆரம்பித்தன. ஊட்டியிலேயே நல்ல இடத்தில் ஒரு பழைய தொழிற்சாலை விலைக்கு வந்தது. அதை ரசாயனத் தொழிற்சாலையாக மாற்றி அமைக்க முடியும்

என்று ரசாயன என்ஜினீயர்கள் சொல்லவே, அவர் அந்தத் தொழிற்சாலையை வாங்கி வேலைகள் ஆரம்பித்தார். அவருடைய பரம்பரைப் பணமும் செல்வாக்கும் வேண்டிய பர்மிட்டுகளையும் லைசன்சுகளையும் எளிதில் வாங்கிக் கொடுத்தன.

நளினி திரும்பி வருவதற்கு இன்னும் சில மாதங்களே இருந்தன. அதற்குள் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்க வேண்டும் என்று மகாலிங்கம் பிடிவாதமாக இருந்தார். இரவு பகல் பாராமல், குளிரை லட்சியம் செய்யாமல் தொழிலாளர்கள் உழைத்தார்கள். நிர்மாணப் பொறுப்பை ஏற்றிருந்த என்ஜினீயரும், ''இனித் தொழிற்சாலையை நடத்த வேண்டியவர்கள் நீங்களும் உங்களுடைய கெமிகல் என்ஜினீயர்களுந்தாம்'' என்று கூறித் தொழிற்சாலையை மகாலிங்கத்தினிடம் ஒப்படைத்தார்.

துவக்கவிழா நடக்க இன்னும் ஒரு மாதங்கூட இல்லை. இந்தச் சமயத்தில்தான் திடீரென்று ஒரு தந்தி வந்தது. அதைப் படித்ததுமே அவர் வெங்கோபராவை விரட்டினார், கண்ணனைச் சந்தித்து அழைத்துவர.

ஜீப்பிலிருந்து இறங்கிய கண்ணன் அவசர அவசரமாகப் பங்களாவினுள் விரைந்தான்.

''குட் மார்னிங் ஸார்!''

கண்ணனைப் பார்த்த மகாலிங்கம் அவனுடைய 'குட் மார்னிங்கு'க்குத் தலை அசைத்துவிட்டு, ''உட்கார்'' என்றார். பிறகு, ''ராவ்ஜீ, மேட்டுப் பாளையத்தில் இரண்டு வாகன் வந்திருக்கு. லாரியுடன் நீரே போய் 'லோட்' பண்ண ஏற்பாடுகளைச் செய்யும்'' என்றார்.

வெங்கோப ராவ் சென்றபின் மகாலிங்கம், ''கண்ணன், இன்னிக்குத் தந்தி வந்தது. ஸ்ரீதர் வேலையை ஒப்புக்கொண்டுவிட்டான்'' என்றார். அவருடைய கை, தந்தியை எடுத்து அவனிடம் நீட்டியது.



''பம்பாயிலிருந்து வந்திருக்கிறது!'' என்று கண்ணன் முணுமுணுத்தான்.

''இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொஞ்சம் அதிகந்தான்; இல்லையா?'' என்று ஆரம்பித்த மகாலிங்கம், ''ஆனா ஆள் சூரப்புலி. கெமிஸ்டிரியைக் கரைச்சுக் குடிச்சவன். அமெரிக்காவே அவனுடைய ஆராய்ச்சிகளைக் கண்டு வாயைப் பொளந்திருக்கு'' என்றார். அவருடைய பேச்சு, தாம் செய்துவிட்ட முடிவுக்குச் சமாதானம் தேடுவதுபோல இருந்தது.

''நீங்க சொல்ற மாதிரி அவ்வளவு பெரிய புலியாக இருந்தால், இந்த இரண்டாயிரத்துக்கு ஏன் வருகிறான் என்றுதான் எனக்குப் புரியவில்லை'' என்றான் கண்ணன்.

கண்ணனுடைய குரலில் கேலி ஒலிக்கிறதோ என்று தம்மைத் தாமே ஒரு தடவை கேட்டுக் கொண்ட மகாலிங்கம், ''உனக்குப் புரியாமல் இருப்பதில் எனக்கு ஆச்சரியம் இல்லை. போன மாதம் நான் பம்பாய்க்குப் போயிருந்தபோது அவனுடன் பேசினேனே; இப்போது இதைவிட அதிகச் சம்பளமும் காரும் வீடும் கிடைக் கின்றனவாம். ஆனால் நிம்மதியான வாழ்க்கையும், ஆராய்ச்சிக்குத் தேவையான சூழ்நிலையும் இல்லையாம். ஊட்டி மாதிரி ஓர் இடத்தில் தனக்குத் தேவையான அமைதி யும் சூழ்நிலையும் கிடைக்கும் என்று தோன்றுகிறதாம்'' என்றார்.

கண்ணன் மெதுவாக எழுந்தான். கையில் இருந்த தந்தியை விரல்கள் யந்திரமாக மடித்தன.

''அப்படியானால் வேலையை ஒப்புக்கொள்ள ஏன் இவ்வளவு தாமதம்?''

''தெரியவில்லை. ஒருவேளை இருக்கிற வேலையி லிருந்து விடுதலை பெறத் தாமதமோ என்னவோ?''

கண்ணன் பதில் சொல்லவில்லை. இந்த ஸ்ரீதர் யார், எங்கே பிறந்தவன், எங்கே வளர்ந்தவன் என்ற கேள்விகளெல்லாம் உள்ளத்தில் முளைக்கலாயின.

''ஆள் எப்படி?''

''ராஜா மாதிரி இருக்கிறான். வெடுக்கு வெடுக்கென்று பேசுகிறான். சதா சிரித்த முகம். மேல்நாட்டு நாகரிகமும் நம் நாட்டுப் பண்பும் அவனிடம் குழைந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.''

''இந்த ஸ்ரீதருக்கு எந்த ஊர்?''

''தஞ்சாவூர் ஜில்லாதானாம். ஆனால் அவன் பிறந்த மண்ணைப் பார்த்ததுகூட இல்லை. தகப்பனார் டில்லியிலேயே வாழ்நாளைக் கழித்தவராம். ஆனால் ஓர் அதிசயம்: ஊட்டியில் தூரத்து உறவினர் ஒருவர் இருக்கிறார். யார் தெரியுமா?''

இதுவரையில் தனக்குள்ளேயே ஸ்ரீதரைப்பற்றிப் பற்பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன், ''நாதன், ரிடையர்ட் ஐ.ஸி.எஸ்.'' என்றான் சுருக்கமாக.

''ரொம்ப சரி. அவருக்கும் இவனுக்கும் என்ன சொந்தம்? அதை விவரமாகச் சொல்லவில்லை அவன்.''

''மனைவி மூலமாக உறவு'' என்ற கண்ணன், ''இப்போ என்ன ஏற்பாடு செய்யணும்?'' என்றான்.

''விருந்தினர் விடுதி மாடியை ஸ்ரீதருக்கு ஒழித்துக் கொடுத்துவிடலாம். இப்போதைக்கு அங்கே இருக்கட்டும். நாளைக்கு நீயே காரை எடுத்துக்கொண்டு மேட்டுப் பாளையத்துக்குப் போய் அவனைச் சந்தித்து அழைத்து வா.''

''கோத்தகிரி எஸ்டேட் விஷயமாக ஸப்ரிஜிஸ்திராரைப் பார்க்கப் போகவேண்டாமா?''



''அடுத்த வாரம் போனால் போதும்.''

கண்ணன் மெதுவாக நகர்ந்தான். கதவு வரையில் சென்றவன் திரும்பி, மகாலிங்கத்துக்கு முன்னால் வந்து நின்றான்.

''என்ன வேணும், கண்ணன்?'' என்று மகாலிங்கம் கேட்டார்.

''நான் ஒரு மாசமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.'' முதலில் தயங்கிய அவன் தொடர்ந்து, ''நீங்களும் ஆகட்டும் என்று சொன்னீர்கள்'' என்று நிறுத்தினான்.

''எதைப்பற்றி?''

''கோத்தகிரிக்கோ குன்னூருக்கோ மாற்றல் வேண்டும் என்று.''

''கண்ணன், உனக்கு இனிமேல் எஸ்டேட் வேலையே இருக்காது.''

கண்ணனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. மகாலிங்கம் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்?

அவரை அவன் ஏறிட்டுப் பார்த்தான். பார்வையே கேள்வியாக அமைந்தது.

''ஊட்டி கெமிகல் இண்டஸ்ட்ரீஸின் நிர்வாக மானேஜராக உன்னை நியமிக்கப் போகிறேன். ஸ்ரீதர் டெக்னிகல் ஸைடைப் பார்த்துக்கொள்வான்.''

கண்ணன் ஏதோ சொல்ல ஆரம்பிப்பதற்குள், ''ஒரு நல்ல நாளாகப் பார்த்து ஆர்டரைத் தருகிறேன். இப்போதைக்கு எழுநூறு ரூபாய் சம்பளம். என்ன?'' என்று மகாலிங்கம் கூறி முடித்தார்.

கண்ணனுக்கு என்ன சொல்லுவது என்றே புரியவில்லை. மனம் குழம்பியது. அந்த வேளையில் மானேஜர் பதவியோ, எழுநூறு ரூபாய் சம்பளமோ,

இரண்டும் கொடுக்கக்கூடிய அந்தஸ்தோ பெரிதாகப் படவில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு அவன் ஊட்டியை விட்டு, நாதனைவிட்டு, ராதிகாவை விட்டு விலகிச் செல்ல வேண்டும் என்று பார்க்கிறானோ அவ்வளவுக்கும் மகாலிங்கம் அவனை ஊட்டியிலேயே அழுத்தி வைக்கிறாரே?

அவனுடைய குழப்பத்தை அறிந்துகொள்ளாத மகாலிங்கம், ''என்னடா ஒரு மானேஜருக்கு இரண்டாயிரம், இன்னொருவனுக்கு எழுநூறு என்று சொல்லுகிறாரே என்று யோசிக்கிறாயா? உன் வேலை சாசுவதம். பொறுப்பு அதிகமாக அதிகமாகச் சம்பளமும் ஏறும். மாதம் இரண்டாயிரம் இரண்டாயிரமாக எத்தனை வருஷங்களுக்கு நான் கொடுக்க முடியும்? நளினி வந்து ஓர் ஆறு மாதம் பழகிவிட்டால் அப்புறம் அவன் ஏற்றுக்கொண்டுவிடுவான்'' என்றார்.

கண்ணன் தாழ்ந்த குரலில், ''குன்னூரோ கோத்தகிரியோதான் எனக்கு இப்போ ரொம்பப் பிடிச்சிருக்கு. ஊட்டியில் நிம்மதியும் திருப்தியும் இருக்காது'' என்றான்.

மகாலிங்கம் எழுந்தார். கலகலவென்று சிரித்தார்.

''நிம்மதியும் திருப்தியும் அவனவன் மனசைப் பொறுத்திருக்கிறதே தவிர, இடத்தை அல்ல. நீ வேலையில் மூழ்க ஆரம்பித்துவிட்டால் நிம்மதி தானாக வந்துவிடும். கவலைப்படாதே!''

கண்ணன் பதில் சொல்லாமல் திரும்பவும், அவர் மீண்டும் கூப்பிட்டார்; ''கண்ணன், ராதிகா இன்னிக்குத் தானே வருகிறாள் சென்னையிலிருந்து?''

''ஆமாம் ஸார்.''

''மாமாவைப் பார்த்தால் சொல்லு, நானும் ஜயாவும் பார்க்க வரப்போகிறோம் என்று.''



''நான் இன்னிக்கு இனிமேல் பார்க்கப் போக மாட்டேன், ஸார்.''

ஏன் என்று அவர் கேட்கவில்லை. ''சரி, நான் போனில் சொல்லிக்கொள்ளுகிறேன்'' என்றார்.

கண்ணன் வாசலைத் தாண்டி நடந்தான். அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வேலையை ராஜீநாமாச் செய்து, நீலகிரி ஜில்லாவையே விட்டுப் போய்விடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனால் அடுத்த கணமே அது கோழையின் முடிவாகப் பட்டது.

மீண்டும் அவன் ஜீப்பில் ஏறிக்கொண்டபோது மனக்கண்முன் ஸ்ரீதர் தோன்றினான். ஸ்ரீதரும் அவனும் ஒரே வயசுதான். கற்பகத்தின் ஒன்றுவிட்ட தமையனாரின் பல பிள்ளைகளில் ஒரு பிள்ளை அவன். டில்லி அரசாங்கத்தில் ஒரு பெரிய பதவியை வகித்துக்கொண்டிருந்த அவர், ஒரு தடவை ஊட்டிக்கு வந்திருந்தார். தங்கை கற்பகம் எவ்வளவு வற்புறுத்தியும் அவர் பங்களாவில் தங்காமல், பெரிய ஓட்டல் ஒன்றில் தங்கி, கோடை விடுமுறையைக் கழித்தார். அப்போது அவருடைய ஏழு பிள்ளைகளும் காலை வேளைகளில் நாதன் வீட்டுக்கு வந்து போவார்கள். ராதிகாவுக்கு அப்போது எட்டு வயசு. குமார், கண்ணன், ஸ்ரீதர், இன்னும் மற்றவர்களும் நந்தவனத்தைச் சுற்றி ஓடி விளையாடுவார்கள். ராதிகாவும் ஸ்ரீதருடைய கடைசித் தம்பியும் கிளாஸ் ஹவுஸில் உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பார்கள்.

எப்போதோ நடந்த காட்சிகள், இன்று நினைவு வட்டத்தினுள் புகுந்து கண்ணனை வதைக்கின்றன. ஸ்ரீதர் எதற்காக இப்போது திடீரென்று ஊட்டியில் முளைக்க வேண்டும்? சின்னஞ்சிறிய ஊரில், இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் அவன் வெகு எளிதில் நாதனுடைய

கவனத்தை ஈர்த்துவிடுவானே! இம்மாதிரியான ஒரு பிள்ளையை நினைத்துத்தானே நாதன் இரவும் பகலும் ஏங்கிக் காத்துக் கிடக்கிறார்?

ராதிகா சென்னையிலிருந்து திரும்பி வருகிறாள். அதே சமயம் பம்பாயிலிருந்து ஸ்ரீதர் வருகிறான். இருவரும் ஊட்டியில் சந்தித்துக் கொள்ள விதியே வழி வகுக்கிறதா? நாதனுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கத் தெய்வம் உறுதுணையாக இருக்கிறதா?

தெய்வமே இப்படி நாதன் பக்கமாக நின்றுவிடும் போது, கண்ணன் ராதிகாவை விட்டு விலகிச் சென்று விடவேண்டும் என்று சபத ஒலி எழுப்புவதே அநாவசியம். அவன் விலகாமலே மற்றவர்கள் அவனை விலக்கி விடுவார்கள்.

திடீரென்று அவன் தன்னைத்தானே இதுநாள்வரையில் ஏமாற்றிக்கொண்டிருப்பதை உணர்ந்தான்.

என்னதான்ன ராதிகாவை விட்டுப்போய்விட வேண்டும் என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாலும் அவனுடைய உள்ளம் அவள் பக்கந்தானே நெருங்கிக்கொண்டு ஓடுகிறது? அவனால் ராதிகாவை மறக்கத்தான் முடியுமா?

திடீரென்று, ''ஹலோ பிரதர், குட்மார்னிங்!'' என்று குரல் எழுந்தது.

கண்ணன் திரும்பினான். முகமெல்லாம் மலர, அப்பு ஜீப்பின் அருகில் நின்றுகொண்டிருந்தான்.

# 7

# ராதிகா முடிவு செய்கிறாள்

**க**ண்ணன் ஏன் வருவதில்லை? அவன் வரக்கூடாது என்று அப்பா தடை உத்தரவு போட்டிருக்கிறாரா? அப்படியானால் ஏன்? - என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு அப்பாவைத் திணற அடிக்க வேண்டும் என்று தன்னுள் பொருமிக் கொண்டிருந்த ராதிகா, நாதன் அவளுடைய அறைக்குள் திடீரென்று பிரவேசித்ததும் அயர்ந்து போனாள். ''என்ன ராதி, உனக்குள் நீயே பேசிக்கொள்கிறாய்?'' என்ற அவர், கேள்வியைக் கேட்டு அவளுடைய முகத்தையே கூர்ந்து பார்த்தபோது, ராதிகாவுக்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. எடுத்த எடுப்பிலேயே எப்படி அவள் கண்ணனைப் பற்றிக் கேட்பாள்? சுற்றி வளைத்துப் பேசிக் கடைசியில் அவனைப் பற்றி விசாரிக்கலாம் என்றால், எதை மையமாக வைத்து அவள் பேசுவாள்?

நாதன் ராதிகாவின் முகம் வாடியிருப்பதை ஒரு விநாடியில் உணர்ந்துவிட்டார். அதற்குக் காரணம் என்ன என்பது அவருக்குத் தெரியும். யார் தினசரி வந்து போய்க்கொண்டிருந்தால், யார் தினம் தினம் வந்து அவளுடன் பேசிக்கொண்டிருந்தால், என்றென்றும் அவளுடைய இதயத்திலேயே பதிந்து போய்விடுவான் என்று அவர் பயப்படுகிறாரோ அவன்தான் அவளுடைய மனச் சங்கடத்துக்குக் காரணம் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. நிலைமை அவருக்குத் தெளிவாகத்

தெரிந்தபோதிலும் அவளைத் தேற்ற வேண்டும் என்ற துடிப்பு அவருள் எழுந்தது.

''என் ராதி ஒரு மாதிரியா இருக்கே? பழைய ஆல்பங்களையெல்லாம் பார்க்கிறப்போ மனசு வேதனைப் படறதா?''

ராதிகா தலை அசைத்தாள்.

''ஆல்பம், டயரி எல்லாம் எதற்கு வைத்துக் கொள்ளு கிறோம், ராதி? பழசையெல்லாம் புதுசாக் கண்ணெதிரே கொண்டுவந்து நிறுத்தி, பழைய சந்தோஷத்தையும் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தான்.''

ராதிகா எழுந்தவள் மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''ஆல்பத்தில் இருக்கிற போட்டோ எல்லாம் நீங்க சொல்ற சந்தோஷத்தைக் கொக்கி போட்டு இழுக் கின்றனவா, அப்பா? அம்மாவின் போட்டோவைப் பார்த்தால் இப்போ உங்க மனசிலே சந்தோஷம் உண்டாகுமா, வேதனை தோணுமா?''

நாதன் கலகலவென்று சிரித்தார்.

''நீ சரியான கேள்வியாகத்தான் கேட்கிறாய். உன் அம்மாவைப்பத்தி நினைக்க எனக்குப் போட்டோவோ ஆல்பமோ டயரியோ வேண்டாம், அம்மா! அவ என்னிக்கும் என் உடம்பு முழுவதும் வியாபித்திருக்கிறாள். நாம் எதைக் காலப்போக்கில் மறந்துவிடுகிறோமோ அதை ஞாபகப்படுத்திப் பார்க்கத்தான் இந்த ஆல்பம் உபயோகப்படுகிறது.''

''நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதிலே சொல்ல வில்லை, அப்பா.''

''நீ என்ன கேட்டே?''



ராதிகா ஆல்பத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

''அப்பா!'' என்று ஆரம்பித்தவள் பல படங்களைப் புரட்டிக்கொண்டே, ''இதிலே இருக்கிற போட்டோ வெல்லாம் எப்பவோ எடுத்தது. சில பார்க்காமலேயே நினைவில் இருக்கு. சில போட்டோக்களைப் பார்த்தால் எடுத்த நாட்களின் விசேஷம் ஞாபகத்துக்கு வர்றது. ஒன்னு ரெண்டு எத்தனை தடவை பார்த்தாலும் மனசிலே ஒட்டாமல் போயிடறது'' என்றாள்.

''இருக்கலாம்'' என்றார் நாதன்.

''இருக்கலாம் என்ன அப்பா, இருக்கலாம்? அப்படித்தான் இருக்கு.''

''சரி, சொல்லு.''

''முதல்லே சொன்னதையும் கடைசியிலே சொன்னதையும் விட்டுவிடுங்கள். சில போட்டோக்களைப் பார்த்தால் எடுத்த நாட்களின் விசேஷம் ஞாபகத்துக்கு வர்றதுன்னு சொன்னேனே, அதைப்பத்தி மட்டும் பேசுவோம். நீங்க சொல்ற மாதிரி சந்தோஷம் மாத்திரமா நமக்கு உண்டாகிறது? அன்னிக்கு இருந்த மகிழ்ச்சி, ஆரவாரம் ஒன்னும் இன்னிக்கு இல்லையே என்கிற வேதனையும் அதிருப்தியும் இப்போ பிறக்கிறதே! இதை எப்படித் தவிர்க்க முடியும்?''

''அன்னிக்கு மகிழ்ச்சியும் ஆரவாரமும் இருந்துதுன்னு இன்னிக்கு நெனைச்சுப் பார்க்கிறபோது தெரியறது, ராதி. ஆனா அன்னிக்கு, 'ஆகா நாம் எவ்வளவு சந்தோஷமா இருக்கோம்!'னு உனக்கு நெனைப்பு உண்டாகியிருந்ததா? கிடையவே கிடையாது. உதாரணமா ஒன்னு சொல்றேன் கேளு. இன்னிக்கு நம் வீட்டிலே ஒரு பார்ட்டி. ஊட்டியில் இருக்கிறவர்கள் அத்தனை பேரும் வருகிறார்கள்,

பேசுகிறார்கள், சிரிக்கிறார்கள், நமக்குப் பெருமை, சந்தோஷம் எல்லாம் உண்டாறது. ஆனா இந்தப் பெருமை, சந்தோஷம் எல்லாம் தனி உணர்ச்சிகளா நம்ப மனசிலே நிக்கறதில்லே. பார்ட்டி நடக்கிறபோதே எத்தனை எத்தனையோ விதமான உணர்ச்சிகள் ஓடிக்கொண்டே இருக்கும். ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரியாகப் பேசுவார்கள்; பார்ப்பார்கள்; சங்கடமான கேள்விகள் கேட்பார்கள்; கர்வமாகப் பீத்திக்கொள்ளுவார்கள். ஆனா ரெண்டு வருஷம் கழிச்சு இதை நெனைச்சுப் பார்க்கிற போது மனசிலே மகிழ்ச்சியும் நிறைவும்தான் தேங்கியிருக்கிறது தெரியும். நான் சொல்றது உனக்குப் புரியறதா, ராதி?''

''சரி, அப்பா. ஆனா நீங்க ஒரு பட்சமாகவே பேசிவிட்டீர்கள். இதோ இந்தப் போட்டோவைப் பாருங்கள். அப்புறம் சொல்லுங்கள்!''

ராதிகா ஆல்பத்தை நீட்டினாள். நாதன் அதைத் தொடாமலே தலையை மட்டும் நீட்டிப் பார்த்தார்.

''ஏன் நீ, உன் அண்ணா, அப்புறம்...'' நாதன் முடிக்கவில்லை. பெண்ணின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

''ஏம்ப்பா நடுவிலே நாக்கு நின்னுடுத்து? நான், அண்ணா - அப்புறம்?''

''கண்ணன்!'' என்றார் நாதன். அவருடைய குரல் கம்மியது.

''இதை யார் எடுத்தார்கள், அப்பா?''

''நான்தான்.''

''எப்போ எடுத்தீர்கள்? ஞாபகம் வர்றதா?''

''குமார் ஒரு தடவை வந்து டேராடூனுக்குத் திரும்பிப் போன அன்னிக்கு?''



''நீங்கள் இப்படிச் சொல்லிமுடிச்சுட்டா இந்தப் போட்டோவுக்கு அர்த்தமே இல்லை அப்பா. ஏதோ குமார் திரும்பிப் போறபோதெல்லாம் போட்டோ எடுக்கிறது என்பது வழக்கம் என்கிற மாதிரி பேசுகிறீர்கள். இதைப் பார்க்கிறப்போ உங்க மனசிலே தோன்றிய உணர்ச்சி களையே மறைக்கிறீர்கள். ஏன், உணர்ச்சியின் உசிரையே எடுத்துத் தனியாக வைக்கிறீர்கள். நான் சொல்றேன், கொஞ்சம் கேளுங்கள். இந்தப் போட்டோவிலே கண்ணன், அண்ணா, நான் மூணு பேரும் இருக்கோம். நீங்க முதலிலே என்னையும் அண்ணாவையும் போட்டோ எடுக்கக் கூப்பிட்டீர்கள். அண்ணா பிடிவாதமாக, 'கண்ணனும், இருக்கணும்'னு சொன்னான். கடைசியில் அவனும் வந்து எனக்கும் அண்ணாவுக்கும் நடுவில் உட்கார்ந்துகொண்டான். அப்புறம்.. அப்புறம்?'' ராதிகா பேச்சை முடிக்காமல் அப்பாவையே பார்த்தாள்.

''அப்புறம்?'' என்றார் நாதன். அவருடைய நா யந்திரமாக இசைத்தது.

''அப்புறம் என்ன? அண்ணா டேராடூனுக்குப் போனான். மறுபடியும் வந்தான். மறுபடியும் போனான். வந்தான், போனான். ஆனால் கண்ணன்? இந்தப் போட்டோ எடுத்த நாலஞ்சு நாளைக்கு அப்புறம் என் பிறந்த நாள் வந்தது. அன்னிக்கு ராத்திரி நீங்கள் அவனை... அவனை...'' ராதிகாவால் மேலே பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது.

நாதன் வாய் திறவாமல் சுற்றுமுற்றும் பார்த்தார். இளம் பச்சைச் சுவர்களில் சிறுசிறு ஓவியங்கள் கண்ணில் பட்டன. ஜன்னல் கண்ணாடியின் விரிசலை மறைக்கக் கட்டியிருந்த காகிதம் பழுப்பேறி அசிங்கமாகத் தெரிந்தது. ராதிகாவின் கட்டிலில், தலையணையின்

விளம்பில் ஒரு வெள்ளை ரோஜா எப்போது மெத்தை மீது விழுமோ என்ற நிலையில் கிடந்தது. அவர் ஒரு விநாடி கண்களை மூடிக்கொண்டார். ஆனால் காட்சி மறைய வில்லை. இதே அறை; இதே இடம்; இதே கட்டில்! அவர் திடீரென்று விழித்துக்கொண்டார். கை அவரையும் மீறி முரட்டுத்தனமாகக் கைத்தடியைப் பற்றியது.

இருவருடைய மௌனமே அறையில் ஒரு புதுவிதமான ஒலியை எழுப்பிவிட்ட பிரமையை உண்டாக்கியது. மௌனத்துக்கே ஒலி உண்டென்றால் அந்த ஒலி எங்கிருந்து வருகிறது? ஏன் அந்த ஒலியால் சலனம் பிறக்கிறது? அல்லது சலனம் பிறந்ததனால்தான் மௌனம் தோன்றியதா? சலனந்தான் ஒலியைப் பிறப்பித்ததா? இல்லை, சலனமும் மௌனமும் ஒன்றேயா?

நாதன் அசையாமல் தலைகுனிந்து உட்கார்ந்திருக்க, ராதிகா மெதுவாக எழுந்தாள். கையில் இருந்த ஆல்பத்தை மேஜைமேல் வைத்துவிட்டு அப்பாவின் எதிரே வந்தாள்.

''அப்பா!''

''என்ன அம்மா, ராதி?'' அவர் நிமிர்ந்து பார்த்தார்.

''இந்த ஒரு போட்டோவைப் பார்க்கிறப்போ, நீங்க எடுக்காத எத்தனையோ போட்டோக்கள் உங்க மனசிலே மோதிண்டு வர்றது, இல்லையா, அப்பா?''

''நீ ஞாபகப்படுத்திட்டே, ராதி!''

''ஐ ஆம் ஸாரி, பாதர். ஆனா யாரும் ஞாபகப்படுத்தாமலே என் மனசிலே இதெல்லாம் நினைவுக்கு வர்றதே!''

இப்போது நாதன் மெதுவாக எழுந்தார். இனி ஆல்பத்தை அடுப்பில் போட்டு எரித்தாலும், கண்ணனை



அவளுடைய மனத்திலிருந்து வெளியே இழுத்து அழிக்க முடியாது என்ற எண்ணம் அவருள் தோன்றியது.

திடீரென்று அவர் கேட்டார்: ''ராதி நான் அன்னிக்கு அப்படிச் செய்தது தப்புன்னு நீ நினைக்கிறாயா?'' கேட்டபின் ஏன் கேட்டோம் என்று மனம் உதைத்துக் கொண்டது.

''அன்னிக்கு நீங்க அப்படிச் செய்தது சரியோ, தப்போ, இப்போ விவாதிக்கிறதில் அர்த்தம் இல்லை. ஆனா இப்போ நீங்க செய்யறது தப்புன்னு எனக்குப் படறது.''

''இப்போ நான் என்னம்மா செய்யறேன்?''

''கண்ணனை இந்தப் பங்களாப் பக்கம் தலைநீட்டாம அடிக்கிறீர்கள். நான் இன்னும் பச்சைக் குழந்தைன்னு நினைக்கிறீர்கள்!''

''நீ இன்னும் பச்சைக் குழந்தைன்னு நான் நினைக்கவேயில்லை, ராதி. என் மனசிலே இருக்கிற... இருக்கிற... எனக்கு எப்படிச் சொல்றதுன்னே தெரியலே.''

''பயம் இருக்கு. இல்லியா, அப்பா? அப்படியானால் உங்க பெண்மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லைன்னுதான் அர்த்தம்.''

''இல்லை, இல்லை...''

''மனசிலே இத்தனை பயத்தை வச்சுண்டு நீங்க எப்படி அப்பா என்னை மெட்ராஸுக்கு அனுப்பி ஹாஸ்டலிலே இருந்து படிக்க வச்சீர்கள்?''

யதார்த்தமாக நாதன் பதில் சொன்னார்: ''மெட்ராஸிலே நீ படிக்கப் போறப்போ எனக்குக் கவலையோ, நீ சொல்ற பயமோ இருக்கவில்லை.''

ராதிகா சிரித்தாள். அவளுடைய சிரிப்பில் வெறுப்பின் ஒலி கேட்டது.

"ஆனா இப்போ கவலைப்பட ஆரம்பித்துவிட்டீர்கள். இந்தக் கவலையைப் போக்க ஒரே ஒரு வழிதான், உங்களைப் பொறுத்தமட்டில் இருக்க முடியும். நாம் ஊட்டியை விட்டு வேறு எந்த ஊருக்காவது போய்விட வேண்டும். ஏன்னு கேட்டா, இப்போ கண்ணனும் ஊட்டியிலே இருக்கான். அவனை உங்களால் விரட்ட முடியாது!"

நாதனுடைய மனத்தில் நான்கு நாட்களுக்கு முன்பு, கண்ணன் தான் குன்னூருக்கோ கோத்தகிரிக்கோ மாற்றல் வாங்கிக்கொள்ளப் போவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அந்த நினைவில் அவர், "நாம் ஊட்டியை விட்டுப்போக வேண்டாம், ராதி!" என்றார். மறுகணமே தம்முடைய பேச்சு அவருக்கே குழந்தைத்தனமாகப் பட்டது.

ராதிகா ஒரு நிமிஷம் மௌனமாக அப்பாவைப் பார்த்தாள். தான் கேட்க வேண்டிய கேள்வியை அப்பட்டமாகக் கேட்டால்தான் அவரிடமிருந்து பதில் வரும் என்று அவளுக்குத் தோன்றியது.

"ஏன் அப்பா, கண்ணனை நான் வந்ததிலிருந்து இந்த வீட்டில் காணோம்? நான் வர்றத்துக்கு முன்னால், தினம் தினம் வந்து போய்க் கொண்டிருக்கிறான் என்று நீங்கள் எழுதியிருந்தீர்களே!"

"அது வாஸ்தவந்தான், ராதி."

"அப்போ, இப்போ ஏன் வருவதில்லை?"

"வருகிறானே!"

"வருகிறானா? எப்போ வந்தான்?"



"ரெண்டு நாளாகத்தான் காணோம். முந்தாநாள்கூட வந்திருந்தான்."

"நான் பார்க்கவே இல்லையே! நீங்களும் சொல்லவில்லை."

"கிளாஸ் ஹவுஸில் நானும் அவனும் பேசிக் கொண்டிருந்தோம்."

"எப்போ?"

"காலையில் எட்டு மணிக்கு!"

அயர்ந்துபோய் நின்ற ராதிகா, "அப்படியானால் அவன் வீட்டுக்குள் வரவில்லை, அல்லவா?" என்றாள்.

"ஆமாம்."

"நீங்க உள்ளே வரக்கூடாது என்று சொல்ல வில்லையே?" ராதிகா பயத்துடன் கேட்டாள், எங்கே அவர் 'ஆமாம்' என்று சொல்லுவாரோ என்று.

"இல்லை."

"அப்போ அவனாகத்தான் வீட்டுக்குள் வராமல், கிளாஸ் ஹவுஸிலேயே நின்று பேசிவிட்டுப் போகிறானா?"

"ஆமாம்."

"ஏன்?"

"தெரியாது."

ஒரு கணம் அப்பாவின் முகத்தையே பார்த்துவிட்டு ராதிகா, "அப்பா, இன்னிக்கு ராத்திரி கண்ணனைச் சாப்பிடக் கூப்பிடுவோம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றாள்.

"எனக்கு ஆட்சேபம் இல்லை" என்று ஆரம்பித்த நாதன், "ஆனால் அவன் வரமாட்டான்" என்று முடித்தார்.

அந்தக் கனவே, இனி அவரால் கண்ணனையும் ராதிகாவையும் அதிக நாளுக்குப் பிரித்து வைக்க முடியாது என்ற எண்ணம் அவருள் உண்டாகியது.

''அவன் எங்கே இருக்கிறான்?''

''மகாலிங்கம் பங்களாவுக்குப் பின்னாடி ஒரு காட்டேஜில்.''

''நான் சொல்லி அனுப்பப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு ராதிகா அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்பது போல இருந்தது அவளுடைய முகபாவனை.

''உன் இஷ்டம்'' என்றார் நாதன்.

அடுத்த விநாடியே கணகணவென்று மணியோசை கேட்டது. தொடர்ந்து, 'அப்பு வந்திருக்கிறான்!' என்று அப்புவின் குரலும் கேட்டது.

''நல்ல வேளை, சமயத்துக்கு அப்புவே வந்துவிட்டான்! அவனையே அனுப்பலாம்!'' என்று ராதிகா துள்ளினாள்.

இனிமேல் மனம் குழம்பிப் பிரயோசனம் இல்லை என்ற முடிவுடன் நாதன் ஹாலை நோக்கி நடந்தார்.

# 8

# அச்சம்மா

மகாலிங்கத்தின் பங்களாவிலிருந்து கண்ணனும் அப்புவும் புறப்பட்டார்கள். கண்ணன் அவனிடம் நடந்ததையெல்லாம் சொன்னான். எத்தனைக்கு எத்தனை தனக்கு ஊட்டியைவிட்டுப் போய்விட வேண்டும் என்று இருந்ததோ அத்தனைக்கும் விதி சிரித்து விளையாடி அவனை ஊட்டியிலேயே அழுத்திவிடுகிறது என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டான்.

அப்பு, கலகலவென்று சிரித்தான். 'ஏன் சிரிக்கிறே?'' என்று கண்ணன் கேட்கவில்லை. கேட்கிறானா என்று சில நிமிஷங்கள் காத்திருந்துவிட்டு அப்புவே காரணத்தைச் சொல்லிவிடுவான் என்பது அவனுக்குத் தெரியும்.

''ஊட்டியை விட்டுப் போய்விட வேண்டும் என்று ஏன்தான் இப்படித் துடிக்கிறாயோ?'' என்றான் அப்பு.

''ஏன்னு உனக்குத் தெரியாதா?''

''தெரியாமே என்ன? நன்னாத் தெரியும். நீ உன் ராதிகாவை விட்டு ஓடப் பார்க்கிறே!''

''.............''

''நீ எங்கே ஓடிப் போனாத்தான் என்ன பிரயோசனம்? உன் மனசை விட்டு அவள் போகவில்லையே!''

''அதுக்காக?''

''இங்கேயே உன் பாட்டுக்கு இரு. உன்னை யார் என்ன செய்ய முடியும்? ராதிகா உன்னை மறந்துட்டான்னு நினைக்காதே. இன்னும் உன்னை நினைச்சுண்டுதான் இருக்கா.''

'ராதிகா என்னவெல்லாம் நினைக்கிறாள்?' இந்தக் கேள்வி கண்ணனுடைய உள்ளத்தில் எழுந்தபோது, கொக்கி போட்டு வார்த்தைகளை அப்புவினிடமிருந்து வரவழைக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று.

''சும்மா பேத்தாதே அப்பு. ராதிகா இத்தனை நாளிலே என்னைக் கண்டிப்பாக மறந்து போயிருப்பாள். மெட்ராஸிலே நான்கு வருஷம் படிச்சதிலே பழைய எண்ணங்களெல்லாம் மணலிலே புதைஞ்சு மறைஞ்சு போற தண்ணிமாதிரி மனசுக்கு அடியிலே ஒடுங்கிப் போயிருக்கும்.......''

அப்பு, கண்ணனை ஏமாற்றிவிட்டான். ''இருந்தாலும் இருக்கும்'' என்றான் அவன். பதிலே 'சப்' பென்று இருந்தது கண்ணனுக்கு.

''நாளைக்கு நீ மேட்டுப்பாளையம் போகப் போகிறாய், இல்லியா?'' என்று அப்பு வேறு திசையில் பேச்சை இழுத்தான்.

''ஆமாம்.''

''ஐயா மாமி கோயம்புத்தூருக்குப் போய் அரிசி அப்பளம் வாங்கிண்டு வரச் சொல்லியிருக்கிறாள். ஜர்மனிக்கு அனுப்பணுமாம். என்னை மேட்டுப் பாளையத்தில் இறக்கிவிடு. அங்கேயிருந்து பஸ்ஸில் போயிடறேன்.''

''சரி'' என்ற கண்ணன் தொடர்ந்து, ''ஏழு மணிக்குச் சாரிங் கிராஸில் இரு'' என்றான்.



''ஓகோ!'' என்ற அப்பு, ''கண்ணா, இந்த ஸ்ரீதர் இருக்கிறானே, அவன் முன்னொரு காலத்தில் ரெட் ஹவுஸில் அப்பா அம்மாவுடன் வந்திருக்கிறான் இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம். சின்னப் பையனா இருந்தபோது.''

''இப்போ பெரிய ஆளா வர்றான். மகாலிங்கம் ரெண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கப் போகிறாராமே!''

''ஆமாம். ஜாஸ்திதான்.''

''எனக்குத் தெரியாது.''

''எனக்கு என்ன தோன்றது தெரியுமா?''

''என்ன?''

''ஒரு வருஷத்துக்கு மேலே ஸ்ரீதரை அவர் வச்சுக்கமாட்டார். நளினி இன்னும் அஞ்சாறு மாசத்திலே வந்துடுவா. அதுக்கப்புறம் ஸ்ரீதர்கிட்டே எல்லா வேலையை யும் கத்துண்டுடுவா. அதன்பின், பாக்டரியைப் பெண் ஒருத்தியாலேயே நடத்திட முடியும்னு மகாலிங்கத்துக்குத் தோணிடும். அப்புறம் ரெண்டாயிரம் ரூபா சம்பளம் கொடுப்பானேன்?''

''நான் இதையெல்லாம் யோசிச்சுப் பார்க்கல்லை, அப்பு.''

அப்பு சிரித்தான்.

''நீ சதா சர்வ நாழிகையும் ராதிகாவையே ஸ்மரணம் பண்ணிண்டிருக்கே. எப்படி நினைச்சுப் பார்க்க முடியும்?'' என்ற அப்பு, ''ஆனால்...'' என்று இழுத்தான்.

ஜீப் ஒரு மேடு ஏறிச் சரிவில் இறங்கிப் போய்க் கொண்டிருந்தது. ஜில்லென்ற காற்று கண்ணனுடைய முகத்தில் அடித்தது.

''ஆனால்?'' என்று கேட்டுவிட்டு அப்புவின் முகத்தைப் பார்த்தான்.

''அந்தச் சின்ன வயசிலேயே ஸ்ரீதர் காரியவாதி. காரியத்தைச் சாதிச்சுக்கொள்ள என்ன வேணுமானாலும் செய்வான்னு எனக்கு அன்னிக்கே தோணிடுத்து.''

''எப்படி? நீ அவனுடன் அதிகம் பழகினதுகூட இல்லியே?''

''இது தெரியறத்துக்கு ரொம்பப் பழகணுமா? நான்தான் தினம் காலையிலேயும் சாயங்காலமும் வருவேனே. ஒருநாள் ஸ்ரீதருடைய அப்பா ஒரு பொம்மை வாங்கிண்டு வந்தார். அதை ராதிகா கையிலே கொடுத்து, 'இது உனக்குத்தான் ராதி'ன்னார். ராதிகாவும் ஆரவாரிச்சுண்டு உன்கிட்டேயும் குமார்கிட்டேயும் காட்ட ஓடி வந்தாள்.....''

''ஆமாம், நினைவுக்கு வர்றது; பாண்டு வாசிக்கிற கரடி.''

''அதுவேதான். அவள் அப்படி உன்கிட்டே ஓடி வந்ததுதான் உனக்கு நினைவிருக்கும். அப்புறம் நடந்ததெல்லாம் தெரியாததால் நினைவில் இருக்காது'' என்ற அப்பு, ''ஸ்ரீதருக்கு அந்தப் பொம்மையின்மேல் கண்விழுந்துவிட்டது. ராதிகாவிடம் முதலில் கெஞ்சினான், கொஞ்சினான். அவள் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். 'ஒரு தரம் பாண்டு வாசிக்க வச்சுட்டுத் திருப்பித் தரேன்'னு சொல்லிப் பார்த்தான். ராதிகா மசியவில்லை. ஒரே அடியாய் மாட்டேன்னு தலையாட்டிவிட்டாள். ஸ்ரீதர் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டு மறுபடியும் அவளிடம் வந்தான். அப்போ பொம்மையை ஒரு பெஞ்சியில் வைத்துவிட்டு, ராதிகாவும் ஸ்ரீதருடைய தங்கைகளும் ஸ்கிப்பிங் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விளையாட்டில்



மூழ்கியிருப்பதைக் கண்ட ஸ்ரீதர் என்ன செய்தான் தெரியுமா?''

''தெரியாது.....''

அப்பு, மேலே தொடராமல், ''கண்ணா, நிறுத்து. நிறுத்து. நான் இறங்கிக்கிறேன்!'' என்றான்.

ஜீப் நின்றது.

அப்பு, ''அச்சமாவைப் பார்க்கணும்'' என்றான். ஒரு கணத்தில் அவன் ஸ்ரீதரையே மறந்துவிட்டான்.

''ஸ்ரீதர் என்ன செய்தான்? முடிக்காமலே போறியே!''

கதையின் முதல் பாதியைச் சாங்கோபாங்கமாக விவரித்த அப்பு, பின் பாதியை ஒரே மூச்சில் சொல்லி விட்டான். 'என்ன செய்வான்?' அதைத் திருடிண்டு போய் ஒளிச்சு வச்சான். நான் வரட்டுமா?'' அப்பு அவசரப் பட்டான்.

கதை இன்னும் முடியவில்லை என்று கண்ணனுக்குத் தோன்றியது. ஸ்ரீதர் செய்துவிட்ட காரியத்துடன் எப்படிக் கதை முடிவடையலாம்?

''இரு அப்பு. அப்புறம் என்ன நடந்தது?''

''அவன் ஒளிச்சு வைக்கிறதை அப்பு பார்த்துட்டா என்ன நடக்கும்? அவனுக்குத் தெரியாம எடுத்து, ராதிகாகிட்டே குடுத்து, 'ஸ்ரீதர் திரும்பிப் போறவரைக்கும் பொட்டிக்குள்ளே வைவன்'னு அப்பு சொன்னான். நான் வரேன் கண்ணா. அச்சம்மா காத்திண்டிருப்பா. அப்போ நாளைக்கு ஸெவனோ கிளாக். தாங்க் யூ!''

அப்பு, பாதையிலிருந்து பள்ளத்துக்குக் குதித்துத் தாவித் தாவி விரைந்தான். பள்ளத்தில் எத்தனையோ சிறு சிறு வீடுகள், தீப்பெட்டிகளைப்போல் இருந்தன. ஒரு வீட்டில் அச்சம்மா இருக்கிறாள். அந்த அச்சம்மாவை அப்பு

திடீரென்று நினைத்துக் கொண்டுவிட்டான். அதன்பின் அவனுடைய மனம் ஒரு நிலையிலும் நிற்க முடியாமல் போய்விட்டது.

அப்புவின் விசித்திரமான வாழ்க்கையை நினைத்துப் பார்த்தபோது, கண்ணனுடைய நெஞ்சம் விம்மியது. தெய்வம் ஏழை எளியவர்களையும் ரட்சிக்கிறது என்றால், எப்படி ரட்சிக்கிறது? அப்புவைப் போன்ற தேவதூதர்கள் மூலந்தானே!

அச்சம்மாவுக்கு இப்போது வயசு ஐம்பத்தெட்டுத் தான் என்றாலும் எழுபது வயசின் மூப்பு அவளிடம் தோன்றிவிட்டது. எட்டு ஆண்டுகளுக்குமுன் கணவன் விஷ ஜுரத்தில் திடீரென்று இறந்து போனான். இந்தத் துக்கத்தை அவள் மறப்பதற்குள் புதிதாகக் கல்யாணமான பெண்ணும் அவளுடைய புருஷனும் பஸ் விபத்தில் உயிர் இழந்தார்கள். ஒரே பிள்ளை லிங்கன் ஊருக்கே அடங்காமல் ஊர்சுற்றி ஊர் சுற்றிக் கடைசியில் ராணுவத்தில் சேர்ந்தான். ராணுவத்தில் சேர்ந்தால், காசுச் செலவு இல்லாமல் உலகத்தையே சுற்றிப் பார்க்கலாம் என்று அப்புதான் தினம் தினம் அவனுடைய காதில் உச்சரித்து வந்தான். அவனால் அம்மாவுக்குக் காலணாவுக்குக்கூடப் பிரயோசனமில்லை. ஒவ்வொரு நாளும் அச்சம்மாவை மிரட்டியும் திட்டியும் பணம் பறித்துக் கொண்டுபோய் லிங்கன் சூதாடுவதை அப்புவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. புருஷன் இறந்த பிறகு நிலத்தை விற்றுக் கிடைத்த பணம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்துகொண்டே வருவது அவனுக்குத் தெரியும். பிள்ளையின் அட்டகாசம் இன்னும் தொடர்ந்துகொண்டே போனால், அச்சம்மா தெருவில் நிற்பதைத் தவிர வேறு கதி இல்லாமல் போய்விடும் என்று அவன் நினைத்தான். லிங்கனை வீட்டைவிட்டு மட்டும் துரத்தினால் போதாது என்று தோன்றியது. அவன் ஊட்டியை விட்டே



போய்விடவேண்டும். அக்கம்பக்கத்தில்கூட இருக்கக்கூடாது. என்ன வழி? இந்திய ராணுவத்துக்குக் கோயம்புத்தூரில் ஆள் எடுக்கிறார்கள் என்பது அப்புவுக்குத் தெரியும். இரவும் பகலும் லிங்கனுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தான். முடிவு; மூன்றே மாதங்களில் லிங்கன் அச்சம்மாவிடம் கடைசியாக நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு வெளியேறினான்.

என்னதான் தன் பிள்ளை தனக்கும் ஊருக்கும் அடங்காதவன் என்றாலும் அச்சம்மாவினால் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கணவனை இழந்த பின்பு அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? "எனக்குக் கொள்ளி வைக்க நீ ஒரு பிள்ளைதான்டா இருக்கே. நீயும் என்னை விட்டுப் போயிடாதேடா!" என்று அவள் ஓலமிட்டாள். அப்புதான் சதி செய்து தன் பிள்ளையை அனுப்புகிறான் என்பதை அவள் அறியவில்லை.

லிங்கன் சென்றபிறகு அச்சம்மாவைக் கவனித்துக் கொண்டவன் அப்புதான். தனக்குக் கிடைக்கும் பணத்தில் பாதிக்குமேல் அச்சம்மாவுக்குக் கொடுத்தான். அவள் சமைத்துப் போட்டதைச் சாப்பிட்டான். அவளுடைய வீட்டிலேயே பல நாட்கள் தங்கினான்.

அவன் எதிர்பார்த்தபடியே அச்சம்மாவும், நாளடைவில் மனச் சமாதானத்துடன் வாழலானாள். அவளிடம் இருந்த இரண்டாயிரம் ரூபாயைத் தனக்குத் தெரிந்த ஒரு செட்டியாரிடம் நிறுத்தி வைத்து மாதம் மாதம் வட்டிப் பணமாக இருபது ரூபாய் வாங்கிக் கொடுத்தான் அப்பு. இந்த இருபது ரூபாயிலும் அவ்வப்போது அப்பு கொடுத்த பணத்திலும் அச்சம்மாவின் ஜீவனம் நடந்தது.

ராணுவத்தில் சேர்ந்து வடக்கே தொலைதூர இடத்திலிருந்து லிங்கன் தாய்க்குக் கடிதம் எழுதி வந்தான். பிள்ளை நல்ல பிள்ளையாக மாறிவிட்டான் என்ற

எண்ணமே அச்சம்மாவின் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஊட்டியது. அடுத்த தடவை அவன் ரஜாவில் வரும்போது, தூரத்து உறவினன் பெண் போகம்மாளை அவனுக்கு மணம் முடித்துவிட வேண்டும் என்று அவள் கனவு காண ஆரம்பித்தாள்.

திடீரென்று ஒருநாள் அவளுடைய கனவு குலைந்தது. எதிரியின் குண்டுக்கு அவன் பலியாகிவிட்டதாக ஒரு தந்தி வந்தது. அப்பு, தந்தியை உடைத்துப் பார்த்தான். லிங்கனுடைய விதிக்கு யார் கருவியாக வாய்த்தார்கள் என்ற கேள்வி அவனுள் எழுந்து மறைந்தது. லிங்கனின் மரணம் அப்புவின் மனத்தில் எவ்விதச் சலனத்தையும் உண்டாக்கவில்லை. செய்தியை அறிந்தால் அதிர்ச்சியால் அச்சம்மா உயிர் இழந்துவிடுவாளோ என்று பயந்தான் பிறந்தது. ஆனால் எத்தனை நாள்தான் லிங்கனின் மரணத்தை மூடி மறைக்க முடியும்? ஓடுகிற வரையில் ஓட்டட்டும் என்று அப்பு விஷயத்தையே கூறவில்லை.

கடைசியாகச் சர்க்காரிடமிருந்து 'பென்ஷன்' பணம் அவள் பெயருக்கு வந்தபோதுதான் அவனால் மேலும் பேசாமல் இருக்க முடியவில்லை.

அவன் எதிர்பார்த்தபடி அச்சம்மாவினால் அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. உயிர் போகா விட்டாலும் உடல் சரிந்துவிட்டது. அவள் கண்முன் லிங்கன் சதா சுழன்றுகொண்டே இருந்தான். பகலில் உணவில்லாமலும், இரவில் தூக்கம் இல்லாமலும் அவள் பிரமை பிடித்தவளைப் போல ஆனாள்.

இந்த ஒரு வருஷமாக அப்புவே முழுக்க முழுக்க அவளைக் கவனித்துக்கொள்ளுகிறான். கிழவியைச் சாப்பிட வைப்பதிலிருந்து படுக்கையில் படுக்க வைப்பதுவரை எல்லாம் அப்பு, அப்பு, அப்புதான். அப்புவை அறியாதவர்கள் பற்பல விதமாகப் பேசிக்கொண்டார்கள்.



அநாதை அப்பு. அநாதை அச்சம்மாவின் பணத்துக்காக உயிரை விடுகிறான் என்றார்கள். அவனை அறிந்தவர்கள் அநுதாபத்துடன், ''ஏன்டா இப்படி அவளுக்காக உன் உசிரை விடறே? அவளுக்கும் யாராவது சொந்தக்காரன் இருப்பான், பார்த்துக் கொள்ளுகிறான்!'' என்றார்கள். அப்பு யாரையும் லட்சியம் செய்யாமல் தன் இயல்பிலேயே சென்று கொண்டிருந்தான். தன்னைப் பற்றிக் கிழவி என்ன நினைக்கிறாள் என்ற அக்கறைகூட அவன் மனத்தில் எழவில்லை.

அப்பு வீட்டினுள் நுழைந்தான்.

''பாட்டி, பாட்டி!''

''யாரு, அப்புவா?''

''என்ன பாட்டி, சாப்பிட்டியா? இல்லே இன்னிக்கும் ஒரு வாய் எடுத்துப் போட்டுக்கிட்டு, தட்டிலேயே கையைக் கழுவிட்டியா?''

''இன்னிக்குக் கொஞ்சம் பசிச்சதுடா, புள்ளே!'' என்றாள் அச்சம்மா.

''நெறையச் சாப்பிடு, நெறையச் சாப்பிடு'' என்று ஆரவாரித்தான் அப்பு.

பாட்டி சிரித்தாள். சிரிப்பு ஒரே வெறுப்புக் கொத்தாக விழுந்தது.

''இன்னமே நான் யாருக்காகச் சாப்பிடணும் என்கிறே?''

''ஒனக்காகச் சாப்பிடு. இல்லாட்டா எனக்காகச் சாப்பிடு. ஒன் உடம்பிலே தெம்பு இருந்தாத்தானே, நீயும் பழசை எல்லாம் நெனைச்சுப் பார்த்து, நெனைச்சுப்பார்த்து அசைபோட முடியும்?''

''நெனைச்சுப் பார்த்து, நெனைச்சுப் பார்த்து என்னத்தைக் கண்டேன்?''

''நன்னாச் சாப்பிட்டுத் தெம்பு வந்தா, பழசையெல்லாம் மறந்துட முடியும், பாட்டி!'' தான் ஒன்றுக்கு ஒன்று முரணாகப் பேசுவது அப்புவுக்குத் தெரியும். கிழவி இந்த முரண்பாட்டையா எண்ணிப் பார்க்கப் போகிறாள்?

''அப்பு!'' என்று அழைத்த கிழவி, கயிற்றுக் கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள்.

''என்ன பாட்டி?''

''நீ போகம்மாவைப் பார்த்திருக்கே, இல்லே?''

''ஆமாம்.''

''உக்கேயின் பொண்ணு. லிங்கனுக்கு அவளை வாங்கிக்கணும்னு ரொம்ப நாளா ஏங்கிக்கிட்டிருந்தேண்டா. பாவிப்பிள்ளை பிராணனை விட்டுட்டான்.''

''இதெல்லாம் நம்ம கையிலா இருக்கு, பாட்டி?''

''டேய், இந்த வேதாந்தமெல்லாம் நீ பேசலாம்டா. ஆனா ஆசைப்படறவன் வேதாந்தத்தையா நெனைச்சுண்டிருப்பான்? அப்படி நெனைச்சுண்டிருந்தா, ஒரு காரியமும் நடக்காதுடா.''

''சரி பாட்டி, மேலே சொல்லு.''

''அந்தப் பொண்ணு ரொம்ப லட்சணமா இருப்பாள்டா. சிரிச்சுச் சிரிச்சுப் பேசுவா. லிங்கன் போனப்புறம் நீதானே எனக்குப் புள்ளையா இருக்கே?''

''நீ என்ன சொல்லப்போறேன்னு எனக்குப் புரியறது, பாட்டி.''

''ஏண்டா, நான் ஏதாவது தப்பா நெனைச்சுக்கிட்டிருக்கேனா? நீ சாதி வித்தியாசம் பாக்காத புள்ளைங்கிற தைரியத்திலேதாண்டா நெனைச்சுப் பார்க்கறேன். நான் சமைச்ச சோத்தை நீ சாப்பிட்டப்போ, நான் மொதல்லே பயந்திட்டிருந்தேன். எதுக்குத் தெரியுமா? ஊர்க்காரங்க



என்னை வாயிலே வந்தபடி ஏசுவாங்கனோன்னு. ஆனா அவுங்களுக்கும் ஒன்னைப் புரிஞ்சிருக்கு. பேசாம இருந்துட்டாங்க.''

''அதுக்காகப் பாட்டி, நீ நெனைக்கிறபடி....'' அவன் முடிப்பதற்கு முன் கிழவி, ''நான் சொல்லிமுடிச்சுடறேண்டா'' என்று இடைமறித்தாள்.

''நீ எந்தச் சாதியையும் சேராதவண்டா, அப்பு, நீ எந்தச் சாதியையும் சேராதவன். நீ தனிச் சாதி. இதுக்கு மேலே எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலே. பேசாம, நீ அந்தப் போகம்மாவைக் கட்டிக்கோ. அது நல்ல பொண்ணு. சரின்னு ஒரு வார்த்தை சொல்லு! சொல்ல மாட்டியா? தலையை அசை, போதும். நான் இன்னிக்கே ஏற்பாடு செய்யறேன். அப்பு, அப்பு!''

அப்பு கலகலவென்று சிரித்தான். பிறகு, ''பாட்டி, இன்னிக்கு நீ ஏன் மருந்தே குடிக்கலே? நேத்து வாங்கினது அப்படியே இருக்கே!'' என்றான்.

''பேச்சைத் திருப்பாதேடா.''

''பாட்டி, நீ மருந்தைக் குடிச்சிட்டுத் தூங்கு. நான் நாதன் வீட்டுக்குப் போயிட்டு வரேன்.''

''போகம்மா விஷயம் என்னடா ஆறது?''

''அதைப்பத்திக் கவலைப்படாதே, பாட்டி. நாதனை கேட்டுச் சொல்றேன்.''

அவன் கிளம்பினான். திருப்தியுடன் அச்சம்ம முன்புறுவல் பூத்தாள். கிழவிக்கு எடுத்த எடுப்பிலே ஏமாற்றம் உண்டாவானேன் என்ற கேள்வியுடன் அப் வாசலில் இருந்த சைக்கிளில் ஏறினான்.

## 9

# தூதன் பேசுகிறான்

**ரா**திகாவின் மனத்தில் எவ்வளவு தூரத்துக்குக் கண்ணன் வேரூன்றிப் பதிந்திருக்கிறான் என்று தம்முள்ளேயே கணக்கிட்டுப் பார்த்த நாதன், வாய் திறவாமல் அவளையே பார்த்தார். என்னதான் பிறர் விஷயங்களில் அவரால் மனத்தை வஜ்ரமாக்கிக்கொண்டு கண்டிப்பாகவும் கறாராகவும் இருக்க முடிந்தாலும், பெண்ணின் விஷயத்தில் அவரால் தாம் நினைத்ததைப் பேச முடியவில்லை. தங்கை பிள்ளை கண்ணன், அவரைப் பொறுத்தவரையில் ஓர் உறவுதான்; ஒரு துரும்புதான். அவர் நினைத்தால் தங்கையின் உறவை அறுத்துக்கொண்டது போல அவனுடைய உறவையும் ஒரு நொடியில் அறுத்துக்கொண்டு விடலாம். துரும்பை வாயாலேயே ஊதி உதறிவிடலாம். ஆனால் இதே கண்ணன் அவருடைய பெண்ணின் உள்ளத்தில் ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்துவிட்ட பிறகு, அவனை எந்தக் கோடரியால் வெட்டி வீழ்த்த முடியும்? ஓர் உறவை அவர் நொடியில் அறுத்துத் தள்ளினாலும் இன்னொரு பெரிய உறவுக்கு அல்லவா ராதிகா அஸ்திவாரம் போடுகிறாள்? இப்போது என்ன செய்வது? எப்படிப் பிரச்னையைத் தீர்ப்பது?

திடீரென்று சைக்கிளின் மணி காதில் ஒலித்தது. மணியின் அழுகைக் குரலிலிருந்தே வந்திருப்பது அப்புதான் என்று உள்ளுணர்வு சொல்லிற்று. எதிரே நிற்கும் ராதிகாவை எறிட்டுப் பார்க்கவும் முடியாமல் தவித்த நாதன் திரும்பிப் பார்த்தார். போர்ட்டிகோவில் சைக்கிளைச் சாய்த்து



வைத்துவிட்டு, ஒரு நிமிஷமும் சும்மா இருக்காத அப்புவின் ஒரு கை பூவைப் பறித்துக் கொண்டிருந்தது. நாதன் இருந்த மனநிலையில் காட்சி உள்ளத்தில் பதியவில்லைதான். ஆனால் ஒட்டாத அந்தக் காட்சியும் இதமாக இருப்பது போன்ற பிரமை உண்டாயிற்று. அப்படியாவது அவருடைய மனத்தின் பளுக் குறையட்டுமே?

கையில் ஒரு வெள்ளை ரோஜாவுடன் அப்பு, தனக்கு ஏதோ மிகவும் அவசரமான, முக்கியமான காரியம் இருப்பதுபோலப் படிகளின்மீது தாவிக்கொண்டும் ஹாலில் ஓடிக்கொண்டும் வந்தான். நாதனும் ராதிகாவும் இருக்கும் இடத்தை அடைந்ததும் நின்றான். ஒரு கணம் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

இதுவரையில் அப்பாவுடன் பேசிய பேச்சுக்களையும், நடத்திய வாதங்களையும் மறந்துவிட்டவளைப்போல ராதிகா, ''அப்பு!'' என்று கத்தினாள்.

''நான் வந்ததும் கத்தியிருந்தால் நீ ஆச்சரியத்தில் கத்தினேன்னு எனக்குத் தோணும். இருபது செகண்டு தாமதமாக் கத்தியதிலே எனக்குக் காதுதான் வலிக்கிறது!'' என்றான் அப்பு. பிறகு நாதனைப் பார்த்து, ''என்ன மாமா, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அடடா! மாமா ஏன் ஒரு மாதிரியா இருக்கிறார்? ராதிகா, அப்பாவுக்கு என்ன?'' என்று கேட்டான்.

''அப்பாவுக்கு ஒன்றுமில்லை. நீ இப்போ சமய சஞ்சீவியா வந்திருக்கே! உனக்கு இணை நீயேதான்!''

அப்பு கலகலவென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறே?'' ராதிகா கேட்டுவிட்டு எறிட்டுப் பார்த்தாள். அதே சமயத்தில் நாதன் ஹாலை நோக்கிச் செல்லுவதும் தெரிந்தது.

திரும்பிச் செல்லும் நாதனை ஒரு பார்வை பார்த்து விட்டு அப்பு, ''இந்த மாதிரி எல்லாரும் ஒரு ஸ்தோத்திரப்

பாட்டைப் பாடிவிட்டுத் தங்கள் காரியங்களையும் சாதித்துக்கொள்ளுகிறார்கள்! இப்போ...'' என்றான்.

''நான் இதுவரையில் என்ன காரியத்தை உன்னிடம் சொல்லிச் சாதித்துக்கொண்டிருக்கிறேன்?''

அவள் 'வெடுக்' கென்று பேசியதைக் கேட்டபோது அப்புவுக்கு மேலும் சிரிப்புத்தான் வந்தது.

''இப்பத்தானே பாட ஆரம்பிச்சிருக்கே? அது சரி, என் அப்பா ஒரு மாதிரியா இருக்கார? முகம் பேஸ்து அடிச்சமாதிரி இருக்கு?''

''உஸ்!'' என்ற ராதிகா, தாழ்ந்த குரலில், ''அவருக்குப் பிடிக்காத விஷயத்தைப்பத்திப் பேசிவிட்டேன். அது அவரைக் கொஞ்சம் கலக்கிவிட்டது. அவ்வளவுதான்!'' என்றாள்.

கையில் இருந்த ரோஜாவின் இதழ்களை ஆராய்ந்து கொண்டே அப்பு, தனக்குத் தானே பேசிக்கொள்ளுவது போல, ''கண்ணன்தான் அந்த விஷயம்'' என்று முணுமுணுத்தான்.

என்னதான் அப்பு முணுமுணுத்தாலும் அவனுடைய பேச்சு ஒரு கேள்வியாக எழாமல், அவன் கூறக்கூடிய பதிலாகவே அமைந்துவிட்டதை எண்ணி, ராதிகா ஆச்சரியப்பட்டாள். 'ஆமாம்' என்று அவள் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதை அவளே உணர்ந்தாலும், வாய் தானாக 'ஆமாம்' போட்டது.

அப்பு இன்னும் ரோஜாவிலிருந்து கண்ணை எடுக்கவில்லை. தான் பார்த்துக்கொண்டிருப்பது ஒரு பூ, அதன் பெயர் ரோஜா, அது வெள்ளையாக இருக்கிறது என்ற எண்ணங்களோ உணர்ச்சிகளோ இல்லாமல் யந்திரமாக, ''நான் உங்க ரெண்டு பேரையும் புரிஞ்சுண்டு இருக்கிற அளவுக்குக்கூட உன் அப்பா புரிஞ்சுக்கவில்லையே!'' என்றான். அவனுடைய குரலில் பரிவோ வேதனையோ ஒலிக்கவில்லை.



''என் அப்பா என்னை நன்னாத்தான் புரிஞ்சுண்டிருக்கார். அதனால்தான் இப்படி இடிஞ்சு போயிட்டார். அதிருக்கட்டும்; நீ கண்ணனைப் பார்ப்பியா? பார்க்கலைன்னாலும் எனக்காக அவனைப் போய்ப் பார்'' என்றாள் ராதிகா.

''சரி, பார்க்கிறேன். பார்த்துட்டு என்ன சொல்லணும்?''

''இங்கே வரச் சொல்லணும். இன்னிக்கு ராத்திரி சாப்பிட வரச் சொல்லணும்.''

அப்பு கைக்குட்டையைப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளுவதுபோல ரோஜாவைப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளப் போனான்.

''பூவை ஏன் கசக்கறே, அப்பு?'' என்று திடீரென்று கேட்ட ராதிகா, தொடர்ந்து, ''என்ன, நான் சொன்னபடி கண்ணனைப் பார்த்துச் சாப்பிட வரச்சொல்றியா?'' என்று கேட்டாள்.

பூவை எடுத்து அவளிடம் நீட்டிக்கொண்டே, அப்பு, ''சரி, வரச் சொல்றேன். ஆனா அவன் வருவானோ என்னமோ?'' என்றான். பிறகு ஹாலை நோக்கி நடந்தான்.

ராதிகாவும் பின் தொடர்ந்தாள். ''ஏன் வரமாட்டான்?''

ஒரு கணம் அப்பு நின்றான்.

''நீ மனசில் உள்ள ஆசைக்கு வடிவம் கொடுத்து உயிரூட்டப் பார்க்கிறாய்!''

''கண்ணன்...?''

''தன் மனசிலே உயிரோடு இருக்கிற ஆசையைக் கொன்றுவிட்டு, மனச்சாந்தி தேடப் பார்க்கிறான்!''

அப்பு மீண்டும் நடக்கலானான்.

''நான் நம்பமாட்டேன்!''

''நீ நம்பணும்னு நான் சொல்லவில்லை.''

"நான் இன்னும் கண்ணனைப் பார்த்தாகவில்லை."

"அவனுக்கு உன்னைப் பார்க்கணும் என்கிற ஆசை இல்லை! ஓ... ஐ ஆம் ஸாரி, ஆசை இருக்கு. ஆனா அதைப் பூர்த்தி செய்துகொள்ளணும் என்கிற விருப்பம் இல்லை!"

"உன்கிட்டே சொன்னானா, அப்பு?"

"பல ரகசியங்கள் சொன்னால்தான் தெரியும். சில சொல்லாமலேயே புரியும்!"

சொல்லிக்கொண்டே அப்பு ஹாலினுள் பிரவேசித்தான். ராதிகாவும் வந்தாள். "அப்போ?" என்று கேட்டாள் அவள்.

நாதன் சாய்வு நாற்காலியில் அரைக்கண் மூடியபடி படுத்திருந்தார். அவருடைய கைத்தடி நாற்காலியில் சாய்த்து வைத்திருந்தது.

அப்பு திடீரென்று குரலை உயர்த்தினான். "அப்போ என்ன அப்போ? கண்ணனுக்கு இங்கே வர இஷ்டமில்லை!" தான் கத்தியது நாதனுடைய காதில் நன்றாக விழுந்திருக்கும் என்ற திருப்தியில், அவன், "என்ன மாமா, தூங்குகிறீர்களா? நான் எழுப்பிவிட்டேனா?" என்றான்.

நாதன் கண்களைத் திறந்தார். எதிரே உட்கார்ந்த அப்புவையும் சற்றுத் தூரத்தில் சுவருடன் சாய்ந்து நிற்கும் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தார்.

"நான் தூங்கவில்லையே?" என்றார்.

"பின் ஏன் கண்ணை மூடிண்டு இருந்தீர்கள்? யோசனையா?"

"........"

"எதைப்பத்தி யோசனை மாமா? ஷேர்மார்க்கெட்டைப் பத்தியா?"

"ஊஹூம்..... இல்லை....."

"இந்த ஷேர் மார்க்கெட்டு விஷயம் இருக்கிறது பாருங்கள். அதைப்பற்றி யோசனையே செய்யப்படாது.



கண்ணை மூடிண்டு வாங்கணும். விற்கணும். அதிர்ஷ்டப் புயல் அடிச்சாத் தானாக் கொழிக்கும். ரொம்பத் தீவிரமா யோசனை பண்ணி, இன்னிக்கு இந்த ஷேரை வாங்கினால் நாளைக்கு அது விலையேறிப் போகும், நல்ல லாபத்துக்கு விற்கலாம், இவ்வளவு ரூபாய் வரும் என்றெல்லாம் கணக்குப் பண்ணி...."

நாதன் திடீரென்று இடைமறித்தார்.

"நான் ஷேர் மார்க்கெட்டைப் பத்திய யோசனை செய்யலலேன்னுதான் சொல்லியாச்சே. அப்புறம் நீ ஏன் வளவளன்னு பேசிண்டே போறே?"

"ஓ, ஐ ஆம் ஸாரி, நீங்க அதைச் சொன்னீர்களா? என் காதிலே விழல்லே. அப்போ எதைப்பத்தி யோசனை பண்ணிண்டிருந்தீர்கள்?"

நாதன் அப்புவை விறைத்துப் பார்த்தார். 'நான் என்ன வேண்டுமானாலும் யோசனை செய்வேன். அது என்னவென்று கேட்க நீ யார்?' என்று கூறுவதுபோல இருந்தது அவருடைய முகபாவனை.

"ஏன் மாமா, அப்படி முறைச்சுப் பார்க்கிறீர்கள் என்னை? நான் என்ன தப்புச் செஞ்சேன்? ராதிகா ஏதோ கண்ணனைப் பத்தி என்கிட்டே கேட்டாள்! அவன் பெரிய மனுஷனாய்ப் போயிட்டான், இனிமே இங்கேயெல்லாம் வரமாட்டான். அவனை நினைச்சுண்டு, மனக்கஷ்டப் படாதே என்று சொன்னேன். நீங்களும் அதே காரணத்துக்காகத்தான் மனக் கஷ்டப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களோன்னு தோணித்து. அதான் கேட்டேன். இனிமே கேட்கலே. நான் வறேன்!"

அப்பு நாற்காலியை விட்டு எழுந்தான். ராதிகாவுக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. அப்பு ஏன் இப்படிப் பேசுகிறான்? அவன் பேசுவதன் நோக்கம் என்ன? உண்மையில் அப்புவின் மனத்தில் என்ன இருக்கிறது? கண்ணனுக்கு அவன் தோழனா எதிரியா?

அப்பு இரண்டு அடி வைத்ததும், நாதன், "அப்பு, உட்கார்!" என்றார்.

ஆனால் அவன் உட்காரவில்லை.

"இல்லை, மாமா. நீங்கள் ரொம்ப வருத்தமா இருக்கிறீர்கள். இன்னும் நான் ஏதாவது பேசுவேன், உங்களுக்குக் கோபம் வேறே வரும். கண்ணன் வரமாட்டான்னு சொன்னதுக்கு ராதிகா வேறே என்னைப் பார்வையாலே பொசுக்கிறா!"

"நீ முதல்லே உட்காருடா!" நாதன் லேசாகச் சிரித்தார்.

"சரி, உட்காருகிறேன். நான் சொல்றது கரெக்டா இருந்தாலும், அது உங்களுக்குத் தப்பாகப் பட்டா என்மேல் கோபம் வராதே!"

"நீ கரெக்டா சொன்னா, அது எப்படித் தப்பாகப் படும் எனக்கு?"

"எல்லாத்துக்கும் மனசுதானே காரணம்!"

"அது சரி, இப்போ நீ என்ன சொன்னே?"

"நான் என்னென்னவோ பேசியிருக்கேன். நீங்கள் எதைப்பத்திக் கேட்கிறீர்கள்?"

"கண்ணனைப்பத்தி என்னமோ சொன்னியே?"

"ஓ, அதுவா! கண்ணனா? அவன் கிடக்கிறான், மாமா. தான் என்னவோ பெரிய மனுஷன் ஆகிவிட்டோம் என்ற கர்வம் அவனுக்கு. மகாலிங்கம் கொடுக்கிற இடம் போறாதுன்னு ஐயா வேறே, பெத்த பிள்ளைகிட்டே கொஞ்சறது போல அவன்கிட்டே பேசறா." பின்னால் இன்னும் ராதிகா சுவரில் சாய்ந்தபடி நின்று கொண்டிருக்கிறாள் என்ற உணர்வு திடீரென்று உண்டாகவே, அப்பு இன்னும் கூர்மையாக நாதனைப் பார்த்தான்.

"நீ சொல்றபடியோ, நினைக்கிறபடியோ கண்ணன் கர்வப்படறான்னு எனக்குத் தோணவில்லை!"



"உங்களுக்கு எப்படித் தோணும்? தோண முடியும்? இங்கே நீங்கள் கிளாஸ் ஹவுஸிலே பத்து நிமிஷம் பார்க்கிறீர்கள். உங்க தங்கை பிள்ளையாக அவனைப் பார்க்கிறீர்கள். ஆதிகாலத்திலேருந்து உண்டாகியிருக்கிற பயம் இன்னும் பூரா அவன் கிட்டேயிருந்து விலகலே. அந்தப் பயத்தோடே அவன் உங்ககிட்டே பேசறபோது, அவனுடைய மமதை எப்படித் தெரியும்?"

திடீரென்று ராதிகா வெகுண்டாள். "நீ சொல்றது போல மமதையும் அகங்காரமும் கண்ணனுக்கு இருக்குன்னா, அதுக்கு முக்கிய காரணம் என்ன?"

"நளினி கெமிகல் இண்டஸ்டிரீஸின் நிர்வாகம் அவன் கைக்கு வந்திருக்கு! எழுநூத்தம்பதோ, எண்ணூறோ சம்பளம் கொடுக்கப் போறார் மகாலிங்கம்! கையிலே நிறைய அதிகாரம்! ஆபீஸ் விஷயத்திலே இப்படின்னா, வீட்டிலே இன்னும் ஒரு படி மேலே! எந்த வேளையிலே அவன் போனாலும் காபி, டிபன், பழம் கிழம் எல்லாம் உபசாரம் செய்யறா ஐயா மாமி!"

ராதிகா தன் பெண்மைத்தனத்தால், "இதெல்லாம் உனக்குக் கிடைக்கல்லேன்னு நீ பொறாமைப்படறே!" என்றாள்.

அப்பு இடி இடியென்று சிரித்தான். பிறகு நாதனைப் பார்த்து, "மாமா, ராதிகா சொல்றதைக் கேட்டீர்களா? எனக்குப் பொறாமையாம்!" என்றான்.

"மானேஜரா! 800 ரூபாய் சம்பளமா! வெரி குட், வெரி குட், ஐ ஆம் வெரி ஹாப்பி!" என்றார் நாதன்.

இதுவே சரியான தருணம், இப்போது ஒரே அடியாக அடித்தால்தான் உண்டு என அப்பு தீர்மானித்தான்.

"மாமா, உங்க பெண் ராதிகா ரொம்ப நச்சரிக்கிறாள். ஆனா எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் அழாத குறையாகக் கேட்கிறாள். நான் எப்படியாவது கண்ணனைக்

கெஞ்சிக் கூத்தாடி அழைச்சுண்டு வரட்டுமா? அவன் பிகு பண்ணிப்பான், பிணங்குவான். இருந்தாலும் கரகரன்னு கையைப் பிடிச்சு இழுத்துண்டு வர்றேன். என்ன சொல்கிறீர்கள்?''

திடீரென்று, சிந்திக்காமலே பேசுகிறவரைப்போல, ''ஜமாய்!'' என்றார் நாதன்.

அடுத்த கணம் அப்பு ராதிகாவைப் பார்த்தான். மப்பு கலைந்த வானம்போல அவனுடைய முகம் பிரகாசித்தது. அர்த்தபுஷ்டியுடன் அவளைப் பார்த்துக் கண்களால் சிரித்துவிட்டு அப்பு, நாதன் பக்கம் திரும்பினான். பிறகு, ''சரி, மாமா!'' என்று எழுந்தான்.

''நான் ரெண்டு மூணு சமாசாரம் சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன். இந்தக் கண்ணன் பேச்சுக் கிளம்பினாலும் கிளம்பித்து. ஒண்ணும் முடியல்லே!''

''என்ன சமாசாரம்?'' என்று கேட்டார் நாதன்.

''எனக்கு டயமாறது, மாமா. ராத்திரிதான் வரப் போறேனே; சொல்றேன். அது சரி, எனக்கும் சாப்பாடு உண்டா? இல்லே, நான் கண்ணனை அழைச்சுண்டு வர ஏவல்காரன்தானா?''

''உனக்கிராத சாப்படா?'' என்று கேட்ட நாதன், ''அப்பு, இதை மட்டும் சொல்லிட்டுப் போ!'' என்றார்.

அப்பு நின்றான். ''எதை?''

''மகாலிங்கம் வீட்டில் கண்ணனுக்கு, நீ சொல்றது போல அவ்வளவு உபசாரமா நடக்கிறது?''

''ஆமாம்; ஏன் உங்களுக்கு இந்தச் சந்தேகம்?''

''எதுக்காக இவ்வளவு உபசாரம்?''

''யார் கண்டார்கள்? பெரிய மனுஷன் வீட்டிலே இன்னொரு பெரிய மனுஷனுக்குத்தான் உபசாரம் நடக்கணும். கண்ணன் போன்ற சாதாரண ஆளுக்கு நடந்தா...''



''நடந்தா?''

''ஏதாவது விபரீதத்திலே முடியும்!''

நாதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். ராதிகாவும் மெல்ல அவரை நோக்கி வந்தாள்.

''என்ன விபரீதம், அப்பு?'' என்றார் நாதன்.

''நளினி நாளைக்கே ஜெர்மனியிலிருந்து திரும்பி வந்ததும், கண்ணனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னு மகாலிங்கமும் ஜயா மாமியும் திட்டம் போட்டுண்டிருக்காளோ என்னவோ!''

அப்பு பேசி முடித்ததும், இதுவரை தோன்றாத அமைதி ஹாலில் நிலவியது. ஒரு நீண்ட நிமிஷத்துக்கு அந்த அமைதியை அநுபவித்த அப்பு, மெதுவாக வாசலை நோக்கி நடந்தான். கதவை அடைந்ததும், சிலைபோல நின்ற ராதிகாவைப் பார்த்தான். பிறகு, ''ராதிகா, அவர்களுடைய இந்தத் திட்டம் நிறைவேறினா, அது விபரீதந்தானே?'' என்றதும் அவசர அவசரமாக ஓடிப் படிகளில் இறங்கிச் சைக்கிளின் மேல் தாவினான்.

# 10

## ஓர் அதிர்ச்சி

**ம**காலிங்கத்தின் அந்தரங்கக் காரியதரிசி வெங்கோப ராவ் குடையுடன் புறப்பட்டபோது மணி நான்கு. வழக்கம்போல் அவருடைய எட்டாவது குழந்தை, மூன்று வயசுக் குண்டு (வயசானால் குண்டுராவ் ஆகிவிடுவான்) கன்னட மழலையில், 'எங்கே அப்பா போறே?' என்று கேட்டான். இது மாதிரி அபசகுனமாகக் கேட்கக் கூடாது என்று குழந்தைக்குத் தெரியாது என்பது வெங்கோப ராவுக்குத் தெரிந்தும், அவருக்கு அசாத்தியக் கோபம் வந்தது. வாயாரக் கன்னடத்தில் வசன மழையைப் பொழிந்துவிட்டு, குடையை அழுத்திப் பிடித்துக்கொண்டு கிளம்பினார்.

என்றும்போல அன்றும் பொருளாதாரப் பிரச்னை அவருடைய மென்னியைப் பிடித்தாலும், அன்றைப் பிரச்னை தாங்க முடியாத அளவுக்கு விசுவரூபம் எடுத்துவிட்டதாகத் தோன்றியது அவருக்கு. சம்பளம் என்ற பெயரில் முந்நூறு ரூபாய் இருந்தாலும் கழிவுகள் போகக் கைக்கு வந்தது என்னவோ நூற்றெண்பது ரூபாய்தான். அதற்கு இதற்கு என்று மூன்றாம் தேதியிலிருந்து சம்பளத்தை முன்பணமாக வாங்கிக்கொண்டால், சம்பள தினத்தன்று மீதம் என்ன இருக்கும்?

கடைத்தெருவை நோக்கி நடக்கையில் ராயருக்கு உலகத்தின்மீதே கோபமும் வெறுப்பும் பிறந்தன. அவர் ஒருவர்தாம் இப்படிக் கஷ்டப்படுவதாகத் தோன்றியது.



எட்டுக் குழந்தைகளைக் கொடுத்துவிட்டு, ஒன்பதாவதற்கும் அவருடைய மனைவியைத் தயாராக்கி வைத்திருக்கும் பத்திராசல மூர்த்தியை மனம் சபித்தது.

நடக்க நடக்க, வெறுப்பும் கோபமும் வீட்டின் அடுப்பை ஏற்றமாட்டா என்ற ஞானோதயம் உண்டாகவே, மேற்கொண்டு என்ன செய்வது, எப்படி நிலைமையைச் சமாளிப்பது என்பதுபற்றி அவர் சிந்திக்கலானார். காரியாலயத்தில் இனி முன்பணம் வாங்க முடியாது. கண்ணனிடம் கடன் கேட்கலாம் என்றால் ஏற்கனவே இருநூற்றிருபது ரூபாய் பாக்கி. இருக்கிற இரண்டொரு தங்க நகைகளையும் அடகு வைத்தாகிவிட்டது. சக்குவிடம் இப்போது இருக்கிற, 'கவரிங்' வளையல்களும் சங்கிலியும் இருபது ரூபாய்கூடப் பெறா. என்ன செய்வது?

சிந்தனை தீவிரமாகத் தீவிரமாக நடையின் வேகந்தான் அதிகமாயிற்றே தவிரப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியவில்லை. ஒரு கடனை வாங்கி இன்னொரு கடனை அடைத்துப் பழக்கப்பட்ட அவர் இப்போது ஏழெட்டுக் கடன்காரர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

அவரை அறியாமலே கடைவீதியைத் தாண்டி, சாரிங் கிராஸுக்கு வந்துவிட்டார். குன்னூர்ப் பாதையிலிருந்து அப்பு வருவதைக் கண்டதும் திடீரென்று ஒரு யோசனை அவருள் உதயமாகியது. மனத்துக்குள்ளேயே கணக்குப் போட்டுக்கொண்டு அவர் அவனுக்காகக் காத்திருந்தார். ஏன் இதுவரையில் இம்மாதிரியான யோசனை தோன்றாமற் போயிற்று? தோன்றியிருந்தால் எத்தனை சில்லறைக் கடன்கள் ஒழிந்திருக்கும்?

வெங்கோப ராவ் தனக்காகத்தான் குடையும் கையுமாகக் காத்து நிற்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட அப்பு இறங்கி, ''என்ன ராயர்வாள், எங்கே இப்படி,

சாவகாசமாகக் கிளம்பினீர்? மழை வரும்போலத் தோணலியே?'' என்று கேட்டான்.

''குடையை வீட்டிலே வைச்சா குழந்தைகள் ஆளுக்குக் கொஞ்சம் பிச்சுக்கும். அது சரி, இப்போ நீ எங்கே போறே?''

''ஏன் என்ன சமாசாரம்? கண்ணனைப் பார்த்தீர்களா?''

''நான் பார்க்கலே. நீ எங்கே போறேன்னு சொல்லலியே?'' என்றார் வெங்கோப ராவ்.

''எங்கேயிருந்து வர்றேன்னு கேட்டா, அப்பு நிச்சயமாப் பதில் சொல்லுவான். எங்கே போறேன்னு கேட்டா அப்புவாலே எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?'' என்று கேட்டுவிட்டு அப்பு சிரித்தான்.

''எனக்கு இப்போ உன்னாலே ஒரு காரியம் ஆகணும், அப்பு!'' - ராவ்ஜி குழைந்தார்.

''பணந்தானே? அப்புகிட்டே அப்புவின் பணம் காலணா கிடையாது. ஜயா மாமி அரிசி அப்பளத்துக்கும் நாரத்தங்காய்க்கும் கொடுத்த ரூபாய்தான் இருக்கு. அதை உம்மகிட்டே கொடுத்துட்டா அப்புவை மாமி ஊறுகாய் போட்டுடுவா!''

''அந்தப் பணத்தை உன்கிட்டே கேட்கல்லே, அப்பு.''

''பின்னே?''

''உன்னைப் பிள்ளைமாதிரி கொண்டாடறாளே, அச்சம்மா; அவகிட்டே.....''

''அவகிட்டே?''

''உனக்குத் தெரியுமே, அப்பு, அவகிட்டே பணம் இருக்குன்னு.....''

''உமக்குத் தெரிஞ்சிருக்கிறது அவ்வளவுதான். எல்லாப் பணத்தையும், செட்டியார்கிட்டே நிறுத்தி



வைத்திருக்கிறாள். அவர் கொடுக்கிற வட்டியில்தான் அச்சம்மா ஜீவனம் நடக்கிறது.''

''இதெல்லாம் எனக்குத் தெரியும், அப்பு.''

''பின்னே ஏன் வளவளன்னு பேச்சு?''

''செட்டியார் கொடுக்கிற வட்டிக்கு மேலே நான் கொடுக்கிறேன். நூத்துக்கு அவன் ஒரு ரூபாய் கொடுத்தா நான் ஒண்ணேகால் தறேன். எனக்கு ஆயிரம் ரூபாய் போதும். இருக்கிற சில்லறைக் கடனையெல்லாம் ஒழிச்சுக் கட்டிவிட்டு.....''

''ஒரு பெரிய கடனா வைச்சுக்குவீராக்கும்!''

''ஆமாம், மாதமாதம் அம்பது ரூபாயாத் திருப்பிக் கொடுத்துடறேன். கூடவே வட்டியும்......''

''ராயர்வாள், உங்க ப்ளான் பிரமாதமாகத்தான் இருக்கு. ஆனா இதை இந்த அப்பு அச்சம்மாகிட்டே சொன்னா அவ்வளவுதான், வெங்கோப ராவுக்குக் கடன் கொடுக்கிறதான்னு கேட்டுவிட்டு, மூணு தடவை மேலேயும் கீழேயும் பார்த்துட்டு உசிரை விடுவா!''

''அப்பு, உனக்கு என்னைப் பார்த்தா கேலியா இருக்கு, இல்லியா?''

''ராயர்வாள் அப்படிக் கேட்கப்படாது. சம்சார சாகரத்திலே நீர் தத்தளிக்கிறது எனக்கு நன்னாத் தெரிகிறது. ஆனா அதுக்காக என்னாலே கண்ணீர் வடிக்க முடியலே. நான் சொல்றதைக் கேளும். சில்லறையா நெறையக் கடன் இருக்கிறதே மேல். ஓர் இடத்திலே மொத்தமா இன்னிக்கு ஏற்படுத்திண்டா நாளைக்கே பழையபடி சில்லறைக் கடன்கள் முளைக்க ஆரம்பிச்சுடும். அப்போ, நான் வரட்டுமா?''

''வழி சொல்லாம போறியே?''

''ஓ, வழியா? இதோ இதுதான் வழி; இப்படியே போனா பன்னண்டாவது மைலிலே குன்னூர்!''

சிரித்துக்கொண்டே சைக்கிளில் ஏறப்போன அப்புவை ராவ் நிறுத்தினார்.

''கொஞ்சம் இரு, அப்பு. இப்போ எனக்கு ரொம்ப அவசரமா இருபது ரூபாயாவது வேணும். பணம் கிடைச்சாத்தான் ராத்திரி குழந்தைகளுக்குச் சோறு!'' ராவின் குரல் கம்பியது. கண்களில் நீர் துளித்தது.

''ராயர்வாள், ஏன் இப்படிப் பெண்பிள்ளை மாதிரி அழறீர்? இந்த அப்புகிட்டே வஞ்சனை இல்லை. பணம் இல்லையே? என்ன செய்யறது?''

''ஏதாவது ஒரு வழி சொல்லேன்? நான் இருக்கிற நிலைமையிலே நீ இருந்தா என்ன செய்வே?''

''அப்பு பட்டினி கிடப்பான்.''

''நானும் பட்டினி கிடக்கத் தயார். குழந்தைகளையும் பட்டினி போட மனசு வரமாட்டேன் என்கிறதே!''

''அப்படியானால் திருடலாம்.''

''என்ன சொல்றே?''

''வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்காதவன் அயோக்கியத் திருடன். திருடுகிறோம் என்ற எண்ணத்துடன் நேர்வழியாகத் திருட்டில் இறங்குகிறவன் யோக்கியமான திருடன்! பத்தரைமாத்துத் திருடன்! திருட்டும் ஒரு தொழில்தானே?''

''நீ விளையாடறே, அப்பு!''

''அப்புவை யோசனை கேட்டா இப்படித்தான் சொல்லுவான்.''

''என்னாலே இந்த வயசுக்குமேலே திருட ஆரம்பிக்க முடியாது!'' என்று சொன்னவர் திடீரென்று, ''நாதனை நான்



இதுவரையில் கேட்டதே இல்லை, ஏது, தம்முள் பிறந்த கேட்டார்.

ர் ஏதாவது பேச

''கேட்டுப் பாரும்!''

''நீ அங்கேயிருந்துதானே வர்றே?'' இங்கே

''ஆமாம்.'' இருந்த

''அந்தக் காலத்திலேயிருந்தே எனக்கு அவரைத் தெரியும்.''

''கேட்டுப் பாரும். கிடைச்சா உம் அதிருஷ்டம்; அவர் துரதிருஷ்டம்.''

''போய்ப் பார்க்கிறேன்.''

''பாரும். ஒரு விஷயம்; நாளைக்கு ஸ்ரீதர் வர்ற விஷயத்தை அப்பு இன்னும் சொல்லல்லை. நீர் சொல்லி வையும். ஸ்ரீதர் யார் தெரியுமோ இல்லியோ? நாதனுடைய ஒண்ணுவிட்ட மச்சனன் பிள்ளை. அவனுக்கு என்ன சம்பளம், என்ன வேலை என்கிறதையெல்லாம் சொல்லிவையும். அப்புறம் மெதுவா உம்ம விஷயத்தைப் பிரஸ்தாபியும். கண்டிப்பாகப் பணம் பெயரும். என்ன, நான் சொல்றது தெரிகிறதா?''

மேலே பேசிக்கொண்டு நிற்க வெங்கோப ராவுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? வாய் வார்த்தையால் நன்றிகூடச் சொல்லாமல் அவர் பறந்தார்.

வெங்கோப ராவ் 'ரெட் ஹவுஸை' அடைந்த போது நாதன் ஹாலில் இல்லை. 'ஸார்', 'ஸார்' என்று இரண்டு தடவை தாழ்ந்த குரலில் அழைத்துப் பார்த்தார். பதில் வரவில்லை. மூன்றாம் தடவை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, உரத்த குரலில் அழைத்தார்.

''யார் அது?'' என்று கேட்டவனாய், இரட்டைப் பின்னலில் ஒரு பின்னலைப் பின்னிக்கொண்டே ராதிகா

''ஓ, வழியா? ாவினுள் பிரவேசித்தாள். ஒட்டுப் போனா பன்னண்டா வெள்ளையேறிய குடையுமாக நின்ற சிரித்துக்கொத்தும் ஒரு கணம் ஒன்றும் புரியாமல் ராவ் நிறுச்

தம்மை அவள் இன்னும் அடையாளம் கண்டு காண்ளவில்லை என்பதைப் புரிந்துகொண்ட ராவ், ''அப்பா இருக்கிறாரா?'' என்று கேட்டார். பிறகு தொடர்ந்து, ''என்னைத் தெரியவில்லையா உனக்கு? நான்தான் வெங்கோப ராவ். எஸ்.டி. வெங்கோப ராவ்'' என்று சொல்லிவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தார்.

''ஓ. இப்போ ஞாபகம் வந்தது! உங்க விட்டில் தானே முன்னெல்லாம் புரட்டாசி மாசத்தில் பஜனை நடக்கும்? சக்குமாமி சௌக்கியமா? உட்காருங்கள்'' என்றாள் ராதிகா.

''ஆமாம்.'' சொன்னவர் ஒரு சோபாவில் உட்கார்ந்துகொண்டார். சோபா முழுவதையும் அடைத்து, அழுத்தி அமர்ந்தால் அது அபசாரமாகி விடுமோ என்ற பயம் தோன்றவே, லேசாக விளிம்பில் உட்கார்ந்தார் அவர். பிறகு, ''அப்பா இல்லியா?'' என்று கேட்டார்.

''இருக்கிறார். இன்னும் பத்து நிமிஷத்தில் வந்து விடுவார்'' என்ற ராதிகா, ''நீங்கள் மகாலிங்கம் கம்பெனியில்தானே வேலையாக இருக்கிறீர்கள்? யாரோ எப்போதோ சொன்ன ஞாபகம்!'' என்று கேட்டாள். அதே கம்பெனியில்தானே கண்ணனும் வேலை செய்கிறான்?

''ஆமாம், அப்பாகிட்டே முக்கியமான சமாசாரம் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்.'' ராவ்ஜிக்கு இருக்கை கொள்ளவில்லை. இந்தப் பங்களாவுக்கு முட்டாள்தனமாக அவசரப்பட்டுக் கொண்டு வந்து விட்டதாகத் தோன்றியது. நாதனை நினைத்தபோது ஒரு விதப் பயம் பிடித்துக் கொண்டது. என்னதான் நாதனை அவருக்குப் பழக்கம் இருந்தாலும், நாதன் கறாரான மனிதர்



என்ற எண்ணம் தோன்றி அச்சுறுத்தியது. தம்முள் பிறந்த பயத்தை மழுப்பிக் கொள்ள அவர் ஏதாவது பேச வேண்டுமே என்ற எண்ணத்தில் பேசினார்.

''நான் ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி இங்கே வந்திருக்கிறேன். அதாவது உன் அம்மா உயிரோட இருந்த காலம். இப்போ உன்னைப் பார்க்கிறபோது எனக்கு உன் அம்மா ஞாபகந்தான் வந்தது.''

ராதிகா சிரித்தாள்.

''ஏன், நான் என் அம்மா மாதிரி இருக்கிறேனா?''

''நன்னா கேட்டே! நீ உன் அம்மாவை உரிச்சு வைச்சிருக்கே!'' வெங்கோப ராவ் பயத்தை மறந்துவிட்டுச் சிரித்தார். அடுத்த கணமே அருகே எங்கேயோ காலோசை கேட்பது போலத் தோன்றியது. அவர் அங்குமிங்குமாகப் பார்த்தார்.

''இதோ அப்பாவே வந்துவிட்டார்!'' என்று ராதிகா உரத்த குரலில் கூறினாள்.

மின்சாரம் தாக்கியதுபோல ராவ் எழுந்தார். உடல் அவரையும் மீறி நடுங்கியது.

''நமஸ்காரம் ஸார், நமஸ்காரம் ஸார்.'' அவருடைய இரு கைகளும் கூப்பி நிற்க, குடை கீழே விழுந்தது.

''உட்காருங்கள், ராவ், உட்காருங்கள். எங்கே இவ்வளவு இப்படி ஒரு விஜயம்?''

''ஒண்ணுமில்லே... ஒண்ணுமில்லே... சும்மா பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''முதல்லே உட்காரும்!'' என்ற நாதன், ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டார்.

வெங்கோப ராவ் அப்புவையும் அவன் பிரஸ்தாபித்த ஸ்ரீதரையும் மறந்துவிட்டார். உள்ளே புகைபோல்

அடைத்துக் கிடந்த பயம் ஒருவாறு நீங்கியதும், அவருடைய பிரச்னைதான் ஞாபகத்துக்கு வந்தது.

''உங்களைப் பார்த்து, ஒரு சின்ன உதவி..... ஸ்மால் ஹெல்ப் கேட்கலாம்னு வந்தேன்... சிரமத்துக்கு மன்னிக்கணும்.''

நாதன் அருகில் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டார். பிறகு, ''என்ன, மறுபடியும் பஜனை கிஜனை ஆரம்பிக்கிறீரா? இரண்டு மூன்று வருஷமா ராவ்ஜீ வீட்டிலே பஜனை இல்லையேன்னு நெனைச்சுண்டிருந்தேன்!'' என்றார்.

''ஆரம்பிக்க வேண்டியதுதான்.'' முணுமுணுத்த ராவ்ஜீக்குத் திடீரென்று புது யோசனை ஒன்று உதித்தது. அவருக்குத் திருட்டுப் பழக்கம் இல்லாததுதான். ஆனால் பொய்? எத்தனையோ இக்கட்டான நிலைமைகளில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தங்கள் தோன்றியிருக்கின்றனவே?

''ஆரம்பிக்கப் போகிறேன்!'' என்றார் அவர் அழுத்தமாக.

''புரட்டாசி மாசத்தில்தானே?'' என்று கேட்டார் நாதன்.

''சித்திரையிலே சனிக்கிழமை செய்யலாம்னு உத்தேசம்! பகவன் நாமாவைப் பாடறத்துக்கு நாம் மாசத்தை ஸெலக்ட் பண்ணணும்கிற நியதி இல்லை!''

நாதன் கலகலவென்று சிரித்தார். ''ஊட்டியிலே சித்திரை மாசந்தான் பஜனைக்கு ஐடியல். ஸீஸனுக்கு ஆயிரமாயிரம் பேர் வெளியூர்களிலிருந்து வருவார்களே. ராதிகா, ஒரு பத்து ரூபாய் கொண்டுவந்து ராவ்கிட்டே கொடு'' என்றார்.



அடுத்த கணம் ராதிகா உள்ளே சென்றாள். ராவ் தம்மைத் தாமே சபித்துக்கொண்டார். நாதனிடம் சின்ன உதவி என்று பீடிகை போட்டதனால்தானே இப்போது பத்து ரூபாயில் நிற்கிறது? எடுத்த எடுப்பிலேயே, 'பஜனை ஆரம்பிக்கப் போகிறேன், நீங்கதான் தலைமை தாங்கி ஆரம்பிச்சு வைக்கணும்' என்று சொல்லியிருந்தால் இருபதோ முப்பதோ கிடைக்குமே; இனிமேல் பேசிப் பயன் இல்லை.

ராதிகா பணத்துடன் வந்தாள். பணத்தைப் பார்த்ததும் திடீரென்று, காரணமில்லாமல் மகாலிங்கத்தின் நினைவு வந்தது ராவுக்கு. அதைத் தொடர்ந்து ஜயா, கண்ணன், அப்பு இவர்கள் எல்லாரும் கண்முன் நின்றார்கள். கடைசியாக அப்புவோடு பேசிய பேச்சு ஞாபகத்துக்கு வந்தது. ஸ்ரீதரைப்பற்றி இரண்டு வார்த்தை நாதனிடம் சொல்ல வேண்டும் என்றானே அப்பு?

பத்து ரூபாயை வாங்கிக்கொண்ட அவர், ''ஸார், ஸ்ரீதர் வர்றான் நாளைக்கு. அதான் உங்க உறவுக்காரன்!'' என்றார்.

''எந்த ஸ்ரீதர்?'' என்றாள் ராதிகா.

''அவன்தான், உன் மாமாபிள்ளை; ஒண்ணுவிட்ட மாமா பிள்ளை!'' என்றார் வெங்கோப ராவ்.

''ஸீஸனுக்கு வர்றானா?'' என்று கேட்ட நாதன், ''ஏன் எனக்கு எழுதவில்லை?'' என்று தம்முள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார்.

''ஸீஸனுக்கு இல்லை, ஸார்! நளினி கெமிகல் இண்டஸ்ட்ரீஸில் வொர்க்ஸ் மானேஜரா வர்றான்! மகாலிங்கம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறார். நாளைக்குக் கார்த்தாலே, கண்ணன் மேட்டுப்பாளையம் போய் அழைத்துக்கொண்டு வரப்போகிறான். உங்களுக்குத் தெரியாதா? ஸ்ரீதர் உங்களுக்கு எழுதவில்லையா?''

வெங்கோப ராவ் மெதுவாக எழுந்தார். நாதன் ஏன் திடீரென்று ஆழ்ந்த யோசனையில் இறங்கிவிட்டார் என்று அவருக்குப் புரியவில்லை.

"அப்போ நான் வர்றேன் ஸார், உங்க உதவிக்கு ரொம்ப நன்றி!" என்று குடையை எடுத்துக்கொண்டு ராவ் புறப்பட்டார்.

'சரி' என்று நாதன் தலை அசைத்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார். இத்தனை நாள் யாரைப் பற்றி அவர் நினையாமலே இருந்தாரோ, யாரை அவர் பல வருஷங்களாகப் பார்க்காமலே இருந்தாரோ, அவன் வருகிறான்! பெரிய பதவியை ஏற்க வருகிறான்!

ஊட்டியில் உறவு என்று சொல்லிக்கொள்ள ஸ்ரீதருக்கு அவர் ஒருவர்தாம் இருக்கிறார். அந்த உறவு காலத்தாலும் சந்திப்பின்மையாலும் மறந்துவிட்ட உறவு. அது இப்போது மீண்டும் புத்துயிர் பெற இருக்கிறது. இனி அது அப்படியே இருந்துவிடக்கூடாது! அது நன்றாக வேரூன்றி நிற்க வேண்டும்! ஆனால் மைத்துனன் பிள்ளை என்ற உறவில் அல்ல!

இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கப் போகும் ஸ்ரீதர் இனிமேல் வெறும் மைத்துனன் பிள்ளையாக இருக்கக் கூடாது.

நாதன் கண்களைத் திறந்து பார்த்தார். அவர் கண்கள் ராதிகாவைத் தேடின. அவள் ஹாலில் இல்லை.

அடுத்த கணமே கண்ணனுடைய உருவம் கண்முன் நின்றது. அவனை இன்று விருந்துக்கு அழைத்திருப்பது இப்போது எவ்வளவு அபத்தமாகப் போய்விட்டது! ஸ்ரீதர் வருமுன், ராதிகா - கண்ணன் சந்திப்பு என்ன என்ன விபரீதங்களை உண்டாக்கக்கூடும்!

இனிமேல் என்ன செய்வது? நாதன் மீண்டும் கண்களை மூடினார்.

# 11

# கண்ணனுக்கு விருந்து

**நா**தன் திடீரென்று கண் விழித்தார். வெங்கோப ராவ் வந்தது, கிழிசல் குடையை அவர் விடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தது, ஸ்ரீதர் வரப்போகிறான் என்ற செய்தியை அறிவித்தது - எல்லாமே எப்போதோ பார்த்த கனவின் காட்சிகளாகத் தோன்றிய அவருக்கு.

அவர் மெதுவாக எழுந்தார். ஹால் பயங்கரமான நிசப்தத்தில் உறைந்துகிடந்தது. வெளியே கவ்வியிருந்த இருளைக் கண்டபோது, தாம் நீண்ட நேரம் உறங்கி விட்டதான பிரமை உண்டாயிற்று. ஏற்கனவே ஹாலில் எரிந்துகொண்டிருந்த விளக்கில் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஆறரை.

மெல்ல மெல்ல நடந்து அவர் போர்ட்டிகோவுக்கு வந்தார். அதன் சுவர்களை அணைத்திருந்த கொடிகளில் அங்கும் இங்குமாகப் பூக்கள் சிதறிக் கிடந்தன. ஒரு பூவைப் பறித்து அவர் கையில் வைத்துக்கொண்டே கிளாஸ் ஹவுஸை நோக்கி நடந்தார். சாதாரணமாக ஆறரை மணிக்கு அவர் கிளாஸ் ஹவுஸிலிருந்து திரும்புவது வழக்கம். இன்று அவர் தம்மை அறியாமலே வழக்கத்தை மீறிப்போகிறார். இதற்கு என்ன காரணம்? சலனமே ஏற்படாத மனத்தில் இன்று சலனம் ஏன் பிறந்திருக்கிறது? ராதிகா? கண்ணனை விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, தன் காரியத்தையும் சாதித்துக்கொண்டதனாலா, அல்லது வெங்கோபராவ் கொண்டுவந்த செய்தியினாலா?

கோடைக்காலமானாலும் காற்று குளிரை வாரி அடித்தது. கழுத்தில் மப்ளர் இல்லாதது நாதனுடைய நினைவுக்கு வந்தது. அது ஒரு குறையாகவும் பட்டது. இருந்தாலும் அவர் தொடர்ந்து நடந்தார். கிளாஸ் ஹவுஸ் எங்கோ தொலைதூரத்தில் இருப்பதான பிரமை ஏனோ உண்டாகியது.

நாதன் கிளாஸ் ஹவுஸை அடைந்ததும் நின்றார். சுற்று முற்றும் பார்த்தார். அவர் தம்முடைய கையால் சிருஷ்டித்த நந்தவனத்தை ஒரு தடவைக்குப் பல தடவைகளாகப் பார்த்தார். முன் ஒரு காலத்தில் அவருடைய கற்பனையில் பிறந்த நந்தவனத்தின் அமைப்பு இன்று கண்முன் பிரத்தியட்சமாக நிற்கிறது. இந்த அமைப்பையும் வடிவத்தையும் - ஏன், நந்தவனத்தையே - புயலோ கோர மழையோ நொடியில் அழித்துவிடலாம். ஆனால் நாதன் மீண்டும் ஒரு நந்தவனத்தை அமைத்துவிடுவார். பழைய அழகும் பொலிவும் உண்டாகக் காலதாமதம் ஆகலாம். ஆனாலும் அவருடைய மனத்துக்கேற்ப நந்தவனம் உருவாகிவிடும்.

ராதிகா திடீரென்று மனக்கண்முன் நின்றாள். அவளும் ஒரு நந்தவனந்தான். அவளுடைய வாழ்க்கையும் நந்தவனம் போன்றதுதான். அவர்தாம் அந்த நந்தவனத்தையும் தம் இஷ்டத்துக்கு உருவாக்கியிருக்கிறார், இத்தனை நாட்களாக. ஆனால் அதை இடியோ புயலோ மழையோ தாக்கினால்?

நாதன் சிமென்டுப் பெஞ்சி ஒன்றில் உட்கார்ந்து கொண்டார். இரத்தம் பெருக்கெடுத்துத் தலையில் புகுந்து கனத்தது. அவர் மானசிகமாக எதிர்பார்த்த புயலும் மழையும் ஏற்கனவே தங்களது வருகையை எச்சரித்து விட்டதாக அவருக்குத் தோன்றியது. இனி அவரால் என்ன செய்ய முடியும்? விதி என்று கோழையாக விட்டுவிட முடியுமா? அல்லது தமது பழைய ஆத்திரத்தைக் காட்டி நிறுத்த இயலுமா?



நாதனுடைய சிந்தனை, பித்தனின் மனம் போல் நாலா பக்கமும் சிதறியது. திரும்பத் திரும்ப ராதிகா என்ற அவருடைய பெண்தான் கண்முன் அலங்கோலமாகத் திரிந்தாளே ஒழிய, அவர் அமைத்த அவருடைய நந்தவனம் ஒரு நிலையாக நிற்கவில்லை. இதற்கு மூல காரணமாக இருக்கிறவனை அவருடைய மனக்கண் தேடியது. அவன் சிக்காமல் நழுவிக்கொண்டே போனான். அவன் இனிமேல் சிக்கினால்தான் என்ன பிரயோசனம்? நாதன் தம்முடைய பலவீனத்தை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தார். ஆறு ஆண்டுகளுக்கு முன் அவருடைய கைத்தடி உபயோகப் பட்டது, கண்ணனை வெளியேற்ற. அன்று அவரால் அவனை வீட்டை விட்டே விரட்ட முடிந்தது. ஆனால் அதே கைத்தடி இனிமேல் அதே காரியத்துக்குப் பிரயோசனப் படுமா?

கண்ணன் இப்போது சிக்கிவிட்டான். அவனுடைய சிரித்த முகமும் கலைந்த கிராப்பும் அவருடைய உள்ளத்தைக் கவ்விப் பிடித்தன. அவனைப்பற்றி நினைக்கையிலேயே சிந்தனை தொடர்ந்து நீண்டது. அவனை ஈன்றெடுத்த தாய் சீதா - அவருடைய தங்கை - நிழலாடினாள். அவளுக்குப் பின்னால் அவளுடைய கணவன் பலராமன். எப்போதோ ஏதோ ஒரு கோவிலில் நடந்த, அவர் பார்க்காத, அவர்களுடைய கல்யாணம் - லண்டனில் இருக்கையில் அவர் கேள்வியுற்ற சமாசாரங்கள்... மரணப்படுக்கையில் இருக்கும் தந்தையிடம் சீதா பேசிய பேச்சு... இன்னும் எவ்வளவு எவ்வளவோ!

தம் கண்களிலிருந்து நீர் பெருகுவதைத் திடீரென்று உணர்ந்தார் நாதன். சிந்தனை மேகங்கள் உடைந்து பெருகிய மழை அவரையும் மீறி அவரை நனைத்துவிட்டது. அவரே தம் நிலையைக் கண்டு வெட்கிப் போனார். கைக்குட்டையால் முகத்தை நன்றாகத் துடைத்துக் கொண்ட

அவர் எழுந்து பழையபடி வீட்டை நோக்கி நடக்கலானார். எதற்காகக் கிளாஸ் ஹவுஸுக்கு வந்தோம் என்ற கேள்விகூட அவர் மனத்துள் எழவில்லை.

இப்போது ஹால் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்தது. உள்ளே இருந்த சில அபூர்வமான பொம்மைகள் ஹாலில் காட்சி அளித்தன. ஒரு கணம் அயர்ந்துபோன நாதன், மறுகணமே இதெல்லாம் நாளைக்கு வரப்போகும் ஸ்ரீதருக்காக இருக்கக் கூடாதா என்று ஏங்கினார். அதே சமயத்தில், ஸ்ரீதர் இப்போது எப்படி இருப்பான் என்ற கேள்வியும் உதித்தது.

அவர் சமீப காலத்தில் ஸ்ரீதரைப் பார்த்ததில்லை. கற்பகத்தின் ஒன்றுவிட்ட அண்ணாவின் ஏழு பிள்ளைகளில் ஒரு பிள்ளை அவன். கற்பகம் இறந்துபோன பிறகு இரண்டு குடும்பங்களுக்கும் கடிதத் தொடர்புகூட இல்லை. இதுவரையில் எந்தவிதமான விபரீதச் செய்தியும் வராததனால், ஸ்ரீதருடைய தகப்பனாரும் தாயாரும் சௌக்கியமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் ஊகித்துக்கொண்டார். ஸ்ரீதருடைய மற்றச் சகோதரர்களைப் பற்றி அவருடைய சிந்தனை ஓடவில்லை. இதற்குக் காரணம் என்ன? ஸ்ரீதருடைய வயசுதானா?

திடீரென்று, "அப்பா!" என்று அழைத்துக் கொண்டே ராதிகா ஹாலுக்கு வந்தாள். நாதன் ஏறிட்டுப் பார்த்தார். பெண்ணின் அலங்காரமே அவரைத் திக்கு முக்காடச் செய்தது. இரட்டைப் பின்னலையே பார்த்திருந்த கண்கள் அவளுடைய நவநாகரிகக் கொண்டை அலங்காரத்தைக் கண்டு அயர்ந்தன. கருவானில் அங்கங்கே நட்சத்திரங்கள் தலைநீட்டி ஒளி வீசுவதுபோல், கருங்கூந்தலில் வெள்ளி மணிகள் பிரகாசித்தன. உடம்போடு ஒட்டிய ஜார்ஜெட் புடைவையும் அதன் பச்சை நிறத்துக்கு ஏற்ற பச்சைச் சோளியும் அவரைப் பிரமையில் ஆழ்த்தின.



"என்ன ராதி?"

"ஏழு அடிக்கப் போகிறது!"

"அடிக்கட்டும்!"

"இன்றைய டின்னருக்கு என்ன என்ன பண்ணச் சொல்லியிருக்கிறேன் தெரியுமா?"

"தெரியாது."

"தேனில் பைன் ஆப்பிளைப் போட்டால் எப்படி இருக்கும் அப்பா?"

"நான் சாப்பிட்டதில்லை." நாதன் மனம் அலுத்துக் கொண்டார்.

"ரொம்பப் பிரமாதமாக இருக்கும். அதுவும் 'லிம்ஸ்பார்க்' தேன். அதிலே பைன் ஆப்பிளைத் துண்டு துண்டாக நறுக்கிப் போட்டிருக்கிறேன். கொஞ்சம் திராட்சைப் பழங்களையும் தூவியிருக்கிறேன். கண்ணனுக்குத் தேன் என்றால் உசிர்."

பெண்ணின் ஆரவாரம் குழந்தையின் ஆரவாரமாகத் தோன்றினாலும் நாதனால் தம் கோபத்தை அடக்க முடியவில்லை.

"டின்னர் என்றால், கல்யாண விருந்து மாதிரி இருக்க வேண்டுமா, ராதி?"

"ஏன் இருக்கக் கூடாது? கண்ணனும் நாமுமாகச் சேர்ந்து சாப்பிட்டு எத்தனை வருஷங்கள் ஆகின்றன? இன்றைக்கு அவன் வருகிறான், ரொம்பக் காலத்துக்கு அப்புறம்."

"போன வாரங்கூடச் சாப்பிட்டான்."

"அது உங்களுடன்; நான் இல்லாதபோது!" என்ற ராதிகா போர்ட்டிகோ பக்கமாக நகர்ந்தாள்.

''ராதி!''

''என்ன அப்பா?''

''உனக்கு ஸ்ரீதரை நினைவு இருக்கிறதா?''

''இல்லை. கொஞ்சம் இருங்கள்; கண்ணன் வருகிறானா என்று பார்க்கிறேன்.''

''உன் மாமா பிள்ளையை ஞாபகம் இல்லையா?''

''இல்லை. நீங்கள் ஏன் ஞாபகப்படுத்தப் பார்க்கிறீர்கள்? கண்ணனுக்குத் தக்காளி ஸூப் ரொம்பப் பிடிக்கும். முன்னெல்லாம் ஸ்பூனில் சாப்பிடாமல் தம்ளரிலே குடிப்பான். ஸூப்பும் தயார் பண்ணச் சொல்லியிருக்கிறேன்.''

சொல்லிவிட்டு ராதிகா போர்ட்டிகோவில் இறங்கி நடக்கலானாள். நாதன் அவளையே பார்த்தவராய் உட்கார்ந்தார். இனிமேல் எந்தத் தெய்வத்தாலும் ராதிகாவின் மனத்தை மாற்ற முடியாது என்ற எண்ணம் அவருள் எழுந்தது.

கடிகாரம் ஏழரை, எட்டு, எட்டரை என்று ஒலித்துக்கொண்டே ஓடியது.

''அப்பா!''

''ராதி!''

''மணி எட்டே முக்கால்.''

''ஆமாம், அம்மா.''

''கண்ணனை இன்னும் காணோமே, அப்பா?''

''காணோம்.''

''அப்பு ஒருவேளை தகவலே கொடுக்காமல் இருந்திருப்பானோ?''

''தெரியவில்லை.''



''இப்போது என்ன அப்பா செய்வது?''

''நீயே சொல்லு.''

''எனக்கு ஒன்றுமே தோன்ற மாட்டேன் என்கிறதே!''

''நாம் சாப்பிடலாம்.''

''கூடாது, அப்பா. கண்ணன் நாம் சாப்பிடுகிற போதோ அல்லது சாப்பிட்ட அப்புறமோ வந்து விட்டால்?''

''அவன் தனியாகச் சாப்பிடட்டும்.''

''அவனைத் தனியாகச் சாப்பிடவா அழைத்திருக்கிறோம்?''

''ராதி, என்னையும் உன்னுடன் இதில் சேர்த்துக் கொள்ளாதே. நான் அழைக்கவில்லை.''

திடீரென்று ராதிகாவுக்கு ஆத்திரம் வந்தது. ''எம்ப்பா பிரித்துப் பேசுகிறீர்கள்? கண்ணன் என்ன குற்றம் செய்தான்?''

'உன் மனசைக் கொள்ளை அடித்த குற்றம்' என்று தம்முள் நினைத்துக்கொண்ட நாதன், ''அவன் என்ன குற்றம் செய்தான் என்று நான் இப்போது உன்னுடன் பேசுவதில் ஒரு புண்ணியமும் இல்லை, ராதி. இப்போது தீர்மானம் செய்ய வேண்டியது நான் சாப்பிட உட்காருவதா இல்லையா என்றுதான். மணியைப் பார். ஒன்பது அடிக்க ஐந்து நிமிஷம் இருக்கின்றன!'' என்றார்.

''ஒன்பது அடிக்கட்டும்.''

''ரொம்ப சரி.''

''அதற்குள்ளே கண்ணன் வரவில்லையானால்....?'' ராதிகா தொடரவில்லை; அப்பாவின் முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டுப் போர்ட்டிகோ பக்கமாகத் திரும்பினாள்.

அவரும் அதே திசையில் கண்களைச் செலுத்திவிட்டு, ''வரவில்லையானால்?'' என்று கேட்டார்.

''நீங்கள் மட்டும் சாப்பிடுங்கள்.''

''நீ?''

''கண்ணன் வருகிற வரைக்கும் காத்திருக்கிறேன்.''

''இப்போது யார் ராதி பிரித்துப் பேசுகிறார்கள்?''

''எனக்குத் தெரியாது!'' என்றாள் ராதிகா வெடுக்கென்று.

ஒன்பதும் அடித்தது.

''நான் சாப்பிடப் போகிறேன், ராதி!'' என்று எழுந்த நாதன் அவளுடைய முகத்தைப் பார்த்தார். கண்கள் கனத்துப் பொங்கின. அவளால் அவரை எதிட்டும் பார்க்க முடியவில்லை.

''இதற்கெல்லாம் நீ வருத்தப்பட்டுப் பிரயோசனம் இல்லை, ராதிகா'' என்றார் நாதன். அவருடைய குரலில் பச்சாத்தாபமும் பரிவும் ஒலித்தன. ஆனால் உள்ளூற மனம் நிம்மதி பெற்று விட்டதுபோன்ற உணர்வும் உண்டாயிற்று.

''கண்ணன் இன்றைக்குச் சாப்பிட வரவில்லையே என்று மட்டுந்தான் வருத்தப்படுகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா, அப்பா?''

''பின்?''

''இனிமேல் என்றென்றைக்கும் அவன் நம் வீட்டுக்கு, நான் இங்கே இருக்கிறவரை வரமாட்டான்; முன்மாதிரி பழகமாட்டான். இதையெல்லாம் நினைத்துத்தான் வருத்தப்படுகிறேன்.''

''இப்படி ஒரு முடிவு அவன் மனசிலே உண்டாகிவிட்டால் அப்புறம் அதை நினைத்து நீ இனிமேல் வருத்தப்படுவது அறிவீனம், அம்மா. சுத்த முட்டாள்தனம். வா, சாப்பிடலாம்.''

அழுகையினூடே கலந்த ஆத்திரத்தில் ராதிகா அப்பாவின் பேச்சையே காதில் போட்டுக் கொள்ளாமல், ''ஆனால் இதற்கெல்லாம் காரணம் நீங்கள், அப்பா;



நீங்கள்தான்! பாம்பை அடிப்பதுபோல அன்றைக்கு அவனை அடித்தீர்கள். உங்களைப் பார்க்கிறபோதெல்லாம், உங்களைப்பற்றி நினைக்கிறபோதெல்லாம் அவன் உடம்பிலே இருக்கிற வடுக்கள் அவனுக்கு வலிக்கும். அந்த வலி இருக்கிறபோது....''

''எனக்கு மட்டும் அதே வலி இல்லை என்று நினைக்காதே, ராதிகா! வா. இரண்டு பேருமாகச் சாப்பிடுவோம்.''

''உங்களுடைய மனச் சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்; அன்றைக்கு நீங்கள் செய்தது நியாயமா?''

நிமிரென்று நாதனுக்கும் கோபம் வந்தது. ஆனால் அவர் தம்மைத் தாமே சாந்தப்படுத்திக் கொண்டார்.

''எப்போதோ நடந்த கதையை இப்போது ஏன் ராதி, ஞாபகப்படுத்துகிறாய்?''

''ஏன், மனச்சாட்சி உறுத்துகிறதோ?''

''என்கிட்டே இப்படியெல்லாம் பேச உன்னால் எப்படி முடிகிறது?''

''என் மனசிலே நீங்கள் மூட்டிவிட்ட ஆத்திரந்தான்.''

''நான் என்ன அம்மா செய்தேன், இப்போது?''

''இப்போது ஒன்றும் செய்யவில்லை என்று சந்தோஷப்படுகிறீர்களா? கண்ணனுடைய மனசில் வைராக்கியத்தை வளரச் செய்தவரே நீங்கள்தாம்.''

''அது நம் இரண்டு பேரையும் பாதிக்காத வரைக்கும் நல்லதுதானே?''

''ஓகோ!'' - உட்கார்ந்திருந்த ராதிகா எழுந்து அவர்முன் வந்து நின்றாள். கைக்குட்டையால் இரண்டு கண்களையும் துடைத்துக்கொண்டாள். பிறகு, ''அப்பா, என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்; பாதிக்கவில்லையா?'' என்றாள்.

நாதனும் எழுந்தார்.

''இதைப்பற்றி ஆராய இப்போது எனக்கு விருப்பம் இல்லை. நீ சாப்பிடப் போகிறாயா இல்லையா?''

''இல்லை.''

''நான் சாப்பிடப் போகிறேன்.''

''அதை ஏன் என்னிடம் சொல்ல வேணும்?''

''ஏன் ராதி, கோபிச்சுக்கிறே?'' நாதனால் தாங்க முடியவில்லை. பெண் கோபத்தில் பேசவில்லை; தாபத்தில் பேசுகிறாள். தாபமே கோபமாகத் தெரிகிறது.

ராதிகா தந்தையின் நெகிழ்ச்சியை உணர்ந்து கொண்டாள்.

''நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள், அப்பா! நான் பத்துமணி வரைக்கும் பார்க்கப்போகிறேன்.''

''அப்போ நானும் காத்திருக்கிறேன், ராதி!''

''வேண்டாம். பத்து மணிக்குள்ளே வரல்லைன்னா, அப்புறமும் நீங்கள் தனியாகத்தானே சாப்பிடணும்? அதை இப்போதே செய்யுங்கள்!''

''என்ன சொல்றே, ராதி?''

''கண்ணன் வரல்லைன்னா நான் இன்னிக்கு ராத்திரி சாப்பிடவே போறதில்லை.''

''இது என்ன அசட்டுப் பிடிவாதம்?''

''பிடிவாதம் இல்லை, அப்பா, தீர்மானம். நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள்.''

நாதன் மெதுவாகச் சாப்பிடுகிற அறையை நோக்கி நடந்தார்.

அன்று இரவு ராதிகா சாப்பிடவில்லை.

## 12

# அழைப்பின் எதிரொலி

கண்ணன் மனம் குழம்பிப் போனான். ராதிகா அவனை அன்று இரவு சாப்பிட வரும்படி சொல்லி அனுப்பியிருக்கிறாள். என்ன செய்வது? அழைப்பை ஏற்றுக் கொள்ளுவதா? அப்புவையே பார்த்தவனாய் நின்றான்.

''நெத்தியிலே ஏதாவது சினிமாக் காட்சி ஓடறதா? உன்னைத்தான் சாப்பிட வரச்சொல்லியிருக்கிறார்கள்!'' என்றான் அப்பு.

''யார் சொன்னார்கள்?''

''யார் சொல்லியிருப்பா? உன் மாமா நாதனா? அவர் உன்னை இன்வைட் பண்ணணும்னா ராதிகா வீட்டில் இல்லைன்னு அர்த்தம்!''

''அப்போ?''

''அப்போ என்ன அப்பேபா? எல்லாம் ராதிகா செய்யற கூத்துத்தான். அவளுடைய நச்சரிப்பைத் தாள முடியாமல் இப்படியே போனால் ஏதாவது விபரீதம் உண்டாகிவிடுமோ என்கிற பயத்திலே அவர் தலையை ஆட்டியிருக்கிறார். போர்ட்டிகோவிலே நின்று உன்னை அவர் எதிர்கொண்டு அழைப்பார்னு எதிர்பார்க்காதே!''

''என்ன விபரீதம், அப்பு?''

''நான் சொல்லித்தான் தெரியணுமா? ராதிகா இன்னும் உன்னைப் பார்க்கவில்லை. உன்னுடன் பேசவில்லை.

அவளுக்கும் உனக்கும் குறுக்கே நந்திகேசுவரர் மாதிரி அப்பாதான் இருக்கிறார் என்பதை அவள் புரிந்து கொண்டுவிட்டாள். இனிமேல் கெஞ்சியும் அழுதும் புண்ணியம் இல்லை என்று நினைத்து அவள் எதிர்த்துப் போராடவே ஆரம்பித்துவிட்டாள்.''

கண்ணன் அப்புவையே பார்த்தான். பிறகு, ''அப்பு, நீ என் இடத்தில் இருந்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டான்.

''அப்புவை யாரும் - அதாவது எந்த வயசுப் பொண்ணும் - விருந்து சாப்பிட அழைக்கமாட்டாள். கடை கண்ணிகளிலிருந்து சாமான்கள் வாங்கி வரத்தான் எல்லாப் பெண்களும் விரட்டுவார்கள்!''

''விளையாடாதே, அப்பு! சொல்லு.''

''அப்பு சொல்றதினாலே உன் முடிவு மாறிடப் போறதா?''

''நான் இன்னும் முடிவையே நினைச்சுப் பார்க்கலே!''

''நீ ராதிகாவைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு?''

''இதென்ன கேள்வி? பல யுகங்கள் ஆச்சு!''

''உள்ளூற உனக்கு அவளைப் பார்க்கணும், அவளுடன் பேசணும், சிரிக்கணும் என்றெல்லாம் ஆசை இருக்கு; இல்லியா?''

''விஷயத்தைச் சொல்லு, அப்பு.''

''அப்பு கேட்ட கேள்விக்குப் பதில் வரட்டும்.''

''நானும் அவளும் வளர்ந்த கதைதான் உனக்குத் தெரியுமே!''

''இப்போதைய கதையைச் சொல்லு.''

''அவளைப் பார்க்கணும், அவளுடன் பேசணும் என்றெல்லாம் ஆசையில்லாமல் போயிடுமா?''



''அப்போ ஆசையைத் தீர்த்துக்கொள்.''

''தீர்த்துக்கொண்டால்....''

''என்ன ஆகும்? மறுபடியும் கைத்தடிப் பிரயோகம் நடக்குமோன்னு பயப்படறியா?''

''சீச்சீ!''

''பின்?''

கண்ணன் பதில் சொல்லாமல் எங்கேயோ பார்த்தான். ராதிகா அவனை மறக்கவில்லை என்பது உறுதி. ஆனாலும் நிதர்சன வாழ்க்கையில் இனிமேல் அவன் அவளைச் சந்திப்பதனாலும், அவளுடன் பழகுவதனாலும் எத்தனையோ அனர்த்தங்கள் உண்டாகலாம். அவளைப் பெற்றெடுத்த தாயைப் போலத்தான் ராதிகாவும். தந்தையையே லட்சியம் செய்யாமல் நினைத்ததைச் சாதித்துக்கொண்டு விடுவாள். அவளுடைய முடிவு என்னதான் அவளைப் பொறுத்தவரை திருப்தியாக இருக்குமேயானாலும், நாதனுடைய உள்ளத்தில் ஏமாற்றமும் வேதனையும் உண்டாகிவிடும். அவன் இன்றைக்குச் சாப்பாட்டுக்குச் சென்றால், நாளைக்கு இன்னொரு காரியமாகப் போக நேரிடும். அப்புறம் ராதிகாவைப் பார்ப்பது தினசரிப் பழக்கங்களில் ஒன்றுதான்.

திடீரென்று அப்புவின் குரல் கேட்டது: ''அப்பு கிளம்பறான், கண்ணா. நாளைக்கு மேட்டுப்பாளையம் வரைக்கும் உன் ஜீப்பில் வர்றான்.''

திடுக்கிட்ட கண்ணன் அப்புவை ஏறிட்டுப் பார்த்தான்.

''நான் இன்னும் முடிவே சொல்லவில்லையே!''

''அதைத் தெரிந்துகொள்ள அப்பு ஆசைப்படவில்லை. டா! டா!''

அப்பு சென்றபின் கண்ணன் வீட்டை நோக்கி நடந்தான். காற்றுடன் யூகலிப்டஸின் மணம் இழைந்து வந்தது. ஆள் அரவமற்ற குன்னூர்ப் பாதையிலிருந்து சாரிங் கிராஸ் முனைக்கு வந்தபோது, நாதனைப் பார்க்கச் செல்லலாமா என்ற கேள்வி எழுந்தது. அடுத்தகணமே கேள்வி அசம்பாவிதமாக ஒலித்தது. நாதனை இப்போது எதற்காகப் பார்க்க வேண்டும்? அப்பு கூறிய சங்கதி அவனுள் சலனத்தை உண்டாக்கிவிட்டது என்ற காரணத்தினால் எதைச் செய்து மன நிம்மதியைப் பெறுவது என்று அவன் கண்மூடித்தனமாக நடந்து கொள்ளக்கூடாது. நாதனைப் பார்க்க என்றே அவன் சென்றாலும், ராதிகாவைப் பார்க்கத்தான் வந்திருக்கிறான் என்று அவர் நினைத்துக் கொள்ளுவார். அவர் கேளாமலே அவன் அவருக்குக் கொடுக்காமல் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிடும்.

நடக்க நடக்க ஒரே ஓர் எண்ணந்தான் அவனுள் நிலைத்து நின்றது. நாதனுடைய திருப்தியும் மன நிம்மதியுமே கண்ணனுக்கு முக்கியம். பணமும் செல்வாக்கும் இருந்தும் வாழ்க்கையில் சுகத்தைக் காணாதவர் அவர். அவருடைய மனத்தில் புதிதாக இன்னொரு வலி பிறந்துவிடக் கூடாது.

வீட்டை அடைந்தபோது மணி ஏழரை. அழைப்பை ஏற்றுக்கொண் டிருந்தால் இந்த நேரத்தில் அவன் ராதிகாவுடன் பேசிக்கொண்டிருப்பான். ஆனால் அப்படி இல்லையே என்ற எண்ணம் உண்டானபோது மனத்தில் அவனையும் மீறித் தாபம் பிறந்தது. அந்தத் தாபத்தினூடே பழைய சம்பவம் ஒன்றும் நினைவில் மோதியது.



ஓர் இரவு.

ராதிகாவும் கண்ணனும் சாப்பிட உட்கார்ந்தார்கள். அன்று ஓர் அவசர வேலை காரணமாக நாதன் கோயம்புத்தூர் போயிருந்தார். வழக்கம்போலப் பாலம்மா எல்லாவற்றையும் மேஜைமேல் வைத்துப் போய்விட்டாள்.

மோருஞ்சாதம் சாப்பிடுகையில்தான் ராதிகா, தன் கலத்தில் வடுமாங்காய் இல்லாததைக் கவனித்தாள். அடுத்த கணம் அவளுடைய கண் கண்ணனுடைய கலத்தைப் பார்த்தது. அங்கே பாதி கடித்த ஊறுகாய் இருந்தது.

''கண்ணா, எல்லா மாங்காயையும் நீயே போட்டுக் கொண்டு விட்டாயா?''

''பாலம்மா ஒரு மாங்காய்தான் கொண்டு வச்சா.''

அடுத்த விநாடி ராதிகா மின்சாரப் பொத்தானை அழுத்தினாள். பாலம்மா வந்ததும், ''ஏன் மாவடு ஒண்ணே ஒண்ணுதான் கொண்டு வந்தே?'' என்று கேட்டாள்.

''அதுதான் கடைசி மாங்காய்.''

''நாங்க ரெண்டு பேர் இருக்கிறோமே, அதை ரெண்டு துண்டாக்கி வைக்கிறதுதானே?''

''அப்படிச் செய்யணும்னு எனக்குத் தோணலை, ராதி.''

''சரி, சரி.''

பாலம்மாவின் தலை மறைந்ததும், ''என்னை மன்னிச்சுடு, ராதி!'' என்றான் கண்ணன்.

''ஏதுக்கு?''

''கடைசி மாங்காயை நான் போட்டுக் கொண்டதற்கு.''

ராதிகா சிரித்தாள். அவளுடைய கண்கள் அவனையும் வடுமாங்காயையும் மாறி மாறிப் பார்த்தன.

என்ன பேசுவது என்று தெரியாமல் தவித்த கண்ணன் கடைசியில், "உனக்கு வடுமாங்காய்னா உசிர்னு எனக்குத் தெரியும். ஏதோ ஞாபகத்திலே அதை என் தட்டிலே போட்டுண்டேன்" என்றான்.

"நான் ஏன் சிரிக்கிறேன்னு சொல்லு, கண்ணா?"

"தெரியலே, ராதி!"

"நான் சொல்லட்டுமா?"

"சொல்லு."

"கடைசி மாங்காய் உன் கலத்திலேதானே இருக்கு?"

"ஆமாம்."

"அதனாலே நீ என்ன நினைச்சுண்டிருக்கே? 'நான் கடைசி மாங்காயைத் திங்கப் போறேன்' னுதானே?"

"நானும் திங்கலை, ராதி. எறிந்துவிடறேன்."

"எறிஞ்சா அப்புறம் உன் மனசு வேதனைப்படுமே!" ராதிகா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

"அப்போ என்ன செய்யச் சொல்றே?"

"நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்."

"அப்போ!"

"நீதான் பாதி கடிச்சாச்சே!"

"ஆமாம்."

"பாக்கிப் பாதியை நான் சாப்பிடப்போறேன்!"

"என்ன ராதி பைத்தியம் மாதிரி பேசறே? இது எச்சில்."

"உன்னுடைய எச்சில்தானே?"

"என்னுடையது என்கிறதாலே அது எச்சிலா இல்லாமப் போயிடுமா?"



"எனக்கு எச்சில்னு பட்டால்தானே எச்சில்?" சொன்னவள் அடுத்த கணம் அந்த மாங்காயை எடுத்தாள்.

"என்ன ராதி!" என்று அலறிக்கொண்டான் கண்ணன்.

"அன்னிக்கு உன் கர்சீப்புக்குள்ளே கொய்யாக் காயை வச்சு, கடிச்சுட்டு எடுத்துக் கொடுத்தாயே அது மட்டும் எச்சில் இல்லியா?"

"அது காக்காய்க் கடி."

"இது மாங்காய்க் கடி. போ கண்ணா. உன் எச்சில் என் எச்சில்னு நீயே என்கிட்டே பேசறது நன்னாவே இல்லை."

"அப்பா பார்த்தால் பளார்னு அறைவார்."

"அப்பா சாப்பிட்ட இலையிலே அம்மா சாப்பிடுவாள்னு குமார் என்கிட்டே ஒரு தடவை சொல்லியிருக்கான். அதை நீ பார்த்திருக்கியா?"

"எனக்குத் தெரியாது" என்றான் கண்ணன்.

"கண்ணா, ஏன் உன் மூஞ்சி இப்படி மாறிவிட்டது? உன் மாங்காயை நான் எடுத்துக் கொண்டுவிட்டேன் என்றா?" என்று கேட்டாள் ராதிகா.

"போ, ராதி! நீ செய்தது எனக்குப் பிடிக்கவே இல்லை."

"கோபிச்சுக்காதே, கண்ணா!"

நினைவு அலைகளின் வேகம் குறைந்தபோது, அவற்றின் தன்மையில் மெய்ம்மறந்து போயிருந்த கண்ணன் விழித்துக்கொண்டான். அவனை அறியாமல் பெருகிய கண்ணீரைக் கை தானாகத் துடைத்துக் கொண்டது.

மெதுவாக எழுந்தான். கடிகாரத்தைப் பார்த்தான். எட்டு அடித்து ஐந்து நிமிஷங்கள்.

இப்போது ராதிகாவும் நாதனும் சாப்பிட உட்கார்ந்திருப்பார்கள். இருவருடைய கலங்களிலும் மாங்காய் இருக்கும்!

**அ**ன்று இரவு கண்ணனுக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. பழைய சிந்தனைகள் மனத்தை உலுக்க உலுக்க அவன் செய்வதறியாமல் வீட்டினுள்ளேயே நடமாடினான். கம்பெனி பைல்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தான். அவற்றிலும் மனம் செல்ல வில்லை. மறுநாள் வழக்கத்துக்கு இன்னும் முன்னமே எழுந்திருக்க வேண்டும் என்ற நினைவு வந்தது. இந்த மாதிரி சமயங்களில் அவன் சீக்கிரமே படுக்கையைப் போட்டுவிடுவான். ஆனால் இன்று படுக்கையைப் போடக்கூடக் கை ஓடவில்லை.

மறுநாள் கண் விழித்தபோது கண்கள் கனத்தன. தூக்கம் இன்மையால் நெற்றி நரம்புகள் வலித்தன.

பச்சைத் தண்ணீரைத் தொட்டபோதே பனிக்கட்டியைத் தொட்டாற்போலக் கை குளிரில் நடுங்கி வெடவெடத்தது. என்றும் இல்லாமல் ஏன் இன்றைக்குக் குளிர் இப்படித் தெரிகிறது என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். கேள்வியினூடே அப்புவின் ஞாபகமும் உண்டாயிற்று. முற்றும் துறந்த முனிவர் களைக்கூடக் குளிரும் உஷ்ணமும் பாதிக்கும். ஆனால் அப்புவை எதுவும் சீண்டாது. பனியன்கூட இல்லாமல் ஒரு சாதாரண ஷர்ட்டைப் போட்டுக்கொண்டு, ஜனவரிக் குளிரில் தொட்டபெட்டா சிகரத்தில் நிற்கிறவன் அவன். "இப்படி நிற்க எப்படியடா உன்னால் முடிகிறது?" என்று யாராவது கேட்டால், "ஆடுமாடுகளுக்குக் கம்பளிப் போர்வையா இருக்கு?" என்று அப்பு பதில் கேள்வி உதிர்த்துவிடுவான்.

ஆனால் உண்மையான காரணம் இப்போது கண்ணனுக்கு விளங்கியது. அப்புவுக்கு உடம்பெல்லாம் உள்ளமாக இருக்கிறது. அந்த உள்ளத்தில் அவனைத்தவிர மற்ற எல்லாருமே இருக்கிறார்கள். அவன் தன்னைப் பற்றியே நினைத்துக் கொள்ளுவதில்லை.



கண்ணனுக்கும் அப்புவைப் போல வாழ்க்கையை நடத்த ஆசைதான். இந்தமாதிரி ஓர் ஆசை இருந்தாலே போதும். அவனால் அப்புவைப்போல வாழ முடியாது என்ற உண்மையும் மறுகணம் எழுந்தது. அப்புவின் உடலெல்லாம் வியாபித்திருக்கும் உள்ளத்தில் ஆசைக்கே இடம் இல்லை. ஆனால் கண்ணன் மற்ற எல்லா ஆசைகளையும் மறக்க, இன்னோர் ஆசையை அப்புவைப் போல வாழவேண்டும் என்ற ஆசையை வைத்துக் கொள்ளுகிறான்!

பல் தேய்த்து, முகத்தைக் கழுவிவிட்டு உள்ளே வருகையில் அவனுடைய உள்ளத்தில் நெளியும் ஆசை களெல்லாம் தாறுமாறாக நினைவுக்கு வந்தன. எத்தனை எத்தனை ஆசைகள்! பெற்ற தாயைப் பார்த்து அவளுடனும் தகப்பனாருடனும் வாழ வேண்டும் என்ற ஆசை. மகாலிங்கத்தினிடம் இன்னும் நல்ல பெயர் வாங்கி, உதவி மானேஜர் பதவியிலிருந்து மானேஜர் பதவிக்கு உயர வேண்டும் என்ற ஆசை. நல்ல உடை உடுத்து, நான்கு பேர்களிடம் அளவளாவ வேண்டும் என்ற விருப்பம்!

இவை எல்லாவற்றையும்விட, ராதிகாவைப் பார்க்க வேண்டும், சதா சர்வகாலமும் அவளருகேயே இருந்து, அவளுடன் பேசிக்கொண்டே காலத்தைக் கழிக்க வேண்டும் என்ற தீராத ஆசை.

கண்ணனுடைய ஆசைகள், நிறைவேறக் கூடியவையோ என்னவோ, அதை நினைத்துப் பார்க்காமலே மனம் ஆசைப்படுகிறது. இப்படி மனமே எதிரியாக இருக்கும்போது அவன் எப்படி அப்புவைப் போல வாழ முடியும்?

கண்ணன் காபியைக் குடித்துவிட்டு வாசலுக்கு வந்தான். மேட்டுப்பாளையத்துக்கு ரெயில் வருகிறது. ஸ்ரீதரை வரவேற்கச் செல்லவேண்டும். ஊட்டியிலிருந்து எட்டு மணிக்காவது புறப்படவேண்டும்.

அவன் ஜீப்புக்காகக் காத்திருந்தான்.

ஏழேகால் மணிக்கு ஜீப் வரவில்லை. ஆனால் தூரத்தில் ஒரு கார் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. காம்பவுண்டு வாசலில் நின்றுகொண்டிருந்த கண்ணன் காரை அடையாளம் புரிந்துகொண்டதுமே திடுக்கிட்டான்! நாதனுடைய கார் எதற்காக அவனுடைய வீட்டுக்கு வருகிறது? என்றும் இல்லாத பயம் அவனுள் எழுந்தது.

பாதையின் ஒரு வளைவில் கார் மறைந்து மீண்டும் தலைதூக்கியது. அது நெருங்க நெருங்க, அதை ஓட்டிக் கொண்டு வருகிறவளைப் பார்க்கப் பார்க்க மனமே உணர்ச்சிப் பெருக்கில் ஒரு கணம் மரத்துப் போயிற்று.

அவனுடைய திகைப்பும் பயமும் அடங்குவதற்குள் அவன் அருகே கார் நின்றது. தன்னையும் மீறிப் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அவன், காரின் கதவைத் திறந்தான். என்னவெல்லாமோ சொல்லி அழைக்க உள்ளம் கேவினாலும் நாவில் ஒலி பிறக்கவேயில்லை.

''கண்ணா, நீதான் என்னை அலட்சியப்படுத்தி விட்டாய். ஆனால் நான் என்றைக்கும் ஒரே மாதிரிதான்'' என்று சொல்லிக்கொண்டே ராதிகா காரிலிருந்து இறங்கினாள்.

# 13

## முதல் சந்திப்பு

தன்னையே பறி கொடுத்தவனைப்போல நின்ற கண்ணன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு ராதிகாவைப் பார்த்தான்.

''ராதி!''

''ஆமாம், ராதிதான் கண்ணா! உன்னுடைய பழைய ராதியேதான்! நீ என்னை இப்படி அழைத்து எத்தனை வருஷ காலமாகிறது!''

''உள்ளே வா, ராதி. உள்ளே வா.''

சொல்லிவிட்டுக் கண்ணன் திரும்பி நடந்தான். இரண்டு அடி பின்தொடர்ந்த ராதிகா திடீரென்று, ''கண்ணா!'' என்று அழைத்தாள்.

கண்ணன் நின்றான். ''என்ன?''

''ரெட் ஹவுஸுக்குப் போகலாம், வா.''

''என்ன சொல்றே, ராதி?''

''நம்ம வீட்டுக்குப் போகலாம் என்கிறேன்.''

''இப்பவா?''

''ஆமாம், அப்பாவுக்குத் தெரியும், நான் இங்கே உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன் என்று.''

''அதற்கில்லை.....'' கண்ணன் இழுத்தான்.

''அப்பா மனசுகூட மாறிவிட்டது. நேத்து ராத்திரி நான் சாப்பிடாமல் படுத்துக்கொண்டது அவர் மனசை என்னவோ செய்திருக்க வேணும். கார்த்தாலே உன்னைப் பார்க்கப் போறேன்னு சொன்னப்போ வாயே திறக்கலை. ரெண்டாம் தடவையாக் கேட்டப்போ, ''உன் இஷ்டம் போலச் செய்'னு சொல்லுவார்னு எதிர்பார்த்தேன். என்ன சொன்னார் தெரியுமா?''

''தெரியாது.''

''கையோடே கண்ணனையும் அழைச்சுண்டு வான்னார்.''

அவள் பேசும்போது கண்ணன் அவளுடைய உதடுகளின் அவசரத்தையும், புருவங்களின் வளைவு களையும் பார்த்து நின்றான்.

மேலே ஏதோ பேச வாயெடுத்தவள் அவன் தன்னைக் கவனிப்பதை உணர்ந்ததும், சிரித்துக்கொண்டே கேட்டாள்: ''என்ன அப்படிப் பார்க்கிறே?''

''ராதி, உன்னைப் பார்த்து எத்தனையோ யுகங்கள் ஆனமாதிரி தோணுகிறது. ஆனா உன்கிட்டே ஒரு மாற்றமும் எனக்குத் தெரியலே.''

ராதிகா கலகலவென்று சிரித்தாள்; ''என்ன கண்ணா உளர்றே? நான் இன்னும் சின்னப் பெண்ணாகவா இருக்கிறேன்?''

''உயரமாக இருக்கிறாய். வயசுக்கு ஏற்ற பருமனும் இருக்கிறது. ஆனால்........''

''ஆனால்?''

''உன் முகம், அதில் உதடுகளும் கண்களும் விளையாடும் விளையாட்டுக்கள் எல்லாம் இன்னும் மாறாமல் அப்படியே இருக்கின்றன. அதுசரி, இப்போ உன் முன்கோபம் எப்படி இருக்கிறது?''



''முன்கோபமா? வா, ரெட்ஹவுஸுக்குப் போனதும் நீயே தெரிந்துகொள்ளுவாய்.''

''நான் இப்போ வருவதற்கில்லை.''

''ஏன்னு தெரியும். மேட்டுப்பாளையம் போகப் போகிறாய். ஸ்ரீதரை அழைத்துக்கொண்டு வரப்போகிறாய்.''

''உனக்கு யார் சொன்னார்கள்?''

''யார் சொல்லியிருப்பார்கள்?''

''அப்புதானே?''

''அப்புவேதான்.''

''அவன் இன்னும் என்ன என்ன சொன்னான்?''

ராதிகாவின் முகத்தில் திடீரென்று முன்கோபத்தின் அறிகுறிகள் உதயமாயின.

''கண்ணா, வீட்டு வாசலிலேயே எல்லாக் கேள்வி களையும் கேட்டு என்னை அனுப்பிவிடலாம்னு பார்க்கிறாயா? இப்போ முதலில் காரில் ஏறு. அப்புறம் நீ கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்கிறேன்'' என்றாள் அவள்.

''கோபிச்சுக்காதே, ராதி. இன்னும் அஞ்சு நிமிஷத்திலே ஜீப் வந்துவிடும்.''

''மேட்டுப்பாளையம் வரைக்கும் வர்ற ஸ்ரீதருக்கு அங்கிருந்து ஊட்டிக்கு வர வழி தெரியாதா?''

''மகாலிங்கம் நானே போகணும்னு சொல்லி யிருக்கார்.''

''அப்புவும் உன்கூட வர்றதாக இருக்கானே; அவன் போகட்டும். ஜீப்பில் ஏற்றி அனுப்பட்டும்.''

''இல்லை, ராதி. மகாலிங்கத்தின் குணந்தான் உனக்குத் தெரியுமே. ஸ்ரீதர் பெரிய பதவியை ஏற்க

வருகிறான். அவனுக்கு மகாலிங்கம் விரும்பியபடி மரியாதையைச் செய்யாவிட்டால்...''

''உன் வேலை போய்விடுமா? அப்படிப் போனால் போகட்டும். அது சரி, இந்த ஸ்ரீதர், என்னுடைய உன்னுவிட்ட மாமா பிள்ளைதானே?''

''என்ன, இப்படி அலட்சியமாக் கேட்டுவிட்டே?''

''அக்கறையாகக் கேட்பதற்கு எங்களுக்குள்ளே அப்படி என்ன உறவு நெருங்கியிருக்கு? நேத்திக்கு அப்பா வெங்கோபராவ் கிட்டே ரொம்பச் சுவாரசியமா விசாரிச்சுண்டிருந்தார்.....''

''இப்போ, யார் வீட்டு வாசலில் இருந்துகொண்டு பேசறா?'' என்று கேட்டான் கண்ணன்.

'களுக்' கென்று சிரித்த ராதி, ''கண்ணா, இன்னும் உன் குணம் மாறவில்லை'' என்றாள்.

''எந்தக் குணம்?''

''குத்திக் காட்டற குணம்!''

''அது குணம் அல்ல; பழக்கம்.''

''குணமோ பழக்கமோ மாறவில்லை. அப்போ நீ போய்த்தான் ஆகவேண்டுமா?''

''கண்டிப்பாக.''

''அப்படியானால் சாப்பாட்டுக்கு வந்துவிடு.''

''பார்க்கிறேன்.''

''பார்க்கிறேன் என்ன, பார்க்கிறேன்? நல்ல வடு மாங்காய் வந்திருக்கு, உனக்குப் பிடிச்ச மைசூர் ரசம் வைக்கச் சொல்றேன்.''

கண்ணன் சிரித்தான். ''என்னுடன் சாப்பிடு என்று ஸ்ரீதர் சொன்னால்?'' என்றான்.



''ராத்திரி பார்த்துக் கொள்ளலாம்னு சொல்லிவிடு.''

''ஸ்ரீதரே சொந்தம் கொண்டாடிக்கொண்டு உன் வீட்டுக்கு வந்தால்?''

''நம் வீட்டுக்கு அவனாக வந்தால் பார்த்துக் கொள்ளலாம். இன்னிக்கு நீ சாப்பிட வரப் போகிறாய்; பாலம்மா கிட்டே பாதாம் கீர் பண்ணச் சொல்றேன்!''

''ரொம்பத் தடபுடலாக எதையும் செய்யாதே, ராதி. அப்பாவுக்குப் பிடிக்காது. உன்னிடம் நேரடியாகச் சொல்ல முடியாமல் தவிச்சுத் தவிச்சுக் கடைசியிலே என்மீ பாய்வார்.''

''அதெல்லாம் அந்தக் காலம். இப்போதெல்லா என்னைக் கண்டாலே அவருக்குப் பயம்'' என்றாள் ராதிக பிறகு காரின் கதவைத் திறந்தாள்.

''நீ இன்னும் குழந்தையாகத்தான் இருக்கிறாய்'' என் கண்ணன் கார் அருகே சென்றான்.

வண்டியை 'ஸ்டார்ட்' செய்ய இருந்தவள் திடீரென் ''கண்ணா, ஒரு சமாசாரம் தெரியுமா?'' என்று கேட்டா

''என்ன?''

''குமாருக்குப் பிரமோஷன் ஆகியிருக்கு.''

''பூ! இதுதானா?''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நாங்கள் இரண்டு பேருந்தான் அடிக்கடி லெ எழுதிக் கொள்கிறோமே! அவனைப்பத்தி இன் முக்கியமான சமாசாரம் தெரியுமா?''

ராதிகா, ''என்ன?'' என்று கேட்டாள்.

''தெரியாதா?''

''எதைப் பத்தின்னு சொன்னால்தானே?''

''அப்புறமாச் சொல்றேன். மாமாவுக்குக்கூட இன்னும் தெரியாது. குமார் ரகசியமாக இருக்கணும்னு எழுதியிருக்கிறான். உன்கிட்டே மட்டும் விவரமாகச் சொல்கிறேன். இப்போ கிளம்பு.''

''ரகசியம்னா என்கிட்டே எப்படிச் சொல்லலாம்? இரு. உன்கிட்டேயிருந்து தெரிஞ்சப்புறம் நானே குமாருக்கு எழுதறேன். எந்தமாதிரி ஆள்கிட்டே ரகசியத்தைச் சொன்னோம்னு அவன் தலையைப் பிய்ச்சிக்கட்டும்!''

''உன்கிட்டே சொல்லலைன்னா யார்கிட்டேதான் நான் சொல்ல முடியும், ராதி?''

''முகஸ்துதி பண்ற குணத்தை மட்டும் விடாதே, கண்ணா.'' ராதிகா சிரித்தாள். முல்லைப்பூப் போன்ற பற்கள் இளம் வெயிலில் மின்னின.

''குணம் இல்லை ராதி, பழக்கம்!'' என்று சிரித்தான் கண்ணன்.

அடுத்த நிமிஷம் காரும் புறப்பட்டது. எதிர்த்திசையில் அவனுக்காக ஜீப்பும் வந்துகொண்டிருந்தது.

**ஜீ**ப்பில் ஏறின கண்ணன் சாரதியிடம் இரண்டொரு வார்த்தைகளைக் கூறிவிட்டுச் சிந்தனையில் மூழ்கினான். எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு அவன் ராதிகாவைப் பார்க்கிறான். அன்று பாவாடையும் தாவணியுமாக நின்றவள் இப்போது அடையாளமே தெரியாதபடி மாறியிருப்பாள், அவளுடைய போக்கே வேறு திசையில் சென்றிருக்கும் என்றெல்லாம் அவன் செய்திருந்த கற்பனை எப்படித் தூள்தூளாகப் போய்விட்டது! பார்க்கப்போனால் ராதிகா இன்னும் அதே ராதிகாவாகத்தான் இருக்கிறாள். உடலின் வளர்ச்சியும் அறிவின் முதிர்ச்சியும் அவளுடைய உள்ளத்தின் யௌவனத்தை இம்மியளவுகூட மாற்றவில்லை.



அவள் வந்ததும் வராததுமாய், ''நேற்று ராத்திரி ஏன் சாப்பிட வரவில்லை?'' என்று கேட்பாள், அதன்பின் கேள்விக்குமேல் கேள்வியாகக் கேட்டுத் துளைப்பாள் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். நல்லவேளை! கேள்விகளே பிறக்கவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏற்பட்ட சந்திப்புத்தான் அற்பமான விஷயங்களில் மனம் ஈடுபடாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

ராதிகாவைப் பற்றி நினைக்க நினைக்க, அவனுக்கு மேற்கொண்டு என்ன செய்வது என்றே புரியவில்லை. நாதனே, கண்ணனைக் கையுடன் அழைத்துவா என்று ராதிகாவிடம் சொல்லியிருந்தால் அது அவனுடைய வாழ்க்கையில் ஒரு புதுத் திருப்பந்தான். இந்தத் திருப்பம் பிறப்பதற்குக் காரணம் யார்? அவனா? அல்லது ராதிகாவே தானா? நாதன் எளிதில் மனம் மாறக்கூடியவர் அல்லவே! அவர் மனத்தில் ஒன்றைத் தீர்மானமாக்கிக்கொண்டால், அந்தத் தீர்மானத்தை யாராலும் மாற்றிவிட முடியாதே! ராதிகா என்னதான் அருமைப் பெண்ணானாலும், அவள் எத்தனை நாள்தான் பட்டினி கிடந்தாலும் நாதன் அசைந்து கொடுக்கமாட்டாரே! அத்தகைய நாதன் ஏன் மனம் மாறிவிட்ட மாதிரி நடந்துகொள்ளுகிறார்?

திடீரென்று ஒரு கேள்வி அவனுள் பிறந்தது. இத்தனை நாள் அவனும் ராதிகாவும் நெருங்கிப் பழகினால்தான் ஆபத்து என்று நினைத்தவர், அந்த ஆபத்து விலகவே இருவரையும் மீண்டும் பழகிக்கொள்ள விடுகிறாரா? இளம் பிராயத்தில் பழகியவர்கள் வயசும் அறிவும் முதிர்ந்தபின் நன்றாகப் பழகட்டும் என்று நினைக்கிறாரா? அவன்மூலம் ராதிகாவே, தனக்கும்

கண்ணனுக்கும் இடையில் காத தூரம் இருக்கிறது என்று புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறாரா?

சிந்தனை இந்தத் திசையில் வெகு தூரம் செல்லவில்லை. தன்னுடைய சிந்தனையே முட்டாள்தனமாக, அசம்பாவிதமாகப் பட்டது அவனுக்கு. ராதிகாவைப் பற்றி, அவன் அன்று இருந்ததைப் போலத்தான் இன்றும் இருக்கிறாள் என்று அவன் எடை போட்டது போல நாதனும் போட்டிருக்க மாட்டாரா? அவனைவிட அவருக்குத்தான் தம் பெண்ணின் குணாதிசயங்கள் நன்றாகத் தெரியும். அதனால்தான் அவர் அவன் அவளிடம் நெருங்கக்கூடாது என்று இத்தனை நாளாகப் பயந்து கொண்டிருக்கிறார். அந்தப் பயத்தை அவர் இன்று உதறி, 'கண்ணனைக் கையுடன் அழைத்து வா' என்று சொல்லியிருந்தால் அதற்கு அடிப்படையான காரணம் ஒன்று இருக்க வேண்டும். அது என்ன?

கேள்விக்கு அவன் பதில் தேடுவதற்குள், ஜீப் சாரிங் கிராஸை அடைந்துவிட்டது. 'ஸ்டாப்', 'ஸ்டாப்' என்ற குரலும் கேட்டது.

வண்டி நின்றதும், அப்பு உடம்பை அஷ்டகோணலாக வளைத்துக்கொண்டு ஏறி உட்கார்ந்துகொண்டான்.

''அப்பு, இறங்கு'' என்றான் கண்ணன்.

''ஏன்?''

''நீ டிரைவர்கிட்டே உட்கார்ந்துகொள். நான் ஓரத்துக்கு வந்துவிடுகிறேன்.''

''ஏன், அப்புவுக்குச் சௌகரியமாகத்தான் இருக்கிறது'' என்றான் அப்பு.

''உன் சௌகரியத்துக்குச் சொல்லவில்லை. நீ ஓரத்தில் உட்கார்ந்தால் ஆபத்து. அடிக்கிற காற்றில் நீ எங்காவது



பறந்து பள்ளத்தில் விழுந்துவிடுவாய்!'' என்று சொல்லிச் சிரித்தான் கண்ணன்.

''உனக்குச் சௌகரியமாய் உட்காரணும்னு ஒரு வார்த்தை சொல்லேன். எதற்கு இந்தச் சால்ஜாப் பெல்லாம்?'' அப்பு இறங்கினான். கண்ணனும் இறங்கிய பின் மறுபடி உடம்பை வளைத்து வண்டிக்குள் ஏறினான்.

ஜீப் மீண்டும் புறப்பட்டது. அப்பு, ''ராதிகா என்ன சொல்கிறாள்?'' என்று கேட்டான் திடீரென்று.

''ராதிகாவா?''

''என்ன, அப்புவையே மடக்கப் பார்க்கிறாய்? அவள்தான் உன்னைத் தேடிக்கொண்டு உன் வீட்டுக்கு இன்னிக்குக் காலங்கார்த்தாலே வந்திருந்தாளே!''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''எப்படியோ தெரியும். இன்னும் கொஞ்ச நேரம் போனால் ஊட்டி பூராவுக்குமே தெரியும். அது கிடக்கட்டும். என்ன சொன்னாள்?''

''விசேஷமாக ஒண்ணும் இல்லை. மறுபடியும் சாப்பிட வரச்சொல்லியிருக்கிறாள். 'பார்க்கிறேன்' னேன். அவள் வந்தது உனக்கு எப்படித் தெரியும்?''

''இன்னிக்குக் கார்த்தாலே அப்பு போயிருந்தான், உன் மாமாவுக்குக் கோயமுத்தூரிலிருந்து ஏதாவது வாங்கி வரணுமான்னு விசாரிக்க. அப்போதான் ராதிகா புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.''

''நீதான் அவளையே அனுப்பியிருப்பாய்!''

அப்பு சிரித்தான்; ''நீ புத்திசாலிதான், கண்ணா!''

''மாமா என்ன நினைக்கிறார்?''

''யுத்தம் நடக்கிறபோது தளபதியின் மூளை குழம்பிக் கிடக்கிற மாதிரி குழம்பியிருக்கு அவர் மூளை. என்ன என்னவோ யோசனை செய்கிறார். ஆனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. இன்னமே தடியாலே யாரையாவது அடித்து நொறுக்கலாம்னா ராதிகா ஒருத்திதான் இருக்கிறாள். ஆனால் அவள் பெண்ணாகப் போய்விட்டாள். இப்படியே போனால் அவர் தம்மைத் தாமே அடித்துக்கொள்ள வேண்டியதுதான்.''

''நீ என்ன தாபம் போட்டே?'' என்றான் கண்ணன்.

''அப்புவுக்குத் தாபம் போடற வழக்கம் கிடையாது'' என்ற அப்பு திடீரென்று, ''கண்ணா, ஸ்ரீதரை என்ன செய்யப் போறே?'' என்று கேட்டான்.

''ஸ்ரீதர் என்ன, குழந்தையா கிழமா? ஊட்டியிலே அவனுக்குன்னு ஏற்பாடான இடத்துக்கு அழைத்து வர்றேன்.''

''நீதான் நாதனுடைய தங்கை பிள்ளை என்று காட்டிக்கொள்ளாதே. நீயாக அவனை நாதன் வீட்டுக்கும் அழைத்துக்கொண்டு வராதே.'?

''ஏன்?''

''நாதனைப் பார்க்கவோ, ராதிகாவைச் சந்திக்கவோ அவனுக்கு அருகதை கிடையாது.''

''உறவு இருக்கிறதே!''

''அதை உடைப்பிலே போடு.''

''அதை ராதிகாவும் மாமாவுந்தான் செய்யணும். அவனாக உறவு கொண்டாடி வந்தால்?''

''அவனாகப் போகட்டும். நாதனைப் பார்க்கட்டும். அப்புறம் அப்பு பார்த்துக்கொள்ளுவான்.''



கண்ணன் சிரித்தான்.

''இப்போ ஒப்புத்துக்கொள், அப்பு, நீ தாபந்தானே போடப் போறே?''

''நல்ல காரியங்களுக்காக ஏதாவது செய்தால் அது தாபமா? அப்புவினால் உன் மாமா மனசு மாறி அதனால் உனக்கும் ராதிகாவுக்கும் நன்மை உண்டானால், அப்பு தாபம் போட்டான்னு சொல்லிவிடறதா?''

''அப்பு, எனக்கு உன்னைப் புரியறது. ஆனால் மாமாகிட்டே ஜாக்கிரதையாக இரு. மறைமுகமாக எதைச் செய்தாலும், அதனால் எத்தனை நன்மைகள் உண்டானாலும் அவருக்குப் பிடிக்காது!''

''சரிதான் நிறுத்து, கண்ணா! இந்த ஊட்டியில் ஒவ்வொரு பெரிய மனுஷனையும் அப்பு எடை போட்டு வச்சிருக்கான். மாமாவும் ஒருத்தர்; அவ்வளவுதான்!''

மேட்டுப்பாளையம் பஸ் நிலையத்தில் அப்பு இறங்கினான். ஜீப் ரெயில்வே ஸ்டேஷனை நோக்கித் தொடர்ந்தது.

## 14

# ஸ்ரீதர்

கோயம்புத்தூர் ஜங்ஷனில் நீலகிரி எக்ஸ்பிரஸ் நின்றதும் ஸ்ரீதர் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கினான். பிளாட்பாரத்தில் நின்ற அவன் யாரையோ தேடுவது போலச் சுற்று முற்றும் பார்த்தான். கூடவே இறங்கிய சகப் பிரயாணியிடம், ''நம்ம தேசம் உபயோகமத்த தேசம் ஸார்! பாருங்கள், மணி எட்டு அடிச்சாச்சு. காலை ஆகாரம் என்ன வேணும்னு விசாரிக்க ஓர் ஆள் கிடையாது!'' என்றான். சகப்பிரயாணி வாய் திறக்கவில்லை. ஸ்ரீதர் சொன்ன காரணத்தால் தேசம் எத்தனை தூரத்துக்கு உபயோகமற்ற தேசமாகிவிட்டது என்ற சிந்தனையில் அவர் மூழ்கினாரோ என்னவோ!

சிறிது நேரத்தில் வெள்ளை வேஷ்டியும், வெள்ளைப் புஷ்கோட்டுமாக ஒருவன் ஓர் எவர்ஸில்வர் தட்டுடன் ஸ்ரீதரை அணுகினான். பிறகு, ''ஸார், ப்ரேக்பாஸ்ட்'' என்றான்.

''என்ன கொண்டு வந்திருக்கே?'' என்று கேட்டான் ஸ்ரீதர்.

''இட்லி, வடை, காபி ஸார்.''

''அதை வேறு யாருக்காவது தள்ளு. ஐ வான்ட் ப்ரெட் டோஸ்ட், ஆம்லெட் அண்டு.......''

சிப்பந்தி ஸ்ரீதர் முடிக்கும்வரை காத்திருக்கவில்லை. ''அதுக்கு வேறே ஆள் வருவான்!'' என்று 'ஸார்' பட்டங்கூடப் போடாமல் போய்க்கொண்டே இருந்தான்.



பொறுமை இழந்த ஸ்ரீதர், சகப்பிரயாணி இன்னும் அருகேதான் இருக்கிறார் என்ற எண்ணத்தில், ''பார்த்தீர்களா ஸார், ஒரு சிப்பந்தி பேசற தோரணையை! எப்படி ஸார் நம்ம நாடு முன்னேறப் போகிறது? இவர்களுக்கெல்லாம் அமெரிக்காவிலே டிரெயினிங் கொடுக்கணும், ஸார்'' என்றான். சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்த்தபோதுதான், சகப்பிரயாணி ஏற்கனவே பெட்டிக்குள் ஏறி இட்லியுடன் போராடிக்கொண்டிருந்தது தெரிந்தது. ஸ்ரீதருடைய எரிச்சல் பன்மடங்காகியது.

காலை ஆகாரத்துக்கே வழியில்லாமல் போய்விடுமோ என்று அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருக்கையில், வெள்ளைப் பான்ட்டும், புஷ்கோட்டுமாய், முகத்தில் துண்டு மீசையுடன் தோளில் வெள்ளைத் துவாலை ஒன்றைப் போட்டுக்கொண்டு ஒருவன் அவன் முன் வந்து, பவ்வியமாய் நின்றான். பிறகு, தாழ்ந்த குரலில், ''பிரேக்பாஸ்ட், ஸார்'' என்று ஆரம்பித்தான்.

''வாட் ஹாவ் யு காட்?''

''மாஸ்டருக்கு என்ன தேவை, ஸார்?''

''ப்ரெட் டோஸ்ட் வித் ஜாம் அண்டு பட்டர். ஆம்லெட் வித் லாட் ஆப் ஆனியன்ஸ். கெவண்டர் க்ரேப் ஜூஸ் ஒன் பாட்டில்....''

''டைம் நோ பார் ஆம்லெட், ஸார். நோ கிரேப் ஜூஸ் ஸார். ப்ரெட் டோஸ்ட் ரெடி. டீ பிரிங்கிங், ஸார்.''

அவன் சொல்லி முடித்ததும் முதல் மணி அடித்தது. ''கோ டு ஹெல் அண்டு ப்ரிங் டோஸ்ட்'' என்றான் ஸ்ரீதர். பிறகு பெட்டியில் ஏறிக்கொண்டான். சகப் பிரயாணி அப்போதுதான் காபியை முடித்துவிட்டு, பத்திரிகையைப் பிரித்துக் கொண்டிருந்தார்.

''இந்த ஸெர்வர் பேசின இங்கிலீஷைக் கேட்டீர்களா? கொலை, படுகொலை! பாஷையைச் சித்திரவதை செய்கிறான்.''

பத்திரிகையிலிருந்து கண்ணை எடுத்த அவர் புன்முறுவல் பூத்தார். பிறகு, ''நீங்கள் தமிழில் பேசியிருக்க வேண்டும்'' என்றார்.

''நான் தமிழில் பேசியே ரொம்ப காலமான மாதிரி இருக்கு. பாம்பேயில் என் சிநேகிதர்கள் எல்லாரும் வெள்ளைக்காரர்கள். அதுக்கு முன்னாலே அமெரிக்காவிலே ஆறு வருஷம்'' என்றான் ஸ்ரீதர். சொல்லும்போதே பெருமையும் பெருமிதமும் குரலில் ஒலித்தன.

பத்திரிகையிலிருந்து கண்களை எடுக்காமலே பதில் சொன்னார் சகப்பிரயாணி: ''அதனால்தான் போலிருக்கு, நம்ம தேசத்தை நீங்கள் இன்னும் புரிஞ்சுகொள்ளவில்லை. அமெரிக்க அவசரத்தை நீங்கள் இந்தியாவில் எதிர் பார்க்கிறீர்கள். தான் இங்கிலீஷில் பேசினால் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும்னு, பாவம் அந்த ஸெர்வர் தனக்குத் தெரிந்த இங்கிலீஷில் பேத்தினான். மற்றவர்களை எப்பாடு பட்டாவது திருப்தி செய்யணும் என்கிற நல்ல குணம் அவனுக்கு. அது நம்ம தேசத்தின் பண்பாடுகளில் ஒண்ணுன்னு எனக்குப் படறது''

''இருக்கலாம்; இருக்கலாம்'' என்று ஸ்ரீதர் முணுமுணுத்தான். இரண்டாவது மணியும் அடித்தது. கார்டின் ஊதல் கேட்டது. கடைசியில் என்ஜினும் ஊதியது.

''ஸார், இன்னும் ப்ரேக்பாஸ்ட் வர்றலையே?'' என்றான் ஸ்ரீதர்.

''ப்ரெட்டை டோஸ்ட் பண்ணித்தானே கொண்டு வர்றணும்?'' என்றார் சகப் பிரயாணி.



ரெயில் மெதுவாக நகர ஆரம்பித்தது. இப்போதாவது, அந்தச் சிப்பந்தி ஓடோடி வருகிறானா என்று பார்க்க ஸ்ரீதர் கதவருகிலேயே நின்று பார்த்தான். நல்ல வேளையாக அவனும் தென்பட்டான். ஆனால் அவனால் வேகமெடுத்து விட்ட ரெயிலின் விரைவுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. எப்படியும் பிடித்துவிடுவான் என்ற நம்பிக்கை தளரவே, ஸ்ரீதர் சிப்பந்தியை எரிக்கும் கண்களோடு பார்த்தான். பிறகு உள்ளே வந்து உட்கார்ந்துகொண்டான்.

''இட்டிலியையாவது சாப்பிட்டிருக்கலாம்'' என்றார் சகப்பிரயாணி. எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பது போலிருந்தது அவருடைய பேச்சு.

''எனக்கு இட்டிலி பிடிக்காது, ஸார். அதுவும் இல்லாமல் நான் கார்த்தாலே காபி சாப்பிடறதில்லை.'' என்றான் ஸ்ரீதர். பிறகு, ''நீங்கள் எங்கே போறதாகச் சொன்னீர்கள்? என்னவோ நல்லா என்கிறீர்களே?'' என்று கேட்டான்.

''ஸாந்தி நல்லா.''

''அங்கே?'' என்று இழுத்தான் ஸ்ரீதர்.

''நான் ஓர் எலெக்ட்ரிகல் என்ஜினியர்'' என்ற அவர், ''நீங்கள்?'' என்று வினவினார்.

''நானும் ஓர் என்ஜினியர்தான்; கெமிகல் என்ஜினியர்... ஊட்டியில் ஒரு பணக்கார மனுஷன் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கிறார். நான்தான் எல்லாம் செய்யணும்னு கேட்டுக்கொண்டார். என்னையே எல்லாத்துக்கும் பொறுப்பு ஏற்கணும்னு கெஞ்சாத தோஷமாக எழுதினார். சரி என்று புறப்பட்டேன்.''

''அப்படியா? யார் அவர்?''

''உங்களுக்குத் தெரியுமா?''

''ஊட்டி என்றால் எனக்குத் தெரியாமல் இருக்க முடியாது.''

''மிஸ்டர் மகாலிங்கம்!''

''யாரு, மகாலிங்கமா? நளினி கெமிகல் இண்டஸ்ட்ரீஸைப்பற்றிச் சொல்லுகிறீர்களா?''

''அதுவேதான். மிஸ்டர் மகாலிங்கம் எப்படிப் பட்டவர்?''

''பெரிய பணக்காரர், ஸார்; மிகப் பெரிய பணக்காரர். பெரிய பெரிய பாங்குகளிலே அவரும் ஒரு டைரக்டர்னா பார்த்துக் கொள்ளுங்களேன்!''

''நளினி என்கிறது அவருடைய பெண்தானே? பம்பாயில் என்னை இந்த வேலை விஷயமாக சந்தித்த போது பெண் என்று சொன்னதாக ஞாபகம்.''

''நளினிதானே? அவருடைய ஒரே பெண். இப்போது அவள்.....'' என்று இழுத்தார் என்ஜினியர்.

''ஜெர்மனியில் இருக்கிறாள்'' என்று முடித்த ஸ்ரீதர், ''ஒரு வருஷத்துக்கு மேலே என்னால் இருக்க முடியாது என்று மகாலிங்கத்திடம் சொல்லிவிட்டேன்'' என்றான். பிறகு, ''என்னை எத்தனையோ அமெரிக்கக் கம்பெனிகள் கூப்பிடுகிறார்கள். அமெரிக்காவிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடலாம். ஆனால், ஆனால்...'' என்று முடிக்காமல் நிறுத்தினான்.

''ஆனால் என்ன ஸார், ஆனால்? உங்களுக்குத்தான் இந்தத் தேசமே பிடிக்கவில்லையே! சிவனே என்று அமெரிக்காவுக்கே போயிடறதுதானே?'' என்றார் அவர்.

''போயிடறது ஒண்ணும் பிரமாதமில்லை ஸார். அமெரிக்காவிலே என்னைப் போல லட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலே நான் லட்சத்தில் ஒருவன். இங்கே எனக்குக் கிடைக்கிற புகழ், மரியாதை எல்லாம் அமெரிக்காவிலே கிடைக்காது.''



''ஆமாம். என்ன இருந்தாலும் நம்ம தேசம் இன்னும் உருப்படாத தேசந்தானே?''

அவர் சிரித்துவிட்டு ஸ்ரீதரைப் பார்த்தார். அவருடைய நையாண்டியை அவன் புரிந்துகொண்டாலும் திருப்பி எதும் பேச முடியவில்லை. பேச்சை வேறு திசையில் மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், ''மகாலிங்கத்தைத் தெரியும் என்கிறீர்களே, அவர் எப்படிப்பட்டவர்?'' என்று கேட்டான்.

''பெரிய பெரிய விஷயங்களில் அலட்சியமாக இருக்கிறவர். ஆனால் அற்பமான பிரச்னைகளில் குடியே முழுகிவிட்டது போல நடந்துகொள்ளுவார். மனுஷர் பிடிவாதக்காரர். நினைத்ததைச் சாதித்துக் கொள்ளுகிற வரைக்கும் தூக்கம் வராது.''

''அப்படியா?''

''ஆமாம். நீங்களே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளுவீர்கள். இந்த நளினி இண்டஸ்ட்ரீஸுக்கு எலெக்ட்ரிகல் காண்ட்ராக்டரே நான்தான். வேலை முடிய ஆறு மாதம் ஆகும்னேன். மூணு மாசத்திலே முடி, உன்னுடைய தொகையை இரண்டு மடங்காக வாங்கிக் கொள் என்றார். நளினி இன்னும் ஆறு மாசத்தில் வந்து விடுவாள்; அதற்குள் பாக்டரியில் வேலை ஆரம்பமாகிவிட வேண்டும் என்று அவர் திட்டம் போட்டிருக்கிறார்.''

''ஆனால் நளினி பெண். கல்யாணமாகிற வரைக்குந்தானே அவளால் பாக்டரியைப் பார்த்துக்கொள்ள முடியும்?''

''இங்கேதான், ஸார், நீங்கள் மகாலிங்கத்தைத் தப்பாக எடை போடுகிறீர்கள்!''

''ஏன்?''

''நளினிக்குக் கல்யாணமானால் அவள் புருஷன் வீட்டுக்குச் செல்லத் தேவையில்லை. புருஷன் மனைவி வீட்டுக்கு வந்துவிடுவான்!''

''என்ன ஸார், விசித்திரமாக இருக்கிறது?''

''இதில் என்ன விசித்திரம் இருக்கிறது? ஒரே பெண்; பணக்காரப் பெண். மேல்நாட்டுக்குப் போய்ப் படிச்ச பெண்; அவளுக்காக ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டுக் கல்யாணம் ஆகிவிட்டது என்ற ஒரு காரணத்துக்காக அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பி விடுவாரா மகாலிங்கம்?''

''மாப்பிள்ளை அவருடைய திட்டத்துக்கு இணங்க வேணுமே!'' என்றான் ஸ்ரீதர்.

''திட்டத்துக்கு இணங்குகிறவன்தான் ஸார் மாப்பிள்ளையாக வர முடியும்.''

ஸ்ரீதர் வாயே திறக்கவில்லை. தலையைக் குனிந்து, கண்களை மூடிக்கொண்டான். அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இறங்கிவிட்டான் என்பதை அறிந்த என்ஜினியர், ''என்ன மிஸ்டர், இப்போதே பிரமாதமாக நினைக்க ஆரம்பித்துவிட்டீர்களா? மகாலிங்கத்துக்கு மட்டும் உங்களைப் பிடித்துவிட்டது, அப்புறம் உங்கள்பாடு யோகந்தான்!'' என்று சொல்லிச் சிரித்தார்.

அவருடைய சிரிப்பு எரிச்சலைத்தான் உண்டாக்கியது. ஆனால் எரிச்சலுக்குக் காரணத்தை அவன் தேடினபோது, அது தன் மனத்தை அவர் ஊடுருவி அங்கே புதைந்திருந்த உண்மையைக் கண்டுபிடித்துவிட்டதுதான் என்பது புலனாயிற்று.

தன்னுடைய வெறுப்பையும் எரிச்சலையும் காட்டிக் கொள்ளாமல், ''ஸார், இத்தனை நேரம் பேசிக்



கொண்டிருந்தோம். உங்கள் பெயரை நான் இன்னும் விசாரிக்கவில்லை. என் பெயர் ஸ்ரீதர்'' என்றான் அவன்.

''என் பெயர் ஏகாம்பரம்.''

மேட்டுப்பாளையத்தை ரெயில் அடைந்ததும், கண்ணன் ஒவ்வொரு பெட்டியாகத் தாண்டிக்கொண்டு வருவதை ஏகாம்பரம் கவனித்தார். ''ஹலோ கண்ணன்! யாரைப் பார்க்க வந்திருக்கே?''

''எங்கள் கெமிகல் என்ஜினியர், ஸார்.''

''ஸ்ரீதர்தானே?''

''ஆமாம்!''

''இதோ இவர்தாம் ஸ்ரீதர்... மிஸ்டர் ஸ்ரீதர், இவர்தாம் கண்ணன்; மகாலிங்கத்தின் மானேஜர், அந்தரங்கத் தோழர் எல்லாம்'' என்றார் ஏகாம்பரம்.

''வெரி க்ளாட் டு மீட் யூ!'' என்று கை குலுக்க முன்வந்தான் ஸ்ரீதர்.

தன்னை யார் என்று அவன் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கையிலே மனம், அவன் எப்போதோ பார்த்த பழைய ஸ்ரீதரை, புது ஸ்ரீதரோடு இணைக்க முயன்றது. எப்படி அடையாளமே தெரியாதபடி வளர்ந்திருக்கிறான் என்ற ஆச்சரியமும் கூடவே எழுந்தது.

''ஜீப் கொண்டு வந்திருக்கிறேன், மிஸ்டர் ஸ்ரீதர்'' என்றான் அவன் கை குலுக்கியதும்.

''ஜீப்பா! மகாலிங்கம் பெரிய பணக்காரர் என்கிறார்கள். ஒரு கார்கூடவா இல்லாமற் போய்விட்டது?'' என்றான் ஸ்ரீதர்.

கண்ணன் பதில் பேசவில்லை. ஸ்ரீதருடைய அலட்சியத்தை அவனால் எளிதில் சமாளிக்க முடியுந்தான்.

ஆனால் அதனால் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டால்?

''இருக்கிற இரண்டு கார்களும் வெளியூர் போயிருக்கின்றன'' என்று அவன் மழுப்பினான். பிறகு ஏகாம்பரத்தைப் பார்த்து, ''நீங்களும் ஊட்டிக்குத்தான் வருகிறீர்களா?'' என்று கேட்டான்.

''இல்லை, கண்ணன். நான் லாந்தி நல்லா போறேன். என் வண்டி வந்திருக்கும். நீ ஸ்ரீதரைப் பார்த்து அழைத்துக் கொண்டு போ'' என்றார்.

ஸ்ரீதர், ''எனக்கு ரொம்பப் பசிக்கிறது. முதலில் ஏதாவது சாப்பிடணும்'' என்றான்.

''இங்கே ப்ரெட் டோஸ்ட்டும் ஆம்லட்டும் கிடைக்காது. இட்டிலியும் தோசையுந்தான் இருக்கும்!'' என்றார் ஏகாம்பரம்.

அவருடைய குரலில் பொதிந்திருந்த கேலியைக் கண்ணனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

# 15

## ஸ்ரீதரின் புராணம்

ஜீப் குன்னூரை அடைவதற்கு முன்னரே கண்ணன் ஸ்ரீதரை எடை போட்டுவிட்டான். உலகம் அனைத்தும் தனக்குள் அடங்கியிருக்கிறது என்ற நினைப்புத்தான் ஸ்ரீதருடைய மனத்தில் மேலோங்கி நிற்கிறது என்பது அவன் ஓயாமல் பாடிய சுயபுராணத்திலிருந்து தெரிந்தது. மேட்டுப்பாளையத்தில் ஆரம்பித்த பேச்சு நிற்கவேயில்லை. ஸ்ரீதர்தான் எல்லாச் சகோதரர்களிலும் புத்திசாலி, கெட்டிக்காரன் என்று பெயர் வாங்கியவன். பள்ளிக்கூட நாட்களிலே ரசாயன சாஸ்திரத்தில் அவனுக்கு இருந்த ரசனையையும் அறிவையும் கண்டு பலர் வியந்தனராம்.

இத்தனையெல்லாம் பேசியவன் கண்ணனைப்பற்றி ஒரு வார்த்தைகூட விசாரிக்கவில்லை. கண்ணன் யார், மகாலிங்கம் நிறுவியுள்ள புதுக் கம்பெனியில் அவனுக்கு என்ன வேலை, திருமணம் ஆகிவிட்டதா என்பன போன்ற கேள்வி ஏதுமே கேட்கவில்லை. கண்ணன் என்று ஒருவன், சிறுவனாக இருந்தபொழுது இதே ஊட்டியிலே தன்னுடன் விளையாடியிருக்கிறான் என்ற நினைவுகூடவா தோன்றக் கூடாது?

ஆனால் இந்த விஷயத்தில் கண்ணனுக்குத் திருப்தி தான் உண்டாயிற்று. நாதனைப்பற்றி ஸ்ரீதர் எத்தகைய எண்ணங்களும் அபிப்பிராயங்களும் கொண்டிருக்கிறான் என்று நன்றாகத் தெரியவேண்டுமானால், தான் யார் என்ற எண்ணமே தெரிந்துவிடக்கூடாது. இதுவரையில் நாதனைப்

பற்றியோ, குமார் அல்லது ராதிகாவைப் பற்றியோ ஒரு பேச்சும் எழவில்லை. இந்த மூன்று பேரும் ஸ்ரீதருடைய உள்ளத்தில் குடியிருக்கிறார்களா? அப்படியானால் எந்த அளவில்?

திடீரென்று கண்ணன் ஸ்ரீதருடைய பேச்சைத் துண்டித்துக் கேள்வியை உதிர்த்தான்.

''ஊட்டியில் உங்களுக்கு யாராவது உறவுக்காரர்கள் இருக்கிறார்களா, மிஸ்டர் ஸ்ரீதர்?''

பதில் உடனே வந்துவிட்டது: ''ஒருவர் இருக்கிறார்.''

''அப்படியா?''

''ஆமாம், ஆனால் இப்போது அவர் ஊட்டியில் இருக்கிறாரா, இல்லை, வேறு ஊருக்குப் போய்விட்டாரா என்று தெரியாது?''

''யார் அவர்?''

கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காமல் ஸ்ரீதர், ''ஆனால் அவர் ஊட்டியில் இருந்தாலும், வேறு எங்கே இருந்தாலும் எனக்கு ஒன்றுதான். மனுஷர் ஒரு மாதிரி. தாம் ஐ.ஸி.எஸ். என்ற காரணத்தினால் மற்றவர்களைத் துச்சமாக மதிப்பார். அவரும் அவருடைய கண்டிப்பும் அதிகாரமும் - சேசே! பதினெட்டாம் நூற்றாண்டு நாகரிகம்!'' என்றான்.

''அவர் - '' என்று இழுத்தான் கண்ணன்.

''அவர் என் அப்பாவின் ஒன்றுவிட்ட தங்கையின் கணவர். அத்தை செத்துப் போயாகிவிட்டது. அத்துடன் எங்களுக்குள் இருந்த உறவும் அற்றுப் போய்விட்டது. பார்க்கப்போனால் இனிச் சொந்தம் கொண்டாடிக்கொண்டு போகக்கூட வேண்டாம்.''

''நீங்கள் மிஸ்டர் நாதனைத்தானே குறிப்பிடு கிறீர்கள்?''



''ஆமாம், ஆமாம்!'' என்று அலட்சியமாகக் கூறிய ஸ்ரீதர் வெறுப்புடன், ''மிஸ்டர் கண்ணன், அந்த மனுஷர் இங்கிலாந்திலே படிச்சவர். ஆனால் நாகரிகம் என்னவோ ஆப்பிரிக்கா நாகரிகந்தான். அந்தக் காலத்திலே ஒண்ணு ரெண்டு தடவை நாங்கள் அவர் வீட்டிலே தங்கி யிருக்கிறோம். கொஞ்ச நாட்களுக்கு எப்படா திரும்பிப் போவோம் என்று வெறுப்பு உண்டாகிவிடும் எனக்கு'' என்றான்.

''ஓ!''

''இரக்கம் என்ற உணர்ச்சியே அவருக்குக் கிடையாது. மனசு உடைக்க முடியாத பாறாங்கல்லோன்னு கூடத் தோணும். கூடப் பிறந்த தங்கை லவ் மாரேஜ் பண்ணிண்டான்னு அவள் முகத்தையே பார்க்கலை, ஸார், அவர்! லவ் மாரேஜ் பண்ணிண்டா என்ன தப்பு? அந்தக் காலத்திலேயே, இந்த ஐ.ஸி.எஸ். எல்லாம் வர்றத்துக்கு முன்னாடியே சகுந்தலை எங்கேயோ வேட்டையாட வந்த துஷ்யந்தனை லவ் பண்ணிக் கல்யாணமும் செஞ்சுக் கலையா?''

கண்ணன் பதில் ஏதும் பேசவில்லை. தன்னுடைய தாய்க்காக ஸ்ரீதர் வாதாடுகிறான் என்ற திருப்திகூடப் பிறக்கவில்லை. அதற்கு மாறாக, ஸ்ரீதர் நாதனை அடியோடு வெறுக்கிறான் என்ற எண்ணந்தான் மேலோங்கி நின்றது. இந்த எண்ணமே அவனிடம் எரிச்சலை உண்டாக்கியது. நாதனைப்பற்றி இவனுக்கு என்ன தெரியும்? என்னதான் கண்டிப்பும் அதிகாரமும் முரட்டுத்தனமும் இருந்தாலும் அவருடைய உண்மையான மனத்தின் பசுமையையும் தன்மையையும் இவன் எப்படிப் புரிந்துகொள்வான்?

திடீரென்று கண்ணன் மௌனம் சாதிப்பதைக் கண்ட ஸ்ரீதர், ''என்ன மிஸ்டர் கண்ணன், நான் சொன்னதெல்லாம் யோசிக்க வைத்துவிட்டது உங்களை; இல்லையா?'' என்றான்.

''ஆமாம்: உங்களுடைய சகுந்தலை - துஷ்யந்தன் உதாரணம் ரொம்ப நன்றாக இருந்தது. உலகம் பிறந்த அன்றைக்கே காதலும் பிறந்துவிட்டது என்பதை ரொம்ப ரொம்ப அழகாகச் சொல்லிவிட்டீர்கள்'' என்றான் கண்ணன்.

அவனுடைய பேச்சில் ஒலித்த நையாண்டியைப் புரிந்துகொள்ளாமலே ஸ்ரீதர் சிரித்தான்.

''நான் வெறும் கெமிஸ்ட்ரிதான் படிச்சிருக்கேன்னு நினைக்காதீர்கள், கண்ணன்! புராணங்களும் இதிகாசங்களும் படிச்சிருக்கேன். ஏன், மேல்நாடுகளிலே மற்றவர்களுக்குச் சொல்லியும் கொடுத்திருக்கிறேன்.''

''அப்படியா?'' என்றான் கண்ணன். அதே சமயத்தில் இந்த ஜராசந்தனை இரண்டாகக் கிழித்துப்போட அப்பு என்ற பீமனால்தான் முடியும் என்ற எண்ணமும் அவன் மனத்தில் பிறந்தது.

ஊட்டியை அவர்கள் அடைந்தபோது மணி பன்னிரண்டு. ஸ்ரீதருக்கென்று ஏற்பாடாகியிருந்த விடுதிக்கு முன்னால் ஜீப்பை நிறுத்தினான்.

''ரொம்ப அழகாக இருக்கிறதே?'' என்றான் ஸ்ரீதர் இறங்கிக்கொண்டே.

''இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு இங்கே தங்கியிருக்கலாம். அப்புறம் வேறு வீடு பார்த்துக் கொள்ளுவோம்'' என்றான் கண்ணன்.

''வீடு எதற்கு? நான் ஒண்டிக்கட்டை. இதே போதும்'' என்றான் ஸ்ரீதர்.

''இது விருந்தினர் விடுதி.''

''ஓ! அப்படியா?'' என்ற ஸ்ரீதர் ஹாலினுள் பிரவேசித்தான். பிறகு ஒரு சோபாவில் அமர்ந்த அவன், ''மிஸ்டர் கண்ணன், இந்த ஊரில் கிளப் லைபெல்லாம் எப்படி?'' என்று கேட்டான்.



''நான் எந்தக் கிளப்பிலும் அங்கத்தினன் அல்ல.''

''நான் இன்னிக்கே மெம்பர் ஆகனும். ஊட்டியிலே நல்ல கிளப் இருக்கனுமே!''

இரண்டு மூன்று பெயர்களைச் சொன்னான் கண்ணன்.

''ஓ.கே. சாயங்காலம் போகலாம். தினமும் இரண்டு மூன்று மணி நேரமாவது கிளப்பிலே இருந்தாக வேண்டும். அப்படி ஒரு பழக்கம் உண்டாகிவிட்டது.''

''அப்படியா?''

''ஆமாம்! அப்புறம் இன்னும் ஒன்று: எனக்குப் பர்மிட் வேணும்.''

''பர்மிட்டா? எதற்கு?'' - புரிந்தும் புரியாதது போலக் கேட்டான் கண்ணன்.

''பர்மிட் எதற்கு வாங்குவார்கள், மெட்ராஸ் போன்ற மதுவிலக்கு உள்ள ராஜ்யங்களில்?'' என்று எதிர்க்கேள்வி கேட்டுச் சிரித்தான் ஸ்ரீதர்.

''இதுவும் பழக்கமாகிவிட்டது அல்லவா?'' என்று சிரித்த கண்ணன், ''கலெக்டர்தாம் பர்மிட் வழங்குகிற அதிகாரி. நீங்களே நேரில் போனால் காரியம் எளிதாக முடிந்துவிடும்'' என்றான். ''பிறகு, ''டாக்டரையும் மகாலிங்கத்தையும் இன்றைக்கே பார்க்கப் போகிறீர்களா அல்லது......'' என்று கேள்வியை முடிக்காமல் நிறுத்தினான்.

''இன்றைக்கு எதையும் பார்க்கப் போவதில்லை. சாப்பிட்டுவிட்டுத் தூங்கப் போகிறேன். நீங்கள் சொன்ன இரண்டு கிளப்புகளுக்கும் போகப் போகிறேன். அது சரி; நீங்களும் என்னுடன் சாப்பிடுங்கள்.''

''நானா?''

''ஆமாம். நீங்கள்தான். எனக்குத் தனியாகச் சாப்பாடு பிடிக்காது.''

''என்னை மன்னித்துவிடுங்கள், மிஸ்டர் ஸ்ரீதர். என் வருகைக்காகக் காத்திருப்பார்கள்.''

''அப்படியா? என்னால் உங்கள் மனைவி வேறு பட்டினி கிடக்க வேண்டாம்.''

''எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.''

''அப்படியா? நல்லது, நல்லது! நாம ரெண்டு பேரும் ஒரே மாதிரிதான். எனக்கு முப்பது வயசு ஆகப் போறது. உங்கள் வயசு?''

''இருபத்தொன்பது.''

''ரெண்டு பேரும் ஒரே வயசுதான். உங்களுக்கு யாராவது கேர்ள் பிரண்டு இருக்காளா?''

''எந்த மாதிரி?''

''கேர்ள் பிரண்டுன்னு கேட்டா எந்த மாதிரின்னு கேட்கிறீங்களே! சிநேகிதி. சிரித்துப் பேசறதுக்கும் பொழுது போறதுக்கும் சினிமா டான்ஸ் இதுகளுக்கெல்லாம்கூட வருவதற்குந்தான்.''

''இல்லை.''

''ஒண்ணு தயார் பண்ணிக்கொள்ளணும். ஒரு சிநேகிதனுக்குச் செலவழிப்பதைவிட ஒரு சிநேகிதிக்குச் செலவழித்தால் எவ்வளவு லாபம் இருக்கிறது தெரியுமா? மாதாந்தரமாக ஏதாவது அது இதுன்னு விருந்தும் வாங்கிக் கொடுத்தால் போதும்.''

''அப்புறம் கடைசியில் கல்யாணத்தில் முடியும்!''

''நோ நோ, அது முட்டாள்தனம்! சிநேகிதியைச் சிநேகிதியாகவே நிறுத்திக்கொள்ளணும். சிநேகத்துக்கும் காதலுக்கும் ரொம்பத் தூரம். இன்னும் சொல்லப் போனால் சிநேகிதிகளை அடிக்கடி மாற்றிக் கொண்டே வரணும்.''

''நீங்கள் சொல்றதைக் கேட்கிறபோது எனக்குப் புராணந்தான் நினைவுக்கு வந்தது'' என்றான் கண்ணன்.

''என்ன புராணம்?''

''மகாபாரதம். அர்ஜுனனுக்கு நிறையச் சிநேகிதிகள் இருந்திருக்கிறார்கள்!''



''பட்! அர்ஜுனன் முட்டாள்! எல்லார் கழுத்திலேயும் தாலியைக் கட்டினான்.''

''அது அர்ஜுனன் காலத்து நாகரிகமாக இருந்திருக்கும்!''

''என்கிட்டே என்ன விசேஷம்னு கேட்டால் எல்லாப் பெண்களுடைய போட்டோக்களும் என்னிடம் இருக்கும். ஆனா என் போட்டோ ஒன்றுகூட எந்தப் பெண்ணிடமும் இருக்காது. ஒவ்வொருத்தியும் கெஞ்சுவாள். ஆனால் நான் அசையமாட்டேன்.''

''அது உங்க மனஉறுதியைக் காட்டுகிறது.''

''ரொம்ப சரி. நானும் போட்டோவைக் கொடுத்தால் அவள் என்ன நினைப்பாள்? நான் அவளைக் காதலிக்கிறேன் என்று தப்புக் கணக்குப் போடுவாள், இல்லையா?''

''கணக்குப் போடுவாள், ஸார். ஆனா அது தப்பா ரைட்டான்னு எப்படிச் சொல்றது?'' என்ற கண்ணன், மேலே ஸ்ரீதர் இன்னும் வளர்த்திக்கொண்டே போவானோ என்ற பயத்தில் அவசரமாக, ''நீங்கள் குளித்துவிட்டுச் சாப்பிடுங்கள். நான் நாளைக்குச் சந்திக்கிறேன்'' என்றான்.

''இல்லை, இல்லை. நீங்கள் மாலையில் வாருங்கள்'' என்றான் ஸ்ரீதர்.

''பார்க்கிறேன்.''

கண்ணன் விடுதியைவிட்டு ஜீப் அருகில் வந்தபோது, பெரிய விடுதலை ஒன்றையே பெற்றுவிட்டதாகப் பெருமூச்செறிந்தான்.

இந்த ஸ்ரீதருடன் எத்தனை நாட்களுக்கு அலுப்பில்லாமல், மனத்தாங்கல் இல்லாமல் பழக முடியும்?

கேள்விக்கு அடுத்த கணமே பதில் கிடைத்தது. அந்தப் பதிலின் பெயர் - 'அப்பு'.

# 16

## ஏமாற்றத்தின் முடிவு

ஜீப்பில் ஏறிய கண்ணன் ரெட்ஹவுஸை நோக்கி விரைந்தான். பாதிதூரம் சென்றபோது முந்தின நாள் அவன் தனக்குத் தானே செய்துகொண்ட சங்கற்பம் நினைவுக்கு வந்தது. ராதிகாவுடன் பழகக்கூடாது, அவளுடன் சேர்ந்து சாப்பிடக்கூடாது என்றெல்லாம் செய்துகொண்ட முடிவுகள் இருபத்து நான்கு மணி நேரத்தில் தவிடுபொடியாகி விட்டனவே! ஆனால் இப்போது அவனுக்குத் தன் சங்கற்பங்கள் தகர்ந்தது பற்றிக் கவலையே உண்டாக வில்லை. மாறாக அமோகமான திருப்திதான் பிறந்தது. ரெட்ஹவுஸை அவன் அடைந்தபோது இரண்டு அடிக்கப் பத்து நிமிஷங்கள் இருந்தன.

போர்ட்டிகோவை அடுத்த திண்ணையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு நாதன் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். படியேறி வரும் கண்ணனைக் கண்டதுமே அவருக்கு ஆச்சரியமும், அதே கணத்தில் கோபமும் பிறந்தன. ராதிகா சென்னையிலிருந்து வந்தபின் அவன் இதுநாள் வரை கிளாஸ் ஹவுஸைத் தாண்டி முன்னேறியதில்லை. இன்று ஏன் வருகிறான் - அதுவும் சிரித்த முகத்துடன்? அதிகாலையில் ராதிகா காரை எடுத்துக்கொண்டு அவனைச் சந்தித்தனாலா? முந்தின இரவு விருந்துக்கு வராதவன் இப்போது மத்தியான்னச் சாப்பாட்டுக்கு ஏன் ஓடோடி வருகிறான்?

''நமஸ்காரம், மாமா!'' என்றான் கண்ணன்.

''கண்ணனா? என்ன விசேஷம்?'' - நறுக்கென்று கேட்டார் நாதன்.

அவருடைய பேச்சின் தோரணையே கண்ணனைச் சாட்டையாக அடித்தது. ஒரு விநாடி திணறிப் போனான் அவன். பிறகு சமாளித்துக்கொண்டு, ''ஒன்றும் இல்லை, மாமா, நான் வருகிறேன்!'' என்றான். சொன்னவன் மெல்லத் திரும்பி இரண்டு அடி வைத்தான்.

ஆத்திரம் தோன்றிய உள்ளத்தில், திடீரென்று கல் நெகிழ்ந்தது; தம்மையும் மீறி அவர் உணர்ச்சி வசப்பட்டார்.

தொண்டை கனக்க, ''இரு, கண்ணா. இங்கே வா! இப்படி உட்கார்'' என்றார்.

இப்போது கண்ணனுக்கு நாதனைப் பின்னும் நன்றாகப் புரிந்தது. ஒரு மனிதர் இரு துருவங்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்டால் மன உளைச்சலும் தவிப்பும் எப்படி இருக்கும் என்பது தெரிகிறதே! நாதன் மௌனமாக உட்கார்ந்திருந்தார். புத்தகம் மூடப்படாமலே மடியில் கிடந்தது. உள்ளே ராதிகா இன்னும் சாப்பிடவில்லை என்ற எண்ணம் நிமிஷத்துக்கு ஒரு தடவை எழுந்து மனத்தைப் புண்படுத்திக்கொண்டே இருந்தது. 'அவள் யாருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாளோ, யாருக்காக அவள் என்றென்றுமே காத்துக்கொண்டிருக்கக்கூடாது என்று அவர் திட்டம் போட்டிருக்கிறாரோ, அவன் இப்போது அருகே இருக்கிறான்; இன்னும் சில நிமிஷங்களில் தம் பெண்ணுடன் சேர்ந்து சாப்பிடப் போகிறான்' என்ற உண்மைகள் மோதினபோது, புண்ணின் வலி இன்னும் தீவிரமாகியது. இந்த வலியின் கொடூரத்தில் அவரால் வாய் திறந்து பேச முடியவில்லை.

திடீரென்று கண்ணனுடைய குரல் கேட்டது: ''மாமா, நான் வரக்கூடாது என்றுதான் இன்றைக்கு மத்தியான்னம்

வரைக்கும் தீர்மானம் பண்ணிண்டிருந்தேன். ஆனால் திடீரென்று என் சங்கற்பம் மாறும்படியாகச் சந்தர்ப்பங்கள் உண்டாகிவிட்டன.''

''அந்தச் சந்தர்ப்பங்கள் என்ன?'' என்று நாதன் தாமாகக் கேட்பார் என்று கண்ணன் எதிர்பார்த்து அவரையே பார்த்தான். ஆனால் அவருடைய கண்கள் பங்களாவுக்கு வெளியே ஏதோ ஒரு மலைச் சிகரத்தை வெறித்துப் பார்ப்பது போல நிலைத்து நின்றன. தான் பேசியது அவர் காதில்கூட விழவில்லையோ என்ற சந்தேகம் கண்ணன் மனத்தில் பிறந்தது. ஆனால் அடுத்த கணமே நாதன் தம்முடைய அதிருப்தியைத்தான் பார்வை மூலமாகக் காட்டுகிறார் என்ற எண்ணமும் உண்டாயிற்று.

கண்ணன் மெதுவாக எழுந்தான். அவனுடைய உடம்பின் சலனத்தையும் கவனியாதது போல நாதன் இன்னும் அசைவற்று உட்கார்ந்திருந்தார்.

எழுந்த கண்ணன், ''மாமா!'' என்றான்.

இப்போது அவர் மலைச் சிகரத்திலிருந்து பார்வையைத் திருப்பினார். கண்ணனைப் பார்த்தார். சாப்பிடுவதற்கு உள்ளே போகப் போகிறான் என்று நினைத்தார்.

''மாமா!'' என்று மீண்டும் அழைத்த கண்ணன், ''நான் போய் வருகிறேன்'' என்றான். பிறகு தொடர்ந்து, ''என் வருகையினால் உங்களுக்குக் கோபமும் வெறுப்பும் மட்டுமே உண்டாகும்னு நான் நெனைச்சது பெரிய தப்பு. உங்க மனசும் தவிக்கும்னு நான் எண்ணிப் பார்க்கவில்லை. ரொம்ப வருந்துகிறேன்'' என்றான். அவன் குரல் தழுதழுத்தது.

''நீ என்னைப் புரிந்துகொண்டாலே போதும், கண்ணா. நான் உனக்குக் கடமைப்பட்டவனாக இருப்பேன்.''



''என்ன, மாமா, இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? நான் எவ்வளவு சின்னவன்! நீங்கள்போய் இப்படிப்.........?''

''இதிலெல்லாம் சின்னவன், பெரியவன்னு பார்க்கிறதிலே அர்த்தமில்லை, கண்ணா. நானே அன்னிக்கு, ராதிகா திரும்பி வர்ற அன்னிக்கு, உன்கிட்டே ஒரு தானம் கேட்கணும்னு இருந்தேன். ஆனால்......''

''என்ன, மாமா ஆனால்? என்ன தானம்?''

''அந்தத் தானத்தை கேட்காமலே நீ கொடுத்துட்டே. ஆனா இன்னிக்கு நீ திடீர்னு இங்கே இப்போ வந்தபோது, நீ கொடுத்த தானத்தை நீயே கொண்டது மாதிரி பட்டது.''

''புரிகிறது, மாமா. இனிமே நான் நிச்சயமா...''

''ஊஹூம்'' என்று தம்மையே வெறுத்துக் கொள்ளுகிறவர் போல நாதன் தலையை ஆட்டினார்; ''இனிமேல் நான் எதிலும் தீவிரமாக மனத்தைச் செலுத்தப் படாதுன்னு தீர்மானித்தாகிவிட்டது. எது சொன்னாலும் நீ கேட்கக்கூடியவன் என்கிற தைரியத்தில், எதிர்பார்க்கக் கூடாததையெல்லாம் நான் உன்னிடம் எதிர்பார்த்தேன். அது என் தப்பு. ஆனால் நான் அந்தத் தப்பைச் செய்யறதுக்குக் காரணம் உன்னுடைய நல்ல குணமும், நீ என்கிட்டே வளர்ந்த பிள்ளைதானே என்கிற எண்ணமுந்தான். இனிமே உன்னைப்பற்றி நான் அப்படியெல்லாம் நினைக்கிறது விவேகம் இல்லை. நீ உன் இஷ்டம்போல வந்து போய்க் கொண்டிரு.''

கண்ணனுக்குத் தலை சுற்றியது. மாமாவின் கண்கள் மலைச் சிகரத்தில் நிலைத்து நின்றபோது உள்ளம் எங்கே இருந்தது. ஏமாற்றத்தின் உச்சியிலா? ராதிகாவின் போக்குத்தான் அவரை அந்த உயரத்துக்கு இழுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும்.

''இல்லை, மாமா. உங்க மனசு வேதனைப் படும்படியா இனிமே நான் ஒரு காரியமும் செய்ய மாட்டேன்.''

''கண்ணா, ஒரு நிமிஷம் உட்கார்; உட்காரேன்'' என்ற நாதன், ''மனுஷ சுபாவம் ரொம்ப விசித்திரம் இல்லையா? நாம், ஒரு விபரீதம் நடக்காமல் இருக்கணும்னு பயந்து ஒரு வழியில் ஜாக்கிரதையாக இருந்தால், விபரீதம் நடக்காது என்று நினைக்கிற சமயத்தில் திடீரென்று வேறு வழியிலிருந்து ஆபத்து வந்து விடுகிறது. அப்போது ஆபத்தைச் சமாளிக்க, புத்தம் புதிசா ஒரு வழியைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறது மனம். இப்போ என் மனம் ஒரு வழியைக் கண்டுபிடித்துவிட்டது. இனிமே நீ தினம் தினம் வந்து போய்க்கொண்டிரு. ஏன், இனி நீ எங்களுடன் சேர்ந்தே இருக்கவும் இருக்கலாம்'' என்றார்.

கண்ணனுக்குத் தலை சுற்றியது; மாமாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? ராதிகா இவ்வளவு தூரத்துக்கு அவருடைய மனசைக் குழப்பியிருக்காளா?

மேலும் பேசிக்கொண்டிருக்கக் கண்ணன் விரும்ப வில்லை; ''அப்போ, நான் புறப்படுகிறேன்!'' என்றான்.

''சாப்பிட்டுவிட்டுப் போ'' என்றார் நாதன்.

''பரவாயில்லை, மாமா.''

''ராதி காத்துக்கொண்டிருக்கிறாள்.''

''ராதியை நான் பார்க்க விரும்பவில்லை. கூடிய மட்டும் அவளைச் சந்திக்காமல் இருப்பதே நல்லது.''

இப்போது நாதன் பலமாகச் சிரித்தார். பிறகு, ''நீ சந்திக்காமல் இருந்தால்மட்டும் போதுமா?'' என்றார்.

கண்ணன் விழித்தான்.

''கண்ணா! ராதி என்மேல் சீறிவிழாத நாளே இல்லை. ஏன் தெரியுமா? நான்தான் நீ இங்கே வராமல் இருக்கத்



தடை உத்தரவு போட்டிருக்கிறேனாம்! அது நாகரிகமற்ற காரியமாம்!''

கண்ணன் விழித்தான்.

''ராதிகா இன்னும் குழந்தையாகத்தான் பேசுகிறாள்.''

''நீ எனக்காகப் பேசுகிறாய், கண்ணா, எனக்காகப் பேசுகிறாய். ராதிகா குழந்தை அல்ல; வரவர அவளுடன் விவாதங்களில் இறங்கவே எனக்குப் பயமாக இருக்கிறது. ஏன் தெரியுமா? நான் என் மனசுக்குள்ளேயே அடைச்சுப் பூட்டி வைத்த சம்பவங்களையெல்லாம் அவள் எடுத்து வீசுகிறாள். என் பதிலை வைத்துக் கொண்டே என்னை மடக்குகிறாள்.''

கண்ணன் மௌனம் சாதித்தான்.

''நான் என்னதான் படிச்சிருந்தாலும், என்னதான் பெரிய பெரிய பதவியெல்லாம் வகிச்சிருந்தாலும் என்கிட்டே கீழ்த்தரமான சில குணங்கள் உண்டு, கண்ணா! அது உனக்கும் தெரியும். ஆனா, மாமா என்கிற உறவிலே நீ அதை நெனைச்சுப் பார்க்கவும் பயந்திருப்பாய். காரண மில்லாமல் ஒருத்தரை வெறுப்பதும், அன்பு செலுத்தி ஆதரவு அளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அசுரனாக மாறுவதும் கீழ்த்தரமான குணந்தானே? அதே மாதிரிதான் சுயநலம். என்னுடைய உலகமே, என்னையும் ராதிகாவையும் குமாரையும் மட்டுந்தான் சுற்றுகிறது. இந்த உலகத்தில் மூன்றாம் மனுஷனுடைய மூச்சுக் காற்றுக்கூட வீசக் கூடாதுன்னு நான் கண்டிப்பாக இருந்திருக்கிறேன். இந்தச் சுயநலந்தான் அன்னிக்கு உன்னைத் தடியால் அடிச்சு அர்த்த ராத்திரியில் வீட்டுக்கு வெளியே விரட்டியது. அன்னிக்கு நான் உன்னை ஒரு திருடனாக நெனைச்சேன். என் உலகத்தில் புகுந்து கொள்ளை அடிக்க வந்த திருடனாக நெனைச்சேன். ஆனால்..... ஆனால்..... அதுக்கு அப்புறம்....''

கண்டிப்பைத் தவிர வேறு எதையுமே அவர் குரலில் கேட்டிராத கண்ணன் அவருடைய தொண்டை கம்மிப் போவதைப் பார்த்தான். சலனமே தோன்றாத முகம் இப்போது துயரத்தின் கனம் தாள முடியாமல் சிவந்து போயிருந்தது. அவன் கண்களில் நீர் முட்டி நின்றது.

''மாமா, நீங்கள் அநாவசியமாக மனசை அலட்டிக் கொள்ளுகிறீர்கள். நான் ஒரு தப்புச் செய்தேன். அதற்குத் தடியடி கிடைத்தது. வீட்டைவிட்டு வெளியேறினது எனக்கே ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று.''

''தப்புச் செய்தது நீ அல்ல என்று எனக்கு அன்னிக்கே தெரியும், கண்ணா, அன்னிக்கே தெரியும்! என்னால் என் உலகத்தைச் சார்ந்தவளைத் தண்டிக்க முடியவில்லை. என் கோழைத்தனம் உன்னைப் பலி வாங்கியது!''

''மாமா, இப்போது நீங்கள் கொஞ்சம் ஓய்வெடுங்கள். நான் அப்புறமாக வருகிறேன்.''

இப்போது நாதன் ஒன்றும் பேசவில்லை. போர்ட்டிகோவைவிட்டு இறங்கிச் செல்லும் கண்ணனையே பார்த்துக் கொண்டிருந்தார். இத்தனை மனக் குழப்பத்திலும் அவரையும் மீறி ஒரு கேள்வி உதிர்ந்தது: 'எவ்விதத்தில் ராதிகாவுக்குக் கண்ணன் தகுதியற்றவனாகி விட்டான்?'

கேள்வி தொடுத்த சிந்தனை திடீரென்று அறுந்தது. ''அப்பா!'' என்ற குரல் கடுமையாகக் கேட்டது: ''ஏம்ப்பா, கண்ணன் திரும்பிப் போறான்?... கண்ணா, கண்ணா!'' என்று கத்தியபடி பாய்ந்தோடினாள் மகள்.

'கிளாஸ் ஹவுஸை' நெருங்கிக் கொண்டிருந்த கண்ணனுடைய காதில் ராதிகாவின் குரல் கேட்டது. ஆனால் அவன் நடந்துகொண்டிருந்தான். கால்களின் விரைவும் அதிகரித்தது.



''கண்ணா! கண்ணா! நில்!''

கண்ணன் நிற்கவில்லை. ஆனால் ராதிகா ஓடிவந்து மறித்தாள். மூச்சிரைக்க, ''எங்கே போகிறாய்?'' என்றாள்.

''என் வீட்டுக்கு.''

''நான் இன்னும் சாப்பிடாமல் உனக்காகக் காத்திருக்கிறேன். இப்படிப் போனால் என்ன அர்த்தம்?''

''பேசாமல் போ, ராதி. நான் சாப்பிட வரவில்லை. மாமாவின் மனசு சரியாக இல்லை. நீ வேறு சேர்ந்து அவரைப் புண்படுத்தாதே.''

''ராத்திரி பூரா உனக்காகக் காத்திருந்து, கடைசியில் பட்டினியாய்ப் படுத்துக்கொண்டேன்.''

''அது உன் தப்பு, ராதி.''

''இன்னிக்கு உன்னைப் பார்க்கணும்னு ஓடோடி வந்தேன், காலங்கார்த்தாலே!''

''அதுவும் உன் தப்பு!''

அவள் கோபம் தலைக்கேறியது. ''பின் எதற்காக மத்தியான்னச் சாப்பாட்டுக்கு வரேன்னு சொன்னே?''

''நீ வான்னு கூப்பிட்டே. நான் முடிஞ்சாப் பார்க்கலாம்னேன். அவ்வளவுதான்.''

''பின்னே இப்போ எதற்கா வந்தே? எனக்குத் தெரியும்: அப்பா சாப்பிட ஒட்டாமல் உன்னை விரட்டுகிறார். நீயும் கோழைதானே? ஓடுகிறாய்.''

கண்ணன் பதில் சொல்லாமல் முன்னேற முயன்றான்.

''எங்கே மறுபடியும் கிளம்பப் பார்க்கிறே? நான் இருக்கிறேன், வா!''

''ராதி, வழியை மறிக்காதே. எனக்குப் போகணும்!''

''அப்போ?'' - ராதிகாவின் குரல் ஏமாற்றத்தால் பிறந்த ஆத்திரத்தைக் கொட்டியது.

''நான் சாப்பிட வரவில்லை. இனிமேல் என்னைச் சாப்பிடவும் கூப்பிடாதே!''

இப்போது ராதிகாவின் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் கொட்டியது. கேவலினூடே, ஆத்திரம் தெறித்தது. ''கண்ணா, இதுநாள் வரைக்கும் நீ முட்டாள்னு நினைச்சுண்டிருந்தேன். இப்போதுதான் தெரியறது, முட்டாள் நான்தான் என்று. நீ போ. உன் இஷ்டம் போலப் போ. என்னை விட்டுப் போறதுதான் சுகம் என்று நீ நெனைச்சா, ஆசை தீரப் போய்விடு. ஆனால் ஒண்ணு: அப்புறம் மறுபடியும் என்னைப் பார்க்கணும்னு வராதே! போ, போ, போ!''

ராதிகா வீரிட்டுக் கத்தினாள். அடுத்த கணம் கண்ணன் ஜீப்பை நோக்கிப் புறப்பட்டான். ராதிகாவின் கடைசி வார்த்தைகள் திண்ணையில் இருந்த நாதனைத் தட்டி எழுப்பின. அவர் நிமிர்ந்து கவனித்தார்.

ராதிகா தள்ளாடியபடி நடந்து வருவது மனத்தைக் கிழித்தாலும் அவரையும் மீறி ஒருவிதத் திருப்தி பிறந்தது. சற்றுமுன் இருந்த சலனம் இப்போது நீங்கிவிட்டது.

படியேறிய ராதிகா அங்கு அப்பா ஒருவர் இருக்கிறார் என்ற சிந்தனையுமின்றி ஹாலுக்குள் நுழைந்தாள்.

# 17

# நாரதர் வந்துவிட்டார்

**நா**லு மணியிலிருந்து கண்ணனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீதருக்கு எரிச்சலும் ஆத்திரமும் வந்தன. அன்று சாயந்தரமே ஒரு கிளப்பில் அங்கத்தினனாகச் சேர்ந்துவிட வேண்டும் என்று ஒரு தடவைக்கு மூன்று தடவையாக அவன் சொல்லியிருக்கிறான். கண்ணனும் தலையை அசைத்திருக்கிறான். ஏன் இன்னும் காணோம்?

விடுதிக்குள்ளே பொழுது போகாமல் தவித்த ஸ்ரீதர் வராந்தாவுக்கு வந்தான். அவனுக்கு முன்னால் பரந்து கிடந்த நந்தவனத்தில் வண்ணமலர்களோ, ஜில்லென்று வீசிய காற்றோ எந்த விதமான இன்பத்தையும் அளிக்கவில்லை. நந்தவனத்தைக் கடந்து மெதுவாகப் பாதைக்கு வந்தான். வலப்புறத்தில் பாதை திடீரென்று அற்றுவிட்டதுபோல் இருந்தது. பத்து அடி நடந்து பார்த்தான். பாதை இறங்கி ஏறுகிறது என்று அவன் வாய் முணுமுணுத்தது. இடப்புறத்தில் பாதை ஏற்றத்தில் போய்க்கொண்டிருந்தது. இரண்டு பாதைகளிலும் ஆள் நடமாட்டமே இல்லை.

ஸ்ரீதர் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்தரை! இனிமேல் கண்ணன் எப்போது வருவான், எப்போது கிளப்புக்குச் செல்லுவது? திடீரென்று கண்ணன்மீது எழுந்த எரிச்சல் பன்மடங்காகியது. மனம் அவனைப் பற்றித் தீவிரமாக நினைக்க ஆரம்பித்தது. என்னதான் கண்ணன் சகல சௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தாலும் அதெல்லாம் மகாலிங்கத்தின் ஏற்பாடே தவிர, கண்ணன்

தானாக எதையும் செய்யவில்லை என்று தோன்றியது. இந்த எண்ணமே, 'கண்ணன் ஒரு சாதாரணச் சிப்பந்திதான். இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கப் போகிற நமக்கு அவன் ஒரு பொருட்டல்ல' என்ற எண்ணங்களைத் தூண்டி விட்டது. அவனுக்குச் சம அந்தஸ்துக் கொடுத்ததுகூடத் தப்பு என்று தோன்றியது.

ஸ்ரீதருடைய மனம் கறுவிக்கொண் டிருக்கையில் வலப்புறப் பாதையில் திடீரென்று ஒரு தலைமட்டும் தெரிந்தது. அவன் திடுக்கிட்டு நின்றான். ஆள் அரவமற்ற பிரதேசத்தில், நிச்சப்தமான சூழ்நிலையில் திடீரென்று ஒரு தலைமட்டும் முளைத்தால்?

அடுத்த நிமிஷமே முழு உருவத்தையும் ஸ்ரீதர் பார்த்தான். பயம் மறைந்து சிரிப்பு வந்தது. குச்சியான உடல். நீளமான தலை. இஸ்திரி காணாத காக்கிப் பாண்டும் வெள்ளை ஷர்ட்டும்.

பாதையின் சரிவிலிருந்து மேட்டுக்கு வந்தவன், தன்னைத் தாண்டிச் செல்லப் போகிறான் என்றுதான் ஸ்ரீதர் நினைத்தான்.

ஆனால் வந்தவன் ஸ்ரீதரின் முன்னால் புன்னகையுடன் நின்றான். நின்றவன், ''குட் டே டு யூ. விடுதியில் எல்லாச் சௌகரியங்களும் இருக்கா? உங்களைப் பார்த்தால் பிரயாணக் களைப்பே இல்லாதது போல இருக்கே? இப்பத்தான் பறிச்ச வடுமாங்காய் மாதிரி சுறுசுறுப்பாக இருக்கிறீர்களே!'' என்று சரமாரியாக ஆரம்பித்தான்.

இந்த மாதிரியான திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்காத ஸ்ரீதருக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. முன்பின் தெரியாத ஒருவன் உரிமை கொண்டாடிக்கொண்டு குசலம் விசாரித்தது அவனுக்கு வெறுப்பாகக்கூட இருந்தது. அவனை ஒரே வார்த்தையால் விரட்டிவிடலாமா என்றுகூட



யோசித்தான். ஆனால் அடுத்த கணமே, கிறுக்குப் போல் இருக்கிறவன் மகாலிங்கத்தின் உறவுக்காரனாக இருந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணமும் பிறந்தது.

''என்ன, ஸார், அப்படி விழிக்கிறீர்கள்? இவன் யாரடா அநுமார் மாதிரி திடுதிப் என்று குதிக்கிறான், என்னென்னமோ கேட்கிறான் என்றெல்லாம் நினைக் கிறீர்களா? நீங்க பம்பாயிலிருந்து புறப்படுவதற்கு முன்னாலேயே, ஏன், நீங்க சின்னப் பையனாக இருக்கிற நாளிலேந்து உங்களை எனக்குத் தெரியும். நீங்க அந்த வயசிலே மாநிறமா இருந்தீர்கள். அமெரிக்கா, இங்கிலாந்து எல்லாம் போய் இருந்ததனாலோ என்னவோ இப்போது சிகப்பா ஆகிவிட்டீர்கள். அது கிடக்கட்டும். கண்ணன் எங்கே? எல்லாம் நன்னாக் கவனிச்சுண்டானா? இப்படி உங்களை அந்தரத்திலே விட்டுவிட்டு எங்கே போயிருக் கிறான்?''

ஆரம்பத்தில் எத்தனைக்கு எத்தனை வெறுப்பும் கோபமும் இருந்தனவோ அத்தனைக்கு இப்போது ஸ்ரீதருக்கு அவனைப் பிடித்துவிட்டது. வந்திருக்கிறவன் தன்னுடைய வாழ்க்கையின் ஓட்டத்தையே கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறவன் என்ற நினைப்புக்கூடப் பிறந்தது. ஆனால் அவன் யார்? என்ன பெயர்? என்ன உத்தியோகம்?

''ஸார், உங்களை எங்கேயோ இதற்குமுன் பார்த்திருக்கிற மாதிரி இருக்கு. உங்கள் பெயர்?'' என்று ஆரம்பித்தான் ஸ்ரீதர்.

''பார்த்திருக்க முடியாதே! அப்பு கோயம்புத்தூரைத் தாண்டி எங்கேயும் போனதில்லையே!''

''உங்கள் பெயர் என்ன என்று சொன்னீர்கள்? அப்புவா? அப்பு என்பது வீட்டிலே கூப்பிடுகிற பெயர் தானே?''

''நீங்க கேக்கிற கேள்வியின் தாத்பரியமே புரிய வில்லை. நினைவு தெரிஞ்ச நாளிலிருந்து, யாராவது 'அப்பு'ன்னு கூப்பிட்டா நான் என்னன்னு கேட்பேன். அவ்வளவுதான். இந்தப் பெயர் அப்பாசாமியிலிருந்து வந்ததா, அப்பாதுரையிலிருந்து குறுகியதான்னு நான் இன்னும் ஆராய்ச்சி பண்ணலை, ஸார்!''

''உள்ளே போய்ப் பேசலாமே, மிஸ்டர் அப்பு.''

''மிஸ்டர் போடாதேயுங்கள். நான் வெறும் அப்புதான்.''

வராந்தாவில் இரண்டு பேரும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''அப்புவைப் பற்றிக் கண்ணன் உங்களிடம் சொல்லியிருக்க வேண்டுமே?'' என்றான் அப்பு.

''சொல்லவில்லை.''

''இந்தக் கண்ணன் நல்லவன்தான். ஆனா அவனுக்குப் பேசத்தெரியாது. அளவுக்கு மீறிக் காட்டற மரியாதையிலே முக்கியமானதெல்லாம் மறந்துடும்.''

''எனக்குப் புரியவில்லை.''

''பாருங்களேன், மேட்டுப்பாளையத்தில் உங்களைச் சந்தித்து ஜீப்பில் ஊட்டிவரை உங்களுடன் வந்திருக்கிறான். இங்கேயும் ஒரு மணி நேரமாவது இருந்திருக்க வேண்டும். அதாவது, மூணு அல்லது மூணரை மணிநேரம். இதற்குள் அப்புவைப் பற்றி உங்களிடம் சொல்லவில்லையென்றால், அது அவன் குணம்.''

அப்பு சிரிக்கவில்லை. ஆனால் ஸ்ரீதர் வாய்விட்டுச் சிரித்தான்.

''ஓர் உதாரணமே காட்டிவிட்டீர்கள்!''

''இன்னும் ஒண்ணு சொல்லட்டுமா? ஒரு சொந்தக் காரன் பெண்ணைக் கண்ணன் 'லவ்' பண்றான். அதுவும் இவனை 'லவ்' பண்றது. ஆனா இந்தப் பயல் சொந்தக்காரன் மேலே ஏகப்பட்ட மதிப்பையும் மரியாதையையும் கொட்டி வைச்சு, அவர் மனசு கோணப்படாதுன்னு பெண்ணை மறந்துடறான்.''



''அவனுடைய, நீங்கள் சொன்ன குணத்துக்கு இதுதான் சரியான உதாரணம்'' என்ற ஸ்ரீதர், ''யார் அவர்? அந்தப் பெண் எப்படி இருப்பாள்? ரொம்ப அழகா?'' என்று கேட்டான்.

''யாராக இருந்தால் என்ன, ஸார்? நீங்கள் அவளை 'லவ்' பண்ணப் போறதில்லை. அப்படியே நீங்கள் காதலிச்சாலும் அது உங்களைத் திரும்பிக்கூடப் பார்க்கப் போறதில்லை. நான் ஏதோ ஓர் உதாரணத்துக்குச் சொன்னேன் என்றால், நீங்கள் அதிலே ஆராய்ச்சி பண்ண இறங்கிவிட்டீர்களே!''

அப்புவைப் 'பளார்' என்று அறைய வேண்டும் என்ற கோபம் வந்தாலும், ஸ்ரீதருடைய மனம் அடுத்த கணமே கோழையாகியது. அப்பு மனத்தில் பட்டதைச் சொல்லு கிறான்.

''ஏன் ஸார், என்மேல் கோபம் வர்றதா?'' என்று அப்புவே கேட்டான்.

''நோ, நோ, இட் இஸ் ஆல் ரைட். ஆனா கண்ணன் தனக்கு 'கேர்ள்' பிரண்ட்ஸே கிடையாதுன்னானே!''

''காதலி இருக்கிறாளான்னு கேட்டிருக்க வேண்டும்.''

''யூ ஆர் கரெக்ட். அந்தக் கேள்வியை நான் உங்களிடம் கேட்கலாமா?''

''ஓ எஸ்! அப்புவுக்குக் கேர்ள் ப்ரண்டு, மாமி பிரண்டு, கிராண்ட்மதர் பிரண்டு எல்லாமே உண்டு!'' என்ற அப்பு, ''இப்போ யாருக்காகவாவது காத்துக் கொண்டிருக் கிறீர்களா?'' என்று கேட்டான்.

அலுத்துக்கொண்டே ஸ்ரீதர், ''எல்லாம் கண்ணனுக்காகத்தான். ஏதாவது ஒரு நல்ல கிளப்பில் மெம்பராக வேண்டும்னு சொன்னேன். தலையை ஆட்டினார். ஆனா இன்னும் காணோம்!'' என்றான்.

''கிளப்பில் சேர நல்ல ஆளைப் பிடித்தீர்கள்!'' என்று சிரித்த அப்பு, ''எந்த மாதிரி கிளப் உங்களுக்குப் பிடிக்கும்?'' என்று கேட்டான்.

''ஏன், இந்த ஊரில் பல விதங்கள் இருக்கா?''

''ஆமாம். வெறும் சீட்டாட்டம் மட்டும் நடக்கிற கிளப் இருக்கு; பெரிய பெரிய ஆபீஸர்களும் பணக்காரர்களும் ஏதே சடங்குக்கு வர்ற மாதிரி தினசரி வந்து ஒருவர் மூஞ்சியை ஒருவர் பார்க்காமல், அப்படியே பார்த்தாலும் பொய்ச் சிரிப்புச் சிரித்துவிட்டுப் போகிற கிளப்பும் இருக்கு.''

''இரண்டுமே சுகமில்லை.''

''இன்னொரு கிளப் இருக்கு. ஆரம்பிச்சு மூணு வருஷந்தான் ஆறதுன்னாலும் பெரிய கிளப்பா வளர்ந்துடுத்து. குன்னூர், கோத்தகிரியிலிருந்தெல்லாம் மெம்பர்ஸ் வருவா.''

''இந்தக் கிளப்பிலே என்ன விசேஷம்?''

''இருபத்திரண்டு வயசிலிருந்து முப்பத்தைந்து வயசுவரை இருக்கிறவர்கள்தான் அங்கத்தினர்களாகலாம். இரவு எழு மணிக்கு மேல்தான் நடவடிக்கைகளே ஆரம்பமாகும். சீட்டாட்டம், செஸ், பில்லியர்ட்ஸ் எல்லாம் இருக்கும். ஆனால் அந்தப் பக்கமே யாரும் போக மாட்டார்கள். எல்லாம் பெண்களைச் சுற்றியே அரட்டை அடித்துக்கொண்டிருப்பார்கள்!''

''பெண்களா?''



''ஓ, சொல்ல மறந்துவிட்டேனே! கிளப்பில் ஆண் பகுதி, பெண் பகுதின்னு இருக்கு. ஆனால் நடைமுறையில் எல்லாம் ஒண்ணாகிவிட்டது. சனிக்கிழமை சனிக்கிழமை முன்னெல்லாம் நம்ப ஊர்களில் பஜனையும் பாட்டுக் கச்சேரிகளும் இருக்கும்; ஆனா இந்தக் கிளப்பில் ராக் - அண்டு - ரோல், டிவிஸ்ட் முதலான கவர்ச்சி நடனங்கள் எல்லாம் நடக்கும்.''

''ஊட்டி இவ்வளவு முன்னேறியிருக்கிறதா? பம்பாய், கல்கத்தா மாதிரி இருக்கிறதே!''

''ஊட்டி முன்னேறவில்லை, ஸார். வாலிபம் முன்னேறியிருக்கிறது! காதலுக்கும் காமத்துக்கும் வேற்றுமை தெரியாத அளவுக்கு அறிவு முன்னேறியிருக்கிறது. ஊரில் இருக்கிற பெரியவர்களும் நல்லவர்களும் எக்கேடு கெட்டுப்போனால் என்ன, நம் வாலிபத்தை வீணாக்கக் கூடாது என்ற திமிர் முன்னேறியிருக்கிறது. இப்படியே இரண்டு தலைமுறைகள் போனால் போதும்; ஐயாயிரம் வருஷமாக இருந்த நம் கலாசாரம், பண்பு எல்லாம் குடியிலும் கூத்திலுமே அழிஞ்சுடும்.''

அப்பு பேச்சை முடித்துவிட்டு ஸ்ரீதரைப் பார்த்தான்.

ஸ்ரீதர் கண்களை மூடிக்கொண்டிருந்தான். அவனுடைய சிந்தனை, சனிக்கிழமை இரவு நடக்கும் நடனங்களிலும் நடனப் பெண்களின்மீதும் லயித்திருந்தது.

''என்ன ஸார், தீவிரமாக யோசனையில் இறங்கி விட்டீர்கள்?''

''நீங்கள் சொன்ன கிளப் எங்கே இருக்கிறது?''

''அதில் சேரப் போகிறீர்களா?''

''ஏன்?''

''உங்களைப் போன்றவர்களுக்கு அது ஏற்றதில்லை!''

''யார் சொன்னார்கள்? நான் அமெரிக்காவிலே மேனாட்டு டான்ஸை கற்றுக்கொண்டிருக்கிறேன்.''

''இங்கேயிருந்து ரொம்ப தூரம் இருக்கு, ஸார்.''

''எத்தனை மைல்?''

''எட்டு மைல்!''

''ஊட்டிக்கு வெளியேயா?''

''ஆமாம்.''

''அதனால் என்ன? கார் அல்லது ஜீப் கிடைக்காதா என்ன? இல்லாவிட்டால் டாக்ஸி இருக்கவே இருக்கு.''

அப்பு திடீரென்று, ''அந்தக் கிளப்பிலே சேருவது ஆபத்திலே முடிஞ்சாலும் முடியலாம், ஸார்'' என்றான்.

அப்புவின் தடை உபாயங்களைக் கேட்கக் கேட்க ஸ்ரீதருக்கு ஆத்திரம் உண்டாகியது. ஆனால் அவன் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அப்புவைப் போன்ற ஆள் அவனுக்கு எப்போதும் தேவை. மனுஷன் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறான். நாளைக்கு அவனால் எத்தனையோ காரியங்கள் நடக்க வேண்டியிருக்கும்.

''என்ன ஆபத்து?''

''கிளப்பிலே பாதிப்பேர் மதுவிலக்கை மீறு கிறார்கள்!''

''பூ!'' என்றான் ஸ்ரீதர், அலட்சியத்துடன். பிறகு, ''நான் நாளைக்கே 'பர்மிட்' வாங்கிவிடப் போகிறேன்'' என்றான்.

''ஓ! இந்தப் பழக்கமும் உண்டா உங்களுக்கு?'' என்றான் அப்பு சிரித்துக்கொண்டே.



அப்புவின் சிரிப்பை லட்சியம் செய்யாமலே ஸ்ரீதர், ''அப்போ கிளம்புங்கள், புறப்படலாம்'' என்றான்.

''எங்கே?''

''நீங்கள் சொன்ன கிளப்புக்குத்தான்!''

''இன்னிக்கா?''

''ஆமாம். ஏன், நல்ல நாளாக இல்லியா?''

''அதற்கில்லை. இப்போ காரும் இல்லை, ஜீப்பும் இல்லை. டாக்ஸி வேணுமானால் ரெயில்வே ஸ்டேஷனுக்கோ, சாரிங் கிராஸுக்கோதான் போகணும். நாளைக்குப் போகலாம்.''

''எனக்கு இப்போ பொழுதே போகவில்லை.''

''அந்தக் கஷ்டத்தைத் தீர்க்கத்தான் அப்பு வந்திருக் கிறான்.''

''எனக்குப் புரியவில்லை.''

''உங்களுடைய சொந்தக்காரர் ஒருவர் இந்த ஊட்டியில் இருக்கிறார். நீங்கள் மறந்துவிட்டீர்கள் போல் இருக்கிறது!'' என்று ஆரம்பித்தான் அப்பு.

''யாரு, நாதன்தானே? எனக்கு அவரைப் பார்க்க வேண்டாம்.''

''ஆனால் அவர் துடியாய்த் துடிச்சுண்டிருக்கிறாரே!''

''எதற்கு?''

''அவருடைய மனைவி கற்பகத்தின் ஒன்றுவிட்ட அண்ணா பிள்ளை அல்லவா நீங்கள்?''

''அதனாலே என்ன?''

''நேரே தம் வீட்டில்தான் நீங்கள் இறங்குவீர்கள் என்று அவர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் நீங்கள்

ஏமாற்றிவிட்டீர்கள். ஏமாற்றத்தினாலே மனசு உடைஞ்சு போறதுக்கு முன்னாலே நான் உங்களை அவர் வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம்னு இருக்கேன்.''

''அந்த மனுஷர் முரடர். பத்தாம் பசலி. கண்டிப்பும் கறாருமாக இருப்பார். எனக்கு அவரை அடியோடு பிடிக்கவில்லை. கண்ணனிடங்கூட நான் அவரைப்பற்றிப் பேசினேன்.''

''பிரம்மாண்டமான பங்களாவில், பாவம், அவரும் அவருடைய ஒரே பெண் ராதிகாவும்தான் இருக்கிறார்கள். பிள்ளை குமார் டேராடூனில் இருக்கிறான்.''

''ஆமாம். அவருக்கு ஒரு பிள்ளையும் பெண்ணும் உண்டு. இப்போ ஞாபகம் வருகிறது.''

'நாதனையும் அவருடைய குழந்தைகளையும் மறந்து விடுகிற அளவுக்கு நீ பெரிய மனிதனாகப் போய் விட்டாயா?' என்று தன்னுள்ளேயே சிரித்த அப்பு, ''இன்னிக்கு நாம் அங்கே போவோம்'' என்றான்.

''ராதிகாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?''

''இல்லை. நன்னாப் படிச்சு, கை நிறையச் சம்பாதிக்கிற பிள்ளையாகப் பார்த்து அவளைக் கொடுக்க வேண்டுமென்று கனவு காண்கிறார்.''

ஒரு விநாடி ஸ்ரீதருக்கு உடல் சிலிர்த்தது. திடீரென்று கற்பனையில் அவனே மணக்கோலத்தில் நின்றான். பெரிய பணக்காரரின் ஒரே பெண்; அதுவும் உறவுக்காரப் பெண். மானசிகக் காட்சி தோன்றிய மறுகணமே மறைந்தது.

''ஓ, அப்படியா?'' என்றான் அவன். குரல் திடீரென்று மாறிவிட்டதை அவனே உணர்ந்தான்.



''ஆமாம்! ஆனால் நல்ல குணவானாகவும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்.''

ஸ்ரீதர் வாய் திறக்கவில்லை.

அப்பு, ஸ்ரீதர் சிந்திக்கவே இடம் கொடுக்கவில்லை.

''நாதன் வீட்டில் இன்னொரு பிள்ளை வளர்ந்து வந்தான் தெரியுமா? ஞாபகம் இருக்கிறதா?''

''ஆமாம், ஆமாம். அவன் பெயர்கூட...''

ஸ்ரீதர் யோசித்துக்கொண்டிருக்கையில் திடீரென்று ஜீப்பின் ஹார்ன் ஒலி கேட்டது.

''கண்ணன்!'' என்றான் அப்பு.

''ஆமாம், கண்ணன்தான்.''

''நான் ஜீப்பில் வருகிறவனைச் சொன்னேன்'' என்றான் அப்பு.

ஒரு கணம் திடுக்கிட்ட ஸ்ரீதர் சமாளித்துக் கொண்டே, ''நாதன் வீட்டில் வளர்ந்து வந்த பையன் பெயரும் கண்ணன்தான்'' என்றான்.

''அதே கண்ணன்தான் இதோ வருகிறான்!'' என்றான் அப்பு, ஜீப்பிலிருந்து இறங்கி நிதானமாக அவர்களை நோக்கி நடந்து வந்த கண்ணனைச் சுட்டிக் காட்டிக் கொண்டே.

# 18

# முறிவு

**ரா**திகாவின் இரண்டாவது அழைப்பையும் கடைசி நிமிஷத்தில் நிராகரித்த கண்ணன், அதன் எதிரொலி களைக் கேட்டதும் மனம் பதைபதைத்தான். கோபத்துடன் அவள் பேசப் பேச அவனால் எதிர்த்து நின்று சமாளிக்க முடிந்தது. ஆனால் அதே கோபம் அழுகையாக மாறியதும் அவனால் எதும் செய்ய முடியவில்லை. ராதிகாவின் கோபத்துக்கும் தாபத்துக்கும் காரணம் அவனேதான்; இனி ராதிகாவுடன் நெருங்கிப் பழகக்கூடாது என்று அவன் செய்த முடிவுதான். இந்த முடிவினால் ஏற்படும் விளைவுகளை, அவன் தனக்குத் தானே தேடிக் கொண்ட தோல்வியைச் சமாளிக்க அவன் முன்கூட்டியே தன்னைத் தயார் செய்துகொண்டிருந்தான்.

ஆனால் நிதர்சனமாக, அவன் கண்முன் கன்னம் சிவக்க, கண்ணீர் வழியும் முகத்துடன், ஏமாற்றத்தின் எல்லையில் நின்றுகொண்டு அவள் தன் காதலை ஆத்திரமொழிகளால் கொட்டியபோது, சமாளிக்கவே வழி தெரியாமல் போய்விட்டது.

ஜீப்பண்டை வந்தபோது பங்களாப் பக்கம் மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். போர்ட்டிகோவின் இருதூண்களுக்கிடையே பார்த்தபோது, திண்ணையில் நாதனின் உருவம் மட்டும் தெரிந்தது.

திடீரென்று ஒரு யோசனை பிறந்தது, அவன் மனத்தில். மீண்டும் பங்களாவை நோக்கி நடந்தான்.



போர்ட்டிகோவை அடைந்ததும், ''மாமா'' என்று அழைத் தான், தாழ்ந்த குரலில்.

நாதனின் கண்கள் இன்னும் புத்தகத்திலே இருந்தாலும், மனம் உள்ளே சென்ற ராதிகாவின்மீதும் வெளியேறிய கண்ணனின்மீதுமே லயித்திருந்தன. இப்போது கண்ணனுடைய குரல் கேட்டபோது ஒரு கணம் திடுக்கிட்டார். புத்தகத்தை மடிமேல் வைத்துவிட்டுப் பார்த்தார்.

கண்ணன், ''மாமா, நான் கிளாஸ் ஹவுஸில் இருக் கிறேன்'' என்று சொல்லிவிட்டு, வந்த சுவடு தெரியாமல் திரும்பினான்.

நாதன் புரிந்துகொண்டார். இருந்தாலும், அடித் தளத்தில் பயம் புகுந்துகொண்டது. கண்ணன் வீட்டுக்குள் வந்து ராதிகாவுடன் பேசி, அவளைச் சமாதானப்படுத்த நினைக்கிறானா? பயம் தோன்றிய மறுகணமே, தாம் அம்மாதிரி அவனை எடை போடுவது கீழ்த்தரமாகத் தோன்றியது. கண்ணன் திரும்பி, கிளாஸ் ஹவுஸை அடையும் வரையில் காத்திருந்துவிட்டு அவர் எழுந்தார்.

கிளாஸ் ஹவுஸில் கண்ணன் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தான். நாதனுக்காக அவன் இப்போது காத்துக்கொண்டிருந்தாலும், ஒவ்வொரு விநாடியும் அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும், அவர் பிரவேசித்தபோது அவன் திடுக்கிட்டான். இவ்வளவு சீக்கிரத்தில் அவர் வந்து விடுவார் என்று அவன் நினைக்கவேயில்லை.

''என்ன, கண்ணா?'' என்று கேட்ட அவர் சிமெண்டுப் பெஞ்சியில் உட்கார்ந்தார். பிறகு, ''நீயும் உட்கார்'' என்றார்.

கண்ணன் உட்காரவில்லை. அவர் முன்னால் நின்றான்.

''மாமா!''

''என்ன, கண்ணா?''

''என்னை மன்னித்துவிடுங்கள்.''

''என்ன குற்றம் செய்தே நீ?''

''ராதிகாவின் மனசை நோக அடித்துவிட்டேன். அவளுடைய மனசு நொந்தால், உங்களுடைய மனசும் வேதனைப்படும் என்று எனக்குத் தெரியும்.''

நாதன் ஒரு நிமிஷம் மௌனமாக அவனையே பார்த்தார்.

''அவளிடம் என்ன சொன்னே?''

''விரட்டி அடிக்காத தோஷமாகப் பேசினேன்.''

''நீ அப்படிப் பேசியிருந்தால் எனக்காகத்தான் செய்திருப்பாய் என்று ராதிகாவுக்குப் புரிந்திருக்கும். நான் ஒரு குறுக்குச் சுவர் என்றும், நான்தான் உன்னை வரவொட்டாமல் அடிக்கிறேன் என்றும் அவள் தினம் தினம் சொல்லுகிறாள்.''

''மாமா!''

''அவ சொல்றது நூத்துக்கு நூறு உண்மை என்று உனக்கும் தெரியும். என் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்கிறபோது எனக்கும் தெரிகிறது. ஆனா நான் என்ன செய்வது, கண்ணா? என்னதான் என் பெண்ணானாலும், அவளுக்கு என்று ஒரு வாழ்க்கை இருக்கிறதே! அதன் இன்பமான ஓட்டத்துக்கு நான் அணையாக இருக்கிறேனே!''

''நீங்கள் ஏன் மாமா வருத்தப்படுகிறீர்கள்?''

''கண்ணா, நான் அவள் விஷயத்தில் நடந்து கொள்ளுகிற விதமே தப்பு. ராதிமேலே நான் வைச்சிருக்கிற வாஞ்சையிலும், அவள் என் ஒரே பெண் என்ற உரிமையிலும் நான் முரட்டுத்தனமாக, ஏன், கண்மூடித்தனமான



கண்டிப்புடன் இருக்கிறேன். அது தப்புத்தான். ஏன் தெரியுமா?''

கண்ணன் வாய் திறக்கவில்லை. நாதனைக் கிளாஸ் ஹவுஸில் சந்தித்து இரண்டொரு வார்த்தைகள் பேசத்தான் ஜீப்பில் ஏறாமல் அவன் திரும்பி வந்தான். ஆனால் வந்த இடத்தில் அவனைப் பேசவொட்டாமல் நாதன் தம் உள்ளத்தை உடைத்துக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

அவனுடைய மௌனத்தை லட்சியம் செய்யாமல் நாதன் பேசினார்:

''என்னுடைய ஒவ்வொரு தடை உத்தரவும் - எல்லாம் நான் மௌனமாகவே, ஜாடையாகவே போட்ட உத்தரவுகள் - அவளுடைய மனசின் ரோஷத்தைப் பன்மடங்காக்கிக் கொண்டே போகின்றன. எத்தனைக்கு எத்தனை நீ அவளைச் சந்திக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேனோ, அத்தனைக்கு அத்தனை உன்னைத் தினம் தினம் சந்தித்தே தீருவேன் என்று அவள் மனசு கறுவுகிறது. இப்படியே போனால், இப்படியே போனால்..''மேலே முடிக்க முடியாமல் நாதன் திணறினார்.

''கவலைப்படாதீர்கள், மாமா. நான் இந்த ஊட்டியைவிட்டே போய்விடுகிறேன்.''

''உன்னால் ஊட்டியை விட்டுத்தானே போக முடியும்?''

''புரிகிறது, மாமா. இப்போது என்ன செய்கிறது?''

''நான் என்னுடைய முறைகளை மாற்றிக்கொள்ளப் போகிறேன். என்னுடைய அப்பா இதே தப்பைத்தான் அந்தக் காலத்தில் செய்தார். பலராமனையும் சீதாவையும் எப்படி எப்படியெல்லாம் பிரித்து வைக்க முடியுமோ அவ்வளவையும் செய்தார். கடைசியில் என்ன ஆயிற்று? ஒரு நாள் சீதா திமிறிக்கொண்டு வெளியேறினாள். அவளும் என் அப்பாவுக்கு ஒரே பெண்!''

என்னதான் நாதன் நிதானமாக, பழங்கதை ஒன்றை யந்திரமாகச் சொன்னாலும், அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் கண்ணனுடைய நரம்புகளில் புகுந்து தாக்கியது. அவனுடைய ரத்தம் கொதித்தது. அவனுடைய தாயாரைப்பற்றிப் பேச நாதனுக்கு என்ன உரிமை இருக்கிறது? என்னதான் அவர் அவனை எடுத்து வளர்த்து ஆளாக்கினாலும், என்னதான் தன்னுடைய வாழ்க்கையின் வெற்றிக்கு அவர் அடிகோலியிருந்தாலும் அவருக்கு அவனுடைய அம்மாவைப் பற்றிப் பேசவோ, ஏன் நினைக்கவோகூட யோக்கியதை இல்லை. ராதிகா அழகிதான். அவன்மீது உயிரையே வைத்திருக்கிறவள்தான். இருந்தாலும், சீதா அவனுடைய தாயார். அவனைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தவள் என்ற ஒரு காரணத்தினாலேயே அவளுடைய கால் தூசிக்கு ராதிகா இணையாக மாட்டாள். ஏன்? நாதனுடைய பெண் என்ற ஒரு காரணம் போதாதா?

நிமிஷத்துக்கு நிமிஷம் கண்ணன் முகம் சிவப்பதையும் அவனுடைய கண்கள் கோபக் கனலாக மாறு வதையும் கண்ட நாதன் துணுக்குற்றார். மௌனமாகவே அவன் தன்னுள் மூண்டெழுந்த கோபத்தை வெளியிடு கிறான் என்பதை அவர் உணர்ந்தார். அவரையும் மீறி, அவனைச் சமாதானப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாகியது.

''கண்ணா!'' என்றார் அவர்.

''மாமா, இப்போதுதான் எனக்கு உங்கள் மனசே புரிகிறது. என்னைப் போன்ற ஒரு சாதாரண ஆளுடைய வாழ்க்கையுடன் உங்கள் பெண்ணின் வாழ்க்கை ஒட்டிக்கொள்ளக் கூடாது என்றுதான் நீங்கள் தீர்மானம் செய்திருக்கிறீர்கள் என்று நான் நினைத்திருந்தேன். இம்மாதிரியான தீர்மானம் உங்களைப் போன்ற பெரிய



மனிதரின் மனசில் தோன்றுவதில் தப்பு இல்லை என்றும் நினைத்திருந்தேன். என்மீது பரிவு காட்டியதற்கும், என்னை ஆளாக்கிவிட்டதற்கும் கைம்மாறாக, நானும் என்னையே அடக்கிக் கொண்டு இதுநாள்வரைக்கும் உங்கள் மனசு போலவே நடந்து வந்தேன். ஆனால் இப்போது நீங்கள் என் அம்மாவின் கதையை, உங்களுடைய தங்கையின் கதையை, என்னிடமே - அவள் பெற்ற பிள்ளையிடமே - ஓர் உதாரணமாகச் சொல்லிவிட்டீர்கள்.''

''கண்ணா!'' என்று கத்தினார் நாதன் திடீரென்று.

''உங்கள் பெண், என் அம்மாவைப் போல ஒரு நாள் திமிறிக்கொண்டு வெளியேறாமல் இருக்க, நீங்கள் செய்து வரும் உபாயங்களை மாற்றப் போவதாகச் சொல்லு கிறீர்கள்......''

''கண்ணா! கண்ணா!''

''நீங்கள் என்ன உபாயம் வேண்டுமானாலும் செய்யுங்கள். அது உங்களுடைய உரிமை. ஆனால் எங்கேயோ கிடக்கிற என் அம்மாவைப்பற்றி இன்னொரு தடவை பேச்செடுக்காதீர்கள். அப்பாவுக்குத் தம் பெண்மீது வாஞ்சை உண்டு என்றால், ஒரு பிள்ளைக்கும் தன் தாயின்மீது பாசம் இருக்கும் என்பதைத் தயை செய்து மறக்காதீர்கள்!''

''கண்ணா, என்னை மன்னித்துவிடு. நான் அநாவசிய மாக உன் அம்மாவைப்பற்றி...'' நாதனுக்குத் தொண்டை கனத்தது.

''நீங்கள் உங்கள் மனத்தில் இத்தனை காலமாக நினைத்துக் கொண்டிருந்ததைத்தான் வெளியிட்டிருக்கிறீர்கள். மனசிலேயே இல்லாதது, திடீரென்று நாக்கில் புரண்டு விட்டால், மன்னிப்புக் கேட்பதற்கு அர்த்தம் இருக்கும்.''

''கண்ணா!''

''நீங்கள் இப்போது, கேவலம் என்னிடம் மன்னிப்புக் கேட்கிறீர்கள்! ஆனால் பிறரை மன்னிக்கும் மன விசாலம் உங்களிடம் இல்லையே! முப்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்ததை இன்னும் நினைவில், அதே சூட்டுடன் வைத்துக்கொண்டு, என் அம்மா செய்தது மாபெருந் தவறு என்று நீங்களே தீர்மானித்துக்கொண்டு வெறுக்கிறீர்களே; இந்த வெறுப்புத்தான் உங்களுடைய நிம்மதிக்கே உலையாக இருக்கிறது. நான் வருகிறேன்.''

''கண்ணா, இரு!''

''இல்லை, இனிமேல் நான் ராதிகாவைச் சந்தித்தாலும் சந்திப்பேன். உங்களைச் சந்திக்க விரும்பமாட்டேன்!''

''கண்ணா!''

''எத்தனையோ தடவை என்னைத் திட்டியிருக்கிறீர்கள், கண்டித்திருக்கிறீர்கள். அவை என் மனசில் ஒட்டவில்லை. அர்த்தராத்திரியில், கொட்டுகிற மழையில் என்னைத் தடியால் அடித்து நொறுக்கினீர்கள். உடம்பின் வலியை மனசு அப்போது உணரவில்லை. மாமா, மாமா என்று ஒட்டிக்கொண்டேன். ஏன்? உங்கள் மனசிலே அன்பு இருக்கிறது என்று. ஆனால் இனிமேல் என்னால் உங்களை அணுகவே முடியாது.''

''கண்ணா, இன்னும் உன்மேல் அன்புதான் இருக்கிறது. கண்ணா, என்னை நம்பு.''

கண்ணன் சிரித்தான். சிரிப்பே நாதன் இதுவரை கண்டறியாத நையாண்டிச் சிரிப்பாக இருந்தது.

''கூடப்பிறந்த தங்கைமீது வெறுப்பு மண்டிக் கிடக்கிறது! அவள் பெற்ற பிள்ளைமீது அன்பா? நீங்கள் என்னையும் வெறுத்திருந்தால் எனக்குத் திருப்தியாக இருந்திருக்கும்.''



சொன்னவன் கிளாஸ் ஹவுஸை விட்டு வெளியேறினான். திக்பிரமை பிடித்தாற்போல, நாதன் இருந்த இடத்தைவிட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தார். கடைசியாக, கண்ணன் விலகிச் சென்றுவிட்டான். என்ற எண்ணம் அவரையும் மீறித் திடீரென்று எழுந்தது. ஆனால் அடுத்த கணமே ஏமாற்றமும், அதைத் தொடர்ந்து மாபெரும் பயமும் பிறந்தன.

ராதிகாவும் சீதா மாதிரி ஆகிவிடுவாளோ?

எண்ணச் சுழலில் அவர் தம் கண்களை மூடிக் கொண்டார். உடம்பு, ஜுரத்தில் கொதிப்பது போலக் கொதித்தது. ஏன் இம்மாதிரியான சூழ்நிலைக்கு நாமே காரணமானோம் என்று தம்மையே வெறுத்துக் கொண்டார்.

திடீரென்று ஜீப் புறப்படும் சத்தம் கிளாஸ் ஹவுஸில் அவருடைய காதில் விழுந்தது.

இனி அவருக்கும் கண்ணனுக்கும் இடையிலுள்ள தூரம் காதக் கணக்கில்கூட அடங்காது என்ற எண்ணம் அவரை எழுந்திருக்க வொட்டாமல் அழுத்தியது.

# 19

# அப்பு - ஒரு வழிகாட்டி

**ஸ்ரீ**தருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அன்று காலையில் மேட்டுப்பாளையத்தில் சந்தித்து, ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வந்து விடுதி வரையில் அவனுடன் வந்த கண்ணன் நாதனுடைய தங்கை பிள்ளை கண்ணனா? அவன் மகாலிங்கத்தின் கீழ் வேலை பார்க்கும் ஒரு சிப்பந்தி என்று நினைத்து அவனிடமே நாதனைப் பற்றியும் அவனுடைய தாயின் காதல் விவரத்தைப் பற்றியும் சொல்லிவிட்டானே! அப்போதும் கண்ணன் காது கொடுத்துக் கேட்டானே தவிர வாய் திறந்து ஏதும் சொல்லவில்லையே! ஸ்ரீதருடைய மனம் ஒரு கணம் தவித்தது. மறுகணமே, 'நாம் பேசியதில் ஒருவிதக் குற்றமுமில்லை. நடந்த கதையையும் தெரிந்த கதையையுமே சொல்லியிருக்கிறோம்' என்ற தைரியமும் பிறந்தது.

கண்ணன் அவர்கள் அருகில் வந்தான். தனக்கே உரிய குறும்புச் சிரிப்புடன் அப்பு, ''மிஸ்டர் ஸ்ரீதர்!'' என்று ஆரம்பித்தான். பிறகு சட்டென்று கூற வேண்டியதைக் கூறாமல், ''இனிமேல் நான் 'மிஸ்டர்' போடமாட்டேன். 'நீங்கள்', 'உங்கள்' என்றெல்லாம் மரியாதை தரமாட்டேன். ஏக வசனத்தில்தான் பேசுவேன்'' என்று சொல்லி நிறுத்தினான்.

ஸ்ரீதருடைய முகம் திடீரென்று கறுத்தது. கறுத்த முகத்தைச் சிவப்பாக்க அப்பு, ''உன்னைப் பார்த்ததுமே அப்புவுக்குப் பிடித்துவிட்டது. மனசிலே சிநேகம் முளைச்



சுட்டது. மரியாதைக்கு முக்கியத்துவம் கொடுக்றபோது, ரெண்டு பேருக்கிடையே இருக்கிற தூரம் ஜாஸ்தியா யிடறமாதிரி படறது. அதனால்தான்.....'' என்று இழுத்தான்.

அவனுடைய பேச்சை மௌனமாகக் கேட்டுநின்ற கண்ணனை ஓரக்கண்ணால் கவனித்துக்கொண்டே, ''அதனால் என்ன, பரவாயில்லை!'' என்று சிரித்தான் ஸ்ரீதர்.

ஸ்ரீதருடைய அசட்டுச் சிரிப்பைப் பார்த்துத் தன்னுள் சிரித்துக்கொண்ட அப்பு, ''இதோ நிக்கறானே இந்தக் கண்ணனுடைய மாமா நாதன்தான் உனக்கு அத்தை புருஷர். ஒரு வகையில் நீயும் கண்ணனும் சொந்தக்காரர்கள்கூட. இன்னும் சொல்லப்போனால் நாளடைவில் போட்டியில் இறங்கப் போகிறவர்கள்!'' என்றான்.

ஸ்ரீதருக்குக் கோபம் வந்தது. கண்ணன் ஒரு சாதாரணச் சிப்பந்தி. மானேஜர் பதவி என்றாலும், அவனுடைய உயர்ந்த பதவிக்கு அது சாதாரண உத்தியோகந்தான். கண்ணன் எப்படிச் சரிக்குச் சமமாக நின்று எந்த விஷயத்தில் போட்டி போட முடியும்? ''அப்பு, நீ என்ன உளர்றே?'' என்றான் ஸ்ரீதர்.

''என்ன கண்ணா, அப்பு உளறுகிறானா?'' என்று கேட்டான் அப்பு.

''என்னை ஏன்டா இழுக்கிறே? நான் ஸ்ரீதரிடம் வருகிறேன்னு சொல்லியிருந்தேன். இதோ வந்திருக்கிறேன். நீ நாரதர்மாதிரி எதையாவது இழுத்துப் பந்தாட்டம் ஆடுகிறாய்!''

''பந்தாட்டம்னு சொன்னியே, எனக்கு ராதிகாவின் பந்தாட்டம் ஞாபகத்துக்கு வர்றது. ஸ்ரீதர், ஊட்டியில் ராதிகாதான் பூப்பந்து ஆட்டத்தில் ஸிங்கில்ஸ் சாம்பியன். கோடையிலே போட்டி நடக்கும். இந்த வருஷந்தான் அவ கலந்துக்கலை. ஏன் கலந்துக்கலை, கண்ணா?''

கண்ணன் பதில் சொல்லவில்லை. ஆனால் அவன் சொல்ல முற்படுமுன் ஸ்ரீதர், "அது சரி, நானும் கண்ணனும் சொந்தக்காரர்கள் மட்டுமல்ல, போட்டியில் இறங்கப் போகிறவர்களுங்கூடன்னு சொன்னாயே, எந்தப் போட்டியில்?" என்று கேட்டான்.

"அப்பு அதை இப்பவே சொல்லி 'ஸஸ்பென்ஸை'க் குலைத்துவிடுவான் என்று நெனைக்கிறியா?" என்று பதில் அளித்த அப்பு, "கண்ணா, இன்னிக்கு ரெண்டு வேலை முக்கியமா இருக்கு. ஒண்ணு, ஸ்ரீதரை ஒரு கிளப்பில் மெம்பராக்கணும். ரெண்டாவது, நாதன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகணும்" என்றான்.

"இரண்டுமே முடியாது."

"ஏன்?" - ஸ்ரீதர்.

"எனக்கு எந்தக் கிளப்பிலும் யாரையும் தெரியாது. நாதன் ஸ்ரீதருடைய சொந்தக்காரர். நான் போய் அறிமுகம் செய்து வைக்கணும் என்கிற அவசியம் இல்லை."

"கிளப்பில் ஸ்ரீதரை அங்கத்தினனாக்கும் பொறுப்பை அப்பு ஏற்றுக்கொள்கிறான். ஆனால் ரெட்ஹவுஸுக்கு அழைச்சுக்கொண்டு போற வேலை உன்னுடையதுதான்" என்றான் அப்பு. பிறகு தொடர்ந்து, "நீதான் அவனை நாதனுக்கும் ராதிகாவுக்கும் அறிமுகப்படுத்துவதற்கு - ஐ ஆம் ஸாரி - ஞாபகப்படுத்துவதற்கு லாயக்கானவன்" என்றான்.

"சும்மா, சும்மா, தொணதொணன்னு ஒரே பல்லவியைப் பாடாதே, அப்பு. என்னால் ரெட் ஹவுஸுக்குப் போகமுடியாது. நீயே ஸ்ரீதரை அழைச்சுண்டு போறதானாலும் இன்னிக்கு நான் பார்க்காதே" என்றான் கண்ணன்.



கண்ணனுடைய குரலில் தோய்ந்த வெறுப்பை உணர்ந்த அப்பு, "உனக்கு என்ன, என்னிக்கும் இல்லாத கடுப்பு?" என்று கேட்டான்.

கண்ணன் பதில் பேசவில்லை. திடீரென்று பொறுமை இழந்த ஸ்ரீதர், "மிஸ்டர் மானேஜர், நீங்கள் போகலாம். நாளைக்குக் காலையில் எட்டு மணிக்கு வண்டி அனுப்புங்கள். நான் சொல்றது மோட்டார்கார்; இந்த ஓட்டை ஜீப் அல்ல. சரியா எட்டு மணிக்கு வரணும். என்ன தெரிஞ்சுதா? மிஸ்டர் மகாலிங்கத்திடம் சொல்லுங்கள், நான் சரியா எட்டேகால் மணிக்கு அவரைச் சந்திக்கப்போகிறேன் என்று" என்று பேசி நிறுத்தினான்.

கண்ணன் ஒரு நிமிஷம் மூச்சு நின்றவனைப் போல நின்றான். ஸ்ரீதருடைய திடீர் அதிகார தோரணையின் காரணமே விளங்கவில்லை.

அவன் தன்னைத் தானே சமாளித்துக்கொள்ளு வதற்குள், ஸ்ரீதர் மீண்டும், "யெஸ் மானேஜர், யூ கான் கோ" என்று கத்திவிட்டு, "கம் ஆன் அப்பு, வீட்டுக்குள்ளே போகலாம்" என்று சொல்லி மெல்லத் திரும்பினான்.

கண்ணனுடைய உடல் அந்த மாலைக் குளிரிலும் வேர்த்தது. நரம்புகள் புடைத்து எழுந்தன. பொறுமைக்குப் பெயர் போனவனுடைய உள்ளத்தில், பொறியாக எழுந்த கோபம் ஜ்வாலையாக மூண்டது.

"ஸ்ரீதர், கொஞ்சம் நில்லுங்கள்" என்று கத்தினான் அவன்.

ஸ்ரீதர் நின்றான். அப்பு புன்முறுவலுடன் வேடிக்கை பார்க்கும் குழந்தைபோல மாறிமாறிப் பார்த்தான்.

"ஸ்ரீதர், நான் மகாலிங்கம் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸ் மானேஜர். நீங்கள் உற்பத்தி இலாகாவின் மானேஜர். உங்களுடைய மேல்நாட்டுப் படிப்புக் காரணமாகவோ,

திறமை காரணமாகவோ உங்களுக்கு என்னைவிட ரெண்டு பங்கோ, மூன்று பங்கோ சம்பளம் அதிகம் இருக்கலாம். ஆனால் இந்த ஒரு காரணத்துக்காக, நான் உங்களிடம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய சிப்பந்தி அல்ல என்பதை நினைவிலே வைச்சுக்குங்க. என்ன, புரிகிறதா? ஏதோ ஊருக்குப் புதிசா, கம்பெனிக்குப் புதிசா, தொலை தூரத்திலிருந்து வருகிறீர்களே என்று உங்களை உபசரிக்க நானே வந்தேன். ஒரு குமாஸ்தாவை அனுப்பியிருக்க ரொம்ப நேரம் ஆகியிருக்காது. இந்த மரியாதை உங்களுக்குப் புரியணுமானா, உங்களுக்குப் பிறத்தியாரிடம் நடந்துகொள்ற மரியாதை தெரிஞ்சிருக்கணும். நாளைக்குக் காலையிலே இந்த ஒட்டை ஜீப்தான் வரும். பெரிய ரோல்ஸ்ராய்ஸ் கார் வேணும்னா நேரே மகாலிங்கத்திடமே கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள்.''

ஸ்ரீதர் ஒரு கணம் வாயடைத்து நின்றான். பேச்சில் நிதானமாகவும் தோற்றத்தில் சாதுவாகவும் இருக்கும் கண்ணனா இப்படித் தூக்கி எறிந்து பேசுகிறான்? நிர்வாக மானேஜர் உற்பத்தி இலாகா மானேஜரைவிட, சம்பளம் குறைவாக வாங்கினாலும், உண்மையில் அதிகாரம் அதிகம் பெற்றவன் என்பது ஸ்ரீதர் அறிந்ததுதான். இருந்தாலும், ஓர் அஸ்திரத்தைப் பிரயோகம் செய்து பார்ப்பதுபோல அவன் பரீட்சை செய்து பார்த்தான். கண்ணன் முதலிலேயே அடங்கிவிட்டால், அதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு, கடைசி வரையில் தானே முதலாளிக்கு அடுத்தபடி என்று வலுப்படுத்திக்கொள்ள அவன்போட்ட திட்டம் நிறைவேறவில்லை.

ஸ்ரீதர் திடீரென்று கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தான்.

''வருந்துகிறேன், மிஸ்டர் கண்ணன். என்னை மன்னித்துவிடுங்கள். ஏதோ ஆத்திரத்தில் கண்மூடித்



தனமாகப் பேசிவிட்டேன். உள்ளே வாருங்கள்'' என்ற அவன் தொடர்ந்து, ''எனக்கு ரொம்ப முன்கோபம். முட்டாள்தனமாகக் கோபம் வந்துவிட்டது. ஏதோ ஏமாற்றம் எங்கேயோ வெடிக்கிறது!'' என்று தன்னைத் தானே சபித்துக்கொள்ளுகிறவனைப் போலக் கூறினான்.

பச்சோந்தியாகப் பிறக்க வேண்டியவன் மனித வர்க்கத்தில் அவதரித்தானே என்று அப்பு தன்னுள் எண்ணினான். பிறகு கண்ணனைப் பார்த்து, ''வா, கண்ணா! உனக்குக்கூடக் கோபம் வரும்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுது. வா, வா, ஸ்ரீதர்தான் காலில் விழாத தோஷமாய் மன்னிப்புக் கேட்டாச்சே! வா'' என்றான்.

''நீ போ, அப்பு! நான் திரும்பிப் போகிறேன்.''

''மிஸ்டர் கண்ணன்!'' என்று மீண்டும் ஆரம்பித்தான் ஸ்ரீதர்.

''ஆபீஸ் விஷயமாகப் பேச வேண்டுமானால் நாளைக்குத்தான் ஆபீஸ் திறக்கிறது. சொந்த விஷயமாக உங்களுடன் பேச எனக்கு எதுவும் கிடையாது. அப்பு, நான் வருகிறேன்டா!''

அடுத்த கணம் கண்ணன் ஜீப்பை நோக்கி விரைந்தான்.

ஸ்ரீதர் விடுதியை நோக்கிச் செல்ல, அப்பு மெதுவாகப் பின் தொடர்ந்தான். வராந்தாவை அடைந்தும், ''கிளப்புக்கும் நாதன் வீட்டுக்கும் அழைத்துப் போகாததனால்தானே உனக்குக் கண்ணன்மீது ஆத்திரம் வந்தது?'' என்று கேட்டான் அவன்.

தனக்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்த ஸ்ரீதருடைய காதில் கேள்வியே விழவில்லை.

ஆனால் அப்புவும் விடவில்லை. ''இந்த அற்ப விஷயத்தைப்பற்றியா இன்னும் நெனைச்சு நெனைச்சு

வேதனைப் பட்டுண்டிருக்கே?'' என்று ஆரம்பித்தான் மீண்டும். பிறகு தொடர்ந்து, ''கண்ணன் கர்வம்...'' என்றான்.

''ஆமாம்'' என்று தலையசைத்தான் ஸ்ரீதர்.

''தான் உழைத்து முன்னுக்கு வந்தவன், மகாலிங்கத்தின் வளர்ப்புப் பிள்ளை, அவருடைய பெண்டாட்டியின் தயவு பரிபூரணமாக உண்டு என்றெல்லாம் அவனுக்கு மமதை!''

''அப்படியா?''

''இதெல்லாம் போதாது என்று இப்போது மானேஜராகவும் ஆகிவிட்டான். அவன் வைச்சதுதான் சட்டம்! எதிர்பார்க்காத அளவுக்குச் சம்பளமும் உசந்துவிட்டது.''

''ஓகோ!'' - ஸ்ரீதர் தனக்குள்ளேயே கணக்குப் போட ஆரம்பித்தான்.

''இதையெல்லாம்விட இன்னொரு பெரிய காரணம் இருக்கு, கண்ணன் தலை கனமாவதற்கு!'' என்று அப்பு சொல்லிவிட்டு எங்கேயோ பார்க்கலானான்.

''என்ன காரணம்?''

''உன் அத்தை பெண் அவனைக் காதலிக்கிறாள். குழந்தைப் பருவத்திலிருந்து ஒன்றாகப் பழகினவர்கள் கண்ணனும் ராதிகாவும். ராதிகா, கல்யாணம் செய்து கொண்டால் கண்ணனைத்தான் செய்துகொள்வேன் என்ற நிலையில் இருக்கிறாள்.''

''அவ்வளவு தூரத்துக்கு அவள் வந்திருக்கிறாளா? ஆனா ஒரு பெண் தன்னைக் காதலிக்கிறாள் என்பதற்காக ஒருவன் கர்வப்படுவானேன்?'' - ஸ்ரீதர் கூடை நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து, சிகரெட்டை எடுத்து அப்புவிடம் நீட்டினான்.



''நான் ஸ்மோக் பண்ணுவதில்லை'' என்ற அப்பு, ''நாளைக்குக் கல்யாணமானால் நாதனின் சொத்தில் பாதி வந்துடுமே! ரெட்டுறவுலே ஒரு நாள் கண்ணனுக்குச் சொந்தமாகிவிடும்!''

''தம்முடைய தங்கை காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டாள் என்ற ஒரு காரணத்துக்காக அவளை அடியோடு வெறுத்தவர் அல்லவா, இந்த நாதன்? அவர் எப்படித் தம் பெண்ணின் இந்தப் போக்கைச் சகித்துக் கொள்கிறார்?''

''அவரும் எத்தனையோ முட்டுக்கட்டைகள் போட்டுக்கொண்டுதான் இருக்கிறார். ராதிகா கைநிறையச் சம்பளம் வாங்குகிற ஒருவனுக்குத்தான் வாழ்க்கைப்பட வேண்டும், மேல்நாட்டுப் படிப்பெல்லாம் படிச்சுப் பெரிய பதவியில் இருப்பவனைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் நாதன் துடியாய்த் துடிக்கிறார். இந்த ஆசை நிறைவேறணும் என்ற ஒரு காரணத்துக்காகவே ராதிகாவும் கண்ணனும் சந்தித்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவும் போட்டிருக்கிறார். உனக்கு ஒரு சம்பவம் தெரியுமா?''

''என்ன?''

பல வருஷங்களுக்குமுன் நடந்த சம்பவத்தை அப்பு சாங்கோபாங்கமாகக் கூறினான். ''வாக்கிங் ஸ்டிக்காலே கண்ணன் முதுகையே நாதன் அன்னிக்கு ராத்திரி ஒடிச்சுட்டார். கண்ணன் ராத்திரி வெட வெடக்கிற குளிரிலே விறைச்ச கட்டை மாதிரி தவிச்சான்'' என்ற அவன், ''நாதன், காதலையே தடிகொண்டு நொறுக்கப் பார்த்தார்'' என்று முடித்தான்.

''அன்னிக்கு அவ்வளவு அடி பட்டும் இவன் ஏன் சூடு சுரணையில்லாமல் ராதிகாவைச் சுற்றி அலைகிறான்?''

''இதென்ன கேள்வி, ஸ்ரீதர்? காதல்தான். ஆனால் அதுக்கு மேலாகச் சொத்து! சூடு சுரணையை எல்லா இடத்திலும் காட்ட முடிகிறதா? சில சமயங்களில் அநுசரிச்சுண்டு போகத்தானே வேண்டியிருக்கு?''

''ஆமாம், ஆமாம்'' என்ற ஸ்ரீதர், ''இப்போ ராதிகா மனப்பூர்வமாகக் கண்ணனைத்தான் விரும்புகிறாளா? இல்லை, அவளுடைய அன்பு வெறும் பழக்கத்தாலும் பாசத்தாலும் பிறந்த அன்புதானா? எதுக்குக் கேட்கிறேன்னா, முதிர்ச்சி அடையாத பருவத்தில் படர்ற ஆசை நிலைச்சு நிக்காது'' என்றான்.

''நீ இப்போது அதைப்பத்திப் பேசறபோதுதான் எனக்கும் சந்தேகம் உண்டாகிறது. ராதிகா இப்போ ரொம்ப நன்னா, ரொம்ப அழகா வளர்ந்திருக்கா. சென்னையிலே ஹாஸ்டலிலே இருந்து படிச்சிருக்கா. நவநாகரிகத்திலே திளைக்கிறா. அவ மனசு முன்மாதிரியே இருக்குமா என்கிறது சந்தேகமாகத்தான் இருக்கு.''

''எனக்குச் சந்தேகமே இல்லை, அப்பு! பதினாலு வயசிலே ஒரு பெண் ஒரு சொந்தக்காரப் பிள்ளையிடம் பிரியம் வைக்கிறதுக்கும், அதே பெண் பதினெட்டு வயசிலே.....''

''இப்போ ராதிகாவுக்கு இருபது வயசுக்கு மேலே ரொம்ப ஏறியாச்சு. இருபத்திரண்டோ, இருபத்...''

''...அதே பெண் அதே பிள்ளை மேலே காட்டற உணர்ச்சிக்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு. கண்மூடித் தனமான காதல் என்கிறதெல்லாம் சுத்த ஹம்பக். காதலனைப் புருஷனாக நெனைச்சுப் பார்க்கிற பெண் அவனுடைய படிப்பு, வேலை, சம்பளம் இதையெல்லாம் நன்றாகக் கணக்குப்போட்டுப் பார்க்கத்தான் பார்க்கிறாள்.''

''அப்படி ராதிகா கணக்குப் போட்டுப் பார்த்தால், கண்ணனுக்கு மார்க்கே கிடைக்காதே!''



ஸ்ரீதர், ''அதனால்தான் சொல்கிறேன், எனக்குச் சந்தேகமே இல்லை என்று. ராதிகா கண்டிப்பாகக் கண்ணனைப் புருஷனா நினைக்கப் பார்க்கவே மாட்டாள்!''

அப்பு துள்ளினான்.

''ஸ்ரீதர், நீ என்னமா, அழகா, ஹியூமன் சைகாலஜியை விண்டு விண்டு காட்டிவிட்டே! நீ சொல்றது அத்தனையும் கரெக்ட். இப்பத்தான் ஞாபகம் வருகிறது, முன்னொரு சமயம் நாதன் உன்னைப்பத்திப் பேசின பேச்சு!''

''என்னைப்பத்தி நாதன் பேசினாரா? என் ஞாபகமே அவருக்கு வராதே!''

''நீ அவரைப்பத்தி ரொம்பத் தப்பா எடை போடறே! இந்த இடத்திலேதான் உன் சைக்காலஜி இடறி விழறது. நீ ஊட்டுக்கு வரப்போகிற விஷயமே பிறக்காத சமயம் அது. ஒருநாள் நானும் அவருமாகப் பேசிக்கொண்டிருந்தோம். ராதிகாவின் கல்யாணப் பேச்சு வந்தது. என்ன சொன்னார் தெரியுமா? 'கற்பகத்துக்கு ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவர் இருக்கிறார். அவருக்கு நிறையப் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனா, பிள்ளைன்னு சொல்லும்படியா ஒருத்தன்தான் இருக்கான். அவனுக்கு நம் ராதிகாவைப் பார்க்கணும்னு தோண்றது, அப்பு!' என்று சொன்னார். நான் கேட்டேன், 'யார் அந்தப் பிள்ளை?'ன்னு. அவர் உன் பெயரைச் சொன்னார். நீ ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்காவெல்லாம் போயிருக்கிறது பற்றி அவருக்கு ரொம்பப் பெருமை.''

''அப்படியா? ஆச்சரியமா இருக்கே!''

''அவர் லண்டனுக்குப் போயிருக்கிறாரோ இல்லியோ? அதனாலே யார் வெளிநாட்டுக்குப் போனாலும் அவன்மேலே அவருக்கு ஒரு தனி அபிமானமும் மதிப்பும் உண்டாகிவிடும்.''

''எனக்கு அவரைச் சந்திச்சாகணும்! ராதிகாவையும் பார்த்தாகணும்!''

''பார்க்கலாம், பார்க்கலாம். ஆனா அவங்க ரெண்டு பேர்கிட்டேயும் உன்னுடைய சிநேகிதிகளைப் பத்தியெல்லாம் சொல்ல ஆரம்பிக்காதே. 'பெர்மிட்' பேச்சை எடுக்காதே. சிகரெட்கூடப் பிடிக்காதே.''

''என்ன, அப்பு, எனக்கு உபதேசம் செய்யறே? பம்பாயிலேயே நான் ஒரு சிநேகிதியைப்பற்றி இன்னொரு சிநேகிதியிடம் பேசமாட்டேன்! எப்போ பார்க்கிறது? இந்தப் பாழாய்ப் போன கண்ணன் முடியாதுன்னு சொல்லி ஜீப்பையும் எடுத்துக்கொண்டு போய்விட்டானே!''

''அந்த ஓட்டை ஜீப்பிலேயா ராதிகாவைப் பார்க்கப் போவார்கள்?''

''கண்ணன்தானே அழைத்துக்கொண்டு போகணும்?''

''யார் சொன்னார்கள்? அப்பு இருக்கிறான். இந்த ஜன்மத்தில் கண்ணன் அழைத்துக்கொண்டு போகமாட்டான். நாதன் வீட்டுக்கு நீ போகணும்னு சொன்னதுமே அவனுக்கு ஆத்திரம் பீரிட்டுக்கொண்டு வந்ததே! ஏன்..? பொறாமை!''

''நான் எங்கே சொன்னேன்?''

''அப்புதான் சொன்னான்னு வைச்சுக்குங்களேன். கண்ணன் ஆத்திரத்தைக் கொட்டினானே!''

''யெஸ், யெஸ். யூ ஆர் கரெக்ட், அப்பு. எனக்கு ராதிகாவைப் பார்க்கணும் என்கிற ஆசை விஷமா ஏறிண்டு வர்றது.''

''அந்த ஆசையைப் பூர்த்தி செய்யறதைவிட அப்புவுக்கு இந்த ஊட்டியில் வேறு என்ன வேலை? இன்னிக்கு ராத்திரியே அப்பு போய்ச் சொல்லிவிடுவான், நாளைக்குச் சாப்பாட்டுக்கு ஸ்ரீதர் வரப்போகிறான்னு. போதுமா?''



''ரொம்ப தாங்க்ஸ், அப்பு!''

''அப்போ ஊைப்பிலே மெம்பராச் சேருவதற்குக் கிளம்புவோமா?''

''கிளப்பைப்பத்தி அப்புறம் யோசிக்கலாம். நீ இப்போதே போய், ராதிகாவையும் நாதனையும் சந்திச்சு, நான் வந்திருக்கிற விவரத்தைச் சொல்லு. நாளைக்கு வரேன்னும் சொல்லு.''

''சரி, அப்போ பெர்மிட்டுக்கு இன்னொரு நாள் போய்க்கொள்ளலாம் இல்லியா?''

''ஆமாம், அவசரம் இல்லை.''

''எப்படி இருக்க முடியும்? இப்போதைக்குத்தான் ஒரு விஷயம் திடீர்னு கிடைச்சுட்டதே!''

இப்படிச் சொன்ன அப்பு, தனக்குள் சிரித்துக் கொண்டே சைக்கிளை எடுக்கச் சென்றான். லேசாகத் தூறலும் ஆரம்பித்தது. அதன் சுகத்தில் பாடிக்கொண்டே அப்பு ரெட் ஹவுஸை நோக்கி விரைந்தான்.

# 20

# ராதிகாவின் யுத்தம்

எவ்வளவு நேரந்தான் நாதன் தம்மையே இழந்து உட்கார்ந்திருந்தாரோ அவருக்கே தெரியாது. பொறுமையை யும் சாந்தத்தையும் தவிர வேறு எதையும் கண்ணனுடைய முகத்தில் கண்டிராத அவர், முதல் முதலாகக் கோபத்தையும் ஆத்திரத்தையும் கண்டுவிட்டார். இதுவரையில் அவருடைய காதுக்கு ரம்மியமாக, மனத்துக்கு இசைவாகவே பேசி வந்த அவனுடைய நாக்கு, கனலைக் கக்கிவிட்டது. அதனுடைய சூட்டில் அவர் வெந்து போனார்.

நினைக்க நினைக்க, தவறு செய்ததெல்லாம் தாமே என்ற உண்மை அவருக்குப் புலப்பட்டது. தம்முடைய சுடுசொற்கள், ஏன், மனத்தின் எண்ணங்களுந்தாம், எத்தனை தூரத்துக்குப் பிறருடைய உள்ளங்களை நோகச் செய் கின்றன? சம அந்தஸ்துள்ள எதிராளி என்றால் அவர்தாம் பேசுவாரா, அவர்கள்தாம் கேட்டுக் கொண்டிருப்பார்களா? அண்டிப் பிழைக்க வந்தவர்களும், ஏழை எளியவர் களுந்தாமே அவருடைய வார்த்தைகளைக் கேட்டுத் தலை குனிகிறார்கள்?

நாதன் மெதுவாக எழுந்தார். எப்படியாவது கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டு, அவனைச் சமாதானப் படுத்திப் பழையபடி வீட்டுக்கு வரவழைக்க வேண்டும் என்று மனம் எண்ணியது. அதே சமயத்தில், என்னதான் கண்ணன் பழையபடி வர ஆரம்பித்தாலும் அவனுடைய உள்ளம் இனிமேல் ஒட்டவே ஒட்டாது என்றும் தோன்றியது.



'கிளாஸ் ஹவுஸி'லிருந்து குனிந்த தலை நிமிராமல், கையில் இருக்கும் கைத்தடியைப் பூமியில் தேய்த்துக் கொண்டே போர்ட்டிகோவை அடைந்தார். திண்ணையைத் தாண்டி, ஹாலுக்குள் பிரவேசித்தபோது ரேடியோ அருகே, கண் ராதிகாவைத் தேடியது. தன் அறையிலேயே இருக்கிறாள்போல் இருக்கிறது என்று தம்முள்ளேயே முணுமுணுத்த அவர் ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டார். கண்கள் சுவர்மேல் தொங்கிய பல படங்களை அர்த்தம் இல்லாமல் பார்த்தன.

திடீரென்று ஒரு படம் அவருடைய கவனத்தை ஈர்த்தது. மெதுவாக எழுந்து அருகில் சென்று பார்த்தார்.

காலத்தால் மஞ்சள் ஏறிய அந்தப் போட்டோவில் அவர் தம் தந்தையின் காலடியில் உட்கார்ந்திருந்தார். அப்பாவின் மடியில் நான்கு வயசுப் பெண் ஒருத்தி மத்தாப்புப் போலச் சிரித்தவளாய் உட்கார்ந்திருந்தாள். பின்னால், காதில் தோடும், மூக்கில் மூக்குத்தியும் பேஸரியும் புல்லாக்குமாய் அம்மா நின்றிருந்தாள்.

படத்தைப் பார்க்கப் பார்க்க, அது விசுவரூபமாக வளர்ந்து வளர்ந்து, அன்றுதான் எடுத்த போட்டோவாகத் தோன்றியது. அடுத்த கணமே அந்தப் போட்டோவில் இருக்கிறவர்களில் எவருமே இப்போது இல்லை என்ற எண்ணமும் பிறந்தது. நான்கு வயசுப் பெண் ஐந்தாவது வயசை அடைவதற்கு முன்னமே, பெற்றவள் மறைந்துவிட்டாள். பெண்ணை வளர்த்துப் பெரியவளாக்கி, சாகிற கட்டத்திலும் அவளுடைய பிடிவாதத்தை அநுபவித்து, அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டு நிம்மதியில்லாமல் பிராணனை விட்ட தந்தையும் இப்போது இல்லை. நாலு வயசுப் பெண் சீதா இப்போது எங்கே இருந்தாலும் அவருக்கு இல்லாதவள் ஆகிவிட்டாள்.

போட்டோ மஞ்சள் ஏறி, மங்கிக் கிடந்தாலும் அது தன்னுடைய நித்தியத்துவத்தில் பிறருடைய அநித்தியத்துவத்தைப் படம் பிடித்துக் காட்டிவிட்டது. இன்னும் கொஞ்ச காலத்தில் பெற்றோர் சென்ற வழியிலே அவரும் போய்விடுவார்! இந்தப் போட்டோ இன்னும் தன்னுடைய பழமையில் திளைத்துக்கொண்டு மஞ்சள் பிரகாசத்தில் இருந்துகொண்டே இருக்கும்.

கண்ணில் நீர் மல்க அவர் படத்தை மீண்டும் பார்த்தார். திடீரென்று இதுவரை மனத்தைத் தொட்டிராத காட்சி கண்ணில் பட்டது. தந்தையின் மடியில் உட்கார்ந்திருந்த சீதாவின் கால்களில் ஒன்று நாதனுடைய தோளில் உராய்ந்து கொண்டிருந்தது. இக்காட்சியைப்பற்றி நினைக்க நினைக்க, அன்று அவர் என்ன சொல்லியும் கேளாமல் சீதா சிரித்துக்கொண்டே தன் காலை அவருடைய முதுகின்மேல் ஒட்டிக்கொண்டிருந்தாள். எங்கே நகர்ந்து உட்கார்ந்தால் போட்டோ எடுக்கிறவர் கோபித்துக்கொண்டு விடுவாரோ என்ற பயத்திலும், போட்டோவில் நாம் சரியாக விழாமற் போய்விடுவோமோ என்ற கவலையிலும் அவர் சகித்துக் கொண்டிருந்தார். போட்டோ எடுத்த பின்பு, ''ஏன் என் முதுகிலே காலை வைச்சே?'' என்று அவர் அவளுடைய காதைக் கிள்ளியதும் இப்போது நினைவுக்கு வந்தது.

திடீரென்று படத்தைப் பார்க்கச் சோபாவிலிருந்து எழுந்தது போலவே, திடீரென்று போட்டோவிலிருந்தும் நாதன் திரும்பினார். இத்தனை காலமாக அவரைப் பொறுத்த மட்டில் இறந்தேபோன சீதா உயிர் பெற்று வந்துவிட்டவளாகத் தோன்றினாள். அந்தத் தோற்றம் அப்படித் திடீரென்று எழுந்தபோதிலும் அவரால் மேலே சிந்திக்க முடியாமல் மனம் தவித்தது. என்னதான் தம்மைத் தாமே நிதானித்துக் கொண்டு சிந்தனையில் ஈடுபட்ட



போதிலும், அவர் விழைந்தபடி சீதா தனித்து நிற்கவில்லை. கூடவே கண்ணனும் அதைத் தொடர்ந்து ராதிகாவும் கண்முன் நின்றார்கள். ஏன் என்று தெரிந்தும் அதன் உண்மையை மட்டும் அவரால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. ராதிகாவுக்கும் சீதாவுக்கும் உள்ள வேற்றுமை களைவிட, அவர்களுடைய போக்கின் ஒற்றுமைதான் கடைசியில் அவர் உள்ளத்தில் தேங்கி நின்றது.

திடீரென்று அவருடைய சிந்தனையைத் துண்டித்தது ஒரு குரல். நிமிர்ந்து பார்த்தார். பாலம்மா நின்று கொண்டிருந்தாள்.

''ராதி இன்னும் சாப்பிடலே!''

''அப்படியா?'' என்று கேட்டாலும், நாதனுடைய உள்ளத்தில் ஆச்சரியம் ஒலிக்கவில்லை.

''ஆமாம். நேத்து ராத்திரியும் பட்டினி. கார்த்தாலே ஒரு தம்ளர் பால் குடிச்சதுதான்.''

''நீ சொல்லிப் பார்க்கலியா?''

''காலில் விழாத தோஷமாய்க் கெஞ்சியாச்சு. அசையமாட்டேன் என்கிறாள்.''

''இப்போ என்ன செய்கிறாள்?''

''அறையிலே சுருண்டு படுத்துக்கொண்டிருக்கா. அவளாலே பசி தாங்க முடியாது.''

''இப்போ நான் என்ன செய்யணும்?''

''நீங்கதான் சமாதானப்படுத்தி உட்கார வைக்கணும்.''

''பாலம்மா!'' என்ற நாதன் திடீரென்று தம்மையும் மீறிப் பேசலானார். அவருக்குச் சித்தப் பிரமை பிடித்துவிட்டது என்று பாலம்மாவின் நெஞ்சம் கலங்கியது.

''என் தங்கை சீதாவைத்தான் நீ அந்தக் காலத்திலே பார்த்திருப்பியே. அவளை யாராவது வாய் வார்த்தையால் சமாதானப்படுத்த முடியுமா? அது போலத்தான் என் பெண்ணும்.''

பாலம்மா வாயடைத்து நின்றாள்.

''எங்க அப்பாவுக்குச் சீதா பெண்ணாகப் பிறந்தது மாதிரி எனக்கு ராதிகா பிறந்திருக்கா. சீதா அநுபவிச்சதையே இவளும் அநுபவிக்கப் போகிறாளோ, இல்லை, இவளுடைய வாழ்வு வேறு விதமாக இருக்கப்போகிறதோ, யார் கண்டார்கள்?''

''ராதிக்குப் பாவம், பசிக்குமே!''

பாலம்மாவின் வார்த்தைகள் நிதானமாக வருகையிலேயே நாதனுடைய சிந்தனையும் விரைவாகப் புறப்பட்டது. ராதிகாவின் தாகமும் பசியும் நாவிலிருந்தும் வயிற்றிலிருந்தும் கிளம்பும் தாகம் பசி அல்ல. எல்லாம் அவளுடைய நெஞ்சின் தாகம்; பசி! அன்று சீதாவுக்கு ஏற்பட்ட பசி, தாகம்!

திடீரென்று அவர் உன்மத்தம் பிடித்தவரைப் போலக் கத்தினார்.

''அவளுக்குப் பசியினாலே பிராணன் போனால் போகட்டும். என்னாலே இதுக்கெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது!''

பாலம்மா நின்ற இடத்தைவிட்டு அசையவில்லை.

''நீ ஏன் இன்னும் நிற்கிறாய்? உன் வேலையைக் கவனி.''

''ரசஞ்சாதமாவது கரைச்சுக் குடிக்கட்டும். நீங்க எழுந்து ஒரு வார்த்தை சொல்லுங்கள்.''

''என் வார்த்தையை அவள் கேட்க மாட்டாள்.''

''அப்போ என்ன செய்யறது?''

''அதுதான் சொன்னேனே, பசியினாலே பிராணன் போகட்டும்னு!''

''நீங்க எளிதாச் சொல்லிவிட்டீர்கள். பாவம், குழந்தை பசியிலே துடிச்சுண்டிருக்குமே!''



''அவ தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுண்டா. அதுக்கு நான் என்ன செய்யறது? சேசே என்ன ஜன்மம் இது?''

''கண்ணன் இன்னிக்கும் சாப்பிட வரலை என்கிற தாபம் அவளுக்கு. அதுக்கு நீங்கதான் காரணம் என்று கோபம். அவள் அப்படி நெனைக்கிறது சரியோ தப்போ நீங்க ரெண்டு வார்த்தை சொன்னா, சரின்னு சாப்பிட வந்தாலும் வருவாள்.''

நாதன் பொறுமை இழந்தார்.

''சரி, சரி; ரசஞ்சாதம் பிசைஞ்சு கொண்டு வா'' என்று சொல்லிவிட்டு எழுந்தார். ராதிகாவின் அறையை நோக்கி நடந்தார்.

ஒரு மணி நேரம் பெண்ணுடன் போராடியதுதான் எஞ்சி நின்றது. வெள்ளிக் கிண்ணத்தில் கொண்டுவந்த ரசஞ்சாதத்தைப் பாலம்மா திருப்பி எடுத்துக்கொண்டு போனாள்.

அந்த ஒரு மணி நேரத்தில் நாதன், கண்ணன் கிளாஸ் ஹவுஸில் பேசிய பேச்சுக்களை எல்லாம் ராதிகாவிடம் கூறினார். இனி அந்த வீட்டுப் பக்கமே தான் வரப்போவதில்லை என்று அவன் செய்த சபதத்தையும் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு ராதிகா, மறுபக்கமாகப் பார்த்துப் படுத்துக்கொண்டாளே தவிரப் பதில் ஏதும் பேசவில்லை.

இனி என்ன செய்வது என்று நாதன் மண்டையை உடைத்துக்கொண்டிருக்கையில் திடீரென்று, ''குட் ஈவினிங், ஸார்'' என்று கத்திக்கொண்டே அப்பு சைக்கிளிலிருந்து குதித்தான்.

அவனைப் பார்த்ததுமே நாதனின் உள்ளத்தில் ஒரு யோசனை பிறந்தது.

21

# ஒரு நாள்

**சைக்**கிளிலிருந்து குதித்த அப்பு, நாதனுடைய முகத்தைப் பார்த்ததுமே ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று ஊகித்துவிட்டான். தன் 'குட் ஈவினிங்' குக்கு அவருடைய வழக்கமான புன்முறுவல் பதிலாக வராதது வேறு, அவனுடைய பயத்தை ஊர்ஜிதப் படுத்தியது.

அவன் பேச ஆரம்பிப்பதற்குள் நாதனே முந்திக் கொண்டுவிட்டார்.

''அப்பு, உன்னால் எனக்கு இப்போ முக்கியமான காரியம் ஆகணும்'' என்றார். கேட்கையிலேயே, இது மாதிரி யாரிடமும் கையேந்தி நிற்பதுபோலக் கேட்டது கிடையாதே என்று அவருடைய நெஞ்சு வலித்தது.

''அப்புவாலே இன்னிக்கு இனிமே குன்னூருக்கோ, கோயம்புத்தூருக்கோ போகமுடியாது. ஏன், ஊட்டிக்குக்கு கூட முடியாது!'' என்றான். நாதன் அவனை இந்த ஊர்களிலே ஒன்றுக்குத்தானே வழக்கமாக அனுப்புவார்?

''நீ வெளியூர் எதற்கும் போக வேண்டாம்.''

''உள்ளூரிலேயேதான் காரியமா? சொல்லுங்கள்.''

''கண்ணனை இப்போதே அழைத்துக்கொண்டு வரணும்.''

''கண்ணனையா?''

''ஆமாம். அவன் திடீர்னு கோபித்துக்கொண்டு போய்விட்டான்.''



''தடியாலே அடித்தீர்களா?''

''நீ இப்போ என்னை அடிக்காதே, அப்பு. நான் ரெண்டு வார்த்தை என்னை மீறிப் பேசிவிட்டேன். என்னுடைய தங்கையைப்பத்தி ஏதோ சொன்னேன். 'என் அம்மாவைப்பத்திப் பேச உங்களுக்கு உரிமையோ யோக்கியதையோ இல்லை' என்று சொல்லிப் போய்விட்டான்.''

''அம்மா எப்படிப்பட்டவளாக இருந்தாலும் பிள்ளைக்கு அதனாலே அன்பு குறைஞ்சுடாது.''

''தெரிஞ்சும், தெரியாமே உளறிக் கொட்டிவிட்டேன், அப்பு! இப்போதே போய் அவனை அழைத்து வா.''

''மறுபடியும் ஏதாவது உங்களை மீறிச் சொல்லி விடுவீர்கள். விஷயத்தை ஆறப்போடுங்கள்.''

''இது ஆறாத விஷயம். நான் இன்னிக்கே அவன்கிட்டே மன்னிப்புக் கேட்டாகணும். இல்லாவிட்டால் எனக்குத் தூக்கம் வராது.''

''ஏதாவது புஸ்தகம் படியுங்கள். நாளைக்கு அவனாகவே வருவான்.''

''இனிமே அவன் இந்த வீட்டுப் பக்கமே வருவதில்லைன்னு சபதம் செய்திருக்கிறான்.''

அப்பு கலகலவென்று சிரித்தான். அவனுடைய சிரிப்பு நாதனின் மனத்தில் ஆத்திரத்தைக் கிளப்பினாலும் ஒருவிதத் தெம்பையும் அளித்தது. கண்ணன் தானாகவே திரும்பி வருவான் என்ற நம்பிக்கையை அப்பு அளிக்கிறானா?

''ஏன் சிரிக்கிறே, அப்பு?''

''இந்தக் கண்ணன் வராவிட்டால் என்ன ஆகிவிடப் போகிறது? வந்துகொண்டிருந்தால்தானே இடைஞ்சல்?''

அப்புவின் மனம் எப்படி வேலை செய்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் தவித்த நாதன், ''நீ என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

''கண்ணன் தானாகவே வராமல் போனால் உங்களுக்குத்தான் நல்லது. அவன் என்ன சாதித்திருக்கிறான்?''

நாதன் அப்புவை ஏறிட்டுப் பார்த்தார். மனம் குழம்பியது.

''இந்த அப்பு அப்பட்டமாகச் சொல்றானேன்னு தப்பா எடுத்துக்கொள்ளாதீர்கள். ஏதோ ஒரு பாசத்திலே நீங்கள் 'கண்ணன்'னு உசிரை விட்டுக்கொண்டிருந்தீர்கள். அவன் எதற்காக இங்கே உங்களைத் தினம் தினம் பார்க்க வர்றான்? உங்களைக் குசலம் விசாரிக்கவா?''

கேள்வி கேட்டுவிட்டு அப்பு ஒரு கணம் அவரையே பார்த்தான். பிறகு நிதானமாக, ''அவன் மனசிலே நீண்ட காலமாகவே ஒரு திட்டம் உருவாகியிருக்கிறது. அது அப்புவுக்குத் தெரியும். ஆனா உங்களுக்குத் தெரியாது என்கிறதுதான் ஆச்சரியமா இருக்கு'' என்றான்.

''என்ன திட்டம்?''

''தாயில்லாப் பெண்; அப்பாவுக்கு வயசாகிண்டு வருகிறது. எதையும், தங்கைக்காகத் தியாகம் செய்யக்கூடிய ஓர் அண்ணன்; அவனும் தொலை தூரத்தில் இருக்கிறான். இந்தச் சூழ்நிலையில் இந்த அப்பன்காரனுடைய மனசில், குழைந்து குழைந்து பேசி, இதமாக நடந்துகொண்டு, தன்னைத் தானே ஸ்தாபித்துக் கொண்டால் அதனால் கிடைக்கக்கூடிய லாபம் கொஞ்சமா? அழகான பெண் மனைவியாகக் கிடைப்பாள். சொத்து நிறையக் கிடைக்கும். இதைவிட ஒரு மனுஷனுக்கு என்ன கிடைக்கும், கஷ்டப்படாமல்?''

''கண்ணனைப்பத்தி நீ மட்டமாக நினைக்கிறே, அப்பு. இத்தனை நாள் அவனைவிட நல்ல பிள்ளை உலகத்திலேயே இருக்க முடியாதுன்னு சொல்லிண்டு வந்தாயே!''



''அதை அப்பு மறுக்கலே. ஆனா கண்ணனுடைய மனசு இப்போ எப்படி எப்படியெல்லாம் கோட்டை கட்டுகிறது என்கிறேன். நீங்கள் என்னடான்னா, அவன் கோபிச்சுண்டு போய்விட்டான், அவன் காலிலே விழறேன்னு எல்லாம் சொல்லி, மனசை அலட்டிக் கொள்ளுகிறீர்கள். அவன் வேணும்னுதான் கோபிச்சுண்டு போயிருக்கிறான் - இதுமாதிரி ஒரு நிலைமை ஏற்படுத்த. இதுகூட உங்களுடைய ஐ.ஏ.எஸ். மனசுக்குப் புரியவில்லையே!''

''உண்மையாகவா? ஆனால் அவனும் ராதியும் ரொம்பப் பழகியிருக்கிறார்களே!''

''எப்படிப் பழகாமே இருக்க முடியும்? கண்ணன் உங்க வீட்டிலே வளர்ந்தவன். தினம் தினம் இரண்டு பேரும் பேசிக்கொண்டுதானே ஆகணும்? ராதிகாவுக்குப் பருவம் வர்றத்துக்குள்ளே, அவ மனசிலே ஓர் இடம் பிடிச்சுண்டுட்டான். இந்த ராதிகாவைவிட இன்னொருத்தி, இன்னும் பெரிய பணக்காரப் பெண் கிடைக்கிற மாதிரி இருந்தா, நாளைக்கே கிளை தாண்டி விடுவான்.''

''கண்ணனைப்பத்தி நான் இவ்வளவு கீழ்த்தரமா எடை போடமாட்டேன். இந்த மாதிரியான எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் அவன்.''

''அப்போ சரி; அப்பு இப்போதே போய்க் கண்ணனை அழைச்சுண்டு வருவான். நீங்க அவன் முன்னாலே சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி, அவனுடைய கால்களையும் கண்ணில் ஒத்திக்கொள்ளுங்கள்.''

சொல்லிவிட்டு அப்பு, சைக்கிளை நோக்கி நடக்க யத்தனித்தான்.

''இரு, அப்பு. இங்கே வா.''

''என்ன?'' - நின்ற அப்பு நின்ற இடத்திலிருந்தே கேட்டான்.

''அப்போ கண்ணன் வேஷம் போடறானா?''

''அந்த வேஷந்தான் உங்க கண்ணுக்கும், உங்க பெண் கண்ணுக்கும் தெரியலையே! அப்பு போய் அவனை இப்போதே அழச்சிண்டு வரப்போறான்.''

''வேண்டாம், வேண்டாம்.''

''மாமா!'' என்று அழைத்துக்கொண்டே அப்பு அவரருகில் வந்தான்; ''அப்பு சொல்லிவிட்டான் என்கிறதற்காக ஏன் திடீர்னு மனசை மாத்திக்கிறீர்கள்? ஒருவேளை அப்பு தப்பாக எடை போட்டிருக்கலாம், அல்லது எதையோ மனசில் வச்சுண்டு பொய் சொல்லலாம்னு ஏன் உங்களுக்குத் தோணமாட்டேன்கிறது?''

''உனக்கு யாருகிட்டே யிருந்தும் ஒரு காரியமும் ஆகவேண்டாமே, அப்பு. தெய்வம் நேரே வந்தாக்கூட அடிச்சுப் பேசறவன் நீ. நீ எப்படிப் பொய் சொல்லுவே?''

''மாமா, அப்பு சொல்றானேன்னு கோபிச்சுக்கா தீங்கோ. உங்களுக்கு நிறையப் படிப்பு இருக்கு. பெரிய பதவி இருந்திருக்கு. அமோகமான சொத்து இருக்கு. ஆனா உலக அநுபவம், மற்றவர்களைப் புரிஞ்சுக்கிற சக்தி இந்த ரெண்டும் கிடையவே கிடையாது.''

''அதைத்தான் ஒரு தரம் சொல்லிக் காட்டி விட்டாயே!''

''இன்னொரு தரம் சொல்றதுக்கு ஒரு வாய்ப்பை உடனே கொடுத்துவிட்டீர்களே! அது சரி, இந்தக் கண்ணனைப்பத்தி இனிமே பேச வேண்டாம். ராதிகா எங்கே?''

''உள்ளே படுத்துக்கொண்டிருக்கா. நீதான் அவளையும் சமாதானப்படுத்தணும். இன்னிக்குப் பூரா அவள் சாப்பிடவில்லை.''



''இந்த வீட்டில் யாருமே சரியாக இல்லையா? பாலம்மாவாவது எப்போதும் போல இருக்கிறாளா? இல்லாவிட்டால், அடுப்புமேலே பூனை தூங்குமே!''

''விளையாடாம நீ ராதிகாவைப் பார்த்து ரெண்டு வார்த்தை சொல்லு. அவ மனசிலேயும் காளான் இருக்கு. அதைக் களைய வழி பண்ணு.''

''அவ மனசை மாத்த வாய் வார்த்தைமட்டும் போதாது, மாமா'' என்று ஆரம்பித்த அப்பு, திடீரென்று நிறுத்திவிட்டு, ''ராதிகா எல்லாம் சரியாகப் போயிடுவா; கவலைப்படாதீர்கள். அப்பு எதுக்காக இன்னிக்கு வந்திருக்கிறானோ, அந்தக் காரியமே பலிக்காது போலிருக்கு'' என்றான்.

''ஏன்?''

''நீங்கதான் உப்புச் சப்பில்லாத விஷயத்தை ஆரம்பிச்சு இத்தனை நேரம் பேசவைத்தீர்களே! ஸ்ரீதர் வந்திருக்கிற சமாசாரத்தைச் சொல்லலாம்னு வந்தான் அப்பு.''

''அவன் வரான்னு தெரியும்.''

''வந்தாச்சு.''

''என்ன சொல்றான்? ஏன் இங்கே நேரே வரவில்லை?''

''நீங்க ஏதாவது தப்பா நினைத்துக்கொள்ளு வீர்களோன்னு பயந்தானாம். அடிநாளிலிருந்தே நீங்கதான் எல்லார் மனசிலேயும் பயத்தை வளர்த்திருக்கிறீர்களே!''

''ஸ்ரீதர் எப்படி இருக்கான்?''

''ராஜா மாதிரி இருக்கான். கண்ணனைவிட நல்ல லட்சணம். பெரிய படிப்பு. அதுவும் வெளிநாட்டுப் படிப்பு. மகாலிங்கமே ரெண்டாயிரம் கொடுக்கிறதுன்னா பார்த்துக் கொள்ளுங்களேன்.''

''நீயாவது அவனை இங்கே அழைத்துக்கொண்டு வந்திருக்கலாம்.''

''அப்பு எப்படி முன்பின் சொல்லாம அழைச்சுண்டு வருவான்? அவன்கிட்டே ஏதாவது 'வெடுக்'குனு பேசினீங்கன்னா யார் தலை குனிகிறது? ஸ்ரீதர் பழைய ஸ்ரீதரா?''

''நாளைக்குக் கார்த்தாலே அழைச்சுண்டு வா.''

''மாமா, அவன் குணம் ரொம்ப நல்ல குணம். மனுஷன் கிட்டப் பழகுகிற தோரணையே அலாதி. கடுகு அத்தனை கர்வம் இல்லை. இன்னிக்குக் கண்ணனை அவனையும் விடல்லை. கன்னாபின்னான்னு பேசினான்.''

''அப்படியா? எதற்கு?''

'' 'என் ஒண்ணுவிட்ட அத்தையின் புருஷர் இருக்கிறார். அவர் வீட்டுக்கு அழைச்சுண்டுபோ'ன்னு கேட்டான் ஸ்ரீதர். கண்ணனா அழைச்சுண்டு வருவான்? 'மகாலிங்கம் இந்தமாதிரி வேலைகளுக்காகச் சம்பளம் கொடுக்கல்லை' என்ற ரீதியில் பதில் சொன்னான். இன்னொருத்தனாக இருந்தால் கையோங்கி அடிச்சிருப்பான். ஸ்ரீதர் சாது. பேசாம இருந்தான்.''

''நாளைக்குக் கண்டிப்பா அழைச்சுண்டு வரணும் நீ.''

''அது சிலாக்கியமாப் படலை.''

''ஏன்?''

''நீங்களே போய் அழைக்கணும்.''

''எங்கே தங்கியிருக்கிறான்?''

''மகாலிங்கம் கட்டிப் போட்டிருக்கிற 'கெஸ்ட் ஹவுஸி'ல்.''

''நாளைக்குக் கார்த்தாலே எட்டு மணிக்குப் போறேன். அதுக்கு முன்னாடி நீ அவனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிடு. வேறு எங்காவது சாப்பிடக் கூப்பிட்டால்?''



''ஓ, விருந்தா?''

''ஆமாம். நீயும் வந்துடு.''

''ஊஹூம்.''

''ஏன், அப்பு?''

''அப்புவை என்னிக்காவது தனியாக் கூப்பிட்டிருக்கிறீர்களா? முக்கியத்துவம் அவனுக்கு. அப்பு ஓர் சயக்குண்டு. அது தெரிஞ்சும் கூப்பிடுகிறீர்கள் என்றால் அழைப்பு ஆத்மார்த்தமா வரலைன்னு அர்த்தம்.''

''இன்னிக்கே பார்த்து விஷயத்தைச் சொல்லிடு.''

''சரி. அப்போ கண்ணனைப் பார்க்க வேண்டாம்; இல்லையா?''

''அவசியம் இல்லை.''

''அப்பு போட்ட எடை தப்பாக இருந்தா நாளைக்கு மனசு கஷ்டப்படுவீர்கள்.''

''அப்போது அழைச்சுண்டு வந்தாப் போரும்.''

''ரொம்ப சரி. ராதிகாவைப் பார்க்கப் போறான் அப்பு.''

அப்பு ஹாலுக்குள் தாவினான். அவனையே பார்த்து உட்கார்ந்திருந்த நாதன் தம் மனத்திலிருந்து ஒரு பெரும் பாரம் இறங்கிவிட்டதாக எண்ணிச் சமாதானம் அடைந்தார். ஸ்ரீதரைப்பற்றிச் சிந்தனை ஆரம்பித்தது. அது அர்த்தம் இல்லாமல் ஓட, ஓட, என்றுமே அநுபவித்திருக்காத திருப்தியும் பிறக்கலாயிற்று. ஆனாலும் இடையிடையே உள்ளம் கண்ணனை நினைத்துக் கேவுவதையும் உணர்ந்தார்.

ஹாலுக்குள் தாவின அப்பு, பக்கத்து அறையைக் கடந்து, ராதிகாவின் அறையின்முன் வந்து நின்றான். கட்டிலில், இரண்டு தலையணைகளின்மீது சாய்ந்தவளாய், அரைக் கண் மூடியபடி இருந்தாள் அவள்.

தான் நின்றுகொண்டிருப்பதை அவள் இன்னும் உணரவில்லை என்று கண்டுகொண்ட அப்பு அவளைக் கூர்ந்து நோக்கினான். விளக்கொளியில் அவளுடைய முகம் சுருங்கிக் கிடந்தது. உதடுகள் அடிக்கடி ஏதோ முணு முணுப்பதுபோல அசைந்தன. முகமெல்லாம் மனவேதனை பிரதிபலிப்பதாக நினைத்தான் அப்பு. இதற்கெல்லாம் யார் காரணம்? தாயில்லாத பெண்ணாக வாழட்டும் என்று போன கற்பகம ? அல்லது தமது கற்பனையில் எழுந்த திட்டப்படியே அவளை இதுவரையில் வளர்த்து, அதனால் தாமும் ஏமாந்து அவளையும் ஏமாற்றும் தகப்பனாரா? இல்லை, பிழைக்கத் தெரியாத கண்ணனா?

ராதிகாவின் பிஞ்சு போன்ற வதனம் எப்படிக் கருகிவிட்டது என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்ட அப்புவின் மனத்தில் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. அடுத்த கணம் அவன் சமையற்கட்டை நோக்கி நடந்தான்.

''பாலம்மா, அப்பு வந்திருக்கிறான்!''

சமையற்கட்டிலேயே உட்கார்ந்து, காஞ்சி காமாட்சியின் தோத்திரப் பாடல்களைப் படித்துக் கொண்டிருந்த பாலம்மா ஏறிட்டுப் பார்த்தாள். அவள் முகம் ஆச்சரியத்தைக் கொட்டியது. இதுவரையில் அப்பு சமையற் கட்டுக்கு வந்ததே இல்லை.

''என்ன பாலம்மா, அப்படிப் பார்க்கிறே?''

''ஒண்ணும் இல்லை அப்பு, சௌக்கியமா இருக்கியா?''

''சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்? ராதிகா சாப்பிட்டாளா?''

''இல்லை.''

''ஏன்?''



''அடம் பிடிக்கிறாள்.''

''எதுக்கு?''

''எதுக்கானால் என்ன? உன்னாலும் என்னாலும் அவளைச் சமாதானப்படுத்திச் சாப்பிட வைக்க முடியாது. அவளுடைய அப்பாவாலேயே முடியலை.''

''அவர் சாப்பிட்டாரா?''

''உம்.''

''நீ சாப்பிட்டாயா?''

''என்னாலே பசி தாங்க முடியாது.''

''தாங்க வேண்டாம், தாங்க வேண்டாம். அது சரி, வீட்டிலே தக்காளிப் பழம் இருக்கா?''

''இருக்கு.''

''குளுகோஸ் இருக்கா?''

''இருக்கு.''

''சரி, அஞ்சாறு பழத்தை நன்னாப் பிழி. ரெண்டு ஸ்பூன் குளுகோஸும் போடு.''

அப்பு கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறவன்தான் என்று பாலம்மாவுக்குத் தெரிந்திருந்தாலும், தக்காளி ரசமும் குளுகோஸும் கேட்பது ஆச்சரியமாக இருந்தது. அவள் தயங்கினாள்.

''என்ன பாலம்மா, சும்மா உட்கார்ந்திருக்கே?''

''அவர் கோபிச்சுக்குவார். அவர் சொல்லாம நான் எப்படி...?'' என்று இழுத்தாள்.

''ஓ, அப்பு குடிக்கக் கேட்கிறான்னு நெனைச் சுண்டிருக்கியா? இந்த அப்புவின் உடம்பு இனிமே எதைக் குடிச்சாலும், தக்காளி ஜூஸ் என்ன, பாதாம் கீர் சாப்பிட்டாலும், தேறாது.''

''ராதிக்கா?''

''இதைப் புரிஞ்சுக்க உனக்கு இத்தனை நேரமாச்சோ? உம், உம் எழுந்திரு.''

பாலம்மா எழுந்திருக்கவில்லை.

''அவ அப்பாவே கெஞ்சிப் பார்த்தாகிவிட்டது. ஒண்ணும் சாயவில்லை.''

''அப்பு பார்க்கப் போறான்.''

''தக்காளிதான் வீணாகும்.''

''வீணாகாது. நீ எழுந்திரு. உம், சீக்கிரம்; பசி மயக்கத்திலே கிடக்கிறா.''

''நீ இப்போ முதல்லே நான் சொல்றபடி செய். உனக்குப் பசின்னா என்னன்னு தெரியாது. சமையல் அறையிலேயே இருக்கே.''

பாலம்மா மெதுவாக எழுந்திருப்பதைப் பார்த்ததும் அப்பு சிரித்தான். ''பாலம்மா, நீ நத்தையாகவோ ஆமையாகவோ பிறந்திருக்கணும். அவ்வளவு வேகமாகக் காரியம் செய்யறே!''

''இப்படியே நானும் முப்பது வருஷம் ஓப்பேத்தி யாச்சு.''

**அ**ப்பு ஒரு தட்டில் பிஸ்கோத்துக்களையும் தக்காளி ரசத்தையும் எடுத்துக் கொண்டு ராதிகாவின் அறைக்குள் நுழைந்தான்.

ராதிகா ஏதேதோ முனகிக்கொண்டிருந்தாள்.

''ராதிகா, ராதிகா, கொஞ்சம் கண்ணைத் திறந்து பார். யார் வந்திருக்கிறா, பாரு!''

''உம், உம்.'' முனகல் நிற்கவில்லை.

''ராதிகா.''



''உம்.''

''கண்ணைத் திறவேன்.''

அரைத் தூக்கத்தில் பிதற்றிக்கொண்டிருந்தவள் திடீரென்று கண் விழித்தாள். பார்வையின் அர்த்தம் புரிவதற்கு முன்னமே வார்த்தைகள் காதில் ஒலித்த நினைவு தோன்றவே, ''யாரு, கண்ணனா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். கண்ணனுடைய தூதன்.''

''நான் ரொம்பக் கோபிச்சுண்டுட்டேன்.''

''அதனால்தான் மன்னிப்புக் கேட்கத் தூதனை அனுப்பியிருக்கிறான். உட்கார். அப்புவைப் பார்.''

''ஓ, அப்புவா? இது என்ன?''

''பிஸ்கட். டொமேடோ ஜூஸ்.''

''எனக்கு வேண்டாம்.''

''பட்டினி கிடக்கக் கூடாது.''

''பட்டினி கிடந்தா உனக்கு என்ன?''

''நீ பட்டினி கிடந்தா அப்புவுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. நாளைக்கே சேர்த்துவைச்சுச் சாப்பிடுவே!''

''அப்போ ஏன் நிக்கறே? இங்கேயிருந்து போ!''

''வந்ததும் வராததுமாய்த் திரும்பிப் போறதுக்கு அப்பு இப்போ வரலை.''

''பின்னே எதுக்கு வந்திருக்கே? என் கழுத்தை அறுக்கவா?'' எழுந்து உட்கார்ந்த ராதிகா கத்தினாள். ஆனால் குரல் சக்தியற்ற குரலாக, ஜீவனற்ற குரலாக, ஈனமாகக் கேட்டது.

''கண்ணன், அப்பு கழுத்தை அறுக்கிறான்!''

''அறுக்கட்டும். அப்பா என் கழுத்தை அறுத்தார். நான் கண்ணன் கழுத்தை அறுத்தேன். அதனாலே...''

''அவன் அப்பு கழுத்தை அறுக்கிறான். அப்புவைப் பாரு, ராதிகா. அப்புவின் கழுத்தைப் பாரு. குச்சி மாதிரி உடம்பிலே சின்னஞ் சிறுசா, முக்கால் இஞ்சுக் குழாய் மாதிரி இருக்கு கழுத்து. அதையும் கண்ணன் அறுத்துட்டா அப்புறம் அப்பு எப்படி உசிரோட இருப்பான்?''

''எதுக்கு அறுக்கிறான்?''

''ரெண்டு நாளா நீராகாரங்கூட இல்லை.''

''யாருக்கு? உனக்கா?''

''அப்புவுக்கானால் இந்த ஜவுல் இந்த ரூம்வரை வருமா? கண்ணன் மூந்தாநாள் சாப்பிட்டதுதான். நேத்து மத்தியான்னம் ஒழியலை. ராத்திரி இங்கே வரணும்னு இருந்தான். பாழாய்ப் போற வேலை குறுக்கே வந்தது. இன்னிக்கு வரணும்னு நெனைச்சான். வந்திருக்கிறானே, ஒரு உதவாக்கரை ஸ்ரீதராம் ஸ்ரீதர்! அந்தப் பதர் பேசிப் பேசி டயத்தை வீணாக்கினான். கடைசியிலே அவனையும் மீறிண்டு இங்கே வந்தப்போ உங்கப்பா நந்திமாதிரி நின்னார்.''

ராதிகாவின் மௌனத்தைக் கண்ட அப்பு தொடர்ந்து, ''இந்தா, முதல்லே இதைக் குடி'' என்றான். பிறகு, ''அரை மணி நேரத்துக்கு அப்புறம் சாப்பிடு'' என்றான்.

''எனக்கு வேண்டாம்.''

''சரி, ரொம்ப சந்தோஷம். அங்கே கண்ணன் பட்டினியிலே சாகட்டும். நீ அந்தச் சந்தோஷத்திலே நிம்மதியா இங்கே இரு.''

''கண்ணன் பட்டினி கிடக்கிறானா? நீ பொய் சொல்றே.''

''அப்பு திருடினாலும் திருடுவான். ஆனா, பொய் மட்டும் சொல்ல மாட்டான்.''



''நான் நம்ப மாட்டேன்.''

''வயிறு காலியா இருக்கறப்போ, உன் மனசிலே நல்ல எண்ணம் எதுவுமே வராது. சாப்பிடு. அப்புறம் யோசனை செய். அந்த அப்பாவி அநாதைக் கண்ணனைச் சாக அடிக்காதே.''

''கண்ணன் ஏன் சாப்பிடவில்லை?''

''இதொரு கேள்வியா, ராதிகா? இப்போ நீ ஏன் சாப்பிடவில்லை?''

''.........''

''பார்த்தியா, உன்னாலே பதில் சொல்ல முடியவில்லை.''

''நான் சாப்பிடாம இருக்கிறதற்கு ஒரு காரணம் இருக்கு.''

''அதே காரணத்துக்குத்தான் கண்ணனும் சாப்பிடாமே இருக்கான்.''

''என்ன காரணம்?''

''அதுதான் உனக்குத் தெரியுமே!''

''நீ சொல்லேன்.''

''அப்பு சொன்னா நீ அதை நம்பப்போறதில்லை. நாளைக்குக் கண்ணனே நேரில் வந்து சொல்லுவான். அதைக் கேட்டு நம்பு.''

''வருவானா? நான்தான் இனிமே இந்தப் பக்கம் வராதேன்னு சொல்லியிருக்கேனே!''

''அது உன் வாயிலிருந்துதான் வந்திருக்கு, மனசிலேருந்து வரலைன்னு கண்ணனுக்குத் தெரியும். அதனாலேதான் அவனும் சாப்பிடாமப் படுத்துக்கொண்டிருக்கான். நீ இங்கே சாப்பிட்டாச்சுன்னு தெரிஞ்சாத்தான் அவன் அங்கே சாப்பிடுவான்.''

''இல்லாட்டா?''

''இல்லாட்டா என்ன? இப்படியே ரெண்டு மூணு நாள் இருப்பான். அப்புறம் அவனை யாராவது ஆஸ்பத்திரிலேயே கொண்டு போடுவார்கள். குளுகோஸை ஊசி வழியா ஏத்துவார்கள். ஸ்பூன் ஸ்பூனா ஆரஞ்சு ஜூஸைக் கொடுப்பார்கள்.''

''இதெல்லாம் உன் கற்பனை.''

அப்பு எழுந்தான்.

''ராதிகா, அப்பு கண்ணன்கிட்டே தோத்த மாதிரி, உங்கிட்டேயும் தோத்துட்டான். இனிமே அப்புவுக்கு இங்கே வேலையில்லை. குட் நைட்.''

அப்பு இரண்டு அடி எடுத்து வைத்தான்.

''அப்பு, நில்லு; இங்கே வா!''

''சொல்லு.''

''முதலிலே அதைக் குடி.''

''குடிச்சா?''

''கண்ணனும் சாப்பிடுவான்.''

''சாப்பிட்டா?''

''எல்லாம் பழையபடி ஆயிடும்.''

''அப்பாவும் பழையபடி ஆயிட்டா, அப்புறம் இதே கதைதானே?''

''அப்பாவை மாத்தியாச்சு.''

''யாரு மாத்தினா?''

''அப்புதான்.

''எப்படி?''

''அது ஒரு ரகசியம்.''

''அப்பு இப்போ சொல்ல மாட்டான்.''



''அப்போ நானும் குடிக்கமாட்டேன்.''

''ரொம்ப நல்லது. கண்ணன் எப்படியோ ஒழியட்டும்!''

''இரு, அப்பு.''

அடுத்த கணம், ராதிகா தம்ளரைக் கையில் எடுத்தாள்.

''பிஸ்கட்டைச் சாப்பிடு.''

ராதிகா பிஸ்கட்டை எடுத்துக் கடித்தாள்.

அவள் தம்ளரைக் கீழே வைக்கும் வரையில் காத்திருந்த அப்பு கடைசியில், ''வெரி குட்!'' என்றான். பிறகு, ''ராதிகா, நாளைக்கு இந்த வீட்டுக்கு யார் விருந்தாளியாக வரப் போகிறார் தெரியுமா?'' என்று கேட்டான்.

''யாரு?''

''உன்னுடைய ஒண்ணுவிட்ட மாமா பிள்ளை ஸ்ரீதர்.''

''எனக்கென்ன?''

''சொல்லிவைக்கிறது நல்லது இல்லியா?''

''ரொம்ப தாங்க்ஸ்.''

''அப்பு ஒரு விஷயம் சொன்னா அது ரகசியமா இருக்குமா?'' என்று திடீரென்று புதுத் திசையில் பேச்சைத் திருப்பினான்.

''இருக்கும்.''

''அப்பா காதுக்குக்கூடப் போகக்கூடாது.''

''இனிமே நான் அப்பா கிட்டே அநாவசியமாய்ப் பேசப்போறதில்லை.''

''ஸ்ரீதர் அயோக்கியன்.''

அடுத்த கணம் அப்பு சொல்லிக் கொள்ளாமலே வாசலை நோக்கி விரைந்தான்.

ராதிகா திடுக்கிட்டு உட்கார்ந்தாள். 'ஸ்ரீதர் அயோக்கியன்' என்ற செய்தி அவளைத் தாக்கவில்லை. அந்தச் செய்தியில் என்ன இரகசியம் இருக்கிறது என்ற கேள்விதான் மூளையைக் குழப்பியது.

அடுத்த கணம் அவள் மெதுவாக எழுந்தாள். மனத்தில் நிறைவு தோன்றி நிலவு காய்வதாகப் பிரமை எழுந்தது. அதற்குக் காரணம் யார் என்பதை எண்ணிப் பார்த்தபோது, கண்ணன் மீண்டும் வருவானா என்று ஏங்கினாள் அவள். மறு கணமே, அவளுக்கும் கண்ணனுக்கும் நடுவே ஆஞ்சநேயன்போல அப்பு இருக்கிறான் என்ற திருப்தி உண்டாயிற்று.

**நா**தன் இன்னும் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தான். வேகமாக வந்து நின்ற அப்புவைப் பார்த்ததும் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனார்.

''குட் நைட், மாமா.''

''இத்தனை நேரமா உள்ளே என்ன செய்து கொண்டிருந்தே?''

''தாலாட்டுப் பாடி, குழந்தையைத் தூங்க வைக்கிற மாதிரி தூங்குகிற குழந்தையை எழுப்பி, பாட்டுப் பாடிச் சாப்பிட வைத்தான் அப்பு.''

ஆச்சரியத்தில் துள்ளி எழுந்தார் நாதன். ''என்ன சொன்னே? ராதி சாப்பிட்டாளா?''

''ஆமாம்!''

''எப்படிச் சாப்பிட வைத்தே?''

''அப்பு சொல்லமாட்டான்.''

''டேய், கொஞ்சம் இரு.''

''என்ன, மாமா?''



''நாளைக்கு ஸ்ரீதர் வரப்போறானே, அவனைப்பத்தி ஒரு வார்த்தை காதில் போட்டு வைத்தாயா?''

''இல்லை.''

''ஏண்டா?''

''ஒரு வார்த்தை போடலை, ரெண்டு வார்த்தை போட்டேன்!''

''என்ன?''

''அது ரகசியம்!''

சிரித்துக்கொண்டே அப்பு விரைய, நாதன் திருப்தியுடன் ஹாலுக்குள் சென்றார்.

**க**ண்ணன் வீட்டினுள்ளே சுற்றிச் சுற்றிச் சுற்றி வந்தான். எதிலுமே அவனுடைய மனம் ஓடவில்லை. அன்று நடந்ததெல்லாம் நீண்ட சொப்பனமாக, சம்பந்தமில்லாத நிகழ்ச்சிக் கொத்தாகத் தோன்றியது.

பசி வயிற்றைக் கிள்ளியது. ஆனால் சாப்பிட மனம் விழையவில்லை. ராதிகா அவனைத் தூக்கி எறிந்து பேசியது அவனுடைய மனத்தைத் தாக்கவில்லைதான். ஆனால் அவன் நாதனை, அவர் மனம் வேதனைப்படும்படியாக - ஏன் ஆத்திரப்படும்படியாகக் கூடத்தான் - தாக்கியிருக்கிறான். இனிமேல் ராதிகா அவன் முகத்தில் விழிக்கிறாளோ இல்லையோ, அவனால் நாதன்முன் நிற்க முடியாது.

நாதனை நினைக்க நினைக்க அம்மாவின் நினைவு தோன்றலாயிற்று. இனி ஊட்டி மண்ணில் கால் வைக்க மாட்டேன் என்று அவனுக்குக் கடைசியாக எழுதிய கடிதத்தில் அவள் சபதம் செய்திருந்தாள். இந்தச் சபதத்தில் அவனுக்கு நம்பிக்கை இல்லாமற் போனாலும் அவள் தன்னைவிட்டு வெகுதூரம் போய்விட்டாள் என்ற எண்ணம்

உண்டாகி நெஞ்சே அழுத்தியது. அவன் நாதனிடம் வளர்வதும் அவருடன் பழகுவதும் மன்னிக்க முடியாத குற்றங்கள் என்று அப்பா கருதுவதாக அம்மா எழுதியிருந்தது வேறு மன உளைச்சலை அதிகமாக்கியிருந்தது. டில்லியில் அவனுடைய அண்ணனுடன் இருக்கும் பெற்றோர்கள், ஏன் இப்போது ஓர் உறவுக்கு முறிவாக வாய்த்திருக்கிறார்கள்?

அம்மா, அப்பா, அண்ணன், நாதன், குமார், ராதிகா எல்லாரும் ஒருவர் பின் ஒருவராய்க் கண்முன் வந்து போனார்கள்; ஒரு கூட்டமாக நின்றார்கள்.

கண்ணன் அந்தக் கூட்டத்தில் தன் உருவத்தைத் தேடினான். அவன் எந்தப் பக்கத்திலும் இல்லை.

கடைசியில் அவனுடைய உட்குரலே காதில் ஒலித்தது. ஓர் உருவம் எதிரில் வந்துகொண்டிருந்தது.

அவன் திடுக்கிட்டுப் பார்த்தான். உடல் நடுங்கியது. பார்த்த உருவம் அவனுடையதேதான்.

எத்தனை நேரந்தான் அவன் அப்படித் தன்னையே இழந்து உட்கார்ந்திருந்தானோ அவனுக்கே தெரியாது. திடீரென்று காலோசை ஒன்று அவனைத் தட்டி எழுப்பியது. அதைத் தொடர்ந்து, ''கண்ணா!'' என்ற குரல் கேட்டது.

''யாரு, அப்புவா?''

''ஆமாம், இருட்டிலே என்ன பண்றே? விளக்குப் போட்டால் கரெண்ட் செலவு ஆகும்னு மிச்சம் பிடிக்கிறாயா?''

கண்ணன் மெதுவாக எழுந்து விளக்கைப் போட்டான்.

''என்ன கண்ணா, முகமெல்லாம் விகாரமாயிருக்கு? சாப்பிட்டியா?''

''இல்லை.''



''அப்புறம்? இன்னும் சாப்பிடலையா? பசிக்கிறதா?''

''ஆமாம்னு சொன்னா, சாப்பாடு போடுவியா?''

''உம்.''

''அப்போ, ஆமாம்.''

''கிளம்பு.''

''எங்கே?''

''உட்லண்ட்ஸுக்குப் போகலாம்.''

இருவரும் நடக்கலானார்கள்.

''கண்ணா!'' என்றான் அப்பு.

''என்ன, அப்பு?''

''நீ ராதிகாவைப் பார்க்கணும். அவள் ஏங்கிக் கொண்டிருக்கிறாள்.''

''வேறு பேச்சுப் பேசு.''

''நாதனையும் பார்க்கணும்.''

''அப்பு!''

''கோபிச்சுக்காதே, கண்ணா. இந்த ஸ்ரீதர் நல்லபடியா ஊட்டியிலே இருப்பான்னு எனக்குத் தோணலை.''

''நானே நல்லபடியா நீடிச்சு இருப்பேன்னு தோணலை'' என்றான் கண்ணன்.

அப்பு சிரித்தான்.

''கண்ணா, இந்த ஊட்டியே அழிஞ்சு போனாலும், நீயும் ராதிகாவும் சிரிச்சுண்டு இருப்பீர்கள். அதைப் பார்த்து மகிழ அப்புவும் இருப்பான். சாவி இல்லாத வாட்ச மாதிரி உன் மனசு இப்போ ஜீவன் இல்லாம இருக்கு. அதுக்கு முதல்லே சாவி கொடு.''

''மனசே இல்லாமப் போயிடுத்து'' என்று கண்ணன் முணுமுணுத்தான்.

## 22

# ஜூலி-1

இரண்டு மாதங்கள் இரண்டு நிமிஷங்களாகப் பறந்தன ஸ்ரீதருக்கு. என்றைக்கு முதல்முதலாகக் கை நிறையப் பூவும் பழமுமாக அவன் நாதன் வீட்டில் காலை வைத்தானோ அன்றுமுதல் வாழ்க்கையே வசந்த காலமாகிவிட்டது. சின்னஞ்சிறு வயசில் அவன் பார்த்து அநுபவப்பட்ட நாதன் முற்றும் மாறுபட்ட புதிய மனிதராகத் தோன்றினார். தினந்தோறும் மாலை ஐந்து மணிக்கு அவர் அவனுக்காகக் காத்திருப்பதும், அவனைக் கண்டவுடன் அவர் முகம் மலர வரவேற்பதும் வழக்கமாகிவிட்டன.

நாதனுடைய உள்ளத்தில் எத்தகைய இடத்தை நான் பெற்றிக்கிறோம் என்பது ஸ்ரீதருக்குச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்தாலும், அவனுக்கு ஓரளவு பயமும் ஆதுரமும் இருந்துகொண்டே இருந்தன. என்னதான் நாதன் தம் வயதையும் அந்தஸ்தையும் மறந்து அவனிடம் பழகினாலும், ராதிகா அவனை லட்சியமே செய்வதில்லை என்ற உண்மை அடிக்கடி துன்புறுத்திக்கொண்டே இருந்தது. எப்போதாவது அவள் தகப்பனாரின் பிடிவாதத்துக்காக, சாயங்காலம் நந்தவனத்தில் அவர்களுடைய பேச்சில் கலந்துகொள்ளுவாள். 'வெடுக்கு வெடுக்' கென்று ஏதாவது பதிலும் சொல்லுவாள். அவளுடைய அலட்சியப்



போக்குக்கு என்ன காரணம் என்பதும் ஸ்ரீதர் அறிந்ததுதான். கண்ணன் அந்த வீட்டுக்குக் கடந்த இரண்டு மாதங்களாக வருவதில்லை. நாதன்தான் காரணம் என்று கறுவிக் கொண்டிருந்த ராதிகா இப்போது ஸ்ரீதரையும் குற்றஞ் சாட்டுகிறாள். நேரடியாகக் குற்றம் சுமத்தினாலும் அவனால் பதில் சொல்ல முடியும். மறைமுகமாகச் சொன்னால்? அதுவும் நாதன் இருக்கையில் சொன்னால்? ராதிகாவுடன் தனியாகப் பேசச் சந்தர்ப்பங்கள் எவ்வளவோ வந்தன. ஆனால் ராதிகா அப்போதெல்லாம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி ஓடிவிடுவாள்.

ஸ்ரீதர் ராதிகாவைப்பற்றி நினைக்கையிலெல்லாம் அவள் அழகி, படித்தவள் என்ற எண்ணங்கள் உண்டாக வில்லை. பெரிய பணக்காரரின் ஒரே பெண், அவளை ஆளுகிறவன் அவளுக்கு ஒரு காலத்தில் வரப்போகிற சொத்தையும் ஆளப்போகிறான் என்ற எண்ணங்கள்தாம் மேலோங்கி நின்றன. ராதிகா போன்ற எத்தனையோ அழகிகளை அவன் பம்பாயிலும் டில்லியிலும், ஏன், லண்டனிலும் பார்த்திருக்கிறான். அவர்களுக்கு வெறும் அழகு மட்டுந்தான் இருக்கிறது. அவர்களால் அவனுக்கு நஷ்டமே ஒழிய லாபம் ஏதும் இல்லை. ஆனால் ராதிகா? நாதனுடைய சொத்தில் ஒரு பாதி அவளுக்கு அல்லவா வரப்போகிறது? ஏன், அண்ணன் குமார் தன் பகுதியையும் தங்கைக்கே அளித்துவிடக்கூடும்.

இதே எண்ணங்கள்தாம் கண்ணன் மனத்திலும் தோன்றியிருக்கின்றன என்று ஸ்ரீதர் நினைத்தபோது அவனுக்குக் கண்ணன்மீது கோபம் உண்டாயிற்று. தன் எண்ணங்களின் அசுத்தம் அவனுக்குத் தெரியவில்லை. கண்ணன் சுயநலப் புலி என்று தன்னுள் முணு முணுத்துக்கொண்டதோடு நில்லாமல், நாதனிடமும் முணுமுணுத்தான்.

ஒருநாள் வழக்கம்போல நாலரை மணிக்குக் கம்பெனியிலிருந்து ஸ்ரீதர் புறப்பட்டான். அதே சமயத்தில் அவனுடைய காரியதரிசி ஜூலி உள்ளே வந்தாள்.

அவளுடைய மதமதப்பான உடற்கட்டையும் வனப்பையும் கண்களால் விழுங்கிக்கொண்டே, "என்ன, ஜூலி?" என்று கேட்டான் ஸ்ரீதர்.

"கிளம்பிவிட்டீர்களா?" - ஜூலி கையில் இருக்கும் காகிதங்களுடன் பின்வாங்கினாள்.

"பரவாயில்லை வா. என்ன வேண்டும்?" ஸ்ரீதர் அவளுடைய பொங்கி வழியும் கன்னங்களின் செம்மையில் தன்னையே மறந்தான்.

"ஸார், இதிலெல்லாம் உங்கள் கையெழுத்து வேண்டும்."

"ரொம்ப அவசரமா?"

"ஆமாம்."

"இன்றைக்குக் கையெழுத்துப் போட்டாலும் நாளைத் தபாலில்தானே போகும்?"

"இல்லை, ஸார், இன்றைக்கு ஓர் ஆளைக் கோயமுத்தூருக்கு ஜீப்பில் அனுப்பப் போகிறார்கள். சிரமத்துக்கு மன்னித்துக்கொள்ளுங்கள்."

"என் ஜூலி எனக்கு என்றைக்குமே சிரமம் கொடுத்ததில்லை!" என்று சிரித்து அவன் காகிதங்களுக்காகக் கையை நீட்டினான். அவள் கொடுத்தாள். வாங்குகையில் அவனுடைய கைவிரல்கள் அவளுடைய மணிக்கட்டை ஸ்பரிசித்தன.

கையொப்பம் இடுகையில் ஜூலியின் கதையும் நிலைமையும் அவனுள் படமெடுத்தன. ஒரு வெள்ளைக் காரப் பெண்ணுக்கும் ஓர் இந்திய விமானப் படை



ஆபீஸருக்கும் பிறந்தவள் அவள். அவள் தாய் கல்யாணமான மூன்றாம் வருஷமே இறந்து போய்விட்டாள், இரண்டு வயது ஜூலியை விட்டுவிட்டு. அவளுக்கு எட்டு வயது நடக்கையில், தகப்பனார் ஒரு விபத்தில் உயிர் இழந்தார். அநாதைப் பெண்ணை, அவளுடைய சிறிய தகப்பனார் சர்க்கார் கொடுத்த உதவிப் பணத்தைக் கொண்டு சில காலம் வளர்த்து வந்தார். சிறிய தகப்பனாரின் குடும்பம் முழுக்க முழுக்க இந்தியக் குடும்பமாக இருக்கவே, ஜூலியை அவர்களால் நீண்ட காலம் தாங்க முடியவில்லை. ஜூலியும் இளம் பருவத்திலிருந்தே இதை உணர்ந்திருந்தாள். மெட்ரிகுலேஷன் பரீட்சை முடிந்து, தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் படித்த அவள் வீட்டை விட்டு வெளியேறி உத்தியோகத்தில் அமர்ந்து தன்னைத்தானே கவனித்துக்கொள்ளுகிறாள். இப்போது மகாலிங்கம் கொடுக்கும் இருநூற்றிருபது ரூபாய் சம்பளத்தில் அவளுடைய ஜீவனம் நடக்கிறது. வீட்டில் சமைத்துப் போட ஒரு கிழவி. தாயும் தகப்பனும் துணையும் அந்தக் கிழவிதான்.

அவளுடைய அவல நிலைமையை எவ்வளவு தூரத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம், எப்படிப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றெல்லாம் அவளுடைய கதையைத் தெரிந்துகொண்ட நாளிலிருந்து மனக்கணக்குப் போட்டுவரும் ஸ்ரீதர் கையொப்பம் போட்டு முடிந்ததும் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவனுடைய வெறி மாறு வேடம் பூண்டு இதழ்களில் புன்னகையாக அரும்பியது.

"மிஸ் ஜூலி!"

"எஸ், ஸார்."

"நான் உன்கிட்டே ரொம்ப நாளா ஒண்ணு கேட்கணும்னு இருக்கேன்!"

''இதையெல்லாம் தபாலிலே சேர்த்துவிடணும், ஸார்.''

''கொஞ்சம் இரு.''

''என்ன கேக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியும், ஸார்.''

''சொல்லு, பார்ப்போம்.''

''ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கொள்ள வில்லைன்னு கேட்பீங்க.''

''நோ நோ! அது இல்லை. உன் கதை ஒரு சோக சரித்திரமா இருக்கே. உன்னால் எப்படிச் சதா சிரித்துக் கொண்டு இருக்க முடிகிறது?''

ஜூலி ஒரு கணம் யோசித்தாள். பிறகு நிதானமாக, ''ஸார், சமுத்திரத்திலே எத்தனையோ ஆயிரக்கணக்கான திமிங்கிலங்களும் சுறாமீன்களும் இருக்கின்றன. அதற்காகச் சமுத்திரம் தன்னுடைய நிதானத்தையும் அமைதியையும் இழந்துவிடுகிறதா?'' என்றாள். சொன்னவள் மெல்ல இரண்டு அடி எடுத்து வைத்தாள்.

''ஜூலி!''

''எஸ், ஸார்.''

''நீ ரொம்ப அழகாகப் பேசறே.''

''கோயமுத்தூருக்குப் போக ஆள் காத்துக்கொண்டிருக் கிறான்.''

''இந்தச் சனிக்கிழமை ராத்திரி டான்ஸ் இருக்கிறது, ஜூலி.''

''நான் டான்ஸ் ஆடறதில்லை.''

''நீ என்னை இன்னும் உன் வீட்டுக்கு 'டீ'க்கு அழைத்ததில்லை.''



''எல்லாப் பேப்பரிலேயும் கையெழுத்துப் போட்டாகி விட்டது; இல்லியா, ஸார்?'' - அடுத்த கணம் ஜூலி அந்த அறையை விட்டு மறைந்தாள்.

உடலெல்லாம் வியாபித்த மிருக இச்சை தணியாமல் போகவே, அவனுள் தன்னையும் மீறிய கோபம் பிறந்தது. அவனுடைய காரியதரிசியே அவனை அலட்சியப்படுத்திப் போய்விட்டாள். பம்பாயில் எத்தனை ஆங்கிலோ - இந்தியப் பெண்களையும், கோவாப் பெண்களையும் அவன் அறிவான்? எத்தனை பேருடன் அவன் நடனம் ஆடியிருக்கிறான்? அவர்கள் போன்றவள்தானே இந்த ஜூலி? கேவலம் இவளுக்கா இத்தனை திமிர்?

வெகு நேரத்துக்கு ஸ்ரீதர் தன் ஆசனத்திலேயே உட்கார்ந்திருந்தான். கண்முன் எண்ணற்ற பெண்கள் வந்து போனார்கள்.

காரியாலயங்களில் பணிபுரியும் ஜூலி போன்ற பெண்கள், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் பணக் காரர்கள் வீட்டுப் பெண்கள், மேல்நாட்டு நண்பர் பலரின் இளம் மனைவிகள், அவன் இதுவரை கண்டிராத நளினி - மகாலிங்கத்தின் ஒரே பெண் நளினியின் மானசிக உருவங்கூட வந்து போயிற்று.

கடைசியாக அவன் அலுத்துக்கொண்டே எழுந்த போது, ராதிகா கண்முன் தோன்றினாள். அந்தக் கணமே உடல் பயத்தால் சிலிர்த்தது. அவனுடைய விளையாட்டுக்க ளெல்லாம் நாதனுக்குத் தெரிந்தால், எத்தகைய வரவேற்புக் கிடைக்கும்? அவன் பம்பாயில் செய்த அட்டகாசங்களை நாதன் மன்னித்து மறந்துவிடுவாரா? அப்படியே அவர் மன்னித்து மறந்துவிட்டாலும் ராதிகா சும்மா இருப்பாளா? எத்தனை நாளைக்கு அவனுடைய வேஷம் கலையாமல் இருக்கும்? உடம்பையே தகிக்கும் ஜூலியைப் போன்ற

பெண்களே அவனுடைய வேஷத்தைக் கலைத்து விடுவார்களே!

ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றவைக்கவும், மகாலிங்கம் திடீரென்று உள்ளே பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

''குட் ஈவினிங், மிஸ்டர் மகாலிங்கம்'' என்றான் ஸ்ரீதர்.

''குட் ஈவினிங், குட் ஈவினிங். என்ன, இன்னும் வீட்டுக்குப் போகலியா?''

''ரொம்ப அர்ஜண்டாச் சில பேப்பர்லே கையெழுத்துப் போட வேண்டியிருந்தது. கையெழுத்து வாங்கினப்புறந்தான் போகணும்னு ஜூலிகிட்டே சொல்லி யிருந்தேன். இப்பத்தான் அவளும் வந்து போனாள்.''

''ஆமாம். நான்தான் அர்ஜன்டுன்னு சொன்னேன்'' என்று மகாலிங்கம் உட்கார்ந்தார். இனிக் குறைந்தது அரைமணி நேரம் இல்லாமல் வெளியேற முடியாது என்று அலுத்துக்கொண்டே ஸ்ரீதரும் உட்கார்ந்தான்.

''எனக்கு உங்க பேரிலே ஒரு குறை இருக்கு, ஸ்ரீதர்.'' சொன்னவர் கலகலவென்று சிரித்தார்.

''என்ன குறை, ஸார்?''

''இதுவரை ஒரே ஒரு தடவைதான் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்.''

''உங்களைத்தான் நான் கம்பெனியிலும் பாக்டரியிலும் தினம் தினம் பார்த்துவிடறேனே!'' - இந்த மாதிரி ஒரு குறையை ஒரு தரமாவது ஜூலி சொல்லியிருக்கக்கூடாதா என்று ஸ்ரீதர் ஏங்கினான்.

''என் மிஸஸ்கூடச் சொன்னா, நீங்க எங்களுடன் சரளமாப் பழகுவதில்லைன்னு.''



''வர்றேன், ஸார்.''

''இன்னொரு சமாசாரம்.''

''என்ன?''

''நளினி செப்டம்பர்லேதான் வர்றதாக இருந்தது.''

''இப்போ எப்போ வருகிறாள்?''

''ஆகஸ்டு பதினாலாம் தேதி எனக்கு ஷஷ்டியப்த பூர்த்தி. என் மிஸஸ் நச்சரித்து நச்சரித்து என் உசிரை வாங்கி நளினிக்கு ஒரு மாதம் முன்னாலேயே வரும்படி எழுதச் சொன்னா. நானும் எழுதினேன்.''

''நல்லது; மிகவும் சந்தோஷமான சமாசாரம்.''

''ஷஷ்டியப்த பூர்த்தி எல்லாருக்கும் வர்றதுதானே? என்ன சந்தோஷம் இருக்கு?''

''நளினி வருகிறாளே!''

''ஓ, அதைச் சொல்றீர்களா? ஆகஸ்டு பத்தாம் தேதி இங்கே வர்றா.''

''உங்க ஷஷ்டியப்த பூர்த்தியை ரொம்பப் பெரிசாக் கொண்டாடணும், ஸார்'' என்றான் ஸ்ரீதர். பிறகு தொடர்ந்து, ''என்னைக் கேட்டா, அதை முன்னிட்டு எல்லாச் சிப்பந்திகளுக்கும் ஒரு போனஸ்கூடக் கொடுக்கணும்னு சொல்லுவேன்'' என்றான்.

''எனக்கு ஒன்னுமே தெரியாது. என் மிஸஸ் இதை ஒரு விழாவாகக் கொண்டாடி ஆகணும்னு உத்தரவே போட்டாகிவிட்டது. எல்லா ஏற்பாடுகளையும் கண்ணன்தான் கவனிக்கிறான்.''

''சரியான ஆள்தான்'' என்று முணுமுணுத்த ஸ்ரீதர், ''ஏன் ஸார், நான் கேட்கிறேனேன்னு தப்பா நினைத்துக் கொள்ளாதீர்கள். இந்தக் கண்ணன் எப்படிப்பட்டவன்?'' என்றான்.

மகாலிங்கம் எழுந்தார்.

''இரண்டு மாசமாப் பார்க்கிறீர்களே, உங்களுக்கு இன்னும் தெரியவில்லையா? அவன் ஸ்புடம் போட்டு எடுத்த பொன். இருபத்துநாலு காரட்!''

''கோள் சொல்லும் குணம் உண்டோ?''

''உங்களைப்பற்றி இதுவரையில் ஏதும் சொன்ன தில்லை. ஏன் கேட்கிறீர்கள்? சொல்லப்போனால் நீங்களே அவனைப்பற்றி என்னிடம் இப்போது ஏதோ சொல்ல வருகிறீர்கள்!''

ஸ்ரீதரால் பதில் பேச முடியவில்லை.

''இல்லை, இல்லை... ...'' என்று ஏதோ ஆரம்பித்தான்.

ஆனால் அவன் முடிக்கும் வரையில் மகாலிங்கம் நிற்கவில்லை.

''கண்ணன் இல்லேன்னா, இந்த நளினி இண்டஸ்ட்ரீஸே இத்தனை ஒழுங்கா நடக்க முடியாது'' என்று சொல்லிவிட்டு அவர் வெளியேறினார்.

# 23

# ஜூலி - 2

**கா**ரியாலயத்தில் கண்ணனுக்கு ஒரு வேலை என்றால், மகாலிங்கத்தின் மனைவி ஜயா மூன்று வேலைகள் கொடுத்தாள். அவருடைய ஷஷ்டியப்த பூர்த்திக்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. இரவு என்றும் பகல் என்றும், குளிர் என்றும் காற்று என்றும் பார்க்காமல் அவன் ஜீப்பிலும் சைக்கிளிலும் நடையிலும் சுற்ற வேண்டி யிருந்தது. அவனும் அப்புவுமாகக் குன்னூர், கோத்தகிரி, மேட்டுப்பாளையம் என்று அடிக்கடி போனார்கள்.

இதெல்லாம் போதாதென்று நளினியின் வருகை வேறு பற்பல சில்லறை வேலைகளை உண்டாக்கிவிட்டது. மாடியில் அவளுக்கென்று மூன்று அறைகள் ஒதுக்கப் பட்டன. அறைச் சுவர்களுக்குப் புது வர்ணம் பூசுவதிலிருந்து புது ஸோபா நாற்காலிகள் வாங்கிப் போடும்வரையில் எல்லா வேலைகளும் அவன் தலையிலேயே விழுந்தன.

கண்ணனுக்கு ஒரு விதத்தில் தொடர்ந்து வந்த வேலைகள் அநுகூலமாகவே இருந்தன. கொஞ்சம் ஓய்வு இருந்தால், மனம் ராதிகாவை எண்ணி அசைபோட ஆரம்பித்துவிடும். என்னதான் அவன் வைராக்கியத்துடன் அன்று நாதன் வீட்டைவிட்டு வெளியேறினாலும், அவனுடைய மனம் பல இரவுகளுக்கு அழுவதை நிறுத்தவில்லை. களங்கமற்ற ஓர் இதயம் தன்னால் வாடுகிறது என்று அவன் தனக்குள் கசிந்துகொண்டான்.

நினைத்தால் அவன் எல்லாவற்றையும் மறந்தவனைப் போல மீண்டும் ரெட்ஹவுஸுக்குள் நுழையலாம். நாதனும் ஒன்றும் நடக்காதது போல அவனை வரவேற்பார். ஏன், முன்னைக் காட்டிலும் அதிகமாகவே சலுகைகள் கிடைக்கும். இடையிலே உண்டாகிவிட்ட பிரிவு, சந்திப்பின் பிறகு பின்னும் அதிகமான நெருக்கத்தைக் கண்ணன் - ராதிகா இடையே உண்டாக்கியிருக்கும். அப்புகூட ஆயிரம் தடவை தனக்கே உரிய பாணியில் சொல்லியாகி விட்டது. கண்ணன்தான் மனம் ஒப்பாமல் மறுத்துவிட்டான்.

நாதன் வீட்டுக்கு மீண்டும் போகக் கூடாது என்று தனக்குத்தானே சங்கற்பித்துக்கொண்டதற்குப் புதுக் காரணம் ஒன்றும் முளைத்தது. அது, ஸ்ரீதர் தினந்தோறும் மாலை நேரத்தில் நாதனைப் பார்க்கச் செல்வதுதான். ஸ்ரீதர் மேல்நாட்டில் படித்துப் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறான். நாதனுடைய மனைவியின் உறவுக்காரன். அவருடைய மனத்தில் இப்போது ஸ்ரீதர்தான் நிரம்பியிருப்பான். ஸ்ரீதர் இல்லாதபோது கண்ணனை நாதன் நடத்தும் விதமும், அவன் இருக்கையில் கண்ணனுக்குக் கிடைக்கக்கூடிய அபிமானமும் கண்டிப்பாக ஒன்றாக இருக்க முடியா. என்னதான் நாதன் கண்ணனை அன்புடன் நடத்துவார் என்றாலும், அவன் தம் பெண்ணின் மனத்தைக் கலைக்க வந்திருக்கிறவன் என்ற எண்ணம் தோன்றாமல் இருக்காது. தானாகவே நாதன் வீட்டுக்கு வலியச் சென்று புதுச்சிக்கல்களுக்கு வழி வகுப்பானேன் என்று கண்ணன் ஒதுங்கிக்கொண்டான்.

**அ**ன்று வெள்ளிக்கிழமை. மகாலிங்கத்திடம் பேசிவிட்டு வெளியேறுகையில் ஜயா மாமி அவனை நிறுத்தினாள்.

''கண்ணா, பிறந்த நாளுக்கு இன்னும் எட்டு நாள்தான் இருக்கு'' என்று ஆரம்பித்தாள் அவள்.



''ஆமாம், மாமி.''

''அந்த நாகைய நல்லூர்க்காரன் வருவதாக ஒரு லெட்டர்கூடப் போடலியே. சமையலுக்கு ஆள் கிடைக்கல்லேன்னா என்ன செய்யறது?''

''அவனை நேரிலே பார்த்துப் பேச இன்னிக்குத்தான் அப்புவை அனுப்பினேன்'' என்றான் கண்ணன்.

''இன்விடேஷன் எல்லாம் அச்சாயிடுத்தா? பிரஸ்காரன் கிட்டே ஒரு தடவைக்கு மூணு தடவையாப் போனாத்தான் நடக்கும். டெய்லரும் பிரஸ்காரனும் எதையும் சொன்ன காலத்தில் தரமாட்டார்கள்.''

''இன்னிக்குச் சாயங்காலம் ரெடியாயிடும்.''

''தஞ்சாவூர்க் கதம்பத்துக்கு என்ன செய்திருக்கே?''

''லாரியில் கண்டிப்பா வரும்.''

''வைதிகர்கள் சங்கதி என்ன ஆச்சு?''

''நம்ப வாத்தியார் முந்தாநாள் பாலக்காட்டுக்குப் போய் வந்தார். கல்பாத்தியிலிருந்து பன்னிரண்டு பேர் வருகிறார்கள்.''

''நவக்கிரக சாந்தி, மிருத்தியுஞ்ஜய ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், சூரிய நமஸ்காரம் எல்லாம் உண்டுன்னு சொன்னியா?''

''நீங்க முக்கியமானதை மறந்துவிட்டீர்கள், மாமி!''

''என்னடா, கண்ணா?''

''ருத்ர ஏகாதசி....''

''பார்த்தாயா? எனக்கு வயசு ஆயிண்டு வர்றதுன்னு நன்னாத் தெரியறது. நீ சொன்னியா?''

''ஒண்ணுக்கும் கவலைப் படாதீர்கள், மாமி. எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

ஜயா பெருமூச்சுவிட்டாள். பிறகு தொடர்ந்து, ''ஷஷ்டியப்த பூர்த்தி முடிஞ்ச கையோடு, நாமெல்லாம் குருவாயூர் போகணும்டா'' என்றாள்.

''போகலாம்'' என்ற கண்ணன் மெதுவாக நகர்ந்தான்.

''இப்போ எங்கே போறே?''

''கம்பெனிக்கு.''

''ஒரு வாய் காபி குடிச்சுட்டுப் போ.''

''வேண்டாம், மாமி, நேரமாறது.''

''கம்பெனின்னு சொன்னபோது அந்த எஞ்ஜினியர் பேரு ஞாபகம் வர்றது. அவன்தான் ஸ்ரீதர். அவன் ரெண்டு நாள் முன்னாடி இங்கே வந்திருந்தான்.''

''மாமா சொன்னார்.''

''இந்த ஹாலிலே எனக்கு முன்னாடியே சோபாவில் உட்கார்ந்து சிகரெட்டைப் பத்த வைத்தான்.''

''மேல்நாட்டிலே படிச்சவன்.''

''அவன் தலையிலே ஒரு பக்கட் தண்ணியைக் கொட்டிடலாமான்னு எனக்குப் பத்திண்டு வந்தது. அப்பு பக்கத்திலே இருந்திருந்தா கண்டிப்பாக் கொட்டச் சொல்லியிருப்பேன்.''

''அப்பு இருந்திருந்தா, நீங்க சொல்றதுக்கு முன்னாடி அவனே கொட்டியிருப்பான்'' என்று சொல்லிச் சிரித்த கண்ணன், ''இதையெல்லாம் நீங்க ஒரு பொருட்டா மனசிலே வச்சுக்காதிங்கோ'' என்றான்.

''அது சரி, சிகரெட்டுப் பழக்கம் ஒழிஞ்சுபோறது. மத்தப்படி அவன் எப்படி? உங்க மாமா அவனைச் சூரன், அசகாயன்னு தலைமேலே வச்சுண்டு குதிக்கிறார்.''

''வேலையிலே கெட்டிக்காரன்'' என்ற கண்ணன், ''அப்போ, நான் வரட்டுமா, மாமி? என்று கிளம்பினான்.



''ஸ்ரீதரைப்பற்றி ஒரு நாள் சாவகாசமா என்கிட்டே நீ எல்லாம் விவரமாச் சொல்லணும். அதுக்கு அப்புறந்தான் என் நளினி எவ்வளவு தூரத்துக்கு அவனிடம் பழகலாம்னு தீர்மானிக்கணும்.''

கண்ணன் சிரித்தான்.

''இதை நீங்கதான் நிர்ணயம் செய்யணும்னு இல்லை; மாமி, நளினியே தீர்மானம் செய்துடுவாள். கவலைப் படாதீர்கள்.''

ஜயா மாமி மீண்டும் பெருமூச்செறிந்தாள். அடுத்த கணம் அவளுடைய உடல் ஒரு சோபாவில் அழுந்தியது. கண்ணன் ஜீப்பில் ஏறுவதைக்கூட அவள் கவனிக்கவில்லை.

கம்பெனியை அடைந்த பிறகுதான், ஸ்ரீதர் அன்று வரவில்லை என்ற செய்தி கிட்டியது. மகாலிங்கம் ஸ்ரீதரைக் கோயம்புத்தூருக்கு ஓர் அவசர வேலையாக அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருந்தார். சில மெஷினரிச் சாமான்களைப் பார்வையிட ஸ்ரீதரே செல்லவேண்டும் என்பது அவருடைய விருப்பம். ஆனால் இந்த விருப்பம் அன்று நிறைவேறவில்லை. மகாலிங்கத்திடம் போன்மூலம் தகவலைச் சொன்ன பிறகு, கண்ணன் பைல்களைப் புரட்டலானான்.

எத்தனை நேரந்தான் அவன் அலுவலக வேலையில் தன்னைத்தானே மறந்திருந்தானோ அவனுக்கே தெரியாது; திடீரென்று, '''ஸார், உள்ளே வரலாமா?'' என்ற குரல் கேட்டது.

கண்ணன் ஏறிட்டுப் பார்த்தான். ஜூலி நின்று கொண்டிருந்தாள். உதயசூரியனின் ஒளியைப்போல, எப்போதும் சிரிப்புத் தாண்டவமாடும் அவளுடைய முகம் மேகம் படர்ந்த வானம்போல வாடியிருந்தது.

''ஹலோ ஜூலி, என்ன வேணும்? உன் 'பாஸ்' வரலியாமே?''

''ஆமாம், ஸார். முதுமலைக்குப் பிக்னிக் போயிருக்கிறார்.''

''ஓ, அப்படியா?'' என்ற கண்ணன் அவளைக் கூர்ந்து பார்த்தான். ஜூலி தலை குனிந்துகொண்டே, ''இன்னிக்கு உங்ககிட்டே ரெண்டு வார்த்தை அந்தரங்கமாப் பேசலாம்னு வந்திருக்கேன்'' என்றாள்.

''உட்கார்.''

ஜூலி உட்கார்ந்துகொண்டாள். பிறகு, ''ஸார், இந்த ஊட்டியில்தான் நீங்கள் பிறந்து வளர்ந்திருக்கிறீர்கள். நானும் ஊட்டியில்தான் பிறந்து வளர்ந்திருக்கிறேன்'' என்று ஆரம்பித்தாள்.

''உம்.....''

''என்னைப்பத்தி இந்த ஊரில் யாராவது ஏளனமாகவோ கேவலமாகவோ பேசுகிறார்களா, ஸார்?''

''இல்லை. ஏன், உன்னைப்பற்றி அவதூறாகப் பேச யாருக்கும் யோக்கியதை கிடையாது.''

''ஸார், நான் என் அநாதைத்தன்மையையும் மறந்து என் அந்தரங்க ஆசைகளை எல்லாம் அடக்கி, மானமாக வயிற்றைக் கழுவ வேணும் என்று பாடுபடுகிறேன். இந்தக் கம்பெனியில் கிடைக்கிற சம்பளந்தான் என் வாழ்வுக்கே ஆதாரமாக இருக்கிறது. என் ஜாதிக்காரர்களில் ஒருவரை, என் மனசுக்குப் பிடித்த ஒருவரை வாழ்க்கைத் துணைவராகக் கொண்டு வாழவேண்டும் என்பதுதான் என் நோக்கம்.''

''விஷயத்தைச் சொல், ஜூலி.''

''என்னை ஒரு விளையாட்டுப் பொருளாக, தம் ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடிய கருவியாக, உபயோகப் படுத்தச் சிலர் விரும்புகிறார்கள், ஸார். இதுவரையில் இல்லாத கெட்ட பெயர் எனக்கு வந்துவிடக் கூடாது. நீங்கதான் காப்பாத்தணும்.''



''யார் அவன்?'' என்று கேட்ட கண்ணன் தொடர்ந்து பதிலையும் சொன்னான்; ''ஸ்ரீதர்தானே?''

ஜூலி தலையாட்டினாள்.

''பளார் என்று கன்னத்தில் ஒன்று கொடு'' என்றான் கண்ணன்.

''கொடுத்துவிடலாம், ஸார். ஆனால்..... ஆனால்.....''

''உன் வேலை போகாது, ஜூலி. போனால் அவன் வேலைதான் போகும்.''

''நேத்து ராத்திரி பத்து மணிக்குத் திடீர்னு என் வீட்டுக்கு வந்தார். நல்ல போதை. 'உடனே கிளம்பு, நோட்ஸ் டிக்டேட் பண்ணணும்' என்றார். என் வீட்டில் இருக்கிற கிழவி சமயோசிதமாக நடந்துகொண்டிரா விட்டால்......'' மேலே ஜூலி தொடரவில்லை. அவளுக்குத் தொண்டை அடைத்துக்கொண்டது.

''கிழவி என்ன செய்தாள்?''

''ஜில்லுன்னு ஒரு பக்கெட் தண்ணியை அவர் தலைமேல் கொட்டினாள்.''

அடுத்த கணம் கண்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

''ஜூலி, இன்னிக்குத்தான் மிஸஸ் மகாலிங்கம் அவன் தலையிலே தண்ணியைக் கொட்டணும்னு சொன்னா. உன் கிழவி நேத்திக்கே அதைச் செய்துவிட்டாள்.''

''எனக்கு ஒரு வழி சொல்லுங்கள், ஸார்'' என்று புலம்பிய ஜூலி, ''நேத்து ராத்திரி இவ்வளவு நடந்திருக்கு. இன்னிக்குக் கார்த்தாலே வந்து முதுமலைக்கு வர்றியான்னு கேட்கிறார்'' என்றாள்.

''என்ன வழி செய்கிறதுன்னுதான் யோசிச்சுண்டிருக்கேன்.''

''நீங்களும் முதலாளியும் கொஞ்சம் கண்டிச்சு வச்சாப் போதும்.''

"நீ பச்சைக் குழந்தை மாதிரி பேசறே, ஜூலி. தலையிலே தண்ணீர் விழுந்தே அவனுக்குப் புத்திவரலை. நாங்க சொல்லிய திருந்துவான்?"

ஜூலியின் கண்களில் நீர் கட்டி நின்றது.

"உனக்கு என்னிடம் ஸ்டேனோகிராபரா இருக்கச் சம்மதமா?"

அடுத்த கணம், மேகங்களை விட்டு வெளிவரும் சூரியனைப்போல ஜூலியின் முகம் பிரகாசித்தது.

"என்ன ஸார், சம்மதமான்னு கேட்கிறீர்கள்? இதைவிடப் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைக்காது."

"சரி, மனசிலேயே வைத்துக்கொள். நான் மகாலிங்கத்திடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். சந்தோஷமாப் போ."

ஜூலி நின்றாள்.

"ஸார், உங்களைப் பார்க்கிறபோது என்னையும் அறியாமல் என்ன தோன்றுகிறது தெரியுமா? நீங்கள் எனக்குப் பிறக்காத அண்ணன், ஸார். ஒரு விதத்தில் பார்த்தால் நம்ப ரெண்டு பேருக்கும் வேற்றுமைகளைவிட ஒற்றுமை அதிகம் இருக்கு."

"ஆமாம், ஜூலி. நீ அம்மா அப்பா இல்லாத அநாதை. நான் ரெண்டு பேரும் இருந்தும் அநாதை."

"இப்போது நான் அநாதை இல்லை, ஸார்" என்ற ஜூலி, கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டே, "ஸார், நாளன்னிக்கு எனக்கு இருபத்து நாலாம் பிறந்த நாள். நீங்க என் வீட்டுக்கு வரணும்" என்றாள்.

"கண்டிப்பாக."

"நீங்கதான், ஸார், பர்த் டே கேக்கை வெட்டணும்."

"கட்டாயம்."

"மிஸ்டர் அப்புவையும் நான் சொன்னேன்னு அழைச்சுண்டு வாருங்கள்."



"நீ சொல்லாவிட்டாலும் அவன் வருவான்."

"அவனும் நம் கோஷ்டியில் ஒருவன்."

"ஏன், அநாதை அசோசியேஷன் பிரசிடண்ட் அவன்!" என்று சொல்லிக் கண்ணன் சிரித்தான். ஜூலியும் சிரித்துக்கொண்டே வெளியேறினாள். சாதிக்க முடியாததைச் சாதித்துக்கொண்டு விட்டோம் என்ற இருப்தி அவளுடைய நடையில் பிரதிபலித்தது.

ஜூலி சென்ற பிறகு, அவளைப்பற்றி நினைக்க ஒட்டாமல் அடித்து சிப்பந்தி கொண்டு வந்து போட்ட தபால் குவியல். தபால்களைப் பார்த்துக்கொண்டே வருகையில் அவன் பெயருக்கு வந்த கவரும் கண்ணில்பட்டது.

கையெழுத்தைப் பார்த்ததுமே நாக்கு, "குமார்" என்று முணுமுணுத்தது.

கவரை உடைத்துப் படிக்க ஆரம்பித்தான்.

படிக்கப் படிக்க அவன் உடல் வேர்க்க ஆரம்பித்தது. ஏற்கனவே அவனுக்குத் தெரிந்திருந்த ரகசியந்தான் என்றாலும் விஷயம் எவ்வளவு தூரத்துக்கு வளர்ந்துவிட்டது என்பதை நினைத்தபோது கண்ணனுக்குத் தலை சுற்றியது. அவனுடைய கதியே இப்படி என்றால் நாதனுடைய கதி என்ன ஆகும்?

குமார் கேட்டுக்கொண்டிருக்கிறபடி, அவன் நாதனை உடனே சந்தித்தாக வேண்டும். தனக்காகவோ ராதிகாவுக்காகவோ அவன் தன் மாமாவைப் பார்க்கப் போவதில்லை. அவருடைய பிள்ளை குமாருக்காகத்தான் பார்க்கப் போகிறான்.

எப்படிப் போவது? எப்படிப் பேசுவது? இந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது?

கண்ணன் மனம் குழம்பினான்.

## 24

# கண்ணன் தரும் செய்தி

**நா**தன் வீட்டு ஹாலில் அவரும் ஸ்ரீதரும் பேசிக் கொண்டிருக்கையில் ராதிகா மெதுவாக அங்கே வந்தாள்.

''பார்த்தீர்களா, எத்தனை தடவை சொல்லி அனுப்பி வீர்கள்? இப்போதுதான் உங்கள் பெண் வருகிறாள்'' என்று சொல்லிச் சிரித்தான்.

''ராதியிடம் எதையும் நாம் கேட்டுவாங்கிவிட முடியாது. அவளாக மனம் வந்துகொடுத்தால்தான் உண்டு'' என்று சொல்லி நாதனும் சிரித்தார். பிறகு அவளைப் பார்த்து, ''நான் சொல்றது கரெக்ட்தானே?'' என்று கேட்டார்.

ராதிகா பதில் சொல்லாமல் அவர் அருகில் உட்கார்ந்து டீப்பாயின்மேல் இருந்த தட்டிலிருந்து ஒரு பிஸ்கோத்தை எடுத்தாள்.

''உங்கள் பெண் இப்படியே இருந்தால்......' என்று இழுத்த ஸ்ரீதர் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, நாதன் பக்கம் திரும்பினான்.

''சொல்லு, ஸ்ரீதர். வார்த்தைகளை முடி'' என்றார் நாதன்.

''ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை'' என்று மழுப்பினான் ஸ்ரீதர்.

''பரவாயில்லை. நீ நினைத்ததைச் சொன்னால் யாரும் தப்பாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.''



பிஸ்கோத்தை நறுக்கென்று கடித்த ராதிகா, ''அவருக்கு மனசில் பட்டதைச் சொல்லத் தைரியம் கிடையாது, அப்பா'' என்றாள்.

ஒரு கணம் அயர்ந்து போன ஸ்ரீதருக்கு என்ன சொல்லுவது என்று புரியவில்லை. எப்படிச் சமாளித்துக் கொள்ளுவது என்று புரியவில்லை. மனம் யோசனை செய்ய ஆரம்பித்தது.

''சொல்லிவிடுவேன், சொல்லிவிடுவேன்; ஆனால்..''

''ஆனால் என்ன ஆனால்? சொல்லுங்களேன். நான் இப்படியே இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?''

நாதன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். ஸ்ரீதருடைய முகம் வெளிறிப் போயிருந்தது.

ராதிகாவின் முரட்டுத்தனமான கேள்வி சவால் விடுவதுபோல இருந்தது. என்னதான் நாதனை அதிருப்திக்கு உள்ளாக்கக்கூடாது என்று ஸ்ரீதர் நினைத்துக் கொண்டாலும், ஒரு பெண்ணுக்கு முன்னால் தலைகுனிவதோ, அடங்கிப் போவதோ தன் ஆண்மைக்கு இழுக்காகும் என்று தோன்றியது. இந்த எண்ணம் தோன்றிய மறுகணமே, அவன் முன்பின் யோசியாமல் உளறினான்.

''உங்கள் பெண் இப்படியே இருந்தால் நான் வருவதை நிறுத்திக்கொள்ள வேணும். அவளிடமிருந்து எனக்குக் கிடைக்கிற வரவேற்பு.....''

ஸ்ரீதர் முடிக்கவில்லை. ராதிகா முடிக்க விடவில்லை.

''இந்த இரண்டு மாசமாக நீங்கள் எனக்காகத்தான் வருகிறீர்களா? அது தெரியாதே எனக்கு! அன்னிக்கே தெரிஞ்சிருந்தா, நீங்க இருக்கிற பக்கமே தலையைக் காட்டியிருக்க மாட்டேன்.'' ராதிகா மூச்சு விடாமல் கொட்டினாள்.

''ராதி, ராதி!'' என்று கத்தினார் நாதன்.

பெண் தந்தையை லட்சியம் செய்யவில்லை. ஸ்ரீதரை நேருக்கு நேராகப் பார்த்துப் பேசினாள்: ''நீங்கள் என் அப்பாவுடன் உறவு கொண்டாடத்தான் வந்துகொண்டிருக்கிறீர்கள் என்று நினைத்தேன். இப்போதுதான் புரிகிறது, நீங்கள் என்னுடன் உறவு கொண்டாட வருகிறீர்கள் என்று. மிஸ்டர் ஸ்ரீதர், நீங்கள் என் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணா பிள்ளையாக இருக்கலாம். இந்த உறவைப்பற்றி நான் என்னிக்குமே பெரிசா நினைச்சதில்லை. ஏன் தெரியுமா? என் அப்பா இதைவிட நெருங்கிய உறவையெல்லாம் தகர்த்து எறிந்திருக்கிறார். அந்தக் குணம் எனக்கும் கொஞ்சம் வந்திருக்கிறது.''

ராதிகா பேச்சை நிறுத்தியபோது, இதுவரை அநுபவித்திராத நிசப்தம் நிலவியது.

நாதனுக்கு வேதனையும் கோபமும் மாறிமாறி வந்தன. அவர் தம் மனத்துள் கட்டி வந்த கோட்டை ஒரு நொடியில் தூள் தூளாகப் போய்விட்டதை உணர்ந்தார்.

''ஆத்திரத்தில் எதையும் பேசிவிடக்கூடாது, ராதி. இப்போ நீ உள்ளே போ. ஸ்ரீதர் என்ன சொல்லிவிட்டான்? உன் மீதுள்ள அன்பில்.....''

''அவருடைய அன்பைப்பற்றி எனக்குத் தெரியும், அப்பா. உங்களுக்குத்தான் கண்ணில் திரை விழுந்திருக்கிறது. செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாமப் போயிடுத்து.''

ஸ்ரீதர் மெதுவாக எழுந்தான்.

''உட்கார்'' என்று சொல்லும் பாவனையில் நாதன் கை அமர்த்தினார். அதே சமயத்தில் அங்கே வந்த தோட்டக்காரன், ''உங்களைப் பார்க்கணும்னு கண்ணன் கிளாஸ் ஹவுஸிலே காத்துக்கிட்டிருக்காரு'' என்றான்.



நாதன் திடுக்கிட்டுப் போனார். இரண்டு மாதங்களாக வராத கண்ணன் எதற்காக வந்திருக்கிறான்? திடீரென்று முகம் மாறி, திருப்தியும் ஆச்சரியமும் பிரதிபலிக்க உட்கார்ந்திருக்கும் ராதிகாவைப் பார்த்தார். அடுத்தகணம், அன்று அப்பு சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தன.

''காத்துக்கொண்டிருக்கட்டும்!'' என்று கத்தின அவர், இன்னும் அழுந்த உட்கார்ந்துகொண்டார்.

''போய் விசாரியுங்களேன்'' என்றான் ஸ்ரீதர்.

''நான் அவனுக்குச் சொல்லி அனுப்பவில்லை. அவனாக வந்திருக்கிறான்.''

''அதனாலே?'' என்றாள் ராதிகா.

''அவனுக்கு ஏதோ காரியம் ஆகவேணும்; அதற்காக வந்திருக்கிறான். காத்துக் கொண்டிருக்கட்டுமே!''

ராதிகா சிரித்தாள். ''அப்பா, உங்களுக்கு வரவரப் புத்தி மழுங்கிக்கொண்டு வர்றது. ஒருவேளை புதுப் புதுச் சிநேகிதங்கள் காரணமாக இருக்குமோ என்னவோ? என்னிக்காவது கண்ணன் தன் காரியம் ஒண்ணு ஆகணும்னு உங்ககிட்டே கையேந்தி வந்திருக்கிறானா?''

அப்பாவைச் சொல்லும் சாக்கில் தன்னையும் இழுத்துக் குத்திக் காட்டுவதைக் கேட்டு ஸ்ரீதரின் ரத்தம் கொதித்தது. ஆனால் அதே சமயத்தில் கோபித்துக் கொண்டு ஆத்திரமாக வெளியேறுவதும் சாதுரியமான காரியம் அல்ல என்று நினைத்தான்.

''எதற்கும் போய்ப் பாருங்கள். ஒருவேளை கண்ணன் முதல்முதலாக, பழக்கத்தைவிட்டுக் கையேந்த வந்திருக்கிறானோ என்னவோ!'' ஏளனமாகச் சொல்லிவிட்டு ராதிகா பக்கம் பார்த்தான். அவள் தன் இருக்கையை விட்டு எழுந்து கொண்டிருந்தாள்.

''நீங்கள் மெதுவாக உறவு கொண்டாடிவிட்டு வாருங்கள். நான் போய் விசாரிக்கிறேன்!'' என்று நடக்க ஆரம்பித்தாள் அவள்.

''அவன் உன்னைப் பார்க்க வரவில்லை'' என்று கத்தினார் நாதன்.

''என்னைப் பார்க்க வருகிறவர்களிடந்தான் நான் உறவு கொண்டாட வேணும்னு ஒரு சாஸ்திரத்திலும் சொல்லியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இப்போ கண்ணனைப் பார்க்கப் போகிறேன்.''

''ஆல் ரைட். போ! என்னால் இன்னிக்கு அவனைப் பார்க்க முடியாது என்று சொல்லு!''

''ஓ.கே!''

அடுத்த கணம் ராதிகா ஓடலானாள்.

கிளாஸ் ஹவுஸை நெருங்க நெருங்க, தன் செய்கை வெட்கப்படத்தக்க செய்கை என்று தோன்றிற்று, ராதிகாவுக்கு. இந்த இரண்டு மாதங்களாகக் கண்ணன் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவள்மட்டும் ஏன் துடிதுடித்துக்கொண்டு ஓட வேண்டும்? அவள் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். நடையில் ஒரு நிதானம் பிறந்தது.

அதே சமயத்தில், கண்ணன் என்ன தப்புச் செய்தான் என்ற கேள்வியும் பிறந்தது. அடிக்கடி வந்துபோகும் அப்பு சொல்லுவதைப் பார்த்தால், ஒரு நாளாவது கண்ணன் அவளைப்பற்றி நினைக்காமலும் பேசாமலும் இருப்ப தில்லை. அவன் இதுவரையில் அவளைப் பார்க்க வராமல் இருந்தது தப்பு என்றால், அந்தத் தப்பை அவனாகச் செய்யவில்லை. அவளுடைய அப்பாவே அதற்குக் காரணமாக இருந்தார். அவளிடமிருந்து அவனைப் பிரிக்க



அவருடைய பேச்சுக்களே காரணமாக இருந்தன. இன்னும் சொல்லப்போனால், அவன் வராததற்குக் காரணம் அவளேதான். அவள்தானே அன்று அவனிடம் கோபித்துக் கொண்டாள்? கண்ணனுடைய மனத்தைப் புரிந்து கொள்ளாமல், அதுபடும் வேதனையை உணர்ந்து கொள்ளாமல் சாட்டையால் அடிப்பதுபோல் பேசியவள் அவள்தானே?

அவனைப் பார்க்கச் செல்லுவதுதான் வாஸ்தவத்தில் அவள் செய்யக்கூடிய கடமை என்று தோன்றியது. அன்று அவனிடம் வீசிய கடுசொற்களுக்காக அவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

கிளாஸ் ஹவுஸின் வாயிலை அடைகையில், இம்மாதிரி கண்ணன் வந்திருக்கிறான் என்று தெரிந்ததும் ஓடினோமே, இதற்கு என்ன காரணம் என்ற கேள்வி அவளுள் பிறந்தது. அவளையும் மீறின சக்தி ஒன்று பிறந்து, அவனிடம் அவளை உந்துகிறதே, ஏன்? அந்தச் சக்தி அவளை மீறினது என்றால் அவள் அந்தச் சக்திக்குக் கட்டுப் பட்டிருக்கிறாள் என்றுதானே அர்த்தம்? அப்படியானால் கண்ணன்தான் அந்தச் சக்தி பிறப்பதற்கே காரணம். அதன் பெயர்? இதைத்தான் காதல் என்கிறார்களா?

கிளாஸ் ஹவுஸில் சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந் திருந்த கண்ணன், ராதிகா வாசலில் நின்று தன்னையே பார்ப்பதைக் கவனிக்கவில்லை. அவன் தன் எண்ணங் களிலேயே மூழ்கிக் கிடந்தான்.

எத்தனை நிமிஷங்கள் ராதிகா, வைத்த விழி எடுக்காமல் அவனையே அப்படிப் பார்த்துக்கொண்டிருந் தாளோ அவளுக்கே தெரியாது. திடீரென்று விழித்துக் கொண்டவளைப் போல அவள், ''கண்ணா!'' என்று முணுமுணுத்தாள்.

அந்த முணுமுணுப்பில் ஒலித்த புதுமையில் திடுக்கிட்ட கண்ணன் ஏறிட்டுப் பார்த்தான். அடுத்த கணம் அவன் எழுந்தான்.

''கண்ணா!'' நெஞ்சு குழைந்தது; நாத் தழுதழுத்தது; ''இன்னிக்காவது இங்கே வரணும்னு உனக்குத் தோணித்தே, கண்ணா!''

''ராதி!'' கண்ணன் தொண்டை அடைத்துக் கொண்டது. அடுத்த கணமே அவன் சமாளித்துக் கொண்டான்; ''நான் உன் அப்பாவைப் பார்க்கத்தான் வந்தேன், ராதி'' என்றான்.

''பரவாயில்லை. ஆனால் உன்னைப் பார்க்க எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைச்சுதே!''

''நான் வராமல் இருப்பது நல்லதுதானே?''

''அப்படி என் அப்பா நினைச்சா அது முட்டாள்தனம், கண்ணா. நதியின் பிரவாகத்தை மணல் மேட்டால் நிறுத்த முடியுமா? ஆனா என் மனசிலே ஒரு கேவல். அன்னிக்கு நான் ஏதேதோ கத்தினேன்; இனிமே இந்தப் பக்கம் வராதேன்னேன். அதனாலே நீ வராமல் இருக்க வில்லையே?''

''நான் அடிக்கடி வரணும்னுதானே, நீ உன் பாஷையில் பேசினாய்?'' என்று சொல்லி வேகமாகச் சிரித்த கண்ணன், ''உன் கோபம் என்னிக்குமே என்னைச் சுட்டது கிடையாதுன்னுதான் உனக்குத் தெரியுமே!'' என்றான்.

ராதிகா சிரித்தாள்; ''உன் பழைய பேச்சுக்களை எல்லாம் மறுபடியும் எப்போ கேட்போம்னு இருக்கு. ஜுரத்திலே விழுந்தவள், குணமாகிற வேளையில் நல்ல சாப்பாடு காணுவோமான்னு ஏங்கறமாதிரி!''

''அப்பா, எங்கே, ராதி? எனக்கு உடனேயே பார்க்கணும்.''



''என்ன சமாசாரம்? பாக்கெட்டிலே என்ன லெட்டர்?''

''நீ போய் அவரை உடனே வரச்சொல்லேன். எனக்கு மகாலிங்கத்தின் வீட்டில் நிறைய வேலை இருக்கு.''

''என்கிட்டே சொல்லக்கூடாத சமாசாரமா?''

''அப்படி ஒன்னும் இல்லை'' என்று இழுத்த அவன், ''முன் ஒரு நாள் ஒரு ரகசியம் சொல்லப் போறேன்னு உன்கிட்டே சொன்னேன், ஞாபகம் இருக்கா?'' என்று கேட்டான்.

''ஆமாம். 'குமார்கிட்டேயிருந்து கடிதம் வந்திருக்கு; அதிலே ஒரு ரகசியம் இருக்கு'ன்னு சொன்னே.''

''அதுவேதான், ராதி. அதை உன்னிடம் சொல்ல முடியாதபடி சந்தர்ப்பங்கள் நேர்ந்துவிட்டன. ஆனா இப்போ சொல்லித்தான் ஆகவேணும் என்ற கட்டம் வந்துவிட்டது. குமாரே மாமாவையும் உன்னையும் பார்த்துச் சொல்லச் சொல்லியிருக்கிறான்.''

''எங்கே, லெட்டரைக் கொடு.''

''இந்த மாசம் இருபத்தெட்டாம் தேதி ஹரித்து வாரத்திலே கல்யாணம் நடக்கிறது.''

கடிதத்தைப் படிக்கப் படிக்க ராதிகாவின் முகத்தில் உண்டான சலனங்களைக் கவனித்தான் கண்ணன்.

''வங்காளப் பெண்!'' என்றாள் ராதிகா.

''ஆமாம்.''

''பூர்ணா தேவி: பெயர் ரொம்ப அழகா இருக்கு!''

''பெயர் மாத்திரம் இல்லை, ராதி!''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''என்கிட்டே போட்டோக்கூட இருக்கு. குமார் அனுப்பியிருக்கிறான்.''

''கண்ணா, நான் ஒண்ணு சொன்னாக் கோபிச்சுக்க மாட்டாயே?''

''சொல்லு.''

''நீ வந்து கிளாஸ் ஹவுஸிலே உட்கார்ந்திருக்கேன்னு காதிலே விழுந்தபோது, அமிர்தம் வார்த்தாற் போல இருந்தது. மனசு குளிர்ந்தது. ஆனா அதைவிடப் பத்தாயிரம் மடங்கு சந்தோஷம் உண்டாறது, இந்த லெட்டரைப் பார்க்கிறபோது. குமார் அதிருஷ்டசாலி, கண்ணா.''

''ஆனால் கோழையாப் போயிட்டானே, ராதி!''

''ஏன்?''

''உன் அப்பா, தன் கல்யாணத்துக்குச் சம்மதம் தரமாட்டார்னு, எனக்கு லெட்டர் எழுதி என்னைத் தூது அனுப்பியிருக்கானே!''

''வேறு என்ன செய்ய முடியும்?''

''நேரே இங்கேயே வந்து அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லி, அவருடைய அனுமதி பெறவேண்டும். அதற்குச் சக்தி இல்லியே?''

''அப்பா என்ன பதில் சொல்லுவார்னு தெரிஞ்சுதான் இப்படிச் செய்திருக்கிறான். இங்கே வந்து கேட்டா, அவனை ஒரு ரூமிலே போட்டு அடைச்சுடுவார், அப்பா. 'இனிமே நீ டேராடூனுக்கே போக வேண்டியதில்லை' என்று கத்துவார்.'

''அந்தமாதிரி ஒரு கட்டம் ஏற்பட்டு, அவன் அவருடன் போராடி வெற்றி பெறவேணும்.''

''நீ சொல்றது போராட்டம் இல்லை; விஷப் பரீட்சை!''

''இன்னும் அப்பாவைக் காணோமே!''



''அவர் இப்போதைக்கு வரமாட்டார். அவருடைய கால்களை அங்கே ஒருவன் பிடிச்சிண்டிருக்கான். அவனுடைய முதுகை அவர் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு நாயின் முதுகைத் தடவினாலாவது பிரயோசனம் உண்டு.''

''அவரைப் பார்க்காமல் நான் எப்படித் திரும்புவது?''

''உண்மையைச் சொன்னா நீ வருத்தப்படுவே, கண்ணா.''

''என்ன?''

''நீ ஏதோ உன் காரியத்துக்காக வந்திருக்கேன்னு அவர் அடம் பிடிச்சு உட்கார்ந்திருக்கார். இன்னிக்கு உன்னைப் பார்க்க முடியாதாம்.''

''ரொம்ப சரி!'' என்று எழுந்தான் கண்ணன்.

''புறப்படறியா?''

''மாமாவைப் பார்க்காமப் போவேனா? அவர் இங்கே வரலைன்னா, நான் அங்கே போகிறேன். எனக்காகப் போகவில்லை. குமாருக்காகப் போகிறேன்.'' அடுத்த கணம் அவன் வெளியேற, ராதிகா பின்தொடர்ந்தாள்.

''கண்ணா, நீ வேணும்னா பாரு. அப்பாவின் வாழ்வில் இது ஒரு பெரிய திருப்பம்.''

''ஆமாம். ஆனா, செய்தியை அவர் எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறாரோ, தாங்கிக்கொள்ளப் போகிறாரோ, அதுதான் பயமா இருக்கு.''

''பிள்ளையைக்கூட ஒதுக்கி வைக்கிற திராணி இருக்குமா என்ன?''

''மாமா வஜ்ரம் பாய்ந்த மரம், ராதிகா. அவரை எதுவுமே அசைக்க முடியாது'' என்றான் கண்ணன்.

## 25

# எதிரொலி

**ரா**திகா கிளாஸ்ஹவுஸை நோக்கி உற்சாகத்துடன் விரைந்து செல்வதைக் கண்டு நாதன் பெருமூச்செறிந்தார். உள்ளூறக் கண்ணனைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை அவருக்கும் இருந்தது. இந்த ஆசையை லவலேசமும் காட்டிக்கொள்ளக்கூடாது, காட்டிக்கொண்டால் ஸ்ரீதரின் கணக்கில் நாம் ஒருபடி குறைந்துவிடுவோம் என்று அவர் நினைத்தார்.

ராதிகா கண்ணிலிருந்து மறைந்தபின், மெதுவாக ஸ்ரீதர் ஆரம்பித்தான்: ''இந்தக் காலத்துப் பெண்களுக்கே பிடிவாதமும் அடங்காத்தனமும் கொஞ்சம் அதிகந்தான். இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?''

நாதன் அவன் பேச்சையே காதில் விழுந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவர் மனம் அவரையும் மீறிக் கிளாஸ் ஹவுஸில் மூழ்கிவிட்டது. ஸ்ரீதர் இன்னும் ஏன் உட்கார்ந்துகொண்டு கழுத்தை அறுக்கிறான் என்ற எரிச்சல்கூட உண்டாயிற்று. ஸ்ரீதர் தன் இயல்பில் தொடர்ந்தான்: ''கல்லூரிப் படிப்பு என்றுதான் காரணம் காட்டமாட்டேன். வரவரக் கல்லூரிப் படிப்பின் தரம் குறையக் குறைய மாணவ மாணவிகளின் பொறுப்பற்ற தன்மை வேண்டுமானால் குறைந்து வரலாம். ஆனால் பெண்களின் அடங்காத்தனத்துக்கும் பிடிவாதத்துக்கும் காரணம் என்ன தெரியுமா?''



முதல்முதலாகத் தம்மை மறந்து அவர் ஆத்திரத்துடன் ஸ்ரீதரைப் பார்த்தார். 'காரணத்தை ஒருவழியாகச் சொல்லி விட்டுத் தொலையேன்' என்று பார்வை குமுறிற்று.

ஸ்ரீதருக்குப் பிறருடைய பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும் சக்தி இருந்திருந்தால் என்றைக்கோ ரெட் ஹவுஸுக்கு வருவதை நிறுத்தியிருப்பான். ராதிகாவின் அலட்சியமும் வெறுப்பும் கக்கும் கண்களையே அவன் புரிந்துகொண்டதில்லை. நாதனுடைய பார்வையையா அவன் புரிந்துகொள்ளப் போகிறான்?

''பெண்களைப் பெற்றோர்கள் சரியாக வளர்ப்பதில்லை. தாய் பெண்ணைக் கண்டு பயப்படுகிறாள். தகப்பனார் அலட்சியமாக இருக்கிறார். வேண்டுவதெல்லாம் பெண்ணுக்குக் கிடைக்கிறது. ஆனால் பருவ வயசில் பெண்ணின் உள்மனம் புது உறவை நாடுகையில், இல்லறத்தை விழைகையில், பெற்றோர் அவளைக் கைவிட்டு விடுகிறார்கள். மாதாந்தர வருமானத்தில் கல்லூரி வரைக்கும் பெண்ணை இழுத்துப் போனவருடைய பொருளாதார நிலை, அவளை ஒரு புருஷன் கையில் பிடித்துக் கொடுக்கும் அளவுக்கு ஈடு கொடுக்க முடிவதில்லை. படிப்பு ஆனதும் ஒரு வேலையில் சேரும்படியாகி விடுகிறது.''

நாதன் எழுந்தார். இப்போது ஸ்ரீதர் சொன்னதெல்லாம் அவருடைய காதில் அறைவதுபோல விழுந்தது. ராதிகாவின் அடங்காத்தனத்துக்கு அடிப்படையான காரணத்தை, ஸ்ரீதர்மூலம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதே என்பதை நினைத்துப் பார்த்தபோது அவருக்கு அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை.

அவர் கடிகாரத்தைப் பார்த்தார்.

''மணி ஆறரை!'' என்றான் ஸ்ரீதர், நாதன் தம் மணிக்கட்டைப் பார்த்து முடியுமுன்.

நாதன் தம்முள் முணுமுணுத்துக் கொண்டார்; "ராதி போய் இருபது நிமிஷம் ஆகிறது!"

அவருடைய உதடுகளின் அசைவைக் கண்ட ஸ்ரீதர், "ஏதாவது சொன்னீர்களா?" என்று கேட்டான்.

"ஊஹூம்" என்று தலையசைத்த அவர், கிளாஸ் ஹவுஸ் இருக்கும் திசையையே பார்க்கலானார். வெளியே இருள் கவ்விக் கிடந்தது. கடந்த சில நாளாக மாலை இரவு வேளைகளில் மழை பெய்து வருகிறது. வானின் மூட்டத்தைப் பார்த்தால் இன்றும் மழை பெய்யும் என்று தோன்றியது அவருக்கு.

அவர் மௌனமாக எதையோ பார்த்தவண்ணம் இருப்பதைக் கண்ட ஸ்ரீதர் திடீரென்று எழுந்தான்.

"நான் போய் வருகிறேன்."

நாதன் அவனைப் பார்த்தார். 'இதைச் சொல்ல இத்தனை நேரமா?' என்ற அலுப்பு, பார்வையில் பிரதி பலித்தது.

"சரி" என்றார். வழக்கமாக அவன் விடைபெறும் போது, "நாளைக்கு வா" என்று அழைக்கிறவர் இன்று, யந்திரமாகச் "சரி" என்று கூறிவிட்டார்.

ஸ்ரீதர் போனதுகூட அவர் பார்வையில் ஒட்டவில்லை. மனம் முழுவதும் கண்ணன் வியாபித்துவிட்டான். தன் காரியத்துக்காகத்தான் அவன் வந்திருக்கிறான் என்று அவர் அடிச்சுச் சொன்னாரே, அது எவ்வளவு தூரத்துக்குத் தம் மனச்சாட்சிக்கு எதிராகச் சொன்ன வார்த்தை என்று அவரே நொந்துகொண்டார். எத்தனையோ நூற்றுக்கணக்கானவர் தினம்தினம் அவரைப் பார்க்க வருகிறார்கள். எல்லாருமே, அவரவர் காரியத்துக்காகத்தான்.. கண்ணன்தான் (ஏன், அப்புவுங்கூடத்தான். ஆனால் அப்பு யார் வீட்டுக்குள்தான் சுதந்திரமாக நுழையவில்லை?) இதுவரை, 'இது வேணும்,'



'அது வேணும்' என்று கேட்டுக்கொண்டு வந்ததில்லை. அப்பேர்ப்பட்டவனை, தன் காரியத்துக்காக வந்திருக்கிறான் என்று அவர் குற்றம் சாட்டினாரே!

இதற்கெல்லாம் காரணம் என்ன? அடிப்படையான காரணம் கண்ணன்மீது வெறுப்பா, எரிச்சலா? இரண்டுமே இல்லை. எங்கே அவன் தம்முடைய திட்டத்துக்கு எதிராக வந்துவிடுவானோ என்று பயந்தார்.

ஆனால் அடுத்த கணமே, சாயந்திரம் ராதிகா நடந்துகொண்ட விதத்திலிருந்து, இனிமேல் கண்ணனைக் கண்டு மனம் பயப்படத் தேவையில்லை என்று தோன்றியது. ஸ்ரீதரைக் கிழித்துப் போட்ட சுவட்டிலேயே, அவள் கண்ணனைக் காண ஓடோடிச் சென்றாள் என்றால் என்ன அர்த்தம்?

அர்த்தம் புரியப் புரிய அவருக்குத் தலை சுற்றியது. ஹாலில் ஜகஜ்ஜோதியாய் வெளிச்சம் இருந்தும் இருள் சூழ்ந்துவிட்டதாகத் தோன்றியது. உள்மனம், 'இனிமேல் உன்னால் எதுவும் செய்ய முடியாது. நீ பெற்ற பெண்ணே உன் திட்டங்களையும் ஆசைகளையும் குலைக்கிறாள்' என்று கேலியது.

நாதன் கண்களை மூடிக்கொண்டார். ஒரு கை தானாகத் தலையைப் பிடித்துக்கொண்டது.

திடீரென்று ஏதோ ஓர் ஒலி, தொலை தூரத்திலிருந்து, தொடுவானத்திலிருந்து கேட்பதுபோல இருந்தது. மெல்ல மெல்லப் பிரக்ஞை மீண்டபோது, பேச்சொலியும் சிரிப்பொலியும் மாறி மாறிக் கேட்டன.

அரைமயக்கம் தெளிந்துங்கூட, நாதனால் உன்னிப்பாக் கேட்டு, வார்த்தைகள் யாரிடமிருந்து வருகின்றன, அவற்றின் அர்த்தம் என்ன என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் அடுத்த நிமிஷமே படியேறி, ஹாலுக்குள் நுழையும் ஓசை கேட்டது.

''அப்பா!'' என்று கத்தின ராதிகா, ''நீங்க நினைச்ச மாதிரி கண்ணன் தன் காரியத்துக்காக வரவில்லை'' என்று சொல்லிக்கொண்டே அவர்முன் வந்தாள். அடுத்த கணமே அவருடைய விகாரம் அடைந்த முகம் பதறவைத்தது.

நெற்றியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே, ''என்ன அப்பா உடம்புக்கு?'' என்று கேட்டாள்.

''மாமா!'' என்றான் கண்ணன். அவனும் அவரருகில் வந்தான்.

''ஒன்றும் இல்லை.'' முனகின நாதன் மெதுவாகச் சமாளித்துக்கொண்டார். நிமிர்ந்து உட்கார்ந்து, தமக்கு ஒன்றும் இல்லை என்பதை நிரூபிக்கப் பார்த்தார்.

கண்ணன் அவரையும் ராதிகாவையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, ''ராதி, இன்னிக்கு மாமாவைத் தொந்தரவு செய்வதில் அர்த்தம் இல்லை. நான் வருகிறேன்'' என்றான். அடுத்த கணம் இரண்டடியும் நடந்தான்.

''உட்கார், கண்ணா'' என்றார் நாதன்.

''இல்லை. நான் நாளைக்குக் கார்த்தாலே எட்டு மணிக்கு வறேன். நீங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்.''

''என் உடம்புக்கு ஒன்னும் இல்லை'' என்று கத்தினார் அவர்.

''மனசுக்குத்தான்'' என்றாள் ராதிகா.

''ஆமாம். அவள் சொல்றது கரெக்ட். கையையோ காலையே வெட்டி எறிய முடியற மாதிரி, இந்த மனசையும் வெட்டி எறிய முடியுமானா, நான் என்னிக்கோ அதைச் செய்திருப்பேன். என் மனசு கிடக்கட்டும். நீ சௌக்கியமா இருக்கியா? ஒரு குறையும் இல்லாம இருக்கேன்னுதான் அப்பு சொன்னான்.''



''அதே அப்பு வேறு விதமாக என்கிட்டே சொல்லியிருக்கான்'' என்ற ராதிகா, ''அப்பா, என்கிட்டே உண்மையைச் சொல்லுங்கள். உங்க உடம்பும் மனசும் இப்போ எப்படி இருக்கு?'' என்றாள்.

''ஏன்?''

''பாலத்தின் சக்திக்கு ஏற்றபடிதான் அதன்மேல் பாரத்தை ஓட்டுவார்கள். அதுமாதிரி..''

''அது மாதிரி..''

''இன்னிக்குக் கண்ணன் ஒரு செய்தியைக் கொண்டு வந்திருக்கிறான். அதைத் தாங்கிக்கொள்ளவோ எதிர்த்துப் போராடவோ உங்களுக்குச் சக்தி இருக்கான்னு தெரிய வேணும்.''

''ராதி, ஏன் மாமாவின் மனசைப் போட்டுக் குழப்பறே?''

''இந்த மனசு ஐ.ஸி.எஸ். மனசுடா, கண்ணா. காத்துலே கிளைகள் அசைஞ்சா, மரத்துக்குச் சக்தி போயிடுத்துன்னு அர்த்தம் இல்லை. புயலடிச்சாலும் சாயாத மரம்டா நான்!''

''நீங்க வஜ்ரம் பாஞ்ச மரம்னு கண்ணன் கொஞ்ச நேரம் முன்னாடிதான் சொன்னான். இருந்தாலும் எனக்கு நம்பிக்கை இல்லை. இன்னிக்கு வந்திருக்கிற செய்தி மரத்தை வீழ்த்தாமற் போனாலும், கிளைகளை எல்லாம் ஒடிச்சுத் தள்ளக்கூடிய செய்தி!''

''குமாரைப்பற்றிய சமாசாரந்தானே?'' - நாதன் மெதுவாகத்தான் கேட்டார்.

அடுத்த கணம் கண்ணனும் ராதிகாவும் திடுக்கிட்டார்கள். அவருக்கு விஷயம் ஏற்கனவே தெரிந்தது தானா? யார் சொன்னார்கள்? ஒருவேளை கண்ணனுக்கு

எழுதிய பிறகு, அப்பாவுக்கும் குமார் கடிதம் எழுதி விட்டானா?

''உங்களுக்குத் தெரியுமா, மாமா?''

''என்னன்னு தெரியாது!''

''பின் எப்படி, குமாரைப்பற்றிய சமாசாரந்தானே என்று கேட்டீர்கள்?'' என்றாள் ராதிகா.

''என்னை அசைக்கக்கூடிய சமாசாரம் உன்னையும் அவனையும்பற்றித்தான் இருக்க முடியும். அம்மாதிரி விஷயம் இப்போது உன்னைப்பற்றி எதும் இல்லை.''

''அடே அப்பா!'' என்று வியந்த ராதிகா, ''சரியான ஐ.ஸி.எஸ். மனம்!'' என்றாள்.

''என்ன விஷயம்?''

''எப்படி ஆரம்பிக்கிறது என்றே புரியவில்லை, மாமா!''

''பீடிகை இல்லாமல், ஜோடனை இல்லாமல் முகத்தில் அறைவதுபோல ரெண்டு மூனு வார்த்தைகளில் சொல்லிவிடு. வியாக்கியானம் தேவையானால் நான் கேட்டு வாங்கிக் கொள்றேன்.''

''குமாருக்கு இருபத்தெட்டாம் தேதி ஹரித்துவாரத்தில் கல்யாணம்.''

'கல்யாணம்' என்ற வார்த்தையின் ஒலி காற்றோடு காற்றாய் மறைவதற்குள், நாதன் எழுந்து நின்றார். நீண்ட நேரம் கண்ணனையே கூர்ந்து பார்த்தார். பிறகு தாமாக உட்கார்ந்துகொண்டார்.

அவருடைய மௌனத்தைக் கண்டு கண்ணன் பயந்து போனான் என்றால், ராதிகா மௌனத்தின் முடிவுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். பிள்ளையின் காதல் திருமணத்தைப் பற்றித் தகப்பனார் எம்மாதிரியான



அபிப்பிராயத்தை வெளியிடப் போகிறார் என்று அறிய ஆவலும் ஆர்வமும் அவளைக் காக்கவைத்தன.

எரியும் விளக்கு எரிந்துகொண்டே இருந்தது. கடிகாரத்தின் முட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன. வெளியே மேகங்கள் உடைந்து, மழை பெய்ய ஆரம்பித்தது. ஹால்மட்டும் நிசப்தத்தில் உறைந்து கிடந்தது.

அப்பாவின் மௌனம் மெல்ல மெல்லப் பயத்தைக் கிளப்பியது, ராதிகாவின் மனத்தில்.

குமாரின் காதல் கல்யாணச் செய்தியே அப்பாவை வீழ்த்திவிட்டது. என்னதான் பெரும் படிப்புப் படித்து, பெரிய பெரிய பதவிகளையெல்லாம் வகித்திருந்தாலும், அவருடைய மனம் அவர் தம்பட்டம் அடித்துக் கொள்ளுவதுபோல வஜ்ரம் ஏறிய மனம் அல்ல என்று அவள் நினைத்தாள். மற்ற எல்லாத் தகப்பனார்களின் மனம் போலத்தான் அவர் மனமும் என்று கருதினாள். இந்த எண்ணமே ஒருவிதத் திருப்தியையும் அளித்தது.

கடைசியில் ஒரு சகாப்தம் முடிவுற்றதுபோல அவருடைய மௌனமும் முடிவுற்றது.

''கண்ணா!''

''மாமா!''

''கல்யாணத்துக்கு நீ போகப் போகிறாய், இல்லியா?''

''ஆமாம், மாமா. நான் வந்துதான் ஆகணும் என்று எழுதியிருக்கிறான்.''

''போய்விட்டு வா.'' நிதானமாகப் பேசினார்.

அவருடைய பேச்சின் நிதானம், ராதிகாவின் ஆசையை வெளியே இழுத்து வந்தது.

''அப்பா, நானும் போய்விட்டு வருகிறேன்.''

''உன் இஷ்டம்.''

''என்னப்பா, விட்டேத்தியாப் பேசறீர்கள்?''

''அவன் இஷ்டப்பட்டான். கல்யாணம் செய்து கொள்றான். நீ இஷ்டப்படறே, போய்விட்டு வா. இனிமேல் என்னுடைய அநுமதி யாருக்கும் எதற்கும் தேவையில்லை.''

''அப்பா!''

''ராதி, கத்தாதே. கண்ணா, இன்னொரு விஷயம்.''

''என்ன மாமா?''

''குமாரிடம், நான் அவனிடம் மன்னிப்புக் கேட்டதாகச் சொல்லு.''

''மாமா!''

''ஆமாம், நான் அவன் என் பிள்ளை என்கிறதையே மறந்துட்டேன். ரெண்டு மூணு வருஷங்களுக்கு ஒரு தடவை லீவில் அவன் வந்து போனபோது, பிள்ளை வந்து போகிறான் என்ற எண்ணந்தான் எனக்கு இருந்ததே தவிர, அவனுக்கு ஒரு தகப்பனார் செய்யவேண்டிய கடமை என் நினைவுக்கு வரவேயில்லை. இது என்னுடைய தப்பு!''

ராதிகாவும் கண்ணனும் நாதனையே பார்த்தார்கள்.

''இன்னொரு விஷயத்தையும் சொல்லு, அவனிடம். எனக்கு என்னதான் அவன்மீது கோபம் இல்லாமற் போனாலும், என்னையும் கல்யாணத்துக்கு அழைக்கவில்லையே என்ற வருத்தமும் தாபமும் உண்டு என்று சொல்லு.''

''நாளைக்கே, உங்களுக்கும் எழுதச் சொல்லிக் கண்ணன் லெட்டர் போடட்டும்.''

''அது தானாக் கனியாத பழம், ராதி!'' என்ற நாதன் எழுந்தார்.



அடுத்த கணம் அவர் இது ஒன்றுமே நடக்காதது போல, ''ராதி, பாலம்மா கிட்டே சொல்லு, கண்ணனும் சாப்பிட வருகிறான்னு. கண்ணா, கல்யாணச் சேதியைக் கொண்டு வந்திருக்கே. சாப்பிட்டுவிட்டுப் போ!'' என்றார்.

வார்த்தைகள் என்னதான் வந்தாலும், அவற்றில் தோய்ந்திருக்கும் விரக்தியை உணர்ந்தான் கண்ணன். 'வேண்டாம்' என்று சொல்லவும் அவனால் முடியவில்லை.

அவனது மௌனத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டவரைப்போல, நாதன், ''கண்ணா, என் கை என் கண்ணையே குத்திக்கொண்டுவிட்டது. இந்த வலியைக் கண்டு நீ ஏன் தளர வேண்டும்? வா, சாப்பிடப் போகலாம். மனித இயல்புகள் இப்படி இப்படித்தான் இருக்கணும்னு நாம் நிர்மானிக்கக்கூடாது என்ற உண்மை, இப்பத்தான் கொஞ்ச நாளாக எனக்குப் புரிந்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால், நான் இப்போதுதான் வளர ஆரம்பித்திருக்கிறேன். வா, சாப்பிடலாம்!'' என்றார்.

# 26

# நளினியின் எதிர்காலம்

**ம**காலிங்கத்தின் ஷஷ்டியப்த பூர்த்திக்கு இன்னும் ஐந்து நாட்களே இருந்தன. எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்று புரியாமல் மலைத்து நின்ற ஜயலட்சுமி எதையும் செய்யாமல் எதிரே இருக்கும் கணவரையும் அருகே நிற்கும் அப்புவையும் பார்த்தாள். வீட்டில் இல்லாத கண்ணனை நினைத்துக் கொண்டாள்.

மகாலிங்கம் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. காரியங்கள் அனைத்தையும் சரியான இரண்டு பிள்ளைகளிடம் ஒப்படைத்தபின் மனத்தை உலுப்பிக் கொள்ளுவானேன் என்று அவர் எண்ணினார். மனைவி பொறுமை இழந்து தவிப்பதைக் கண்டபோது அவருக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''ஜயா, ஏன் இப்படி இடிஞ்சு போய் நிக்கிறே? உட்கார்'' என்றார்.

''ஆமாம், உட்கார்னு நீங்க சொல்லிவிட்டீர்கள். செஞ்சதையெல்லாம் நினைச்சுப் பார்த்தா, ஒண்ணும் செய்யாதது மாதிரி இருக்கு. செய்ய வேண்டியது என்ன என்ன என்று எண்ணிப் பார்த்தா ஒண்ணும் இல்லாதது மாதிரியும் இருக்கு. ஆனா நமக்குத் தெரியாம ஏதேனும் முக்கியமா இருக்குமோ என்கிற கவலையும் ஏற்படறது.''

''மாமிக்கு என்னிக்குமே இந்த மாதிரி எல்லாம் பீதி உண்டாகும். ஷஷ்டியப்த பூர்த்தின்னா கேட்கணுமா? சொந்த விஷயமாச்சே'' என்றான் அப்பு.



''ஆமாண்டா, என்னுடைய விஷயந்தான். அவருடைய விஷயம் இல்லை'' என்றாள் ஜயா, எரிச்சலுடன்.

''மாமி, நீங்க ஏன் கவலைப்படுகிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை. சுக்ரீவனும் அநுமாரும் மாதிரி கண்ணனும் நானும் இருக்கிறோம். எல்லாம் அமோகமாக நடக்கப் போகிறது, பாருங்கள். நீங்க என்ன சொல்லுகிறீர்கள், மாமா?''

''உன்னை நீ அநுமார்னு சொல்லிக்கொள்வதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. அந்த வர்க்கத்தை உசத்திச் சொல்லிக்கொள்ளுகிறாய். பரவாயில்லை. ஆனா கண்ணனைச் சுக்ரீவன்னு சொன்னா ஒருவேளை அவனுக்குக் கோபம் வரும்'' என்றார் மகாலிங்கம்.

''நீங்க சொல்றதும் உண்மைதான், மாமா, கண்ணன் ஒரு ஜாம்பவான்!'' என்ற அப்பு, ''மாமி, இப்போ என்ன செய்யணும், சொல்லுங்கள்?'' என்றான்.

''ராமாயணம் கேட்கணும். அதுவும் கிஷ்கிந்தா காண்டம்!'' என்றாள் அவள்.

திடீரென்று அப்பு எழுந்தான்.

''எங்கேடா கிளம்பறே?''

''எங்கே புறப்படறே?''

அப்பு இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். மாமி ராமாயணம்னு சொன்னதும் ஷஷ்டியப்த பூர்த்தி அன்னிக்கு ராத்திரி நடக்கப் போற ஹரிகதை ஞாபகத்துக்கு வந்தது. ராமர் பட்டாபிஷேகம் ஏற்பாடு செய்திருக்கோமே.''

''அதுக்கு என்னடா இப்போ?'' என்று கேட்டாள் ஜயலட்சுமி.

''ஹரிகதை பண்ற சிதம்பர பாகவதருடைய மிருதங்கக்காரரால் வர முடியாதாம். அதனாலே..'' அப்பு இழுத்தான். பிறகு ஜயா மாமியைப் பார்த்தான்.

''அதனாலே என்ன பண்ணப் போறே? நிறுத்திடப் போறியா?''

''எல்லாம் அப்புறம் சொல்றேன்.''

''டேய், சொல்லிவிட்டுப் போடா? புதுசா ஒரு குண்டைத் தூக்கிப் போடறியே?''

''உங்களுக்குக் கவலைப்பட ஏதானும் வேண்டாமா, மாமி?'' என்று சொல்லி அப்பு சிரித்தான்.

''டேய், அப்பு என்னை அழவைக்காதே!''

புறப்பட்ட அப்பு நின்றான். ''கோயமுத்தூர் பலராமன்னு ஒருவர் இருக்கிறார். நன்னா மிருதங்கம் வாசிப்பார். அவரை ஏற்பாடு பண்ணப் போறேன்.''

''டேய்! நாலு நாள் இருக்கிறபோது சொன்னா வருவாரா?''

மகாலிங்கம் குறுக்கிட்டார்.

''அதைப்பற்றி நீ ஏன் விசாரப்படறே? அப்பு பார்த்துக்கொள்கிறான். இந்தப் பலராமன் இல்லாட்டா இன்னொரு தனராமன்!''

''மாமி, எந்த வித்துவானுக்கு அசௌகரியம் இருந்தாலும் பலராமனுக்கு இருக்காது. ஆபீஸுக்கு ஒரு நாள் லீவு போட்டுவிட்டு வந்துவிடுவார்!''

''ஆபீஸா?''

''ஆமாம். வெறும் மிருதங்கம் வயிற்றுக்குத்தான் தாளம் போட்டது. அதனாலே அந்தக் காலத்திலேயே குமாஸ்தாவாகச் சேர்ந்தார். இப்போ ரெவினியூ டிபார்ட்மெண்டிலே தலைமைக் குமாஸ்தாவாக இருக்கார். இருபதோ இருபத்தஞ்சோ கொடுத்தால் போதும்.''

''ஒரு வேஷ்டியும் துண்டுங்கூடக் கொடுக்கணும்'' என்றாள் ஜயலட்சுமி.



''மாமா எனக்கும் கண்ணனுக்குமே வேஷ்டி வாங்கலையாம்!'' என்றான் அப்பு. திடீரென்று அவன் தன் முகத்தில் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வரவழைத்துக் கொண்டான்.

ஜயலட்சுமி மகாலிங்கத்தைப் பார்த்தாள். ''அப்பு சொல்றது வாஸ்தவமா?'' என்று கேட்டாள்.

''அப்போ நான் சொல்றது பொய்யா?'' என்றான் மகாலிங்கத்தைப் பார்க்காமலேயே.

அவருடைய மௌனம் ஜயாவின் எரிச்சலை அதிகமாக்கியது.

''கண்ணன் யந்திரமா உழைக்கிறான். இவன் பம்பரமா சுத்தறான்!'' ஜயலட்சுமி நிறுத்தினாள். மூச்சு வாங்கியது. அதே சமயத்தில் கண்ணன் திடீரென்று உள்ளே நுழைந்தான்.

''அப்பு வெறும் பம்பரம் இல்லே, கயிறில்லாத பம்பரம். நீங்க ரெண்டு பேரும் சொல்லாமலேயே சில காரியங்களைச் செய்திருக்கிறான். ரெண்டு பேரும் கோபிச்சுக்க மாட்டீர்கள்னு அவன் மனசிலே எண்ணம்.''

''என்னடா செய்திருக்கே?'' ஜயலட்சுமி வேஷ்டி துண்டுகளை மறந்தாள்.

''சொல்லுடா, அப்பு!'' என்றான் கண்ணன்.

''எதைச் சொல்லு என்கிறே?''

''ஓ, நிறைய இருக்கா?'' என்று கேட்டார் மகாலிங்கம்.

கண்ணன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

''பாக்டரி தொழிலாளிகளுடைய மனைவிகளுக்கும் குழந்தைகளுக்கும், எஸ்டேட்டில் வேலை செய்கிற கூலிகளுக்கும் புடைவை, ரவிக்கை, வேஷ்டின்னு நிறையத் துணிமணிகளுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறான். அதுவும் தானே கோயமுத்தூருக்குப் போய்!''

''ஏன்டா, அப்படியா?'' என்றார் மகாலிங்கம்.

''ஆமாம். உங்களுக்குப் பிடிக்கலைன்னா ஆர்டரைக் கான்ஸல் பண்ணிடறேன். பணக்காரர்கள் உதட்டாலே புகழ்ந்து, ஈரமில்லாத கையாலே கைகுலுக்கிவிட்டுப் போவார்கள். ஆனால் ஏழைகள் மனசு குளிர்ந்து வாழ்த்துவார்கள். அந்த ஆசீர்வாதம் உங்க ரெண்டு பேருக்கும் வேணும்னுதான் செய்தேன். நான் போய்க் கான்ஸல் பண்ணிடறேன். கவலைப்படாதீர்கள்'' என்றான் அப்பு.

''ஆயிரத்து எண்ணூறு ரூபாய் செலவு.''

''மாமாவுக்குப் பல்லு குத்தற செலவு.''

''கான்ஸல் பண்ணாதேடா. ஏழைங்க மனசு குளிரட்டும். பார்த்தியா, ஏதோ முக்கியமானது விட்டுப் போறது, விட்டுப் போறதுன்னு உதைச்சுக்கிறேனே, இது மாதிரியான விஷயங்கள்தான்!'' என்றாள் ஜயலட்சுமி.

''இன்னும் என்னடா செய்திருக்கே?''

அப்பு கலகலவெனச் சிரித்தான்.

''டேய் கிளம்பு, சிரித்துக்கொண்டு நிற்காதே!'' என்று கண்ணன் அவசரப்படுத்தினான். ''மாமா, நானும் அப்புவும் நாளைக்குக் கார்த்தாலே மேட்டுப் பாளையம் போகிறோம், பெரிய காரையும் ஜீப்பையும் எடுத்துக்கொண்டு..'' என்றான்.

''நளினியை எதிர்த்துக்கொண்டு அழைக்கத்தானும் போகப் போவதாக ஸ்ரீதர் சொன்னானே!'' என்றார் மகாலிங்கம்.

''அவன் ஒண்ணும் போக வேண்டாம்'' என்றாள் ஜயலட்சுமி.

''அவனும் வர்றதானால் வரட்டுமே, மாமி!'' என்றான் அப்பு.



''கூடாது. அவனுக்கு ஆபிஸில்தான் வேலை.''

''உங்களுக்கு அவனைப் பிடிக்கலை.''

''ஆமாம். பிடிக்கலை. அவன் மூஞ்சியும் முகரையும்!''

''ஏன் மாமி, அவனைக் கரிச்சுக் கொட்டுகிறீர்கள்? நளினி இண்டஸ்ட்ரீஸின் என்ஜினியர். மேனாடுகளில் படிச்சவன். வாட்ட சாட்டமா இருக்கிறான். தங்கமான குணம்; இல்லியா, கண்ணா?''

''புதுசா நான் என்ன சொல்லப் போறேன்? ஆனா அவன் வர்றதானா இன்னொரு கார் வேண்டியிருக்கும்.''

''போறபோது ஜீப்பிலே வரட்டும். வர்றபோது பஸ் இருக்கவே இருக்கு!'' என்றான் அப்பு.

ஜயலட்சுமி இரைந்தாள்.

''என் பெண்ணை எதிர்கொண்டு அழைக்க அந்தத் தடியன் போகக்கூடாது. நீங்க என்ன சொல்லுகிறீர்கள்?''

''நீதான் அடிச்சுச் சொல்லியாச்சே!'' என்றார் மகாலிங்கம்.

''அப்பு, வாடா! தொட்டிலையும் ஆட்டிக் குழந்தையையும் கிள்ளியாச்சு! போதும்.''

'தொள தொள' வென வழியும் காக்கிக் கால்சிராயுடன் அப்பு கண்ணன் பின்னால் ஓடினான்.

அவர்கள் இருவரும் மறைந்த பிறகு, மகாலிங்கம் ஜயாவைப் பார்த்துக் கேட்டார்: ''இந்த இரண்டு பிள்ளைகளையும் பற்றி என்ன நினைக்கிறே?''

ஜயலட்சுமி விழித்தாள். பிறகு, ''ஏன், நல்ல பிள்ளைகள்!'' என்றாள்.

''சுக்கிரீவன் அனுமார்னு அப்பு சொல்லிக்கொண்டான். ஆனா ரெண்டுபேரும் பரதனும் லட்சுமணனும் மாதிரி.''

''மறுபடியும் ராமாயணத்தை ஞாபகப்படுத்தாதீர்கள். மிருதங்கக்காரன் நினைவு வந்துடும். அப்புறம் கவலை அள்ளித் தின்னும்.''

''அப்போ மிருதங்கக்காரன் நினைவு இப்போ வரவில்லியா?'' என்று கேட்டுச் சிரித்தார் மகாலிங்கம். பிறகு நிதானமாக, ''ஜயா, நீ ஸ்ரீதர் விஷயமாகப் பேசின தெல்லாம் சரி. ஆனா கொஞ்ச நாட்களுக்கு மனசிலேயே வைத்துக்கொள். நேரிடையாகச் சொல்லிடாதே!'' என்றார்.

''ஏன்?''

''நாளைக்குத்தான் நளினி வருகிறாள். அவள் பாக்டரியில் நாலஞ்சு மாசமாவது நன்னாப் பழகி, வேலையைப் பூரணமாகக் கத்துக்கொள்ளணும். இரண்டுங் கெட்டான் வேளையில் ஸ்ரீதரை விரோதித்துக்கொண்டு அவனை அனுப்பிவிட்டால் நமக்குத்தான் சிரமம். அவன் போக்கும் குணமும் நமக்குப் பிடிக்கிறதோ இல்லியோ, அவன் வேலையில் அவன் சூரன்தான்.''

''நம்மிடமே அவன் ரொம்ப ஸ்டைல் காட்டறான்'' என்றாள் ஜயா.

''உனக்கு அவன் 'ஸ்டைல்' காட்டறது ஒண்ணுதான் தெரியும். மற்ற விஷயங்கள் ஒண்ணும் தெரியாது!''

''எனக்கென்ன தெரியும்? நீங்க ஏதாவது சொன்னாத்தானே?''

''வேளை வர்றபோது சொல்றேன்.''

''கண்ணனுக்கும் அவனுக்கும் அவ்வளவாக ஒத்து வர்றலைன்னு காதிலே விழுந்தது. ராயர் சொன்னார்.''

''கண்ணனோடு ஒருவனால் ஒத்துப் போக முடியலைன்னா, நீயே பார்த்துக்கொள்ளேன். சரி, சரி, நாம பேச வேண்டியது எவ்வளவோ இருக்கு! இந்த ஸ்ரீதர் இப்போ முக்கியமில்லே!'' என்றார் மகாலிங்கம்.



''ஒண்ணு கேக்க மறந்துட்டேன்'' என்று ஜயலட்சுமி திடீரென்று ஆரம்பித்தாள்.

''என்ன?''

''நாதனைப் பார்த்தீர்களா, சமீபத்தில்?''

''நேற்றுப் பார்த்தேன். ஏன்?''

''ஒரு தடவைக்கு மூணு தடவையாக அழைக்கணும் அவரை. இல்லாவிட்டால் வரமாட்டார்.''

''நான் ரெண்டு மூணு தடவை பேச்சோடு பேச்சா சொல்லியாச்சு. நளினி வந்தபிறகு அவளும் போய் அழைக்கட்டும். ஆனா மனுஷன் வருவாரோ என்னவோ?''

''ஏன்?''

''பிள்ளை அப்பா பேச்சைக் கேட்காமலே தன் கலியாணத்தை நிச்சயம் செய்துகொண்டுவிட்டான். இந்த மாதக் கடைசியில் கல்யாணம்.''

''அப்படியா? குமாரா?''

''ஆமாம். மனுஷன் வெளியே வழக்கமான நடத்தோடு பேசினாலும், நாடி தளர்ந்து போயிருக்கிறார்னு நன்னாத் தெரியறது.''

''அட பாவமே! குமாருக்கு நளினியைப் பார்க்கணும்னு நாம அந்தக் காலத்தில் நினைச்சுண்டிருந்தோம் இல்லியோ?''

''ஒருத்தன் பெண்டாட்டியை இன்னொருத்தன் கட்டமாட்டான், ஜயா!''

''கொஞ்ச நாளா என் மனசிலே என்ன தோணிண்டு இருக்கு தெரியுமா?''

''தெரியாது.''

''குணத்திலே தங்கக் கம்பியாக ஒருத்தன் கைக்குள்ளேயே இருக்கான். அவனை ஏன் மாப்பிள்ளையாக்கிக் கொண்டு, வீட்டோடு வைச்சுக்கப்படாதுன்னு தோணின்டிருக்கு!''

''யாரு, அப்புவா?'' வேண்டுமென்றே கேட்டார் மகாலிங்கம்.

''உங்களுக்குப் போறதே புத்தி! அப்பு அனுமார். பிரம்மசாரியாகவே காலத்தை ஓட்டுவான். இல்லாமல் போனா லட்சுமணன்மாதிரி பெண்டாட்டி நினைவே இல்லாமல் உழைச்சிண்டிருப்பான். கண்ணன் மாப்பிள்ளையா வந்தா நமக்கு என்ன குறைஞ்சு போயிடும்?''

''நீ சொல்றே. நானும் சரி என்கிறேன். உடனே கலியாணம் நடந்துடுமா? கழுத்தை நீட்டுன்னு சொன்னா நீட்டிவிடற பெண்ணா, நம்ப பெண்?''

''நளினிக்குத்தான் கண்ணனைத் தெரியுமே! பரிச்சயம் இருக்கே?''

''ரொம்ப சரி, ஆனா கண்ணன் என்ன நினைக்கிறானோ?''

''கண்ணனுக்கு என்ன ஆட்சேபம் இருக்கும்?''

''நாதனுடைய பெண் ராதிகா இருக்கிறாள்!''

''நாதன் தம் பெண்ணைக் கண்ணனுக்குக் கொடுக்க முன்வருவார்னு நீங்க நினைக்கிறீர்களா?''

''ஏன் கூடாது?''

''ஐ.ஸி.எஸ். ஜம்பம் இன்னும் போகலை. தங்கை சீதாவை முகாலோபனம் செய்யறதில்லை. அவருடைய பிள்ளைக்கா தம் பெண்ணைக் கொடுப்பார்?''



''நம்ப பெண்மாதிரிதான் ராதிகாவும்; சொல்லப் போனா பிடிவாதம் பத்து மடங்கு ஜாஸ்தி.''

''அதனாலே?''

''பிள்ளை கட்டு மீறிண்டு போன மாதிரி பெண்ணும்.....''

''பெண்ணும் கட்டு மீறிண்டு போகலாம். ஆனா மாமாவுக்கு இஷ்டமில்லாத, ஏன் மாமா வெறுக்கிற, காரியத்திலே கண்ணன் பிரவேசிக்கமாட்டான். ஒதுங்கிக் கொள்வான்.''

''பார்ப்போம், பார்ப்போம்'' என்றார் மகாலிங்கம்.

''என்கிட்டே இப்போ வாதாடினீர்கள். ரொம்ப சரி. ஆனா உங்க மனசிலே என்ன இருக்கு?''

''கண்ணனைப்பத்திக் குத்தலாச் சொன்னா நாக்கு அழுகிவிடும்.''

''நான் அதைக் கேட்கலை.''

''கொஞ்சம்பொறுமையாக இரு. நளினி வரட்டும். ஜெர்மனியிலிருந்து வர்றவளுடைய மனசிலே என்ன என்ன மாற்றங்கள் இருக்குன்னு பார்ப்போம்.''

''ஒரு மாற்றமும் இராது.''

''அவள் பாக்டரியில் ஸ்ரீதரோடு பழகப் போகிறாள். ஸ்ரீதர் அவளோடு பழகும்போது, பாக்டரி சம்பந்தமான விஷயங்களோடு நிறுத்திக்கொள்ளப் போறதில்லை.''

''அத்து மீறிப் பழகினால் அந்தத் தடியன் கழுத்தை நானே நொறுக்கிடுவேன்!''

''அதுவரையில் உன் பெண் காத்துக்கொண்டிருக்க மாட்டாள். ஆனால் அவள் வந்த பிறகு அவளுடன்

பழகும்போது, ஸ்ரீதர் உண்மையாகவே தன் போக்கை மாற்றிக்கொண்டால்?''

ஜயலட்சுமி விழித்தாள்.

''பயப்படாதே, ஜயா! ஏதாவது விபரீதம் நடக்குமோன்னு நீ பயப்படறே! ஒண்ணும் நடக்காது. உண்மையாகவே ஸ்ரீதர் நல்லவனாக மாறி, நளினிக்கும் அவனைப் பிடித்துவிட்டால் அவனே நமக்கு மாப்பிள்ளையாக வருவதில் யாருக்கும் ஆட்சேபமும் இருக்க முடியாது. தொழிலகத்தின் எதிர்காலம் மகோன்னதமாக இருக்கும்.''

''எனக்கு என் பெண்ணின் எதிர்காலந்தான் முக்கியம்.''

''கவலைப்படாதே, எல்லாம் நல்லபடியா நடக்கும். ஸ்ரீதரைப் போல உள்ளவர்களால் எளிதில் மாறமுடியாது. அப்படி மாறினது போலத் தோன்றினாலும், சீக்கிரமே வேஷம் கலைந்துவிடும்.''

சொல்லிவிட்டு மகாலிங்கம் எழுந்தார். மனைவியின் முகத்தைப் பார்த்தார். அடுத்த நிமிஷம் அவர் அறையை விட்டும் வெளியேறினார்.

# 27

# நளினியின் நிகழ்காலம்

மேட்டுப்பாளையம் பவானி - பாலத்தைத் தாண்டியதும், ''கண்ணா, போஸ்ட் ஆபீஸ்கிட்டே வண்டியை ஓரமாக நிறுத்து'' என்றான் அப்பு.

''எதற்கு?''

''நிறுத்தேன், அப்புவுக்கு ரெண்டு நிமிஷ வேலை ஒண்ணு இருக்கு.''

''ப்ளூ மவுண்டன் வர நேரமாயிடுத்து. நாமே லேட்!''

''முதல்லே நிறுத்து, ஒரு நிமிஷம்.''

கண்ணன் பொறுமை இழந்தாலும் ஏதோ விஷயம் இருக்கிறது என்று எண்ணிக் காரை நிறுத்தினான். பின்னால் வந்த ஜீப்பும் நின்றது.

காரிலிருந்து அவசர அவசரமாக இறங்கி ஓடிய அப்பு ஐந்தாவது நிமிஷம் தூக்க முடியாமல், ஒரு சுமையைத் தூக்கிக்கொண்டு திரும்பினான்.

''என்னடா அப்பு இது? எனக்குத் தோணவேயில்லையே?'' என்று அயர்ந்து போனான் கண்ணன்.

''இது போறாது!''

''ஏண்டா, நளினியாலே இத்தனை பெரிய ரோஜா மாலையைத் தாங்க முடியுமா? செண்டைத்தான் தூக்க முடியுமா?''

''அப்புவே கையிலே தூக்கிண்டு வந்திருக்கானே'' என்று சொல்லிச் சிரித்தான் அப்பு. பிறகு மாலையையும் செண்டையும் பின்ஸீட்டில், மெதுவாக வைத்தான்.

''இதெல்லாம் எப்போ ஏற்பாடு செய்தே? என்கிட்டே இந்த மாதிரி செய்யப் போறேன்னுகூடச் சொல்லலியே!''

''உங்க யாருக்காவது இந்த மாதிரி ஐடியா தோணறதான்னு பார்த்தேன். நீ சொல்லவில்லை. ஐயா மாமிக்குக்கூட ஷஷ்டியப்த பூர்த்தியின்போது தன் கழுத்தில் விழப்போகிற மாலையைப்பற்றியே நினைவு. அதனாலே அப்புவே ஏற்பாடு செய்யும்படியா நேர்ந்தது.''

''எங்கே வாங்கினே?''

''கோயமுத்தூரிலிருந்து வறது. பஸ் டிரைவர் துரைக்கண்ணுகிட்டே ரெண்டுநாள் முன்னாலேயே சொல்லியிருந்தேன். அவன் இன்னிக்குக் காலை முதல் பஸ்ஸிலே வர்றதாகச் சொன்னான். வறபோது மாலையையும் கொண்டு வந்தான்.''

''அப்பு!'' என்று ஆரம்பித்த கண்ணன், ''நீ பெரிய ஆள்டா! நீ பெரிய ஆள்! எதை எப்போ எப்படிச் செய்யணும் என்கிறதை உன்கிட்டேயிருந்து கத்துக் கொள்ளணும்.''

''இப்போ இந்த அப்புவாலே உனக்கு என்ன காரியம் ஆகணும்? வாயாரப் புகழ்கிறாய்!''

''நீதான் கயிறு இல்லாத பம்பரமாச்சே! ஒருத்தர் சொல்லியா நீ ஏதும் செய்யறே?''

''அப்பு தலையிலே ஐஸ் வைக்காதே! அப்புறம் அப்பு ஸ்டேஷன் பக்கமே கால் வைக்காம, பஸ்ஸிலேயே திரும்பிவிடுவான்!''

கண்ணன் சிரித்தான்.



''சில சமயத்திலே நீ இப்படி முட்டாள்மாதிரியும் பேசறே!''

பிளாட்பாரத்தை அடைந்த பிறகுதான், ரெயில் பத்து நிமிஷங்கள் தாமதமாக வருகிறது என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள். ஜீப் டிரைவரும் இன்னொரு சிப்பந்தியும், சிமென்டு பெஞ்சியில் மாலையையும் செண்டையும் வைத்துவிட்டு அருகிலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

கிடைத்த பத்து நிமிடங்களைக் காபி அருந்தப் பயன்படுத்திக் கொண்டார்கள் அப்புவும் கண்ணனும்.

சிற்றுண்டிச் சாலையைவிட்டு வெளியே வருகையில் அப்பு, ''கண்ணா, இப்போ உன் மனசிலே என்ன இருக்குன்னு அப்புவுக்குத் தெரியும்!'' என்றான்.

''என்ன?''

''நளினி கழுத்தில் யார் மாலையைப் போடப் போகிறார்கள், என்று?''

''இந்தக் கேள்வி என் மனசிலே மாலையைப் பார்த்ததுமே எழுந்தது. ஆனா அதுக்கும் நீ ஏற்பாடு செய்திருப்பாய் என்று விட்டுவிட்டேன். இந்தக் கணத்தில் என் மனசில் என்ன இருக்குன்னு உன்னாலே சொல்ல முடியாது!''

கண்ணனுடைய பேச்சை லட்சியம் செய்யாததுபோல அப்பு, சற்றுத் தூரத்தில் பட்டுப் பாவாடையும் தாவணியுமாக நின்ற ஒரு பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''கண்ணா, நீ அப்போ உன் மனசில் கேட்டுக் கொண்ட கேள்விக்குப் பதில் கிடைச்சுடுத்து. வா, வா.'' அப்பு பெண்ணை நோக்கி விரைவாக முன்னேறினான். கண்ணனும்மெதுவாகப் பின் தொடர்ந்தான்.

அருகே சென்றபோதுதான், பெண்ணுடன் ஒரு பெரியவரும் இருப்பது தெரிந்தது.

''ஸார், இவள் உங்க பெண்ணா?'' என்று ஆரம்பித்தான் அப்பு.

ஒரு தடவை அவனை ஏற இறங்கப் பார்த்த அவர், பின்னால் நிற்கும் கண்ணனையும் கவனித்துவிட்டு, ''ஆமாம், ஏன்?'' என்று கேட்டார்.

''ஏ குழந்தே, உன் பேரு என்ன?''

''நான் ஒண்ணும் குழந்தையில்லே!'' என்று சொல்லிக் 'களுக்' என்று சிரித்தாள்.

''நீ ஏன் சிரிக்கிறே என்று இந்த அப்புவுக்குத் தெரியும்! தொளதொளா பான்டையும், ஷர்ட்டையும், உருண்டையான மூக்கையும் பார்த்துத்தானே?''

திடீரென்று அப்புவின் பாணியிலேயே அந்தப் பெண்ணும் பேசினாள்: ''இந்த வசந்தா மற்றவர்களுடைய உருவத்தைப் பார்த்து ஏளனமாகவோ, பரிகாசமாகவோ சிரிக்கமாட்டாள்.''

''வெரி குட்! வெரி குட்!''

அப்பு ஆரவாரித்துக்கொண் டிருக்கையிலேயே பெரியவர், ''உங்களுக்கு என்ன வேணும்?'' என்று கேட்டார். குரலில் கடுமை தொனித்தது.

பெண்ணை விட்டுவிட்டு அப்பு பெரியவரைப் பார்த்தான்.

'''ஸார், உங்களுக்கு ஊட்டியில் மகாலிங்கத்தைத் தெரியுமா? எஸ்டேட் ஓனர், பாங்க் டைரக்டர், நளினி இண்டஸ்ட்ரீஸ் முதலாளி.''

''அவருடைய பெண் இதோ வரப்போகிறாள். எங்கேயிருந்து தெரியுமா? ஜெர்மனியிலிருந்து. அவளை



வரவேற்கத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். இவர்தான் மிஸ்டர் கண்ணன், மானேஜர். இன்னொருத்தன், அதாவது நான் அப்பு, ஒரு சித்தாள்.''

''சமாசாரத்தைச் சொல்லுங்களேன். ஊரைச் சுற்றுகிறீரே!''

''பிறந்ததிலிருந்து உண்டான பழக்கம். விஷயம் இவ்வளவுதான். வரப்போகிற நளினியின் கழுத்தில் உங்க பெண் நாங்க கொண்டு வந்திருக்கிற ரோஜா மாலையைப் போடணும்!''

''பூ! இதுதானா! இதை முதல்லேயே சொல்றதுதானே! குலம் கோத்திரமெல்லாம் விசாரிக்க ஆரம்பிச்சீங்களே?'' பெரியவர் முதல் முறையாகச் சிரித்தார். பிறகு, கண்ணனும் சிரிப்பதைக் கவனித்துக்கொண்டே, ''வசந்தா, நீ மாலையைப் போட்டு வரவேற்புக் கொடம்மா!'' என்றார்.

''சரி, அப்பா!'' என்ற அவள் அப்புவைப் பார்த்து, ''வசந்தாவைப் பார்க்கலேன்னா என்ன செய்திருப்பீங்க?'' என்று கேட்டாள்.

''இந்த அப்புவே, நாணிக் கோணிண்டு ஒரு பொண்ணாட்டமாச் சிரிச்சுண்டு - இப்போ நீ சிரிக்கிறியே அது மாதிரிச் சிரிச்சுண்டு - நளினி கழுத்தில் மாலையைப் போட்டிருப்பான். அப்புவுக்குப் பெண்பால் அப்பி. அப்பின்னு இன்ட்ரொடியூஸ் பண்ணிக்குவான்!''

வசந்தா வாய்விட்டுச் சிரித்தாள். ரெயிலும் வருவது தெரிந்தது.

ரெயில் வந்து நின்றது.

நளினி இறங்கினாள். அவளுடைய இரட்டைப் பின்னலையும், கறுப்புக் கண்ணாடியையும், தோளில் வழுக்கிக்கொண்டிருந்த புடைவையையும் கண்டு அப்பு, தனக்குள் சிரித்துக்கொண்டான். ரெயில் பெட்டியிலிருந்து

சாமான்களைச் சிப்பந்திகள் எடுத்துக்கொண்டு வர, நளினி வெளியே பிளாட்பாரத்தில் நிற்க, அப்பு, ''வசந்தா!'' என்று கூப்பிட்டான்.

அடுத்த கணம் பிரம்மாண்டமான ரோஜா மாலையை வசந்தா நளினிக்குப் போட்டுச் செண்டையும் கையில் அளித்துவிட்டு, ''வீ ஆல் வெல்கம் யூ வித் க்ரேட் பிளெஷர்!'' என்றாள்.

''தமிழிலேயே சொல்லு, வசந்தா. நளினி தமிழ் ஒலி கேட்டு ரொம்பக் காலமாயிருக்கும்!'' என்றான் அப்பு.

எல்லாரும் சிரித்தார்கள். நளினியும் சிரித்துக் கொண்டே, மாலையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டாள். பிறகு, ''அப்பு, யாரு இந்தப் பெண்?'' என்று கேட்டாள்.

''அப்புவின் திடீர்த் தங்கை! திடீர் ஜிலேபி, தயிர் வடை மாதிரி ஒரு திடீர்த் தங்கை! உனக்குத் திடீர் மாலை போடுவதற்காகத் தயாரான தங்கை!'' என்றான்.

''கண்ணா, சௌக்கியமா?'' என்று கேட்ட நளினி, ''அம்மாவும் அப்பாவும் எப்படி இருக்கிறார்கள்? அம்மா உடம்புக்கு ஒண்ணுமில்லையே?'' என்று தொடர்ந்தாள்.

''ஹாப்பி கஸின்!'' என்றான் அப்பு.

''தமிழிலே பேசு!'' என்றாள் நளினி.

''நேத்துத்தான் அவர்களுக்குக் கலியாணமான மாதிரி இருக்கு. இன்னும் நாலு நாட்களிலே இன்னொரு கலியாணம்! அடுத்த வருஷமே சதாபிஷேகமும் வரக்கூடாதான்னு அம்மா ஏங்கறா!'' என்று அப்பு மூச்சு விடாமல் பேசிவிட்டு, ''புறப்படுவோமா?'' என்றான்.

வசந்தாவும் அவளுடைய தந்தையும் விடைபெற்றுக் கொண்டு போனார்கள். ''தாங்க் யூ வெரி மச், மை லிட்டில்



ஸிஸ்டர்'' என்று சொல்லி அப்பு அவளுக்கு உபசாரம் செய்தான்.

மூவரும் நடந்தார்கள் காரை நோக்கி.

''கண்ணா, நீ நன்னா மாறியிருக்கே! உடம்பிலே சதை ஏறியிருக்கு'' என்றாள் நளினி.

''அப்பு?'' என்று கேட்டான் அப்பு.

''நீ என்னென்னிக்கும் ஒரே மாதிரிதான். எத்தனை சாப்பிட்டாலும் உடம்பிலே ஒட்டாது. எத்தனை நாள் பட்டினி கிடந்தாலும் உடம்பு தேயாது!'' என்றாள் நளினி.

''இன்னமே தேய்வதற்கும் ஒண்ணும் இல்லே'' என்றான் கண்ணன்.

அவர்கள் சந்தோஷத்தின் எல்லையில் இருக்கையில், பிளாட்பாரத்தின் கோடியிலிருந்து ஒருவன் தலைதெறிக்க ஓடிவருவதை மூவருமே கண்டார்கள். அப்புவும் கண்ணனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

ஓடிவந்தவன், மூச்சு இரைக்க நின்றான், நளினியின் முன். பிறகு நிதானமாக, ''ஹாபி டு ஸீ யூ, மிஸ் நளினி. ஐ ஆம் ஸ்ரீதர். என்ஜினியர் அண்டு டெக்னிகல் அட்வைஸர் டு நளினி இண்டஸ்ட்ரீஸ்!'' என்றான்.

''அப்படியா, ரொம்ப சந்தோஷம்'' என்ற நளினி, ''நீங்கள் இவர்களுடன் வரவில்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை. ஒருவேளை நான்கூட வருவதை அவர்கள் விரும்பவில்லைபோல் இருக்கிறது! ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு வந்தேன்!''

''அதுதான் லேட்!'' என்ற அப்பு, ''ரெயில் சரியான டயத்துக்கு வந்திருந்தா, மிஸ் நளினியைப் பிளாட் பாரத்திலே சந்திக்காமல், வழியிலே கல்லாரிலோ பர்லியாரிலோ சந்தித்திருப்பார்.''

"அப்பு, ஷட் அப்!" என்றான் ஸ்ரீதர்.

"தாங்க் யூ!" என்றான் அப்பு.

"நான் தாமதமாக வந்ததற்கு என்னை மன்னியுங்கள்!" என்றான் ஸ்ரீதர்.

"உண்மையில் நான் உங்களை எதிர்ப்பார்க்கவே இல்லை."

"என் கடமை....." என்று இழுத்தான் ஸ்ரீதர்.

"இட் இஸ் வெரி கைண்ட் ஆஃப் யூ!" என்றாள் நளினி. பிறகு கண்ணனைப் பார்த்து, "போவோமா?" என்று கேட்டாள்.

"உம்."

"அப்போ, மிஸ்டர் ஸ்ரீதர்; நீங்கள்?"

"டாக்ஸி காத்துக்கொண்டிருக்கும் அவருக்கு!" என்றான் அப்பு.

தீப்பொறிகள் சிதறின ஸ்ரீதரின் கண்களிலிருந்து. ஆனால் அவனால் ஏதும் பேச முடியவில்லை.

"நாம் ஊட்டியில் சந்திப்போம்" என்று சொல்லிவிட்டு நளினி காரில் ஏறிக்கொண்டாள்.

## 28

# அப்பு கிளப்பிய பூதம்

சஷ்டியப்த பூர்த்தி முடிந்து இரண்டு நாட்களாகி விட்டன.

ஜயலட்சுமிக்கு இருக்கை கொள்ளவில்லை. உள்ளத்தின் பூரிப்பில் அவளுக்கு எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்றே தெரியவில்லை. சஷ்டியப்தபூர்த்தி எப்படி நடந்தது? எல்லாருக்கும் நடப்பது போலவா? உறவினர், உறவு இல்லாதவர், நண்பர்கள், தெரிந்தவர், தெரியாதவர் என்று எத்தனை ஆயிரம் பேர் வந்து குழுமிவிட்டார்கள்! இவர்களையெல்லாம் அவள் எப்படிச் சமாளித்தாள்! ஜயலட்சுமிக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்படி அவள் தன்னுள் தானே வியந்து கொண்டிருக்கையில், "மாமி!" என்ற குரல் கேட்டது.

"அப்பு வாடா!" என்று ஆரம்பித்த ஜயலட்சுமி, "டேய்!" என்று நிறுத்தினாள்.

"என்ன சொல்லுங்கள்!"

"நீ இப்போ என்ன நினைக்கிறே?"

"எதைப்பத்தி?"

"எல்லாத்தையும் பத்தித்தான்."

அடுத்த கணம் அப்பு எக்ஸ்பிரஸ் வேகத்தில் ஆரம்பித்தான்.

''கோடைக்கானலில் ஓர் ஆட்டுக்கு இரண்டு தலைக் குட்டி பிறந்திருக்கு. ஏன் இப்படி ஒரு விநோதம்? மெட்ராஸ் கூவம் நதியில் கப்பலை விட முடியுமா? அயூப்கானுக்கு ஏன் வரவர மூளை மழுங்கிக்கொண்டு வர்றது....?''

''டேய்... டேய்....''

''என்ன, மாமி?''

''என்னடா உளர்றே?''

''அப்பு இப்போ என்ன நெனைக்கிறான்னு கேட்டீர்கள். நெனைக்கிறதைச் சொல்லித்தானே ஆகவேண்டும்?''

''நான் அதைக் கேட்கலேடா. இந்தச் சஷ்டியப்த பூர்த்தியைப் பத்தி என்ன நெனைக்கிறே?''

''மனுஷனுக்கு வயசு அறுபது ஆயிட்டா, இன்னமே வாழப் போற நாள் கொஞ்சந்தான்னு ஒரு பயம் பிறந்துடறது. இன்னமே நம்மாலே ஒண்ணுமே செய்ய முடியாது என்கிற விரக்தியும் உண்டாயிடறது. வீட்டிலே சாய்வு நாற்காலியிலே பிள்ளைகள் உட்கார்த்தி வச்சு வேடிக்கை பார்ப்பார்கள், நம்ம பேச்சைக் காதுக்கொடுத்துக் கேட்கமாட்டார்கள் என்ற வேதனை தோன்றது. இந்தப் பயம், விரக்தி, வேதனை எல்லாம் அநுபவிக்கப் போறாரே, அதுக்கு முன்னாடி ஒரு விழாக்கொண்டாடிவிடலாம்னு கொண்டாடறதுதான் சஷ்டியப்த பூர்த்தி!''

''போடா, நீ ஏதாவது குதர்க்கமாப் பேசிண்டு! நம்ப வீட்டு விசேஷத்திலே நல்ல ஆள் கூட்டம் இல்லே?''

''சரியா ஆயிரத்துநூத்து எழுபத்திரண்டு பேர் வந்திருந்தார்கள்.''

''அப்பாடீ!''

''அப்புவுக்கு மூளை இல்லை, மாமி.'' திடீரென்று அப்பு சோர்வுடன் காணப்பட்டான்.



''ஏன்டா அலுத்துக்கிறே?''

''எக்ஸிபிஷன் கூட்டம் மாதிரி வந்ததே. வாசல்லே ஊதுவத்தி, ஜவ்வாது, வெத்திலை, சிகரெட்டு, பூ எல்லாம் வச்சுண்டு உட்கார்ந்திருந்தா, நல்ல வியாபாரம் ஆகியிருக்கும்.''

''இந்தச் சின்ன ஊருக்குப் பெரிய கூட்டம் இல்லே?'' என்ற ஜயா தொடர்ந்து, ''நான் எப்படித்தான் சமாளித்தேனோ? எனக்கு இப்போ நெனைச்சுப் பார்த்தா ஆச்சரியமா இருக்கு. எங்கிருந்து திடீரென்று ஒரு சக்தி பொறந்ததுன்னு எனக்கே தெரியவில்லை'' என்றாள்.

அடுத்த கணம் அப்பு வாய் விட்டுச் சிரித்தான்.

''என்ன அப்பு வயித்தைப் பிடிச்சுண்டு சிரிக்கிறே? ஜயா ஏதாவது ஜோக் சொன்னாளோ?'' என்று கேட்டுக்கொண்டே மகாலிங்கம் வந்தார்.

''இல்லே ஸார், மாமி ஜோக்கு சொல்லலே; ஜோக்காகவே மாறிட்டாள்! எப்படி இவ்வளவு பெரிய கொண்டாட்டத்தைத் தான் ஒருத்தி தனியா நின்னு சமாளித்து முடித்தாள்னு கேட்டாள்'' என்றான் அப்பு.

''அது அவள் சுபாவம், விடு. முன்னெல்லாம் அவள் சொல்லுவாள், 'நான்தான் உங்களைக் கல்யாணம் செய்து கொண்டேன்' என்று. நான் இந்த மாதிரி விஷயத்திலே எதிர்த்துப் பேசறதில்லை.''

''ஏன், நான் சொன்னதிலே என்ன தப்பு?'' என்றாள் ஜயா.

''ஜயா!'' என்று ஆரம்பித்த மகாலிங்கம் சோபாவில் உட்கார்ந்துகொண்டார். பிறகு, ''ஜயா, இந்தச் சஷ்டியப்த பூர்த்தியை யாரும் தனியா நின்னு செய்யலே. ஊர்த் தேரு இழுக்கிற மாதிரி எல்லாரும் சேர்ந்து நடத்தினா'' என்றார்.

''இன்னும் சொல்லப்போனா, வடத்தின் பக்கமே வரலே. ஏன்னு கேட்டா, அம்பாள் உட்கார்ற இடத்திலே உட்கார்ந்திருந்தா. என்ன, கரெக்ட்தானே.''

''ரொம்ப கரெக்ட்! ஜயா, எப்படியோ உன் ஆசை நிறைவேறிவிட்டது. பதினொரு வயசிலே நீ மணையிலே உட்கார்ந்தது உனக்கு நினைவில்லை. அதை மறுபடியும் நெனைச்சுப் பார்த்துச் சந்தோஷப்பட ஓர் ஏற்பாட்டைப் பண்ணிண்டுட்டே.''

''பத்து வயசு பன்னிரண்டு வயசிலே மணையிலே உட்கார்ந்தா வயசாறப்போ நெனைவிலே நிக்காமப் போயிடறதுன்னுதான் இந்தக் காலத்திலே இருபது இருபத்தஞ்சு வயசிலே பொண்ணை மணையிலே உட்கார வைக்கிறார்களா, மாமா?'' என்று கேட்டான் அப்பு.

மகாலிங்கம் பதில் சொல்லுவதற்குள் ஜயலட்சுமி, ''நளினியின் கல்யாணத்தைக் கூடிய சீக்கிரத்தில் முடிச்சுடணும். நம்ப சஷ்டியப்த பூர்த்திக்கு என் பெரிய மாமாவின் மைத்துனரும் அவருடைய பெண்டாட்டியும் தங்கவரத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்களுடைய பிள்ளை என்ஜினியராம். அமெரிக்காவிலேயே வேலையா இருந்து, இப்பத்தான் ரெண்டு மாசம் முன்னாலே திரும்பி வந்தானாம். ஜாதகங்கூடப் பார்க்க வேண்டாம்னு அவனுடைய அம்மாவே சொல்லிவிட்டாள்.''

''அப்படியா?''

''பிள்ளையை நான் சின்ன வயசிலே பார்த்திருக்கேன். நல்ல செவப்பு. மூக்கும் முழியுமா இருப்பான். பூப்போட்டுப் பார்த்துட்டாப் போதும்னு சொல்றா'' என்றாள் ஜயா.

''மாமா, மாமிக்கு இந்த இடம் ரொம்பப் பிடிச்சிருக்கு. ஒரே பிள்ளையா, மாமி?'' என்று கேட்டான் அப்பு.



''ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சு. அவள் புகுந்த இடம் குபேரப் பட்டணம்.''

''மாமா, மாமியும் பூப்போட்டுப் பார்த்துட்டாப் போதும்னு நெனைக்கிறா. இல்லியா, மாமி?''

''ஆமாம்டா, ஜாதகம் பார்க்கிற வயசா இது? அந்தக் காலத்திலே பொண்ணுக்குப் பத்து வயசு பிள்ளைக்கு பதினாறு வயசுன்னு இருக்கும். ஸ்கூல்லே படிச்சுண்டிருப்பான். நல்ல உத்தியோகம் இருக்குமா, பெரிய சம்பளம் வருமா, அற்பாயுசு இல்லியே என்கிறதுக்காக ஜாதகங்கள் பார்ப்பா. இப்போ பிள்ளை உத்தியோகத்தில் இருக்கிறபோதுதானே கல்யாணமே நடக்கிறது? இருக்கிற உத்தியோகத்தை வச்சுண்டே எதிர்காலத்தில் பதவி எவ்வளவு உயரத்துக்குப் போகும்னு சொல்லிடலாமே!''

அப்பு எழுந்தான்.

''என்னடா?'' என்றார் மகாலிங்கம்.

''மாமி அப்புவைச் சிந்திக்க வைக்கிறாள்.''

''என்ன சிந்தனை?''

''உத்தியோகத்தில் இருக்கிறவன் என்றால் ஜாதகம் தேவையில்லை. அப்புவைப் போல வேலை இல்லாதவனுக்கு?''

''கல்யாணமே தேவையில்லை!'' என்று சிரித்த ஜயா, தான் சொல்லிவிட்டது ஒருவேளை அப்புவின் மனசைத் தைத்திருக்குமோ என்று பயந்து, ''நம்ம பாக்டரியிலே அப்புவுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுங்களேன்; நிரந்தரமா ஓர் இடத்திலே இருக்கட்டும்'' என்றாள்.

''அவனை ஓர் இடத்திலே கட்டிப்போட்டு நிறுத்த முடியாது'' என்றார் மகாலிங்கம்.

''அப்பு கட்டிப் போட முடியாத நாய் மாதிரி'' என்று சிரித்த அப்பு, ''ஸார், மாமியின் ஆசையை நிறைவேற்றி விடுங்கள், சீக்கிரம். பூப் போட்டுச் சரியா வருமோ என்னமோ, ரெண்டு பூவும் ஒரே பூவாக இருக்கட்டும். பிறகு காரிய தாமதம் ஆனா ஏதாவது விபரீதம் வந்தாலும் வரும்'' என்றான்.

ஜயா எழுந்து நின்றாள்.

''என்னடா விபரீதம் என் பெண்ணுக்கு வர முடியும்?''

''கோபிச்சுக்காதேயுங்க. இந்த அப்பு துக்கிரி மாதிரி பேசறதாப் படலாம். உங்க பெண் ஸ்ரீதருடன் எப்படிப் பழகறாளோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனா அந்தப் பயல் ஒரே ஒரு உத்தேசத்துடன்தான் பழகுகிறான்.''

''நாக்கை அறுத்துவிடுவேன்!''

''யார் நாக்கை? ஸ்ரீதர் நாக்குன்னா, அப்புவே ஹெல்ப் பண்ணுவான்.''

''உன் நாக்கை'' என்று ஜயா சீறினாள்.

''ஏன் அப்பு மேலே இப்படி விழறே? அவன் என்ன சொல்லிவிட்டான் இப்போ? அப்படியே அவன் சொல்றது நிஜமாகவே இருந்தாலும், அதிலே என்ன தப்பு? ஸ்ரீதரும் நல்ல குடும்பத்திலே பிறந்தவன். பெரிய படிப்புப் படிச்சவன்.''

''அவனும் அவன் முகரக்கட்டையும்!''

''அப்புவின் முகரக்கட்டை பொறந்ததிலிருந்து இப்படியேதான் இருக்கு.''

''உன் முகரக்கட்டையைச் சொல்லலே. அந்தத் தடியனுடைய முகரக்கட்டையைச் சொல்றேன். எப்போது பார்த்தாலும் வாயிலே சிகரெட்டு. ராத்திரி வேளையிலே குடிக்கிறானாம்.''



''அது வந்த புதுசிலே'' என்றான் அப்பு.

''ஏன்? இப்போ நிறுத்தியிருக்கானோ?''

''இப்போ பகல்லேயும் குடிக்கிறான்.''

''கேட்டீர்களா, அப்பு சொல்றதை?''

''அப்புதான் குழந்தையையும் கிள்ளித் தொட்டிலை யும் ஆட்டறவனாச்சே. நம்ப பெண் கல்யாணத்தை நாம கன்னாபின்னான்னு முடிச்சுடுவோமா? ஸ்ரீதர் குடிக்கிறதைப் பத்தியோ சிகரெட் ஊதறதைப்பத்தியோ நான் கவலைப்பட வில்லை.''

''பின்னே எதைப்பத்திக் கவலைப்படுகிறீர்கள்? வெறும் குடியுடன் நிறுத்தியிருக்கானேன்னா?''

''நீங்க நெனைக்கிற மத்தப் பழக்கமும் அவனுக்கு உண்டு, மாமி'' என்றான் அப்பு.

''நீ முதல்லே வெளியே போடா!''

''அவன்மேலே ஏன் ஜயா நீ எரிஞ்சு விழறே? அப்பு, உட்கார்டா.''

''பின்னே என்ன? இந்தச் சஷ்டியப்த பூர்த்தி அமோகமா முடிஞ்சிருக்குன்னு நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறப்போ, வயத்தைக் கலக்கற மாதிரி இவன் ஏதாவது சொல்லிண்டே இருந்தால்?''

''அப்பு எதைச் சொன்னாலும் அது வயத்தைக் கலக்கும். இல்லாமப் போனா மூளையைக் குழப்பும்'' என்றான் அப்பு. பிறகு தொடர்ந்து, ''ஆனா, காதல்னு பிறந்துட்டா அவ்வளவுதான்; ஆட்கொல்லி வியாதி மாதிரி. கொல்லாம விடாது. கல்யாணத்திலேதான் முடியும்'' என்றான்.

''நளினியின் நாக்கை அறுத்துடுவேன்!'' என்றான் ஜயா.

''நாதனாலேயே முடியவில்லை, மாமி. கண்ணன் இல்லாமே என்னாலே வாழமுடியாது என்கிற பெண்ணை அவராலே என்ன செய்ய முடியறது? இவளாவது சொல்லிக்கிண்டே இருக்கா. சொல்லாமலே குமார் பெண்ணை நிச்சயம் பண்ணிண்டாச்சு. இன்னும் பத்து நாளிலே கல்யாணம்! இதெல்லாம் அப்பு எதுக்குச் சொல்றான்னா, நளினிக்கும் பிடிச்சுப் போய், ஸ்ரீதருக்கும் பிடிச்சுப் போயிட்டா அப்புறம் யாராலும் அவர்களுக்கு மத்தியிலே குறுக்குச் சுவர் எழுப்ப முடியாது என்கிறேன்.''

''நானே குறுக்குச் சுவரா நிப்பேன்'' என்றாள் ஜயா. பிறகு மகாலிங்கத்தைப் பார்த்து, ''உங்க ஸ்ரீதர் எந்த நாட்டிலே என்ன பெரிய படிப்புப் படிச்சானோ, எனக்கு அக்கறை இல்லை. மூணு மாசம் சம்பளத்தைக் கையிலே கொடுத்துப் 'போயிட்டு வாடா, மகாராஜா' ன்னு இன்னிக்கே வழி அனுப்புங்கோ'' என்றாள்.

''ஏன் இப்படிப் படபடன்னு அடிச்சுக்கறே? நளினி பாக்டரி சம்பந்தமா அடிக்கடி பேசிண்டிருப்பா. நடு நடுவிலே சொந்த விஷயங்களும் அடிபடும். நம்ப பெண் மேலே நமக்கே நம்பிக்கை இல்லேன்னா?''

''பின்னே அப்பு சொல்றானே!''

''அப்பு என்ன சொல்றான்? ஸ்ரீதர் மனசிலே என்ன இருக்கும்னு ஊகிக்கிறான். அப்புவின் ஊகந்தான் சரின்னு எப்படித் தீர்மானிக்கிறது? அப்படியே அவன் ஊகந்தான் சரின்னு தோணினாலும், ஸ்ரீதர் பேரிலே என்ன தப்பு? வேலையிலே அசகாய சூரன்.''

''மாப்பிள்ளை ஸ்தானத்திலே அனுமந்து!'' என்றாள் ஜயா.

''இருக்கட்டும். ஆனா, நம்ம பெண் அனுமந்துதான் மன்மதன்னு நெனைச்சுண்டா நீயும் நானும் என்ன பண்றது?



நளினி சின்னப் பெண் இல்லே. நீ சொல்ற நங்கவரம் பையனை ஒரு நிமிஷத்திலே தூக்கி எறிஞ்சுடுவாள்.''

''பாக்டரியை இழுத்து மூடிப் பூட்டிடணும், அவ்வளவுதான்.''

''எல்லாம் சுலபமாச் சொல்லிட்டே'' என்று எழுந்தார் மகாலிங்கம். பிறகு அப்புவைப் பார்த்து, ''விடுடா, உப்புச் சப்பில்லாத சமாசாரம். கண்ணனை உடனே வரச்சொல்லு'' என்றார்.

''கண்ணன் போர்ட்டிகோவிலேதான் அரைமணி நேரமா நிக்கறான். கூடத்துக்குள்ளே காலை வச்சான். இங்கே மாமி காரசாரமாப் பேசிண்டிருக்கிறதைப் பார்த்துட்டு வெளியே போயிட்டான்.''

''அப்படியா?'' என்றவர், ''கண்ணா, கண்ணா!'' என்று கூப்பிட்டார்.

அடுத்த நிமிஷம் கண்ணன் உள்ளே வந்தான்.

''ஏன் அங்கேயே நின்னுண்டிருக்கே?''

''இல்லை ஸார், இங்கே ஏதோ வியவகாரம் நடந்துண்டிருந்தது. எனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்.''

''அப்பு இருக்கிற இடத்திலே வியவகாரம் இல்லாம இருக்குமா?'' என்று சிரித்த மகாலிங்கம், ''ஜயா, ரொம்ப நாளாக் காசி, கயை, ஹரித்துவார், ரிஷிகேசம் எல்லாம் போகணும்னு சொல்லிண்டிருந்தியே. இப்போ ஒரு நல்ல சான்ஸ் வந்திருக்கு'' என்றர்.

''ஏன் மாமா, மாமி காசி போறதுக்கு இதுதானா சமயம்? ஸ்ரீதருடைய விஷயத்தை ஒரு மாதிரியாத் தீர்த்துக் கட்டினப்புறந்தான் மாமி, கங்கையில் குளிப்பாள்!'' என்றான் அப்பு.

''ஏன், யாரு வடக்கே போறா?'' என்று கேட்டாள் ஜயா.

''நம்ப கண்ணன்தான்.''

''கூட ராதிகாவும் பாலம்மாவும் போறா'' என்றான் அப்பு.

''எதுக்கு?''

''என்ன ஜயா, உனக்குத்தான் தெரியுமே, குமார் கல்யாணம் ஹரித்துவாரத்திலே நடக்கப்போறதுன்னு.''

ஜயா தன் பெண்ணை மறந்தாள். ''ஏன்டா, அப்படியா, கண்ணா?''

''ஆமாம். வர்ற வியாழக்கிழமை புறப்படறோம்.''

''ராதிகா எதற்கு வர்றாள்?''

''அண்ணா கல்யாணத்துக்குத் தங்கை போக மாட்டாளா? இது என்ன கேள்வி, ஜயா?'' என்றார் மகாலிங்கம்.

''அதுக்கு எப்படி நாதன் சம்மதிச்சார்?''

''கல்யாணத்துக்கே அவருடைய சம்மதத்தை யாரும் கேட்கவில்லை. போற போக்கைப் பார்த்தால், ராதிகாவின் கல்யாணமும் இப்படித்தான் நடக்கும் போல இருக்கு!'' என்ற அப்பு மெதுவாக எழுந்தான். பிறகு, ''அப்போ, அப்பு புறப்படறான் மாமா, மாமி. கண்ணா, உன்னை அப்புறம் பார்க்கிறேன். உனக்கும் விமோசனம் வந்துடும், பாரு. ஸ்ரீதர் இத்தனை நாளா ரெட் ஹவுஸில் பழிகிடந்தான், உன் மாமா காலைப் பிடிச்சுண்டு. ராதிகாவுக்காவது ஓர் அண்ணன் இருக்கான். நளினிக்கு அது இல்லை. எல்லாச் சொத்தும் அவளுக்குத்தான். இப்படி ஸ்ரீதர் கிளைக்குக் கிளை தாவறது உன் மாமாவுக்குத் தெரிஞ்சா, ஒருவேளை ஏமாத்தம் உண்டாகலாம். ஆனா ஸ்ரீதர் கெட்டிக்காரன். யோசனையுடன்தான் தாவறான்'' என்றான்.

அடுத்த கணம் அவன் ஹாலிலிருந்து திண்ணைக்குத் தாவிக்கொண்டிருந்தான்.



''இந்தச் சொத்தெல்லாம் தர்ம ஸ்தாபனத்துக்குப் போய்விடும். என் பெண்ணானால் என்ன, யாரானால் என்ன, நடுத்தெருவில் நிப்பாள்!'' என்று ஜயா கறுவினது அவனுடைய காதில் விழவில்லை.

ஜயாவின் கோபத்தையும் உடம்பின் படபடப்பையும் பார்த்த கண்ணன், ''மாமி, நான் சொல்றேனேன்னு நீங்க என் மேலே கோபிச்சுக்காதீங்க. உங்களுக்கு நெறைய வயசுதான் ஆகியிருக்கே தவிர, உலக அநுபவம் போராது'' என்றான்.

''அதை ஆயிரம் தடவை சொல்லுடா!''

''காடுன்னு சொல்றதுக்கு முன்னாடி புலி வந்தாச்சு என்கிறா.''

ஜயலட்சுமி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''உங்க பெண் நளினி என்கூடப் பேசறாள்; என்னிடம் சிரிக்கிறாள்; கோபிக்கிறாள். பாக்டரி போர்மனுடன் அதே மாதிரி நடந்துகொள்ளுகிறாள். அது போலவே ஸ்ரீதருடனும் பழகுகிறாள். இதிலே என்ன தப்பு?''

''இல்லேடா கண்ணா, உனக்குத் தெரியாது. நானும் இவரும் மணையிலே உட்கார்ந்திருக்கிறப்போ, நளினியும் ஸ்ரீதரும் தனியா உட்கார்ந்துகொண்டு குசுகுசுன்னு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தா. அடிக்கடி ரெண்டு பேரும் சிரிச்சுண்டிருந்தா. பொம்மனாட்டிகளெல்லாம் ஒரு பக்கமாச் சேர்ந்து உட்கார்ந்திருக்கிறப்போ, இவளுக்கு மட்டும் என்ன தனியாப் பேச்சு, அவன்கிட்டே?''

கண்ணன், ''இதைப்பத்தி நாம இன்னும் விவரமா விவாதிக்க வேண்டாம், மாமி. உங்களுக்கு அநுபவம் போராது. ஸார், நான் பத்து நாள் லீவு கேட்கலாம்னுதான் வந்தேன்'' என்றான்.

''ஆல் ரைட்.''

''இன்னொரு விஷயம், ஸார்.''

''என்ன?''

''எங்ககூட ஜூலியும் வர்றாள்.''

''என்ன ஜூலியா? அவளுக்கு என்ன வேலை?''

''அவளுடைய சொந்தக்காரர் ஒருவர் - அம்மாவின் ஒன்னுவிட்ட சித்தப்பா - டில்லிக்கு வந்திருக்கிறாராம். பார்க்கணும்னு ஆசைப்படறா.''

''வெரி குட்.''

''ஆனா, ஸ்ரீதர் குறுக்கே நிக்கறான். அவனுடைய சிபாரிசு இல்லாம என்னாலே ஸாங்க்ஷன் பண்ண முடியாது.''

''ஆமாம், அவளைத்தான் ஸ்ரீதர் கிட்டேயிருந்து மாத்திடணும்னு முன்னே சொன்னியே.''

''சொன்னேன். ஆனா இதை இன்னும் அமலாக்கவில்லை.''

''சரி, முதல்லே அமலாக்கிவிடு. அப்புறம் லீவு கொடுக்கலாம்.''

''அப்போ நான் வரட்டுமா, ஸார்? வரேன், மாமி.''

கண்ணன் சொல்லிவிட்டு வெளியேறினான்.

# 29

# இரட்டை வேஷம்

நளினி ஏன் தன்னைத் திடீரென்று அழைத்திருக்கிறாள் என்று கண்ணனுக்கு விளங்கவில்லை. அரைமணி நேரம் முன்புதான் இருவரும் பாக்டரியின் சிப்பந்திகள் விஷயமாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்து, அந்த முடிவை மகாலிங்கத்திடம் தெரியப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள். ஒருவேளை நளினி தன் முடிவை மாற்றிவிட்டாளா? இல்லை, இன்னும் அதைப்பற்றிப் பேசவேண்டும் என்று விரும்புகிறாளா?

கண்ணன் மெதுவாக எழுந்து பாக்டரி வழியாக நடந்து, நளினியின் அறையை அடைந்தான்.

''வாருங்கள், கண்ணன்'' என்றாள் நளினி.

நளினிக்கு எதிரே உட்கார்ந்திருந்த ஸ்ரீதரைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துவிட்டுக் கண்ணன் அவனருகில் உட்கார்ந்தான். ஸ்ரீதருடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைக் கண்டபோதே விஷயம் என்ன என்று அவனால் ஊகிக்க முடிந்தது.

''வரச் சொன்னீர்களாமே?'' என்றான் கண்ணன்.

''ஆமாம். எதுக்கு என்று கேட்டால்....''

''மிஸ் நளினி, முதலில் இவ்வளவு அதிகாரத்தை யார் இவன்கிட்டே கொடுத்தார்கள் என்று கேளுங்கள்'' என்றான் ஸ்ரீதர்.

கண்ணன் அடுத்த கணம் எழுந்து நின்றான்; "மிஸ் நளினி, இங்கே தரக் குறைவான, மரியாதையற்ற பேச்சில் ஒருவர் ஈடுபட்டிருக்கும்போது எனக்கு அதே இடத்தில் வேலை இல்லை என்று நினைக்கிறேன். நீங்கள் என்னை வரவழைத்திருக்கிறீர்கள், ஏதோ பேச. இந்த இடத்தில் வேறே யாரும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன்."

"பார்த்தீர்களா, மிஸ் நளினி? ஐந்நூறு அறுநூறு வாங்கற ஒருவன் ரெண்டாயிரம் ரூபாய் வாங்கறவனைப் பத்திப் பேசுகிறான்; அதுவும் உங்க முன்னாலேயே!"

கண்ணன் சிரித்தான்.

"வாங்குகிற சம்பளத்துக்கும் பண்பு மரியாதைக்கும் சம்பந்தம் இல்லை என்பதை இப்போது நான் நிதர்சனமாகப் பார்க்கிறேன்."

"யாருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும், மிஸ் நளினி! நீங்களும் நானும் என்னதான் பெரிய பெரிய படிப்பெல்லாம் படிச்சு, இந்த மாதிரியான ஒரு பாக்டரியை உருவாக்கினாலும், உங்க அப்பா வச்சிருக்கிற சில புண்ணியவான்களினாலே நிர்வாகமே குலைஞ்சுடும்."

"மிஸ்டர் ஸ்ரீதர், கொஞ்சம் அமைதியாக இருங்கள். என்னிடம் நீங்கள் முறையிட்டுக் கொண்டாகிவிட்டது. மேற்கொண்டு கவனிக்கவேண்டிய விஷயத்தை என்னிடமே விடுங்கள். மிஸ்டர் கண்ணன், இந்த ஆர்டரை அனுப்பு வதற்கு என்ன காரணம்?" நளினி ஒரு காகிதத்தை நீட்டினாள்.

அதை ஒரு விநாடியில் பார்வையாலேயே அளந்துவிட்டு உட்கார்ந்த கண்ணன், "காரணத்தை நம்ப என்ஜினியர் ஸ்ரீதரே அறிவார்!" என்று சொல்லிச் சிரித்தான்.



"சரி, என்ன காரணமாக இருந்தாலும் பரவாயில்லை; ஆர்டரை ரத்து செய்யுங்கள்" என்றாள் நளினி.

"மிஸ் நளினி, உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் கேட்கிறேன். என்னை மன்னித்துவிடுங்கள்."

"திமிரைப் பார்த்தீர்களா, திமிரை?" என்று கறுவினான் ஸ்ரீதர்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" நளினியின் குரலில் கடுமை தொனித்தது.

"ஆர்டருக்கு மாற்றமோ, ரத்தோ தேவையில்லை."

"தேவை இருக்கிறதோ இல்லையோ, ரத்து செய்யுங்கள். இது என் ஆர்டர்!"

"மிஸ் நளினி, நீங்கள் இந்தப் பாக்டரியின் சொந்தக்காரரின் பெண். ஆனாலும் இன்னும் நீங்கள் சொந்தக்காரி ஆகிவிடவில்லை. இது யாருடைய உத்தரவின் பேரில் இடப்பட்டிருக்கிறதோ, அவரே மாற்றச் சொல்லும் வரைக்கும் மாற்றப் போகிறதில்லை."

"அப்போ!"

"என்னுடைய நிலையில் நான் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறேன், அவ்வளவுதான்."

"உங்கள் தகப்பனார் இவனுக்குச் சம்பளம் கொடுக்கிறார். இவன் உங்களை எதிர்த்துப் பேசுகிறான்!"

கண்ணன் மெதுவாக ஸ்ரீதர் பக்கம் திரும்பினான். "மிஸ்டர் என்ஜினியர் இவன் அவன்னு மரியாதை யில்லாமல் நீங்க பேசறத்துக்குப் பதிலான நானும் பேச ரொம்ப நேரமாகிவிடாது. ஆனா என்னிடம் ஒரு குறை; என் மரியாதை பேச்சுடன் நிக்காது!"

"ஓ! பயமுறுத்துகிறாயா? பார்த்தீர்களா, மிஸ் நளினி?"

நளினி என்ன செய்வது என்று திண்டாடினாள். கண்ணன் தன்னை அவமானப்படுத்திவிட்டான் என்ற எண்ணம் தலைக்கேற உடல் கோபத்தில் நடுங்கியது.

''நீங்கள் என் தகப்பனாரின் வேலைக்காரர்!''

''உண்மைதான். கொடுத்திருக்கிற வேலையைச் சரியாகச் செய்திருக்கிறேன்.''

''ஜூலியை இவரிடமிருந்து மாற்றக்கூடாது. மாற்றத்தை அவளும் கேட்கவில்லை. இவரும் விரும்ப வில்லை.''

''நீங்கள் இப்போது பிரச்னையில் இறங்குகிறீர்கள். எப்போது பிரச்னைக்கு முடிவை உங்கள் தகப்பனார் கண்டுவிட்டாரோ, அப்போதே பிரச்னையை ஆராய்ந் திருக்கிறார் என்று நீங்கள் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.''

''கண்ணன், நீங்கள் அத்து மீறிப் பேசுகிறீர்கள். ஏன் ஜூலியை மாற்றியிருக்கிறீர்கள்? அதுவும் உங்களுக்குப் பர்ஸனல் செக்ரடரியாக?''

''சுயநலம்!'' என்றான் ஸ்ரீதர்.

கண்ணன் பதில் பேசாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு எழுந்தான். பிறகு, ''வருகிறேன்'' என்று கிளம்பினான்.

''உங்களை நான் இன்னும் போகலாம் என்று சொல்லவில்லை.''

''மன்னிக்கணும். உங்களுடைய அதிகாரத்தின் கீழ் என்னை இன்னும் வைக்கவில்லை. உங்களுக்கு இன்னும் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், கம்பெனி மானேஜிங் டைரக்டருக்கு எழுதி அனுப்புங்கள். இவர், இந்த எஞ்ஜினியர் சொன்னார், சுயநலம் காரணமாக நான்



ஜூலியை என் செக்ரடரியா மாற்றிக்கொண்டிருக்கிறேன் என்று. அது உண்மை. என்னைப் போல நாதியற்ற ஒரு பெண்ணின் எதிர்காலம் குலையாம இருக்கணும் என்கிற சுயநலந்தான்!''

''டேய்!''

''பார்த்தீர்களா, ரெண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற பெரிய ஆபீஸரின் மரியாதையை? இது பட்டப்பகலில். ராத்திரியில் இந்த மரியாதை வார்த்தைகூட அவருடைய நாக்கில் தெளிவாக வராது.'' - கண்ணன் இரண்டடி வைத்தான்.

நளினி சைகையால் கண்ணனை நிறுத்தினாள். பிறகு, ''மிஸ்டர் ஸ்ரீதர், நீங்கள் கொஞ்சம் வெளியே போய் இருங்கள்'' என்றாள்.

''சரி; நீங்கள் என் சின்ன எஜமானி!'' என்று சிரித்துக்கொண்டே ஸ்ரீதர் எழுந்து கண்ணனைப் பார்த்தான். ''மிஸ் நளினி, இவன் பொறாமைக்காரன். நான் யாரிடமாவது கொஞ்சம் நட்பு முறையில் பழகினால் போதும், பற்றிக்கொண்டு வந்துவிடும் பொறாமை!'' என்றான் அவன். அடுத்த கணம் அறையை விட்டும் வெளியேறினான்.

''உட்காரு, கண்ணா'' என்றாள் நளினி.

''நளினி, நான் சொல்றேனேன்னு கோவிச்சுக்காதே. ஸ்ரீதர் வேலையிலே கெட்டிக்காரன். ஆனால்.. ஆனால்..'' அவனால் மேலே பேச முடியவில்லை.

''எனக்கு எல்லாம் தெரியும், கண்ணா. இன்னிக்கு நீ என் அம்மாகிட்டே என்ன சொன்னே என்கிறதும் எனக்குத் தெரியும். ரோஜாப் பூவுக்கும் காகிதப் பூவுக்கும் வித்தியாசம் தெரியாதுன்னு என்னைப்பத்தி நினைக்காதே. திடுதிப்புன்னு ஒருத்தனை வெளியே போன்னு சொல்லிவிட முடியாது.

பாக்டரி நன்னா ஓட ஆரம்பிக்கிற வரையில் நாம் சகித்துக்கொண்டுதான் போகணும்.''

''எனக்குப் புரியறது.''

''நான் கொஞ்சம் சரளமாப் பழகினா நீ என்னைத் தப்பா எடுத்துக்கிறதில்லை. ஆனா ஸ்ரீதர் மனசிலே கணக்குப் போடறான். போடற கணக்கை நாமாக நிறுத்தி, ரப்பராலே அழிப்பானேன்னு நான் பேசாம இருக்கேன்.''

''அதை அவன் தப்பா எடுத்துக்கொண்டு, கணக்கைப் பெரிசாக்குகிறான்! இது...''

''ஒரு விபரீதத்திலும் கொண்டுபோய் விடாது, கண்ணா. நான் ஜெர்மனியிலேயே ரெண்டு வருஷம் என்னைக் காப்பாத்திக்கொண்டு இருந்தவள். தெரியாதா உனக்கு? நான் இத்தனை நேரம் இந்த வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, அவன் முன்னாலே பேசினதெல்லாம் வேஷம்! இதைச் சொல்லத்தான் அவனை வெளியே அனுப்பினேன். கொஞ்ச நாள் போகட்டும்; அவனை வச்சுண்டே சொல்றேன்!''

''அப்போ நான் புறப்படட்டுமா, நளினி?''

''உம். ராதிகா எப்படி இருக்கா? நான் இன்னும் சரியாகக்கூட அவளிடம் பேசவில்லை.''

''அவளும் இதையேதான் சொன்னா.''

''அப்பு சொன்னான். ரெண்டு மூணு மாசமா ஸ்ரீதர் நாதன் வீட்டை முற்றுகை போட்டுக்கொண்டிருந்தானாமே?''

''நீ வந்தப்புறம் தினம் போறதில்லை என்ற விஷயத்தையும் சொல்லியிருப்பானே!''

''உம்; சொன்னான். ஸ்ரீதர் ஏன் இப்படி இருக்கிறான்?''



''இதற்கெல்லாம் காரணத்தை எப்படிச் சொல்ல முடியும்?''

''அம்மாவுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.''

''உன் அப்பா முதல்லே ஆகாசம் வரையிலும் தூக்கிண்டு போனார். இந்த ஜாலி கேஸை அப்பு அவர் காதிலே போட்டதிலிருந்து அவருக்குச் சின்னு ஆகிவிட்டது.''

''ஆனா அதை வெளியே காண்பித்துக் கொள்ளாம இருக்கிறார்.''

''உன் அப்பா பெரிய ராஜதந்திரி மாதிரி.''

''இல்லாமப் போனா இத்தனை லட்சம் சம்பாதிச்சிருக்க முடியுமா? சரி, நீ போய் வா. இந்த வியாழக்கிழமைதானே போகப்போறே டேராடூனுக்கு? அதுக்கு முன்னாடி, நீ, நான், ராதி, அப்பு எல்லாருமா எங்காவது பிக்னிக் போகலாம். ஸ்ரீதர் காதிலே போடாதே!''

''அப்போ, இப்போதே அப்பு காதிலேயும் போடக் கூடாது'' என்றான் கண்ணன்.

அடுத்த நிமிஷம் கண்ணன் அறையை விட்டு வெளியேற, ஸ்ரீதர் அவனை விறைத்துப் பார்த்துக் கொண்டே, உள்ளே நுழைந்தான்.

30

# ஜயாவின் பீதி

ஸ்ரீதர் தன் பெண்ணுடன் அளவுக்கு மீறிப் பழகுகிறான் என்ற எண்ணம் ஜயாவின் மனத்தில் வேரூன்றிப் பதிந்துவிட்டது. இருவரும் தொழிற்சாலை சம்பந்தமாகத்தான் பேச நேரிடுகிறது என்பதை அவளால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர்களை இப்படியே பழகவிட்டால், ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நளினி, 'அம்மா, எனக்கும் ஸ்ரீதருக்கும் கல்யாணம் பண்ணி வை'' என்று கேட்க வந்துவிடுவாள்.

அவர்களுடைய நட்பை முளையிலே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்று நினைத்த அவளுக்கு நங்கவரம் ஜாதகம் மிகச் சிறந்ததாகப் பட்டது. பிள்ளை அப்பாவைப் போல இருப்பான் என்று பெற்ற தாய் சொல்லியிருக்கிறாள். ஜயா தகப்பனாரைப் பார்த்திருக் கிறாள். நல்ல சிவப்பு நிறம். ஆஜானுபாகுவான தோற்றம். பிள்ளை அவரைக் கொண்டிருக்கிறான் என்றால் கட்டழகனாகத்தான் இருக்கவேண்டும். நளினிக்கு ஏற்ற கணவன். பெரிய பணக்காரக் குடும்பத்தில் ஒரே பிள்ளை. அமெரிக்காவில் படித்தவன்.

சிந்திக்கச் சிந்திக்க, கல்யாணத்தை அடுத்த முகூர்த்தத்திலேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஜயா துடித்தாள். சிந்தனை வயப்பட்டுப்போன அவள், எதிரே மகாலிங்கம் வந்து உட்கார்ந்ததையும் கவனிக்க



வில்லை. அவருடைய குரல் கேட்டபோதுதான் திடீரென்று விழித்துக்கொண்டாள்.

''என்ன ஜயா, யோசனை பலமாக இருக்கோ?'' என்றார் அவர்.

''ஆமாம். நளினியைப்பத்தி மனசு கவலைப்பட ஆரம்பித்துவிட்டது.''

''ஏன்? உடம்புக்கு ஏதாவது திடீரென்று வந்து விட்டதா?''

''உடம்புக்கு வந்தால் டாக்டர் இருக்கார். லட்சம் ரூபாய் செலவு செய்தாவது தேற்றிவிடலாம். அவள் மனசு...''

''அப்பு ஏதோ உதிர்த்துவிட்டுப் போன வார்த்தைகள் உன் மனசிலே ஆணி அடிச்சமாதிரி பதிஞ்சு போயிருக்கா?''

''எனக்கே முதலில் சந்தேகமும் பயமும் உண்டு. அப்பு வேறே...''

''தூபம் போட்டிருக்கான்.''

''தூபம்னு நான் அவ்வளவு எளிசா ஒதுக்கிட மாட்டேன். நேத்துச் சாயங்காலம் எதுக்காக ரெண்டுபேரும் பொட்டானிக்கல் கார்டன்ஸ"க்குப் போனார்கள்? புல்தரையில் ஒருமணி நேரம் உட்கார்ந்து பேசினார்கள்?''

''என்ன?''

''ஆமாம். வேணும்னா உங்கள் காரியதரிசி ராவ்ஜியைக் கேளுங்கள்.''

''ராவ்ஜி எங்கே அங்கே போனார்?''

''எங்கே போனாரோ, எதுக்குப் போனாரோ? அவர்தான் சொன்னார். பொட்டானிக்கல் கார்டன்ஸிலே ஏதாவது பஜனை கிஜனை நடத்தப் போனாரோ என்னமோ?''

''அம்மா மனசை அலட்டிக்காதே! நம்ப நளினி வரம்பு மீறிப் போகிற பெண் இல்லை.''

''அப்படித்தான் நானும் உள்ளூற நெனைச்சுண்டிருந்தேன். ஆனால் இப்போ வந்து......''

''இப்போ என்ன நடந்துவிட்டது?''

''நாதன் பிள்ளை குமார் செய்திருக்கிற காரியத்தைப் பார்க்கிறபோது, எனக்கு யாரிடமும் நம்பிக்கை விழமாட்டேன் என்கிறது.''

''அவன் பிள்ளை...''

''பிள்ளைகளைவிடப் பெண்களுக்குத்தான் பிடிவாதம் அதிகம். நெனைச்சதைச் சாதித்துக்கொள்ள என்ன வேணுமானாலும் செய்வார்கள்!''

மகாலிங்கம் சிரித்தார்.

''நீ பெண்களைப் பத்தி நன்னா எடைபோட்டு வைச்சிருக்கே. உனக்குப் பிடிவாதம் உண்டே!''

''நளினி என் பெண்தானே? அப்பா கிழிச்ச கோட்டைத் தாண்டாத குமாரே இப்படி ஒரு வடநாட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன் என்று எழுதினான் என்றால் நளினி ரிஜிஸ்தர் ஆபீஸில் கல்யாணத்தையே முடித்துக்கொண்டு வந்து நிற்பாள்!''

''இப்பே சித்த முன்னாடி, பெண்களைப்பத்திப் பொதுவாகப் பேசினது சரியா இருக்கலாம், ஜயா. ஆனா நளினியைப்பத்தி இப்போ விசேஷமாச் சொல்றியே, அது சரின்னு எனக்குப் படலை. அப்பா எங்கே ஒரு கோடு கிழிச்சுடுவாரோன்னு பயந்து, அவர் அதைக் கிழிக்கிறதுக்கு முன்னாடியே குமார் கல்யாணத்தை நிச்சயம் பண்ணிண்டான். அது வேறே, இது வேறே கேஸ்.''

''எல்லாமே பாழாப் போற காதல் கேஸ்தான். நாம ரெண்டுபேரும் நாளைக்கே நங்கவரம் போய் அந்தப்



பிள்ளையை நிச்சயம் பண்ணிண்டு வந்துடுவோம். இன்னிக்கே டிரங்கிலே பேசிவிடுங்கள்.''

''நளினியையும் ஒரு வார்த்தை கேட்டுவிடுவோம்.''

''அவசியம் இருக்கிறதாக, எனக்குத் தோணலை.''

''நீ நினைக்கிறமாதிரி, இப்போ, உடனேயே கழுத்தை நீட்டுவான்னு எனக்குப் படவில்லை.''

''நான் அவள் கழுத்தைப் பிடித்து நீட்ட வைக்கிறேன். இல்லாவிட்டால் அந்தத் தடியன் அவளுடைய கழுத்தைக் கொத்திக்கொண்டு போய்விடுவான்.''

அடுத்த கணம் புதுக் குரல் ஒன்று கிளம்பியது திடீரென்று.

''யார் கழுத்தை யார் அம்மா கொத்திக்கொண்டு போய்விடுவான்? அப்பா, அம்மா என்னைப்பத்தித்தானே பேசறாள்?''

''நீயே கேளு, நளினி'' என்றார் மகாலிங்கம்.

பெண்ணைக் கண்டதும் ஜயாவுக்கு ஒரு கணம் தூக்கிவாரிப்போட்டது. அடுத்த கணமே சமாளித்துக் கொண்டாள். பிறகு நிதானமாக, ''நளினி, ஒரு முக்கியமான விஷயத்தைத்தான் உன் அப்பாகிட்டே சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''ஓ, அப்படியா? ரொம்ப சரி! ஆனா ராஜா ராணி கதைகளிலே வரமாதிரி வெட்டறது, கொத்தறதுன்னு ஏதோ காதிலே விழுந்ததே!''

ஜயா, ''நளினி, வரவர என் உடம்பு ஒரு நிலையில் இல்லை. நாலு அடி நடந்தா மூச்சு வாங்கறது. ஏன்னா, எனக்கு பிளட்பிரஷர் எத்தனை இருக்குன்னு டாக்டர் சொன்னார்?'' என்றாள்.

மகாலிங்கம் பதில் சொல்லுவதற்குள் நளினி முந்திக்கொண்டாள்.

10 ... 93

''உன் பிளட்பிரஷர் நீ பிறந்த அன்னிக்கே ஆரம்பித்து விட்டதே, அம்மா. அதை நான் தனியா விசாரிக்கக்கறேன். விஷயத்துக்கு வா!''

''உனக்குப் பெரிய இடத்திலே ஒரு வரன் பார்த்திருக்கிறேன். லட்சக்கணக்கிலே சொத்து இருக்கு. பிள்ளை அமெரிக்கா போய் வந்திருக்கான்.''

''அப்பாகிட்டேயுந்தான் லட்சக் கணக்கிலே இருக்கு. நானும் ஜெர்மனி போயிருக்கேன்.''

''ரெண்டு குடும்பங்களும் கல்யாணத்திலே ஒண்ணாயிட்டா, என்ன ஆகும்? யோசித்துப் பார்.''

''இந்த வீட்டுச் சொத்து அந்த வீட்டுக்குப் போகும்.''

நறுக்கென்று நளினி பதில் சொன்ன விதமே மகாலிங்கத்துக்குத் திருப்தியாக இருந்தது. அவர் தம்முள் மகிழ்ந்துகொண்டார்.

''அது எப்படியமா போகும்?''

''பிள்ளை வீட்டுச் சொத்து எப்படியம்மா பெண் வீட்டுக்கு வரும்? யோசனை பண்ணாம என்னென்னமோ பேசறியே? அது கிடக்கட்டும். ஏன் இப்படி என் கல்யாணத்திலே உனக்குத் திடீர்னு அக்கறை பிறந்திருக்கு?''

''எனக்குப் பயமாயிருக்கு, நளினி.''

நளினி தகப்பனாரைப் பார்த்தாள். அவரும் அவளை ஒரு தடவை பார்த்துவிட்டு, ஜயா பக்கம் திரும்பினார்.

''என்ன பயம்? உன் பிளட் பிரஷரைப்பத்தித் தானே?''

''அது மட்டுமில்லை, நளினி. உன்னைப் பத்தியுந்தான்!''

''ஏன்?''



''எனக்கு அவனைக் கட்டோடு பிடிக்கவில்லை.''

''பிடிக்கலைன்னா, அப்பாகிட்டே சொல்லி அவனை அனுப்பிவிட்டு வேறே மானேஜரை நியமிப்போம். என் அப்பா?''

ஜயா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''ஏண்டி, நான் கண்ணனைச் சொல்றேன்னா நினைச்சுண்டிருந்தே?''

''பின்னே யாரு? அவன்னு சொன்னியே!''

''கண்ணன் புடம் போட்ட தங்கம்டீ! லட்சுமணன் மாதிரி. அவனைச் சொன்னால் என் நாக்கு அழுகிவிடும். என்ஜினியர் ஸ்ரீதரைத்தான் சொல்றேன்.''

''ஓ, மிஸ்டர் ஸ்ரீதரா? அவர் என்ன தப்புச் செய்தார்? ஏம்ப்பா, கோபித்துக் கொள்ளும்படியா அவர் ஏதாவது செய்தாரா?''

ஜயா ஒரு கணம் அயர்ந்து போனாள். கண்ணனை அவன், இவன் என்று அலட்சியமாகப் பேசுகிறவள், நேற்று வந்த ஸ்ரீதருக்கு என்ன மரியாதை அளிக்கிறாள்! நினைக்கிறபோதே சீற்றம் பற்றிக்கொண்டு வந்தது.

''என்னடீ ஸ்ரீதர்னு சொன்னதும் உன் முகம் மாறுகிறது! பேச்சுக் குழைகிறது! அந்தக் கழுதையை எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.''

''அந்தக் கழுதையும் அமெரிக்கா, இங்கிலாந்து எல்லாம் சுத்திட்டு வந்திருக்கு.''

''மரியாதை தெரியாதவன். இப்போ நான் உட்கார்ந் திருக்கிற சோபாவிலேயே கால்மேல் கால்போட்டுக் கொண்டு...''

ஜயாவுக்கு மூச்சுத் திணறவே, நளினி, ''பான்ட் போட்டுக்கொண்டால் அப்படித்தான் உட்காரத் தோன்றும். சௌகரியமும் அதுதான்!'' என்றாள்.

நீண்ட பெருமூச்சை உதிர்த்த ஜயா, ''சிகரெட்டு சிகரெட்டா ஊதித் தள்ளினான். ஒரு குடம் தண்ணியைத் தலையிலே கொட்டணும்னு எனக்கு ஆத்திரம் வந்தது'' என்றாள்.

''சிகரெட்டு மட்டுந்தான் குடிக்கிறார்னு நீ நினைக்கிறே. எம்ப்பா, அவருக்கு லிக்கர் பர்மிட்கூடக் கிடைச்சுடுத்தாமே?''

''எனக்குத் தெரியாது, நளினி!'' என்றார் மகாலிங்கம்.

''எனக்குத் தெரியும்டீ. அப்பு சொன்னான். மாசா மாசம் ஒரு பாட்டில் விஸ்கியும் பன்னிரண்டு பாட்டில் பீரும் வாங்கறானாம்.''

''இதையெல்லாம்பத்தி நீ ஏன் அம்மா கவலைப் படறே? ஒருத்தன் நல்லவன் கெட்டவன்னு, இந்த மாதிரிப் பழக்கத்தினாலே சொல்லிவிட முடியாது!''

''நல்லவன் மனசிலே கெட்ட பழக்கம் உதிக்காதுடீ. கெட்ட பழக்கங்களினாலே கெட்ட எண்ணங்கள்தான் பிறக்கும்!''

''சரி; சரி. அம்மா, இப்போ என்ன வேணும் என்கிறே?''

''நீ அவனுடன் பழகறது எனக்குப் பிடிக்கவில்லை.''

''அப்போ, ஒண்ணு செய்; அப்பாகிட்டே சொல்லிப் பாக்டரியை மூடச் சொல்லு. அவரும் போய்விடுவார்; உனக்கும் நிம்மதியா இருக்கும்!''

''பாக்டரியை எப்படி மூடறது?'' என்றார் மகாலிங்கம்.

''அப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொடுத்து விடுங்கள். நான் புருஷன் வீட்டுக்குப் போய்விடுகிறேன்.''

''அதுக்காகவாடீ, இவ்வளவு பெரிய பாக்டரியை உன் அப்பா கட்டியிருக்கிறார்?''



''பின்னே உன் பிரச்னை தீர என்ன வழிதான் இருக்கு? பின்னாலே போனா உதைக்கிறே, முன்னாலே வந்தாக் கடிக்கிறே!'' என்றாள் நளினி.

''வேறே என்ஜினியராப் பார்ப்போம். ஏன்னா, என்ன சொல்லுகிறீர்கள்?''

''ரெண்டுங்கெட்டான் சமயத்திலே ஸ்ரீதரை அனுப்பினா நமக்குத்தான் நஷ்டம், அப்பா. கண்ணன் சொல்ற மாதிரி ஸ்ரீதர்கிட்டே இருக்கிற நல்லதுகளை நாம் இழக்கக்கூடாது. சாமர்த்தியமும் அறிவுக் கூர்மையும் அபாரந்தான்.''

''ஓ, உன்னை அவன் இவ்வளவு தூரத்துக்கு மயக்கியிருக்கிறானா?'' என்று சீறினாள் ஜயா.

நளினி எழுந்தாள். ''அம்மா என் மேலே நம்பிக்கை வைச்சு, முன்பின் தெரியாத ஜெர்மனிக்கு அனுப்பினே. ஒரு நாளா ரெண்டு நாளா, ரெண்டு வருஷம். நூத்துக்கணக்கான பேர்களிடம் பேசினேன், பழகினேன். என்ன வந்துவிட்டது இப்போ? இந்த ஸ்ரீதரிடம் பேசறதிலே பேராபத்து இருக்குன்னு நீயே கற்பனை பண்ணிண்டு என்ன என்னமோ உளர்றே. நான் கிளம்பறேன்.''

''கொஞ்சம் இருடீ, நளினி. நீ பாக்டரி சம்பந்தமா மட்டும் பேசினா நான் ஏன்டீ குறுக்கே வரப்போறேன்? பொட்டானிகல் கார்டன்லிலே ஒரு மணிநேரம் புல் தரையிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாயாமே!''

''பூ, இவ்வளவுதானா? எத்தனையோ நாள் அது மாதிரி பேசியிருக்கிறோம். ஏரிக்குப் போயிருக்கிறோம். ஏன், ஒரு நாள் தனியாத் தொட்டபெட்டாவுக்குக்கூடப் போனோம். நாளைக்குச் சினிமாவுக்குங்கூடப் போவேன் அவருடன். இதிலே என்ன தப்பு?''

ஜயாவின் இரத்தம் கொதித்தது. "ஏன்டீ, வயசு வந்த பெண் பேசற பேச்சா இது? நாலு பேர் பார்த்தா என்னடீ நினைப்பா?"

"ஸ்ரீதரைக் கண்டு பொறாமைப்படுவா; நம்முடன் நளினி வரமாட்டாளான்னு ஏங்குவா!"

மகாலிங்கம் நளினியையே உற்றுப் பார்த்தார். தம் மனத்திலும், தம்மையும் மீறி ஒரு பயம் பிறந்து விட்டதை அவர் உணர்ந்தார். எதிர்நீச்சல் போட்டு நளினியை அடக்கிவிட முடியாது என்று அவருக்குத் தெரியும்.

"என் வயத்திலே பாலை வார்ப்பேன்னு நான் கனாக் கண்டுகொண்டிருந்தேன். கடைசியிலே விஷத்தை வார்த்துட்டே" என்று புலம்பினாள் ஜயா.

"கடைசின்னு சொல்லாதே, அம்மா. இதுதான் ஆரம்பம்."

"அப்பு ஏதோ யதார்த்தமாய்ச் சொன்னதை வைத்துக்கொண்டு, நீ உனக்குள்ளேயே ஒரு பூகம்பத்தை உண்டாக்கிக்கறே" என்றார் மகாலிங்கம். பிறகு, "நளினி, நீ போய் உன் காரியத்தைப் பாரும்மா" என்றார்.

நளினி மெதுவாக நகர்ந்து வெளியேறினாள்.

அவளுடைய உருவம் மறைந்ததும், "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஜயா ஆரம்பித்தாள். வார்த்தைகளோடு பயமும் குழைந்து வந்தது.

"எதைப்பத்தி?"

"என்ன, எதைப்பத்தின்னு கேட்கிறீர்கள்? இத்தனை நேரம்பேசிக்கொண்டிருந்தது, எதைப்பத்தி?"

"நீ அநாவசியமாய் மனசை அலட்டிக்கிறே, ஜயா."

"அப்படின்னா?"

"எல்லாம் பிரமை!"



"எனக்குத் தோணலை."

"அப்போ கொஞ்சம் சும்மா இரு."

"ஏதாவது விபரீதமா முத்திப் போயிட்டா?"

"அப்புறம் யாராலேயும் மாத்த முடியாது."

"அதுக்காகத்தான் இப்போதே மாத்தணும்னு நான் சொல்றேன்."

"எப்படி மாத்தலாம்னு உத்தேசம்?"

"அதைத்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே."

மகாலிங்கம் எழுந்தார். "நீ நினைக்கிற மாதிரி நளினி ஜெர்மனியிலேயிருந்து வந்ததும் வராததுமாய் மணையிலே உட்காரத் தயாராக மாட்டாள். தான் படித்த படிப்பைப் பிரயோகம் செய்யத்தான் அவள் துடிக்கிறாள்."

"ஆனா, புதுப் படிப்பு ஒன்னு படிக்கிற மாதிரி என் கண்ணுக்குத் தெரியறதே."

"உன் கண்ணிலே திரை விழுந்திருக்கு."

"அப்போ, ஸ்ரீதருடன் பழகறது ஆபத்து இல்லை என்கிறீர்களா?"

"ஸ்ரீதர் ஒருத்தியோடு பழகினா அவனுக்கு ஆபத்து இருக்கலாம். அவனுடன் ஒருத்தி பழகினா அவளுக்கு ஆபத்து இருக்காது."

"என்ன உளறுகிறீர்கள்? மாத்திச் சொன்னா அர்த்தம் வேறே ஆயிடுமா?"

"ஆமாம். நளினிதான் அவனைக் கயிற்றைக் கட்டி இழுத்துக்கொண்டு போகிறாள். அதுக்குக் காரணம் நீ நினைக்கிறபடி இல்லை. நம் நாட்டு நாகரிகத்திலே ஓர் எல்லையை நாம் நிர்ணயித்திருக்கிறோம். உன் கண்ணைப் பொறுத்தவரை, நளினி அந்த எல்லையை மீறிவிட்டாள். ஆனால் மேல்நாட்டு நாகரிகத்திலே, எல்லை இன்னும் ரொம்ப தூரத்தில் இருக்கிறது. அதன் பக்கமே நளினி

போகவில்லை; பயப்படாதே! தான் ஒரு முதலாளியின் பெண், பிற்காலத்தில் தானே முதலாளி என்ற உண்மைகள் எப்போதும் ஸ்ரீதர் மனசில் அழுந்தி இருக்க வேண்டும் என்ற நிர்ணயத்துடன்தான் நளினி அவனுடன் பேசுகிறாள். ஓர் உதாரணம் சொல்லட்டுமா?''

''ஊஹூம். என் மூளை ஏற்கனவே குழம்பிக் கிடக்கிறது!''

''அதுக்காகத்தான் இந்த உதாரணம். ஜூலி இருக்கிறாளே ஜூலி, அவள் கண்ணன் காலிலே போய் விழுந்தாள், டிரான்ஸ்பர் வேணும்னு. யாரிடமிருந்து தெரியுமா? சாட்சாத் ஸ்ரீதரிடமிருந்துதான். கண்ணன் தானாக முடிவு எடுத்துக்கொண்டால் ஏதாவது விபரீதம் வரும்னு என்னிடம் ஆலோசனை கேட்டான்.''

''ஐயோ, ராமா! நான் என் பெண்ணைப்பத்தி நெனைச்சு அலைபாய்ஞ்சுண்டிருக்கேன். நீங்கள் ஓர் அநாதையைப்பத்தி அளக்கிறேளே!''

''அவசரப்படாதே, கேளு. நான் ஜூலியைக் கண்ணனுடைய பர்ஸனல் செக்ரடரியாகவே மாற்றிக் கொள்ள அநுமதி கொடுத்துவிட்டு, நளினியின் காதிலும் போட்டு வைத்தேன். என்ன நடந்தது, தெரியுமா?''

''சொல்லுங்கள், சொல்லுங்கள்! ராமாயணம் மாதிரி நீண்டுகொண்டே போறது. பட்டாபிஷேகம் வரையிலும் சொல்லுங்கள்!''

''ஸ்ரீதர் எகிறிக் குதிச்சான். கண்ணன்கிட்டே நேரடியாகக் கத்தினான். அப்புறம் நளினிகிட்டே முறையிட்டான். அவள் என்ன செய்தாள் தெரியுமா?''

''தெரியாது. நான் தெரிஞ்சுக்கணும்னுதானே கால் ஒடிய நின்னுண்டே பேசுகிறீர்கள்?''

''ஸ்ரீதரை முன்னால் வைச்சுண்டு, கண்ணனைக் கண்டித்தாள் நளினி. ஸ்ரீதருக்குப் பால்பாயசம் சாப்பிட்ட



மாதிரி இருந்தது. அப்புறம் ஸ்ரீதரை வெளியே போகச் சொல்லிவிட்டு, கண்ணனைச் சமாதானப்படுத்தினாள்.''

''பூ. இவ்வளவுதானா?''

''இரு. இரு. இன்னும் பட்டாபிஷேகம் வரவில்லை. கண்ணன் இனிமேல் மானேஜர்னு சொல்லிண்டு தலைதூக்கிப் பேச மாட்டான்னு ஸ்ரீதர் துள்ளிக் குதிச்சான். கண்ணனை வெளியே அனுப்பிவிட்டு, நளினி ஸ்ரீதரைத் தன் அறைக்குள் வரச் சொன்னாள். அவன் உள்ளே நுழைந்ததும், 'ஜூலி இனிமேல் கண்ணனுடைய செக்ரடரி' என்றாள் நம்ப பெண். ஸ்ரீதர் ஏதோ பேச ஆரம்பித்தான். ஆனால் அதுக்கு இடமே கொடுக்கவில்லை நளினி. 'கம்பெனி நிர்வாகத்தில் நீங்கள் அநாவசியமாகத் தலையிடுவதாக நிறையப் புகார்கள் வந்திருக்கு. நீங்கள் என் அப்பா உங்களுக்கு என்ன வேலை கொடுத்திருக்கிறாரோ அத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள். இப்போ நீங்கள் போகலாம்!' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசியிருக்கிறாள். ஜயா, இந்த உதாரணத்திலேயிருந்து உனக்கு என்ன புரிகிறது?''

''ஒன்னும் புரியவில்லை'' என்றாள் ஜயா. பிறகு, ''என்ன இருந்தாலும் நளினி முதலில் கண்ணனைக் கண்டித்திருக்கக்கூடாது'' என்றாள்.

''கண்டித்தது எல்லாம் ஸ்ரீதர் முன்னாடி. கண்ணனுக்கு மட்டுந்தான் அவள் யஜமானின்னு ஸ்ரீதர் நினைத்துக் கொள்ளக் கூடாது இல்லியா? அதுக்காகத்தான், அவனையும் கூப்பிட்டு, அவனுடைய இடத்தையும் குறிப்பிட்டுக் காட்டினாள் நளினி. இப்போ புரிஞ்சுதா?''

''ஊஹூம். என் மண்டையிலே எதுவும் ஏறமாட்டேன் என்கிறது.''

''அப்போ, உதாரணத்திலே கோளாறு இல்லை.''

அடுத்த கணம் மகாலிங்கம் வெளியேறினார். ஜயா சோபாவில் அழுந்தி உட்கார்ந்துகொண்டாள்.

## 31

# தனி மரம்

இளங்கதிர் தென்றல்போல முகத்தில் பட்டாலும், நாதனுடைய உடல் தகித்தது. இன்னும் எட்டு நாட்களில் நடக்கப்போகிற குமாரின் திருமணத்தைப் பார்க்க ராதிகா கும்மாளம் போட்டுக்கொண்டு தயார் செய்து கொள்ளு கிறாள். ஏன் அவள் அப்படி ஆரவாரம் செய்கிறாள்? அண்ணனுடைய கல்யாணம் என்ற ஒரு காரணந்தானா?

நினைக்க நினைக்க அவர் மனம் மகிழ்ச்சிக்கும் துக்கத்துக்கும் அப்பாலுள்ள நிலையில் நின்று தவித்தது. கண்ணனுடன் ஒரு நீண்ட பிரயாணத்தை முதல்முதலாக ஆரம்பிக்கிறோம் என்ற உற்சாகமும், அதனால் பிறக்கிற இன்பமும் அல்லவா ராதிகாவை இளங்கன்றைப்போல ஓடி ஆட வைக்கின்றன.

நாதன் ஒரு சிமெண்டுப் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார். என்றென்றும் அவர் கையைவிட்டு அகலாத கைத்தடியை முழங்காலில் சாய்த்து வைத்தார். பார்வை முன்னால் பரந்து விரிந்த புல்தரையையும், ரோஜாப் பதியன்களையும், பூச்செடிகளையும் தாண்டி நீண்டது. தூரத்தே தொட்டபெட்டாவின் சிகரங்கூட ஆள் உயரத்துக்குத்தான் கண்ணுக்குப் பட்டது. அவருடைய பார்வை மேலே மேலே போய், எதை எதற்காகப் பார்க்கிறோம் என்றும் புலப்படாமல் தொடர்ந்தது.

ராதிகாவும் கண்ணனும் வெறும் ரெயில் பிரயாணத் துடன் நிற்கப்போவதில்லை. அவரால் இதுவரையில்



தடைப்பட்டுக்கொண்டிருக்கும் பிரயாணம் கண்டிப்பாக ஆரம்பிக்கப் போகிறது. அதற்குக் குமாரே வழிகாட்டியாகி விட்டான்.

நினைத்துக்கொண்டே இருக்கையில் திடீரென்று ஒரு புதுப் பயம், இதுவரையில் நினைத்தும் பார்த்திராத பயம், அவருள் வெகு வேகமாகப் புகுந்து நிலைபெயரச் செய்தது.

ஊரித்துவாரத்தில் நடக்கப்போகிற கல்யாணத்தன்றே, தங்கையின் கல்யாணத்தையும் குமார் நடத்திவிட்டால்?

அவரால் மேலே நினைத்தும் பார்க்க முடியவில்லை. உலகத்தில் இனிமேல் யாரையும் நம்ப முடியாது என்ற நினைப்பில் ஊறிவிட்ட நாதனால், ராதிகா என்ன செய்வாள், என்ன செய்யமாட்டாள் என்றே அநுமானிக்க முடியவில்லை. ஒரு வேளை கண்ணன் தயங்கிப் பின் வாங்கினாலும் ராதிகா முன்னேறி அவனுடைய மனத்தை மாற்றத் துடிக்கிறவள்.

திடீரென்று பிறந்த பயமே ஒரு சிக்கலாக உருவெடுத்துவிட்டது. அதை எப்படிச் சமாளிப்பது? அல்லது அதுவே பிரமையில் எழும் கற்பனைதானா? யோசிக்கவும் இயலாத நிலையில் அவர் தத்தளிக்கையில் - ''குட் மார்னிங், மாமா!'' என்ற குரல் கேட்டது.

நாதன் திடுக்கிட்டுப் பார்த்தார். இதுவரையில் உட்குரலைக் கேட்டு நடுங்கிய உடல், வெளிக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டது.

''என்ன மாமா, அப்படி ஆணி அடிச்சமாதிரி பார்க்கிறீர்கள்? அப்பு குட்மார்னிங் சொன்னால் நீங்களும், 'வாடா கழுதே'ன்னு வரவேற்பீர்களே!''

''வாப்பா, அப்பு!''

''என்ன மாமா, இன்னிக்கு வரவேற்பு உணர்ச்சி இல்லாம வர்றது?''

''அப்பு, என் உணர்ச்சி மாத்துப் போயிடுத்துடா!''

''பொய். உணர்ச்சி மரத்துப் போயிருந்தா, குரல்லே இவ்வளவு இமோஷன் இருக்க முடியாது. உணர்ச்சி எல்லைமீறி வழியறது. என்ன சமாசாரம்?''

''உனக்குத் தெரியாததா?''

''இப்போ அப்பு எதற்கு வந்திருக்கிறான் சொல்லுங்கள்!''

''தெரியாது.''

''அப்புவும் கல்யாணத்துக்கு ராதிகா கண்ணனுடன் போகிறான்.''

''அப்படியா?''

''அதுமட்டுமல்ல. பிள்ளையைப் பெத்த தகப்பனாரும் புறப்படப்போகிறார்.''

திடீரென்று நாதனுடைய உட்குரலின் எதிரொலிகள் எல்லாம் மறைந்து, அவர் சாதாரண நாதனாக மாறினார்.

''என்னடா உளர்றே?''

''நோ உளறல். யூ ஆர் கமிங், மாமா!''

''ஷட் அப்! என்னைக் கேளாமல் எவளோ ஒருத்திக்கு என் பிள்ளை தாலியைக் கட்டுகிறான். அந்த வைபவத்துக்கு நான் போகணுமா?''

''பிள்ளைக்காகப் போகலேன்னா, பெண்ணுக்காகப் போகவேணும்.''

''ராதிகாவுக்காகவா?''

''இல்லை; பூர்ணாதேவிக்காக, உங்கள் மருமகளுக்காக. உங்க வம்சத்தின் எதிர்காலம் அவள் கையில் இருக்கிறது.''

''உனக்குப் புத்தியில்லை.''

''அப்புவுக்கு அது இருக்குன்னு யார் சொல்லியும் அப்பு காதில் விழவில்லை. ஆனா நீங்க வயசானவர். ஐ.ஸி.எஸ். பாஸ் பண்ணி, பெரிய பெரிய உத்தியோகத்தில்



இருந்தவர். பிள்ளையைச் சமமா நெனைச்சு, பழிவாங்கப் பார்க்கிறீர்கள். உங்கள் பிள்ளை தன் கல்யாணத்துக்கு உங்களை அழைக்கணும்னு எதிர்பார்க்கிறீர்கள்! இது, உங்களுக்குச் சரியான மனப்பக்குவம் உண்டாகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.''

''நீ பேசாமல் போ, முதலில்.''

''கறாரும் கண்டிப்புந்தான் நாதன் ரத்தத்தில் ஊறியிருக்குன்னு ஊட்டி பூராப் பேசறது!''

''பேசட்டும்.''

''அந்த ரத்தத்தில் தேனும் கலந்து ஓடறது என்கிறதை நிரூபிக்க இதைவிட நல்ல சந்தர்ப்பம் இனிமேல் உங்கள் ஜன்மத்தில் கிடைக்கப் போறதில்லை. இதை நழுவ விடாதீர்கள்.''

''எனக்குத் தெரியும்!''

''ஐ.ஸி.எஸ். காரர்கள் பெருந்தன்மைக்கும் பெயர் போனவர்கள் என்று எத்தனையோ சர்க்கார் அதிகாரிகள் சொல்லக் கேட்டிருக்கிறான் அப்பு. நிதர்சனமாகக் காட்ட இப்போ உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கு.''

''குமார் என் பிள்ளை இல்லை.''

''உங்க வெறியில் அவனை உங்களுடைய சொந்தத்திலிருந்து அறுத்து எறியலாம். ஆனால் உலகத்தின் கண்ணுக்குக் குமார் நாதனுடைய பிள்ளைதான். சட்டையைக் கழற்றி எறியற மாதிரி உலகம் எறிந்துவிடாது. நீங்கள் கல்யாணத்துக்குச் சென்றால், அவனுடைய வாழ்க்கையில் ஒரு களங்க ரேகை இருக்காது.''

''அது அவனாக ஏற்படுத்திக்கொண்டது.''

''அதற்கு யார் காரணம் என்கிறதை, கண்ணன் முதல்முதலாக விஷயத்தை எடுத்துச் சொன்னபோது, நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய

அலட்சியத்தினால் உண்டான விளைவு, இந்தக் கல்யாணம் என்று நீங்களே சொன்ன பிறகு, நீங்களே இன்னும் அலட்சியமாக இருந்தால், உலகம் என்ன நினைக்கும் தெரியுமா?''

''என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளட்டும்.''

''மனுஷனுடைய உடம்பில் சதையும் ரத்தமுந்தான் இருக்கு; கனியக்கூடிய இருதயமும், விம்மக்கூடிய நெஞ்சமும் இல்லை என்று!''

''என்னால் முடியாதுடா, அப்பு.''

''குமார் குற்றமே செய்திருந்தாலும் நீங்கள் மன்னித்துவிட்டால், அவனுடைய மனைவி பூரித்துப் போவாள். இப்போது கற்பகம் மாமி உசிரோடு இருந்தால் இந்தக் கல்யாணத்துக்குப் போக மாட்டாள்னு நீங்கள் நினைக்கிறீர்களா?''

''செத்துப் போனவளைப்பத்தி ஞாபகப்படுத்தாதே.''

''உசிரைக் கையில் வைத்துக்கொண்டு தினம் தினம் சாகிறவர்கள் பிழைக்க, செத்தவர்களைத்தான் கொண்டு வரவேண்டும். கற்பகம் மாமி இருந்தால், லெட்டர் வந்த அன்னிக்கே பட்டுப் புடைவைகளும் நகைகளுமாய் வாங்கி நிறைத்து எடுத்துப் போயிருப்பாள். 'கூடிய சீக்கிரத்தில் என் மடியில் விளையாட ஒரு பிள்ளையைப் பெத்துக் கொடுமா அம்மா' என்று பூர்ணாதேவியைக் கொஞ்சியிருப்பாள். அவள் என்ன ஊரோ, என்ன குலமோ? குமாருடைய மனைவி! அவள் அவனுக்குக் கொடுக்கப் போகும் பிள்ளை, கற்பகத்தின் பேரன்! இந்த உறவை ஊரும் குலமும் மாற்ற முடியாது.''

நாதன் அசைவற்று உட்கார்ந்திருந்தார். கண்களில் நீர் கட்டி நின்றது. நீரின் திவலையில் கதிரவனின் கதிர்கள் பற்பல வர்ணஜால உருவங்களை எழுப்பின. கற்பகம் இரண்டு கைகளிலும் பட்டுப் புடைவைகளைச் சுமந்து



ஓடுகிறாள்; அவர் முன்பின் பார்த்திராத ஒரு பெண் தலைகுனிந்து நடந்து வந்து கற்பகத்தை நமஸ்காரம் செய்கிறாள்; தன் கழுத்து நகை ஒன்றை எடுத்துக் கற்பகம் அவளுடைய கழுத்தில் பூட்டுகிறாள்.

''என்ன மாமா, அசையாமல் இருக்கிறீர்கள்?''

நாதன் பதில் சொல்லவில்லை. புதிதாகப் பிறந்த பயமும் பிரச்னையும் மீண்டும் நினைவுக்கு வந்தன. பிரச்னைக்குத் தீர்வு காண இப்போது ஒரு வழி பிறந்திருக்கிறது.

அவரும் சென்றால்?

ஊரும் உலகமும் கொண்டாடும். ஆனால் அவர் அதற்காகவா செல்லுவார்? தம் பிரச்னை தீரும் என்று அல்லவா புறப்படுவார்?

''மாமா!'' மீண்டும் அப்புவின் குரல் கிளம்பியது.

கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தார். திடீரென்று அப்பு மறைந்து அந்த இடத்தில் ராதிகாவும் கண்ணனும் மணக்கோலத்தில் இருந்தார்கள். அதே கணத்தில் யாராலும் அந்தக் கோலத்தை அழிக்க முடியாது என்ற எண்ணம் அவர் மனத்தில் அவரையும் மீறி எழுந்தது.

வாய் தானாகப் பேசியது.

''நீங்கள் போய் வாருங்கள்.''

நாதனுடைய வார்த்தைகளின் அழுத்தத்தை அப்பு புரிந்துகொண்டான். நினைத்த காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாமற் போனதற்காக, வருத்தங்கூட அவன் மனத்தில் உண்டாகவில்லை. நாதன் அலாதி என்று கருதி, அவருடைய அலாதித்தன்மையை அலசிப் பார்த்துக் கொண்டே, அவன் பங்களாவை நோக்கி நடந்தான்.

# 32

# நளினியின் கேள்வி

**க**ண்ணனுடைய துணை இருக்கிறது என்ற காரணத்தினால்தான், நாதன் தம் பெண்ணை டேராடூனுக்கு அனுப்பியிருக்கிறார் என்று எண்ணியபோதே ஸ்ரீதருக்கு அவர்மீதும், 'கண்ணனுடன் போகப் போகிறேன்' என்று பிடிவாதம் பிடித்த ராதிகாமீதும் எரிச்சல் பிறந்தது. கண்ணன் 'ரெட் ஹவுஸு'க்கு அடிக்கடி வருவதையோ, ராதிகா அவனுடன் நெருங்கிப் பழகுவதையோ நாதன் விரும்புவதில்லை, அடியோடு வெறுக்கிறார் என்றெல்லாம் அவனுக்குத் தெரியும். அப்படி இருந்தும் எவ்வாறு அவரால் ராதிகாவை இவ்வளவு தூரத்துக்குக் கண்ணனுடன் அனுப்ப முடிந்தது? அவர்களுடன் பாலம்மா, அப்பு, ஜூலி முதலானவர்களும் செல்லுகிறார்கள் என்ற தைரியமா?

என்னதான் நளினி ஊட்டி வந்து சேர்ந்த தினத்திலிருந்து நாதனை முன்போல அடிக்கடி சந்திக்கவில்லையானாலும் ராதிகாமீது தனக்குக் கண்ணனைக் காட்டிலும் அதிக உரிமை இருப்பதாக ஸ்ரீதர் எண்ணினான். இந்த எண்ணத்துக்கு என்ன காரணம்? நாதன் அவனுக்குக் கொடுத்திருந்த இடமும், அவருடைய மனைவிமூலம் உண்டான உறவுந்தானா? இல்லை! ஸ்ரீதர் பெரிய என்ஜினியர். இளம் வயதிலேயே ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கிறவன். கண்ணனுடைய ஏழைமையே அவனை உரிமை அற்றவனாக ஆக்கிவிட்டது.



என்னதான் கண்ணனைப்பற்றி அவதூறாக மனம் சிந்தித்தாலும், அவன் நெறி கெட்டு நடக்கமாட்டான், ராதிகாவுக்கு அவனால் ஆபத்து எதும் விளையாது என்ற எண்ணங்களும் உண்டாயின. கண்ணன் நல்லவன் என்ற நினைப்பு அவனையும் மீறி எழுந்தது.

கண்ணன் நல்லவனாக இருந்தாலும், ராதிகாவுடன் இனிமேலாவது நெருங்கிய தொடர்பு கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு என்ன வழி? ஸ்ரீதருடைய மனத்தில் அருவருப்பான எண்ணமொன்று மின்னலைப்போலப் பிறந்தது. ஜூலியையும் கண்ணனையும் பிணைத்து, நாதனின் மனத்தில் இன்னும் வெறுப்பை வளர்த்தால்? ஆனால் எண்ணம் பிறந்த மறுகணமே, நாதன் அவனை நம்பமாட்டார் என்ற ஏமாற்றமும் பிறந்தது.

ராதிகா சென்று பத்து நாட்களாகிவிட்டன. வருவதற்கு இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. இந்த ஒரு வாரத்துக்குள் அவனுக்கும் நளினிக்குமிடையே வளர்ந்து வரும் நட்பு எந்தத் திசையில் செல்லுகிறது என்பது பரிபூரணமாகத் தெரிந்துவிடும். தானாகத் தெரியாவிட்டால், அவன் நளினியிடமிருந்தே வரவழைத்து விடுவான்.

நளினியைப் பற்றிச் சிந்தனை எழுந்தபோது அவனுக்கு எல்லாமே புதிராக விளங்கியது. நளினி எல்லாருடனும் சரளமாகப் பேசுவதுபோல அவனிடமும் பேசுகிறாளா அல்லது அவனிடம் விசேஷ சிரத்தை காட்டுகிறாளா? அவனுடன் ஏரிகரைக்கும், பொட்டானிக்கல் கார்டன்ஸுக்கும், சினிமாக்களுக்கும் வரும் நளினி, அவனுடன் நெருங்கிப் பழகுவதற்கு அடிப்படையான காரணம் என்ன?

நினைக்க நினைக்கக் காதலாகத்தான் இருக்க வேண்டும் என்று ஸ்ரீதர் கருதினான். கண்ணன், அப்பு

இவர்களுடன் சகோதரியைப் போல நடந்துகொள்ளுகிறவள் தன்னுடன் வேறு விதமாகப் பழகுகிறாள் என்று அவன் நம்பினான். அவனுடைய எண்ணங்களும் நம்பிக்கையும் சரியாக இருந்துவிட்டால் அப்புறம் அவனுடைய வாழ்க்கையே மாறிவிடும்.

பல லட்சங்களுக்கு அதிபதியான மகாலிங்கத்தின் ஒரே பெண்ணுக்கு அவன் கணவன்! ஒருநாள் அவளுக்கு வரப்போகிற சகலவிதமான சொத்துக்களையும் ஆளப் போகிறவன் அவன்! மகாலிங்கத்தின் கொழிக்கும் சம்பத்துக்கும் முன் நாதனுடைய செல்வம் எம்மாத்திரம்? உறைபோடக் காணாது!

ஸ்ரீதர் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். நாதன் அவனைத் தம் மாப்பிள்ளையாக்கிக்கொள்ள விழைகிறார். நளினி காதலனாக்கிக்கொண்டிருக்கிறாள். அவனுடைய மனத் தராசில் ராதிகா, நளினி இருவரும் இருக்கிறார்கள். அவனுக்கு யாரைப் பிடித்திருக்கிறது? நளினி வரும்வரை 'ரெட் ஹவுஸ'க்குப் போய் வந்தவன், அதன்பிறகு நளினியை விட்டுப் பிரியவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஸ்ரீதர் மீண்டும் தனக்குத் தானே சிரித்துக்கொண்டான். ஒரு கல்யாணத்தினால் என்ன என்ன பிரயோசனங்கள் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கிடைக்கின்றன என்பதைத் தான் முதலில் அலசிப் பார்க்கவேண்டும். பெரியவர்கள் பார்த்து நிச்சயம் செய்யும் கல்யாணங்களிலும் இதைத்தானே முதலில் கவனிக்கிறார்கள்? பிள்ளையின் படிப்பு, வேலை, சம்பளம், சொத்து, எதிர்காலம் இவற்றையெல்லாம் கணக்கிட்ட பின்தானே, பெண்ணைப் பெற்றவன் முடிவு செய்கிறான்? அதே போலத்தான் பிள்ளை வீட்டுக்காரர்களும் நடத்து கொள்ளுகிறார்கள். ஸ்ரீதர் எந்தப் பெண்ணை



விரும்புகிறான் என்பது அநாவசியம். எந்தப் பெண்ணால் அவன் பயன் அடைவான் என்பதுதான் முக்கியம்.

**கை**யில் இருந்த சிகரெட்டைச் சுண்டிவிட்டெறிந்த அவன், அன்றே தனக்கும் நளினிக்கும் விவாகம் நிச்சயமாகிவிட்டதான பிரமையில், துள்ளிக்கொண்டு நடந்தான். எதிரே ஒரு கார் வெகுவேகமாக வருவதையும் அவன் கவனிக்கவில்லை. திடீரென்று அது அவன் முன் நின்றது. அவன் திடுக்கிட்டுப் பார்த்தான்.

''குட் மார்னிங்!''

''குட் மார்னிங், மிஸ் நளினி.''

''கம் ஆன். கெட் இன்!'' என்றாள் நளினி. பிறகு, ''இப்போ நாம ரெண்டு பேரும் குன்னூருக்குப் போகிறோம். சாப்பிட்டாச்சா?'' என்றாள்.

''என் சாப்பாட்டைப் பற்றிக்கூட நீ கவலைப் படுகிறாயே!'' என்று சிரித்த ஸ்ரீதர், ''குன்னூரிலே என்ன விசேஷம்? மத்தியான ஆட்டத்துக்கு ஏதாவது போகிறோமா?'' என்று கேட்டான்.

வண்டியைத் திருப்பிக்கொண்டே, ''டாக்டரைப் பார்க்கப்போகிறோம். அம்மாவுக்குத் திடீரென்று மயக்கம் வந்துவிட்டது'' என்றாள்.

''அப்படியா? ஏற்கனவே உன் அம்மாவுக்குப் 'பிளட் பிரஷர்' உண்டே?''

''ஆமாம். 'ஹார்ட் அட்டாக்'காக இருக்கலாம்னு அப்பா பயப்படுகிறார்.''

''யார் பார்த்தார்கள்?''

''எங்கள் டாக்டர் குன்னூருக்குப் போயிருக்கிறார். அவருடைய ஜூனியர்தாம் முதல் உதவி செய்ய வந்தார். 'ஹார்ட் அட்டாக்' இல்லை என்று அவர் அபிப்பிராயப் படுகிறார். ஆனால் அப்பா பயந்து சாகிறார்.''

''எனக்கும் பயமாக இருக்கிறது, நளினி! உங்க டாக்டரை, போன் செய்து வரவழைக்கலாம். நேரமாவது வீணாகாமல் இருக்கும்.''

''ஊஹூம். அது முடியாது. தம் தம்பி வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் போய்விடுவர். தம்பி வீட்டில் போன் கிடையாது.''

''உனக்கு அவருடைய தம்பி வீடு தெரியுமா?''

''ரெண்டு மூணு வருஷத்துக்கு முன்னாடி ஒரு தடவை போயிருக்கிறேன், ஒரு விசேஷத்துக்கு. 'அப்பர் குன்னூ'ரில் இருக்கிறது; கண்டுபிடித்துவிடலாம்.''

''என்னைக் கேட்டால் கோயம்புத்தூரில் பெரிய பெரிய டாக்டர்கள் இருக்கிறார்கள். டெலிபோனில் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி வரவழைத்து விடலாம்'' என்றான் ஸ்ரீதர்.

''உங்களைக் கேட்கவில்லை'' என்று சொல்லிச் சிரித்தாள் நளினி.

அவளுடைய சிரிப்பு, கேலியாகவும் அசம்பாவித மாகவும் தோன்றியது ஸ்ரீதருக்கு.

''என்னை மன்னித்துவிடு. ஏதோ நீயும் உன் அப்பாவும் மனம் வாடியிருக்கிறீர்களே; உன் அம்மாவுக்கு 'ஹார்ட் அட்டாக்'காக இருந்தால் என்ன செய்வது என்ற பயத்தில் நான் என் யோசனையை, நீ கேட்காமலே சொல்லிவிட்டேன்.''

கலகலவென்று சிரித்த நளினி, தன்முன் நீண்டோடும் பாதையைப் பார்த்துக்கொண்டே, ''மிஸ்டர் ஸ்ரீதர், சில சமயங்களில் நீங்கள் தொட்டாற்சுருங்கி போல ஆகிவிடு கிறீர்கள். சில சமயங்களில் ஆணியாகக் குத்தினாலும் மரக்கட்டைபோல உணர்ச்சியற்றவராக இருக்கிறீர்கள்.



உங்களுடைய இயற்கைச் சுபாவம் என்னவென்றே எனக்குத் தெரிவதில்லை. சொல்லப்போனால் நீங்கள் ஒரு புதிர்தான்.''

''உன் அம்மா ஆபத்தான நிலையில் இருப்பதையும் மறந்து நீ என்ன என்னவோ என்னைப்பற்றி அலசுகிறாய்!''

''என் அம்மாவுக்கு ஓர் ஆபத்தும் இல்லை. எங்க அப்பாவின் பயத்தை நிவர்த்தி செய்யத்தான் குன்னூருக்குப் புறப்பட்டேனே தவிர, வேறு ஏதும் இல்லை. உங்களுக்கு வருவது கஷ்டமானால் சொல்லுங்கள், அதோ சாரிங் கிராஸ் பக்கத்தில் இறக்கிவிடுகிறேன்.''

''வேண்டாம். நீ தனியாகப் போகக்கூடாது.''

''நீங்கள் ஒரு பெரிய துணையாக நான் கருத வில்லை.''

''அதற்கு உன்மீது நீயே வைத்துக்கொண்டிருக்கும் அளவு கடந்த நம்பிக்கையும் குருட்டுத் தைரியமுமே காரணங்கள்.''

''அதைவிட, உங்கள் மீதுள்ள அவநம்பிக்கையும் உங்களுடைய கோழைத்தனமும் காரணங்களாக இருக்கலாம் அல்லவா?''

ஸ்ரீதரின் மனம் குமுறியது.

''என்மீது கோபமும் ஆத்திரமும் இப்போது உங்கள் மனசில் வெடிக்கின்றன இல்லையா?''

ஸ்ரீதர் பதில் சொல்லவில்லை.

''நான் இப்படியெல்லாம் பேசுகிறேனே என்று உங்களுக்கு என்மீது கோபம் இருந்தால் சொல்லுங்கள். சாரிங் கிராஸ் தாண்டிவிட்டாலும் பாதகமில்லை. அடுத்த பஸ் ஸ்டாப்பில் இறக்கிவிடுகிறேன்.''

அடுத்த நிமிஷம் ஸ்ரீதர் சிரித்தான். ''நானும் ஆத்திரப்படவேண்டும் என்றுதான் பார்க்கிறேன். ஆனால் அது ஓடிவிடுகிறது.''

''ஆணி அடிச்ச மரக்கட்டையா?'' என்று சிரித்த நளினி, ''ஏன்?'' என்றாள்.

''நான் முன்கோபக்காரன்தான். எதிராளிகளுடைய மடத்தனமும் கவர்ச்சியற்ற பேச்சும் என்பொறுமையைச் சோதிக்கத்தான் சோதிக்கின்றன. ஆனால் அழகான பெண்ணின் சாதுர்யமான பேச்சும் புத்திக் கூர்மையும் என்னைக் கவர்ந்துவிடுகின்றன.''

''நான் என்ன அழகா?''

''அது உனக்குத் தெரியாது.''

''ராதிகா நான் பார்த்த சிறந்த அழகிகளில் ஒருத்தி'' என்றாள் நளினி.

''ஒரு பெண்ணின் அழகைப்பற்றி இன்னொரு பெண் அறிந்திருப்பதைவிட ஓர் ஆண்தான் அதிகம் அறிய முடியும்.''

''அதனால், ராதிகா என்னைவிட அழகு இல்லை என்று ஆகிவிடாது!''

''இப்போது ராதிகாவைப் பற்றி ஏன் பேச்சு, நளினி? அவள்தான் தொலை தூரத்தில் இருக்கிறாளே!''

''ஆனால் அவள் கொஞ்ச நாள் முன்னால் உங்களுக்கு வெகு அருகில் இருந்தாள் இல்லையா? இப்போ, நான் இங்கே இருக்கிறமாதிரி! ஆனால் அவள் உள்ளத்தில் இருந்தாள். நான்.....'' நளினி பேச்சை முடிக்காமல் இழுத்தாள்.

''நீ புத்திசாலிதான், நளினி! ஆனால் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. கண்ணனும் அப்புவும் கட்டிவிட்ட கதைகளை நம்பி ஏதேதோ நீயே கற்பனை செய்கிறாயே!''



''கண்ணன் இதுவரையில் உங்களைப்பற்றி ஏதுமே சொன்னதில்லை. நீங்கள் சிறந்த என்ஜினியர், வேலையில் கெட்டிக்காரர் என்றுதான் சொல்லியிருக்கிறான்.''

''அப்படிச் சொன்னால் நீ திருப்தி அடைவாய் என்ற எண்ணம்! அவன் சுயநலப் புலி!''

''இதை அவன் சொல்லவே இல்லை. உங்களைப் பற்றிப் பேசும்போது! சில சமயங்களில், கண்ணன் சில விஷயங்களை மறைத்துவிடுகிறான்!''

''நீ இப்போ மறைமுகமாக என்னையே தாக்குகிறாய்!''

''என்னையே' என்று ஏன் இழுக்கவேண்டும்? உங்களை நான் தாக்கக்கூடாதா? கூடாது என்றால் சொல்லிவிடுங்கள்; கெட்டி வருகிறது, இறக்கிவிடுகிறேன்!''

ஸ்ரீதர் சிரித்தான். சிரிப்பில் அசடு வழிந்தது. ''நடுவாந்தரத்தில் இறக்கிவிடத்தான் காரில் ஏறச் சொன்னாயா?''

''அது இருக்கட்டும். அப்புவும் கதை கட்டினான் என்றீர்கள். நல்லதைத் தவிர வேறு எதையுமே செய்யத் தெரியாத அசடு அவன். சுயநலத்துக்காகப் பொய்மட்டும் அவனுக்குச் சொல்லத் தெரிந்திருந்தால் அவன் இன்றைக்குப் பெரிய பணக்காரனாக விளங்குவான். ஆனால் அப்புகிட்டே ஒரு பலவீனம்!''

''கோள் சொல்றதுதானே? அது அவன்கூடப் பிறந்தது!''

''அவன் சொல்றது பிடிக்காதவர்களுக்குக் கோளாகப் படலாம். ஆனால் ஓர் இடத்தில் நடந்ததை இன்னோர் இடத்தில் சொன்னால், அதில் நோக்கமும் பயனும் இருக்கும்.''

''நாரதர் கலகம்.''

''அதுவேதான். அப்பு நாரதரின் அவதாரந்தான்! கதை கட்டிவிட அவனுக்குத் தெரியாது. ஆனால் நடந்ததைக் கதை சொல்லுவது போல அழகாக விவரிப்பான், வர்ணிப்பான்!''

''என்னைப்பற்றி அவன் நிறைய வர்ணித்திருப்பானே!''

''அவன் வர்ணித்துத்தான் எனக்குத் தெரிய வேண்டுமா? அது சரி, நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுகிறீர்களா?''

ஸ்ரீதர் நிமிர்ந்து உட்கார்ந்தான், தன்னைத் தானே தயார் செய்து கொள்ளுகிறவனைப் போல.

''கேள்வி கேட்கட்டுமா?'' என்று கேட்டாள் நளினி, மீண்டும்.

''உம். கேளு!''

''நான் உங்களுடன் சினிமா என்றும், 'பிக்னிக்' என்றும் வருகிறேன்; உங்களுடன் பழகுகிறேன்! நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''நளினி, இன்றைக்கு உன்னைப் பார்க்கு முன் இதே கேள்வியைத்தான் நானும் எனக்குள் கேட்டுக் கொண்டேன்! என்ன ஆச்சரியம்!''

''நான் கேட்ட கேள்விக்குமட்டும் பதில் இல்லை!''

''பதில் நான் சொன்னதிலேயே அடங்கியிருக்கிறது!''

''எனக்குப் புரியவில்லை.''

''நாம் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் ஒரே கேள்வியை நம்முள் கேட்டுக் கொண்டிருக்கிறோம்! ஒருவரைப்பற்றி ஒருவர் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்! இதிலிருந்து என்ன தெரிகிறது?''

''எனக்கு ஒன்றும் தெரியவில்லை!''

''நம் இருவருடைய மனசும் ஒரே மாதிரி இயங்குகிறது! ஏன், இரண்டும் ஒரு மனசாகிவிட்டது!''



நளினி 'கலீர்' என்று சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய், நளினி?''

''ஒரே கேள்வி பிறந்தால் ரெண்டு மனசும் ஒன்றாகிவிடாது, மிஸ்டர் ஸ்ரீதர். கேள்விக்குப் பதில்கள் ஒன்றாக இருந்தால்தான் மனசு ஒன்றாகும்!''

''நீ என்னைக் காதலிக்கவில்லை என்று நான் எனக்குப் பதில் சொல்லி, நீயும் அதுபோல நான் உன்னைக் காதலிக்கவில்லை என்று நம்பினால், பதில் ஒரே பதிலாகிவிடுகிறது. அப்போது இரண்டு மனசுகள் இணையுமா? ஒன்றாக முடியுமா?''

''ஏன் முடியாது? காதல் ஒன்றால்தான் இரண்டு மனசுகள் இணையும் என்று உங்களுக்கு எந்த ஞானி சொன்னான்? பாசம், பக்தி, நட்பு இவற்றினாலும் இரண்டு மனசுகள் இணையலாம்!''

''நீ என்னை வதைக்கிறாய், நளினி!''

''வதை சகிக்க முடியவில்லையானால் சொல்லி விடுங்கள்! அடுத்த பஸ் ஸ்டாப் அதோ தெரிகிறது!''

சொன்ன நளினி சிரித்தாள். ஸ்ரீதர் என்ன செய்வான்?

அவனும் நிலைமையைச் சமாளிக்கச் சிரித்து வைத்தான்.

# 33

## அப்பு சொன்ன வரலாறு

**நா**தனுடைய கண்ணுக்கு ரெட் ஹவுஸ் ஒளி இழந்து நின்றது. ஒவ்வோர் அறையும் ஹாலும் ஜீவனற்றுக் கிடந்தது. இந்தப் பதினைந்து நாட்களில் எத்தனை தடவை அவருடைய கால்கள் யந்திரமாக வீட்டினுள்ளேயே சுற்றிச் சுற்றி ஓய்ந்துவிட்டன! அவரறியாமலே அவருடைய கால்கள் வேளை கெட்ட வேளைகளில் எல்லாங்கூடக் கிளாஸ் ஹவுஸை நோக்கி நடக்கும். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்ற உணர்வும் இல்லாமல் அவர் இயங்கி இயங்கி மனம் சோம்பினார்.

எதைக் கண்டாலும் எதைப் பார்த்தாலும் அதில் குமாருடைய முகம் நிழலாடியது. சுருள் சுருளான அவனுடைய தலையின் ரோமங்கள் முன் நெற்றியில் விளையாடின. உதடுகளில் தேன்போல வழியும் சிரிப்பு அவர் கண்முன் நின்றது.

ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசத் தெரியாத குமார், என்றுமே அவருக்கு முன்னால் நிமிர்ந்து நின்றிராத குமார், எப்படி இப்படி ஒரு காரியத்தைச் செய்ய முன்வந்தான்?

இந்தக் கேள்வியை அவர் இதுவரையில் எத்தனையோ ஆயிரம் தடவைகள் தமக்குத் தாமே கேட்டுக் கொண்டாகிவிட்டது. ஒவ்வொரு தடவையும் குமார் கோழை என்ற எண்ணந்தான் மேலோங்கி நின்றது. தந்தையிடம் நேரே வந்து, 'அப்பா, பூர்ணா தேவி என்ற



பெண்ணை விவாகம் செய்துகொள்ள நான் ஆசைப் படுகிறேன். அதற்கு உங்களுடைய பூரண அநுமதியும் ஆசீர்வாதமும் வேண்டும்' என்று கேட்கக் குமாரால் முடியவில்லை! ஏன்? பயம். எண்ணத்தைப் பிரச்னையாக்க முடியாத கோழைத்தனம்! அப்பா எதிர்த்துவிட்டால், அந்த எதிர்ப்பை எதிர்த்துப் போராடி வெற்றி காண முடியாது என்ற அவநம்பிக்கை!

இப்போது கிளாஸ் ஹவுஸில் உட்கார்ந்து, தனிமை யில் அசை போடும் பசுவைப்போல, தம்முள்ளேயே பிரச்னையின் விவாதத்தில் இறங்கிய நாதன் என்ன செய்வது என்று அறியாமல் தவித்தார். சிந்தனை மட்டும் தொடர்ந்தது.

குமாருடைய பயந்த சுபாவத்துக்கும், பெற்ற தந்தைக்கு எதிரிலேயே நிற்க முடியாத அளவுக்கு வளர்ந்த தைரியமின்மைக்கும் யார் காரணம்?

குழந்தைப் பருவத்திலிருந்தே அவனுக்குப் பாலுடன் பயத்தையும் தம்முடைய அதிகாரத் தன்மையையும் சேர்த்துப் புகட்டியது யார்? அவரேதாம். ஒரு வயதுவரை இருந்து வந்த பயம் மாறியபோது மரியாதை காரணமாகப் பிள்ளை ஒதுங்கிக்கொண்டான். இப்போது தன் மண வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டிய அவசியம் பிறந்தபோது, பிரச்னையை வளரவிட்டால் தந்தை மகன் இருவரிடையே தீர்க்க முடியாத விரோதம் நேரிட்டுவிடுமோ என்ற பயத்தில் அதைத் தவிர்க்க அவனே சிறந்த முடிவு என்று ஒரு முடிவை எடுத்துவிட்டான்!

என்னதான் தாம் எதிர்த்திருந்தாலும், குமார் பூர்ணா தேவியைக் கைவிட்டிருக்க மாட்டான் என்று எண்ணினார் நாதன். ஒருவேளை அவருடைய எதிர்ப்பின் பயனாக, பிள்ளைக்கும் அவருக்குமிடையே பகைமைதான் பிறந் திருக்கும். இப்போது உள்ளூறப் புகைந்துகொண்டிருக்கும்

அவர் அவனுக்கு முன்னாலேயே வெடித்திருப்பார். அது இல்லாததனால்தான் மனம் இன்னும் குமார்மீது ஆத்திரத்தைக் கொட்டாமல் இருக்கிறதா? அவரையும் மீறி அவருடைய மனம் மன்னிக்கிறதா?

ஆனால் ஏன் நெஞ்சுமட்டும் இன்னும் வலிக்கிறதா? இந்த வலிக்கு என்ன காரணம்? அவர் தயை இல்லாமலே, அவருடைய இருதயம் நிறைந்த ஆசிகளைக் கோராமலே பிள்ளை தன் கல்யாணத்தை நடத்திக் கொள்கிறான் என்றா? அப்படியானால் அவருடைய பிள்ளையே அவரை ஒதுக்கிவிட்டான்!

**நா**தன் மெதுவாக எழுந்து வீட்டை நோக்கி நடந்தார். குமாருக்குக் கல்யாணமாகி, அன்று நான்காவது நாள். இன்னும் நான்கைந்து நாட்களில் ராதிகா திரும்பி வருவாள். நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் கூறிவிடுவாள். அவள் சொல்லப் போவதைக் கேட்கக் கேட்க, அவருடைய நெஞ்சின் வலி மேலும் மேலும் கடுமையாகுமே தவிரக் குறையாது. எப்படித் தவிர்ப்பது?

போர்ட்டிகோவை அடைந்தவரால் ஹாலினுள் நுழைய முடியவில்லை. வெறிச்சோடும் வீட்டினுள் கால் நுழைய மறுத்தது. போர்ட்டிகோவிலேயே நின்றார்.

திடீரென்று ஒரு குரல் எங்கிருந்தோ கிளம்பி அவருடைய காதில் மோதியது. எத்தனையோ ஆண்டு களாகப் பழக்கப்பட்ட குரலே யாயினும், அவருடைய மனக் கொந்தளிப்பில் புரிந்துகொள்ள முடியவில்லை.

''குட்மார்னிங், மாமா! குட்மார்னிங்!''

ஒரு கைப் பையுடன் அப்பு வெகு வேகமாக ஓடி வந்துகொண்டிருந்தான்.

திடுக்கிட்ட நாதன் அப்பு வரும் திசையை பார்த்து நின்றார். தம் கண்ணையே அவரால் நம்ப முடியவில்லை.



ஊன்றிப் பார்த்தார். அப்புவேதான்! இவன் எப்படி அதற்குள் வந்துவிட்டான்? அதுவும் தனியாக. அவன் அவர் அருகில் வருவதற்குள் ஆயிரமாயிரம் சிந்தனை பிறந்து மடிந்து விட்டன. ஏன் ராதிகா வரவில்லை? கண்ணன் எங்கே? குமாருடைய கல்யாணம் நடந்ததா அல்லது எதிர்பாராத காரணம் ஒன்றினால் தடைப்பட்டதா? அப்பு வந்து அவர்முன் நிற்பதற்குள் அவர் பொறுமை இழந்தார்.

''அப்பு! அப்பு!''

''அப்பு வந்துவிட்டான்.''

''வாடா, வா. என்னைத் தனியாகவிட்டு விட்டு நீங்க எல்லாரும் இப்படிப் போய்விட்டீர்களே. இனிமே நான் என்னென்னிக்கும் தனிக் கட்டைதானாடா?'' அவருடைய பத்து நாள் மனப் புழுக்கம் கண்ணீருடன் வெளிவந்தது.

''அப்பு ஏன் இப்போ தனியாக வந்திருக்கான்னு நினைக்கிறீர்கள்? நீங்கள் அவசியத்துக்கு மேலே தனியாக இருக்கக் கூடாதுன்னுதான்! யார் சமைச்சுப் போட்டார்கள்? எப்படி எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட்டீர்கள்?''

''நான் எங்கேடா சாப்பிட்டேன்? வாடா, உட்காருடா. நடந்ததையெல்லாம் சொல்லுடா! உன்னைப் பார்க் கிறப்போ...'' நாதனுடைய நாக்குத் தழுதழுத்தது.

''அனுமாரைப் பார்க்கிற மாதிரி இருக்கோ?''

''ஆமாம்டா. நீ ஆஞ்சநேய மூர்த்தியேதான். சொல்லு, ஒன்னு விடாம சொல்லு. ராதி ஏன் வரலே? கண்ணன் எங்கே?''

''பாலம்மா, கண்ணன், ராதிகா மூணு பேரும் இன்னிக்கு டேராடூனிலிருந்து புறப்பட்டு ஷில்லாங் போகிறா. அப்புவையும் வான்னான் குமார். ஊட்டி பார்த்த கண் வேறு எந்த மலைப் பட்டணத்தையும் பார்க்காதுன்னு வந்துட்டான் அப்பு!''

''எதுக்குடா ஷில்லாங்?''

''அது யாரு கண்டா? ஏதோ ஹனிமூனாம். விடுங்கள். ராதியும் மந்தவாளும் கல்கத்தாவுக்கு வந்துவிட்டு அங்கிருந்து அடுத்த வெள்ளிக்கிழமை புறப்பட்டு இங்கே திங்கட்கிழமை வருவார்கள்.''

''என்னவெல்லாம் நடந்தது?''

''நாங்க இங்கேயிருந்து புறப்பட்டோமோ, அன்னிக்கு ப்ளூ மவுண்டன் மேட்டுப்பாளையத்திலேயே முக்கால் மணி நேரம் லேட். மெட்ராஸிலே இறங்கியதும் உட்லண்ட்ஸுக்குப் போனோம். ராத்திரி எட்டு மணிக்குத் தானே டில்லி ரெயில்? அதுவரையில் மவுண்ட்ரோடு மெரினா எல்லாம் போனோம் போனோம்னா யாரு? அப்புவும் பாலம்மாவும். பாலம்மா பீபிள்ஸ் பார்க் பார்க்கணும்னு முப்பது வருஷமா ஆசைப்பட்டுப் கொண்டிருந்தாளாம். சிங்கங்களையும் புலிகளையும் பார்த்துச் சிரித்தாள். ஒட்டைச் சிவிங்கியையும் வரிக் குதிரையையும் பார்த்துப் பயந்துவிட்டாள்! அப்பு பாலம்மாவுக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தான். உள்ளங்கையிலே போட்டுண்டு சாப்பிட்டாள்!''

நாதன் பொறுமையை இழந்தார். ''இதையெல்லாம் யாருடா கேட்டா, அப்பு?''

''ஓ! ராதிகா கண்ணனைப்பற்றிக் கேட்டீர்களா? பழைய சிநேகிதிகள் ரெண்டு மூணு பேரைப் பார்க்கணும்னு ராதி நுங்கம்பாக்கம் மாம்பலம்னு போனா. கம்பெனிக் காரியமா யாரையோ சந்திக்கணும்னு கண்ணனும் போனான்! ஜூலி ஓட்டலைவிட்டு வெளிவரலை!''

''ஐயோ அப்பு!'' - நாதன் நொந்து கொண்டார்.

''என்ன மாமா, அலுத்துக் கொள்ளுகிறீர்கள்? ரெயில் ஏறினோம். டில்லி போனோம். ஜூலியை அவளுடைய உறவுகாரரிடம் ஒப்படைத்தோம். ராத்திரி பத்து மணிக்கு மேலே டேராடூன் ரெயில் ஏறினோம். அப்புவைப் பார்த்து ஒரு வடக்கத்திக்காரன் யாருக்குமே புரியாத இந்தியில், நீ உத்தர் பிரதேஷ் வாலாவான்னு கேட்டான். அப்பு ஊட்டிவாலான்னு சொல்லி இரண்டு திருக்குறளையும் சொன்னான். எல்லாரும் சிரித்தபோது அந்த ஆளுக்குக் கோபம் வந்தது. அப்பர் - பர்த்தில் ஏறிப்படுத்தான். எப்படிக் கதை?''



''நான் ரெயில் பிரயாணம் பத்திக் கேட்கலை!''

''பின்னே ஒண்ணுவிடாம சொல்லுன்னீர்களே?''

''உனக்கு நிஜமாகவே புரியவில்லையா, அப்பு?''

''ஊஹூம்!''

''கல்யாணம் எப்படியடா நடந்தது?''

''யார் கல்யாணம்?''

''என்னடா முட்டாள்மாதிரி பேசறே? நான் ஏதும் செய்யச் சக்தியற்றுப் போய் நொந்து கிடக்கிறேன்னு தானே இப்படியெல்லாம் பேசறே?''

''நீங்க பழைய நாதனா அதிகாரத்தோடு கேட்டிருந் தாலும், அப்பு இதே ரீதியில்தான் பதில் சொல்லியிருப்பான்! ஆமாம், குமார் கல்யாணத்திலே உங்களுக்கு ஏன் அக்கறை? அதுதான் நடந்தாகிவிட்டதே!''

நாதன் பதில் பேசவில்லை.

''குமாரை நீங்கள் புரிஞ்சுக்கலை. நீங்கள் துண்டை உதறிப் போடறமாதிரி உதறிப் போட்டுவிட்டு இங்கே உட்கார்ந்து விட்டீர்கள். அங்கே அவன் கண்ணீரும் கம்பலையுமாப் பெண்ணுக்கு மாலையிட்டான். ஆனா, பெண் வீட்டுக்காரர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா?''

''என்னடா?''

''மாப்பிள்ளை அருமையான ரத்னம். இந்த ரத்னத்தைப் பெத்தெடுத்தவர்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பேர்வழி என்று!''

நாதனுக்குக் கோபம் வந்தது! நெஞ்சுவலியையும் மறந்து கத்தினார். ''அப்பனை மதிக்காம, அப்பன்கிட்டே ஒரு வார்த்தை சொல்லாம, முன்பின் தெரியாதவனுக்கு மாலையிடறவன் எந்த நூற்றாண்டுக் காலமாம்?''

''அதை அப்பு கேட்கவில்லை, மாமா. ஆனா இப்போ நீங்கள் எரிந்து விழுறதில் யாதொரு லாபமும் இல்லை. பிள்ளை தப்புச் செய்தன்னா அதை மன்னித்துக் குடும்ப மானத்தைக் காப்பாத்திக் கொள்றதுதான் விவேகம்னு அங்கே காசிப் பண்டிதர் ஒருவர் சொன்னார். காசிப் பண்டிதராச்சே, சரியாகத்தான் இருக்கும்!''

''பெண் எப்படி இருக்கிறாள்?''

''மாப்பிள்ளை ரத்னம் என்றால், பெண் சொர்ண விக்கிரகம். ராதிகாவைவிட ஒரு நிறம் அதிகம். பெண்மைக்கு லட்சணமாக இருக்கிறாள். புருஷனிடம் நல்ல பக்தி. ராதிகாமீது இப்போதே உயிரை வைக்க ஆரம்பித்துவிட்டாள். ஹரித்துவாரத்திலிருந்து எல்லாரும் காரில் திரும்பி வர்றபோது என்ன சொன்னாள், தெரியமா?'' அப்பு நிறுத்தினான்.

''என்ன சொன்னாள்?''

''ஊஹூம். அப்பு சொல்லமாட்டான்! அப்புமேல் எரிந்து விழுவீர்கள்!''

''சொல்லுடா!''

''கூடிய சீக்கிரம் ராதிகாவுக்கும் கண்ணனுக்கும் கல்யாணத்தைப் பண்ணிவைக்க வேண்டும் என்றாள். அதுக்கு இந்தப் பித்துக்குளி கண்ணன் வாயைத் திறக்காமே இருக்கக் கூடாதா? தன் மாமா யாருக்கு அவளைக் கொடுக்கவேண்டும் என்றிருக்கிறாரோ, அவனைத்தான் ராதிகா கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்றான். பைத்தியக்காரன்! இன்னும் என்ன செய்திருக்கிறான் தெரியுமா?''



''தெரியாது!''

''ஷில்லாங்கிலிருந்து குமாரும் அவன் பெண்டாட்டியும் நேரே ஊட்டிக்கு வந்து, உங்களை நமஸ்காரம் செய்து உங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளணுமாம். உங்கள் கோபம் ஒழிந்து, மனம் விரிந்து ஆசி அளித்தால்தான் அவர்கள் ரெண்டுபேரும் சந்தோஷமாக இருப்பார்களாம்! இதை அந்த இன்னொரு பித்துக்குளி, அதுதான் பூர்ணாதேவி, உடனே ஆமோதித்தது. ரெண்டுபேரும், டில்லி வழியாக வருகிறார்கள், இன்னும் இரண்டு வாரத்தில்! எப்படிக் கதை!''

நாதனால் பேச முடியவில்லை. ஸ்தம்பித்து நின்றார்!

# 34

## வசந்தா

அப்பு ஜயலட்சுமியைப் பார்க்க வந்தபோது, அவள் கட்டிலில் கண் திறவாமல் படுத்திருந்தாள். அறை ஆஸ்பத்திரி அறைபோலக் காட்சியளித்தது. தலைமாட்டில் ஒரு 'ஷெல்பி'ல் மருந்துகளும் மாத்திரைகளும் சீராக வைத்திருந்தான். டெட்டாலின் நெடி நாசியைத் துளைத்தது.

கட்டிலின் பக்கவாட்டில் மகாலிங்கம் தினசரியைப் படித்தவராக உட்கார்ந்திருந்தார். தாயின் நெற்றியில் குங்குமத்தை இட்டுவிட்டு நளினி அப்போதுதான் அறையைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள். கால்மாட்டில் ஒரு நாற்காலியில் ஸ்ரீதர் உட்கார்ந்திருந்தான். அவனுடைய முகம் சோகத்தின் கனத்தில் தொங்கியது.

'' 'வாடா அப்பு'ன்னு வாய் நிறையக் கூப்பிடும் என் மாமிக்கு என்ன வந்துவிட்டது, மாமா?'' என்று கேட்டான் அப்பு.

''பிளட்பிரஷர்'' என்று சொன்ன மகாலிங்கம், ''இருதயமும் வேறு பலவீனமாயிடுத்து'' என்றார். பிறகு மீண்டும் அவர் பேப்பருக்குத் திரும்பினார்.

''கோயம்புத்தூரில் ஸ்பெஷலிஸ்ட் சீதாராம் இருக்கிறார். அவரைக் கூப்பிடலாம்'' என்றான் அப்பு.

''அவர் வந்து பார்த்தாகிவிட்டது.''

''யார் அப்புவா?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்த நளினி, ''கல்யாணமெல்லாம் நன்றாக நடந்ததா?'' என்று விசாரித்தாள்.



''மாமியின் நெத்தியிலே குங்குமத்தை இட்டுவிட்டு நீ போறபோது வந்தேன். நீ கவனிக்கவில்லை'' என்றான் அப்பு.

''குமார் மனைவி எப்படி இருக்கிறாள்? ரொம்ப அழகா?'' என்று கேட்ட நளினி, அப்பு நின்ற இடத்துக்கு அருகில் வந்து நின்றாள். கண் அடிக்கடி அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டது.

''அப்புக்கு அழகைப்பத்தி என்ன தெரியும், நளினி?'' என்று கேட்ட அப்பு, ஓரக்கண்ணால் ஸ்ரீதரைப் பார்த்தான். பிறருடைய திருப்திக்காக அவன் துக்கக்கோலம் பூண்டிருக்கிறான் என்பதை அவன் தெளிவாகப் புரிந்துகொண்டு விட்டான். இது யாரை ஏமாற்ற? மகாலிங்கத்தையும் ஜயா மாமியையுந்தானே?

''அழகைப்பற்றி உனக்குத் தெரியாவிட்டால் பின் யாருக்குத்தான் தெரியுமாம்? அது சரி, கண்ணன் எப்போது ராதிகாவுடன் திரும்புகிறான்?''

''இன்னும் எட்டு நாளில். மாமி இதுமாதிரி எத்தனை நாளாகப் பேச்சு மூச்சில்லாமல் படுத்துக் கொண்டிருக்கிறாள்?''

''ரெண்டு நாளாக. கண்ணன் என்ன சொல்றான்? ஜூலி டில்லியில்தான் இருக்கிறாளா?''

''ஆமாம். கண்ணன் சொல்றதுக்கு என்ன இருக்கு?''

திடீரென்று ஸ்ரீதருடைய குரல் கேட்டது:

''அப்பு, இங்கே ஒரு நோயாளி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார். நீங்க என்னடான்னா உப்புச் சப்பில்லாத ஊர் சமாசாரத்தை அளந்துகொண்டிருக்கிறீர்கள். இந்தப் பேச்சை இந்த அறையில் இந்த வேளையில்தானா வைத்துக்கொள்ள வேண்டும்? தயை செய்து வெளியே இருங்கள்.''

''ஸ்ரீதர் சொல்றது சரிதான், நளினி. அப்பு வெளியே நிக்கிறான்'' என்று கிளம்பினான் அப்பு.

''இரு, நானும் வறேன்' என்று அவனைப் பின்தொடர்ந்தாள் நளினி. மகாலிங்கமும் பேப்பரை மடித்துவிட்டு, மனைவியை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு வெளியேறினார். ஸ்ரீதர் கால்மாட்டிலேயே உட்கார்ந்திருந்தான்.

''ஸ்ரீதர் ரொம்பப் பாடு படுகிறான் போலிருக்கே!'' என்றான் அப்பு.

''ஆமாம்.''

''நளினி, அவனுடைய முகத்தைக் கவனித்தாயா? துக்கம், கரையை உடைத்துக்கொண்டு பொங்கற வெள்ளம் மாதிரி, கொட்டிக் கிடக்கு.''

''ஸ்ரீதர் விஞ்ஞானி மட்டுமல்ல; சிறந்த நடிகனுங்கூட!'' என்று சொல்லிச் சிரித்தாள் நளினி.

''என்ன சொல்றே நீ?''

''உனக்கு ஒன்றும் தெரியாதா? அம்மா மனசு வைத்தால் ஸ்ரீதர் மாப்பிள்ளையாகிவிடலாம்.''

''அவள்தான் மனசு வைக்கலியே?''

''அந்த மனசை மாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதாக ஸ்ரீதர் நினைத்துக் கொண்டிருக்கிறான். இரவும் பகலும் இங்கேயே இருக்கிறான். சுச்ரூஷை எல்லாம் அவன்தான்.''

''பாவம்!''

''ஏன்?''

''ஸ்ரீதர் அல்ல; உன் அம்மா! ஸ்ரீதர் கையால் சுச்ரூஷை கிடைப்பதற்கு அவள் என்ன பாவம் செய்திருக்க வேண்டும்! அது சரி, ஏன் அம்மா கண் விழிக்கவே இல்லை?''



''அம்மா கண்ணைத் திறந்தால் ஏதாவது பேசிப்பேசி, அலட்டிக்கொண்டு களைப்படைகிறாள்னு, டாக்டர் தூக்க மருந்து கொடுத்திருக்கிறார்.''

''பிளட் பிரஷர், ஹார்ட் வீக் என்றெல்லாம் உன் அப்பாகூடச் சொன்னாரே.''

''தனக்குப் பிளட் பிரஷர் இருக்கு, அடிக்கடி மார்பை வலிப்பதனால் இருதயக் கோளாறும் இருக்குன்னு அம்மாவின் மனசில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. உண்மையில், அம்மாவின் வயசில் எல்லா ஸ்திரீகளுக்கும் கொஞ்சம் பிரஷர் இருக்கத்தான் இருக்குமாம். அதுவும் கொஞ்ச நாளைக்கு. ஹார்ட்டைப்பத்தி டாக்டர் கவலைப்படவே இல்லை. உடம்பினுள் சுற்றும் வாயு, மார்புப் பக்கம் தேக்கமடைகிறபோது மார்பு வலி வருகிறது. அதை இருதய வலின்னு அம்மா கற்பனை செய்து கொண்டிருக்கிறாள்.''

அப்பு கலகலவென்று சிரித்தான். பிறகு, ''நீ சாதாரணப் பெண் இல்லை, நளினி! குறும்பு உன் உடம்பு முழுதும் நிறைந்திருக்கு!'' என்றான்.

''எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''எவ்வளவு தூரத்துக்கு ஸ்ரீதர் போகிறான்னு வேடிக்கை பார்க்கிறாயே?''

''ஸ்ரீதர் முட்டாள்!'' என்ற நளினி, ''கல்யாணம் என்பது மரத்தில் ஏறி மாங்காய் பறிப்பது மாதிரின்னு அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். தன் தொழில் திறமையால் என்னை வசீகரிக்க முடியும் என்று மனப்பால் குடிக்கிறான்.''

''அவனுடைய கற்பனையைத் திடீரென்று துண்டித்து விடாதே. நாதன் வீட்டுக்குத் தினம் தினம் வந்து அவரை மயக்கிக் கொண்டிருந்தவன் அவன். ராதிகாவைவிட, நீ சிறந்தவள் என்று தோன்றினதும்...''

''ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குத் தாவினான்!'' என்று முடித்தாள் நளினி. பிறகு, ''அங்கே நாதானாவது ஏமாந்து போனார். இந்த வீட்டில் யாருமே ஏமாறவில்லை'' என்றான்.

''அதுக்குக் காரணம், அவன் மரம் தாவினதை எல்லாரும் பார்த்ததுதான்!'' என்றான் அப்பு. பிறகு, ''அப்பு புறப்படறான், நளினி! ஏதாவது வேண்டுமானால் சொல்லிட றுப்பு'' என்றான்.

அவன் இரண்டடி நகர்ந்ததும், ''அப்பு'' என்று கூப்பிட்டாள் நளினி.

அப்பு நின்று, திரும்பிப் பார்த்தான். முகமே 'என்ன?' என்று கேள்வியைக் கேட்டது.

''உன் சிபாரிசிலே போன வருஷம் வசந்தா என்ற பெண்ணைக் குமாஸ்தாவாக நியமனம் செய்தார், அப்பா'' என்று ஆரம்பித்தாள் நளினி.

''ஆமாம், வக்கீல் கோதண்டராமனுடைய பெண். ''டேய் அப்பு, கட்சிக்காரர்களுக்கு என் வீட்டு விலாசமே தெரியலையடா. நான் கறுப்புக் கோட்டை மாட்டிக் கொண்டு கோர்ட்டுக்குப் போய் மத்த வக்கீல்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டதடா. என் பெண்ணுக்கு ஏதானும் ஒரு வேலை வாங்கிக் கொடு'டான்னார். அந்த வசந்தாவுக்கு என்ன இப்போது?''

''அவள் வேலையில் ரொம்பச் சூடிகையான பெண். வரும்போது சுமாராகத் தட்டெழுத்து மட்டுந்தான் தெரியும். இப்போது சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் பரீட்சை எழுதிப் பாஸ் பண்ணியிருக்கிறா.''

''இது நடந்து ரெண்டு மாசமாறது, நளினி.''



''பூரா விஷயத்தையும் கேளு. ஜூலியை ஸ்ரீதரிட மிருந்து மாத்தினதுக்குப் பிறகு, கிருஷ்ணராஜ் பெர்ஸனல் செக்ரடரியாக நாலைந்து நாள் இருந்தான்.''

''அவன்தான் பம்பாயில் அமெரிக்கக் கம்பெனியில் வேலை கிடைச்சிருக்குன்னு போயிட்டானே.''

''ஆமாம், நாலைஞ்சு நாள் இருந்தப்புறந்தான் போனான். அந்த ஸ்தானத்தில் இந்தப் பத்துப் பதினைந்து நாளாக வசந்தா இருந்து வருகிறாள்.''

''இப்போ அப்பு என்ன செய்யணும் என்கிறாய்?''

''ஒன்றும் செய்ய வேண்டாம். தூர இருந்து கவனி, போதும். நூல் புடவையைக் கட்டிக் கொண்டு வருகிறவள், டெரிகாட்டும் ஷிபானுமாக வருகிறாள். ஒரு பின்னலையே சரியாகப் பின்னிக்கமாட்டாள்; இப்போது ரெட்டைப் பின்னல். வலக் கையில் கடிகாரம் வேறே!''

''கட்சிக்காரர்களுக்குக் கோதண்டராமனுடைய விலாசம் தெரிந்துவிட்டதோ என்னவோ?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. இது காக்கை ஏறியதும் பனம்பழம் விழற கதைதானா அல்லது வேறு ஏதாவது இருக்கான்னு தெரியணும்னு......'' நளினி இழுத்தாள்.

''உன் பெண்புத்தி ஆசைப்படறதாக்கும். என்னைப் பிரைவேட் டிடெக்டிவாக்கிவிட்டே!''

'தூர இருந்து கவனி, போதும் என்கிறேனே!''

''பெயர்தான் அழகான பெயராக இருக்கே தவிர, வசந்தா ஒன்றும் அப்படி அழகா இருக்கமாட்டாளே!'' என்றான் அப்பு.

''இப்போ, சற்று முன்னால்தானே அழகைப்பத்தி அப்புவுக்கு என்ன தெரியும்னு சொன்னே?''

''அது இருக்கிற இடத்தைப் பார்க்கிறபோது அதை அநுபவிக்கவோ, விவரிக்கவோ அப்புவுக்குத் தெரியாது. அது இல்லாத இடத்தைப் பார்க்கிறபோது, இல்லாமை கூடவா தெரியாமற் போய்விடும்?''

''ரொம்பச் சாதுரியமாகப் பேசறே. அப்பு, நான் இவ்வளவு தூரம் இந்த விஷயத்தில் முனைந்து பேசறதுக்குக் காரணம் என்ன தெரியுமா?''

''ஸ்ரீதரைப்பத்தி இனிமேலும் தெரிந்துகொள்ளுவதற்கு உனக்கு ஒன்றும் இல்லை என்பது உனக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். வசந்தாவின் போக்கு எப்படி இருக்கிறதுன்னு தெரியணும்!''

''அப்பு, நீ ரொம்பவும் புத்திசாலி!'' என்று முகம் மலரக் கூறினாள் நளினி. பிறகு, ''இன்னொன்று என்ன தெரியுமா? ஏழை வீட்டுப் பெண் அவள். அவளால் அவள் வீட்டுக்கு நாலு காசு கிடைக்கிறது. அந்தப் பெண் யாருடைய ஆசை வெறிக்கும் பலியாகிவிடக் கூடாது'' என்றாள்.

அப்பு பதில் சொல்லாமல், நளினியின் முகத்தை ஒரு தடவை கூர்ந்து பார்த்துவிட்டு வெளியேறினான்.

**வ**க்கீல் கோதண்டராமன் வீட்டை அப்பு அடைந்தபோது மணி இரண்டு இருக்கும்.

''அப்பு வந்திருக்கிறான்!'' என்று கத்தினான் அப்பு.

அடுத்த நிமிஷம், ''வா, வா'' என்று கூக்குரல் உள்ளிருந்து கிளம்பியது.

''வக்கீல் ஸார், வக்கீலு ஸார்!''

''வக்கீல் ஸார் இல்லை. அப்பு, கொஞ்சம் இரு, நானே வறேன்.''



''அசரீரி மாதிரி குரல்தான் கேட்கிறது. என்ன செய்துகொண்டிருக்கே? டிரஸ் பண்ணிண்டிருக்கேன்னா, ஒரு மணிநேரம் பொறுத்து வருவான் அப்பு!''

''இதோ ஆகிவிட்டது.''

அடுத்த நிமிஷம் வசந்தா வந்தாள். வந்தவளை வைத்த கண் எடுக்காமல் பார்த்தான் அப்பு.

தலைகுனிந்த வசந்தா, ''ஏன் அப்படிப் பார்க்கிறே, அப்பு?'' என்று கேட்டாள்.

''உன் அம்மா, நீ சின்னக் குழந்தையா இருக்கிறபோது அப்புகிட்டேதான் உன்னை ஒப்படைப்பாள். உன் மூக்கை இந்த விரல்கள் எத்தனை தடவை சிந்தி விட்டிருக்கும் தெரியுமா?''

''அதுக்காக! நான் இன்னும் குழந்தையா?''

''ஜலதோஷம் வந்தாலும் மூக்கைச் சிந்தியாகணும். கண்ணிலே நீர் வந்தாலும மூக்கைச் சிந்தியாகணும்.''

''என்ன புதிர் போடறே, அப்பு?''

''முதல்லே உன் அப்பாவும் அம்மாவும் எங்கேன்னு சொல்லு. உன் தம்பியையும் தங்கையையும் வேறு காணோமே!''

''எல்லாரும் மேட்டுப்பாளையம் போயிருக்கிறார்கள்.''

''என்ன விசேஷம்?''

''அத்தை பிள்ளைக்குச் சீமந்தம்.''

''நீ ஏன் போகலை?''

''எனக்குப் பிடிக்கவில்லை. அது சரி, அபூர்வமா வந்திருக்கியே, என்ன விசேஷம்?''

''உன் அலங்காரம் ரொம்பப் பிரமாதமா இருக்கு, வசந்தா! இந்த மாதிரி தலைக்குக் கொண்டை போட்டுக்

கொள்ள எங்கே கத்துக்கொண்டே? கொண்டையின் பக்கவாட்டில் வெள்ளிமணிகள்! சபாஷ்!''

''அடேயப்பா! என்ன அக்கறை அப்புவுக்கு என் பேரிலே? ஆச்சரியமா இருக்கு!''

''அப்புவே ஆச்சரியத்தில் ஸ்தம்பித்துப் போயிட்டான், உன்னைப் பார்த்ததும். கனகாம்பரக் கலர் கவுனை விடாமல் போட்டுக்கொண்டு, சதா ஓடித் தெரியும் வசந்தாவா நீ இப்போ? பாவாடையும் தாவணியுமாகக் குனிஞ்ச தலை நிமிராம, யார்கிட்டேயும் ரெண்டு வார்த்தை பேசாம உனக்குள்ளேயே ஒடுங்கிண்டு போன வசந்தாவா நீ? அப்பு ஆச்சரியத்திலே ஸ்தம்பிக்கிறான்!''

''இப்படியெல்லாம் ஏன் பேசறே, அப்பு?''

''உன் கண்ணிலே இப்போ குதூகலம் தாண்டவ மாடறது!''

''மனசு திருப்தியாயிருந்தா கண்ணில் தெரியும்.''

''மனசு ஏமாந்து போகப்படாது! அப்புறம் கண்ணிலே நீர் தளும்பும்.''

''என்ன பயமுறுத்தறே?''

அப்பு ஒரு கணம் வசந்தாவைப் பார்த்தான். அவள் அழகி இல்லைதான். ஆனால் உடம்பின் வளர்ச்சியும், பருவத்தின் திளைப்பும், அசாதாரணக் கவர்ச்சியை வீசின. வட்டவடிவமான முகத்தில் குறுகிய நெற்றியும், பாந்தமில்லாத மூக்கும், சிறிதே தடித்த உதடுகளும் ஒருவித அருவருப்பைக் கூட உண்டாக்கின. ஆனால் அதே சமயத்தில், உடம்பின் மதமதப்பான சதையும், மார்பகத்தின் விம்மலும், அது இடையை நோக்கிக் குறுகும் அழகும் பார்ப்பவரின் கண்ணில் வெறியை ஊட்டின. . அவள் புடைவையை இழுத்துக் கட்டிக் கொண்டதே, தன்னுடைய உடம்பின் வளைவுகளைக் காட்டத்தான் என்று



நிதரிசனமாகத் தெரிந்தது. உருண்டு திரண்ட கைகால்களின் செழிப்பில் யௌவனத்தின் திமிர் வெடித்தது.

அப்பு மெதுவாக, ''வசந்தா'' என்றான்.

என்றுமே அவனுடைய குரலில் உணர்ச்சியை உணர்ந்தறியாத வசந்தா அயர்ந்து போனாள்.

''என்ன அப்பு?''

''அப்புவை மன்னித்துவிடு!''

''ஏன்? எதற்காக?''

''உனக்கு மகாலிங்கம் கம்பெனியில் குமாஸ்தா வேலை வாங்கிக் கொடுத்ததே இந்த அப்புதான்.''

''அந்த நன்றியை நான் என்றும் மறக்கமாட்டேன்.''

''அதை இன்றைக்குப் பறித்துக் கொண்டதும் இந்த அப்புதான்.''

''ஆமாம், உன் வேலை போய்விட்டது.''

''இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. நேத்துக்கூட மிஸ்டர் ஸ்ரீதர் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.''

''ஸ்ரீதருக்கே இனிமேல்தான் தெரியும்!''

''அப்பாடா!' என்று பெருமூச்செறிந்தாள் வசந்தா.

''ஏன் நிம்மதி மூச்சு விடறே?''

''ஸ்ரீதர் நளினி இண்டஸ்ட்ரீஸில் இருக்கிறவரைக்கும் என் வேலைக்கு ஓர் ஆபத்தும் இல்லை. எனக்குக் காரியதரிசியாக வேலை உயர்வு கிடைத்து இரண்டு வாரந்தான் ஆகிறது. இதற்குள் இருபத்தஞ்சு ரூபாய் சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்று அவர் சிபாரிசு செய்து விட்டார்; அதுவும் நான் வாய் திறந்து கேட்காமல்!''

''அதற்குக் காரணம் என்ன தெரியுமா?''

''ஸ்ரீதருடைய நல்ல குணந்தான்.''

''வசந்தா, இந்த நல்ல குணந்தானே கொண்டை மணிகள், கடிகாரம், விதம் விதமான புடைவைகள் எல்லாம் கொடுத்திருக்கிறது!''

''பரிசுகள்! அவருக்கு என்னைப் போலவே ஒன்றுவிட்ட தங்கை ஒருத்தி இருந்தாளாம்! பதினாறு வயதில் திடீரென்று விஷ ஜுரத்தில் இறந்துவிட்டாளாம். என்னைப் பார்க்கும்போதெல்லாம் அவளுடைய நினைவு வருகிறதாம். என்னை அவர் மனம், மீண்டும் புனர் ஜன்மம் எடுத்த தங்கையாக ஸ்வீகரித்துக் கொள்ளுகிறதாம். அவர் ரொம்ப நல்லவர்.''

''இதெல்லாம் உன் அம்மா அப்பாவுக்குத் தெரியுமா?''

''தெரியாது. போனஸ் பணத்தில் வாங்கினதாகச் சொன்னேன்.''

''அப்புவிடம் மட்டும் ஏன் உண்மையைச் சொன்னே?''

''பொய் சொன்னால், நீ உண்மையைக் கண்டு பிடித்து விடுவாய்.''

''ஸ்ரீதர் உன்னுடன் எப்படிப் பழகுகிறான்?''

''அப்பு, நீ இதுவரையில் கேட்ட கேள்விகளை யெல்லாம் நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இந்தக் கேள்வியை.''

''நீ ஆட்சேபித்தால் அப்பு கவலைப்பட மாட்டான். உனக்கு வேலை வாங்கிக் கொடுத்ததே, உன் அப்பாவின் கஷ்டத்தைப் போக்கத்தான். ஆனால் நீ கொஞ்ச நாளாக, திசை தெரியாமல் அலைகிறாய். நீயே உன்னை இரையாக்கிக் கொள்ளுகிறாய்! ஜாக்கிரதை!''

''என்ன சொல்லுகிறாய் நீ?''



''ஸ்ரீதர் விஞ்ஞானி மட்டுமல்ல; சிறந்த நடிகனும் கூட என்னும் ஓர் அபிப்பிராயம் அப்புவின் காதில் விழுந்தது. அவன் பெரிய கற்பனையாளன்கூட என்று இப்போது தெரியறது.''

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''இருபத்துநாலு மணி நேரம் அவகாசம் தருகிறான், அப்பு. அதற்குள் இந்த வாட்ச, கொண்டைமணி, புடைவைகள் எல்லாத்தையும் கொடுத்தவன் முகத்திலேயே வீசி எறிய வேண்டும்.''

வசந்தா மௌனமாக நின்றாள். அவள் வாயிலிருந்து பதில் வரும் வரைக்கும், தானும் பேச வேண்டாம் என்று அப்பு காத்திருந்தான்.

ஆனால் திடீரென்று மௌனத்தைக் கலைத்துக் கொண்டு ஒரு குரல் கேட்டது.

''வசந்த், ஹலோ வசந்த்! நேரமாகிவிட்டது. மணி மூன்று, படம் ஆரம்பிக்கப் பத்து நிமிஷந்தான் இருக்கு!''

வசந்தா செய்வதறியாமல் நின்றாள். அப்பு கலகலவென்று சிரித்தான்.

உள்ளே காலை வைத்த ஸ்ரீதரால் திரும்பி ஓடவும் முடியவில்லை. அங்கேயே நிற்கவும் இயலவில்லை.

நிலைமையைச் சமாளிக்க, அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஸ்ரீதர், ''ஓ! மாடர்ன் நாரதரா?'' என்றான்.

அவனுடைய ஏளனச் சிரிப்பைப் பொருட்படுத்தாமல், அப்பு, ''ஆமாம், மாடர்ன் நாரதரேதான். உன் ஒன்று விட்ட தங்கை ஒருத்தி இந்தப் பூவுலகில் அவதாரம் செய்த கதையையும் பதினாறு வயதுக் குமரியாக அவள் விஷ ஜுரத்தின் உருவில் வந்த விதிக்குப் பலியான காவியத்தையும் கேட்க வந்த நாரதர்!'' என்றான்.

அப்புவை லட்சியம் செய்யாமல், ''போவோமா, வசந்தா?'' என்று கேட்டான் ஸ்ரீதர்.

''என்னை மன்னித்துவிடுங்கள், மிஸ்டர் ஸ்ரீதர்!'' என்ற வசந்தா அடுத்த கணம் கைக் கடிகாரத்தையும் கொலுசை மணிகளையும் கழற்றி நீட்டினாள். பிறகு, ''இதையெல்லாம் வாங்கிக் கொள்ளுங்கள். நான்கு புடைவைகளையும் நாளைக்குத் தருகிறேன்'' என்றாள்.

''இது என்ன பைத்தியக்காரத்தனம்?'' என்ற ஸ்ரீதர், ''அப்பு, நீ இதுவரையில் எத்தனையோ தடவை என் விஷயத்தில் தலையிட்டு விட்டாய். கோழியை அடிக்கக் குண்டாந்தடி தேவையில்லை என்பதை மறக்காதே!'' என்றான்.

அப்பு சிரித்தான். பிறகு வசந்தாவைப் பார்த்து, ''இவன் ஏன் நின்றான் தெரியுமா? புடைவைகளும் இப்போதே வேண்டுமாம். உள்ளே போய் உன் பழைய புடைவையைக் கட்டிக்கொண்டு, இவன் கொடுத்ததையெல்லாம் கொண்டுவா'' என்றான். வசந்தாவும் தலை குனிந்துகொண்டே சென்றாள்.

அவள் போவதையே பார்த்து நின்ற ஸ்ரீதர், அப்புவின் பக்கம் திரும்பினான்.

''ஏன் ஸ்ரீதர், என்னைப் பார்த்து முறைக்கிறே? மகாலட்சுமிமாதிரி நளினி இருக்கிறாள். உன்னை மேதை என்று புகழ்கிறாள். உன்மீது அன்பும் அபிமானமும், ஏன், காதலே கொண்டிருக்கிறாள். அவளை விட்டு விட்டு, உன் மிருக வெறிக்கு இரை தேடக் கழுகுபோல ஏன் வீணாக அலைகிறாய்? நீ மதிப்பும் மானமுமாக வாழ்கிறாய் என்று தெரிந்தால்தான் நளினியின் ஆசையை மகாலிங்கமும் ஜயா மாமியும் நிறைவேற்றி வைப்பார்கள்!''

ஸ்ரீதர் ஸ்தம்பித்து நின்றான். அப்பு என்ன சொல்லுகிறான்? வசந்தாவைப் பார்க்க வந்ததே நளினியைக் காப்பாற்றத்தானா? அவனுடைய போக்கை மாற்றத்தானா? அப்புவை நம்பலாமா?



''சீக்கிரம் இங்கிருந்து போ. அப்பு சமாளித்துக் கொள்ளுவான்'' என்றான் அப்பு.

அடுத்த கணம் ஸ்ரீதர் அவசர அவசரமாக வெளியேறினான்.

வசந்தா பரிசுப்பொருள்களுடன் திரும்பியபோது, அப்பு நிதானமாக, ''எல்லாவற்றையும் அப்புகிட்டே கொடு. பறந்துபோன கழுகிடம் சேர்த்துவிடுவான்'' என்றான்.

''என்னுடைய வேலை?'' என்று கெஞ்சினாள் வசந்தா.

''இன்னிக்கே மகாலிங்கத்திடமும் நளினியிடமும் அப்பு அதைப்பற்றிப் பேசி, நல்ல விதமான முடிவை ஏற்பாடு செய்வான்.''

## 35

# விஷமா, விஷமமா?

**ஸ்ரீ**தர் வீட்டை நோக்கி விரைந்தான். அப்புவின் வார்த்தைகள் அவனுடைய காதில் இன்னும் ரீங்காரம் செய்தன. உண்மையிலேயே நளினி அவனைக் காதலிக்கிறாளா? அப்படியானால் இதுவரையில் ஏன் அவள் வாய் திறந்து அவனிடம் சொல்லவில்லை? எத்தனையோ நாள் அவனும் அவளும் ஏரிக்கரையிலும் நந்தவனத்திலும் என்ன என்னவோ பேசியிருக்கிறார்கள். அலுக்காமல் சலிக்காமல் மேல்நாட்டு அநுபவங்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். நளினி இண்டஸ்ட்ரீஸின் எதிர்காலம் எப்படிச் சிறந்து மகோன்னதமாக விளங்க வேண்டும் என்று அவள் தன் ஆசையை வெளியிட, அதற்கு என்ன என்ன செய்ய வேண்டும், எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று ஸ்ரீதர் உபாயங்கள் சொல்லியிருக்கிறான்.

குன்னூர் செல்லுகையில் நளினி அவனிடம் குத்தலாகப் பேசினாள். நையாண்டி செய்தாள். ஏன் அப்படியெல்லாம் நடந்துகொண்டாள்? அவனுடைய பொறுமையையோ சகிப்புத் தன்மையையோ சோதிக்கவா? அவன்மீது அவளுக்குள்ள ஆசை மனத்தில் எவ்வளவு தூரம் பதிந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளவா?

ஆனால் நளினி ஏன் தன் மனத்தை இன்னும் வெளியிடவில்லை?



மனம் குழம்பினாலும் அதே சமயத்தில் அது திருப்தியில் திளைத்திருந்தது. எப்படியாவது, அவளை மயக்கியாவது அவளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவன் துடிதுடித்துக் கொண்டிருந்தான். நளினி மனைவியானால் அவன் நாளைக்கே, 'நளினி இண்டஸ்ட்ரீ'ஸில் ஒரு டைரக்டர் ஆகிவிடுவான். சில வருஷங்களில மானேஜிங் டைரக்டரும் அவன்தான். அதன் பிறகு, தென்னிந்தியாவில் பெரிய தொழிலதிபர்களில் அவனும் ஒருவன்தான்.

நளினி அவனுடைய எதிர்காலச் சுபிட்சத்துக்கு இன்றியமையாத கருவி. மனைவி ஸ்தானத்தில் அவளை வைத்துவிட்டு, அதற்குக் கொடுக்க வேண்டிய மதிப்பையும் சுக சௌகரியங்களையும் அளித்துவிட்டால், நளினி அவனுடைய பாதையில் குறுக்கிடமாட்டாள். நாள் செல்லச் செல்ல, இரண்டொரு குழந்தைகளுக்கு அவள் தாயாகிவிட்டால், கம்பெனிப் பொறுப்புக்களிலிருந்தும் அவளை மெதுவாகக் கழற்றிவிடலாம். அதன்பின் நளினி இண்டஸ்ட்ரீஸ் அவனுடைய சாம்ராஜ்யந்தான். பணத்தால் மன இன்பமும் திருப்தியும் கிடைக்கிறதோ, இல்லையோ, கண்டிப்பாகக் கஷ்டமில்லாத வாழ்வு கிடைக்கும்; சமூகத்தில் ஓர் அந்தஸ்துக் கிடைக்கும்.

ஸ்ரீதரின் மனம் நிலை கொள்ளாமல் அலைய, அவனுடைய கால்கள் விரைந்தன. ஜயலட்சுமி கண் திறந்தாகிவிட்டது. ஏன், கட்டிலில் உட்காரவும் ஆரம்பித்து விட்டாள். இன்னும் ஒரு வாரத்தில் பூரண குணம் அடைந்து பழைய ஜயா மாமியாக வளைய வருவாள். அதற்குள் நளினியைத் தனியாகப் பார்த்துத் தன் உள்ளத்தைத் திறந்து காட்டிவிட வேண்டும். அவளாகத் தன் அன்பையும் காதலையும் வெளியிடாமலிருப்பதற்குக் காரணம்

அவனுடைய பெண்மையாகத்தான் இருக்கவேண்டும். அவள் இல்லாவிட்டால் தன் வாழ்வு வறண்ட பாலை வனமாகிவிடும் என்று அவன் வாய் திறந்து இறைஞ்சினால் போதும். நளினியும் தன் மனத்தை வெளியிட்டுவிடுவாள்.

ஸ்ரீதர் திடீரென்று நின்றான். இவ்வளவு தூரம் அவனுடைய மனம் கற்பனையில் மூழ்கியதற்கு யார் காரணம்? அப்புவின் வார்த்தைகள்தாம்! இந்த அப்புவை நம்பலாமா? அவனை வசந்தா வீட்டிலிருந்து வெளியேற்ற அப்பு செய்த சூழ்ச்சியா? இல்லை, உண்மையிலேயே நளினி மீதுள்ள அக்கறையில் அப்பு ஓர் உண்மையை வெளியிட்டானா?

ஊட்டிக்கு வந்ததிலிருந்தே, அப்புவும் கண்ணனும் அவனுக்கு விரோதிகளாகப் பட்டார்கள். இருவருடைய நற்குணங்களை அவன் அறிந்திருந்தாலும், அவனைப் பொறுத்தமட்டில் இருவரும் எதிர்த் திசைகளில் நின்றார்கள். கண்ணன் மனத்தில் பட்டதை ஒளிக்காமல் மறைக்காமல் முகத்தில் அடிப்பது போலச் சொல்லுகிறவன். ஆனால் அப்பு? 'எதை யாரிடம் எப்படிப் பேசவேண்டும்' என்று பூர்ணமாகத் தெரிந்து கொண்டிருப்பவன். சாதுரியம் அவனுடைய இரத்தத்தில் ஊறியிருக்கிறது. பிறரைப்பற்றித் தன் அபிப்பிராயங்களை வெளியிடுவதில் அவனுக்கு இணை அவன்தான். அப்புவின் வாய்ச் சாலகத்துக்கு மயங்காதவர் யாருமில்லை.

அவனும் மற்றவர்களைப் போல அன்று மயங்கி விட்டானா, அல்லது அவன் சொன்னதெல்லாம் உண்மை தானா?

**வீ**ட்டை அடைந்தபோது அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. நாதன் ஹாலில் உட்கார்ந்திருந்தார்.



''ஹலோ நீங்களா?'' என்று ஸ்ரீதர் வரவேற்றாலும், உள்ளூற இவர் ஏன் வந்திருக்கிறார் என்று அலுத்துக் கொண்டான்.

''உன்னைப் பார்த்து ரொம்ப நாட்களாகிவிட்டது போலிருந்தது, பார்க்கலாம்னு வந்தேன்'' என்றார் நாதன்.

''உங்கள் உடம்புக்கு ஒன்றுமில்லையே?''

''உடம்பு சரியாகத்தான் இருக்கிறது. மனசுதான்.....'' என்று ஆரம்பித்தார் நாதன்.

''உங்க மனசு வேதனைப்பட ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. கைநிறையச் சொத்து இருக்கு. பெரிய பங்களா. பெரிய ஆபீஸராக வேலை பார்க்கும் ஒரு பிள்ளை. ராதிகாவைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால் வாழ்க்கையில் ஒரு சிக்கலும் இருக்காது.''

''அது விஷயமாகத்தான் கொஞ்ச நாளாக மனசு ரொம்பக் குழம்பிக்கொண்டிருந்தது. நேத்துத்தான் ஒரு மாதிரியா ஒரு முடிவுக்கு வந்தேன்.''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்.''

''உன் தகப்பனாருக்கு நேத்து லெட்டர் போட்டேன். ஆனா என் மனசு ரொம்ப அவசரப்பட்டது. இன்னிக்கு டெலிபோனில் பேசினேன்.''

''என்ன?''

''நான் வரட்டுமான்னு கேட்டேன். அவரே பிளேனில் புறப்பட்டு வருவதாகச் சொன்னார். உன்னையும் பார்க்கணுமாம். நாளைக்குச் சாயந்தரம் அவர் இங்கே வருவார். நீயும் அவர் வருகிற வேளைக்கு என் வீட்டுக்கு வந்துவிடு.''

ஸ்ரீதர் ஒரு கணம் மலைத்து நின்றான். பிறகு, ''என்னிடம் ஒரு வார்த்தை கேட்காமலே நீங்கள் எல்லாக் காரியங்களையும் ஏற்பாடு செய்துவிட்டீர்கள்'' என்றான்.

''நீ நல்ல பிள்ளை என்று எனக்குத் தெரியும். ராதிகாவும் நாளைக்கு மத்தியான்னம் திரும்பிவருகிறாள்.''

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவனைப் போல, ஸ்ரீதர், ''நீங்கள் ராதிகாவைக் கண்ணனுடன் அனுப்பியிருக்கிறீர்கள்'' என்றான்.

''ஆமாம். உடன் பாலம்மாவும் அப்புவும் சென்றார்கள். அப்பு மட்டும் திரும்பிவிட்டான்.''

''வயது வந்த ஒரு பெண்ணை அவனுடன்.....''

ஸ்ரீதரால் மேலே பேச முடியவில்லை.

''நீ கண்ணனைத் தப்பாக எடை போடுகிறாய். அவன் பத்தரை மாத்துத் தங்கம்!''

ஸ்ரீதர் சிரித்தான். அந்தச் சிரிப்பின் நையாண்டியை உணர்ந்த நாதன், ''நீ ஏளனமாகச் சிரிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை'' என்றார்.

''ஒரு பத்தரை மாத்துத் தங்கம் கையில் இருக்கிற போது, பதினாலு காரட்கூட இல்லாத என்மீது உங்களுடைய கடாட்சம் விழுவானேன்?''

தம்மிடம் யாரும் இதுமாதிரி, இந்த ரீதியில் பேசியறியாத நாதன் ஒரு கணம் துவண்டு போனார். இருப்பினும், அவர் சாவதானமாக, ''இதற்குக் காரணம் என்ன என்று உனக்குப் புரியவில்லையானால் அது என் தப்பு அல்ல'' என்றார். பிறகு தொடர்ந்து, ''உன் அப்பா வரட்டும். எல்லாம் பேசிக்கொள்ளலாம்'' என்றார்.



''என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். தற்போது கல்யாணம் செய்துகொள்ளும்படியான நிலையில் நான் இல்லை. மகாலிங்கம் என்னிடம் என்னவெல்லாமோ எதிர்பார்க்கிறார். நளினி இண்டஸ்ட்ரீஸின் எதிர்காலம் என் கையில் இருப்பதாக அவர் நம்புகிறார். அந்த நம்பிக்கையை நான் என் கல்யாணத்தால் தகர்த்தெறிய விரும்பவில்லை.''

அடுத்த கணம் நாதன் எழுந்தார். என்ன பேசுவது என்று அவருக்குப் புரியவில்லை. ஸ்ரீதரும் மௌனமாக நின்றான்.

''குட் ஆப்டர்நூன், ஸார், நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்?'' அப்பு ஹாலில் குதித்தான். கையில் ஒரு பெரிய பொட்டணம் இருந்தது.

அப்புவைப் பார்த்தாரே தவிர, நாதனால் ஏதும் பேச முடியவில்லை.

''என்ன மாமா பார்க்கிறீர்கள்? இந்தப் பொட்டணம் என்னது, எங்கிருந்து வருகிறது என்று கேட்கிறீர்களா?'' என்று அப்பு கேட்டுவிட்டு, ஸ்ரீதரைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான்.

''அவர் ஒன்றும் கேட்கவில்லை: நீ உன் காரியத்தைப் பார்'' என்றான் ஸ்ரீதர்.

''அப்பு தன் காரியத்தை முடிக்கத்தான் வந்திருக்கிறான், ஸ்ரீதர்'' என்று தொடர்ந்த அப்பு, ''மாமா, இந்தப் பொட்டணத்தில் நாலைஞ்சு புடைவைகளும் ரவிக்கைகளும் இருக்கின்றன. ஒரு கொண்டைமணியும் ரிஸ்ட்வாட்சும் பாக்கெட்டில் இருக்கு'' என்றான்.

''டேய்!'' என்று கத்தினான் ஸ்ரீதர். பிறகு, ''உன் உடம்பில் எலும்புதான் இருக்கு. அதையும் இல்லாதபடி செய்துவிடுவேன்'' என்றான்.

"அப்புவின் எலும்பு மேலே ஆசை வைக்கிறவன் நீ ஒருவன்தான். ஊட்டியில் இருக்கிற நாய்கள்கூட, அப்புவின் எலும்பைக் கண்டு துரத்தியதில்லை."

"நான் வருகிறேன், ஸ்ரீதர். அப்பு, நான் புறப்படுகிறேனடா" என்றார் நாதன்.

"இருங்கள், மாமா, அப்புவும் கூட வருகிறான். இதெல்லாம் ஸ்ரீதர், வக்கில் கோதண்டராமன் பெண் வசந்தாவுக்குத் தன் ஆசையைத் தீர்த்துக்கொள்ளக் காணிக்கையாகக் கொடுத்த சாமான்கள்! அப்புதான் திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்தான். இந்தா ஸ்ரீதர், எல்லாவற்றையும் லாண்டரியில் போடு. வேறு யாராவது பெண் எதிர்ப்பட்டால் கொடுக்கலாம்."

நாதன் இரண்டடி நடந்தார்.

"டேய்!" என்று கறுவினான் ஸ்ரீதர்.

கடைசியாக வெளியேறுமுன் சிரித்துக்கொண்டே அப்பு, "ஸ்ரீதர், நளினியைப் பற்றி வசந்தா வீட்டில் சொன்னதையெல்லாம் மறந்துவிடு. உன்னைத் தன் கம்பெனியில் வேலை செய்யும் என்ஜினியராகத்தான் அவள் மதிக்கிறாள். அப்பு சொன்னதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, ஏதாவது தத்துபித்துன்னு அவளிடம் உளறி வைக்காதே! பளார்னு கன்னத்திலே விழும்!" என்றான்.

அடுத்த கணம் அப்பு நாதனைப் பிடிக்க ஓடினான்.

ஸ்ரீதருக்குத் தலை சுற்றியது.

## 36

## பாலம்மாவின் ஜோஸ்யம்

"கண்ணா, இந்த ரெயிலில் நான் எத்தனை தடவை பிரயாணம் செய்திருக்கிறேன், தெரியுமா?" என்று ஆரம்பித்தாள் ராதிகா.

"சென்னையிலிருந்து ஊட்டிக்குப் போகிறவர்கள் நீலகிரி எக்ஸ்பிரஸ்ஸில் போய்த்தானே ஆக வேண்டும்?" என்ற கண்ணன், எதிரில் ராதிகாவுக்குப் பக்கத்தில் இருந்த பாலம்மாவை ஒருதடவை பார்த்துவிட்டுக் கேட்டான்.

ராதிகாவும் பாலம்மாவைப் பார்த்தாள். டேராடூனில் குமார் அவளுக்கென்று அளித்த கம்பளிப் போர்வையை நாலாக மடித்து, பலகையின்மீது விரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"பாலம்மா, படுத்துக்கொள்ளப் போகிறாயா?"

"ஆமாம், ராதி."

"ஊட்டியில் ராத்திரி பத்து மணிக்குத் தூங்குகிறவளுக்கு எட்டரை மணிக்கே கண்ணைச் சுழற்றுகிறது!" என்று சிரித்தான் கண்ணன்.

"முடிந்தால் வீட்டில் ஏழரை மணிக்கே படுக்கையை விரிப்பாள். அப்படித் தூங்க நானும் அப்பாவும் எங்கே விடுகிறோம்?" என்றாள் ராதிகா.

"பாலம்மா, ஏன் இந்தக் கம்பளியை விடாப்பிடியாக விரித்துக்கொள்ளுகிறே தினமும்? குளிர்கூட இல்லையே!"

''ஊட்டிக் குளிர்லே பாலம்மா கிழிந்த புடைவை களைத்தான் நாலாகவோ எட்டாகாகவோ மடிச்சுப் படுத்துக் கொள்றது வழக்கம்'' என்ற ராதிகா, ''குமார் கொடுத் திருக்கிறானோ இல்லியோ, அதனாலே விஜயவாடா உஷ்ணமாக இருந்தாலும் கவலையில்லாமல் கம்பளியை உபயோகிக்கிறான்'' என்று சொல்லிச் சிரித்தாள்.

கண்ணனும் ராதிகாவும் மாறி மாறிப் பேசியதைக் கேட்டுப் பாலம்மா சிரித்தாளே தவிரப் பதில் ஏதும் சொல்லவில்லை. அன்றுதான் டில்லியிலிருந்து வந்து, ராதிகா - கண்ணனைச் சென்னையில் சந்தித்த ஜூலி ஜன்னலோரமாக உட்கார்ந்திருந்தாள். பாலம்மா பதில் சொல்லத் தெரியாமல் தவிக்கிறாள் என்று அவள் எண்ணினாள்.

''பாலம்மா. நீ உன்பாட்டுக்குத் தூங்கு. அவர்கள் கிடக்கிறார்கள்'' என்றாள்.

''பார்த்தாயா கண்ணா, ஜூலியை? பாலம்மாவைச் சொல்றபோது அவளுக்குச் சுரீர் என்கிறது. ஜூலி, பாலம்மா உன் அத்தையா, பாட்டியா, இல்லை மாமியா?'' என்றாள் ராதிகா.

ஜூலி சிரித்தாள்.

''எல்லாந்தான். இன்னும் முப்பது நாற்பது வருஷத்திலே நீயும் நானும் இந்தப் பாலம்மாவைப் போல ஆகிவிடுவோம். நமக்கு யார் கம்பளிப் போர்வை பரிசாகக் கொடுக்கப் போகிறார்களோ!''

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம், ஜூலி. நான் நாளைக்கே வாங்கி, ஏர்டைட்டாப் பாக் பண்ணி வைக்கிறேன். உன் சதாபிஷேகத்தன்னிக்கு உடைத்து எடுத்துக்கொள். கண்ணா, ஜூலி தன் சதாபிஷேகத்தின் போது எப்படி இருப்பாள்?''



ஜூலி வாய்விட்டுச் சிரிக்க, கண்ணன், ''இப்போ எப்படி இருக்கிறாளோ அப்படியேதான்'' என்றான்.

''இப்போதே அவளைக் கிழவியாக்கிவிட்டாயே!'' என்று கெக்கலித்தாள் ராதிகா.

''ஊஹூம். நான் உருவத்தைப்பற்றிச் சொல்ல வில்லை. மனசைப்பற்றிச் சொன்னேன். ஜூலியின் மனசும் அப்புவின் மனசும் ஒரே மாதிரி; கிழட்டுத்தனமே கிடையாது.''

''அப்படியானால் எனக்கு ஒரு யோசனை தோன்றது. ஏன் அப்புவுக்கும் ஜூலிக்கும் கல்யாணத்தை நடத்தக் கூடாது? அப்பு, அப்பர்லான்னு பேர் மாத்திக்கட்டும்.''

''இல்லாதுபோனால் ஜூலியை ஜூலா தேவியாக்கி விடலாம்.''

''எனக்கும் அப்புவுக்கும் நல்ல பொருத்தந்தான். நாளைக்குக் கல்யாணம் ஆகி எங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால், அப்பு குழந்தையைத் தூக்கிக்கொள்ளுவான். நான் அப்புவைத் தூக்கிக்கொள்ளுவேன்.''

ரெயில் பெட்டியே 'கலீர்' என்று சிரித்தது. பாலம்மா, தன்னுடைய நாலரை அடியை இரண்டரை அடியாகச் சுருக்கி மடக்கிக்கொண்டவள் எழுந்து உட்கார்ந்து சிரித்தாள். பிறகு, ''அவர்களுக்கு ஆகிறதோ இல்லையோ, உனக்கும் கண்ணனுக்கும் இன்னும் கொஞ்ச நாளிலே கல்யாணம் நடந்துவிடப் போகிறது, பாவம்! கண்ணன்தான் நன்னா மாட்டிக்கப் போறான்'' என்றாள்.

''மிஸ்டர் நாதன்தான் வில்லனாக இருக்கிறாரே!'' என்றாள் ஜூலி.

''வில்லனாவது கில்லனாவது! மாடு இளைச்சாலும் கொம்பு இளைக்கலைன்னுதான் நானும் இத்தனை நாள் அவரைப் பத்தி நினைச்சுண்டிருந்தேன். ஆனால் குமார்

கல்யாணம் ஒரு தடையும் இல்லாம நடந்ததைப் பார்த்தப்புறம் நாதன் பல்லுப்போன சிங்கமாயிட்டார்னு தோணிடுத்து.''

''என் அப்பாகிட்டே வேலை பார்க்கிற நீ... என் அப்பாவையே......'' என்று இழுத்தாள் ராதிகா.

''உன் அம்மா கல்யாணமாகி உன் அப்பா வீட்டுக்கு வந்த நாளிலேருந்து நானும் உங்க வீட்டிலே இருந்து வருகிறேன். சம்பளம் வாங்கினாலும், அத்தைக்கோ சித்திக்கோ இருக்கிற உரிமை எனக்கும் இருக்கு.''

''பலே, பலே! பாலம்மாகூட உரிமையைப்பத்திப் பேசுகிறாள், பார். நமது நாடு எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது!'' என்றான் கண்ணன்.

''பாலம்மா, உனக்கு மிஸ்டர் நாதனைத் தெரியாது. குமார் பிள்ளை; பெரிய வேலையில் இருக்கிறான். பிள்ளையை அடக்க முடியாதுன்னு விலகி நின்னுட்டார். ராதிகா அப்படி இல்லை.''

''அவருக்கு உள்ளூறக் கண்ணன்மேல்தான் கண். இது எனக்கு ஒருத்திக்குத்தான் தெரியும்.''

''எப்படி?'' என்று கேட்டாள் ஜூலி. கண்ணனும் ராதிகாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

''நீ எப்படித் தெரியும்னு கேட்டா, எனக்குச் சொல்லத் தெரியாது. அவர் தவிச்சுத் தவிச்சுப் புழுங்கிப் போகிறதை நான் தினம் தினம் பார்க்கிறேன். சாப்பிட உட்கார்ந்தால், கை சாதத்திலே விளையாடறதே தவிர, எதையும் ருசிச்சுச் சாப்பிடத் துடிக்கிறதில்லை. சிலசில சமயங்களில் தமக்குத் தாமே பேசிக்கொள்கிறார்.''

''இதனால் ராதிகா - கண்ணன் கல்யாணம் நடக்கும்னு சொல்லிவிட முடியுமா?''



''முடியும்னு நான் சொன்னேனா? அவருடைய போக்கு எப்படி எப்படியெல்லாம் மாறிண்டு வர்றது என்கிறதை நான் என்னுடைய தினசரி வேலையினூடே கவனிச்சுண்டு வறேன். நாதன் ஒரு ருத்ரமூர்த்தி. நா அசைந்தால் நாடு அசையணும்னு குதிக்கிறவர். அந்தக் காலத்தில் கற்பகம் அவரிடம் காபி கொண்டு போவதற்கும் நடுங்குவாள். அவர் ஏதாவது ஒரு கேள்வியை எதிர்பாராத விதமாகக் கேட்டால் வேர்த்து வெலவெலத்துப் போய் விடுவாள். ஏன், கண்ணனுக்கே தெரியுமே, நாதனுடைய கண்டிப்பும் கறாரும்.''

''அநுபவிச்சிருக்கான்'' என்ற ஜூலி, ''உம்..... அப்புறம்..... விஷயத்துக்கு வராம எங்கெங்கோ ஓடறே நீ.....'' என்றாள்.

''அப்பேர்ப்பட்ட நாதன் இப்போ சாந்தமூர்த்தியா இருக்கிறார். இனிமேல் நம் கோபத்தை யாரும் மதிக்க மாட்டார்கள்னு அவருக்கே தோண ஆரம்பிச்சுவிட்டது. என்னதான் பெண் தம்மேலே ஆசை வைச்சிருந்தாலும், தன்னுடைய வாழ்க்கை என்று வருகிறபோது தூக்கி எறிந்து போய்விடுவாள் என்ற பயம் உண்டாகிவிட்டது.''

''இதெல்லாம் உன் கற்பனை, பாலம்மா'' என்றாள் ராதிகா.

''கற்பனைன்னா கற்பனையாகவே இருக்கட்டும். நாமெல்லாம் டேராடூனுக்குப் புறப்படறதுக்கு முன்னாடி அவர் என்கிட்டே தனியா என்ன சொன்னார் தெரியுமா?''

''என்ன, என்ன?'' என்று தலையைப் பாலம்மா பக்கம் திருப்பினாள் ராதிகா.

கண்ணனும் ஆர்வமாகக் காத்திருந்தான்.

அவர் சொன்னார்: ''கண்ணன்கிட்டே, கண்ணா நீ போக வேண்டாம்டா என்று சொன்னால், சரி, மாமா என்று

அவன் ஒதுங்கிவிடுவான். ஆனால் என் பெண் அப்படி இல்லை. போய்த்தான் தீருவேன்னு ஒத்தைக் காலில் நிப்பாள். நீதான் ரெண்டு பேரையும் ரெண்டு குழந்தைகள் மாதிரி காப்பாத்தணும்.''

''வெரி குட், வெரி குட்'' என்றாள் ஜூலி.

''ராதிகாவின் மனசை நன்னாப் புரிஞ்சுண்டிருக்கிற நாதன் மனசிலே கொஞ்ச நாளா ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கு. அதுக்கும் கூடிய சீக்கிரத்தில் ஒரு முடிவு வந்துவிடும்.''

சொன்ன பாலம்மா மீண்டும் உடம்பைக் குறுக்கி வளைத்துப் படுத்துக்கொண்டாள். ஜூலி மேற்பலகையில் ஏறிப் படுத்துக்கொண்டாள்.

கண்ணனும் ராதிகாவும் அரக்கோணம் சந்திப்புக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

மேட்டுப்பாளையத்தை ரெயில் அடைந்ததும், அப்புவைத் தேடிக்கொண்டு சென்றான் கண்ணன். எதிர்பார்த்தபடி அப்பு வந்திருந்தான்.

''டேய், இங்கே எங்கேடா தேடுகிறாய்? நாங்கள் எல்லாரும் ரெண்டாவது வகுப்பில் வந்திருக்கிறோம். ராதிகாவும் பாலம்மாவும் ஜூலியும்.....'' கண்ணன் முடிக்கவில்லை.

''இந்த அப்பு உங்களை வரவேற்க மேட்டுப் பாளையம் வரவில்லை'' அப்புவின் கண்கள், முதல் வகுப்புப் பெட்டி ஒன்றைத் துழாவின.

''என்னடா உளர்றே?''

''உளறல் இல்லை. ஒரு வெரி இம்பார்ட்டன்ட் பர்ஸனுக்காக வந்திருக்கிறான் அப்பு. அதுவும் நாதன் அனுப்பி!''



''நாங்கள் இன்னிக்கு வரப்போவது உனக்குத் தெரியுமே!'' என்ற கண்ணன், ''யார் அவர்?'' என்று கேட்டான்.

''நீங்கள் வருவது தெரியும். நீ எல்லாரையும் அழைச்சுண்டு, ஊட்டிபோய்ச் சேர். எல்லா விஷயங்களும் தெரியும் மெதுவாக.'' சொன்னவன் யாரையோ கண்டு பிடித்துவிட்டவனைப்போல, கண்ணனை லட்சியம் செய்யாமல், முதல் வகுப்புப் பெட்டியருகில் ஓடிப் போனான்.

வேஷ்டியும் ஜிப்பாவுமாக ஒருவர் சிறு கைப் பெட்டியுடன் நிற்க, போர்ட்டர் அவருடைய மற்றப் பொருள்களை இறக்கிக்கொண்டிருந்தான். அவரை எங்கேயோ பார்த்த ஞாபகம் கண்ணனுக்கு உண்டாயிற்று. ஆனால் யார், என்ன பெயர் என்று ஒன்றும் புரியவில்லை. பரந்த முகம், கெட்டியான கண்ணாடி; தலையில் பெயருக்குக்கூட ரோமம் இல்லாதபடி அசாதாரணமான வழுக்கை. புருவங்களின் அடர்த்தியில் அங்கங்கே நரை. அவரருகில் அப்பு போய் நின்றான்.

திடீரென்று ராதிகா, பாலம்மா ஞாபகம் வரவே, அப்புவையும் அவரையும் விட்டுக் கண்ணன் திரும்பி விரைந்தான். இதற்குள் அவர்களே அவனை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

''ராதி, அப்பு வந்திருக்கிறான். ஆனால் நம்மைச் சந்திக்க அல்ல. அதோ பார், ரெண்டு பேரும் நடந்து போகிறார்கள்'' என்று ஆரம்பித்தான்.

''யார் அவர்?''

''அதுதான் தெரியவில்லை. ஆனால் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது.''

பாலம்மாவால் விரைவாக நடக்க முடியாததனால், எல்லாரும் மெதுவாகவே நடந்தார்கள்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் கண்ணனும் ராதிகாவும் ஆச்சரியம் அடைந்தார்கள். நாதனுடைய கார் நிற்க, அதன் பின்னால் நளினி இன்டஸ்ட்ரீஸ் ஜீப்பும் நின்றுகொண்டிருந்தது.

அப்பு காரருகில் நின்றுகொண்டிருந்தான்.

''கண்ணா, நீயும் ஜூலியும் ராதிகாவும் ஜீப்பில் வாருங்கள். நான் பாலம்மாவைக் காரில் ஏத்திக்கொண்டு போகிறேன்.''

பாலம்மா ஏறிட்டுப் பார்த்தாள். அடுத்த கணம், ''ராதி, அது யார்னு உனக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டாள்.

''ஊஹூம்'' என்று தலையை ஆட்டினாள் ராதிகா.

''அவர்தான் பரசுராமன்; ஸ்ரீதருடைய அப்பா!''

ஒரு நிமிஷம் தலைசுற்றியது ராதிகாவுக்கு. ''கண்ணா!'' என்று நா அவனையும் அறியாமல் அழைத்தது.

கண்ணன் ராதிகாவின் பக்கம் திரும்பினான்.

''அவர்தாம் ஸ்ரீதருடைய அப்பாவாம். பாலம்மா சொன்னாள்.''

தன்னுடைய ஞாபகத்திலிருந்து நழுவிப்போனது, மீண்டும் நினைவுக்கு வரவே, கண்ணன் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான். ''ஆமாம், ஆமாம். நான் சின்னப் பையனாக இருந்தபோது பார்த்தது. அப்பொ தலை நிறைய மயிர் இருந்தது. பான்ட்டும் கோட்டும் போட்டுக் கொண்டிருந்தார். ஆமாம், அவர் எதற்காக வருகிறார்? உன் அப்பா காரில் ஏறுகிறார்? கார் உனக்காகத்தான் வந்திருக்கிறது என்று அல்லவா நான் நினைச்சேன்?'' என்றான்.

''ஏன்டா கண்ணா, இன்னும் பேசிக்கொண்டே நிக்கறே? சரசரன்னு ஏறிக் கிளம்பு. பின்னாலே நாங்க வர்றோம்.'' என்றான் அப்பு.



பின்னாலே வருகிறோம் என்று அப்பு சொன்னாலும், கார் என்னவோ முதலில் கிளம்பி வேகமாகச் செல்ல ஆரம்பிததது.

தம் பிள்ளை ஸ்ரீதரைப் பார்க்கத்தான் பரசுராமன் வீட்டிக்கு வருகிறார் என்று கண்ணன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாலும், அவர் ஏன் நாதனுடைய காரில் செல்ல வேண்டும் என்ற கேள்வி மனத்தை அரித்தது. நாதன் தம் பெண்ணுக்காகக் காரை அனுப்பியிருந்தால், அப்பு ஏன் பாலம்மாவை மட்டும் அதில் ஏற்றிக்கொண்டு, இடம் இன்னும் இருந்தும் ராதிகாவை அவனுடன் ஜீப்பில் வரச்சொல்ல வேண்டும்? ஒரு வேளை நளினி இன்டஸ்ட்ரீஸ் ஜீப்பை ஸ்ரீதர், ஏற்பாடு செய்து, தகப்பனாருக்காக அனுப்பியிருப்பான். அப்பு நடுவில் குறுக்கிட்டு ஏதோ நாடகம் ஆடுகிறான்.

கண்ணனுடைய மனத்தில் இன்னொரு கேள்வியும் உதித்தது. ஸ்ரீதர் ஜீப் ஏற்பாடு செய்திருப்பான் என்றால், ஏன் மேட்டுப்பாளையத்துக்கு வந்து தந்தையைச் சந்திக்க வரவில்லை?

மௌனமாகச் சிந்தித்துக்கொண்டே வந்த கண்ணனிடம், ஜீப் கல்லாறு தாண்டியதும் ராதிகா சொன்னாள்: ''பாலம்மாவை எப்போது அப்பு காரில் ஏற்றிக் கொண்டானோ, அப்போதே பரசுராமன் நம்ப வீட்டில்தான் இறங்கப் போகிறார் என்று எனக்குத் தோன்றியது.''

''ஸ்ரீதருக்கு ஏதானும் உடம்புக்குச் சரியில்லாமல் ரெட் ஹவுஸில் படுத்திருக்கிறானோ என்னவோ?'' என்றான் கண்ணன்.

''அப்படி இருந்திருந்தால் அப்பு உடனே சொல்லி யிருப்பான். ஏதோ முக்கியமான காரணமாகத்தான்

பரசுராமன் வந்திருக்கிறார். ஒருவேளை மகாலிங்கம் அவரை வரவழைத்திருப்பாரோ என்னவோ?'' என்றாள் ராதிகா.

''ஜயா மாமிக்குப் பைத்தியம் பிடித்தால்தான் அப்படி நடக்க முடியும்'' என்றான் கண்ணன்.

''பெத்த பிள்ளையைப் பார்க்கத் தகப்பனார் வரக்கூடாதா?'' என்று கேட்டாள் ஜூலி.

''ரெண்டு பேருக்கும் அதிகம் தொடர்பே கிடையாது. தம்மை மதிக்காத பிள்ளையைப் பார்க்க அவர் வரணுமானால்.....'' கண்ணன் இழுத்தான்.

ராதிகா தொடர்ந்து, ''அப்பொ, என் அப்பாவுக்குத் தான் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். அவரே வரவழைத்திருப்பார்!'' என்றாள்.

# 37

# திடீர்த் திருப்பம்

**கா**ரில், பின் இருக்கையில் ஓர் ஓரத்தில் பாலம்மா ஒடுங்கி இருக்க, அவளுக்குப் பக்கத்தில் அப்பு அட்டகாசமாக உட்கார்ந்திருந்தான். இன்னொரு ஓரத்தில் பரசுராமன் அமர்ந்திருந்தார்.

கார் பவானி பாலத்தைத் தாண்டியதும், அப்பு மெதுவாக ஆரம்பித்தான்: ''நாதன் மேட்டுப்பாளையத்துக்கு வந்து உங்களை எதிர்கொண்டு அழைக்கவேணும்னு இருந்தார்.....''

''இதை நான் நம்பமாட்டேன். நாதன் தம் ஜன்மத்தில் யாரையும் எதிர்கொண்டு அழைப்பவர் அல்ல'' என்றார் பரசுராமன். பிறகு தொடர்ந்து, ''உன் பெயர் அப்பு என்கிறாயே. நீ எங்கே வேலை பார்க்கிறாய்?'' என்று கேட்டார்.

''அப்புவுக்கு ஒரு வேலையும் இல்லை. ஆனால் எல்லா வேலைகளும் அவனுக்கு உண்டு. அது கிடக்கட்டும், ஸார். நாதனைப்பத்தி இப்படிப் பேசியது வேறு யாராக இருந்தாலும் அப்பு எதிர்வாதம் செய்வான். ஆனால் உங்களிடம், அதுவும் டில்லியில் பெரிய உத்தியோகம் பார்த்தவரிடம் அப்பு எப்படிப் பேச முடியும்?''

''அப்போ பேசாம வா'' என்றார் பரசுராமன்.

அப்பு சிரித்தான். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசும் பரசுராமனிடம் புது வித்தையைத்தான் கையாள வேண்டும் என்று தோன்றியது.

''நீங்கள் அழகாப் பேசுகிறீர்கள். வழவழா கொழகொழாவே கிடையாது.''

''எனக்கு முகஸ்துதி பிடிக்காது.''

''இருக்கிறதைச் சொல்லுவது முகஸ்துதி இல்லை, ஸார்!'' என்ற அப்பு தொடர்ந்து, ''உங்கள் மனசு சரியாக இல்லை என்பது உங்கள் முகபாவனையிலிருந்தும் பேச்சிலிருந்தும் நன்றாகத் தெரிகிறது.''

''இருக்கட்டும்.''

''ஸ்ரீதர் ஸ்டேஷனுக்கு வரவில்லை என்ற ஆதங்கந்தானே?''

''அவனைப்பற்றி என்னிடம் பேசாதே.''

''நாதனுக்கு ஸ்ரீதர் என்றால் உயிர். இல்லாவிட்டால் தம் ஒரே பெண்ணை அவனுக்கு......''

பரசுராமன் இடைமறித்தார். ''நாதனுக்கு மூளை கிடையாது.....''

''ஸார், ஸார்.....''

''இல்லாவிட்டால் ஸ்ரீதருக்குப் பெண்ணைக் கொடுக்க முன்வருவாரா?''

''என்ன ஸார், நீங்களே இப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''ஏனென்றால் என் பிள்ளையைப்பத்தி எனக்கு நன்றாகத் தெரியும்.''

அப்பு ஒரு கணம் மௌனமானான். பிறகு மெதுவாக, ''ஸார், ஒன்று கேட்டால் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?'' என்று இழுத்தான்.

''முதலில் கேளு. அப்புறம் பலனை அநுபவி.''

''ஸ்ரீதருக்குப் பெண்ணைக் கொடுக்க முன்வரும் நாதன் முட்டாள் என்றால், சம்பந்தி ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ள நீங்கள்முன் வந்திருப்பது....''



''நான் அதற்காகத்தான் வந்திருக்கிறேன் என்று உனக்கு யார் சொன்னது?''

கல்லாறு தாண்டி கார், பரணியாற்றை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. 'ஜில்' லென்று வீசிய காற்றில் அப்பு தன்னை ஒரு கணம் மறந்தான்.

அப்பு வாயடைத்துப் போய்விட்டதாக நினைத்த பரசுராமனே தொடர்ந்தார்: ''நாதன் அவசரத் தந்தியும் கொடுத்து டேலிபோனிலும் பேசினார். அவர் பேசினதைக் கேட்டபோது, அடுத்து வருகிற சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமையானாலும் பரவாயில்லை என்று முகூர்த்தத்தை வைத்துக்கொள்ளுவார் போல் இருந்தது. அதனால்தான் ஓடோடி வந்தேன்.''

''குமார் இப்படி ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டதுதான் அவரைக் கிளப்பிவிட்டிருக்கிறது. எங்கே பெண்ணும்....'' அப்பு மேலே தொடரவில்லை.

''நாதன் அவசரப்பட்டால் எனக்கு என்ன? அந்தப் பெண் ஸ்ரீதருடன் பழகுகிறாளா?''

''ஊஹூம். ஸ்ரீதர்தான் வந்த புதுசில் நெருங்கிப் பழக முயன்றான். அப்புறம், அப்புறம்.....''

''அப்புறம் என்ன?''

''தன் முதலாளி பெண்ணுடன் பழக ஆரம்பிச்சிருக்கிறான்.''

''என் பிள்ளை பிள்ளைதான்!'' என்ற பரசுராமன், ''பள்ளிக்கூட நாட்களிலேயே, சமயத்துக்குத் தக்கபடி சிநேகிதர்களை மாத்துகிற வழக்கம் உண்டு அவனுக்கு'' என்றார்.

அப்பு சிரித்தான், தன் சிரிப்பால் அவர் முகம் மலரட்டுமே என்று.

ஆனால் பரசுராமனுடைய முகம் மலரவில்லை. மாறாக அதைப் பின்னும் கடுமையாக்கிக்கொண்டார்.

''நாதனுடைய பெண் ஸ்ரீதரிடம் பழகவில்லை என்றா சொல்லுகிறாய்?''

''ராதிகா கண்ணனுடன்தான் பழகுகிறாள்.''

''யார் அது கண்ணன்?''

''ஓ, கண்ணனைத் தெரியாதா? நாதனுடைய தங்கை பிள்ளை. நலினி இன்டஸ்ட்ரீஸில் நிர்வாக மானேஜராக இருக்கிறான்.''

''தங்கை பிள்ளை என்றால்.....''

''சீதாவின் பிள்ளைதான்.''

''அந்தக் காலத்தில் ஒரு பூகம்பத்தைக் கிளப்பினாளே, அவளா?'' என்ற பரசுராமன், ''அவள் தங்கமானவளாச்சே. இரண்டு மூன்று தடவை டில்லியில் அவளையும் மூத்த பிள்ளையையும் பலராமனையும் பார்த்திருக்கிறேன்.''

''கண்ணன் சீதாவின் பிள்ளைதான்.''

''அப்பா அம்மா மாதிரி இருந்தால் கண்ணன் ரொம்ப நல்லவனாக இருக்க வேண்டும்.''

''கண்ணன், ராதிகா, பாலம்மா எல்லாரும் குமாரின் கல்யாணத்துக்குப் போய்விட்டு இன்றைக்குத்தான் திரும்புகிறார்கள். பின்னால் ஜீப்பில் வந்துகொண்டிருக்கிறார்கள்.....''

''என்ன!'' என்று கேட்டவர் திடுக்கிட்டார். பிறகு, ''அவர்களுக்காகத்தான் அப்போ இந்தக் கார் வந்ததா?'' என்றார்.

''உங்களையும் ராதிகாவையும் ஏத்திவரத்தான் நாதன் அனுப்பினார். அப்புதான் அவர்களை ஜீப்பில் வரச் சொன்னான்.''



''நீ செய்தது சரியில்லை'' என்றவர், ''கல்யாணத்தைச் சீக்கிரத்தில் நடத்திவிடவேண்டும். அதற்கு நீயும் ஒத்தாசை செய்யணும்'' என்றார்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? முட்டாள் நாதனைச் சம்பந்தியாக ஏத்துக்கொள்ளப் போகிறீர்களா?''

''இப்போ, நீதான் முட்டாள் மாதிரி பேசுகிறாய். நான் கண்ணன் - ராதிகா கல்யாணத்தைப் பத்திப் பேசுகிறேன்.''

''அதுக்கு நாதன் ஒப்புக்கொள்ள மாட்டார்.''

''அவரை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும்.''

''அவர் கண் ஸ்ரீதர்மீது விழுந்திருக்கு.''

''அவருடைய பார்வை பாழுங்கிணற்றில் விழுந்திருக்கு.''

''நீங்கள் பேசுகிறதைப் பார்த்தால் நாதனுடைய ஏற்பாட்டை முறியடிக்க வந்திருக்கிறவர் மாதிரி அல்லவா தோணுகிறது?''

''இதைப் புரிந்துகொள்ள உனக்கு இத்தனை நேரமாகிவிட்டது'' என்றார் பரசுராமன். பிறகு, ''நான் ஊட்டிக்கு வந்து எத்தனையோ வருஷங்களாகின்றன. நல்ல ஓட்டலில் எனக்கு அறை வேணும்'' என்றார்.

''ஓட்டலில் அறையா?'' என்று கேட்ட அப்பு, ஆச்சரியத்தைப் பிரதிபலிக்காமலே, ''பெத்த பிள்ளை இருக்கிறான்; உறவுக்காரர் நாதன் இருக்கிறார்; அறை எதற்கு?'' என்றான்.

''முடியுமானால் பார்த்துக் கொடு. இல்லாவிட்டால் நானே தேடிப் பிடித்துக்கொள்ளுகிறேன்.''

அப்பு பரசுராமனை உட்லண்டஸ் ஓட்டலில் இறக்கிவிட்டுப் பாலம்மாவுடன் ரெட்ஹவுஸுக்கு வந்தபோது மணி பன்னிரண்டுக்குமேல் ஆகிவிட்டது.

நாதன் போர்ட்டிகோவில் காத்துக்கொண்டிருந்தார்.

''கண்ணனும் ராதிகாவும் வந்து சேர்ந்தார்களா?'' என்று கேட்டான்.

''ராதிகாவை இறக்கிவிட்டு ஜீப் போய்விட்டது. கண்ணன் சாயங்காலமாக வருகிறேன் என்றான். அது சரி, பரசுராமன் எங்கே?''

''உட்லண்ட்ஸில், ஏழாம் நம்பர் ரூம்.''

நாதன் ஒரு கணம் பேச்சற்று நின்றார். பிறகு நிதானமாக, ''அந்தக் காலத்திலும் ஓட்டலில்தான் இறங்குவார்'' என்றார்.

''ரொம்ப நல்லவர். ஆனால் வார்த்தைகளில் என்ன அழுத்தம் தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''எவ்வளவோ சொன்னார். ஆனால் உங்களை அவர் எடை போட்டுப் பேசியதுதான் அப்புவுக்குப் பிடிக்கவில்லை.''

''ஐ.ஸி.எஸ். கர்வம் என்றாரா?''

''அப்படிச் சொல்லியிருந்தால், எல்லாரும் சொல்லுகிறதுதான் என்று விட்டுத் தள்ளியிருப்பேன்.''

''என்னதான் சொன்னார்?''

''அப்புவுக்குப் பயமாயிருக்கு.''

''சரிதான், சொல்லுடா.''

''உங்களை முட்டாள் என்றார்.''

''ஏனாம்?''



''ஸ்ரீதரை மாப்பிள்ளையா வரிக்கிறவன் முட்டாள்தான் என்கிறார். உங்கள் பார்வை ஸ்ரீதர்மீது விழுந்திருக்கு என்றேன். அது பாழுங்கிணற்றில் விழுவதற்குச் சமம் என்கிறார்.''

''இந்தச் சம்பந்தம் அவருக்கே பிடிக்கவில்லையா?''

''ஆமாம்.''

''பின் எதற்காக வந்திருக்கிறார்?''

''பிடிக்கவில்லை என்பதைச் சொல்லுவதற்காகத்தான் இருக்கும்.''

''அதைப் போன் மூலமாகவோ கடித மூலமாகவோ சொல்லியிருக்கலாமே. அதுசரி, அவர் ராதிகாவைச் சந்தித்தாரா?''

''இல்லை. அப்பு அவரைக் காரில் அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்.''

''நீ ராதிகாவையும் காரில் அனுப்பியிருக்கணும். கண்ணனுடன் ஜீப்பில் எதற்காக அனுப்பி வைத்தாய்?''

''கண்ணனுடன் டேராடூன் வரைக்கும் போய் வந்தவள் ரெண்டு மணிநேரம் அவனுடன் ஜீப்பில் வந்தால் என்ன?''

''நான் அதற்குச் சொல்லவில்லை.''

''நீங்கள் எதற்காகச் சொன்னாலும் சரி.....'' மேலே அப்பு பேசி முடிப்பதற்குள், திடீரென்று டாக்ஸி ஒன்று வருவது தெரிந்தது.

அடுத்த கணம், ''ஸ்ரீதர்'' என்றான் அப்பு.

டாக்ஸியிலிருந்து ஸ்ரீதர் இறங்கினான். அவர்களை நோக்கி அவன் வந்த தோரணையே புதுமையாக இருந்தது. சாதாரணமாக நாதனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வருகிறவன் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு

வந்தான்.

''ஏண்டா அப்பு, என் அப்பாவை அழைத்துக் கொண்டு வரப்போனாயே. இங்கே ஏன் நிற்கிறாய்? நான் முக்கால் மணி நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்.''

''நீ காத்துக்கொண்டிருப்பாய் என்று தெரிந்திருந்தால் ஓர் ஆளிடம் தகவலைச் சொல்லி அனுப்பியிருப்பான் அப்பு.''

''சரி சரி, எங்கேடா அவர்?'' ஸ்ரீதர் நாதனையே பார்க்கவில்லை. அவருக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்ற பாவனை தெரிந்தது.

''அவர் இங்கே இல்லை'' என்றான் அப்பு.

''இங்கேயும் இல்லியா? அப்போ அவர் வரவே இல்லியா?''

''உட்லண்ட்ஸ் ஓட்டல். ரூம் நம்பர் ஸெவன்.''

அடுத்த கணம் ஸ்ரீதர் திரும்பினான். அவன் இரண்டடி எடுத்து வைப்பதற்குள் நாதன், ''ஸ்ரீதர்'' என்று அழைத்தார்.

ஸ்ரீதர் நின்று திரும்பிப் பார்த்தான்.

''ஒன்றுமில்லை; நீ போகலாம்'' என்றான் அப்பு. பிறகு அவன் காதில் விழும்படியாக, ''ஏன் மாமா, அவனைக் கூப்பிடுகிறீர்கள்? உங்களைத் துரும்பா மதிக்கிறவனை அழைப்பானேன்?'' என்றான்.

இன்னும் ஸ்ரீதர் அப்புவை விறைத்துப் பார்த்து நிற்கவே, ''நீ இப்போ கிளம்பு, ஸ்ரீதர். டாக்ஸிக்காரன் அவசரப்படுத்துவான்'' என்றான் அப்பு.

''வசந்தா சமாசாரம் எனக்குத் தெரிந்துவிட்டது என்று அவனுக்கு என்மீது கோபம். நியாயந்தானே?''

''அது நியாயந்தான். ஆனால் அதற்குப் பிறகும் நீங்கள் பிடிவாதமாக இருப்பதுதான் நியாயமாகப் படவில்லை.



பரசுராமன் சொல்லுவதுபோல உங்களுடைய பார்வை பாழுங் கிணற்றில் விழுகிறது இன்னும்.''

''அதுதான் கிடையாது. வசந்தாவுக்கு இந்தப் பயல் கொடுத்த பரிசுகளைப் பார்த்ததுமே 'சீ' என்று ஆகிவிட்டது.''

''அப்போ?''

''பரசுராமன், நான் சொல்லி வந்திருக்கிறார். அதற்காக நான் அவரை உபசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்; அவ்வளவுதான்.''

''பின் எதற்காகத் திரும்பிப் போகிற ஸ்ரீதரைக் கூப்பிட்டீர்கள்?''

''கடைசியாக ஒரு வார்த்தை சொல்ல.''

''என்ன வார்த்தை?''

''இந்த வீட்டு வாசற்படியை இனிமேல் மிதிக்காதே என்று.''

''இது தெரிஞ்சிருந்தா அப்பு அவனைப் போன்னு சொல்லியிருக்கமாட்டானே! இப்போதே போய் அழைத்து வரட்டுமா?''

''உள்ளே போய்ச் சாப்பிடு.''

''ஊஹூம். அப்பு உட்லண்ட்ஸுக்குப் போகிறான். பரசுராமன் சாப்பிட வரச் சொல்லியிருக்கிறார்.''

அடுத்த கணம், போர்ட்டிகோ அருகில், காலையிலேயே நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு அப்பு விரைந்தான்.

38

# ஜயா பயமுறுத்துகிறாள்

**த**ன் தந்தை நாதன் வீட்டிலும் இறங்கவில்லை, தன் இருப்பிடத்துக்கும் வரவில்லை, ஓர் ஓட்டலில் இறங்கியிருக்கிறார் என்பதை அறிந்ததிலிருந்து, ஸ்ரீதருடைய மனம் ஒரு நிலையில் நில்லாமல் தவித்தது. அவனுக்கும் தகப்பனாருக்குமிடையே நாலைந்து ஆண்டுகளாகப் போக்குவரத்து இல்லைதான். ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதில்லைதான். இருந்தாலும், இப்போது அவன் இருக்கும் ஊருக்கு அவன் பொருட்டு அவர் வந்திருக்கிறார். பின் ஏன் அவனுடைய வீட்டுக்கு வரவில்லை? ஒருவேளை அப்பு குறுக்கிட்டுத் தன் நாரதர் வேலையைக் காண்பித்து விட்டானோ?

உடலெல்லாம் கோபம் வியாபிக்க, அவன் ரெட் ஹவுஸிலிருந்து நடந்தான். உடனடியாகத் தகப்பனாரைப் பார்த்துப் பேசவேண்டியதைப் பேசித் தீர்த்து விடலாமா என்ற ஆத்திரம் உண்டாயிற்று. அடுத்த கணமே அவனுடைய சுடுசொற்களுக்கோ ஆத்திரத்துக்கோ தகப்பனார் பணிந்து போகிறவர் அல்ல என்ற உண்மை ஞாபகத்துக்கு வந்தது.

ஸ்ரீதர் சிகரெட்டை வாயில் வைத்துவிட்டு, அதைப் பற்ற வைக்கவும் நினைவு அற்றவனாய் நடந்தான். நாதன் கல்யாண விஷயமாகப் பேசினவுடன் ஏன் அவனுடைய தந்தை புறப்பட்டு வந்தார்? இத்தனை காலமாக இல்லாத அக்கறை எப்படித் திடீரென்று அவனிடம் உண்டாயிற்று?



பம்பாயில் அவன் வாழ்ந்த வாழ்க்கையையும், அவன் போன போக்கையும் கண்டித்துப் பல கடிதங்கள் எழுதி எழுதி அலுத்துப் போய், கடைசியில் தமக்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்று சொன்னவராயிற்றே அவர். அப்பேர்ப்பட்டவர் ஏன் அவனுடைய கல்யாணத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்?

அவனுடைய ஆச்சரியத்துக்கிடையில் அவனே எதிர்பாராத கேள்வி மனத்தில் எழுந்தது: நாதனுடைய சொத்து அவனுடைய அப்பாவையும் மயக்கிவிட்டதா?

ஸ்ரீதர் தன்னுள் சிந்தித்துக்கொண்டே சிகரெட்டைப் பற்ற வைத்தான். தான் மகாலிங்கத்தின் பங்களாவுக்கு வெகு அருகில் வந்துவிட்டதையும் திடீரென்று உணர்ந்தான். அடுத்த கணமே, 'நளினி பாக்டரியிலிருந்து திரும்பியிருப்பாள்; அவளிடம் யோசனை கேட்கலாம்' என்ற எண்ணம் உண்டாயிற்று.

ஹாலினுள் நுழைந்தபோது, சாய்வு நாற்காலியில் படுத்திருந்த ஜயா மாமி, ''யாரு, அப்புவாடா?'' என்று கேட்டாள், கண்ணைத் திறக்காமலே.

''நான்தான் ஸ்ரீதர்.''

''ஸ்ரீதரா, வா. பாக்டரிக்குப் போகலியா?''

''இனிமேத்தான் போகணும், மாமி. உங்களுக்கு எப்படி இருக்கு?''

''இப்போ ரொம்பத் தேவலை.'' சொன்னவள் நிரூபிப்பது போல, நிமிர்ந்து உட்கார்ந்தாள். பிறகு, ''எனக்கு எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் குணமாயிடுத்து தெரியுமா, ஸ்ரீதர்?'' என்று கேட்டாள்.

ஜயலட்சுமிக்குக் குருவாயூரப்பன்தான் பிரத்தியட்ச தெய்வம் என்பதை அறிந்திருந்த ஸ்ரீதர், ''எல்லாம் குருவாயூர் கிருஷ்ணன் கடாட்சந்தான்! நாங்கள் எல்லாரும்

செய்த புண்ணியமுங்கூட!'' என்றான். ஜயலட்சுமியின் மனத்துக்குப் பால் அபிஷேகமும் தேன் அபிஷேகமும் செய்து குளிரப் பண்ணினால்தானே நாளைக்கு அவனுக்கும் நளினிக்கும் குறுக்கே வராமல் இருப்பாள்?

''குருவாயூரப்பனுடைய கிருபா கடாட்சம் மட்டுமல்ல, ஸ்ரீதர்.''

''உங்களுடைய மனோதைரியமும் திடமான நம்பிக்கையும்.''

''ஊஹூம்'' என்ற ஜயா ஸ்ரீதரைப் பார்த்தாள்.

ஸ்ரீதருக்குப் புரியவில்லை. அவள் படுத்திருந்த மூன்று நாட்கள் அவன் எவ்வளவோ சுச்ருஷைகள் செய்திருக்கிறான். அந்தப் பணிவிடைகள்தாம் அவளை இவ்வளவு சீக்கிரத்தில் குணப்படுத்திவிட்டன என்று ஜயா மாமி சொல்லப்போகிறாள் என்று எதிர்பார்த்தான்.

அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

''என்மேலே உசிரை வைச்சுச் செய்த சுச்ருஷைதான்!''

''நான் அப்படி என்ன செய்துவிட்டேன்?''

''நான் கண்ணை மூடிக்கொண்டு கிடந்தபோது, நீ கால்மாட்டிலும் தலைமாட்டிலுமாய் உட்கார்ந்திருந்தாய்னு நளினி சொன்னா. ஆனா, ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காம, 'என் ஜயா மாமியின் உசிருக்கு நான் கவசமா இருக்கேன்'னு அப்பு செய்த சேவை இருக்கே, அதை என்னாலே மறக்கவே முடியாது. ஸ்ரீதர், அப்பு மாதிரி பிள்ளைகளெல்லாம் அவதாரங்கள்! நீ என்ன சொல்றே?''

ஏற்கனவே, மனத்தில் புகைந்துகொண்டிருந்த கோபத்துக்கு, ஜயலட்சுமியின் பேச்சு நெய் வார்த்தது. ஸ்ரீதர் செய்தது ஒன்றும் அவளுக்குப் பொருட்டாகப் படவில்லை. கேவலம் அப்பு, குடுகுடுவென்று அங்குமிங்குமாய் ஓடி, ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு விதமாகப்பேசி,



கிடைக்கிறதைச் சாப்பிட்டுவிட்டு, நல்லவனாய் நடித்து, இப்போது நல்ல பெயரையும் சம்பாதித்துவிட்டான்!

''என்ன யோசிக்கிறே?''

''ஒன்றுமில்லை; அப்பு ஓர் அவதாரந்தான்.''

''டாக்டர் சொல்லிவிட்டார். இன்னும் ஒரு வாரத்தில் நான் பழையபடி நடமாடலாமாம்.''

''ரொம்ப சந்தோஷம்!'' உணர்ச்சியற்ற குரலில் சொன்னான் ஸ்ரீதர். இனிமேல் ஜயா மாமியை முகஸ்துதி செய்தாலும் பிரயோசனம் இருக்காது என்ற எண்ணங்கூட உண்டாயிற்று.

''நடமாட ஆரம்பிச்சதும், முதற் காரியமாக என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?''

''தெரியாது.''

''மாமாவையும் அப்புவையும் கண்ணனையும் அழைத்துக்கொண்டு நங்கவரத்துக்குப் போகப்போகிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் நளினியின் கல்யாணத்தை நடத்திவிடப் போகிறேன்.''

ஸ்ரீதர் அசைவற்று உட்கார்ந்தான். பிறகு மெதுவாக எழுந்தான். ''இப்போ நளினி எங்கே?'' என்ற கேள்வி தானாக வெளிவந்தது.

''இன்னும் சாப்பாட்டுக்கே வரவில்லை போலிருக்கு. உள்ளே போய்க் கேளு.''

ஸ்ரீதர் இரண்டடி வைத்தான்.

''ஸ்ரீதர்!'' என்ற குரல் அவனை நிறுத்தியது.

''என்ன மாமி?''

''உனக்கு ஒரு சமாசாரம் தெரியுமா?''

''என்ன சமாசாரம்?''

''வசந்தாவின் அப்பா வக்கில் கோதண்டராமன், நளினியின் அப்பாவைப் பார்க்க இன்னிக்குக் கார்த்தாலே வந்திருந்தார். ஒரு குரல் அழுதுவிட்டு, 'நீங்கள்தாம் என் குடும்ப மானத்தைக் காப்பாத்தி என் பெண்ணுக்கு வாழ்வு தரணும்'னு காலில் விழுந்தார்.''

ஸ்ரீதர் பதில் சொல்ல முடியாமல் திணறினான். பிறகு சமாளித்துக்கொண்டு, ''எல்லாம் அப்புவின் வேலையாக இருக்கும்'' என்றான்.

''அது என்னமோ எனக்குத் தெரியாது. தம் பெண் உன்னுடன் பழகினது ஊட்டி பூராத் தெரியும், வக்கீல்களும் வக்கில் குமாஸ்தாக்களும் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு உலுக்குகிறார்கள்னு கோதண்டராமன் சொன்னார்.''

''ஒரு பெண்ணுடன் சகஜமா ரெண்டு வார்த்தை பேசினாலே கதை கட்டிவிடுகிறார்கள், நம்ப ஊரிலே.''

''வசந்தாவுடன் ரெண்டு வார்த்தை பேசியதோடு நிக்கவில்லையாமே! எனக்குத் தெரியாது; மற்றவர்கள் சொல்றதுதான்.''

''எல்லாம் அப்புவின் குள்ளநரித்தனம்!''

''பாவம்! அப்புவைக் குறை சொல்லாதே. அவன் எது செய்தாலும் நல்லதுக்குத்தான் இருக்கும். வசந்தா கல்யாணத்துக்கு எல்லா உதவியும் நாமே செய்யணும்னு நான் நளினி அப்பாகிட்டே சொன்னேன். அவரும் சரின்னார். இப்போ அந்தப் பெண்ணை வாழ வைக்கிறது, உன் கையில் இருக்கிறது.''

ஸ்ரீதர் அயர்ந்து போனான். அவனுக்குத் தலை சுற்றியது.

''நீங்க சொல்றது எனக்கு ஒன்றும் புரியவில்லை.''

''வசந்தா உன்னுடன் பழகிவிட்டாளாம். கல்யாணம் பண்ணிக்கொண்டால் உன்னைத்தான் பண்ணிக்கொள்ளு வாளாம்.''



''அவள் ஒரு முட்டாள்.''

''முட்டாளோ என்னவோ, அவள் பிடிவாதம் செய்கிறாள். நீயும் அவளுமாக ஏழெட்டு நாள் முன்னாலே முதுமலையில் போட்டோ எடுத்துக்கொண்டீர்களாமே! அந்தப் போட்டோவையே பார்த்துப் பார்த்துக் கண்ணீர் வடிக்கிறாளாம்.''

''இதெல்லாம் சுத்தப் பொய்! நான் அப்புவை மரத்தில் கட்டி அடிக்கப் போகிறேன்.''

''அப்பு உடம்புமேலே ஒரு விரல் பட்டாலும் ஊட்டியே திரண்டு வரும், ஜாக்கிரதை! நீ ஏன் வசந்தாவைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளக் கூடாது?''

''என்ன மாமி, நீங்களும் விளையாடுகிறீர்களா?'' - இப்போது ஸ்ரீதருக்கு, ஜயலட்சுமிக்கு ஏன் சுச்ருஷை செய்து பிழைக்க வைத்தோம் என்ற ஆத்திரம் உண்டாயிற்று.

''நான் விளையாடவில்லை, ஸ்ரீதர். நீ கைநிறையச் சம்பளம் வாங்குகிறவன். நல்ல அந்தஸ்து இருக்கு. பெரிய படிப்பு எல்லாம் படிச்சிருக்கே.''

''நீங்க சொல்ற அந்தஸ்துக்கு ஏற்ற இடமா, வசந்தா?''

''இல்லை; ஆனா, உன் அந்தஸ்தை விட்டுக் கொடுத்துத்தானே அவள்கிட்டே பழகினே? உன் இஷ்டத்துக்குப் பழக ஓர் அந்தஸ்து, வாழ்க்கையிலே பெண்டாட்டியா வர இன்னொரு அந்தஸ்துன்னு நீயே மாத்திக்கொள்ளலாமா?''

ஸ்ரீதருக்கு ஆத்திரம் தலைக்கேறியது.

''மாமி, நளினியின் அப்பா எனக்கு யஜமானர் என்கிறதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதற்காக என் சொந்த வாழ்க்கையை அவரோ அல்லது அவருடைய மனைவியான நீங்களோ சொல்றபடி மாத்திக்கொள்ள

முடியாது. இதைத் தயவுசெய்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.''

அடுத்த கணம் மகாலிங்கமும் நளினியும் ஹாலினுள் பிரவேசித்தார்கள். கண் சிவக்க, உதடு துடிக்க நின்ற ஸ்ரீதரைப் பார்த்தவாறே நளினி, ''என்னம்மா, எதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளச் சொல்லுகிறார் ஸ்ரீதர்?'' என்று கேட்டாள்.

''என்ன விஷயம், மிஸ்டர் ஸ்ரீதர்?'' என்று கேட்டார் மகாலிங்கம்.

ஸ்ரீதர் பேச ஆரம்பிப்பதற்குள் ஜயா, ''இன்னிக்குக் கார்த்தாலே கோதண்டராமன் வந்திருந்த சமாசாரத்தை ஸ்ரீதரிடம் சொன்னேன், அவ்வளவுதான்'' என்றாள்.

''உனக்கு எப்பவுமே, எல்லாத்துக்குமே அவசரம், அம்மா! ஸ்ரீதரரே மனம் குழம்பிக் கிடக்கிறார்'' என்றாள் நளினி. பிறகு தொடர்ந்து, ''கோதண்டராமன் வந்து ஒரு குரல் அழுதுவிட்டால், அவர் நினைக்கிறபடி கல்யாணம் நடந்துவிடுமா?'' என்றாள்.

''தாங்க்யூ, மிஸ் நளினி!'' என்றான் ஸ்ரீதர். தன்மீது அவளுக்கு அன்பும் அபிமானமும் குறையவில்லை என்ற திருப்தியும், இதுவே அவர்களுடைய கல்யாணத்துக்கு ஆதாரமாக இருக்கும் என்ற நம்பிக்கையும் அவன் மனத்தில் உண்டாயின.

ஆனால் நளினி, ஸ்ரீதருடைய நன்றி வார்த்தைகள் தன் காதில் விழாததுபோல, ''இனிமேல் பிறத்தியார் காரியங்களில் நீ தலையிடாதே, அம்மா. கெட்ட பெயர்தான் மிஞ்சும். கோதண்டராமனுடைய பெண் மிஸ்டர் ஸ்ரீதரைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன்னு ஒத்தைக் காலில் நின்னா, அதைப்பத்திக் கவலைப்படவோ, பேசித் தீர்க்கவோ, கோதண்டராமன் இருக்கிறார். ஸ்ரீதர் இருக்கிறார்.



ஏன், இன்னிக்கு ஸ்ரீதருடைய தகப்பனாரும் இருக்கிறார். நீங்கள் என்ன அப்பா சொல்லுகிறீர்கள்?'' - நளினி மகாலிங்கம் பக்கம் பார்த்துக் கேட்டாள்.

சோபாவில் உட்கார்ந்து, ஒரு தினசரியில் கண்ணைச் செலுத்திக்கொண்டிருந்த மகாலிங்கம் தலை நிமிராமலே, ''நீதான் எல்லாம் சொல்லியாகிவிட்டதே! நான் சொல்லுவதற்கு என்ன இருக்கு?'' என்றார். பிறகு, ''எனக்குப் பசிக்கிறது'' என்றார்.

''எனக்கும் பசிக்கிறது'' என்ற நளினி, ''ஸ்ரீதர், நீங்கள் சாப்பிட்டாகிவிட்டதா?'' என்று கேட்டாள்.

''இன்னும் இல்லை.''

''அப்போ வாருங்கள். எல்லாருமாகச் சேர்ந்து சாப்பிடலாம்.''

''கண்ணனையும் வரச்சொல்லியிருக்கிறேன், நளினி, மறந்துவிட்டாயா?'' என்றார் மகாலிங்கம்.

''மணி ரெண்டாகப் போகிறது'' என்றாள் நளினி.

''கண்ணன் வரட்டும்.''

அவர் சொல்லி முடிக்கவும் ஜீப் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

''நளினி, உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசலாம்னுதான் வந்தேன். வந்த இடத்தில்....'' ஸ்ரீதர் இழுத்தான்.

''அம்மாவிடம் மாட்டிக்கொண்டு விட்டீர்களாக்கும்! என்ன விஷயம்? கம்பெனி விஷயமா? அப்படியானால் கம்பெனியிலேயே விவாதிக்கலாம். இப்போ எல்லாரும் சந்தோஷமாச் சாப்பிடுவோம்.''

''கம்பெனி விஷயம் இல்லை. சொந்த விஷயம்.''

''வசந்தா ப்ராப்ளமா?'' - கேட்டுவிட்டு நளினி சிரித்தாள்.

அவள் கேட்ட கேள்வியைவிடச் சிரித்த சிரிப்புத்தான் ஆத்திரத்தை மூட்டியது.

''வசந்தா ஒரு துரும்பு. அவள் ஒரு ப்ராப்ளமும் இல்லை.'' மேலே அவன் தொடருவதற்குள் கண்ணன் வந்துவிடவே, ''அப்புறம் சொல்லுகிறேன், நளினி'' என்றான் ஸ்ரீதர்.

''ஹலோ, ஸ்ரீதர்'' என்று புன்முறுவல் பூத்த கண்ணன், ''ரொம்ப வருஷத்துக்கு அப்புறம் இன்னிக்குத்தான் உன் அப்பாவைப் பார்த்தேன். அவர்தாம் உன் அப்பா என்ற விஷயமே, அப்பு சொன்னபின்புதான் தெரிந்தது. ரொம்ப மாறியிருக்கிறார்'' என்று முடித்தான்.

''கண்ணா, நீயும் நானும் சாயங்காலம் அவரைச் சந்திக்கப் போகிறோம்'' என்றார் மகாலிங்கம். பிறகு பெண்ணைப் பார்த்து, ''நளினி, நாளைக்கு அவருக்கு நம் வீட்டில் ஒரு விருந்து வைக்க வேண்டும்'' என்றார்.

''ஓ.கே! நான் எல்லாம் ஏற்பாடு பண்றேன்'' என்றாள் நளினி.

# 39

# நவரத்தினம்

**சா**ப்பிட்டவுடன் படுத்த ராதிகா கண்விழித்த போது மணி ஐந்தரை. ஊட்டி லேசாக இருட்டஆரம்பித்துவிட்டது. இதுமாதிரி இன்னும் பத்து அல்லது பதினைந்து நாட்கள் மத்தியானங்களில் தூங்கினால்தான் தன் பிரயாணக் களைப்புத் தீரும் என்று அவள் நினைத்தாள்.

படுக்கையிலிருந்து எழுந்த அவள் நேரே குளியலறைக்குச் சென்றாள். சூடான நீர் வரும் குழாயைத் திறப்பதற்குப் பதிலாகக் கை, சாதாரணக் குழாயைத் திறந்துவிட்டது. நீர் பட்டதுமே, கை தானாகப் பின்வாங்கி, குழாயை அவசர அவசரமாக மூடியது. மீண்டும் குழாயைத் திறந்தாள். இதமான வெப்பத்துடன் நீர் கொட்டியது. இரு கைகளாலும் அள்ளி அள்ளி முகத்தில்கொட்டி அலம்பினாள். இரண்டு மூன்று தடவை கொப்புளித்து, வெறும் விரல்களாலேயே பற்களைத் தேய்த்தாள்.

காபி, டிபன் சாப்பிட்ட பின், பற்பசை போட்டு இன்னொரு தடவை தேய்க்க வேண்டும் என்ற தீர்மானம் எழுந்தது.

துவாலையினால் முகத்தைத் துடைத்துக்கொண்டே அவள் சமையலறைக்கு வந்தாள். ஹாலில் அப்பா யாருடனோ பேசிக்கொண்டிருந்தார். அவளுக்குப் பசித்த பசியில் காது பேச்சில் ஓடவில்லை.

''பாலம்மா!''

''வா ராதி, இப்பத்தான் எழுந்தியா?''

''ஆமா, என்ன டிபன்?''

''உப்புமா.''

''சீ! உப்புமாவா? எனக்கு ரொம்பப் பசிக்கிறது. இட்லி, தோசைன்னு ஏதாவது செய்யப்படாது?''

''என்ன ராதி, ஒண்ணும் தெரியாதவ மாதிரி பேசறே. இன்னிக்குத்தானே நாமெல்லாம் வந்து சேர்ந்திருக்கிறோம்? இட்லிக்கும் தோசைக்கும் ஏது மாவு? யார் அரைச்சு வைச்சிருக்கிறார்கள்? உப்புமா நல்ல சூடா இருக்கு. முந்திரிப்பருப்புப் போட்டிருக்கேன்.''

''சரி சரி, கொடு.''

அவள் பாதி சாப்பிடுகையில் பாலம்மா, ''கூடத்திலே யார் பேசிக்கொண்டிருக்கிறார்கள் தெரியுமா, ராதி?'' என்று கேட்டாள்.

''உஹூம். யார்னு தெரிஞ்சுக்கணும்னு எனக்குத் தோணலை, இருந்த பசியில்!''

''ஸ்ரீதருடைய அப்பாதான். அப்பப்பா, மனுஷன் எப்படிப் பேசறான் தெரியுமா? வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுதான். முகத்தில் அடிக்கிறாப் போலப் பேசினாலும், பேச்சு சத்தியமான பேச்சுன்னு நன்னாத் தெரியறது.''

''இப்போ அப்பாகிட்டே அப்படித்தான் பேசிண்டிருக்கிறாரா?''

''இப்போ எப்படிப் பேசிவிட்டுப் போகட்டும். இப்போ எனக்கு இன்னும் ஒரு சட்டுவம் உப்புமா போடு. தொட்டுக்கறதுக்கு ஆவக்காயும் போடு. உப்புமாவின் காரத்தை நீ போட்டிருக்கிற நெய் சாக அடித்துவிட்டது.''

பாலம்மா உப்புமாவைப் பரிமாறுகையில், ''அவர் எதற்கு ஊட்டிக்கு வந்திருக்கிறார் தெரியுமா?'' என்று கேட்டாள்.



''எனக்கு எப்படித் தெரியும்? பிள்ளையைப் பார்க்க வந்திருப்பார். ஆவக்காய் எங்கே?''

''இதோ - அவராக ஒன்றும் வரவில்லை. உன் அப்பாவே வரவழைத்திருக்கிறார்.''

''உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்ட ராதிகா, ஆவக்காயைச் சுற்றியிருக்கும் விழுதில் ஒரு விரல் வைத்து, பிறகு நாக்கில் போட்டுக்கொண்டாள். வாய் தானாக, ''ரொம்பப் பிரமாதமா இருக்கு!'' என்றது.

''அப்புவோடு அவர் பேசின பேச்சிலிருந்து தெரிந்தது. உன் அப்பா வரவழைக்க வேண்டுமானால், எதற்காக இருக்கும்னு நீயே ஊகித்துக்கொள்.''

அலட்சியமாக ராதிகா, ''இதிலே ஊகிக்கிறதுக்கு என்ன இருக்கு? ஸ்ரீதர் கழுத்திலே என்னைக் கட்டறதுன்னு நாம இங்கே இல்லாதபோது, அப்பா மூளையிலே ஓர் எண்ணம் உதிச்சிருக்கும்'' என்றாள்.

''அதுவேதான்'' என்ற பாலம்மா காபியை அவள்முன் வைத்தாள். பிறகு, ''ஆனா, இதிலே ஓர் ஆச்சரியம் என்ன தெரியுமா? உன்னைத் தம் பிள்ளைக்குக் கொடுக்க முன்வந்தது முட்டாள்தனம்னு அவர் அபிப்பிராயப் படுகிறார்'' என்றாள்.

''அப்படியானால் ஏன் ஓடோடி ஊட்டிக்கு வரணுமாம்?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

காபியைக் குடித்துவிட்டு, ராதிகா எழுந்தாள். ஸ்ரீதருக்கும் தனக்கும் கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று அப்பா செய்துள்ள முடிவோ, அது சம்பந்தமாக வந்திருக்கும் பரசுராமனுடைய வருகையோ அவளுடைய மனத்தில் ஒட்டவில்லை. தன்னை மீறி ஏதும் நடந்துவிடாது என்ற தைரியம் அவள் மனத்தில் மேலோங்கி நின்றது.

அவள் ஹாலை நோக்கி நடந்தாள். ஹாலுக்குப் பக்கத்து அறைக்கு வந்ததும், நாதனும் பரசுராமனும் என்னதான் பேசிக்கொள்ளுகிறார்கள் என்று முதலில் தெரிந்துகொள்ளலாம் என்று நின்றாள்.

''உங்களை அநாவசியமாக வரவழைத்துவிட்டேன், பரசுராமன்'' என்றார் நாதன்; ''நீங்கள் இப்ப சொன்னதை எல்லாம் ஒரு கடிதத்தில் எழுதியிருக்கலாம். இல்லா விட்டால் போனிலே சொல்லியிருக்கலாம்.''

''நீங்கள் இங்கே என் பிள்ளையை நேருக்கு நேரே பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். அவனைப்பற்றி ஓர் அபிப்பிராயமும் உண்டாகிவிட்டது. மேலே ஏதும் விபரீதமாகப் போகாமலிருக்க வேண்டுமானால் நானே நேரில் வந்துதான் ஆகவேண்டும் என்று தோணித்து.''

''நான் ஸ்ரீதரைப்பற்றி என்ன என்னவோ நினைச்சுண்டிருந்தேன்.''

''மற்றவர்கள் அப்படியெல்லாம் நினைக்க வேண்டும் என்பதற்காகவே அவன் நடந்துகொள்ளுவான். மூணாம் மனுஷன்கிட்டே தன் பிள்ளையைப்பற்றிக் குறையாகப் பேசப்படாது. ஆனால் நீங்கள் கற்பகத்தின் புருஷர்; என் தங்கையின் புருஷர். உங்கள்கிட்டே சொல்றதுக்கென்ன? ஸ்ரீதர் சொத்தை; அவன் என் பிள்ளைன்னு சொல்றதுக்குக் கூட அவமானமாக இருக்கு.''

''படிப்பில் கெட்டிக்காரன்னு பெயர் வாங்கியிருக்கிறான்.''

''அதை நான் இல்லைன்னு சொல்லலை. ரொம்ப பிரில்லியண்டுதான். ஆனா அதுக்கேத்த நல்ல குணம் வேண்டாம்? அதுதான் இல்லை. தான் கற்ற வித்தையைத் துஷ்பிரயோகம் செய்யவும் தயங்காத குணம்.''

''திருந்தாமல் போய்விடுவானா?''



''எனக்கு நம்பிக்கை இல்லை. கொஞ்ச நாள் டில்லியில் வேலை பார்த்தான். வீட்டோடுதான் இருந்தான். அப்புறம் வேறு வேலை கிடைச்சிருக்குன்னு பம்பாய்க்குப் போனான். அவன் போய்ப் பத்து நாட்களுக்குப் பிறகு, அவனுக்குக் கடன் கொடுத்தவர்கள் ஒவ்வொருவராய் வர ஆரம்பித்தார்கள். ஆயிரம் ரூபாய் டில்லியில் ஒருத்தனுக்குப் போதவில்லை!''

''ஐ ஆம் வெரி ஸாரி.''

''நோ, நோ. நான் அவன் கடனை அடைச்சாத்தானே வருத்தப்படணும்? எனக்கும் ஸ்ரீதருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லைன்னு டில்லிப் பத்திரிகையிலும் பம்பாய்ப் பத்திரிகையிலும் விளம்பரம் கொடுத்தேன். அந்தச் செலவுதான் எனக்கு.''

''ஸ்ரீதர் இப்படியே எத்தனை நாள் இருப்பான்? ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் எல்லாரையும் போலச் சரியாகிவிடுவான்.''

பரசுராமன் கலகலவென்று சிரித்தார். பிறகு, ''உங்க வாய் முகூர்த்தம் பலிக்கட்டும். ஆனா அவன் நல்லவனா மாறும்போது கண்டிப்பாக நான் உசிரோடு இருக்க மாட்டேன். நீங்கள் இருந்தீர்கள் என்றால் ராதிகாவைக் கொடுங்கள். ஆனா அப்போது ஸ்ரீதருக்கு ஐம்பது வயசோ, அறுபது வயசோ ஆகியிருக்கும்.''

நாதன் பதில் சொல்லவில்லை. கண்கள் மூடின. பிறகு நிதானமான குரலில், ''மேல்நாடுகளில் இருந்தவர்கள் சிலர் தாய்நாடு திரும்பியது கண்மூடித்தனமான காரியங்களில் இறங்கிக் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீதரும் அதைப் போலத்தான்'' என்று இழுத்தார்.

''அவன் இங்கிலாந்துக்குப் போறதுக்கு முன்னாலேயே டில்லியில் அட்டகாசமாக அலைந்தான். விடுங்கள், வேறு பேச்சு ஏதாவது பேசுவோம்.''

நாதன் விழித்தார். வேறு என்ன பேசுவது? பரசுராமன் இத்தனை நேரம் பேசியபின் எல்லாமே சூனியமாகப் பட்டது. பரசுராமனே மீண்டும் ஆரம்பித்தார்: ''நீங்கள் ஏன் குமார் கல்யாணத்துக்குப் போகவில்லை?''

''உங்கள் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்றதுன்னே தெரியவில்லை.''

''ஏன்? அவன் ஒரு பெண்ணை விரும்பினான். எப்போதுமே அடங்கி நடக்கிற பிள்ளை. அதனால் தைரியமாகச் சொல்லி நடத்திக்கொள்ள முடியாதுன்னு அசட்டுத் தைரியத்தில் நிச்சயம் செய்துவிட்டு உங்களுக்குத் தெரியப்படுத்தினான். போயிருக்கவேண்டாமா?''

''என்னமோ போகவில்லை.''

''ஏன் அலுத்துக்கொள்ளுகிறீர்கள், நாதன்? பெண் நம்ப ஊர்ப் பெண் இல்லை, நம்ப ஜாதிப் பெண் இல்லை என்ற கோபமா? நல்ல குடும்பத்தில் பிறந்த பெண் எந்த ஊரானால் என்ன? ஐ.ஸி.எஸ். பாஸ் பண்ணின நீங்களே பத்தாம் பசலியாக இருந்தால்...''

''நோ, நோ. பத்தாம் பசலியே இல்லை நான். என் பிள்ளை ஒரு வடக்கத்திக்காரப் பெண்ணை மனைவியாகத் தேர்ந்தெடுத்துவிட்டானே என்ற துக்கமோ ஏமாற்றமோ எனக்குக் கிடையவே கிடையாது. பெற்ற தகப்பனாரிடங் கூட அவனுக்கு நம்பிக்கை இல்லாமற் போய்விட்டதே என்ற துக்கந்தான்.''

''அதுக்குக் காரணம் நீங்கள்தாம். உங்களுடைய கண்டிப்பும் கறாருந்தாம்.''

''இருக்கலாம்.''

''அவன் தன் மனைவியுடன் உங்களைப் பார்த்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள வருகிறானாமே?''

''ஆமாம். உங்களுக்கு யார் சொன்னார்கள்?''



''யார் சொல்லுவா? அப்புதான்!''

''ஓ அப்புவா? அவன் எல்லாம் சொல்லியிருப்பானே!''

''நிறையப் பேசறான்; நன்னாவும் பேசறான். நானே என் பிள்ளை ஸ்ரீதரைப் புறக்கணித்துவிட்டேன்னு அவனுக்குப் புரிஞ்சபோது என்ன சொன்னான் தெரியுமா?'' 'மாமா, தாய்மரத்தில் கிளை ஒன்று உளுத்துப் போனாலும் அதை வெட்டி எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அது மற்றக் கிளைகளையும் பாதிக்கும். நீங்கள் செய்திருக்கிற காரியம் அதுதான், மாமா'' என்றான். எப்படி அப்பு?''

''அவன் ஒரு ரத்னம்.''

''இதையேதான் நானும் அவனிடமே சொன்னேன். 'யூ ஆர் எ ஜெம்' என்றேன். அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா?''

''என்ன?''

'' 'மாமா, நான் ஒரு 'ஜெம்' ஆகவே இருக்கிறேன். உங்களுக்கு ஒரு பெண் இருந்தா இந்த ஜெம்முக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க முன் வருவீர்களா?'ன்னு கேட்டான். 'கண்டிப்பாக' என்றேன். அதற்கு அவன் சிரித்தான். 'மாமா, நானே ஒரு ரத்னம்னா, கண்ணன் நவரத்னம். இது அவனுடைய மாமா நாதனுக்கும் தெரியும். தெரிஞ்சும் தம் பெண்ணின் ஆசையைத் தீர்த்து வைக்கமாட்டேன் என்கிறார். வெறும் குணரத்னமாக மட்டும் இருந்தாப் போராது மாமா; பண ரத்னமாகவும் இருக்கணும்' என்றான். வாஸ்தவமா?''

நாதன் பரசுராமனை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு, ''கண்ணன் நவரத்னந்தான். ஆனால்.....'' என்றார்.

''மாப்பிள்ளையாக ஏற்க உங்கள் மனசு இடம் கொடுக்கவில்லை, அல்லவா?''

''இடம் கொடுக்கவில்லையா, அல்லது மனசு பக்குவப்படவில்லையான்னு தெரியவில்லை. கண்ணனுக்கு ஒரு குறையும் இல்லைன்னு எனக்குத் தெரியும். இருந்தாலும்... ...''

'என்ன சொல்ல வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும்' என்று தெரியாமல் நாதன் தவிக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட பரசுராமன், ''நாதன், நீங்கள் இப்படியே நாட்களை ஓட்டிக்கொண்டிருந்தால், ஏதாவது விபரீதம் நடந்துவிடும்'' என்றார்.

''என்ன விபரீதம்?''

''குமார் செய்ததைப்போல... ...'' என்று இழுத்தார் அவர்.

''ராதிகாவுக்கு வேண்டுமானால் அந்தத் தைரியம் இருக்கும். ஆனால் கண்ணன் இருக்கிறானே அவன் எந்த விபரீதத்துக்கும் காரணமாகமாட்டான்.''

''எப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''அவனைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள் யாராவது ஒருத்தர் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்றால் அது நான்தான். ராதிகாவை நான் வேறு இடத்தில் கொடுக்க முன்வந்தாலும், கல்யாணத்தையே நடத்தி வைக்க அவன்தான் முன்னால் வந்து நிற்பான்.''

பரசுராமன் மெதுவாக எழுந்தார். ''நீங்கள் அப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்தால், உங்களைவிடக் கொடுமைக்கார மனிதர் வேறு யாரும் இருக்கமுடியாது.''

''எங்கே எழுந்துவிட்டீர்கள்?''

''போக வேண்டாமா? மணி ஏழு அடிக்கப் போகிறது.''

''உட்காருங்கள். ராத்திரி இங்கேதான் சாப்பாடு. கண்ணன்கூட வருகிறான்.''



அவர் பேசி முடிக்கையில் ராதிகா ஹாலினுள் பிரவேசித்தாள்.

''வா, ராதி. உன் மாமா. நீ குழந்தையா இருந்தபோது பார்த்திருப்பாய்!''

''நமஸ்காரம், மாமா. அப்பா, இன்னிக்கு மேட்டுப் பாளையத்தில் பார்த்தேன்.''

''நீயும் என்கூடக் காரில் வந்திருக்கலாம்'' என்ற அவர், ''ஆமாம், இத்தனை நேரம் என்ன செய்து கொண்டிருந்தே?'' என்று கேட்டார்.

''தூங்கி எழுந்து டிபன் சாப்பிட்டுவிட்டு, ஹால் பக்கம் வந்தேன். நீங்க ரெண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. நின்னு கேட்டுக் கொண்டே இருந்தேன்.'' சொல்லிவிட்டு ராதிகா சிரித்தாள்.

''அப்போ ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன்னு சொல்லு.''

''தப்பான எண்ணத்தோடு, பிறர் அறியாமல் கேட்டுக்கொண்டிருந்தால் தானே ஒட்டு? என் மனசிலே ஏதும் தப்பான எண்ணம் இல்லியே?''

''வெரி குட். உன் அப்பாகிட்டே உன் கல்யாண விஷயமாகப் பேசத்தான் ராதிகா நான் வந்திருக்கிறேன்'' என்றார் பரசுராமன், அவருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே.

''பேசி ஆகிவிட்டது போலிருக்கே.''

''உம். ஆனா, உன் அப்பாவுக்குத் திருப்தி இல்லை.''

''என் அப்பாவைத் திருப்தி செய்யறது கொஞ்சம் கஷ்டம்.''

''அது கிடக்கட்டும். நீ என் பிள்ளை ஸ்ரீதரைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''நான் நினைக்கவே இல்லை.''

''அப்படின்னா?''

''எத்தனையோ பேரைப் பார்க்கிறோம். அவர்களை எல்லாம்பற்றி நினைத்துக்கொண்டா இருக்கிறோம்? ஸ்ரீதர் என் ஒன்றுவிட்ட மாமா பிள்ளை. ஊட்டியில் வேலை செய்து சம்பாதிக்கிறார். அவ்வளவுதான்.''

''அவ்வளவுதானோ?''

''அவ்வளவேதான்.''

''பார்த்தீர்களா, நாதன்?''

''உம்.''

''அப்பா!'' என்றாள் ராதிகா திடீரென்று.

''என்ன ராதி?''

''மகாலிங்கமும் கண்ணனும் வருகிறார்கள். உடன் அப்புவும் வருகிறான்.''

''எல்லாருக்கும் நீ போய் டீ கொண்டு வா; போ!''

கண்ணனை ஒரு தடவை பார்த்துவிட்டு ராதிகா உள்ளே சென்றாள்.

40

# பரசுராமனுடைய பிள்ளை

பரசுராமன் நாதனிடமும் ராதிகாவிடமும் விடை பெற்றுக்கொண்டு மறுநாள் மத்தியானமே தாம் டில்லிக்குத் திரும்பப் போவதாகக் கூறினதைக் கேட்டதும் ராதிகா ஆச்சரியம் அடைந்தாள்.

''ஏதோ ஒரு பிஸினஸ் விஷயமாக வந்துபோவது போல முழுசா ரெண்டு நாள்கூட ஊட்டியில் தங்காமல் புறப்படுகிறீர்களே?'' என்றாள் அவள்.

பரசுராமன் நாதனை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''பிஸினஸ்போல என்ன, ராதிகா, பிஸினஸே தான். அது முடிந்துவிட்டது; புறப்படுகிறேன்'' என்றார். பிறகு நாதனைப் பார்த்து, ''இப்போ உங்களுக்கும் ஏமாற்றம் இல்லை அல்லவா?'' என்று கேட்டார்.

''நம்பிக்கை இருந்து தோல்வியில் முடிந்தால் ஏமாற்றந்தான். ஆனால் நீங்கள் வந்து, 'உன்னுடைய நம்பிக்கையே தீர ஆலோசியாமல் ஏற்படுத்திக்கொண்ட நம்பிக்கை' என்று, வெட்டு ஒன்று துண்டு ரெண்டாகச் சொன்னபிறகு எப்படி ஏமாற்றம் பிறக்க முடியும்? ஆனால்...'' நாதன் தயங்கினார்.

''என்ன, நாதன்? என்ன ஆனால்? சொல்லுங்கள்.''

''ஒன்றுமில்லை, பரசுராமன்.''

''நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள். என்னிடம் ஒளிவு மறைவு கிடையாது என்பது உங்களுக்குத் தெரியும். அதே குணத்தை நான் பிறரிடமும் எதிர்பார்க்கிறேன்.''

''அன்று போனில் பேசும்போது, நானே அங்கே வருகிறேன் என்றீர்களே, அப்போது நான் என்ன நினைத்தேன் தெரியுமா?''

பரசுராமன் சிரித்தார்.

''டிரங்க் காலில் மூன்று நிமிஷமோ ஆறு நிமிஷமோ பேசுகிறோம். அதற்குள் எல்லாவற்றையும் வெட்ட வெளிச்சமாகச் சொல்ல முடியுமா? எல்லாவற்றையும் நேரே வந்து விவரமாகச் சொன்னால்தான், உங்களுக்கும் சமாதானம் இருக்கும். எனக்கும் திருப்தி உண்டாகும். இனிமேல் இதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். என்னுடைய ஆசையும் பிரார்த்தனையும், ராதிகாவை நீங்கள் ஒரு சிறந்த குணவானுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான். அவன் ஏழையாக இருந்தாலும் தேவலை. உங்களுடைய பழைய கால அந்தஸ்து இப்போ உங்க கண்ணைக் கொஞ்சம் அயர வைக்கலாம். அதைத் தவிர்த்துவிட்டு, ஒரு நல்ல வைரமாகப் பார்த்துக் கொடுங்கள். பையன் ராதிகாவை ஆசையாக வைத்துக்கொள்ள வேண்டும். மானியாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். அவ்வளவுதான். நான் வரட்டுமா? நான் போய் வருகிறேன், ராதிகா.''

நாதன் தலை அசைத்தாரே தவிர வாய் திறந்து பேசவில்லை. அவரால் பேச முடியவில்லை. பரசுராமன் சொன்ன வைரம், உள்ளங்கையில் இருக்கிறது. அடக்கம், பணிவு, அன்பு, நேர்மை எல்லாம் கல்லிலிருந்து ஒளி வீசுகிறது. ராதிகாவின் வாழ்க்கையில் என்றுமே இருள் தோன்றாமல் பிரகாசமாக்கக் கூடிய வைரம் அது!

அடுத்த கணம் தம் கையின் உருவமும் அவளுடைய கணவனுடைய உருவமும் தோன்றி, பார்வையை மறைத்தன. உள்ளங்கையில் உண்மையாகவே வைரம் இருப்பதான பிரமையில் அவர் கையை இறுக மூடிக்கொண்டார்.



**ம**றுநாள் காலை பத்தரை மணிக்கு மகாலிங்கத்தின் பங்களாவுக்குப் பரசுராமன் வந்தார். அப்புவும் கண்ணனும் அவரை உட்லண்ட்ஸிலிருந்து அழைத்து வந்தார்கள்.

''நீங்கள் ஊட்டிக்குக் கடைசியா வந்து பதினைஞ்சு வருஷம் இருக்கும் இல்லியா?'' என்று கேட்டான் கண்ணன்.

''அதுக்கும் மேலேயே இருக்கும்'' என்றார் பரசுராமன்.

''அப்போது பார்த்த ஊட்டிக்கும் இன்றைய ஊட்டிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு, இல்லையா?'' என்று கேட்டான் அப்பு.

''அன்னிக்கு இவ்வளவு ஜனத்தொகை இல்லை. இப்போ நிறைய மரங்களை வெட்டித் தள்ளியிருக்கிறார்கள். வேறு என்ன சொல்ல இருக்கிறது?''

''அதனால்தான் ஊட்டியின் குளிரே குறைந்திருக்கிறது'' என்றான் அப்பு. பிறகு கண்ணனைப் பார்த்து, ''ஸ்ரீதரும் நம்முடன் சாப்பிடுகிறான் இல்லையா?'' என்று கேட்டான்.

''தெரியாது; ஐயா மாமி கூப்பிட்டிருப்பான்னு நினைக்கிறேன்.''

''அவ கூப்பிட மறந்துவிட்டாலும் நளினி மறக்க மாட்டாள்.''

ஸ்ரீதரைப்பற்றிய பேச்சு எழுந்ததும் பரசுராமன் வாய் திறவாமல் இருந்தார். அவருடைய மௌனத்தைக் கண்ட கண்ணன் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை.

**வி**ருந்து ஆரம்பமாயிற்று.

''என்ன மிஸ்டர், மகாலிங்கம். இலையின் சைஸைப் பார்த்தால் விருந்து ரொம்பத் தடபுடலாக இருக்கும்

போலிருக்கே! இங்கே நான் கழுத்துவரை சாப்பிட்டால் எப்படி மலை ரஸ்தாவில் மேட்டுப்பாளையம் போய்ச் சேருவது?'' என்று சொல்லிச் சிரித்தார் பரசுராமன்.

''மகாலிங்கம் இருக்கிறாரே, அவருடைய ஹாபியே இதுதான். விருந்தாளிகளுக்கு வயிறு புடைக்கப் போட்டு வேடிக்கை பார்ப்பதுதான்'' என்றான் அப்பு.

''ஆனா இன்றைய விருந்து அப்புவின் ஏற்பாடுதான்!'' என்றாள் ஜயலட்சுமி.

''அதனால்தானோ என்னவோ ஸ்ரீதர் வரவில்லை'' என்றாள் நளினி.

''நீ அவனைச் சரியாக உபசாரம் செய்து கூப்பிட்டிருக்கமாட்டாய்! 'உன் அப்பாவுக்கு விருந்து வைக்கிறோம். கண்ணனும் அப்புவும் வருகிறார்கள். நீ மட்டும் ஓட்டலில் சாப்பிடுவானேன்? நீயும் வந்து தொலை' என்கிற மாதிரி கூப்பிட்டிருப்பாய்! அவனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்திருக்கும்'' என்றான் அப்பு.

ஜயலட்சுமி சிரித்தாள். அப்பு ஏன் இப்படி அசம்பாவிதமாகப் பேசுகிறான் என்று மகாலிங்கம் ஏமாற்றத்துடன் அப்புவைப் பார்த்தார்.

ஆனால் பரசுராமன் கறியை ருசி பார்த்துக் கொண்டே, ''அப்பு புத்திசாலின்னு நெனைச்சேன்'' என்றார்.

இப்போது எல்லாருமே சிரித்தார்கள்.

பரசுராமன் தொடர்ந்து, ''ஸ்ரீதரிடம் உபசாரமே தேவையில்லை. வந்து தொலைன்னாலும் வந்துவிடுவான். அவன் ரோஷக்காரனாக இருந்திருந்தால் நான் எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பேன்'' என்றார். திடீரென்று அவருடைய குரல் கம்மி, வருத்தம் தொனித்தது.

''வேலையில் உங்க பிள்ளை சூரன்தான். தன் தொழிலில் அவனுக்கு இணை அவன்தான்!'' என்றார்



மகாலிங்கம். பரசுராமனைச் சமாதானப்படுத்துவதுபோல இருந்தது அவருடைய பேச்சு.

''எவ்வளவு நேர்த்தியாக உடை அணிந்திருந்தாலும், இயற்கையாக உள்ள அழகும் வசீகரமுந்தான் நேர்த்தியை எடுத்துக் காட்டுகின்றன. குருடனுடைய உடம்பில் மஸ்லின் வேஷ்டியும் சில்க் ஷர்ட்டும் பளபளக்கட்டுமே. கண்ணின் ஹீனந்தான் பட்டென்று தெரிகிறது.''

''ஸார் சொல்றது புரியறதா, மாமி?'' என்று கேட்டான் அப்பு.

''எல்லாம் புரியறதுடா. மனுஷா தாழம்பூ மாதிரி இருக்கப்படாது என்கிறார். வெளி அழகு முக்கியமில்லை.''

''அதேதான், அதேதான்!'' என்றான் அப்பு.

''நீங்க சொல்றது சரின்னு பட்டாலும் ஸ்ரீதருடைய கெட்டிக்காரத்தனத்தைக் குறை சொல்ல முடியாது'' என்றார் மகாலிங்கம். பரசுராமன் வாயிலிருந்து, ஸ்ரீதரைப்பற்றி ஒரு நல்ல வார்த்தையாவது வரவேண்டும் என்ற ஆர்வம் அவருடைய பேச்சின் அவசரத்திலே எதிரொலித்தது.

''அதற்குத்தான் மாசம் ரெண்டாயிரமோ என்னமோ கொடுக்கிறீர்களே!'' என்ற பரசுராமன், ''உங்களுடைய ஒர்க்ஸ் மானேஜர், ஒர்க்ஸ் என்ஜினியர் என்ற முறையில் அவனைப்பற்றிப்பேச எனக்குத் தெரியாது; அவசியமும் இல்லை. என் பிள்ளை என்ற முறையில் மேற்கொண்டு பேச எனக்கு விருப்பம் இல்லை. எனக்கு இன்னும் நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி வேண்டுமானால் பேசிக்கொண்டிருப்போம்'' என்றார்.

அவருடைய வார்த்தைகளில் வெடித்த வெறுப்பை மகாலிங்கம் புரிந்துகொண்டார். அதன்பின், விருந்தில் ஸ்ரீதர் பெயரே அடிபடவில்லை.

கண்ணனும் அப்புவும் மீண்டும் பரசுராமனைப் பன்னிரண்டு மணிக்கு ஓட்டலில் இறக்கிவிட்டார்கள்.

''அப்பு, மேட்டுப் பாளையத்தில் ப்ளூ மவுண்டனைப் பிடிக்க இங்கிருந்து இரண்டு மணிக்குப் புறப்பட்டால் போதும், இல்லையா?''

''கரெக்டா இரண்டு மணிக்கு அப்பு இங்கே வருவான் காருடன்.''

''நல்லது. அப்போ போய்க் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள். மிஸ்டர் கண்ணன், உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது?''

''அப்போ அழைத்துக் கொண்டுபோய் அவனை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். ஒரே ஊரில் ரெண்டு நல்லவர்கள் இருக்கப்படாது!'' என்றான் அப்பு.

பரசுராமன் சிரித்தார். ஆனால் மறுகணமே, ''மகாலிங்கம் கொடுத்து வைத்திருக்கிறார்'' என்றார்.

''நாதனும் கொடுத்து வைக்கணும்.''

''பேசாமே இருடா, அப்பு! ஸார், நானும் மேட்டுப்பாளையம் வரையில் வந்து வழி அனுப்புகிறேன்.''

''உனக்கு எதுக்கப்பா சிரமம்?''

''அவனுக்கு இன்னிக்கு வேறு என்ன வேலை? வந்து தொலையட்டும்'' என்றான் அப்பு. பிறகு, ''ஸார், அப்பு இன்னும் இங்கேயே இருந்தால் உங்களுக்குப் போர் அடிக்கும். சரியா ரெண்டு மணிக்குக் காருடன் வருவான் அப்பு'' என்று கூறிக் கிளம்பினான்.

அவர்களுடைய கார் புறப்படுகையிலேயே ஸ்ரீதர் டாக்ஸியில் வந்தான்.

நேராகப் பரசுராமனுடைய அறைக்கு விரைந்தான்.



பரசுராமன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து தினசரி ஒன்று படித்துக்கொண்டிருந்தார். ஸ்ரீதர் உள்ளே வந்ததை அவர் கவனித்தும் பேப்பரிலிருந்து கண்ணை எடுக்கவில்லை.

தந்தை தன்னைக் கவனித்தும் ஏறிட்டுப் பார்க்கவில்லை என்ற உணர்வு ஸ்ரீதருடைய மனத்தைச் சுண்டி இழுத்தாலும், அவன் லட்சியம் செய்யவில்லை.

''நீங்கள் ஊட்டிக்கு முந்தாநாள் வந்தீர்கள்!'' என்று ஆரம்பித்தான் அவன்.

''இன்னிக்கு இன்னும் ரெண்டு மணி நேரத்துக்குள் புறப்படப் போகிறேன்.'' அவனைப் பார்க்காமலே அவர் பதில் சொன்னார்.

''ஊட்டிக்கு எதற்காக வந்தீர்கள்? வந்தவர் பெற்ற பிள்ளையிடங்கூட ரெண்டு வார்த்தை சரியாகப் பேசவில்லை. என் மானம் போகிறது.''

விரிந்து பரந்த பேப்பரை நாலாக மடித்த பரசுராமன் பிள்ளையை ஏறிட்டுப் பார்த்தார். அவருடைய பார்வையில் மின்னின கடுமையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலை தாழ்த்தினான்.

''உன்னுடைய கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லத் தேவையில்லைன்னாலும், நான் இன்னிக்குப் போன பிறகு நீ உன் மனசுக்குள்ளேயே எது பதிலாக இருக்கும்னு யோசிச்சு யோசிச்சு மண்டையைக் குழப்பிக் கொள்ளுவாய். அதனால் நானே சொல்லுகிறேன்.''

''உங்களுக்கும் எனக்குந்தான் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று மூணு வருஷத்துக்கு முன்னாலேயே பிரகடனப்படுத்தியாகிவிட்டதே! இப்போது ஏன் திடீர்னு பந்தம் முளைச்சுது?''

பரசுராமன் சிரித்தார்.

"நீ ஒரு முட்டாள். உனக்காகவோ, உன்னைத் தேடிக்கொண்டோ நான் வந்திருந்தால், நானும் ஒரு முட்டாளாக இருந்திருப்பேன்."

"பின் எதற்காக வந்தீர்கள்?"

"நாதனையும் அவருடைய பெண் ராதிகாவையும் காப்பாற்ற."

"ஆகா! என்ன கரிசனம், இரக்கம்!"

"நாதன் உன்னுடைய தொழில் திறமையிலும் நீ வாங்குகிற சம்பளத்திலும் மயங்கி, புத்தி பேதலித்துக் கிடந்தார். நான் வந்துதான், அவர் கண்ணை மறைத்த திரையை நீக்க வேண்டியிருந்தது. அழகான நதி என்று அவர் இறங்க நினைத்தார். அதிலும் முதலை இருக்குன்னு நான் அவரைக் கரையிலிருந்து இழுத்தேன்."

"நான் ராதிகாவைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக எந்த முட்டாள் சொன்னான் உங்களிடம்?"

"தாயில்லாப் பெண். அதுவும் ஒரே பெண். பிள்ளை எங்கோ இருக்கிறான். மூணு தலைமுறைக்குச் சொத்து இருக்கு! அதை வைத்துக்கொண்டு உன் இஷ்டம் போலக் குடித்துக்கொண்டு கூத்தாடி விளையாட உனக்கு வாய்ப்பு இருக்கிறது!"

"உங்கள் எண்ணமே அநாகரிகமாகப்படறது."

"முதலில் ராதிகாவைப் பார்க்க அடிக்கடி சென்ற நீ நளினி வந்தப்புறம் மறந்தால் என்ன அர்த்தம்?" கேட்டுவிட்டுப் பரசுராமனே பதிலையும் சொன்னார்.

"நளினி மனைவியானால், ஒரு பெரிய எஸ்டேட்டுக்கு, ஒரு பெரிய தொழிற்சாலைக்கு ஒரு காலத்தில் அதிபனாகி விடலாம்னு நீ கோட்டை கட்டுறாய்னு அர்த்தம். இன்னிக்கு அந்தக் கோட்டையையும் நான் தகர்த்துவிட்டேன்."



"சீ, உங்களை என் அப்பான்னு சொல்லிக் கொள்ளுவதற்கே அவமானமாக இருக்கிறது!"

"மானமுள்ளவன்தான் அவமானத்தைப்பத்திக் கவலைப்படுவான்!"

"ஊட்டியில் நான் தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் செய்துவிட்டீர்கள்."

"உன்னால் எந்த ஊரில்தான் தலை நிமிர்ந்து நடக்க முடிந்தது? புனாவில் நாயை அடிப்பதுபோல உன்னை அடித்துத் துரத்தினார்கள். பம்பாய்க்கு ஓடினாய்! அந்தக் கோவாப் பெண் சந்தி சிரிக்க வைத்தாள். என் காலில் விழுந்து பத்தாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு போய், உன் மானத்துக்கு உறை போட்டுக்கொண்டாய். டில்லியில் இருந்தாயே; அங்கேதான் வீட்டுக்கு அடங்கின பிள்ளையாக இருந்தாயா? உன்னால் எந்த ஊரிலும் தலைநிமிர்ந்து நடக்க முடியாது. ஏன் தெரியுமா? உன் நடத்தை! அதை மாற்றினால், நீ என்னிக்குமே தலைகுனிய வேண்டிவராது."

"உபதேசம் செய்கிறீர்களா?"

"இல்லை, இல்லை, நீ சின்னப் பையனாக இருந்த போதே, நான் உனக்குப் புத்திமதி சொன்னது கிடையாது!"

"இனிமேல் என் வழிக்கு வராதீர்கள்!"

"நான் என்னிக்குமே நீ போகிற பாதையில் எதிரே வந்ததில்லை. ஆனால் உன்னால் யாருக்காவது, அதுவும் எனக்கு வேண்டியவர்களுக்கு, ஆபத்து வரும்னு தோணினால் அவர்களைக் காப்பாத்த வந்துவிடுவேன்!"

ஸ்ரீதர் பல்லைக் கடித்துக்கொண்டு அவரைப் பார்த்தான். இன்னும் அவன் உட்காரவில்லை.

ஸ்ரீதருடைய மௌனத்தைக் கண்ட பரசுராமன் அவனுடைய பேட்டி முடிந்துவிட்டது என்று நினைத்து மீண்டும் பேப்பரை எடுத்தார்.

அதே சமயத்தில் "ஸார்!" என்று ஒரு குரல் கேட்டது.

"யாரது?"

"நான்தான் ஸார்!" அடுத்த கணம் பரசுராமன் முன்பின் பார்த்திராத ஒருவர் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும், "உங்களுக்கு இங்கே என்ன வேலை? வெளியே போங்கள்!" என்றான் ஸ்ரீதர். ஏற்கனவே ஆத்திரத்தில் பதறிப் போயிருந்த அவன் இப்போது தன்னையே இழந்து விட்டான்.

"அவர் என்னைத் தேடித்தான் வந்திருக்கிறார் என்றால் நீ யார், அவரை வெளியே விரட்ட?" என்று பரசுராமன் ஸ்ரீதரைப் பார்த்துக் கத்தினார். பிறகு, "நீங்கள் யார் ஸார்? உங்களுக்கு என்ன வேணும்?" என்றார்.

"ஸார், அப்பு சொன்னான், நீங்க ரெண்டு மணிக்குப் புறப்படறதாக. பார்க்கிறதானால் அதுக்கு முன்னாடி பார்த்துவிடுங்கன்னு சொன்னான். தொந்தரவு கொடுக்கிறதுக்கு என்னை மன்னியுங்கள்."

"உட்காருங்கள்."

"ஸார், என் பெயர் கோதண்டராமன். இந்த ஊரில் வக்கீலாக இருக்கிறேன். ஒரு அஞ்சு நிமிஷம் அவகாசம் தாருங்கள். விஷயத்தைச் சொல்லிப் போய் விடுகிறேன். ஓர் உயிர் வாழறதும் சாகிறதும் உங்க கையில் இருக்கு!"

"உங்களுக்குப் பெண் இருக்கிறாளா?"

கோதண்டராமன் ஆச்சரியத்தில் ஸ்தம்பித்துப் போனார். "எப்படித் தெரிஞ்சுது உங்களுக்கு? ஸ்ரீதரே சொன்னானா?"

"அவன் சொல்லமாட்டான். உங்க கோலம் சொல்லித்து. ஓர் உயிர் வாழறதும் சாகிறதும் என் கையில் இருக்கணும்னா, அது ஒரு பெண் வாயிலாகத்தான் இருக்கணும். பெண்களின் உயிர்களுக்கும் ஸ்ரீதருக்கும் நிறையச் சம்பந்தம் இருக்கும்!"



"சீ! பெத்த பிள்ளையைப்பத்தி மூணாம் மனுஷனிடம் பேசுகிற பேச்சா இது?" ஸ்ரீதர் சீறினான்.

பரசுராமன் நிதானமாக அவனைப் பார்த்தார்.

"நீ என்னைப் பார்க்க வந்த காரியம் ஆகிவிட்டது, இல்லையா? நீ இனிப் போகலாம். நான் மிஸ்டர் கோதண்டராமனிடம் பேச வேண்டும்."

ஸ்ரீதர் நகரவில்லை.

"நீ போகலாம் என்கிறேன்" என்றார் பரசுராமன்.

"இந்தக் கோதண்டராமன் சொல்றது எதையும் நம்பாதீர்கள். இவரும் அப்புவுமாக ஏதோ திட்டம் தீட்டியிருக்கிறார்கள்" என்றான் ஸ்ரீதர்.

"ராஸ்கல். நீ இந்த அறையை விட்டு வெளியே போடா!"

ஆத்திரத்தில் பரசுராமன் சாய்வு நாற்காலியை விட்டு எழுந்துவிட்டார். அவருடைய உடல் பதறியது.

ஸ்ரீதர் வெளியேறியபின், பரசுராமன் மீண்டும் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். ஒரு நீண்ட பெருமூச்சு அவரிடமிருந்து வெளிவந்தது.

"என்னை மன்னிக்கணும். நான் அசந்தர்ப்பமாக வந்துவிட்டேன்."

"ரத்னச் சுருக்கமாக நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கள். அப்புறம் நீங்கள் கேட்கிற மன்னிப்புக் களைப்பற்றி ஆலோசிக்கிறேன்."

"என் பெண் வசந்தா, நளினி இன்டஸ்ட்ரீஸில் ஸ்டெனோகிராபராக வேலை பார்க்கிறாள்."

''பாக்கி கதை என்னென்னு என்னால் ஊகிக்க முடியும். உங்க பெண்ணை ஸ்ரீதர் கல்யாணம் கொள்ள வேண்டும் என்று சொல்லத்தானே வந்திருக்கிறீர்கள்?''

''கெஞ்சிக் கேட்டுக்கொள்ள.''

''உங்க பெண்ணுக்கு இப்போ வயசு என்ன?''

''இருபத்துமூணு.''

''அதாவது மேஜர்.''

''ஆமாம். அவளும் ஸ்ரீதரும் மனம் விட்டுப் பழகிவிட்டார்கள்.''

''உங்க பெண் வேணுமானால் அப்படிப் பழகியிருக்கலாம். ஆனால் ஸ்ரீதரைப்பற்றிச் சொல்ல முடியாது. அவனுக்கு மனச்சாட்சியே கிடையாது.''

''அவன் கல்யாணம் செய்துகொள்ளுவதாக வாக்குறுதிகூடக் கொடுத்திருந்தானாம்.''

''அவன் எந்தப் பெண்ணுக்கும் முதல்முதலில் கொடுக்கத் தவறாமல் இருப்பது இந்த வாக்குறுதிதான்.''

''அப்போ?'' கோதண்டராமனுடைய குரல் கேவியது.

''அப்போ என்ன அப்போ? வசந்தா சின்னப் பெண் இல்லையே? நீங்கள் அவளைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கவில்லை.''

''நாளைக்கு ஊட்டி பூரா சிரிக்குமே, ஸார்!''

''ஊராரின் சிரிப்புக்கு இடம் கொடுத்தது உங்க பெண். அதை அடக்க என்னால் எப்படி முடியும்?''

''நீங்கள் உங்க பிள்ளையிடம் சொல்லி.....''

''பெற்ற தோஷத்துக்காக அவனை வளர்த்தேன். ஆனால் பிறகு அவன் என் மார்பிலே பாய்ந்தான். அவன் என் பிள்ளை என்று நான் சொந்தம் கொண்டாடி நான்கு



வருஷமாகிறது. எனக்கும் அவனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று நாலுபேர் அறியப் பிரகடனப்படுத்தி மூணு வருஷமாகிறது!''

''அப்போ என் கதி? என் பெண்ணின் கதி?''

''என்னை இப்போது நீங்கள் மன்னித்துவிடுங்கள், மிஸ்டர் கோதண்டராமன்! மற்றவர்களுடைய கதியையோ விதியையோ மாற்றி அமைக்க எனக்குச் சக்தி இல்லை. அதுவும் இந்த விஷயத்தில்! இந்தப் பிரச்னையை வசந்தாவே தீர்த்துக்கொள்ளட்டும். வயதான பெண், முன்பின் யோசியாமல், பருவத்தின் பயங்கரம் தெரியாமல் விளையாடினால் நான் என்ன செய்ய முடியும்?''

கோதண்டராமன் எழுந்தார். ''ஸார், என் பெண் தற்கொலையே செய்துகொண்டுவிடுவாள்.''

''அவளுக்கு அந்தக் கோழைத்தனம் வராமலிருக்க நான் தெய்வத்தை வேண்டுகிறேன்.''

திடீரென்று கோதண்டராமனுடைய குரல் உயர்ந்தது.

''என் பெண்ணைக் காப்பாத்த உங்களால் முடியாது என்கிறீர்களா? ஆனால் நாதனைச் சமாதானப் படுத்தினீர்களாமே! ராதிகா உங்கள் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்றீர்களாமே! அப்பு சொன்னானே!''

பரசுராமன் சிரித்தார்.

''உங்கள் குழப்பத்தில் என்ன பேசறோம் என்று தெரியாமல் ஏதோ பேசுகிறீர்கள். ராதிகா என் ஒன்றுவிட்ட தங்கையின் பெண். நாதன் ஸ்ரீதரைக் கண்டு மயங்கினார். ஆனால் ராதிகா உங்க பெண்போல மயங்கித் தன்னைப் பறிகொடுக்கவில்லை. நாதன் அவசரப்பட்டு, ராதிகாவின் வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடுவாரோ என்று பயந்துதான் நான் இங்கே வந்தேன்.''

''வசந்தாவும் ராதிகாபோல ஒரு பெண்தான், ஸார்.''

''ஆனால் பிரச்னைகள் வேறு, மிஸ்டர் கோதண்டராமன். ஸ்ரீதர் உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டாலும் சரி, ஒதுக்கித் தள்ளினாலும் சரி, எனக்குக் கவலை இல்லை. நீங்கள் நினைக்கிறதுபோல, உங்கள் வசந்தாவைக் காப்பாற்றக்கூடிய சக்தி என்னிடம் இல்லை.''

கோதண்டராமனுடைய கண்களில் நீர் முட்டி நின்றது.

''உங்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் நான் இருப்பதற்கு என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று சொன்ன பரசுராமன், அவருக்கு விடைகொடுக்க எழுந்தார்.

அவர் வெளியேறின பிறகு, சாய்வு நாற்காலிக்கு வந்த பரசுராமன் தம் மனத்தில் எந்தவிதமான சலனமும் உண்டாகவில்லை என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார். ஆனால் உட்குரல் உண்மையை ஒலிக்கும் என்பதை அவரால் உணர முடிந்தது.

அவர் எத்தனை நேரந்தான் கண்ணை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தாரோ அவருக்கே தெரியாது. அவருடைய இரத்தத்தின் ஒரு பகுதியின் பின்னமே ஸ்ரீதர் உருவில் தோன்றி அவரை வதைக்கலாயிற்று. அவன் ஏன் அவருக்குப் பிள்ளையாகப் பிறந்தான் என்ற கேள்வி எழுந்தபோது இருதயமே வலித்தது. ஆனால் அந்த வலியிலும் பாசத்தின் கசிவு தோன்றுவதை அவர் உணர்ந்தார்.

# 41

# ஏமாற்றத்தின் எல்லை

தந்தையால் வெளியேற்றப்பட்ட ஸ்ரீதர் ஓட்டலை விட்டு நடந்தான். அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஊட்டியே அவனைப் பார்த்து நையாண்டி செய்து வதைப்பதாகத் தோன்றியது. கோதண்டராமன் ஊர் முழுவதும் சொல்லிவிடுவார். ஏற்கனவே அவனுக்கு நளினி இண்டஸ்ட்ரீஸில் நல்ல பெயர் கிடையாது. ஜூலி அழுது அவனிடமிருந்து மாற்றல் வாங்கிக்கொண்டு போனதைக் கம்பெனியிலும் தொழிற்சாலையிலும் எல்லாரும் அறிவார்கள். கண்ணன் அவனைப் பற்றித் தூஷணையாக வெளியே சொல்லிக்கொண்டு திரிகிறவன் அல்ல என்றாலும், மகாலிங்கம், நளினி, ராதிகா இவர்களுக்கெல்லாம் அவன் எப்பேர்ப்பட்டவன் என்று தெரிந்துவிட்டது. அவன் ஆரம்பத்திலிருந்தே யோக்கியனாக நடந்துகொண்டிருந்தால், வேஷமாவது போட்டிருந்தால், மகாலிங்கத்தின் உள்ளத்தில் ஸ்திரமான நற்பெயர் கிடைத்திருக்கும். இப்போது அவர் அவனை ஓர் என்ஜினியராகத்தான் மதிக்கிறார். நளினி தொழிலில் தேர்ச்சி பெறும்வரையில், அவன் தம்முடைய இண்டஸ்ட்ரீஸுக்கு இன்றியமையாதவன் என்று கருதுகிறார். ஜயலட்சுமி தெளிவாக அவனிடமே கூறிவிட்டாள், நளினியின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை.

இனி அவன் என்ன செய்வான்?

ஸ்ரீதர் மெதுவாக நடந்தான். குளிர் சற்றுக் கடுமையாகவே இருப்பதாகத் தோன்றியது.

தகப்பனார் பேசிய பேச்சு அவனுடைய மனத்தைத் தைக்கவில்லை. இது அவனுக்குப் பழக்கப்பட்டது. பார்க்கப்போனால் அவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தடவை பேசிய பேச்சின் கடுமை இன்று இல்லை. அவருக்கும் அவனுக்கும் எந்தவிதப் பந்தமோ பாசமோ கிடையாது என்ற நிலை அன்றுதான் பிறந்தது. அதன்பின் அவனாகத்தான் இன்று பரசுராமனைப் பார்க்கப் போனான்.

என்னதான் ஜயலட்சுமியும் மகாலிங்கமும் அவனைத் தங்கள் மருமகனாக வரிக்கவில்லை என்றாலும் நளினி - சிநேகபாவத்துடனேயே இருக்கும் நளினி - அவனைக் கணவனாக வரிப்பாள் என்ற நம்பிக்கை இருந்தது. வெளிநாட்டில் சென்று படித்த அவள் அவன் செய்த, செய்ததாகச் சொல்லப்படும் குற்றங்களை மறந்து மன்னித்துவிடுவாள் என்று எதிர்பார்த்தான். நளினியை அவன் மணம் செய்துகொள்ள வேண்டும் என்று மனம் ஆசைப்பட்டது. ஆசை நளினிமீது அல்ல என்று அவனுக்கே தெரியும். மகாலிங்கத்தின் இன்டஸ்ட்ரீஸைக் கைப்பற்றும் வாய்ப்பு இருக்கிறதே, அதன்மீதுதான் அவனுக்குக் கண். இந்த ஆசையை எப்படியாவது நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். நாதனைப் பார்க்க வந்திருக்கும் தந்தை மூலமாகத் தன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்தான். ஆனால் பரசுராமன் பேசவே இடம் கொடுக்கவில்லை. ராதிகாவும் நாதனும் கண்ணனும் அப்புவும் சதா குறுக்கே நின்றார்கள்.

போகுமுன் அவரிடம் பணிவாகப் பேசித் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளலாம் என்றால் அதுவும் தோல்வியில் முடிந்தது. எடுத்த எடுப்பிலேயே அவர் அவனுடைய பழைய கதைகளை அலச ஆரம்பித்தார்.



அப்போதும் அவன் பொறுமையை இழக்கவில்லை. தான் இப்போது திருந்திவிட்ட ஸ்ரீதர் என்று கண்ணீர்விட்டால், கடைசியில் அவர் இளகிவிடுவார் என்று கணக்குப் போட்டான். அது தப்புக் கணக்காகிவிட்டது.

ஸ்ரீதர் பெருமூச்செறிந்தான். தோல்வி, தோல்வி - எதிலும் தோல்வியைத்தான் கண்டான். மனம் கசிந்தது. அவனுடைய மிருக உணர்ச்சிகள் கட்டுக்கு அடங்காமல் வெடித்து, ஏன் அவனை இரையாக்குகின்றன? திருந்த வேண்டும், வாழ்க்கையைச் சீராக்கிக் கொள்ள வேண்டும் என்று அவனே சிற்சில சமயங்களில் தனக்குள் சபதம் செய்துகொள்ளுவான். ஆனால் சபதத்தின் வெறி மூன்றே முக்கால் நாழிகைகூட நிலைக்காது. அவனுக்குள் உறங்கியிருக்கும் அசுரனை ஒரு பெண் உருவம் தட்டி எழுப்பிவிடும். அசுரனின் வெறி ஓசையில், அவனுடைய சபத ஒலி அடங்கிவிடும். ஏன் இப்படி? இப்படியே இருந்தால் என்றுதான் அவன் மனிதனாக முடியும்?

இனிமேல் திருந்தவும் வழி இல்லை என்ற தோல்வி மனப்பான்மைதான் நிலைத்திருந்தது. தன் அசுரகுணம் உடம்போடு பிறந்துவிட்டதாக அவனே முடிவு பண்ணிவிட்டான். அந்தக் குணம் உறங்காமல் என்றென்றும் விழித்திருக்க அவனே காரணமாகிவிட்டான்.

இல்லாவிட்டால் நாதன் வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் நாட்களில், ராதிகா தனக்கு மனைவியாகிவிடுவாள் என்று கனவு கண்ட நாட்களில், அவன் ஜூலியின் வீட்டுக்குப் போயிருக்கமாட்டான். நளினிதான் மனைவி என்று மனத்தின் திட்டத்தை மாற்றி அமைத்துக்கொண்டானே, அதிலிருந்தாவது மிருக குணம் அவனை விட்டு ஒழிந்து போயிருக்கக்கூடாதா? வசந்தாவின் மதமதப்பான உடற்கட்டும் வெறியைத் தூண்டிவிடும் அங்கங்களின் செழிப்பும் அவனுடைய கண்களை மூடின.

அவள் அவனுக்கு இரையாக, அவன் தானே கைதட்டிக் கூப்பிட்ட விதிக்கு இரையாகிவிட்டான்.

ஸ்ரீதர் தன் அறையை நோக்கி நடந்தான். இனிமேல் ஊட்டியில் அதிக நாள் இருக்க முடியாது என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் அதே சமயத்தில் நளினி இன்னும் அவனை வெளிப்படையாகப் புறக்கணிக்கவில்லை என்ற நினைவும் எழுந்தது. இவ்வளவெல்லாம் நடந்த பிறகு நளினி அவனைப்பற்றி என்ன நினைப்பாள்?

திடீரென்று நளினியை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆசை அவனை அவள் வீடு இருக்கும் திசையை நோக்கி உந்தியது.

வீட்டில் மகாலிங்கம் இல்லை. ஜயலட்சுமி தூங்கிக்கொண்டிருந்தாள். நளினியின் அறையை நோக்கி அவன் நடந்தான்.

''வணக்கம், நளினி.''

''ஓ, ஸ்ரீதரா?'' என்று கேட்டுக்கொண்டே நாற்காலியைவிட்டு எழுந்த நளினி அவனை நோக்கி வந்தாள். தன்னை அறைக்குள் அழைக்காமல் அவள் எழுந்து வருவதைக் கண்டதும் ஸ்ரீதருக்கு ஏமாற்றம் உண்டாயிற்று.

நளினியே தொடர்ந்து, ''நீங்கள் அப்பாவை ரெயிலேத்த மேட்டுப்பாளையம் போகவில்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை!''

''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? முகம் வெளுத்து, வெளிறிக் கிடக்கு!''

''ஒன்றுமில்லை, நளினி.'' குரல் தீனமாக இருந்தாலும் அதில் ஒரு குழைவு இருந்தது.

அந்தக் குழைவு நளினியின் காதில் செயற்கையாக ஒலித்தது.



''இல்லை, ஏதோ இருக்கிறது. நீங்கள் மறைக்கிறீர்கள்'' என்றாள் அவள்; ''சாப்பிட வருவீர்கன்னு நினைத்தேன். வரவில்லை. உடம்பு அசௌகரியமா?''

''உடம்பு சரியாகத்தான் இருக்கிறது, நளினி. மனசுதான்.....''

நளினி பதில் பேசாமல் சிரித்தாள்.

''நளினி!''

''உம்.''

''பொட்டானிகல் கார்டன்ஸுக்குப் போகலாமா?''

''இப்பவா?''

''ஆமாம்.''

''எதற்கு?''

''உன்னிடம் பேச வேண்டும்.''

''இங்கேயே பேசுங்கள்.''

''வேண்டாம், வா, போகலாம்.''

''மன்னிக்க வேண்டும், மிஸ்டர் ஸ்ரீதர். எனக்கு வேலை இருக்கிறது.''

''ரொம்ப முக்கியமான சமாசாரம்.''

''அவசரமான சமாசாரமா?''

''அவசரம் இல்லை. ஆனால் முக்கியம்.''

''அப்போ இன்னொருநாள் பேசிக்கொள்ளலாம்.''

''நளினி.''

''உம்!''

''நீ என்னைப்பத்தி என்ன நினைக்கிறாய்?''

''உங்களுக்கு என்ன திடீர்னு பைத்தியம் பிடித்து விட்டதா?''

''அந்த நிலையின் நுழைவாசலில்தான் இருக்கிறேன், நளினி. ஆனால் இந்த நிலையிலும் என்னைக் காப்பாத்தக் கூடியவள் நீ ஒருத்திதான்.''

''வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்.''

''சொல்லு, நளினி. நீ என்னைப்பத்தி என்ன நினைக்கிறாய்?''

''உங்கள் வேலையில் நீங்கள் மேதை.''

''என் வேலையில் என் கெட்டிக்காரத்தனத்தைப் பற்றி நான் கேட்கவில்லை.''

''நிறைய விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக் கிறீர்கள். தெரிந்திருக்கிறதை நன்றாகச் சொல்லுகிறீர்கள். உங்களுடன் பழகுகிறவர்களுடைய அறிவுவிருத்தியாகும். அதுவும் விஞ்ஞான உலக அறிவு.''

''ஐயோ, நளினி. நான் அதைப்பற்றிக் கேட்க வில்லை.''

''உங்களைப்பற்றி நினைக்கும்போது இந்த எண்ணந் தான் என் மனசில் ஏற்படறது.''

''வேறு விதமான எண்ணங்களே வருவதில்லையா?''

''வரும். ஆனால் நான் பொருட்படுத்துவதில்லை.''

''எனக்குப் புரியவில்லை, நளினி.''

''உங்களைப்பற்றி யாராவது குறை சொல்லுவார்கள், பாக்டரியில். நான் தலை அசைத்துவிட்டுப் போவேன். ஒண்ணு ரெண்டுபேர் உங்களை ஆபீஸில் வேலை செய்கிற ஓரிரண்டு பெண்களையும் இணைத்துப் பேசுவார்கள். காதில் விழாதது போலப் போவேன்.''

''நான் குற்றம் செய்யாதவன் என்ற எண்ணமாவது அப்போது பிறந்திருக்கா, நளினி?''



''இல்லை.''

''இல்லையா?''

''ஆமாம். நான் அந்த விஷயத்தில் அக்கறையாக இருந்தால்தானே, அதைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு?''

''நளினி, நீ இன்னும் என்னைப் புரிந்துகொள்ளவே இல்லை. ஜெர்மனியில் படித்து வந்திருக்கிறாய். எத்தனையோ பேருடன் பேசிப் பழகியிருக்கிறாய். ஆனால், ஆனால்...'' ஸ்ரீதர் தவித்தான்.

''ஆனால் என்றால்?''

''மற்றவர்கள் உன்னுடன் பழகுவதற்கும் நான் பழகுவதற்கும் உள்ள வித்தியாசம்.....''

''என்னைப் பொறுத்தவரையில் ஒரு வித்தியாசமும் இல்லை.''

''கண்ணன், அப்பு..''

''என் சகோதரர்கள் போல்...''

''நான்?''

''ஒர்க்ஸ் மானேஜர், என்ஜினியர், அறிவாளி!''

''அவ்வளவுதானா?''

''ஆமாம்!''

''நான் என்ன என்னவோ கனவுகள் கண்டேன், நளினி.''

''இனிமேல் தூங்காதீர்கள்.''

''உனக்கு விளையாட்டாக இருக்கிறது.''

''எதிர்பார்த்தது கிடைக்காவிட்டால் ஏமாற்றம்! எதிர்பாராமலே இருந்துவிட்டால் நிம்மதி! நீங்கள் கனவு கண்டீர்கள்! இப்போது ஏமாற்றம்!''

''இதுதான் உன் முடிவான எண்ணமா, நளினி? நீயும் நானும் தம்பதியானால் தொழில் உலகத்திலேயே ஒரு புரட்சி பண்ணலாம்னு கோட்டை கட்டினேன்.''

''இப்போ திட்டத்தை மாற்றிக்கொள்ளுங்கள்! நான் என் அம்மா அப்பா நிச்சயம் செய்து எனக்கும் பிடித்த ஒருவரைக் கல்யாணம் செய்துகொண்டு அமைதியான, சுகமான வாழ்வு வாழப் போகிறேன், மிஸ்டர் ஸ்ரீதர்! அதற்கு நீங்கள் உங்கள் வாழ்த்துக்களைத் தாருங்கள்!''

ஸ்ரீதருடைய முகம் வெளிறியது. நளினி எங்கே தன்னைப் பரிதாபமாகப் பார்க்கிறாளோ என்ற பயம் தோன்றவே, அவளை ஏறிட்டுப் பார்க்கவும் தெம்பு இல்லாமல் போயிற்று.

''என்னை மன்னித்துவிடு, நளினி'' என்றான்.

''அதெல்லாம் சரிதான். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் குழப்பம் தீர்ந்துவிடும். நட்பு தொடருகிறதா இல்லையா என்றும் தெரிந்துவிடும்!'' என்றாள் நளினி.

ஸ்ரீதர் வெளியேறினான்.

# 42

# அப்புவின் ஆரவாரம்

பரசுராமனை நீலகிரி எக்ஸ்பிரஸ்ஸில் ஏற்றி அனுப்பிவிட்டு, அப்புவும் கண்ணனும் மேட்டுப் பாளையத்திலிருந்து இரும்பிக்கொண்டிருந்தார்கள். நாதனுடைய காரைக் கண்ணன் ஓட்டி வந்தான். அவனுக்குப் பக்கத்தில் அப்பு, ஒரு காலைத் தொங்கவிட்டு இன்னொன்றை ஸீட்டின் மேலேயே மடக்கித் துடைத்தாளம் போட்டுக்கொண்டிருந்தான். என்றுமில்லாத குதூகலத்துடன் அப்பு காணப்பட்டான்.

''என்னடா, தேன் குடிச்ச நரிமாதிரி கும்மாளம் போடறே?'' என்று கண்ணன் ஆரம்பித்தான்.

''அப்பு சந்தோஷப்படறான்டா, கண்ணா?''

''என்னடா விஷயம்?''

''பரசுராமன் வந்து ஒரு பிரளயத்தை உண்டுபண்ணிப் போய்விட்டார். பிரளயம்னா அதுக்கு அப்புறம் உலகம் ஒரே தண்ணீர்க் காடாக இருக்கும். ஆலிலையிலே கண்ணன் தவழ்ந்துகொண்டு வருவான். அப்புறம் புது யுகத்தில் புது உலகம் தோன்றும். அது மாதிரி இப்போ ஒரு புது உலகம் உதிக்கிறதை அப்புவின் கண் பார்க்கிறதுடா!''

''சபாஷ்!'' என்ற கண்ணன், ''புது உலகம் எப்படியடா இருக்கு உன் கண்ணுக்கு?'' என்று கேட்டான்.

''எல்லாமே ரம்யமாக இருக்குடா! வானத்திலே கருமேகங்கள் துளிகூட இல்லை. எல்லாமே வெண்ணிறப்

பஞ்சுக் கட்டிகள். பூரண சந்திரன் மேகங்களோடு விளையாடிக்கொண்டே ஓடுகிறான்.''

''டேய், எந்தக் கதையின் ஆரம்பம்டா இது?''

''எத்தனையோ கதைகளின் முடிவுடா. கேளு, நிலாவின் குளிர்ச்சியில் மனம் தூங்கிவிட்டுப் போகிறது. ஏன், போதைகூட ஏற்படுகிறது.''

''வெறும் வானம், சந்திரன், பஞ்சுக் கட்டி · இதுதானா நீ பார்க்கிற புது உலகம்? நட்சத்திரங்கூட இல்லியா?''

''கொஞ்சம் இருடா, கண்ணா! கோடிக்கணக்கான தாரகைகள், 'எங்களைப் பாரு' 'எங்களைப் பாரு'ன்னு மினுக் மினுக்கென்று கண் சிமிட்டுகின்றன. ஆனால் குளிர்ந்த மனசு சந்திரனை விட்டுக் கண்ணை எடுக்க மாட்டேன் என்கிறது. ஏன் தெரியுமா?''

''தெரியாது.''

''சந்திரனை அநுபவிக்கிற மனசிலும் நிலாக் காய்கிறது. அந்த நிலாவிலே யாரெல்லாம் உலா வருகிறார்கள் தெரியுமா?''

''தெரியாது.'' கண்ணன் பவானி பாலத்தைக் கடந்து முன்னேறிக்கொண்டிருந்தான்.

''நாதனும் அப்புவும் அவருடைய நந்தவனத்து க்ளாஸ் ஹவுஸில் மெய்ம்மறந்து இருக்கிறார்கள்.''

''உன்னால் உன் மெய்யை மறந்து இருக்க முடியாதுடா, அப்பு!''

''கேளுடா முட்டாள்! மகாலிங்கமும் ஜயா மாமியும் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார்கள். நளினி தன் புருஷனுடன் ஏரிக்கரையில் உட்கார்ந்திருக்கிறாள். குமார் தன் மனைவி பூர்ணாதேவிக்கு ஊட்டியில் ஒவ்வோர்



இடமாகக் காட்டுகிறான். கண்ணனுடைய மடியில் ராதிகா படுத்துக்கொண்டு கண்ணை மூடுகிறாள். அவளுடைய முகத்தில் கோடி சூரியன்கள் பிரகாசிக்கிறார்கள். கண்ணன் அவளுடைய தலையை வருடுகிறான்.''

கண்ணனுடைய மெய் சிலிர்த்தது. அவன் தன்னைப் பற்றிய கனவைமட்டுமே கண்டுகொண்டிருக்கிறான். ஆனால் அப்பு? அவனுடைய கனவு? அதில் அவன் மட்டுமா இருக்கிறான்?

அப்பு தொடர்ந்தான்: ''திடீர்னு, புற்றுக்குள்ளிருந்து பாம்பு சீறிவருவது போல ஒரு கருமேகத் திட்டு முளைக்கிறது. வான மண்டலத்துக்கே ஒரு கறுப்புத்திரை. ஆனால் ஒரு நிமிஷந்தான். அதன்பின் அது, இந்த வானில் தனக்கு இடமில்லை என்று ஏதோ ஒரு திசையில் பாய்ந்து ஓடுகிறது. ஓடுகிற அந்த மேகத்தின் பின்னால் ஏதோ ஒன்று துரத்திக்கொண்டு போகிறது. சாகரப் பட்சிபோலத் தெரிகிறது. மெல்ல மெல்ல எல்லாம் புலனாகின்றன. ஸ்ரீதர் ஓடுகிறான். பின்னால் வசந்தா துரத்துகிறாள். மீண்டும் நிலா; பூரண நிலா.'' அப்பு நிறுத்தினான்.

''டேய் அப்பு, உன்னை நான் நரின்னு சொன்னேன், இல்லே?''

''ஆமாம். தேன் குடிச்ச நரின்னு சொன்னே?''

''என்னை மன்னிச்சுடு.''

''பரவாயில்லை. அப்புவுக்கும் கவிதை பிறக்கிறது.''

''நீ தேன் குடிச்ச நரியில்லை.''

''அதுதான் மன்னிப்புக் கேட்டுவிட்டியே.''

''நீ மது உண்ட வானரம்.''

''ஹஹ்ஹா!'' என்று சிரித்தான் அப்பு. பிறகு, ''கருமேகம்னு ஸ்ரீதரை வர்ணித்தேனே; எப்படி?'' என்று கேட்டான்.

''வர்ணனையா? அபத்தம்.''

''ஏன்டா?''

''நீ சொன்ன வெள்ளை மேகங்கள் நிலாவிலே அழகாகத் தெரியலாம்டா. ஆனா அதனாலே பிரயோசனம் இல்லை. கருமேகந்தான்டா உலகத்தையே குளிரச் செய்கிறது.''

அப்பு ஒரு நிமிஷம் தன் முன் நீண்டு வளரும் பாதையைப் பார்த்தான். பிறகு, ''டேய் கண்ணா, நீ சொல்றது சரியாக இருக்கலாம். ஆனா ஒன்றை நீ யோசிக்கவில்லை'' என்றான்.

''என்ன?''

''மனசு சந்தோஷத்துலே விகசித்திருக்கும்போது காது சங்கீதத்தில் லயிக்கிறது. மூக்கு நறுமணத்தில் இன்பமூச்சு விடுகிறது. கண் அழகை ரசிக்கிறது. அழகை வீசும் பொருள் உபயோகமுள்ளதா இல்லையான்னு மனசு அப்போது விவாதிக்காது. உபயோகத்தைப்பற்றி நினைக்கிறபோது, மனசில் சுயநல எண்ணந்தான் இருக்குன்னு அர்த்தம். அப்புறம் அதிலே ஏதுடா மகிழ்ச்சி, உல்லாசம், ஆரவாரம் எல்லாம்?''

''சரிடா. உன் கவிதை பிரமாதம். அதுக்கு நீ கட்சி கட்டிக்கொண்டு விவாதிச்சது இன்னும் பிரமாதம். என்னை 'டிஸ்டர்ப்' பண்ணாம வா.''

அப்பு வாய் திறவாமல் தனக்குத் தானே சிரித்துக் கொண்டு வந்தான். கல்லாற்றைத் தாண்டிப் பருளியாற்றை வண்டி நெருங்குகையில், திடீரென்று இதமான குளிர்காற்று வீசலாயிற்று. மலை ஒவ்வொன்றும் எதையே நினைத்துத் தவம் புரிவது போலத் தோன்றியது. சிறு சிறு அருவிகளின் நாதம் சாமகானம் போலக் கேட்டது. எங்கும் ஒரே



பசுமைதான். ஓங்கி வளர்ந்த மரங்கள் காலத்தை விழுங்கிக்கொண்டு வானத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தன.

கண்ணனால் பேசாமல் இருக்க முடியவில்லை.

''அப்பு!''

''......''

''டேய், அப்பு!''

''சும்மா இரு. டிஸ்டர்ப் பண்ணாம வா!''

**நா**தன்வீட்டை அடையும்போது மணி ஆறே முக்கால். ராதிகாவும் அவரும் போர்ட்டிகோவில் நின்று கொண்டிருந்தார்கள்.

கார் நின்றதும், ''சௌகரியமாக இடம் கிடைத்ததா?'' என்று கேட்டார் நாதன் இருவரையும் பார்த்து.

''மனுஷன் பர்ஸ்ட் க்ளாஸிலிருந்து ஏர்கண்டிஷனுக்கு மாற்றிக்கொண்டார். கூப்பே கம்பார்ட்மென்டு. இரண்டாவது ஆள் இல்லை. சௌகரியத்துக்கு என்ன குறைச்சல்?'' என்றான் அப்பு.

''காரை ஷெட்டில் விட்டு வருகிறேன்'' என்றான் கண்ணன்.

தலையாட்டிய நாதன் ராதிகாவை ஓரக் கண்ணால் பார்த்தார். அவள் கண்ணனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துக்கொண்டிருந்தாள்.

''என்ன மாமா, அப்பு சொன்னது காதில் விழவில்லையா?'' என்று அவரைத் தன் பக்கம் இழுத்தான் அப்பு.

''விழுந்தது. பரசுராமன் வேறு என்ன சொன்னார்?''

''ஈரோடிலே சாப்பாடு வேணும்னு கார்டுகிட்டே சொல்லச் சொன்னார்.''

"முட்டாள்! நான் அதையா கேட்டேன்?"

"உங்க மனசிலே எதை நினைத்துக்கொண்டு கேட்கறீங்கன்னு அப்புவுக்கு எப்படித் தெரியும்?"

"இப்படித்தான், அப்பு, எதையாவது நினைச்சுண்டு கேட்பார்" என்றாள் ராதிகா. அவளுடைய கண், ஷெட் இருக்கும் திசையை விநாடிக்கு ஒரு தடவை பார்க்கலாயிற்று.

"நீ இப்போ உன் மனசிலே நினைச்சதை வைத்துக்கொண்டு கேட்டால் பதில் சொல்ல முடியும்" என்றான் அப்பு.

"நான் உன்னிடம் கேட்கமாட்டேன்."

நாதன் திடீரென்று, "நளினிக்கு வரன் பார்க்கிறார்களாமே?" என்று ஆரம்பித்தார்.

"பெண் என்று பிறந்துவிட்டால் ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் பார்த்தாக வேண்டியதுதானே?"

"ராதிகாவைவிட இரண்டு வயசு பெரியவள்!"

"அப்போ இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்!"

"எதுக்கு?"

"ராதிகாவுக்கு வரன் தேட!" என்றான் அப்பு. பிறகு தொடர்ந்து, "நங்கவரத்துக்கு அப்புவும் போறான்" என்றான்.

"காத்தாடிக்கு வாலா?" என்றார் நாதன்.

"ஆமாம். வாலில்லாமல் காத்தாடி நன்னாப் பறந்து எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?"

கண்ணன் திரும்பினான். கார்ச் சாவியை நாதனிடம் நீட்டிக்கொண்டே, "நான் போயிட்டு வறேன், மாமா. வறேன் ராதி" என்றான்.



பிறகு அப்புவைப் பார்த்து, "நீ எப்படிப் போறே?" என்று கேட்டான்.

"சைக்கிளை இங்கேயே வைத்திருக்கிறானே அப்பு" என்றான் அப்பு.

"சரி" என்று நாதன் கூற, கண்ணன் மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

அவன் செல்லுவதையே பார்த்துக்கொண்டு நின்றான் அப்பு.

"ஏன்டா அப்படிப் பார்க்கிறே?" என்று கேட்டார் நாதன்.

"ஒன்னுமில்லை. பரசுராமன் தாபப்பட்டுக்கொண்டது இப்போ ஞாபகம் வந்தது" என்றான் அப்பு.

"என்ன தாபம்?"

"தமக்கு ஒரு பெண் இல்லையே என்று!"

நாதன் சிரித்தார். அவருடைய சிரிப்பை லட்சியம் செய்யாமல் அப்பு, "பெண் இருந்திருந்தால், கண்ணன் இப்போது அவருடைய மாப்பிள்ளையாகியிருப்பான்!" என்றான்.

நாதன் வாய் திறக்கவில்லை.

"உனக்கும் போறதே புத்தி" என்றாள் ராதிகா. அடுத்த கணம் அவள் ஹாலை நோக்கி நடந்தாள்.

"ஸோ, குட் நைட்!" என்ற அப்பு, சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

அப்போது மணி ஏழு அடித்து ஐந்து நிமிஷம்.

வக்கீல் கோதண்டராமனுடைய வீட்டை அப்பு அடைந்தபோது ஏழரை மணி.

அவர் ஒரு மிலிட்டரி ஸ்வெட்டரைப் போட்டுக்கொண்டு, கூடத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

''அப்பு வந்திருக்கிறான், ஸார்.''

''வாடா.''

அப்புவின் குரலைக் கேட்டதும் வசந்தா உள்ளேயிருந்து கூடத்துக்கு வந்தாள்.

''என்ன நடந்தது, மாமா?''

''உனக்குத் தெரிந்திருக்குமே.''

''அப்புவுக்கு ஆயிரம் தெரியும். பரசுராமனைப் பார்த்தீர்களே; என்ன சொன்னார்?''

''தம் பிள்ளை ஒரு கேப்புமாரின்னு மட்டும் வாய் வார்த்தையாகச் சொல்லலை. பாக்கி எல்லாம் சொன்னார்.''

''கல்யாணத்தைப்பத்தி என்ன சொன்னார்?''

''தமக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதுன்னார்.''

''நாதன் வீட்டுச் சம்பந்தம்னு வரப்போ மட்டும் எல்லா அக்கறையும் ஏன் முளைச்சதுன்னு கேட்கிறது தானே?''

''நான் அப்பட்டமாக் கேட்கலை. பூடகமாகக் கேட்டேன். ராதிகா தங்கை பெண் என்றார். விட்டுத்தள்ளு.''

''என்ன வக்கீல் ஸார், கேஸை நீங்களே டிஸ்மிஸ் பண்ணுகிறீர்கள்?''

''பின் என்னை என்ன செய்யச் சொல்றே? இந்தப் பெண் நான் இந்த ஊட்டியிலே மானமா வாழ விடவில்லை. இனிமே தலைக்கு மேலே சாண் போனா என்ன, முழம் போனா என்ன?''

''நீங்க அளவுக்கு மீறி அலுத்துக் கொள்ளுகிறீர்கள். இல்லையா வசந்தா?''

பதில் சொல்லாமல் வசந்தா அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.



''டேய், அப்பு, நான் ஏழைதான். வக்கீல் தொழிலில் வரும்படி இல்லைதான். ஆனா என் பொண்ணுக்குக்கூட என்மேலே இரக்கம் இல்லையடா. என் உசிரைக் குடிக்கக் கிளம்பிவிட்டா.''

''போதும்ப்பா, நான் அநியாயமாய் ஏமாந்தது உங்க கண்ணுக்குத் தெரியவில்லை!''

''அவனாடீ இந்த வீட்டுக்குள்ளே வந்து உன்னை ஏமாத்தினான்? நீ அவன் விரிச்ச வலையிலே விழுந்தே. இப்போ கண்ணைப் பிசைஞ்சுண்டு நிக்கறே. இன்னிக்குப் பரசுராமன் கிட்டே கொஞ்சமாகவா கெஞ்சினேன்? இவதானே என்னைக் கெஞ்ச வைச்சா?''

வசந்தா அழ ஆரம்பித்தாள். ''நான் உசிரோட இருந்தால்தானே நீங்க கெஞ்சும்படியாகும்? நான் தற்கொலை பண்ணிண்டு சாகிறேன்.''

அப்பு சிரித்தான். ''நீ தற்கொலை பண்ணிக் கொண்டாலே போதும். தனியாச் சாக வேறே வேண்டாம். வக்கீல் ஸார், நீங்க கோர்ட்டிலே ஜட்ஜுக்கு முன்னாடி எப்படிப் பேசுவீர்களோ, அப்புவுக்குத் தெரியாது; ஆனா பரசுராமனிடம் வசந்தா கேஸைச் சரியாச் சொல்லவில்லைன்னு அப்பு நினைக்கிறான்.''

''நீ இருந்தியா அங்கே நான் பேசறபோது?''

''ஊஹூம். கடைசியிலேதான் அப்பு வந்தான்.''

''அப்போ, உன் நினைப்பை உடைப்பில் போடு. இனிமே என்ன வழி?''

''அப்பு என்ன சொல்ல முடியும்? ஸ்ரீதர் என்ன குழந்தையா, 'தாலி கட்டும்மா, ஊதல் வாங்கித் தரேன்'னு கெஞ்சிக் காரியத்தை முடிக்க?''

''இந்தப் பெண் என்னைத் தலைதூக்க முடியாதபடி அடிச்சுட்டா. ஊட்டியிலே அத்தனை பேருக்கும் தெரியும்'' என்று பிரலாபித்தார் கோதண்டராமன்.

''உங்க வாயாலேதான் அத்தனை பேர் கிட்டேயும் சொல்லி அழுதிருக்கிறீர்கள். அதுவரையில் அவர்களுக்கே தெரியாது. உங்கள் மானம் இப்படிப் போயிருக்கிறது என்று'' என்றான் அப்பு.

''நீதான் காப்பாத்தணும், அப்பு'' என்றாள் வசந்தா.

''எதை? உன் அப்பா மானத்தையா? அதை நீ தானே தொலைச்சே!''

''என்னைக் காப்பாத்து, அப்பு. என்னுடைய விமோசனம் உன் கையில்தான் இருக்கு.''

''இந்தப் புத்தி இப்பத்தான் முளைக்கிறது. அவன்கூட வெட்கமில்லாமல் சினிமாவுக்கும் பிக்னிக்குக்கும் போனபோது இந்த அப்புவையா நினைச்சுண்டிருந்தே? அப்புவைக் கேட்டா, இப்போ ஒரு குடியும் முழுகிவிட வில்லை. அவனைக் கல்யாணம் பண்ணிண்டு கஷ்டப் படறதைவிட, பண்ணிக்காமல் கஷ்டப்படறதே உசத்தி. நாளைக்கு நீ அவனுடைய மனைவியாகிறேன்னு வச்சுக்கோ; உன் கண் முன்னாலேயே இன்னொருத்திகூடச் சுற்றுவான். என்னமோ அவன்கூடப் பழகிட்டே, அவ்வளவுதானே? இனிமே, வீட்டுக்கு அடங்கின பெண்ணா இரு. நல்ல வரனாப் பார்த்து அப்புவே முடிப்பான்.''

கோதண்டராமன் பெருமூச்சுவிட, வசந்தா கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

அப்பு துள்ளிக்கொண்டு விரைந்தான். மகாலிங் கத்தையும் பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டால், அன்றைப் பொழுது போய்விடும் என்று அவன் நினைத்தான்.

# 43

# வெறி விளையாடியது

ஸ்ரீதர் உன்மத்தம் பிடித்தவனைப் போல ஆனான். இதுவரையில் அவன் எத்தனையோ சிக்கல்களில் மாட்டிக் கொண்டு வெளிவந்திருக்கிறான். அவற்றிலெல்லாம் அவன் சிலருடைய வசைமாரிகளுக்கு ஆளானதுண்டு. ஆனால் சில நாட்களிலேயே எல்லாம் மறந்துவிடும்.

இப்போது ஊட்டியில்தான் பட்டிருக்கும் அவ மானத்தை அவனால் எண்ணியும் பார்க்க முடியவில்லை. என்ஜினியர் தொழிலில் நுட்பமான அறிவு உடையவன், மேல்நாட்டுச் சர்வகலாசாலைகளில் முதன்மையாகத் தேறியவன், முப்பது வயதுக்குள் இரண்டாயிரம் வரையிலும் சம்பளம் வாங்குகிறவன், கேவலம் ஊட்டியில் சாதாரண மக்களுக்கிடையில் அவமானப்படுவதா? ஊட்டி மண்ணில் என்றைக்கு அவன் கால் வைத்தானோ அன்றே அவனுடைய மதிப்புக் குறைய ஆரம்பித்துவிட்டது.

சென்று மறைந்த நாட்களை எண்ணிப் பார்க்க, நாட்கள்தாம் மறைந்தனவே தவிர, சம்பவங்களின் முத்திரைகள் மனத்திலிருந்து மறையாதது தெரிந்தது. அவன் இதுவரையில் எத்தனை பேருடைய சிரிப்புக்குப் பலியாகிவிட்டான்? ராதிகா, ஜூலி, நளினி எல்லாருமே அவனை ஒதுக்கினார்கள். அவனைத் தம் பாக்டரியின் எதிர்காலச் சுபிட்சத்துக்காக மகாலிங்கம் சகித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அவருடைய போக்கிலிருந்தே

அவன் உணர்ந்தான். நளினியின் புன்னகையும் பேச்சும் வெறும் வெளிப்பூச்சுக்கள். அவன் எதற்காகத் தன்னை நாடுகிறான் என்பதை அவள் புரிந்துகொண்டுவிட்டாள். ஆனால் புரியாதது போலவே இன்றுவரையில் நடித்திருக்கிறாள். ராதிகா, 'உனக்கு என் நிழலைப் பார்க்கவும் யோக்கியதை இல்லை' என்று முகத்தில் அடிக்கிறாள். ஜூலியிடம் அவனால் நெருங்கவே முடியவில்லை. அநாதைக்கும் பலம் உண்டு என்று அவள் நிரூபித்து விட்டாள்.

இவர்கள் எல்லாரிடமும் பட்ட தோல்வியைவிட, வசந்தாவிடம் பெற்ற வெற்றியே பெரிய தோல்வியாகப் பட்டது. அவன் நளினியிடம் எந்த நோக்கத்துடன் நெருங்கிப் பழக முயன்றானோ அதே நோக்கத்துடன் வசந்தா அவனை நெருங்கினாள். அவளுடைய குலையாத உடற்கட்டு அவனுடைய போதையைத் தீவிரமாக்கியது. அவளுடைய யௌவனம் தன் பசியைத் தணிக்கக்கூடிய ஆகாரம் என்று நினைத்த அவன், வசந்தாவின் உள் மனத்தைப் புரிந்துகொள்ளவில்லை. நாய்க்கு ரொட்டித் துண்டு எறிவது போல, அவள் முன் பரிசுப் பொருள்களை எறிந்தால், தான் கூப்பிட்ட குரலுக்கு அவள் விளையாட வரும் பொம்மையாகிவிடுவாள் என்று அவன் கணக்குப் போட்டான்.

அது தப்புக் கணக்காகப் போயிற்று. வசந்தா வெறும் பரிசுப் பொருள்களை வாங்கிக்கொண்டதுடன் நிற்க வில்லை. அவனையே தன் வாழ்க்கைக்குத் துணையாகக் கேட்டாள். கேட்டவள் சும்மா இருக்கவில்லை. தனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பை, சிநேகிதத்தை ஊர் முழுவதும் அறிவித்தாள். தற்செயலாக வந்த அவனுடைய தகப்பனாரிடமே கோதண்டராமனை அனுப்பினாள்.



ஊராரின் சிரிப்பொலி அவனுடைய காதில் நாராசமாகக் கேட்டது.

அவமானம்! அவனை யாருமே ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. பெற்ற தந்தையே, பலர் முன்னிலையில் ஓர் ஓட்டலில் இறங்கி, 'உனக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை' என்பதை ஊராருக்குக் காட்டினார். மகாலிங்கம் பரசுராமனுடைய திருப்திக்காகவாவது அவனை விருந்துக்கு அழைத்தார். ஆனால் நாதன் அவனைத் தம் வீட்டுப் பக்கமே அழைக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் காரணம் அப்புதான் என்று திடீரென்று தோன்றியது. நாதனிடம் அவன்தான் எல்லாம் சொல்லி மனத்தைக் கலைத்திருக்க வேண்டும். ஜூலியின் விவகாரம், அவனுடைய பழக்க வழக்கங்கள், கடைசியாக வசந்தாவின் கதை எல்லாமே அவன் மூலமாகத்தான் நாதனுக்கும் மகாலிங்கத்துக்கும், ஏன் எல்லாருக்குமே தெரிந்திருக்க வேண்டும். அவனுடைய தகப்பனாரிடம் கோதண்டராமனை அனுப்பியதே அப்புவாகத்தான் இருக்க வேண்டும்! அவன்தானே அன்று மத்தியானம், வசந்தாவின் வீட்டுக்கு வந்து பரிசுப் பொருள்களைத் திருப்பிக் கொடுக்கச் சொன்னான்? - நளினி அவனைக் காதலிக்கிறாள் என்று பூடகமாகச் சொல்லி ஏமாற்றி அவனை வசந்தா வீட்டிலிருந்து வெளியேற வைத்தான்?

இதே அப்பு, ஜயலட்சுமியின் மனத்திலும் தூபம் போட்டிருக்கிறான். ஸ்ரீதரை வெறுக்கும் அளவுக்கு ஜயலட்சுமி அப்புவின் வார்த்தைகளில் மயங்கியிருக்கிறாள். இதெல்லாம் ஏன்? ஜயலட்சுமியின் ஆதரவு ஸ்ரீதருக்குக் கிடைத்துவிட்டால் ஒரு வேளை தன் பெண்ணை அவனுக்கே கொடுக்க முடிவு செய்வாள் என்ற எண்ணமா? இதேபோல நாதனிடமும் அடிக்கடி அவன் என்ன

என்னவோ சொல்லி அவருடைய மூளையைக் குழப்பி யிருக்க வேண்டும்.

எங்கே திரும்பினாலும் ஏமாற்றம், தோல்வி, அவமானம். கம்பெனியில் அதிகாரம் இல்லை. ஊராரிடையே மதிப்பு இல்லை. அவன் ஊட்டிக்கே அந்நியனாகிவிட்டான்.

ஸ்ரீதர் எத்தனை நேரந்தான் தனக்குள்ளேயே பொருமிக் கொண்டானோ அவனுக்கே தெரியாது. உட்கார்ந்தவன் எழுந்தான். வீட்டினுள்ளேயே அடிபட்ட புலிபோலத் திரிந்தான். மீண்டும் உட்கார்ந்தான் வாயில் வைத்த சிகரெட் அணையவே இல்லை. யந்திரக் குழாயிலிருந்து வருவதுபோலப் புகை வந்துகொண்டே யிருந்தது.

அன்று முழுவதும் சாப்பிடவில்லை என்ற நினைவு எழுந்தபோதிலும், சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாகவில்லை. வீட்டினுள் மேலும் பொருமிக்கொண்டே இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும் என்ற பயம் திடீரென்று பிறந்தது.

வீட்டைப் பூட்டவும் மறந்தவனாய் அவன் வெளியே வந்தான். ஊட்டி இருட்டிவிட்டதைக்கூட உணரவில்லை. கண் யந்திரமாகக் கடிகாரத்தைப் பார்த்ததே தவிர, மணி என்ன என்பதை அவன் புரிந்துகொள்ளவில்லை.

சாலையின் ஓரமாக, எங்கே போகிறோம் என்ற கேள்வியே மனத்தில் எழாமல் அவன் நடந்து கொண்டிருந்தான்.

சாலையில் ஜன நடமாட்டம் இல்லை. இரண்டொரு கார்கள் மட்டும் அவனைத் தாண்டி வேகமாகப் போயின. இடப்புறமாக ஒரு பெரிய யூகலிப்டஸ் தோப்பு. மரங்களின் அடர்த்தியில், எல்லாமே பெரிய இருட்டுக் கொத்தாகத் தோன்றியது.



சரிவில் இறங்கிக்கொண்டிருக்கையில் யாரோ ஒருவன் எதிரே சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்தான். அவன் யாராக இருக்கக்கூடும் என்பதைக்கூட ஸ்ரீதர் எண்ணிப் பார்க்க வில்லை.

சைக்கிள் அவன் அருகில் வந்தது.

''ஹலோ, மிஸ்டர் ஸ்ரீதர்! எங்கே நடந்து போறே? சாப்பாட்டுக்கா? வேலைக்காரன் கொண்டு வரவில்லை?''

என்ன வார்த்தைகளைக் கேட்கிறான் என்று புரிய வில்லையாயினும், 'ஸ்ரீதர்' என்ற வார்த்தை அவனைத் தட்டி எழுப்பியது.

''யாரு?''

''அப்பு.''

''என்ன கேட்டே?''

''சாப்பாட்டுக்குப் போறியான்னு கேட்டேன்.''

''ஆமாம்.'' ஸ்ரீதர் மெல்ல மெல்ல உண்மை உலகுக்குத் திரும்பினான்.

''உன் அப்பாவை ரெயிலேத்திவிட்டான் அப்பு. பாவம்! உன்னை நெனைச்சு ரொம்பத் துக்கப்பட்டார். நீ திருந்திவிடுவாய்னு அப்பு தைரியம் சொன்னான்.''

''அப்படியா? ரொம்ப தாங்க்ஸ்.''

''அப்பு இப்பத்தான் கோதண்டராமன் வீட்டிலிருந்து வர்றான். இனிமே நேரே மகாலிங்கம் வீடு.....''

''அப்பு.'' ஸ்ரீதர் குழைந்தான்.

''என்ன, ஸ்ரீதர்?''

''என்னுடன் இப்போ வாயேன்.''

''எங்கே?''

''வீட்டுக்கு.''

''நீ சாப்பாட்டுக்குப் போகலியா?''

''அப்புறம் போய்க்கொள்ளுகிறேன்.''

''இப்போ எதற்கு விட்டுக்கு?''

''என் மனசே சரியில்லை. கொஞ்சநேரம் பேசிக் கொண்டிரு.''

''உம், சரி, நாளைக்கு மகாலிங்கத்திடம் சொல்லிக் கொண்டால் போகிறது. இல்லாமப் போனா, உன் வீட்டு டெலிபோன் இருக்கவே இருக்கு.''

''ஆமாம், போன் பண்ணிக்கொள்.''

ஸ்ரீதர் திரும்பி நடந்தான். உடன் சைக்கிளைத் தள்ளியவாறு அப்பு சென்றான்.

ஸ்ரீதருடைய வீட்டை அடையும்போது மணி எட்டரை. அக்கம்பக்கத்தில் ஆள் அரவமே இல்லை. எதிர்வீடு, தெருவைத் தாண்டி ஒரு மேட்டில் இருந்தது.

சைக்கிளைத் திண்ணையில் சார்த்திவிட்டு, ஹாலுக்குள் பிரவேசித்தான் அப்பு. ஒரு சோபாவில் உட்கார்ந்து, இரண்டு கால்களையும் தூக்கிப் போட்டுக் கொண்டான்.

''ஸ்ரீதர், அப்புவும் எத்தனையோ சோபாக்களில் உட்கார்ந்திருக்கிறான். இந்தச் சுகம் எதிலும் இல்லை.''

ஸ்ரீதர் வாசற்கதவைச் சார்த்தித் தாழிட்டான்.

''ஆமாம், ஆமாம்.'' சொன்னவன், ஹாலின் மற்றொரு கதவையும் தாழிட்டான்.

''எதுக்கு எல்லாக் கதவுகளையும் சாத்தறே?''

''போகப் போகத் தெரியும்.'' ஸ்ரீதர் ஹாலின் கோடிக்குச் சென்று, கோட்டைக் கழற்றினான். இடுப்பிலிருந்து தோல் பெல்ட்டைக் கழற்றினான்.



''சாப்பாட்டுக்குப் போகப்போறேன்னு சொன்னே. எதுக்குக் கழட்டறே? டிரஸ் மாத்திக்கப் போறியா?''

ஹாலின் கோடியில் இருந்தவாறே ஸ்ரீதர், ''அப்பு'' என்றான்.

குரல் மாற்றத்தைக் கேட்ட அப்பு அவனைப் பார்த்தான். ஸ்ரீதருடைய கண்ணில் பிரதிபலித்த வெறியை உணர்ந்துகொண்டான். அவன் சோபாவை விட்டு அசைய வில்லை.

''என்ன?''

''உன் சின்ன வயசில் உன் அப்பா அடித்திருக்கிறாரோ என்னவோ தெரியாது. பள்ளிக்கூடத்தில் வாத்தியார் அடித்திருக்கிறாரோ என்னவோ தெரியாது. அதுக்குப் பிறகு....''

''அப்புவை இந்த ஊட்டியில் இதுவரையில் யாருமே தொட்டதில்லை.''

''அப்படியானால் அந்தப் பெருமை முதல்முதலாக ஸ்ரீதருக்குக் கிடைக்கப்போகிறது.''

''ரொம்ப சந்தோஷம்.''

அப்புவின் திறந்த வாய் மூடுமுன், ஸ்ரீதருடைய பெல்ட் பாய்ந்து வந்து முகத்தைத் தாக்கியது. மூடின பின் இன்னொன்று. உடல்வலியில் நெளிகையிலேயே, முதுகிலும் தோள் பட்டையிலும் பெல்ட் சீறி விளையாடியது.

''கொஞ்சம் இரு!'' அப்பு கத்தினான்.

ஊசி மழையாக பெல்ட் விழுந்து கொண்டிருக்கையிலே அப்பு அவசரமாகத் தன் ஷர்ட்டைக் கழற்றினான்.

''உன் பெருமைக்கு முத்திரைகள் வேண்டாமா?''

பெல்ட் மீண்டும் முதுகைப் பதம் பார்க்கலாயிற்று.

''பாவம்! பெல்ட்டுக்கு வலிக்கப்போகிறது!''

ஸ்ரீதர் பெல்ட்டைத் தூக்கி எறிந்தான். வலக்கை முஷ்டி ஓங்கி அப்புவின் தாடையைத் தாக்கியது. வலக்கை இறங்கியபோது இடக் கை அப்புவின் வலக் கன்னத்தில் விழுந்தது.

''எழுந்திருடா, நாயே!''

இப்போது ஸ்ரீதர் தன் வலக்காலை அப்புவின் மார்பின்மேல் பிரயோகித்தான். பூட்ஸின் ஓர் ஆணி இடப் பக்கமாகப் பாய்ந்து வெளிவந்தது.

அப்பு இன்னும் உட்கார்ந்திருந்தான். கடை வாயி லிருந்தும் கசிந்த ரத்தம் தாடைவழியாக வழிந்து, தோள்பட்டையில் விழுந்து, மார்புக்கு இறங்கி, ஆணி வெளியே தள்ளிய ரத்தத்துடன் ஒன்று சேர்ந்தது.

''எழுந்திருடா, நாயே!''

''அப்பு எழுந்திருப்பான், மிஸ்டர் ஸ்ரீதர். உன் பசி தீர்ந்ததா?''

இப்போது வலக்கரம் பாய்ந்து அப்புவின் இடக் கன்னத்தைத் தாக்கியது. அப்பு மயங்கி விழாமல், வலியில் துடிதுடிக்காமல் எப்போதும்போல நிதானமாகப் பேசுகிறான். அடித்து அடித்து அவனுடைய கைதான் வலிக்கிறது. அப்புவின் ஒல்லியான உடலில் சதை இல்லைதான். எலும்புகளுங்கூட இல்லையா? வஜ்ரத்தால் ஆன உடற்கட்டா?

''என் பசி தீராத பசி.''

''அப்போ அப்பு எழுந்திருக்க மாட்டான்.''

''ராஸ்கல்! கெட் அவுட் அண்டு கிளியர் அவுட்!''

''முடியாது. அப்பு இன்னிக்கு இங்கேயே ரெஸ்ட் எடுத்துக்கொள்ளப் போகிறான்.''



அடுத்த கணம் ஸ்ரீதர், அவனுடைய கையைப் பிடித்து இழுத்தான். இழுத்த வேகத்தில் அப்பு தடுமாறிக் கீழே கார்ப்பெட்டில் விழுந்தான்.

''கெட் அப்!''

''உன் கார்ப்பெட்டில் அப்புவின் ரத்தம் சொட்டிவிட்டது.''

அவன் கீழேயே உட்கார, ஸ்ரீதர் காலால் உதைத்தான். இரண்டாவது உதை முகத்தில் விழுந்தது. கடைவாயிலிருந்து ரத்தம் பெருகியது.

உட்கார்ந்துவிட்ட அப்புவை ஸ்ரீதர் கரகரவென்று தூக்கினான். வாசற்கதவைத் திறந்தான்.

''இனிமேல் என்னைப்பற்றி ஊட்டியில் யாரிடமும் வாய் திறக்காதே! உன் கைவரிசையை உள்ளூர் ஜனங்களிடம் காட்டிக்கொள்.''

அப்பு சிரித்தான். ரத்தச் சிவப்புச் சிரிப்பு!

''அப்புவினால் பேசறதை நிறுத்த முடியாது.''

''நாக்கை அறுத்துவிடுவேன், ராஸ்கல்!''

''அதைப் பாக்கி வைப்பானேன்? முடித்து ஒரு வழியாய் அனுப்பிவிடு.''

''போடா, மடையா!''

''அப்பு போகிறான். அந்த ரத்தக் கறையை எல்லாம் இன்னிக்கே துடைத்து அலம்பிவிடு. அப்பு இப்போ செத்துப் போயிட்டா, போலீஸுக்கு ருசு கிடைத்துவிடும்.''

ஹால் கதவு 'தடார்' என்று சாத்தப்பட்டது. இருட்டில் தடுமாறிய அப்பு மெதுவாக எழுந்தான். கால் நிற்கக் கஷ்டப்பட்டது. இடுப்பில் வலி இம்சித்தது.

ஒரு நிமிஷம் நின்றவன் அடுத்த கணம் கதவைத் தட்டினான்.

''என்ன வேணும், ராஸ்கல்?''

''அப்பு கர்ச்சீப்பை ஸோபாவிலேயே விட்டு விட்டான்.''

ஜன்னல் வழியாக ஒரு கைக்குட்டை வந்து திண்ணையில் விழுந்தது. அப்பு அதைப் பத்திரமாகப் பாண்ட் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, அவிழ்ந்த ஷர்ட்டைத் தோளில் மாட்டிக்கொண்டான்.

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு அப்பு நடக்க ஆரம்பித்தான். கண்கள் இருண்டன. உடல் தள்ளாடியது. இடது முழங்கால் உடலைவிட்டுக் கழன்றுவிட்டது போன்ற பிரமை. தாடைவீங்கி ஆயிரம் ஊசிகள் சேர்ந்து குத்தின. மார்பின் இடப் புறத்தில் வண்டு துளைத்தது போல் வலி.

அச்சம்மாவின் வீட்டை அடைந்த அப்பு சைக்கிளை வாசலில் தள்ளிவிட்டு, அறைக்குள் விழுந்தான்.

''அச்சம்மா!''

''அப்புவா! என்ன உன்னை ரெண்டு நாளாக் காணவே இல்லை? நேத்து, போகம்மா கோத்தகிரியிலிருந்து வந்தாள். இப்போ சாப்பிடுகிறாள்.''

''இப்போ ஒரு செம்பு நிறையத் தண்ணி கொண்டா. பச்சைத் தண்ணி.''

அப்புவின் குரலில் ஒலித்த முனகல் புதுமையாக இருந்தது. எதற்கு அப்பு தண்ணீர் கேட்கிறான்?

அச்சம்மா வந்தாள்.

''ஐயோ அப்பு! என்னடா இது?''

அடுத்த விநாடி போகம்மா சாப்பாட்டை மறந்து ஓடோடி வந்தாள்.

சுருண்டு கிடந்த அப்புவின் கண்கள் அகலத் திறந்தன. முகத்திலும் மார்பிலும் இருந்த இரத்தக் கறைகளைக் கண்டு



திடுக்கிட்டுப் போகம்மா நிற்க, அச்சம்மா மீண்டும், ''ஐயோ!'' என்று கத்தினாள். போகம்மா கையலம்ப உள்ளே ஓட, ''முதல்லே தண்ணி கொண்டா அச்சம்மா'' என்றான் அப்பு.

''உன்னை யாருடா ராஜா அடிச்சான்? தோள்பட்டையெல்லாம் தழும்பு தெரியறதே!''

''யாரும் அடிக்கலே, அச்சம்மா. அப்பு சைக்கிளிலிருந்து கீழே விழுந்தான்; அவ்வளவுதான். தண்ணி எங்கே?''

தண்ணீருடன் வந்த போகம்மா அப்புவைப் பார்த்தாள். ''அப்பு, நீ பொய் சொல்றே'' என்றாள் அவள்.

அப்பு கண்ணை மூடிணவன்தான். மறுநாள் சாயங்காலந்தான் கண் திறந்தான்.

ஆனால் அதற்குள் ஒரு தீ ஊட்டியில் மூண்டெழுந்துவிட்டதை அறிந்தான்.

# 44

## கண்ணனுடைய கவலை

அப்பு அடிபட்டு உணர்வின்றிக் கிடக்கிறான் என்ற செய்தி காட்டுத்தீப் போலப் பரவிவிட்டது. அச்சம்மா அழ, அப்புவின் முதுகுக்கும் தோளுக்கும் போகம்மா ஒத்தடம் கொடுக்க, பக்கத்து வீட்டில் குடியிருக்கும் வாட்ச்மானின் மனைவி டாக்டரிடம் ஓடினாள். டாக்டருடைய கம்பவுண்டர் நாயர் தன்னுடைய மைத்துனனிடம் உடனடியாகச் சமாசாரத்தைத் தெரிவித்தான். அந்த மைத்துனன் நனினி இண்டஸ்ட்ரீஸில் ஒரு டிரைவர். அவன் கண்ணனிடம் ஓடினான். கண்ணன் இரவோடு இரவாக அப்புவைப் பார்க்க வந்தான்.

டாக்டர் வந்து போனபிறகு போகம்மாவின் சந்தேகம் தீர்ந்தது. அப்பு சைக்கிள் விபத்தில் சிக்கவில்லை. யாரோ தலைகால் தெரியாமல் நையப் புடைத்திருக்கிறார்கள். கண்ணன் வந்ததும் அவள் எல்லா விவரங்களையும் கூறினாள். மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அவன் அப்புவைப் பார்த்தான்.

அச்சம்மாவின் படுக்கையில் அப்பு கிடந்தான். மோவாயில் ஒரு பெரிய கட்டு. வலக் கன்னத்தில் கண்ணுக்குக் கீழே ஒரு பிளாஸ்திரி. இடது முழங்காலில் ஒரு பெரிய பாண்டேஜ். மார்பின் இடப்புறத்தில் ஒரு கட்டு.

கண்ணனுடைய கண்கள் கனத்தன. நெஞ்சில் இதுவரை அநுபவித்தறியாத ஒரு வலி. அப்புவை இந்த



ஊட்டியில் கை தீண்டி அடிக்கக் கூடியவர் யாராக இருக்க முடியும்? அவனுடைய சலனமற்ற முகத்தைப் பார்க்கையிலேயே விடை மின்னலாகத் தெறித்தது. அதே சமயம் கோபமும் அவனுள் பொறியாகக் கிளம்பி ஜ்வாலையாக வீசலாயிற்று. தன்னுடைய உடல் பதறுவதை அவன் உணர்ந்தான். ஒருகணம் தன்னுடைய அநுமானம் தப்பாக இருக்கக்கூடாதா என்று மனம் வேண்டியது.

கண்ணன் எவ்வளவு நேரந்தான் அப்புவின் கால்மாட்டில் நின்றுகொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது. அப்புவைப் பார்க்கப் பார்க்க நெஞ்சின் வலி அதிகமாகிக்கொண்டே போனாலும், அவனுடைய கோலம் அவனைத் திகைப்பிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தியது. முகத்தில் கட்டுக்கள் இருந்தபோதிலும் உடம்பெல்லாம் அடிபட்டுக் கிடந்தபோதிலும், வலியில் முகம் கருங்கவில்லை. ஒரு பச்சைக் குழந்தை மெய்ம்மறந்து தூங்குவது போல இருந்தது.

கண்ணனுடைய மௌனத்தைக் கலைக்கப் போகம்மா இஷ்டப்படாமற் போனாலும் அவன் வெகு நேரமாகச் சிலைபோல் நின்றிருப்பதை அவளால் பொறுக்க முடியவில்லை.

''உட்காரு கண்ணா'' என்றாள் அவள்.

''டீ போட்டுத் தரட்டுமா?'' என்று கேட்டாள் அச்சம்மா.

''வேண்டாம்'' என்று தலையை ஆட்டிவிட்டுக் கண்ணன் நகர்ந்தான்.

''உசிருக்குப் பயம் ஒன்றுமில்லையே?'' போகம்மா தன்னுடைய இதயத்தின் வலியில் நாத் தழுதழுக்கக் கேட்டாள்.

முதல்முதலாகக் கண்ணன் பேசினான். ''அப்புவால் சாக முடியாது. அவனுக்குச் சாகத் தெரியாது.''

அடுத்த கணம் அவன் வெளியேறினான்.

''கண்ணா, யார் இந்தப் பிள்ளையை இப்படி அடிச்சிருப்பாங்க?'' என்று கேட்டாள் அச்சம்மா.

கேள்வியே காதில் விழாததுபோலக் கண்ணன் வெளியேறி ஜீப்பில் ஏறிக்கொண்டான்.

ஜீப்பைச் செலுத்திய டிரைவர், ''ஸார், இந்த வேலையை எனக்கு வாங்கிக் கொடுத்ததே அப்புதான். எத்தனை தடவை மகாலிங்கத்திடம் எனக்காக நடந்திருக்கிறான் தெரியுமா?'' என்றான்.

கண்ணன் சிரித்தான். அதில் வெறுப்புப் புரையோடியது.

''இப்போ ஸ்ரீதர் வீட்டுக்குப் போ!'' என்றான்.

''அவருக்கு நாளைக்குச் சொல்லிக்கொள்ளலாம், ஸார். அவரும் பாவம் இன்னிக்கே தெரிந்தா மனசில் கஷ்டப்படுவார்'' என்றான் டிரைவர்.

கண்ணன், ''நான் சொன்னபடி செய்'' என்றான். என்றுமில்லாத கடுமை வார்த்தையில் தோய்ந்திருந்தது.

ஆனால் டிரைவரால் அதை உணர முடியவில்லை.

''இன்னிக்கு ராத்திரி அவரும் அப்புவுமா நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். அப்பு சைக்கிளைத் தள்ளிக்கொண்டே போனான்.''

கண்ணன் வாய் திறக்கவில்லை.

* * *



ஸ்ரீதரின் வீட்டை அடைந்தபோது மணி பதினொன்று. வீட்டில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

''மாதவன், நீ இங்கேயே இரு'' என்று டிரைவரிடம் கூறிவிட்டுக் கண்ணன் படியேறினான்.

முதல் தடவை கதவைத் தட்டியபோது குரல் ஏதும் கேட்கவில்லை.

இரண்டாவது தடவை பலமாகத் தட்டினான்.

''யார் அது?'' உள்ளிருந்து குரல் வந்தது.

''நான்தான் கண்ணன்.''

இப்போது குரல் கதவுக்கு மறுபுறத்திலிருந்து கேட்டது.

''என்ன வேணும்?''

''கதவைத் திற.''

''முடியாது. என்ன வேணுமானாலும் நாளைக்கு வந்து பார். இப்போது மணி பதினொன்று.''

''உன்னை இப்போதே பார்த்தாக வேண்டும். சீக்கிரம் கதவைத் திற.''

''வேண்டாம். இங்கேயிருந்து போய்விடு. நான் உன்னை எச்சரிக்கிறேன். கெட் அவுட் ஆஃப் திஸ் ப்ளேஸ்.''

''ஸ்ரீதர், பயமுறுத்தாதே. கதவைத் திற.''

''மாட்டேன். திறந்தால் உனக்குத்தான் கஷ்டம். அப்புறம் நீயும் அப்பு மாதிரி ரத்தம் பெருக ஓடுவாய்!''

கண்ணன் ஒரு கணம் யோசித்தான். பிறகு நிதானமான குரலில், ''ஸ்ரீதர், நீ இப்போ எத்தனை பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறாய் என்று உனக்கே தெரியாது. பொழுது விடிவதற்குள் ஊட்டியே உன்வீட்டு வாசலுக்கு

வந்துவிடும். அப்புறம் போலீஸ், கேஸ் என்று நீ அழுவாய். கதவைத் திற.''

அடுத்த கணம் தடாரென்று கதவு திறந்தது.

''நீ என்னைப் பயமுறுத்துகிறாயா, போலீஸ், கேஸ் என்று?''

ஸ்ரீதர் நிதானத்துடன் பேசவில்லை என்பதைக் கண்ணன் அவனைப் பார்த்ததும் புரிந்துகொண்டான். வழிமறித்து நின்ற அவனைத் தன் வலக்கையால் ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டுச் சோபாவை நோக்கி நடந்தான்.

ஒருவிநாடி நிலைகுலைந்த ஸ்ரீதர் சமாளித்துக் கொண்டான்.

''ஹூ ஆர் புஷிங் மி, ராஸ்கல்!'' என்று கத்தினான்.

கண்ணன் சோபாவில் உட்கார்ந்துகொண்டான். ஜமக்காளத்தில் சிதறின ரத்தத் துளிகள் கண்ணில் பட்டன.

ஸ்ரீதருடைய கத்தலைப் பொருட்படுத்தாமல், ''முதலில் உட்கார். உன் நன்மைக்குத்தான் சொல்லுகிறேன். உட்கார்'' என்றான்.

''நீ இப்போ உட்கார்ந்திருக்கிற சோபாவில்தான் அப்புவும் உட்கார்ந்திருந்தான். பூட்ஸ் காலால் உதை உதைத்தேன். அதிலேயே அவன் சுருண்டு விழுந்தான்!'' - சொல்லிவிட்டு ஸ்ரீதர் சிரித்தான்.

அவனுடைய கண்களில் தெறித்த வெறியைப் புரிந்துகொண்ட கண்ணன், ''நான் அந்த மாதிரி சுருண்டு விழ, நீ குறைஞ்சது இருபது தடவையாவது உதைக்க வேண்டும். அதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்போ நீ முதலில் வீட்டை விட்டு வேறு எங்காவது போய் இரவைக் கழி'' என்றான்.

''ஏன்?''



''அப்புவை நீ அடித்திருக்கிறாய்!''

''ஆமாம்.''

''மனித வேட்டை ஆடுகிற புலி இந்த ஊட்டியில் இருந்தால்கூட, அது அப்புவைத் தொடாது.''

''நான் தொட்டுவிட்டேனே.''

''அதன் விபரீத பலனை நீ எதிர்பார்த்திருந்தால் அப்புவின் நிழலைக் கூடத் தீண்டியிருக்கமாட்டாய்!''

''அப்பு என்ன மகாத்மா காந்தியா, இல்லை புத்தரா?''

''நான் அப்புவைப்பற்றிப் பேசுகிறேன். நீ தெய்வங்களை இழுக்கிறாய்!''

''என்ன விபரீத பலன்கள் உண்டாகப் போகிறது? அதையும் பார்த்துவிடுகிறேன்!''

''மிஸ்டர் ஸ்ரீதர். வேண்டாம். இந்த அர்த்த ராத்திரியில் நான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன் என்றால், விபரீதம் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று நானே பயந்திருக்கிறேன் என்பதைக் கொஞ்சம் நினைக்கப் பாரு.''

''தாங்க்ஸ், மிஸ்டர் கண்ணன். நௌ யூ கான் கோ.''

''உன் முரட்டுப் பிடிவாதத்தில், உன்னுடைய திமிரில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் நீ பேசுகிறாய், ஸ்ரீதர். நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு.''

''யூ பெட்டர் ஷட் அப்.''

''அப்புவுடன் நீயும் நானும் நெருங்கிப் பழகுகிறோம், ஸ்ரீதர். அதனால் அவனுடைய குறைகள் மட்டும் நமக்குப் பெரிசாத் தெரியறது. ஆனால் அவனை உடன் பிறந்த சகோதரனாகவும் பெறாத பிள்ளையாகவும் நேசிக்கிறவர்கள் இந்த ஊட்டியில் நூற்றுக்கணக்காக இருக்கிறார்கள்! எத்தனையோ பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது.

கல்யாணம் ஆகியிருக்கிறது. அவனுடைய உதவியால் எத்தனையோ பேர் சங்கடங்களிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். அப்பு இதுமாதிரி அடிபட்டுக் கிடக்கிறான், அதற்குக் காரணம் நீதான் என்று தெரிந்தால் இவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள். இந்த ஜன சமுத்திரத்தின் நன்றியும் விசுவாசமும் அன்பும் பெருகி எழும்போது, அதன் அலைகள் உன்னை விழுங்கிவிடும். எங்காவது போய்த் தலைமறைவாக இரு. அப்பு குணமாகிப் பழையபடி நடமாட ஆரம்பித்தப்புறம் வா. அப்புறம் அவனே அந்தச் சமுத்திரத்தை அடக்குவான்!''

ஸ்ரீதர் சிரிக்க ஆரம்பித்தான். அந்தச் சிரிப்பில் வெறுப்பு, நையாண்டி, ஆனந்தம் எல்லாம் தாண்டவமாடின.

''சாரிங் க்ராஸில் அப்புவுக்கு ஒரு சிலை எழுப்பச் சொல்லு, அந்த மகாசமுத்திரத்திடம். அப்பு குணமாகி நடந்தால் அவனுடைய காலை ஒடிப்பேன்.''

கண்ணன் மெதுவாக எழுந்தான். ஸ்ரீதர் அவனுடைய நிதானமான வேகத்தை உணருகையிலேயே தன்னுடைய தாடையை ஏதே ஒன்று திடீரென்று தாக்குவதை உணர்ந்தான். கை தானாகத் தாடைக்கு ஓடியது. அடுத்த கணம் அவன் தன் அருகில் இருந்த சோபாவில் உட்கார்ந்தான். கண்மூடித் திறக்கும் நேரத்தினுள் கண்ணன் தன்னைத் தாக்கிவிட்டான் என்பதை அவனால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை; நம்பவும் முடியவில்லை.

''ஸ்ரீதர், எப்படி இருக்கிறது? இது நான் ஓர் ஆள் கொடுத்த ஒரு குத்து. இதிலேயே நீ சரிந்து விழுந்துவிட்டாய். நாளைக் காலையில் பாக்டரியில் வேலை செய்கிற தொழிலாளிகளும் கம்பெனிகளில் இருக்கிற பியூன்களும் சேர்ந்து கொடுக்கிறபோது, நீ எங்கே இருப்பாய்?''



கீழ் உதட்டின் ஓரத்தில் கசிந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே ஸ்ரீதர் கண்ணனைப் பார்த்தான்.

''நீ என்னை அடித்துவிட்டாய்!''

''இது ஒரு ஸாம்பிள்னு காட்டத்தான், ஸ்ரீதர். வாய் வார்த்தையால் சொன்னேன். உன் மண்டையில் ஏறவில்லை.''

''நான் ரெண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற என்ஜினியர்.''

''இதைப்பற்றி அப்புவைத் தெய்வமாக நினைக்கிறவர்கள் கவலைப்பட மாட்டார்கள்! ஜாக்கிரதை!''

''இப்போ நான் எங்கே போகிறதாம்?''

''ஓர் ஒட்டலில் ரூம் பார். அதிகாலையில் மேட்டுப்பாளையம் போய்விடு. அங்கேயிருந்து கோயமுத்தூர் பக்கந்தான். பத்து நாளோ பதினைஞ்சு நாளோ கழித்து வா.''

''பாக்டரி?''

''நான் மகாலிங்கத்திடமும் நளினியிடமும் சொல்லிக் கொள்ளுகிறேன்.''

''அவர்களுக்கு இந்த விஷயம் தெரியுமா?''

''இன்னும் சொல்லவில்லை.''

''நாதனுக்கு? ராதிகாவுக்கு?''

''நான் அப்புவைப் பார்த்துவிட்டு நேரே உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன். ஏன் தெரியுமா, நாளைக்கு எல்லாருமாகச் சேர்ந்து உன்னை நார்நாராகக் கிழித்துப் போட்டுவிடுவார்களே என்று பயந்துதான்.''

''சாமான்களை எல்லாம் என்ன செய்கிறது?''

''அவசியமான துணிகளை மட்டும் எடுத்துக்கொள். பணத்தை இங்கே வைக்காதே!''

''இந்த வேளையில் எப்படித் தூக்கிக்கொண்டு போறது?''

''எல்லாம் தயார் செய்துவை. என் ஜீப்பில் ஏறி வந்தால், நீ ஓடுவதற்கு நான் உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தேன் என்பார்கள். நீ கிடைக்காத ஏமாற்றத்தில் என்னைக் கிழித்துப் போடுவார்கள். சாமான்களைத் தயாராக எடுத்து வைத்துக்கொண்ட பிறகு, சாரிங்க்ராஸ் வரை நடந்துபோய் டாக்ஸியைப் பிடித்துக்கொண்டு போ.''

''இந்த வேளையில் டாக்ஸி கிடைக்குமா?''

''சாதாரணமாகக் கிடைக்காது. ஆனால் வண்டிக்குள்ளேயே டிரைவர் தூங்கிக்கொண்டிருப்பான். போய்ப் பார்.''

ஸ்ரீதர் திடீரென்று அலுத்துக்கொண்டான்.

''இந்தப் பாழாய்ப் போகிற ஊட்டியில் ஏன் கால் வைத்தோம்னு ஆயிடுத்து.''

''நீ கால் வைத்ததில் தப்பு இல்லை. அதை ஊன்றிக் கொள்ளமுடியாதபடி நீயே உன்னை ஆக்கிக்கொண்டதுதான் தப்பு. உன் மனசைக் கட்டிப் போட உனக்குத் தெரியவில்லை. காரணம், படிச்சிருந்தும் உன் மவசு பக்குவமடையவில்லை.''

''எனக்குப் புத்தி சொல்ற அளவுக்கு உன் மனசு பக்குவமாயிடுத்து என்கிற நினைப்பா உனக்கு?''

''அதைப்பற்றி இப்போ விவாதிக்கிறதில் புண்ணியமில்லை. நான் வருகிறேன், ஜாக்கிரதை!''

கண்ணன் வெளியேறுவதையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீதர், கையில் இருந்து கைக்குட்டையைச் சோபாவிலேயே எறிந்துவிட்டு எழுந்தான்.

ஜீப்பில் ஏறினதும் டிரைவர், ''என்னங்க, ஸ்ரீதர் எதற்கு அப்புவை அடிச்சாராம்?'' என்று கேட்டான்.



கண்ணனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''உனக்கு எப்படித் தெரியும், மாதவன்? நாங்க பேசறதைக் கேட்டுக்கொண்டிருந்தாயா?''

''என்னை மன்னிச்சுடுங்க. நீங்க ரொம்ப நேரமா, ''கதவைத் திற, கதவைத் திற'ன்னு சொல்லியும் அவர் திறக்கல்லை. எனக்குச் சந்தேகமும் பயமும் வந்துடுத்து. கடைசியா நீங்க உள்ளே போய்க் கதவைச் சாத்தினதும், உங்களுக்கும் ஏதாவது ஆபத்து வந்துடுமோன்னு கதவண்டை வந்து நின்னேன்.''

''இப்போ எல்லாம் புரிஞ்சுதா?'' கண்ணனுக்கு அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை.

''புரிஞ்சுதுங்க.''

''ரொம்ப சரி. இனிமே மூச்சுவிடாதே. நீயும் நானும் இங்கே வந்ததே யாருக்கும் தெரியக்கூடாது.''

மாதவன் வாயே திறக்கவில்லை. மனத்தில், 'ஸ்ரீதர் ஓர் என்ஜினியர். பாக்டரியில் பெரிய பதவி வகிப்பவர். முதலாளிக்கு வேண்டியவர்' என்கிற எண்ணங்களெல்லாம் மறைந்தன. அப்புவைக் கண்மூக்குத் தெரியாமல் அடித்தவன் என்ற ஒரே ஒரு நினைப்புத்தான் மேலோங்கி நின்றது.

''என்ன, நான் சொன்னதற்குப் பதிலே இல்லை. மூச்சுப் பேச்சு இருக்கப்படாது, மாதவன்!''

''அதைப்பத்தி இப்ப என்னங்க?'' என்றான்.

அவனுடைய மழுப்பலில் தன்னுடைய தோல்வியைக் கண்டான் கண்ணன்.

ஜீப் நகர ஆரம்பித்தது. மழையும் தூறலுடன் தொடங்கியது.

## 45

# அன்று இரவு

**க**ண்ணன் சென்றபின் ஸ்ரீதர் மெதுவாக நடந்து வாசற்கதவைத் தாழிட்டான். தன்னுடைய கையும் காலும் நடுங்குவதை உணர்ந்தபோது அவனுக்கே வெட்கமாகக்கூட இருந்தது. மனம் ஏன் பயப்படுகிறது? நினைக்க நினைக்க நடந்ததெல்லாமே கனவு என்றும், திடீரென்று விழித்துக் கொள்ளவே உடல் பயத்தில் நடுங்கி வேர்க்கிறது என்றும் தோன்றியது. மீண்டும் சோபாவண்டை வந்தபோது அப்புவின் ரத்தக் கறையும், சோபாமீது அவன் தூக்கி எறிந்திருந்த கைக்குட்டையில் கறையேறியிருந்த அவனுடைய ரத்தமும், 'நடந்தவை எல்லாம் கனவல்ல, உண்மைச் சம்பவங்களே' என்று மண்டையில் அடித்தன. அந்தக் கணமே, 'ஏன் அப்புவை அடித்து, இப்படி ஒரு வம்பை நம் வீட்டு வாசலுக்கு இழுத்துக்கொண்டு வந்தோம்?' என்றுகூட மனம் கசிந்தது.

பக்கத்து அறைக்குள் அவன் சென்றான். துணிகள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன. மேஜை மேலும் அலமாரியினுள்ளும் எத்தனையோ பொருள்கள் இருந்தன. ஜெர்மனியில் வாங்கிய காமரா, லண்டனில் வாங்கிய ரிகார்ட் ப்ளேயர், ஐரோப்பிய சங்கீதத்தை எழுப்பும் தட்டுக்கள், ரேடியோ என்று எத்தனையோ சாமான்கள். எதை எடுத்துக்கொள்ளுவது? எதை விட்டுப்போவது? திடீரென்று வீட்டைப் புறக்கணித்துவிட்டு, உயிருக்காக ஓடுகிறவனுடைய நிலையில் தான் இருப்பதை ஸ்ரீதர் உணர்ந்தான்.



கடைசியில் கண்ணன் சொல்லிக் கொடுத்தது போல ஒரு பெட்டியில் பத்து நாட்களுக்குத் தேவையான துணி களைமட்டும் எடுத்து வைத்துக்கொண்டான். பெட்டியை மூடிய பிறகு, ஏதாவது வைக்க மறந்து போய்விட்டோமா என்று எண்ணிப் பார்த்தான். எதுவும் ஞாபகத்துக்கு வரவில்லை.

அவன் கதவைத் திறந்தபோது மழை நன்றாகப் பெய்துகொண்டிருந்தது. குளிர் ஊசியாகக் குத்தியது. இந்த மழையில் குடையுடன் நடந்தாலும், காற்றின் வேகத்தில் முழங்கால்வரை நனைந்துவிடும் என்று தோன்றியது. அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மழையின் வேகம் ஒருமாதிரி அடங்கும்வரை காத்துக் கொண்டிருக்கவேண்டியதுதான். வேறு வழி இல்லை என்று தன்னுள்ளேயே முணுமுணுத்துக்கொண்டான். வாசற்கதவைச் சார்த்திவிட்டுச் சோபாவில் உட்கார்ந்தான்.

திடீரென்று அப்புவின் உருவம் கண்முன் தோன்றியது. தன்னையும் மீறிய வெறியில் அப்புவை அடித்துவிட்டதை நினைத்துப் பார்த்தான். மார்பில் காலால் உதைத்தானே, அந்த உதை எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே காயத்தை ஏற்படுத்திவிட்டதா? அப்பு இப்போது எந்த நிலையில் இருக்கிறான்? அவனிடம் சிக்கிக்கொண்டிருக்கையில் அப்பு பேசிய பேச்செல்லாம் அவனுடைய சுபாவத்தை ஒட்டியே இருந்தது. இரண்டொரு தடவை சிரிக்கவும் சிரித்தான். அப்படியானால் அவனுடைய உடலுக்கு வலியே தெரியவில்லை என்றுதான் அர்த்தமா? அல்லது எல்லா அடிகளையும் உதைகளையும் தாங்கிக்கொண்ட பின் உடல் வலியில் வீழ்ந்துவிட்டதா?

திடீரென்று, அப்பு உயிர் பிழைக்காமற் போய்விடுவானோ என்ற கேள்வியும் சந்தேகமும் அவனுள் தோன்றின. அந்தக் கணமே புதுப் பயம் புகுந்து நடுங்கச்

செய்தது. ஸ்ரீதரைக் கைது செய்வார்கள். கொலைக் குற்றம் அவன்மீது சாட்டப்படும். ஊட்டியே திரண்டுவந்து அவனுக்கு எதிராகச் சாட்சி சொல்லும். நீதிபதி, 'ஸ்ரீதருக்குக் கொலை செய்யும் எண்ணம் இல்லை. அவனுடைய வெறியில்தான் அப்புவை அடித்திருக்கிறான்' என்று தீர்மானம் செய்வார். ஆனால் விடுதலை செய்யமாட்டார். ஏழு வருஷமோ பத்து வருஷமோ தண்டனை கிடைக்கும்.

ஸ்ரீதர் கண்முன் அவனே ஒரு கைதியாகத் தோன்றினான். அவன் சிறைச்சாலையினுள் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். அவனைப் பார்க்க இதுவரையில் யாருமே, உறவினரோ சிநேகிதர்களோ வரவில்லை. திடீரென்று, ஒருவன் துள்ளிக்கொண்டு சிரித்த முகத்துடன் ஓடோடி வருகிறான். ஸ்ரீதர் கூர்ந்து கவனிக்கிறான். அவனைப் பார்க்க வந்திருக்கிறவனைக் கண்டதும் தூக்கிவாரிப் போடுகிறது. அப்பு எப்படி வரமுடியும்? அவனைக் கொன்ற குற்றத்துக்காகத்தானே ஸ்ரீதரே ஜெயிலில் இருக்கிறான்? 'அப்பு, நீ எப்படி வந்தே?' என்று ஸ்ரீதர் கத்துகிறான். அப்பு தனக்கே உரிய பாணியில், 'அப்பு இன்னிக்குத்தான் இந்த ஊருக்கு வந்தான். எதுக்குத் தெரியுமோ? உன்னைப் பார்க்க!' என்கிறான்.

ஸ்ரீதர் கண் விழித்தான். இத்தனை நேரமும் தான் சோபாவில் உட்கார்ந்தபடியே தூங்கியிருப்பதை உணர்ந்தான். கண்ட சொப்பனத்தால் உடல் வெடவெடத்தது. அடுத்த கணம் எழுந்து கதவைத் திறந்து பார்த்தான். மழை எவ்வளவோ குறைந்திருந்தது. ஆனால் மீண்டும் அது புத்துயிர் பெற்றுக் கொட்டப் போகிறது என்பதை வானில் குழுமியிருந்த கருமேகங்கள் அறிவித்தன. அவசர அவசரமாகக் குடையை எடுத்துக்கொண்டு அவன் வெளியேறினான். பாதிதூரம் போன பின்புதான் வீட்டைப் பூட்டினோமா இல்லையா என்ற சந்தேகமே எழுந்தது.



ஸ்ரீதருடைய அதிருஷ்டம் சாரிங் கிராஸில் ஒரு டாக்ஸிகூட இல்லை. அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. குன்னூர் ரோடிலும் சரி, கலெக்டர் ஆபீசுக்குப் போகிற சாலையிலும் சரி, ஆள் அரவமே அந்த வேளையில் இருக்காது. டாக்ஸியைத் தேட வேண்டுமானால் நேரே நடக்க வேண்டியதுதான். ரெயில்வே ஸ்டேஷனை அடைவதற்குள் தெருவோரத்திலோ பெட்ரோல் பங்குகளிலோ இரண்டொரு டாக்ஸிகள் நின்று கொண்டிருக்கலாம். ஸ்ரீதர் மீண்டும் நடக்க ஆரம்பித்தான். இடையிடையே கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நீல ஒளியில் பன்னிரண்டரை, பன்னிரண்டு முப்பத்தாறு, முப்பத்தேழு என்று கடிகாரம் நேரத்தை நகர்த்திக் கொண்டிருந்தது.

சினிமாத் தியேட்டருக்கு எதிராக அம்பாஸடர் ஒன்று நின்றுகொண்டிருந்தது. குளிரில் விறைத்துப் போய்க் கொண்டிருந்த உடம்பில் திடீரென்று சூடு ஏறியது. டாக்ஸிக்குப் பக்கத்தில் நின்று கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான். ஒருவன் இந்த உலகத்தின் பிரக்ஞையே இல்லாமல் பின்ஸீட்டில் உடலைக் குறுக்கி வளைத்துக் தூங்கிக்கொண்டிருந்தான்.

ஸ்ரீதர் அவனை எழுப்புவதற்குள் ஒரு யுகமே தோன்றி மறைந்துவிட்டது.

''என்ன ஸார் வேணும்?''

''டாக்ஸி வேணும்பா.''

''டிரைவர் இல்லீங்க.''

''நீங்க?''

''எனக்கு ஓட்டத் தெரியாது.''

ஸ்ரீதர் ஏமாற்றத்துடன் மேலே நடக்க ஆரம்பித்தான். ரெயில்வே ஸ்டேஷன் வரை ஒரு டாக்ஸியும் தென்பட

வில்லை என்றால், ஸ்டேஷனுக்கு முன் நின்று கொண்டிருந்த இரண்டொரு வண்டிகளுக்கு டிரைவர்கள் கிடைக்கவில்லை. அவர்கள் வண்டிகளை ஸ்டேஷனில் விட்டு, ஓய்வெடுக்கத் தத்தம் வீடுகளுக்குச் சென்று விட்டார்கள் என்று தெரிந்தது. ஒரு நிமிஷம், 'ஸ்டேஷனிலேயே இரவைக் கழித்துவிடலாமா?' என்று ஸ்ரீதர் யோசித்தான். அடுத்த கணமே அந்த யோசனையைக் கைவிட்டான். ஏற்கனவே 'பான்ட்' சிறிது நனைந்திருந்தது. என்ன உல்லன்கோட்டும் ஸ்வெட்டரும் இருந்தாலும் இரவு பூராவும் பிளாட்பாரத்தில் உட்கார்ந்து அவதிப்பட முடியாது. திரும்பி வீட்டுக்குப்போக வேண்டுமே என்ற எண்ணம் தோன்றியபோது அந்த எண்ணமே ஒரு பெரும் பாரமாகப் பட்டது. குறைந்தது மூன்று மைல் தூரமாவது இருக்கும். தன்னைத்தானே வெறுத்துக் கொண்டே கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஒன்றேகால்.

ஸ்ரீதர் நடக்க ஆரம்பித்தான். உள்ளம் மட்டும் திசை தெரியாமல் ஓடிக்கொண்டே இருந்தது. வீட்டை அவன் அடைந்தபோது இரண்டு அடித்து இருபது நிமிடங்கள்.

* * *

ஜீப்பை ஷெட்டில் விட்டுவிட்டு டிரைவர் மாதவன், தன்னுடைய மாமன் மகன் நடத்தி வந்த டீக்கடைக்குச் சென்றான். அங்கே பீடி சுற்றும் உக்கே, தையற்காரன் கரீம், மாதா கோயிலில் பணிபுரியும் ஜேம்ஸ், கர்ப்பூரத் தைலம் தயார் செய்கிற கம்பெனியில் வேலை செய்கிற மாணிக்கம், ஆறுமுகம் முதலானவர்கள் இருந்தார்கள். செய்தி அவர்களிடையே முதன்முதலாகப் பரவியது. அதன்பின் ரெயில்வே போர்ட்டர்கள் சிங்காரமும் வேலுவும், பங்க் க்ளீனர் முத்துவும் விஷயத்தைத் தெரிந்துகொண்டார்கள். அவர்கள் மூலமாகச் செய்தி கோவிந்தன், ஊட்டி ராமன், ஜோஸப் கண்ணாயிரம், ஒற்றைக்கண் நஞ்சன்,



தாசில்தாருடைய பியூன் மயில்சாமி முதலானவர்களுடைய காதுக்கு எட்டியது. சிதறிக் கிடந்த இவர்கள் டீக்கடையில் ஒன்று சேர்ந்தார்கள்.

* * *

ஸ்ரீதர் கதவு தட்டும் சத்தம் கேட்டுக் கண் விழித்தான். தலை மாட்டில் இருந்த விளக்கை ஏற்றிவிட்டு மெதுவாக எழுந்தான். கதவை யார் இந்த வேளையில் தட்டுகிறார்கள்? ஒரு வேளை கண்ணனே மீண்டும் வந்திருக்கிறானோ? எதற்காக வந்திருப்பான்?

எழுந்து நின்றபோது அலாரம் கண்ணில் பட்டது. ஐந்து அடிக்க இன்னும் இருபத்தைந்து நிமிடங்கள் இருந்தன. தூக்கமின்மையால் கண்கள் கனத்து வலித்தன. நெற்றியின் இருபுறங்களிலும் நரம்புகள் புடைத்தெழுந்தன. கண்களைத் திறக்க முடியவில்லை.

கதவைத் தட்டுவது இன்னும் நிற்கவில்லை. 'தட்டுவது கண்டிப்பாகக் கண்ணனாக இருக்க முடியாது' என்பதை வரும் ஓசையிலிருந்தே ஸ்ரீதர் புரிந்துகொண்டான்.

ஹாலுக்கு வந்த அவனுடைய உடல் நடுங்கியது. நடுக்கத்தில் அவனுடைய குரலே அவனுக்குப் புதுமையாக ஒலித்தது.

''யார் அது?''

''முதலில் கதவைத் திற. அப்புறம் தெரியும்!''

''யார்?''

''கேள்வி கேக்காம திறடா!'' - குரலில் எத்தனை ஆத்திரம்!

''சீமைக்குப் போயிட்டு வந்த தொரை கேள்வி கேக்கறான்.''

''கதவைத் திறக்கப் போறியா, இல்லியா?''

''உங்களுக்கு என்ன வேணும்?'' - கதவை உள்ளே தாழிட்டிருந்தாலும், ஸ்ரீதருக்கு அதை நெருங்கவும் தைரியம் வரவில்லை.

''அப்புவுக்கு என்ன வேணும்னு நீ நெனைச்சுக் கொடுத்தே? அதை இப்போ உனக்கு நாங்க திருப்பித் தர வந்திருக்கோம்.''

''அப்பு மேலே பட்ட விரலை நசுக்க வந்திருக்கோம்.''

''விரல்னு சொல்லாதேடா, முட்டாள்! கைன்னு சொல்லு. அந்தக் கையை ஒடிக்க வந்திருக்கிறோம்.''

ஸ்ரீதருக்குக் குலை நடுங்கியது. தக்க தருணத்தில் கண்ணன் வந்து எச்சரிக்கை செய்தான். அவனுடைய துரதிர்ஷ்டம் டாக்ஸி கிடைக்கவில்லை. ஒரு விநாடி யோசித்தானே, ரெயில்வே ஸ்டேஷனிலேயே இரவைக் கழித்துவிடலாம் என்று? அதையாவது செய்திருக்கலாம். இப்போது என்ன செய்வது? அவனை இப்போது யோசிக்கவும் விடாமல் பல குரல்கள் ஒருங்கே சேர்த்து கத்திக்கொண்டிருந்தன.

அவனுடைய மௌனத்தை வெளியில் நிற்கிறவர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்களோ, அவர்களும் திடீரென்று ஒரு விநாடி மௌனமானார்கள். மௌனத்துக்குப் பிறகு ஒருவன், ''இப்போ நீயாகத் திறக்கலேன்னா கதவை நாங்களே உடைச்சுடுவோம்!'' என்றான்.

அடுத்த கணம் ஸ்ரீதர் பான்ட்டையும் கோட்டையும் மாட்டிக்கொள்ள ஆரம்பித்தான்.

''கண்ணாடி ஜன்னலெல்லாம் தவிடு பொடியாகி விடும்!'' - குரல் உள் அறையில் லேசாகக் கேட்டது. ஏற்கெனவே தயாராக வைத்திருந்த பெட்டியை ஸ்ரீதர் தூக்கிக்கொண்டு வெளியேறினான்.



''இன்னும் மூனு நிமிஷம். அதுக்குள்ளே திறக்கல்லேன்னா...?''

ஒருவன் ஆரம்பிக்க இன்னொருவன், ''வீட்டுக்குத் தீ வைச்சுடுவோம்!'' என்று முடித்தான்.

ஸ்ரீதருடைய காதில் இப்போது ஏதுமே விழவில்லை. ஊசி விழும் ஓசையும் இல்லாமல் அவன் அடிமேல் அடி வைத்துப் புறக்கடைக் கதவைத் திறந்தான்.

''டேய்! நீங்க இங்கே கத்திக்கிட்டிருக்கீங்க. அவன் அங்கே பின்கட்டு வழியா ஓடிப் போயிருப்பான். அதான் உள்ளேயிருந்து சத்தமே வரலை.''

''வீட்டைக் கொளுத்துவோம்!''

''அது தப்புடா! போலீஸுக்குப் பதில் சொல்றது கஷ்டம்.''

''அப்புவை இவன் அடிச்சிருக்கான்னு தெரிஞ்சா, போலீஸே நம்ப பக்கந்தான்டா.''

''மடையன் மாதிரிப் பேசாதே, பின்கட்டு வாசலில் போய் நில்லு. போ, ஓடு!''

ஓடினவன் அடுத்த நிமிடமே திரும்பினான்.

''கதவு திறந்திருக்கிறது. பயல் ஓடிட்டான்.''

''டேய்! ரெண்டு பேர் மேட்டுமேலே ஏறிப் பாருங்கடா. ரொம்ப தூரம் போயிருக்க முடியாது. தரதரன்னு பிடிச்சு இழுத்துட்டு வாங்க.''

இரண்டு பேர், வீட்டின் பின்கட்டிலிருந்து ஏறும் மேட்டை நோக்கி விரைந்தார்கள். பதினேழு பேர் புறக்கடை வழியாக வீட்டினுள் புகுந்தார்கள். மனித உடல் என்று நினைத்துத் துணியைக் குத்திக் கிழிக்கும் மத யானையைப் போல, அவர்கள் ஸ்ரீதருடைய பொருள்களை ஸ்ரீதராகவே பாவிக்கலானார்கள்.

★ ★ ★

ஸ்ரீதர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினான். அதைக் காப்பாற்றப் பெட்டியும் துணிமணிகளும் இடையூறாக நின்றன. ஏதோ ஒரு மரத்தின் பக்கம் போட்டுவிட்டு அவன் எந்தத் திசையில் செல்லுகிறோம் என்ற உணர்வும் இல்லாமல் பறந்தான். மேடும் சரிவும் ஏறி இறங்கி, ஓடி ஓடிக் களைத்துப் போன அவன் கடைசியில் ஒரு தெருவுக்கு வந்தான். அது எந்தத் தெரு, எந்தப் பக்கமாகப் போனால் எங்கே போய்ச் சேரும் என்று அவனுக்குத் தெரியவில்லை. விதி ஒரு பக்கமாக அவனை இழுக்க, அவன் அந்தத் திசையில் ஓடினான். தெரு மீண்டும் வளைந்தும் ஓடிக் கடைசியில் ரெயில்வே ஸ்டேஷன் ரோடில் முடிந்தது.

அவன் வந்த இடத்தின் அருகில் சினிமாத் தியேட்டரும் டாக்ஸியும் இருந்தன. டாக்ஸிக்குள் தூங்குகிறவனை எழுப்புவதில் பிரயோசனம் இல்லை என்ற எண்ணம் பிறந்தது. ஒரு நிமிடம் நின்று யோசித்தான். இப்போது ஒரு நல்ல இடத்தில் ஒளிந்துகொண்டாக வேண்டும். ஊட்டியை விட்டே ஓடுவதற்கு முன் ஒரு புகலிடம் தேவை. இனிமேல் ஓட்டல் அறை அவனுடைய உதவிக்கு வராது. சிப்பந்திகள் மூலம் விஷயம் பரவிவிடும்.

அவனைக் காப்பாற்றக் கூடியவன் ஊட்டியில் ஒருவன்தான் இருக்கிறான். ஸ்ரீதர் என்னதான் அவனை உள்ளூற வெறுத்தாலும் கண்ணனிடம் சரண் அடைவதைத் தவிர வேறு கதியில்லை.

ஸ்ரீதர் கண்ணனுடைய வீட்டை நோக்கி விரைந்தான்.

* * *

தடதடவென்று யாரோ கதவை இடிப்பதைக் கேட்டதும் கண்ணனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அப்பு ஏமாற்றிவிட்டானா?



கதவை அவசர அவசரமாகத் திறந்தான்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, ஊட்டியின் குளிரிலும் காற்றிலும் உடல் வேர்க்க ஸ்ரீதர் நின்றுகொண்டிருந்தான். அவனால் வாய் திறந்து பேச முடியவில்லை.

''ஸ்ரீதரா! உள்ளே வா. நான் சொன்னபடி நீ கேட்கவில்லை அல்லவா?''

''டாக்ஸி - டாக்ஸி - டாக்ஸி கிடைக்கவில்லை. மழை - மழை ரொம்பப் பெய்தது.''

''என்ன நடந்தது?''

''இப்போ அங்கே என்ன நடக்கிறதுன்னு தெரியல்லை. கதவை உடைச்சாச்சோ, இல்லை வீட்டுக்கே தீ வைத்தாகி விட்டதோ; ஒண்ணும் புரியலை.''

''சரி, சரி; அந்த ரூமில் என் கட்டிலில் போய்ப் படுத்துக்கொள். நான் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போய் வருகிறேன். உன் வீட்டுக்குத்தான்.''

''இங்கே யாராவது வந்தால்?''

''வரமாட்டார்கள். பயப்படாதே! அவர்களை நான் இப்போதே சந்திக்கிறேன்.''

* * *

ஜீப்பை ஷெட்டிலிருந்து எடுத்துக் கொண்டு கண்ணன் பறந்தான்.

ஸ்ரீதருடைய வீட்டை அடைந்தபோது மணி ஐந்தே முக்கால். வாசற் கதவு சத்திரத்து வாசலைப் போலத் திறந்து கிடந்தது. ஆள் அரவமே இல்லை.

கண்ணன் மெதுவாக உள்ளே சென்றான். விளக்கைப் போட்டான். சோபாக்களின் முதுகுகள் தனியாகக் கிடந்தன. சோபா மெத்தைகளிலிருந்து மண்ணெண்ணெயின் நெடி வந்தது. பக்கத்து அறையில் கட்டிலும் மெத்தையும்

சின்னபின்னமாகக் கிடந்தன. ரேடியோ இரண்டாகப் பிளந்திருந்தது. அந்த அறையிலிருந்து தாழ்வாரத்துக்கு வந்தான். அங்கே நட்ட நடுவில் நாலாக மடித்த கம்பளியின் மீது ஒரு பெரிய பெட்டி கிடந்தது. அதில் டேப் ரிகார்டர், காமரா, பான்ட், சட்டை முதலியவை வெந்து கொண்டிருந்தன. ஜ்வாலை அடங்கிவிட்டாலும், பெட்டியின் அடிப் பாகத்திலிருந்து புகை வந்துகொண்டிருந்தது. துணிகள் பொசுங்கும் நாற்றம் மூக்கைத் துளைத்தது. கண்ணன் குளியலறைக்குள் சென்று, ஒரு வாளி ஜலம் எடுத்துப் பெட்டிக்குள் ஊற்றினான்.

மீண்டும் ஹாலுக்கு வந்தான். தாறுமாறாகக் கிடந்த சோபாவின் ஓர் ஓரத்தில ஸ்ரீதருடைய கைக்குட்டை, ஜமக்காளத்தில் கிடந்தன. கைக்குட்டையின் ஓரத்தில் காய்ந்து போன இரத்தக் கறைகள் அலங்கோலமாகத் தெரிந்தன.

ஸ்ரீதரின் கைக்குட்டையை அவன் ஜமக்காளத்திலிருந்து எடுத்தான். எவ்வளவு தூரம் தூக்கி எறிய முடியுமோ அவ்வளவு தூரம் எறிந்தான். அப்புவின் இரத்தக் கறைகளுடன் ஸ்ரீதரின் கைக்குட்டை உறவாடுவதை அவனால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. வீடு திரும்பிய கண்ணன் படுக்கையில் ஸ்ரீதர் உட்கார்ந்தபடியே இருப்பதைக் கண்டான். கண்ணனைக் கண்டதும் திடுக்கிட்ட ஸ்ரீதர், ''அங்கே என்ன நடந்திருக்கு?'' என்று கேட்டான்.

''இப்போ நீ மட்டும்தான் மிஞ்சியிருக்கே!'' என்றான் கண்ணன். பிறகு, ''பேசாம இங்கேயே இன்னி பூராவும் இரு. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்! இப்போ காபி போட்டுத் தருகிறேன்'' என்றான்.

# 46

## ஸ்ரீதருக்கு என்ன வழி?

கண்ணன் இரண்டு கிண்ணங்களில் காபியும் ஒரு தட்டு நிறையப் பிஸ்கோத்தும் கொண்டு வந்து ஸ்ரீதர் உட்கார்ந்திருந்த கட்டிலுக்கு முன்னால் வைத்துவிட்டுத் தானும் உட்கார்ந்து கொண்டான்.

ஸ்ரீதரால் தலைநிமிர்ந்து கண்ணனுடைய கண்களைச் சந்திக்க முடியவில்லை. வெட்கமும், அவமானமும் அதே சமயத்தில் இன்னும் என்ன என்ன விபரீதங்கள் நிகழப் போகின்றனவோ என்ற பயமும் உண்டாயின.

ஒரு பிஸ்கோத்தைக் கடித்துக்கொண்டே, ''சாப்பிடு, ஸ்ரீதர்'' என்றான் கண்ணன்.

''எனக்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. வயிற்றை என்னவோ செய்கிறது?''

''பயம் குடலை அள்ளிப் பிடுங்குகிறது. முதலில் ஒரு வாய் காபியைக் குடி. அப்புறம் பிஸ்கோத்தைச் சாப்பிடலாம்.''

ஸ்ரீதர் கோப்பையைக் கையில் எடுத்தான்.

''அப்புவை நான் தலைகால் தெரியாமல் அடித்து விட்டேன். ஆனால் அப்படி அடித்து நொறுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை.'' ஸ்ரீதருடைய குரல் நடுங்கியது.

''பின் எதற்காக அடித்தாய்?''

''ஓர் உதை கொடுத்ததுமே அவன் கெஞ்சும் பாவனைக்கு வந்துவிடுவான். குழைந்துவிடுவான் என்று எண்ணினேன். ஆனால் அவன் சிரிக்க ஆரம்பித்தான். 'இரு ஸ்ரீதர், ஷர்ட்டைக் கழற்றிவிடுகிறேன்' என்றான். அவனுடைய அலட்சியம் என் கோபத்தை மேலும் தூண்டிவிட்டது!''

''நன்றாகத்தான் நொறுக்கியிருக்கிறாய். ஆனால்நீ எதற்காக அப்புவை அடித்தாய் என்றுதான் எனக்கு இன்னும் புரியவில்லை.''

''நண்பனைப் போல நடித்த அவன் எனக்குத் துரோகம் செய்தான்.''

காபியைக் குடித்த முடித்த கண்ணன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''ஸ்ரீதர், இந்த உலகத்தில் என்ன விபரீதம் வேண்டுமானாலும் நடக்கலாம். ஒரு பசுகூடத் தன்னுடைய பசி வெறியில் மிருகபட்சிணியாக மாறலாம். ஆனால் அப்புவின் மனசில் துரோக எண்ணம் உதிக்கவே முடியாது.''

''என்ன இந்த ஊரை விட்டே விரட்ட அவன் பார்க்கிறான் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. நான் ராதிகா, நளினி முதலானவர்களுடன் பழகியதை அவன் ஒருபோதும் விரும்பவில்லை என்று எனக்குத் தெரியும்.''

''அதற்குக் காரணத்தை நீ என்றைக்காவது அலசிப் பார்த்திருக்கிறாயா, ஸ்ரீதர்? ஜூலியிடமும் வசந்தாவிடமும் நீ எப்படி நடந்துகொண்டாய் என்பதை நினைத்துப் பார்த்திருக்கிறாயா?''

''அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''இந்த நாலு பேரும் அவனுடைய தங்கைகள். இரண்டு பேரிடம் கேவலமான முறையில் நடந்து



கொண்டிருக்கிற நீ மற்ற இரண்டு பேர்களிடம் நல்லவனாக நடித்திருக்கிறாய். ராதிகாவுடன் பழகிக் கொண்டிருக்கையிலேயே, ஜூலியைப் பலியாக்க முயன்றாய். அதன்பின், ராதிகாவை விட்டு, அவளைவிடப் பெரிய பணக்காரியும் செல்வாக்கும் நிறைந்த நளினியுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தாய். ஜூலியை விட்டு, உன் எண்ணங்கள் வசந்தா பக்கம் திரும்ப ஆரம்பித்தன. உன் எதிர்காலத் திட்டத்துக்கு ஒருத்தியைத் தயார் செய்து கொண்டிருக்கையிலே, உடலின் பசியைத் தீர்க்க இன்னொருத்தியை ஏமாற்றிக் கொண்டிருந்தாய்.''

ஸ்ரீதரால் பதில் பேச முடியவில்லை. கண்ணன் மீது கோபம் வந்தாலும், அவன் உண்மையைத்தான் சொல்லுகிறான் என்ற எண்ணமே வாயை அடைத்தது.

''இப்போது சொல்லு, ஸ்ரீதர். நீ நடித்துத் துரோகம் செய்தாயா, அல்லது அப்பு நடித்துத் துரோகம் செய்தானா?''

''என் காரியங்களிலெல்லாம் அவன் குறுக்கிட்டான். நாதன், மகாலிங்கம், ஐயா மாமி எல்லாரிடமும் என்னைப் பற்றி என்ன என்னவோ பேசியிருக்கிறான்.''

கண்ணன் சிரித்துக்கொண்டே எழுந்தான்.

''எட்டு வயசுக் குழந்தை இன்னொரு குழந்தையின் பொம்மையை உடைத்ததற்குக் காரணம் சொல்லுவது போலிருக்கிறது, உன் பேச்சு. இப்போது நான் வெளியே போகிறேன். வீட்டை வெளியே பூட்டிக் கொண்டு போகிறேன். நீ தூங்குகிறதானால் தூங்கு.''

''எங்கே போகிறாய்?''

''எத்தனையோ இடங்களுக்கு. மகாலிங்கம், நாதன் இவர்களை எல்லாம் பார்த்துப் பேச வேண்டும்.''

''அந்த ரௌடிகள் இங்கேயும் வந்து இந்த வீட்டையும் தாக்கினால்?'' ஸ்ரீதருடைய குரலில் பயம் தோய்ந்திருந்தது.

''நீ இந்த வீட்டில்தான் பதுங்கியிருக்கிறாய் என்று தெரிந்தால் கண்டிப்பாக இந்த வீட்டையும் அவர்கள் நொறுக்கிவிடுவார்கள். ஆனால் என்னைத் தவிர வேறு யாருக்கும் நீ இங்கே இருப்பது தெரியாது.''

''எப்போது திரும்பி வருவாய்?''

''சீக்கிரம் வந்துவிடுகிறேன். சத்தம் செய்யாமல் ரேடியோ வைக்காமல் இரு. தூக்கம் வந்தால் தூங்கு.''

ஸ்ரீதர் பதில் பேசாமல் கண்ணனைக் கவனித்தான்.

காலிக் கிண்ணங்களை எடுத்துக் கொண்டு அவன் சமையலறைக்குச் சென்றான்.

அவன் திரும்பி ஹாலுக்கு வந்தபோது, ஸ்ரீதர் தான் இருந்த இடத்திலிருந்தே, ''ஒரு சிறு உதவி செய்கிறாயா, கண்ணன்?'' என்று கேட்டான். ''இன்றைக்குக் காலையில் அந்த ரௌடிகளுக்கு அகப்படாமல்......'' அவன் தொடருவதற்குள் கண்ணன் இடைமறித்தான்.

''ஏற்கனவே ஒரு தடவை அவர்களை ரௌடிகள் என்று குறிப்பிட்டாய். மீண்டும் சொல்லுகிறாய். ஸ்ரீதர், அவர்களில் ஒருவன்கூட ரௌடி அல்ல. எல்லாரும் அப்புவின் பக்தர்கள்.''

''வீட்டைத் தாக்குவதும், கதவை உடைப்பதும், கையை வெட்டுவேன் என்று பயமுறுத்துவதும் ரௌடித் தனம் அல்லவா?'' பயத்துக்கு நடுவிலும் கோபம் வந்தது ஸ்ரீதருக்கு.

கண்ணன் நிதானமாகப் பேசினான்: ''எவ்வளவோ படித்திருக்கிற நீ ஜூலி, வசந்தா இவர்களிடம் நடந்து கொண்ட முறையும், ஒரு பாவமும் செய்யாத அப்புவை உன் வீட்டிலேயே, அவனுக்கு எந்த விதமான தற்காப்பும் இல்லாத சமயத்தில் நொறுக்கியதுந்தான் ரௌடித்தனம். ஒரு ரௌடியைத் தாக்குகிறவர்கள் ரௌடிகளாக இருக்க



முடியாது. இனிமேல் அவர்களைப்பற்றி என்னிடம் அப்படிப் பேசாதே! இப்போது சொல்லு. என்ன உதவி வேண்டும்?''

கண்ணன் பேசியதைக் கேட்டு ஸ்ரீதருடைய மனம் குமுறியது. ஆனால் அவனால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. இப்போது அவனுடைய பாதுகாப்பில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. கண்ணனும் திடீரென்று கோபித்துக் கொண்டு, கதவைப் பூட்டாமல் வெளியேறி, தான் இருக்கும் விவரத்தை வெளியே சொல்லிவிட்டால் அதற்குப்பின் அவனுடைய கதி என்ன?

தன்னைத் தானே அடக்கிக்கொண்டு, ''நான் அவர்களிடமிருந்து தப்பி ஓடி வரும்போது பெட்டியை ஒரு மரத்தடியில் போட்டுவிட்டேன். அதில்தான் என் துணிமணிகள் இருக்கின்றன. அதை எப்படியாவது தேடி எடுத்துக் கொடுக்க வேண்டும்'' என்றான்.

''எந்த மரத்தடியில்?''

''அது புரியவில்லை. என் வீட்டுக்குப் பின்னால் ஒரு மேடு இருக்கிறதல்லவா? மேட்டைத் தாண்டியதும் தோப்புக்குள் ஓர் ஒற்றையடிப் பாதை போகிறது. லெதர்பெட்டி, நீல உறை போட்டது.''

''தேடிப் பார்க்கிறேன்'' என்ற கண்ணன், ''நான் போய் வரட்டுமா?'' என்று கேட்டான்.

''உம்.''

ஜீப்பை எடுத்துக்கொண்டு கண்ணன் முதலில் ஸ்ரீதருடைய வீட்டுக்குச் சென்றான். அதைப் பின்புறமாக நிறுத்திவிட்டு, மேட்டில் ஏறி, ஒற்றையடிப்பாதையில் நடக்கலானான். காலையின் இள ஒளியில், மரங்களின் கீழே சருகுகள்தாம் தெரிந்தன.

கண்ணன் அங்கும் இங்குமாகப் பார்த்துக் கொண்டே நடந்தான். ஒரு வேளை வீட்டைத் தாக்கியவர்களின் கண்ணில் பெட்டி தென்பட்டு, அவர்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டார்களோ என்ற கேள்வியும் பிறந்தது.

ஒரு கணம் கண்ணன் நின்றான். திரும்பிப் பார்த்தான். நாம் தோப்பில் வெகு தூரம் வந்துவிட்டோம் என்ற உணர்வு உண்டாயிற்று. மீண்டும் நடக்கலானான். இரண்டு அடி சென்றதும் ஒரு யூகலிப்டஸ் மரத்தின் கீழே பெட்டி கிடப்பது தெரிந்தது. நிதானமாகச் சென்று அதை எடுத்தான்.

ஸ்ரீதருடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஜீப்பை நோக்கித் திரும்புகையில், 'இம்மாதிரி ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்க, பெற்றோர் என்ன பாவம் செய்தார்களோ?' என்ற எண்ணம் அவனுள் கேள்வியாக எழுந்தது.

மகாலிங்கமும் நளினியும் கண்ணன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டு திலைத்துப் போய் நின்றார்கள்.

''ஸ்ரீதரைப்பற்றிப் பொதுவாக எனக்கு நல்ல அபிப்பிராயம் இல்லைதான். ஆனாலும் இவ்வளவு மட்டமாக, கீழ்த்தரமாக, நடந்துகொள்ளுவான் என்று நான் நினைக்கவில்லை.''

''தாம் பண்பில்லாத மனிதர் என்பதை அவர் காட்டிவிட்டார்'' என்றாள் நளினி.

''இப்போது அவன் எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டார் மகாலிங்கம்.

''என் வீட்டில்'' என்றான் கண்ணன்.

''நான் அவனைக் கேட்கவில்லை. அப்பு எங்கே?''

''போகம்மா வீட்டில். அவளும் அவளுடைய மருமகள் அச்சம்மாவும் சுச்ருஷை செய்கிறார்கள்.''



''அப்பா, அப்புவை ஆஸ்பத்திரியில் சேர்த்து விடலாம்'' என்றாள் நளினி.

''கூடாது. அப்புறம் போலீஸ் கேஸாகப் போனாலும் போய்விடும். கண்ணா, புறப்படு; நாம் போய் அப்புவைப் பார்ப்போம்.''

''நானும் வருகிறேன்.''

திடீரென்று ஜயலட்சுமி கூடத்துக்குள் பிரவேசித்தாள்.

''என்ன கண்ணா, காலங்கார்த்தாலே எங்கே வந்தே? எங்கே புறப்படறேன் என்கிறாள் நளினி?'' என்று கேட்டாள்.

விஷயத்தைக் கண்ணன் கூறினதும் ஜயலட்சுமி பதறிப்போனாள்.

''ஐயையோ, என் அப்புவை அந்தப் பழிகாரப்பிள்ளை கைதொட்டு அடித்துவிட்டானா? அவன் கையில் பாம்பு கொத்தணும். கண்ணா, அப்புவுக்கு எப்படி இருக்கு? உசிருக்கு ஒன்றும் பயமில்லையே?'''

''நாளைக்கே பிளாஸ்திரியும் மூஞ்சியுமாய், அப்பு இங்கே குதிச்சுண்டு வருவான்'' என்ற கண்ணன், ''ஸார், என்னைக் கேட்டால் இப்போது யாருமே அப்புவைப் பார்க்கப் போக வேண்டாம் என்பேன். இப்போது நீங்கள் எல்லாரும் போனால் போகம்மாவும் அச்சம்மாவும் பயந்து போவார்கள். விஷயம் மிகவும் முற்றி விட்டது என்ற எண்ணம் உண்டாகும்'' என்றான்.

''நான் மட்டும் போய்ப் பார்க்கிறேன்'' என்றாள் ஜயலட்சுமி.

''சாயங்காலம் போகலாம், மாமி' என்றான் கண்ணன்.

''இதைப் பாருங்கோ; நான் வேணுமானால் அப்புவை அப்புறமாய் பார்த்துக்கறேன். ஆனா நீங்க இப்போதே, இந்த நிமிஷத்திலேயே ஸ்ரீதருடைய சீட்டைக் கிழிச்சாகணும்.''

''இந்த விஷயத்துக்கும் கம்பெனிக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை, அம்மா?'' என்றாள் நளினி.

''நீ ஏன்டி அவனுக்காகப் பரியறே?''

''உன் பெண் ஸ்ரீதருக்காகப் பரிந்து பேசவில்லை, ஐயா. சொந்தப் பிரச்னையை ஆபீசோடு முடிச்சுப் போடக் கூடாது என்கிறாள். அவ்வளவுதான்'' என்றார் மகாலிங்கம்.

''எனக்கு ரெண்டும் ஒன்றுதான். இன்னிக்கு அப்புவை அடிச்ச கை நாளைக்குக் கண்ணன் மேலே நீளும்.''

''அப்படி ஒன்றும் நடக்காது, மாமி. இப்போது ஸ்ரீதரே என் வீட்டில்தான் இருக்கிறான். இப்போது ஊராருடைய கோபம் அவன் மேலே பாயத் தயாராக இருக்கிறது. அதனாலே அவனை இந்த வீட்டில் ஒரு நாள் உட்கார்த்தி வைக்கலாமா என்று உங்களிடமும் அவரிடமும் கேட்டுக் கொள்ளலாமென்று தோன்றுகிறது'' என்றான் கண்ணன்.

''கண்ணா, நீ எதையும் இது நாள்வரை வாய் திறந்து கேட்டதில்லை. இப்போ ஒன்னு கேட்கிறாய். ஆனா அதை நான் தர முடியாது. அந்த நட்டுவாக்களியை இந்த வீட்டில் நிமிஷம் வைத்துக் கொள்ள மாட்டேன்.''

''அப்பு பிழைச்சுடுவான், மாமி. ஆனா ஸ்ரீதரைக் காப்பாத்தறது கஷ்டம். ஒரு கூட்டமே ஆக்ரோஷத்துடன் கிளம்பி அவனுடைய வீட்டைத் தவிடுபொடியாக்கியிருக்கிறது. நீங்க பெரிய மனசு பண்ணி, இன்னிக்கு ஒரு நாள் ஸ்ரீதருக்கு அடைக்கலம் கொடுங்கள்.''

''போனாப் போறது, அம்மா. ஒரு நாள்தானே? மாடியில் ஓர் அறையை ஒதுக்கிக் கொடுப்போம்.''

''அப்போ நான் வெளியே போய் எங்காவது ஒரு நாள் இருக்கிறேன்.''



மகாலிங்கம் பெண்ணையும் மனைவியையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுக் கண்ணனிடம் சொன்னார்: ''கண்ணா, என் காரை எடுத்துக் கொண்டு, மேட்டுப்பாளையத்தில் அவனைக் கொண்டுபோய் விடு. அப்பு குணமாகி நடமாட ஆரம்பிச்சதும் திரும்பி வரட்டும்.''

''அவன் திரும்பியே வர வேண்டாம்.''

''மேட்டுப்பாளையம் போறதானால் மத்தியான்னத்தான் போக முடியும். நானும் ராதிகாவும் குமாரையும் அவனுடைய மனைவியையும் அழைத்து வரப் போகிறோம்.''

''ஓ மறந்தே விட்டேன், கண்ணா! இன்னிக்குத்தான் அவர்கள் வருகிறார்கள்; இல்லியா?'' என்றாள் நளினி.

தனக்குள்ளேயே ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்த ஜயலட்சுமி திடீரென்று, ''கண்ணா, அந்தத் தடியனை நாதன் வீட்டிலே அடைச்சு வையேன்'' என்றாள்.

கண்ணன் சிரித்தான்.

''ஏன்டா சிரிக்கிறே?''

''இங்கே இவராவது, ஆபீஸுக்கும் சொந்தப் பிரச்னைக்கும் முடிச்சுப் போடக் கூடாது என்கிறார். நாதன் தம்முடைய கைத்தடியாலேயே ஸ்ரீதரைத் தீர்த்துவிடுவார். அப்புவிடம் அவ்வளவு உயிர்!''

''சரி; வருகிறேன். மத்தியான்னம் வரை என் வீட்டிலேயே ஸ்ரீதர் இருக்கட்டும். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்றான் கண்ணன்.

''மத்தியானத்துக்குள்ளேயே அவன் பாக்கியைத் தீர்த்து அனுப்புங்கள்!'' என்றாள் ஜயலட்சுமி.

''அதற்கு அவசியம் இராது, மாமி. ஸ்ரீதரே ஊட்டியை விட்டுப் போய்விடுவான். இனிமேல் இந்த ஊரில் ஒரு நாள்

தலை தூக்கி நடக்க முடியாது என்பதை அவன் இப்போதே புரிந்து கொண்டாயிற்று.''

''அவன் இந்த ஊரை விட்டு ஒழியட்டும்! நான் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறேன்.''

''நீ ஒரு பைத்தியம், அம்மா. அப்பு மாதிரி பத்துப் பேர் இருந்தா உலகத்தில் ஸ்ரீதர் மாதிரி பத்தாயிரம் பேர் இருப்பா. இந்த மாதிரி அநுபவம் உனக்குப் புதுசு. அதுதான் வெறிபிடிச்சுக் கத்தறே. ஸ்ரீதர் போயிட்டா, பாக்டரியை யார் பார்த்துக்கிறதாம்?''

''யாரும் இல்லேன்னா, அதை இழுத்து மூடு. நங்கவரம் வரன் நிச்சயமானால், நீயும் புருஷன் வீடுபோய்ச் சேரு.''

''ஓ. மறந்தேவிட்டேன். நேத்துக்கூட அப்பு சொன்னான், தானும் உங்களோடு நங்கவரம் போகப் போறதா.''

''ஆமாம். வரப்போறான். அவன் உடம்பு குணமான பின்தான் போகணும். நீங்க என்ன சொல்லுகிறீர்கள்?'' . ஜயா கணவரைப் பார்த்ததுக் கேட்டாள்.

''நான் என்ன சொல்லுவதற்கு இருக்கிறது? நீயேதான் எல்லாம் சொல்லிவிட்டாயே! ஸ்ரீதர் இல்லா விட்டால் பாக்டரி நடக்காது என்கிறாள் உன் பெண். அப்பு இல்லாவிட்டால் அவளுடைய கல்யாணம் நிச்சயமாகாது என்கிறாய் நீ. நான் ரெண்டு பேருக்கும் நடுவில் மாட்டிக் கொண்டு முழிக்கிறேன்'' என்றார் மகாலிங்கம்.

# 47

## 'கண்ணனை விரட்டாதே!'

படுத்தவுடன் உறக்கத்தில் ஆழ்ந்துவிடும் நாதனுக்கு அன்று தூக்கம் வரவில்லை. மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. மறுநாள் குமாரும் அவனுடைய மனைவியும் ஊட்டிக்கு வருகிறார்கள். ராதிகா கும்மாளமிட்டுக் கொண்டு வரவேற்கப் போகிறாள். விருந்து எப்படி இருக்க வேண்டும், என்ன என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் அவள் பாலம்மாவுக்கு ஒரு தடவைக்குப் பத்துத் தடவையாகச் சொல்லியாகிவிட்டது.

''பாலம்மா, இது வரப்போகிறவர்களுக்கு வைக்கிற விருந்துன்னு அப்பாவை மறந்து விடாதே. சேப்பங்கிழங்கு மோர்க் குழம்புன்னா அவருக்கு உசிர். அது பூர்ணா தேவிக்குப் பிடிக்காதோன்னு நெனைச்சுப் பண்ணாம இருந்துடாதே!''

அவள் கூறின வார்த்தை இப்போது நாதனுடைய காதில் ஒலித்தபோது அவர் உள்ளம் நெகிழ்ந்தது. அவருக்கு மோர்க் குழம்பு பிடிக்கும் என்ற சிறு விஷயத்தைக்கூட ராதிகா கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாள். இந்த விருந்தில் தம்மால் மனமாரக் கலந்து கொள்ள முடியாது என்பதை அறிந்தும் அவருடைய நாவின் ருசிக்குக் குறை வைக்கக்கூடாது என்று அவள் கருதுகிறாள்.

திடீரென்று கண்ணனுடைய நினைவு வந்தது. அவனும் ராதிகாவைப் போலத்தான். ராதிகாவாவது

அவருடைய பழக்க வழக்கங்களையும், விருப்பு வெறுப்புக்களையும் மட்டும் தெரிந்து கொண்டிருக்கிறான். கண்ணன் அவருடைய மனத்தையே ஊடுருவிப் பார்த்து, அதில் என்ன என்ன எண்ணங்கள் எப்படி எப்படி ஓடுகின்றன என்பதைப் புரிந்துகொண்டவன். அவற்றுக்கு ஏற்றாற் போல நடந்துகொள்ளுகிறவன். 'கண்ணா, என் இருதயம் பலவீனமாகிவிட்டது. மாற்று இருதயம் இருந்தால்தான் பிழைக்கலாம்' என்றார் டாக்டர் என்று சொன்னால், 'அதற்கு ஏன் மாமா கவலைப்படுகிறீர்கள்? என் இருதயம் இருக்கிறது!' என்பான் அவன்.

இப்பேர்ப்பட்ட கண்ணனை அவருடைய மனம் ஏன் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறது? கண்ணனைத் தனியாக நிறுத்திப் பார்க்கையில், ராதிகாவுக்கு அவனைவிட வேறு யாரும் சிறந்த கணவனாக வர முடியாது என்பதை அவர் அறிவார். பின் மனம் ஏன் இப்படித் தவிக்கிறது?

ஏன்? ஏன்?

கண்ணன் அநாதைபோல அவருடைய அடைக் கலத்தில் வாழ்ந்தவன் என்றா? வறுமையில் தவித்தவன் என்றா?

இவை எல்லாம் நியாயமான காரணங்கள் அல்ல என்பது அவருடைய உள்மனத்துக்கே தெரியும். அவருடைய அந்தஸ்துக்கு ஏற்ற அந்தஸ்து கண்ணனுக்கு இல்லை என்பதையும் அவர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

பின் ஏன் கண்ணனை மாப்பிள்ளையாக வரிக்க மனம் ஒப்பமாட்டேன் என்கிறது?

படுக்கையில் புரண்ட நாதன் கண்முன் எப்போதோ பார்த்த சீதா நின்றாள். அவள் 'அண்ணா!' என்று கூப்பிடும் குரல்கூடக் கேட்டது.



இருபது வயதுப் பெண்ணாகத் தங்கை அவர் கண் முன் நின்றபோது, மனம் துள்ளிப் பதறியது. அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருக்கும் ராதிகாதான் வந்து நிற்கிறாளோ என்ற பிரமைகூட எழுந்தது.

தங்கை சீதா பெற்றெடுத்த பிள்ளை கண்ணன் என்ற காரணத்துக்காக, கண்ணனைப் பழி வாங்குவதா? தந்தையின் சொல்லை மீறி, அவரிடமே வேலை பார்த்த பலராமனைக் கல்யாணம் செய்து கொண்டாள். அந்தப் பிணைப்பின் பயனாக வந்தவன் கண்ணன் என்ற காரணத்துக்காக அவனை ஒதுக்குவதா?

நாதன் கண்ணை மூடினார்; சீதா மறையவில்லை. கண்ணைத் திறந்தார்; அவள் அகலவில்லை. நாதனுடைய உடல் வேர்த்தது. மெதுவாக எழுந்து விளக்கைப் போட்டார். பிறகு கட்டிலிலேயே சிறிது நேரம் உட்கார்ந்தார்.

திடீரென்று அரவம் கேட்டது.

''ஏம்ப்பா, இன்னும் தூங்கலியா?'' - கேட்டுக் கொண்டே ராதிகா வந்தாள்.

''நீ தூங்கியாகிவிட்டதுன்னு நினைத்துக் கொண்டிருந் தேன், ராதி. உன் ரூமிலே விளக்கும் எரியலே.''

''பாலம்மாகிட்டே பேசிக் கொண்டிருந்தேன். பழைய கதைகளையெல்லாம் சொன்னாள். எத்தனையோ தடவை கேட்டிருக்கிறேன். இருந்தாலும் புராணம் போல அலுக்காமல் இருக்கு.''

''புராணந்தான்.''

''பாலம்மா இன்னும் என்ன சொன்னாள் தெரியுமா?''

''என்ன?''

''நீங்க ரொம்ப மாறிவிட்டீர்கள்னு சொன்னா?'

''எப்படியாம்?''

''கூடப்பிறந்த தங்கை காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டாள் என்பதற்காக ஜன்மம் பூராவும் அவளை முகாலோபனம் செய்யாத நீங்கள், அதே காரியத்தைச் செய்த குமாரை நாளைக்கு வீட்டேற்றி வரவேற்கிறது அவளுக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கு.''

''காலம் மாறிவிட்டது.''

''காலந்தான் அப்பா மனுஷனையும் மாற்றுகிறது. இப்போ எந்த ஊரில் காதல் கல்யாணம் இல்லை? எத்தனையோ வீடுகளில் நடக்கிறது. சீதா அத்தை இதை அந்தக் காலத்தில் செய்ததற்கு அவளை ஜாதிப் பிரஷ்டம் செய்யறதுபோல விரட்டி அடித்தீர்கள்.''

''ஏன் அம்மா அதை இப்போ இழுக்கிறே, ராதி?''

''அன்னிக்கு இளம் வயசு உங்களுக்கு. ஐ.வி.எஸ். படிப்பு வேறே. சொத்துக்கு ஒரே பிள்ளை. தங்கையை வெளியே தள்ளிக் கதவைத் தாழிட்டால் ஒன்றும் ஆகிவிடாது என்ற திமிர் மனசிலே கூத்தாடிக் கொண்டிருந்தது. இன்னிக்குக் குமாரை வெளியே தள்ளிக் கதவைச் சார்த்திவிட உங்களால் முடியுமா?''

நாதன் சிரித்தார். அதில் வெறுப்புப் பூத்தது.

''முடியும், ராதி.''

''பின் ஏன் சும்மா இருக்கிறீர்கள்?''

''குமாருடைய இந்தக் கல்யாணத்துக்கு ஒரு வகையில் நான்தான் அம்மா பொறுப்பாளி. அவனை நான் கவனிக்கவே இல்லை.''

''இதே தப்பைத்தான் உங்கள் அப்பா அந்தக் காலத்தில் செய்திருப்பார்.''

''இருக்கலாம். ஆனாலும் சீதா செய்தது...'' நாதனால் மேலே பேச முடியவில்லை.



''ஏம்ப்பா, சீதா அத்தை செய்த தப்பை - அது தப்புன்னு பட்டா - நானும் செய்திருந்தா என்ன செய்திருப்பீர்கள்?''

''என் மனசின் கதவை இழுத்துப் பூட்டியிருப்பேன், ராதி. ஆனா நீ செய்ய மாட்டேன்னு எனக்குத் தெரியும்.''

''இது சரியான வாதம் அல்ல, அப்பா. உங்க பிள்ளை குமாரைப் போல உங்க பெண்ணும் நடந்து கொண்டிருக்கலாம்; இல்லியா?''

''நீயே அப்படிச் செய்ய முனைந்திருந்தாலும் அதற்குக் கண்ணன் இடம் கொடுக்க மாட்டான். ஏன் தெரியுமா? இந்த உலகத்தில் என் மனசைப் புரிஞ்சு கொண்டிருக்கிறவன் அவன் ஒருவன்தான்.''

ராதிகா சிரித்தாள்.

''அப்பா அப்படி இருந்தும் அந்த மனசில் அவனுக்கு ஓர் இடம் இல்லையே! தனக்கு இடம் இல்லாததும் அவனுக்குத் தெரியும் இல்லையா?''

''அதனால்தான் அம்மா அவன் கண்யமாக இருக்கிறான். இல்லாத இடத்தைக் கைப்பற்ற முடியாது என்ற விவேகத்தோடு நடந்து கொள்கிறான்.''

''அவனுக்கு என்னிக்குமே உங்க மனசிலே இடம் இருக்காதா, அப்பா?''

ராதிகாவின் குரல் கேவியது. உணர்ச்சியைப் புரிந்து கொண்ட நாதன் மறுகணம் பதில் கூறினார். அறிவின் தூண்டுதல் இல்லாமல் மனமே வார்த்தைகளைக் கோத்தது.

''ராதி, நீ என் மனசிலே இருக்கிறாய். உன் மனசிலே கண்ணன் இருக்கிறான்.''

ராதிகாவின் கண்ணில் நீர் துளித்தது.

''அப்பா, என்னை உங்க மனசிலிருந்து துரத்தி விடாதீர்கள். அதே சமயத்தில் என் மனசிலிருந்து கண்ணனையும் விரட்டிவிட முயற்சி பண்ணாதீர்கள். நான் வேணும்னா என்னென்னிக்கும் சாகிறவரை இப்படியே இருந்துவிடல் போய்விடுகிறேன்.''

நாதனுடைய கண்கள் கனத்தன. குரல் கம்மியது.

''ராதி, அசடு மாதிரி பேசாதே. என்னுள்ளே நானே ஏற்படுத்திக் கொண்ட கறை இன்னும் கரையலே, அம்மா. என்ன செய்யறது? கண்ணனைப் பார்க்கிறபோதெல்லாம் சீதா ஞாபகம் வந்துவிடுகிறது. அதைத் தொடர்ந்து மனம் பழைய பழைய நாட்களின் புராணத்துக்கு ஓடி விடுகிறது. பாலம்மா நான் மாறிவிட்டேன் என்கிறாள். ஆனா நான் இன்னும் மாறவில்லை, ராதி!''

''அப்பா, புராணத்திலேகூட நளன் தமயந்தி, சுபத்திரா அர்ச்சுனன், ருக்மினி கிருஷ்ணன் கதைகள் காதல் கதைகள்தாம்ப்பா!''

''என் கதைகூட ஒரு புராணம் ஆகிவிட்டது.''

''சரி அப்பா. இனிமேல் நான் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசவில்லை. நாளைக்குக் கண்ணன் எத்தனை மணிக்கு வருகிறேன் என்றான்?''

''ஏழரை மணிக்கு.''

''அப்புவும் வருவான் இல்லியா?''

''ஆமாம்.''

''ஸ்ரீதரையும் விருந்துக்கு அழைக்கப் போகிறீர்களா?''

''இல்லை.''

''ஏன்?''



''காரணம் உனக்கே தெரியுமே, ராதி!''

''சரி அப்பா; நான் கேட்கவில்லை. நீங்கள் தூங்குங்கள். நானும் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன்.''

**ம**றுநாள் காலையில் சரியாக ஏழே முக்காலுக்கு வந்தான் கண்ணன். நாதன் கிளாஸ் ஹவுஸில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

''மாமா, லேட்டாகிவிட்டது. ஆனாலும் நிறைய டயம் இருக்கிறது'' என்றான் அவன்.

''பரவாயில்லை. அப்பு எங்கே?''

''வரவில்லை. அவனைப்பற்றி அப்புறம் சொல்லுகிறேன்.''

''இப்போதே சொல்லிவிடு. ஏன் வரவில்லை?''

கண்ணன் விஷயத்தைக் கூறியதும், நாதன் அசையாமல் உட்கார்ந்துவிட்டார். பிறகு நிதானமாக, ''நான் ஸ்ரீதரைக் குறை சொல்லமாட்டேன். ஏன் தெரியுமா? தன் இயல்பில் அவன் நடந்து கொண்டான். நல்லவனாக இருப்பதிலும் ஆபத்து இருக்கிறது. இதை அப்பு புரிந்து கொள்ளவில்லை'' என்றார்.

''இதைக் காந்தியும் புரிந்து கொள்ளவில்லை, மாமா. பெர்னாட் ஷாவும் நீங்க சொன்னதையேதான் சொன்னார்.''

''இப்போ அப்பு எங்கே இருக்கிறான்?''

''போகம்மா வீட்டில்.''

''சரி; நான் அவனை இங்கே அழைத்து வருகிறேன்.''

''வேண்டாம். இன்னும் பிரக்ஞை வரவில்லை.''

''அவ்வளவு தூரத்துக்கு அடிச்சிருக்கானா?''

''நாயை அடிப்பது போல.''

நாதன் பெருமூச்செறிந்தார். பிறகு, ''கண்ணா, மனுஷனுக்கு வெறி வந்தால் மிருகமாகிவிடுகிறான்'' என்றார்.

''ஆமாம்.''

''முன்னொரு நாள் உன்னை நான் அடிச்சேனே. அப்போ உனக்குப் பத்தொன்பது வயசு. எனக்கும் அன்னிக்கு வெறி பிடிச்சிருந்தது.''

''நான் தப்புப் பண்ணினேன். நீங்க தண்டனை கொடுத்தீர்கள். அப்பு தப்பு பண்ணாமலே அடிபட்டு விட்டான்.''

நாதன் சிரித்துக் கொண்டே எழுந்தார்.

''கண்ணா, நீ மனசுக்கு இதமாகப் பேசுகிறாய். ஆனாலும் நான் என்னையே ஏமாற்றிக் கொண்டு உன்னையும் ஏமாற்றமுடியாது. உனக்கும் எனக்கும் நன்றாகத் தெரியும், தப்பை யார் செய்தது என்று. முளையிலேயே கிள்ளி எறியவேண்டும் என்ற என் எண்ணத்தை ஈடேற்ற ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அன்று ராதிகாவின் பிறந்த நாள் அளித்தது. உன்னை வீட்டைவிட்டே விரட்டினேன்.''

''ஏன் மாமா, இன்னிக்குப் பழசை எல்லாம் நினைத்துப் பார்க்கிறீர்கள்?''

''எதற்குச் சொல்ல வந்தேன் தெரியுமா, கண்ணா? உன்னை என்னால் வீட்டை விட்டுத்தான் விரட்ட முடிஞ்சது. ராதியின் மனசிலிருந்து உன்னை விரட்ட முடியவில்லை.''

கண்ணன் பதில் சொல்லாமல் பங்களாப் பக்கம் பார்த்தான்.



'கண்ணனை விரட்டாதே!'

''நேத்து ராத்திரி ராதி என்கிட்டே கெஞ்சினாள், தன் மனசிலிருந்து உன்னை விரட்ட நான் முயற்சி பண்ணக் கூடாது என்று.''

''நீங்கள் விரட்டாமலே நான் அகன்று போய்விட வேண்டும்னு தீர்மானம் செய்துவிட்டேன், மாமா. குமார் திரும்பிப் போகும்போது, நானும் அவனுடன் போய் விடலாம்னு இருக்கேன். டில்லியில் வேலை கிடைக்கும். அப்புறம் என் அம்மா அப்பாவிடமே இருக்கலாம். இதை இதுவரையில் நான் சொல்லாததற்கு என்னை மன்னித்து விடுங்கள். மகாலிங்கத்திடங்கூட இன்னும் சொல்ல வில்லை. அதோ ராதிகா வருகிறாள். நான் புறப் படுகிறேன்.''

கண்ணன் நகர யத்தனித்தான்.

''கண்ணா!''

''என்ன, மாமா?''

''நீ இப்போ சொன்னது உண்மை அல்லவே.''

''எது அப்பா?'' ராதிகா கேட்டுக்கொண்டே வந்தாள்.

''உண்மைதான், மாமா. அறையினுள் புழுக்கம் இருந்தால் ஜன்னல் கதவுகளைத் திறந்துவிடுகிறோம். உங்க மனசின் புழுக்கத்தை அகற்ற என் ஒருவனால்தான் முடியும் என்கிறது உங்களுக்கே தெரியுமே!''

''அப்படியானால், குமாரும் இங்கே வரவேண்டாம்.''

''என்ன?''

''ஆமாம், கண்ணா! நான் பெற்ற பிள்ளை இங்கே வராமலிருந்தால், எவ்வளவு, துக்கம் இருக்குமோ அவ்வளவு துக்கம் இருக்கும் நீ போய்விட்டால்.''

''கண்ணா, நீ எங்கே போகப் போறே?'' என்று ராதிகா, விஷயம் புரியாமல் கேட்டாள்.

''டில்லிக்குப் போகிறானாம், ஊட்டியை மறந்துடணும் இனிமேல் நீயும் டில்லியில்தான் இருந்தாகணும். அப்புறம் எங்கே போவேன்? டில்லிக்குத்தான்!''

கண்ணன் ஆச்சரியத்துடன் நாதனைப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறே, கண்ணா? என் குரலே புதுசாக்கூட இருக்கா? நான் பிடிச்ச முயலுக்கு மூணுகால்னு எத்தனை காலந்தான் இருக்க முடியும்? நேத்து நடு ராத்திரி சீதா - உன் அம்மா - என்னிடம் வந்து பேசினா...''

எங்கேயோ பார்த்துக் கொண்டு வெறிபிடித்தவரைப் போல் நாதன் பேசினார். ஒரு கணம் கண்ணனுடைய உடல் நடுங்கியது. மறுகணம் ராதிகாவிடம் கண்ணால் சமிக்ஞை செய்துவிட்டு, மெதுவாக 'கிளாஸ் ஹவுஸை' விட்டு வெளியேறினான். ராதிகாவும் பின் தொடர்ந்தாள்.

# 48

# ஓடும் மேகங்கள்

அப்பு கண்விழித்துப் பார்த்தபோது அச்சம்மா அவனுடைய காலை வருடிக் கொண்டிருந்தாள்.

''அச்சம்மா!'' - குரல் எப்போதும்போல இருந்தாலும் உடலின் வலி சிறிது ஒலித்தது.

''என்ன, அப்பு, கண் முழிச்சுட்டியா?'' - துள்ளி அச்சம்மா தன்னை மீறிக் கெட்டியாக அவனுடைய காலைப் பிடித்தாள்.

''கையை எடு, அச்சம்மா'' என்ற அப்பு, ''இன்னிக்கு என்ன கிழமை? இப்போ என்ன மணி?'' என்று கேட்டான்.

''ஏழு.''

''கார்த்தாலேயா, ராத்திரியா?''

''ராத்திரி.''

''நான் இங்கே எப்பே வந்து படுத்தேன்?''

''நேத்து ராத்திரி.''

''கண்ணன் வந்தானா?''

''நாலு தடவை வந்தான். கடைசித் தடவை தனியா வரலை; ராதிகாவுடன் வந்தான். அவளுடன் அவளுடைய அண்ணன் குமாரும் அவனுடைய மனைவி பூர்ணாதேவியும் வந்தார்கள்.''

''அடடா! அப்பு கொடுத்து வைக்கவில்லையே!''

''எதுக்கு?'' என்று கேட்டான் அச்சம்மா.

''குமாரையும் பூர்ணாதேவியையும் ஸ்டேஷன்லேர்ந்து அழைச்சுண்டு வர. வேறு என்ன விசேஷம், அச்சம்மா?''

''ஜயலட்சுமி அம்மாள் மத்தியான்னம் வந்தாள்; நீ படுத்திருக்கிற கோலத்தைப் பார்தது 'ஓ'வென்று அலறினா. அந்த ஸ்ரீதரை வாயில் வந்தபடியெல்லாம் திட்டினா.''

''அவன் என்ன செய்தான்? அப்புவின் வாய் சும்மா இருக்கவில்லை.''

''ஸ்ரீதரை ஊட்டியில் வலைபோட்டுத் தேடுகிறார்கள். இன்னும் கண்டுபிடிக்கவில்லை'' என்றான் அச்சம்மா.

''எதுக்கு?''

''உன்னை அடிச்ச கையை வெட்ட நேத்து ராத்திரியே ஒரு படை கிளம்பித்து. வீட்டைச் சின்ன பின்னமாக்கி விட்டு, ஊட்டி பூராத் தேடிண்டிருக்கு.''

''யார் வேலை இது?''

''எல்லாம் உன் பக்தர்கள். ஊட்டியிலேதான் டீக்கடைக்காரனிலிருந்து டாக்ஸி டிரைவர்வரை உன் ஆட்களாச்சே!''

''சே. இது தப்பு, இது தப்பு!''

அப்புவை ஒரு வெறி ஆட்கொள்ள, அவன் அந்த வெறியில் தானாக எழுந்து உட்கார்ந்துவிட்டான்.

''அப்பு அப்பு, என்ன இது? படு, படு. உட்கார்ந்தா வலி உண்டாகும்.'' அச்சம்மா கத்தினாள்.

அச்சம்மா சொல்லி முடிக்கவும், வாசலில் ஒரு கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

''யாரோ வருகிறார்கள். நீ படு, அப்பு'' என்று எழுந்தாள் அச்சம்மா. அடுத்த கணம் உள்ளே போனாள்.



அப்பு தலையணையில் சாய்ந்தபடியே வாசற்கதவைப் பார்த்துக் கொண்டிருந்தான். உடம்பில் அங்கங்கே, வலி திடீர், திடீர் என்று பிறந்து மறைந்து கொண்டிருந்தது. மார்பில் மட்டும் வலி நிற்கவே இல்லை.

அப்பு உட்காரவில்லை. ''அச்சம்மா, இது ஸ்ரீதருக்கும் அப்புவுக்கும் இடையே இருக்கிற விவகாரம். மத்தவர்கள் இதில் குறுக்கிடறதோ, ஸ்ரீதரை அடிக்கப் புறப்படறதோ தப்பு; பெரிய தப்பு!''

''இன்னும் ஸ்ரீதரைக் கண்டுபிடிக்கவே இல்லை. நீ ஏன் கவலைப்படறே?''

''கண்டுபிடிச்சா, ஸ்ரீதர் பிழைக்க மாட்டான், அச்சம்மா. ஐயோ! கண்ணன் எங்கே? இப்போ அவன் ஒருவனால்தான் அவனைக் காப்பாத்த முடியும்!''

''எட்டு மணிக்கு வரேன்னு சொல்லியிருக்கிறான்.''

திடீரென்று, ''அப்பு, அப்பு, எப்படியடா இருக்கே?'' என்று எழுந்த குரலைக் கேட்டதும், உடம்பின் வலியை எல்லாம் மறந்து, எழுந்திருக்க முயன்றான் அப்பு. அதற்குள், ''எழுந்திருக்காதே, எழுந்திருக்காதே. படுத்துக்கொள், படுத்துக்கொள், என்று கூறிக்கொண்டே நாதன் உள்ளே பிரவேசித்தார்.

''மாமா, மாமா, நீங்க எதுக்கு மாமா இங்கே வரேள்? சொல்லி அனுப்பிச்சா அப்பு ஓடோடி வர மாட்டானா?'' - அப்புவின் கண்ணில்கூட நீர் துளித்தது.

''டேய் அப்பு, இன்னிக்குக் கண்ணன் சமாசாரத்தைச் சொன்னப்புறம் என் மனசு எதிலேயும் ஓடலேடா. என் பிள்ளையும் மருமகளும் வந்திருக்கிறார்கள். அந்தச் சந்தோஷத்தைக்கூட அநுபவிக்க முடியலையடா.''

''அதுக்கு இந்த அப்புதானே மாமா காரணம்?''

''ஆமாம்டா, அப்பு. நீதான் காரணம். நீ ஏன்டா அப்பு இப்படி இருக்கே? ஸ்ரீதர் மாதிரி இருக்கிறவர்களிடம் உதையும் அடியும் வாங்கறே?''

''அவன் என்ன மாமா செய்வான்? பாவம்! உத்தியோகத்திலே இருக்கிற வெற்றி, சொந்த வாழ்க்கையிலே இல்லை. அந்த ஏமாற்றம் மனசு பூராக் கொதிச்சுண்டு இருக்கு. நேத்து என் மேலே கொஞ்சம் வெடிச்சது... மாமா, கண்ணன் எங்கே?''

''வெளியே காருக்குள்ளே உட்கார்ந்திருக்கிறான். நான் போனதும் உன்னைப் பார்க்க வருவான். ராதியும் கூட இருக்கிறாள்.''

''குமார் பெண்டாட்டி எப்படி மாமா இருக்கிறாள்?''

''நான் எதிர்பார்த்தது போல இல்லை, அப்பு!'' - நாதன் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

''நீங்கள் என்ன எதிர்பார்த்தீர்கள்னு அப்புவுக்குத் தெரியும், மாமா.''

''என்ன?''

''குமாரை வசியம் செய்த பெண் அடங்காத்தனமாக இருப்பாள் என்று.''

''கரெக்ட்! ஆனா என்னை அவள் இன்னிக்கு நன்னா ஏமாத்திவிட்டாள். என்ன சொன்னா தெரியுமா?''

''அப்புதான் மூச்சுப் பேச்சு இல்லாம கிடந்தானே, எப்படித் தெரியும் அவள் என்ன சொன்னா என்று?''

''குமாரும் அவளும் நமஸ்காரம் பண்ண வந்தா. அப்போ பூர்ணாதேவி சொன்னா : 'இவரும் நானும் செய்தது பெரிய குத்தந்தான். பிள்ளையை மன்னிக்க உங்களுடைய பெத்த மனம் எளிதில் இளகிவிடும். ஆனா



என்னை அது மன்னிக்கலே மன்னிக்காது. இப்போ எனக்கும் நீங்கள் தகப்பனார் முறைதான். இவரும் நானும் ஒன்னுதான் என்கிற எண்ணத்திலே நீங்கள் என்னையும் மன்னித்து ஆசீர்வாதம் செய்யணும்' என்று. நானே ஸ்தம்பித்துப் போயிட்டேன், அப்பு!''

''நீங்கள் ஸ்தம்பித்துப் போனது முக்கியமில்லை, மாமா. அவர்களை மன்னித்தீர்களா? அதைச் சொல்லுங்கள்.''

''உன் கேள்வியே அநாவசியம்... அது சரி, அப்பு. இன்னும் எத்தனை நாளுக்கு எழுந்திருக்காமல் படுத்திருக்கப்போறே?''

''நீங்க வந்ததிலிலிருந்தே பாதி வலி போய்விட்டது, மாமா. அதை நினைச்சுப் பார்த்தால்தான் வலிக்கிறது.''

''உன் உடம்பு வலியையெல்லாம் மறக்கச் செய்யும் படியான செய்தி ஒன்று இருக்கிறது, அப்பு.''

''அது ஒரே ஒரு செய்தியாகத்தான் இருக்க முடியும், மாமா.''

''அதே செய்திதான், அப்பு! ராதிகாவைக் கண்ணனுக்குக் கொடுக்கப் போகிறேன்.''

அடுத்த கணம் அப்பு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

''மாமா!''

''வலி இருக்கிறதா இன்னும்?''

நாதன் சிரித்தார்.

''மாமா, அப்புவை ஸ்ரீதர் இன்னும் ஆயிரம் தடவை அடிச்சு நொறுக்கட்டும். இந்த மாதிரி ஒரு செய்தி கிடைத்தால் போதும். வேறு டாக்டரோ வைத்தியமோ தேவையில்லை.''

நாதன் மெதுவாக எழுந்தார்.

''உன்னைப் பார்க்கவும் இந்த முடிவைச் சொல்லவுந் தான் இங்கே வந்தேன். உன் உடம்பு பூரண குணமாகி, நீ பழையபடி ஓடி ஆட ஆரம்பிச்சபின்தான் முகூர்த்தம்.''

அப்பு சிரித்தான்.

''மாமா, அப்பு ஓடி ஆடுவான். ஆனா இந்தக் கல்யாணத்தில் ஒரு வேலையும் செய்யமாட்டான். அப்பு மாப்பிள்ளைத் தோழன் மட்டுமல்ல; பெண்ணுக்கும் அண்ணன் மாதிரி.''

''அப்போ உழைச்சுத்தான் ஆகணும். நீ என் பிள்ளை மாதிரி ஆகிவிடுவாய், அப்பு. நீ இல்லாமல் எதையும் நடத்த எனக்குத் தெரியாதுடா. நான் அந்தக் காலத்து மனுஷனாகவே இன்னும் இருக்கிறேன். நான் வரட்டுமா? உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.''

நாதன் வெளியேறிய சில நிமிஷங்களுக்கெல்லாம் கண்ணனும் ராதிகாவும் உள்ளே நுழைந்தார்கள்.

''ஐயையோ, அப்பு எழுந்து உட்கார்ந்திருக்கானே... இது என்ன அதிசயம்!'' என்று கத்தினாள் ராதிகா.

''இதைவிடப் பெரிய அதிசயமே நடந்தாச்சு, ராதிகா!'' என்றான் அப்பு. பிறகு கண்ணனைப் பார்த்து, ''இல்லை யாடா, கண்ணா?'' என்று கேட்டான்.

''உனக்குத்தான் தெரியும்... அது சரி. இது உன் முரட்டு முட்டாள்தனம். படுக்கையில் படுடா.''

''அப்புவுக்கு இப்போ ஒரு வலியும் இல்லையடா, கண்ணா. உன் மாமா இப்போ சொன்ன செய்தியைக் கேட்டப்புறம் உடம்பு பூராத் தேனாகத் தடவின மாதிரி ஆயிடுத்து. இப்போ அப்பு நினைச்சா ஓடக்கூட ஓடுவான்.''



''அடிபட்டா குரங்குகூட ஓடாது... படுக்கையை விட்டு, இன்னும் ஒரு வாரத்துக்கு அசையக்கூடாது. தெரிஞ்சுதா?''

''டேய் கண்ணா, ராத்திரி என்னவெல்லாமோ நடந்ததாமேடா. ஸ்ரீதர் வீட்டைச் சின்னபின்னமாக்கி விட்டு, அவனையும் உதைக்கக் கிளம்பியிருக்கிறார்களாமே!''

''இதெல்லாம் யார் சொன்னா? அச்சம்மா தானே?''

''யார் சொன்னா என்னா, கண்ணா? அந்த ஸ்ரீதரை உன்னால்தான்டா காப்பாத்த முடியும். அப்பு அவன் கிட்டேயிருந்து பிழைச்சுட்டான். ஆனா ஸ்ரீதராலே பிழைக்க முடியாதுடா.''

''சரிடா. என்னை என்ன பண்ணச் சொல்றே? ஸ்ரீதரைக் காப்பாத்த நான் முன்வரேன்னு தெரிஞ்சா, என் முதுகையும் அந்தப் பட்டாளம் நொறுக்கி விடுமே!''

அப்புவின் முகங்கூட ஒரு கணம் கலங்கியது. ராதிகாவின் புன்முறுவலின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை.

''கண்ணா, அப்புவை அடிக்கவாவது ஊட்டியில் ஓர் ஆள் இருக்கிறான். உன்னைத் தொடுவதற்கு யாரும் இருக்க முடியாதுடா. ஊட்டியிலே பிழைக்க வந்தவனை நாமே அடிச்சுத் துரத்தக் கூடாதுடா. நீ ஏதாவது செய்து காப்பாத்து.''

கண்ணன் கலகலவென்று சிரித்தான்.

''இன்னிக்கு விடிகார்த்தாலே நாலு மணியிலிருந்து அந்த ஸ்ரீதர் கண்ணன் வீட்டிலேதான் சிறையிருக்கான். வேளை வேளைக்கு ஆகாரம் போய்க் கொண்டிருக்கிறது. போதுமா?'' என்றாள் ராதிகா.

"ஏன்டா கண்ணா, இதை அப்பவே சொல்லக் கூடாது?" என்றான் அப்பு.

"என்மேலே உனக்கு நம்பிக்கை இருந்திருந்தா, இப்படி ஒரு யோசனை சொல்ல நீ முன்வந்திருப்பியா? ஸ்ரீதருடைய திமிர் உன்னாலேதான்டா கடைசியில் அடங்கித்து."

"இப்போதைக்கு அடங்கியிருக்கு, அவ்வளவுதான்!" கேட்டான் அப்பு.

"வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுப் பழையபடி பம்பாயோ டில்லியோ போய்விடுகிறேன் என்றான். அது முட்டாள்தனம், கோழைத்தனம் என்றேன். நளினியும் என்னுடன் சேர்ந்து பாடினாள். கடைசியில் ஒரு மாசம் லீவு எடுத்துக் கொள்றதுன்னு எல்லாரும் சேர்ந்து முடிவு செய்தோம். நாளைக்குக் கார்த்தாலே மகாலிங்கத்தின் காரில் பெங்களூர் போகிறான்."

"ஸ்ரீதருக்கு ஏற்ற இடம்" என்றான் அப்பு.

"ஆமாம். பெர்மிட்கூடத் தேவையில்லை" என்ற கண்ணன், "ஒரு மாசத்துக்குள்ளே உன் உடம்பு பூரண குணமாகிவிடும். அப்புறம் நீதான் அவனுக்கு மெய்க் காப்பாளன்" என்றான்.

"ஒருவேளை, அப்புவின் ஆட்கள் அப்புவையும் சேர்த்து நொறுக்குவார்களோ என்னவோ? ஸ்ரீதர் மேலே இருக்கிற ஆத்திரம் அப்பு மேலே இருக்கிறது அன்பைவிட அதிகமாக இருந்தால் என்ன செய்வது?"

"ராதிகா, உனக்கு ஏன் அந்தக் கவலை? அடுத்த மாசம் நீயும் கண்ணனும் எந்த ஊரில் ஹனிமூனைக் கழிக்கப் போகிறீர்களோ?"



"அப்பு, என்னுடைய ஆசை என்ன தெரியுமா?" என்று ராதிகா கேட்டாள்.

"என்ன?"

"நீ அச்சம்மாவைக் கல்யாணம் செய்து கொள்ளணும். நாங்கள் ஹனிமூனுக்குப் போகிற ஊருக்கே நீங்களும் வரணும்."

"உரக்கப் பேசாதே, ராதிகா. அச்சம்மா காதில் விழுந்து அவள் சொப்பனம் காண ஆரம்பிக்கப் போகிறாள்!"

"அப்படின்னா?"

"அப்புவுக்கும் கலியாணத்துக்கும் சரிப்பட்டு வராது, ராதிகா. ஒரு பெண்ணும் அப்புவிடம் சுகப்பட மாட்டாள். அப்புவின் ஜன்மம் சாட்டையில்லாமல் ஆடுகிற பம்பரம் மாதிரி. அது ஆடி ஆடித் தானாக ஓய்ந்து போகிற ஜன்மமாகவே கழியட்டும்."

"இது வறட்டு வேதாந்தம்!" என்றான் கண்ணன்.

"கண்ணா, அப்புவைப்பத்தி நன்னாத் தெரிந்து வைத்திருக்கிறவன் இந்த உலகத்திலேயே நீ ஒருவன்தான். உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு: எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள யோக்கியதையோ அருகதையோ இருக்கிறதா?"

"இரண்டும் இருக்கு, அப்பு. ஆனா நீ கல்யாணம் செய்து கொள்ளுவதால் பிரயோசனம் இல்லை. உன் மனைவிக்கும சுகம் இல்லை. ஏன் தெரியுமா? நீ என்னிக்குமே உன்னைப்பத்திக் கவலைப்படறதில்லை. பிறத்தியாருக்காகவே உழைச்சு உழைச்சு உன்னையே மறந்து நிற்கிறவன். கல்யாணமானால் மாறிவிடப்போகிறாயா என்ன? உன் மனைவியை வீட்டில் ஏங்க வைத்துவிட்டு, நீ

குன்னூருக்கும் கோயமுத்தூருக்குமாக, மற்றவர்களுடைய காரியங்களுக்காக அலைந்து கொண்டிருப்பாய்.''

''கண்ணா, நீ இப்படிப் பேசறது எனக்குப் பிடிக்கவில்லை. அப்பு கலியாணமே செய்துகொள்ளக் கூடாதா?''

''கூடாது என்றா சொன்னேன்? விளைவுகளைச் சொன்னேன். அவ்வளவுதான், ராதி.''

''அச்சம்மா மனம் உடைஞ்சு போய்விடுவாள்.''

''அச்சம்மா அப்புவைக் காதலிக்கிறாள் என்று உன்னிடம் யார் சொன்னார்கள்?''

''அப்போ?''

''போகம்மா ஆசைப்படுகிறாள். ஆனா அப்பு என்னிக்கோ அச்சம்மாகிட்டே தன் எண்ணத்தையும் முடிவையும் சொல்லியாச்சு.''

''பின் ஏன் இன்னும் அவள் இவனுக்குச் சுச்ரூஷை செய்கிறாள்?''

''ராதி, நீ கூட முட்டாள் மாதிரி பேசுகிறாயே! அச்சம்மாவுக்கு என்னிக்குமே அப்புமேலே ஒரு தனிப்பாசம் உண்டு. அதைக் காதல்னு நீ தப்புக் கணக்குப் போட்டுவிட்டே!''

''ஏன் அப்பு, அப்படியா?''

பதில் வராமல் இருக்கவே, இருவரும் அப்புவைக் கூர்ந்து கவனித்தார்கள்.

அப்பு புன்னகையுடன் மெய்ம்மறந்து தூங்கிக் கொண்டிருந்தா. இளங்குழந்தை தூக்கத்தில் தாமரைப் பூவைக் கண்டு சிரிப்பது போல இருந்தது அவனுடைய முகம்.



''அப்பு திருப்தியாகத் தூங்குகிறான், ராதி!'' என்றான் கண்ணன்.

''அதுக்குக் காரணம், அப்பா செய்த முடிவுதான்.''

''ஆமாம்'' என்ற கண்ணன், ''அப்பு!'' என்று அழைத்தான்.

''என்ன?'' என்று கண் விழித்த அப்பு, ''அப்பு தூங்கிவிட்டானா? கண்ணா, ஐ ஆம் ஸாரி'' என்றான். பிறகு, ''நீங்க என்ன என்னமோ பேசிக்கொண்டிருந்தீர்கள். அப்பு காதில் வாங்கிக் கொள்ளாமல் ஒரு சொப்பனத்தில் ஆழ்ந்துவிட்டான். அன்னிக்குச் சொன்னானே அப்பு, வானத்தில் ஓடற மேகங்களைப் பத்தி - அந்த மேகங்கள் பற்பல விதமான நிறங்களிலே வர்ண ஜாலம் கொண்டு ஓடறது, கண்ணா. ஒவ்வொரு மேகமும் ஒவ்வொருத்தர் மாதிரி, சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா, கறுப்பு என்று எத்தனையோ நிறங்கள். ரொம்ப அழகா இருந்தது; ஆனா ரெண்டு மேகக் கட்டிகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இணைந்து இரு நிறங்களும் குழைந்து ஒரு நிறமாகி, அந்த நிறமே தனிப் பொலிவுடன் தெரிஞ்சுது. கூர்ந்து கவனிச்சேன், கண்ணா. இரண்டு மேகக் கட்டிகள் நீயும் ராதிகாவும்தான்னு கடைசியிலே புரிஞ்சுது.''

''அதுதான் தூங்கறபோதே உன் உதட்டில் புன்னகை அரும்பியிருந்தது!'' என்றாள் ராதிகா.

''ஆனா அப்பு, வானத்திலே நிர்மலமான மேகமும் நிறமற்ற மேகமும் இருக்கின்றன தெரியுமா? வெண்மேகம் அது; எந்த விதமான கறையும் படியாத மேகம். நீ அந்த வெண் மேகத்தைப் போன்றவன், அப்பு. அதிலே மனிதாபிமானம் என்ற நீர் ஒட்டிக் கொள்ளுகிறபோது நீ கறுப்பாகிவிடுகிறாய். அப்புறம் உன் பரிவு, அன்பு, கருணை

என்ற உணர்ச்சிகளையெல்லாம் வெள்ளமாகக் கொட்டுகிறாய்.''

பேசிக்கொண்டே போன கண்ணனை அப்பு இடை மறித்தான்: ''தயை செய்து உன் கவிதையை நிறுத்து ...அப்பு வெறும் மனிதன். மேகம் தெய்வம் மாதிரி அதனோடு அவனை ஒப்பிடாதே!''

"போடா இடியட்!''

''ஆ! அது கரெக்ட். இப்போ அப்பு மன குளிருகிறது.''

எல்லாரும் கலகலவென்று சிரித்தார்கள்.

முற்றும்

PA88
30/6/05